227839
சென்னை-600 008

## பொருள் அடக்கம்


| | | பக்கம். |
|---|---|---|
| முதலாம் அதிகாரம் | —[illegible]ம் பெண்ணும் அமுதம் என்றல் | ... 1 |
| இரண்டாம் ,, | —மங்கை பிறவியே மாண்புடைத் தென்றல் | ... 52 |
| [illegible]ம் ,, | —இல்லற வாழ்க்கையே இன்புடைத் [illegible] | ... 99 |
| நான்காம் ,, | —கற்புடை[illegible] பெ[illegible]ளெனல் | ... 157 |
| [illegible]தாம் ,, | —நன்மக்கட் பேறே நலமுடைத் தென்றல் | ... 210 |
| [illegible]ம் ,, | —நோயற்ற வாழ்வே சால்புடைத் தென்றல் | ... 280 |
| ஏழாம் ,, | —பதார்த்த குணமே யதார்த்த நலமெனல் | ... 32[illegible] |
| எட்டாம் ,, | —சமைக்குந் திறமே அமைக்குஞ் சுவையெனல் | [illegible] |
| ஒன்பதாம் ,, | —தொழுதாள் அவையின் உழுதா[illegible]னெனல் | [illegible] |
| பத்தாம் ,, | —சாதம் சிற[illegible] ஓதம் சிற[illegible]னல் | ... 4[illegible] |

# சிற்றின்ப வெற்றி

அல்லது

# கணவன் மனைவியர் காதல் ஒழுக்கம்.

வெண்பா.

காதல் இலக்கணத்தைக் காளையர்க்கும் பாவையர்க்கும்
ஓதுசிற் றின்பவெற்றி ஓங்கவே—ஆதரவாய்ச்
சச்சிதா னந்தமயர் தாளும் பரம்பொருளை
உச்சிதமாய்க் கொள்வேன் உளத்து.

## முதல் அதிகாரம்

(ஆணும் பெண்ணும் அபேதம் என்றல்)

"பிரமன் படைத்த பெரிய பூமியில் ஆண் முந்தியதா? பெண் முந்தியதா? அன்றி, ஆணும் பெண்ணும் அல்லாத அலி முந்தியதா? எது முந்தியது? எது பிந்தியது?" என்ற பெரிய கேள்விகளுக்கு மறுமொழி சொல்லுவதென்றால் மகான்களாலும் மாளாது. நம்மத வழக்கின்படி பரஞ்சோதி முனிவரும், 'சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பரா, முத்தியான முதல்' என்று சத்தியை முதலில் வைத்துப் பாடியிருக்கிறார். இவர் ஏன் இப்படிப் பாடினார்? —சத்தியே உலக முதலாயிருப்பதனால் இப்படிப் பாடினார்

என்கிறார்கள். சத்தியென்றால், இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, அம்பிகை, கனூட்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசத்தி என்று எத்தனையோவிதமாகச் சொல்லுகிறார் கள். எல்லாச் சத்தியும், இவ்வுலகைத் தோற்றுவிக்கும் சத்தியிலேயே ஒடுங்கும். அந்தச் சத்தியே நமது தாயாய், தாரமாய், தமக்கையாய், தங்கையாய், மகளாய், பேர்த்தி யாய், அண்ணியாய், மாமியாய், பாட்டியாய் உருவெடுத்து விளங்குகிறபடியால், அதற்கு முந்தின சத்தி எதுவும் இல்லை. இதனாலேயே 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற ஔவையாரும், அன்னையை முதலில் வைத்துப் பிறகு தந்தையைக் கூறினார். 'என்றுளின் என்ன கடவுளுமில்' என்றார் இன்னொருவர். ஏன்? இந்தச் சத்தியின் மகத்துவத்தாலேயே, நாம் உலகில் தோன்றி நின்று மறைந்து ஒடுங்குகிறோம். இது இல்லை யேல், நாமும் இல்லை. இது இல்லையேல், நமது தந்தையும் இல்லை. பெண்ணின்றி ஆணில்லை யென்றேற்படும் அன்றி, ஆண் இன்றிப் பெண்ணில்லை யென்றேற்படாது. ஆயினும் 'வித்தில்லாத சம்பிரதாயம் எங்கும் இல்லை' என்பதனால், தந்தையையும் தாய்க்கு இரண்டாவதாகப் போற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். இதனாலேயே 'அன் னையும் பிதாவு முன்னறி தெய்வம்' என்று தாயை முதலில் வைத்தோதின ஔவையார், 'தந்தை தாய்ப்பேண்' என்ற ஆத்திசூடி வாக்கியத்தில், தந்தையை முதலில் வைத்துக் கூறினார்.

பறவை யினங்களிற் கோழி முதலிய சில, ஆணின் றியே முட்டையிடவுங் கேள்விப்படுகிறோம். மாஞ்செடி களில் முருங்கை, அலரி முதலிய பல, வித்தின்றிக் கிளைகளை நடுவதாற் பயிராவதையும் பார்த்திருக்கிறோம். வாழைக்கு வித்தே யில்லை. கிழக்கண்ணாலேயே பெருகுகின்றது. கரும்பு



அன்னதாழை முதலியவைகளும் அப்படியே. இப்படி வித்தில்லாத சம்பிரதாயம் கேட்டாலும் கேட்கலாம், பார்த் தாலும் பார்க்கலாமன்றி, நிலமில்லாத சம்பிரதாயம், இந்நில வுலகில் எங்கெங்கும் இல்லை. நிலமே எதற்கும் ஆதாரம். இதனாலேயே பெரியார்,

'மண்ணுதி ஆறும்
மனர்துழாவித் தடுமாறி'

என்றோதினார்.

இப்படிப்பட்ட சத்திவடிவாயிருப்பதே பெண்ணுரு வம். இதனுடைய பெருமையை விளக்கவே, மலையாள முதலிய இடங்களில், பெண்ணுக்குப் பெருமை மிகுந்திருக் கிறது. அங்குமட்டு மன்றி மேனாடாகிய இங்கிலந்து முதலிய பிற விடங்களிலும் பெண் பெருமையே முதன் மையாயிருக்கிறது. எந்த இடத்திற் பெண்களைப் பெருமை செய்யாமல் தாழ்த்துகிறார்களோ, அந்த இடம் எந்நாளும் ஓங்குவதில்லை என்பது ஆன்றோர் கொள்கை. 'பிறப்புக்கு முதன்மையாயுள்ள இடத்தை வலுப்படுத்த வேண்டும், போற்றவேண்டும், வாழ்த்தவேண்டும், கூடுமானால் வணங்க வேண்டும்' என்பதே பெரியார் பிரியம். இது தெரியாரே, பெண்களைத் தாழ்த்துவார். அவர்கள் உடல் அமைப்பு முதலியவைகள், ஆண்களைவிட, மெலிந்திருப்பதால், அவர் களை வெகு சுளுவில் அடக்கி ஆளலாம் என்றே அடிநாளி லிருந்து, இப்பாதகண்டவாசிகள், அவர்களைப் பெரும் பாலுந் தாழ்த்தி வைத்திருந்திருக்கிறார்கள். கணவனிடத் தில் மனைவி, அன்பு பூண்டு ஒழுக வேண்டுமென்பது பொய் யாய்ப்போய், அச்சம் பூண்டு வாழ வேண்டுமென்று ஆய் விட்டது. எந்தக் காலத்திலும் கணவன், மனைவியின்மேல் கோபம் செலுத்தக் கடமைப்பட்டவனல்லன். 'இல்லாளைக் கோலாற் புடைத்தல் கூடாது' என்கிறார் சங்கப்புலவர்.

'மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டொர்ப்பி னல்லான்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று'

என்றார் இன்னொருவர். இரட்டைமாடு பூட்டிய வண்டியில்,
இரண்டும் ஒரு மனதாய் ஈர்த்தாலன்றி, வண்டி செல்லாது.
இரண்டும் ஒரு மனதாய் மட்டுமல்ல, ஒரு வலுவாய், ஒரு
தன்மையாய், ஒரு நோக்கமாய் இழுக்க வேண்டும். விலங்கு
களும் பறவைகளும் இப்படியே ஒழுகுகின்றன. விலங்கு
களிற் பெருமை மிகுந்த சிங்கம், புலி, காடி முதலியவை
களும் தத்தம் பெட்டைகளைப் போற்றுகின்றன; அருமை
பாராட்டுகின்றன; உணவாதிகள் வழங்கிக் காக்கின்றன;
கருவுயிர்ப்பதால் பெட்டைகள் மெலிந்துபோவதை ஆண்
கள் கவனிக்கின்றன. கேவலம், நாய்களுங் குரங்குகளுங்
கூடப் பெட்டைகளிடத்திற் பேரன்பு காட்டுகின்றன.
பறவைகளில் அன்றிலைப் பாருங்கள்! அதைவிட, பேட்டி
னிடத்தில் அன்புகாட்டும் பறவை வேறெதுவும் இல்லை.
காகமும் தன் மனைவி கருவுயிர்ப்பதற்குக் கூடு கட்டித் தரு
கின்றது; மனைவி இரைதேடச் சென்றிருக்கையில் மக்க
ளுக்குக் காவலிருக்கின்றது; கருவுயிர்த்துத் தன் மனைவி
வெளியிற் செல்லக் கூடாதிருக்கையில், தானே சென்று,
இரைதேடிக் கொண்டுவந்து கொடுக்கிறது. கோழியும் தான்
கண்ட இரையைத் தானே தின்றுவிடாமல், தன் மனைவி
யைக் கொக்கரித்தழைத்து, காட்டிக் கொடுக்கிறது. புறவும்
எறக்குறைய அன்றிலைப் போலவே, பேட்டினிடத்தில்
இணைபிரியாமல். இருந்து அன்பை வளர்க்கின்றது. இத
னிடத்தில் மனையறம் வளர்க்கும் ஒழுக்கம் அதிசயிக்கத்தக்க
தாய் இருக்கின்றது. ஆணும் பெண்ணும் சற்றேனும்
தந்நெறி தவறாமல் கற்புடையவைகளாய் வாழ்கின்றன.



பேடு, தன் கணவனை யன்றி வேறொன்றைக் கண்ணெடுத்தும்
பாராது. ஆணும் அப்படியே ஏகபத்தினி விரதம் பூண்டு
வாழும். சிட்டும் சிறு பறவையானாலும் இப்படியே வாழ்
கிறது. இவைகளுடைய உண்மைக் காதலொழுக்கத்தினின்
றும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள்
எத்தனையோ இருக்கின்றன. கேவலம் விலங்குகளும் பறவை
களுமே இங்ஙனம் தத்தம் பெட்டைகளை மதித்து ஒற்றுமை
யாய் வாழ்கையில் மாந்தருக்குக் கேட்பானேன்?

இந்த ஆண் பெண் அபேத ஒற்றுமையைப்பற்றிப்
பழமையை ஆராய்ந்து பார்த்தாலும், இப்படியே இருந்
திருக்கிறது—ஆணுக்கும் பெண்ணுக்கும் கொஞ்சமேனும்
பேதமிருந்ததாகப் புலப்படவில்லை. தற்காலத்தில் நாம்
சாஸ்திரங்களிற் காண்கிற எட்டுவிதக் கலியாணங்களும்
மற்றைச் சடங்குகளும் ஆதித் தமிழர்களுடையன அல்ல;
பிறகு வந்த ஆரியருடையனவேயாகும். ஆரியர், தம்மைச்
சீரியராக மதித்து வீண் சடங்குகளுக்கும் போலி ஆசாரங்
களுக்கும் இடங்கொடுத்துத் தாம் கெட்டதுமன்றித்
தமிழரையுங் கெடுத்துவிட்டார்கள். தமிழரும், தாம்
தமிழரென்பதையும், தமிழ்நாட்டு வழக்க ஒழுக்கங்களுக்கு
உரியவர்களென்பதையும் அறவே மறந்து, நீதிமத ஒழுக்கத்
தில் வேறுபட்டு வாழ்கிறார்கள். எல்லாம் காலத்தினால்
வந்த கேடு. இந்தக் காலக்கேட்டையுங் கோலப் பாட்டை
யும் பார்க்க, மனவருத்தமா யிருக்கிறதன்றி, எதுவும்
பொருத்தமாயில்லை. இருக்கிறதெல்லாம் இருக்க, ஆண்
பெண் காதலொழுக்கத்தைமட்டும் இங்குச் சற்றுக் கவனிப்
போம்.

ஆதிநாளில் பழந்தமிழ் மக்களுக்குள் சாதிபேதமே
இல்லை. இதனாலேயே பகவன் என்னும் அந்தணர்க்கும்

ஆதி யென்னும் ஐந்தாங்குலப் பெண்மணிக்கும் பிறந்த ஔவை மூதாட்டியார், சிறந்த வரகவியாய் விளங்கியிருந்தார். "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால், நீதி வழுவா நெறிமுறையில்—மேதினியில், இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர், பட்டாங்கிலுள்ளபடி" என்று பாடினார். மூவேந்தருட்பட்ட நமது மூதாதையரும் பிறரும் இவரைப் போற்றினார்கள். இன்றளவும் இவரை இந்துக்கள் தம்பந்துக்களில் ஒருவரைப்போல நேசித்துப் பூசித்து வருகிறார்கள். அந்நாளில் தமிழர்கள் ஒரே வகுப்பினராய் ஆங்காங்குத் தங்கி வாழ்ந்துவந்தார்கள். பூமியானது ஐந்து பிரிவாக அமைந்திருந்தது. மலையுங் குன்றுமாயிருந்தது, முதற் பிரிவு. இதற்குக் குறிஞ்சி நிலம் என்று பெயர். இங்கே வாழ்ந்து வந்தவர்களுக்குக் குறவர் அல்லது குன்றவர் என்று பெயர். இவர்கள் தொழில் மலைத் தேன் அழித்தெடுத்தலும், கிழங்ககழ்ந்தெடுத்தலும், தினைப் பயிர் விளைத்தலுமாம். இவர்களைக் குறுந்தொகை யென்னும் சங்கநூல்,

'கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி'

என்று புகழ்ந்து கூறுகிறது.

"இவர்கள் மலைதோன்றினபோது, கூடத்தோன்றிப் பன்னெடு நாளாய், வாளாயுதங்கொண்ட தோளாயுத வீரஞ்செறிந்த குலத்தார்" என்பது இதன்பொருள். அப்போது இவர்களுக்குச் சாதி மதாசாரம் என்பதே இன்னதென்று தெரியாது. இப்போதும் இவ்வகுப்பார் அப்படியே வீண் சாதி மதாசாரங்களுக்குக் கட்டுப்படாமலும், ஒற்றுமை கெடாமலும் பரிசுத்தமாய் வாழ்ந்துவருகிறார்கள். இவர்கள் மலைகளிலும் குன்றுகளிலும் உன்னதமாய் வசித்து



வருகிறார்கள். ஆகையால், இவர்களைப் போலிக்குலாசாரக் குருட்டுமதப்பேய் பிடித்தாட்டவில்லை. இவர்களுக்குள்ளேதான், ஆதித்தமிழருடைய தூய குலவொழுக்க நலங்கள் சிறந்திருக்கின்றன. இவர்களை வீணாசைப் பேய்பிடித்தாட்டவில்லை. அதனால் இவர்கள் தமக்குக் கிடைத்தமட்டில் மன நிறைவோடு வாழ்கிறார்கள். ஒத்த குலநலமிக்க உத்தமக் கன்னியரை, சித்த நிறைவோடு மணந்து சுத்தமாய்க் காலங்கழிக்கிறார்கள்.

காடுங் காம்புமாயிருந்தது, இரண்டாம் பிரிவு. இதற்கு முல்லைநிலம் என்று பெயர். இங்கே வாழ்ந்துவந்தவர்களுக்கு ஆயர் என்று பெயர். இவர்கள் தொழில் வரகு, கம்பு, நெல், அவரை, துவரை, எள் முதலிய பயிர் விளைத்தலும், பசுக் காத்தலும், நெல் முதலிய தானியப்பண்டமாற்றலுமாம். இவர்கள் அறமும் மறமும் ஒருங்கே உடையவர்களாய் வாழ்ந்துவந்தார்கள்.

குறிஞ்சியிலும் முல்லையிலும் நீர்வளமில்லாப் புறம்போக்குகளுக்குப் பாலைநிலம் என்று பெயர். இவைகள் மணற் காடாகவும் இருக்கும். இங்கே வாழ்ந்துவந்தவர்கள் மறவர் என்று பெயர் பெறுவர். இவர்கள் தொழில், படைவீரராய் வேற்றரசரோடு போர்புரிந்து, அவர்களுடைய பசு நிரை முதலியவைகளைக் கவர்ந்துகொண்டுவந்து நாட்டாருக்கு வழங்கிப் பங்கிட்டுக் கொள்ளுதல்—இவர்களுக்கு வீரமே பிறவிக் குணமாக அமைந்திருந்தது.

நீர்வள மிக்க பள்ளத்தாக்குகளுக்கு மருதநிலம் என்று பெயர். இங்கே வாழ்ந்துவந்தவர்களுக்கு உழவர், களமர், மள்ளர், கிழார் என்று பெயர். இவர்கள் தொழில் கழனிகளில் நெல் விளைத்தலும், நெல் முதலிய தானியப்பண்டமாற்றலுமாம். இவர்கள் வேளாண்மையும் வீரமுமிகுந்த குணமுடையவர்களாய் வாழ்ந்து வந்தார்கள்.

கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தனிலம் என்று பெயர் பெறும். இங்கே வாழ்ந்து வந்தவர்களுக்கு பரதர், நுளையர் என்று பெயர். இவர்கள் தொழில் கடல்மீன் பிடித்தலும் படுத்தலும், சங்கங்களை யரித்தரிதலும், உப்பு விளைத்தலும் விற்றலும், கப்பல் ஓட்டலும் முதலியவைகளாம். இவர்கள் தாம் செட்டிகளாய்க் கப்பல் வர்த்தகத்திற் பிறநாட்டாரோடு கலந்து, அவர்களுடைய பழக்க வழக்கங்களை இந்நாட்டார் அநுசரிப்பதற்குக் காரணராயிருந்தனர்.

இந்த ஐந்நில மாந்தர் தவிர வேறு சாதிமக்கள், ஆதித் தமிழகத்தில் இல்லை. இவர்கள் நாகரிகத்தில் முதிரத் தொடங்கினார்கள். ஐவரில் மருதநில மக்களாகிய வேளாளரும் முல்லைநில மக்களாகிய ஆயருமே நாகரிகத்தில் முதன்மைபெற்று விளங்கினார்கள். இவர்களுடைய இடவசதியும், அதில் விளையும் பயிர் வகைகளின் தன்மையுமே இதற்குக் காரணங்களாம். நாகரிகம் முதிர முதிர இவர்களுக்குள் அறிவாளிகள் தோன்றினார்கள். அவர்கள் தெய்வ சிந்தனை உடையவர்களாய், மற்றவர்களையும் தம் வழிப்படுத்தவுன்னி, நீதி மதாசார போதனை செய்ய முயன்றார்கள். தாம் எந்நெறியை நன்னெறி யெனக் கண்டு கொண்டார்களோ, அதையே மெய்ந்நெறி யெனப் பிறர்க்குங் காட்டி இன்புறுத்துவது சான்றோர் கடமை.

"தாமின்புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றுணர்ந்தார்"

என்பது தமிழ் வேதம். ஆகையால் அக்கடனை மேற்கொண் டுழைத்துப் பிறரை நன்னெறியிற் படுத்தினவர்களுக்கு அந்தணர் என்று பெயர் வழங்கிற்று.

'அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்'



என்பது தமிழ் வேதம். இவர்களே நீதிநெறியிற் பிசகி நடந்தவர்களுக்கும் தண்டனை விதித்து வந்தார்கள். இவர்களே கொடுத்தல் வாங்கலிற் பிழைத்தவர்களுக்கும், சண்டை சச்சரவு செய்தவர்களுக்கும், தாயபாகம் முதலியவைகளில் வஞ்சனை புரிந்தார்க்கும் வழக்குத் தீர்ப்புச் செய்தார்கள். நாளாவட்டத்தில் இவர்கள் ஒரு வகுப்பாராய் வேறு பிரிந்து வாழ்ந்துவந்தார்கள். இப்படி அந்தணர் குலம் என்று ஒன்று ஏற்பட்டது. இப்போதுள்ள பார்ப்பன மாக்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாது. இவர்கள் கல்வி, கேள்வி, அறிவாற் பெரியாரென்பது தவிர, பிறப்பினாலேயே பெரியாரென்பது இல்லை.

'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்'

என்ற திருக்குறள் அக்காலத்தில் உதித்ததே ஆகும். கன்மத்தினால் சாதிபேதம் ஏற்பட்டதன்றி, சன்மத்தினால் அன்று என்று இப்போது யார்க்குந் தெரியும்.

'எக்குடிப் பிறப்பினும்
யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை
மேல்வரு கென்பர்'

என்பது மேலோர் கூற்று. இதன்படியே ஆதித் தமிழகத்தில் அந்தணர் குலம் ஏற்பட்டு நிலவியது.

இவர்களில் வேறு சிலர், அஞ்சாமையும் ஊக்கமும் உடையவர்களாய்ப் பகை யரசனை வரவொட்டாமல் தடுத்தும், மாந்தரை நன்னெறியிற்படுத்தும், அவர்களுடைய வாழ்வில் ஒற்றுமையையும் நீதியையும் தொடுத்தும் வந்தார்கள். இவர்கள் தாம் அரசர் எனவும், வேந்தர் எனவும் பெயர் பெற்றார்கள். வேறு சிலர், பண்டமாற்று வர்த்த

கத்தை மேற்கொண்டு தந்நாட்டுப் பண்டங்களைப் பிறநாட்டுக் கனுப்பி விற்றும், அவைகளுக்கு ஈடாக, அந்நாட்டுப் பண்டங்களை வாங்கியும் மக்களுக்கு உதவிபுரிந்து வந்தனர்.

மருதநில மக்களிலேயே மிகுதியாக அந்தணரென்னும் அறவோர் தோன்றியிருக்கிறார்கள். பாலைநில மக்களிலேயே பெரும்பாலும் அரசரென்னும் உரவோர் தோன்றியிருக்கிறார்கள். நெய்தனில மக்களிலேயே மிகுதியாகவும், தகுதியாகவும், பண்டமாற்று வர்த்தகஞ் செய்யும் செட்டி மக்கள் தோன்றியிருக்கிறார்கள். இப்போது வழங்கும் சூத்திரர் என்னும் பிரிவார், அப்போது இருந்ததாக ஆதாரம் இல்லை. பிறகு வந்த ஆரியராலேயே, தமிழராகிய நமது குலங் கோத்திர சாதி மதாசார முழுவதும் மாறிவிட்டன. எல்லாம் அவர்கள் மயமாய்த் தமிழர்கள், அவர்களுக்கு அடிமைகளாய்ச் சூத்திரரென்னும் புதுப்பட்டப் பெயரும் பெருமையாகப் பெற்றுக்கொண்டார்கள். இப்போதுள்ள மதமெல்லாம் ஆரிய மதமே. கோயில் குளங்களெல்லாம் ஆரியருடையனவே. சித்தாந்தம் வேதாந்தம் என்னும் மதப் பிரிவுகளும் ஆரியருடையவைகளே. நம்மாதி மதாசாரமெல்லாம் எங்கேயோ ஓடி ஒளித்துக் கொண்டன. 'அரசனெவ்வழி, அவ்வழி குடிகள்' என்றபடி, எல்லாம் ஆரியர் மயமாய்விட்டன. பன்னெடுநாளானமையால், இந்த மாற்றத்தைப் பொருட்படுத்தி விலக்க வழிதேடுவார் ஒருவரும் இலர். இப்போது வழங்கி வரும் சாதிநீதி மதாசார குலங் கோத்திர முறைகளே, தம்மவென்று தமிழர் சற்றேனும் அருவருப்பின்றி, வாழ்ந்து வருகிறார்கள்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையி னானே'



என்றபடி, எல்லாங் காலத்தின் கோலமாய் முடிந்திருக்கிறது என்று கொண்டு பழைமை பாராட்டாமல் வாழ்வதுவே பான்மையாகும்.

இங்ஙனம் அந்தணர் முதலியோர் ஏற்பட்டு, மற்றையோர்க்கு நல்லறிவு புகட்டி வந்ததனால், அக்காலத்தில் நீதி மதாசாரக் கல்வி நிலைத்து, மக்கள் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தார்கள். இக்காலத்தில் இருப்பனபோல, கணக்கு வழக்கற்ற போலி நீதி மதாசாரங்கள் அக்காலத்தில் இல்லை. ஆகையால் தேசாபிமானமும் பாஷாபிமானமும் தலை சிறந்திருந்தன. அக்காலத்திய அரசரும் செட்டிகளும் அப்படியே 'ஊக்கமுடைமை ஆக்கத்திற் கழகு' என்றபடி ஊக்கமாய் உழைத்து வந்தமையால், எல்லாம் ஆக்கமாய், மக்கள் நலஞ் சிறந்து பிழைத்து வந்தார்கள். இம்மூவகுப்பாரிடத்தும் எல்லார்க்கும் மரியாதையும் வணக்கமும் இணக்கமும் மிகுந்திருந்தன. இவர்களை மகிழ்விக்கும் வண்ணம் சில மக்கள் பாடவும் யாழ் வாசிக்கவும் பயின்று வந்தார்கள். இவர்களுக்குப் பாணர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. பாணர் என்றால், பண்ணமைத்துப் பாடுவோர் என்பது பொருள். பண்ணர் என்பதுவே பாணர் என்று நீண்டுவந்ததாகக் கொள்ளவேண்டும். பண்ணென்றால் இசைப்பாட்டு என்பது பொருள்.

வேறு சில மக்கள், முழவு முதலிய பறை யடிக்கவும் ஆடவும் பயின்று வந்தார்கள். இவர்களுக்குப் பறையர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இவர்களும் தமிழர் என்பதற்கு யாரைக் கேட்கவேண்டும்? வருங் காரியத்தை விளம்பரப்படுத்த, யானையேறிப் பறையறைந்தாரே வள்ளுவரென்று பெயர் பெற்றனர். இவர்களையும் தமிழரென்பதற்குச் சந்தேகம் இல்லை. அக்காலத்தில் தீண்டாமை யென்பதே கிடையாது. அதற்குப் பொருளே இல்லை. அப்

போது தீண்டாமை வேண்டாமையா யிருந்தது. இப்போதும் அது அப்படியே. ஆயினும், நாளாவட்டத்தில் ஆரியர் முதலியோர் நந்தமிழகத்தில் நுழைந்து, தம்போலி மதாசாரமே சதாசாரமென நுழைத்துக் கெடுத்ததனால், அப்பேய்க் கோட்பட்டு நந்நாட்டார் தலைசுற்றி ஆடுகின்றனர். ஆரியமதமும் கடவுள் முன்னிலையில் சாதி வேற்றுமை இல்லையென்றும், தீண்டாமை யில்லையென்றும் ஒப்புக்கொள்ளுகிறது. கடவுளுக்குப் பிரியமில்லாத ஒன்றை, மக்கள் பாராட்டுவது பாவமல்லவா ?

ஆனால் ஒன்று: பிள்ளைகளும் விளையாட்டில், 'என்னைத் தொடாதே' என்றும், 'ஏதோ, என்னைத் தீண்டு, பார்க்கலாம்' என்றும், 'தீண்டிக் கொண்டான், தீண்டிக் கொண்டான்' என்றும் ஆட்டங் காட்டப்பார்க்கிறோம். 'தீண்டாதே, தீண்டாதே' என்று ஒருவன் ஓட ஓட, மற்றொருவன், 'இதோ உன்னைத் தீண்டிக் கொள்கிறேன், பார்' என்று ஈண்டுகிறபடி ஒரு வகுப்பாரைத் தீண்டாதவரென்று வேண்டாதவராக ஒதுக்கி வைத்தால், அவர்கள் 'இதோ, தீண்டுகிறேன், பார்' என்று ஆக்குரோஷத்தோடு தந்நடை திருந்தி முன்னுக்கு வருவார்களென்று கொண்டு, ஆதியில் ஆரியர், தீண்டாமையை ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்று எண்ண இடங் கொடுக்கிறது. இப்படியே ஆதியில் வசிஷ்டமுனி, விசுவாமித்திர முனியை நோக்கி, 'நீ பிரமமுனியல்ல' என்று சொல்லச் சொல்ல, இவர்க்கு ஆக்குரோஷம் அதிகமாய், தவத்தில் முயன்று முயன்று, பிரம முனியானாரென்று கதையில் கேள்விப்படுகிறோம். இப்படி இப்போது இப்பாரதகண்ட வாசிகளில் ஆறுகோடி மக்கள் தீண்டாதவர்களென நீக்கமடைந்திருக்கிறார்கள். இவர்கள் இப்படிக் காரணமின்றி நீக்கமடைந்திருப்பதற்காக, காந்தி யடிகள் ஏக்கமடைந்து, இரவும்



பகலும் தூக்கமுடைந்து, இவர்களைத் தீண்டுவோராக்க, ஊக்கத்தோடு முயன்று வருகிறார். ஒரு கோடி இரு கோடி அல்ல ; ஆறு கோடி மக்களை ஒதுக்கி வைத்திருப்பது, காலக்கேடேயன்றி, வேறன்று. இன்னும் சில காலத்தில் உண்மை வெளியாய், எல்லாம் சரியாய் விடுமென்று எண்ணுகிறோம்.

'வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்'

என்று நாயனார் ஓதியபடி

'தீண்டாமை யன்ன சீரழிவு ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பதில்'

என்று நாமும் ஓதுவோம். 'கொல்லாமை எத்தனை குணக்கேட்டை ஆக்கும்' என்று தாயுமானார் ஓதியபடி, 'தீண்டாமை எத்தனை குணக்கேட்டை ஆக்கும்' என்று நாம் கூட்டிக் கொள்ளவேண்டும். தீண்டாமை யென்னும் ஓர் ஆமையிலிருந்து, எத்தனையோ வேற்றுமைகள் பிறக்கும்; முதலாவது, பொறாமை; இரண்டாவது, மதியாமை; மூன்றாவது, உண்ணாமை; நான்காவது, வாழாமை; ஐந்தாவது, தாழாமை; ஆறாவது, கொடாமை; ஏழாவது, எடாமை; எட்டாவது, நில்லாமை; ஒன்பதாவது, கல்லாமை; பத்தாவது, பாராமை; பதினோராவது, ஆராமை முதலியனவாம். ஆகையால் அதை ஒழிப்பதே அறிவோர்க்கழகாம்.

இவர்களையன்றிக் கடம்பர், துடியர் என்ற வேறிரு வகுப்பாரும் இசைக் கருவியாளரா யிருந்திருக்கிறார்கள். இவர்களில் ஒவ்வொரு வகுப்பாரும் வெவ்வேறு பிரிந்து வாழ்ந்திருந்ததனால், இனம் வேறுபட்டாலும் மனம் வேறுபடாமல் ஒற்றுமையாய், இவ்வுலக வாழ்க்கை முட்டின்றி முடியுமாறு ஊக்கத்தோடு உயர்வு தாழ்வு கருதாமல் காலங் கடத்தி வந்தார்கள்.

'விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்'

என்றபடி அக்காலத்தில் நல்லொழுக்கமுள்ளோரே மக்கள்; ஏனையோர் மாக்கள்—மிருகங்கள் என்று எல்லோரும் எண்ணியிருந்தார்கள். அக்காலத்தில் மக்களுக்குள் உயர்வு தாழ்வு பகுதி பற்றி வந்ததன்று. தகுதி பற்றி வந்ததாகும். அதாவது, சாதிபற்றி வந்ததல்ல. நீதிபற்றி வந்ததாகும். இதனாலேயே பெரியாரும்,

'நீதிமானென்று நெறியா யிருப்போனே
சாதிமானாவா னடி—குதம்பாய்
சாதிமானாவா னடி'

என்றபடி நீதிமானே சாதிமானாய் உயர்ந்திருந்தான்.

ஆகையால், அக்காலத்தில் மனவேற்றுமைக்கும் பொறாமைக்கும் காரணமாகிய இனவேற்றுமை யின்னதென்றே யாரும் அறியார்கள். 'கறுத்ததெல்லாம் தண்ணீர், வெளுத்ததெல்லாம் பால்' என்று களங்கமற்று வாழ்ந்தார்களாகையால், எல்லாரும் கவலையற்றுக் காலங் கழித்தார்கள். அதனால் உழவு, நெசவு, கைத்தொழில், வர்த்தகம் முதலியவைகளில் இந்நாட்டார் எந்நாட்டாரினும் முன்னாட்டும்படி, அரசியலிலும் சிறந்து செல்வாக்குடன் வாழ்ந்தார்கள். 'மேழிச் செல்வங் கோழைபடாது' என்றும், 'தொழுதூண் சுவையின், உழுதூணினிது' என்றும் உணர்ந்து, பயிர்த் தொழிலையே உயிர்த்தொழிலாகக் கொண்டு, அதனால் 'பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்' என்றபடி புண்ணியர்களாகவும் கண்ணியர்களாகவும் ஒற்றுமையுடன் காலங்கழித்து வந்தவர்கள் தமிழர்களே என்பதிற் சந்தேகமில்லை.

இனி நாம் அக்காலத்திய தமிழர்களுக்குள் வழங்கிய மணமுறையைக் கவனிப்போம். இதுவே, இங்கு நாம் எடுத்துக்கொண்ட சிற்றின்பவெற்றிக் காதாரமாகிய ஆண்



பெண் அபேதம் என்னும் விஷயத்தைத் தாபிக்கத்தக்க உதாரணமாகும். தொல்காப்பிய முதலிய பழந்தமிழ் நூல்களுக்கு முந்திய நூல் இப்போது கிடைக்கக்கூடியது வேறு எந்தப் பாஷை நூலுங் கிடையாது. தொல்காப்பியம் என்றால், பழைய நூல் என்றே பொருள்படும். இது, அகத்தியர் மாணவரிற் சிறந்தவராகிய திரணதூமாக்கினியார் என்னும் இயற்பெயர் பெற்ற தொல்காப்பியர் இயற்றியது ஆகையால், இப்பெயர் பெற்றது எண்ணலுமாம். இதில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களும் அடங்கியிருக்கின்றன. இதில் கூறியுள்ள காதல் மணமுறையைக் கவனித்தால், ஆண் பெண் அபேதம் நன்கு விளங்கும். தலைவன் அதாவது நாயகன் ஒருவன் நன்றாய்க் கற்றறிந்தவன், பெருமையிற் சிறந்தவன், தன் கூட்டத்தாரோடு வேட்டைமேற் செல்கிறான்; அங்கொரு கடமானைக் காண்கிறான்; அதைப் பின்தொடர்கிறான்; அது அதிவேகமாய் ஓடுகிறது; இவனும் தன் கூட்டத்திற் பிரிந்து, ஒன்றியாய் அதைத் துரத்தி யோடுகிறான். இவன் மார்பில் சந்தன மணம் சோலையெங்குங் கமழ்கிறது; மதாணி தரித்திருக்கிறான்; வில்லம்போடு வீரனாய் விளங்குகிறான்; கட்டழகிற் காமன்போலக் காண்கிறான்; அங்கொரு புதுச்சோலையிற் புகுகிறான். அங்கொரு குறிஞ்சிநிலமகள், தோழியர் பலர் சூழ, வந்திருக்கிறாள்; நக்ஷத்திரங்களுக்கு நடுவில் சந்திரன்போல விளங்குகிறாள்; தோழியர்களோடு ஊஞ்சலாடுகிறாள்; சுனைநீரிற் குளிக்கிறாள்; பூப்பறிக்கிறாள்.

'சண்பகமே! பாதிரியே!
தண்மலர்கள் தாரீரோ!
கோங்கமே! காந்தளே!
குளிர்மலர்கள் தாரீரோ!

மந்தரையே! புன்னையே!
மணமலர்கள் தாரீரோ!
கொன்றையே! பலாசமே!
குணமலர்கள் தாரீரோ’

என்று மரங்கள்தோறும் சென்று, நின்று நின்று அண்ணாந்து பார்த்தபடியே, தோழியரைப் பிரிந்து, தமியளாகிறாள். அங்கொருபுறம் பச்சை மயில் தன் தோகையை விரித்து அழகாய் அகவுகின்றது. அதன் அழகைப் பார்த்து, அப்படியே அவள் அசைவற்று நிற்கிறாள். வேட்டைமேற் சென்று, தமியனாய் அச்சோலையிற் புகுந்த தலைமகன், தலைவியாம் அவளை, ஊழ்வினை கூட்டிவைத்ததனால், காண்கிறான். கண்டவுடனே இவன்,

‘ திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையோர் வல்லியி னொல்கி அனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே’

என்று வியந்து நிற்கிறான்; இவள் கூந்தலைக் கார்மேகமென்கிறான், முகத்தைத் தண்மதியென்கிறான்; மூக்கைக் குமிழென்கிறான்; கண்களைக் காமனம்பென்கிறான்; காதை வள்ளையென்கிறான்; பற்களை முல்லையென்கிறான்; சொற்களைக் கரும்பென்கிறான், மார்பைத் தாமரை அரும்பென்கிறான்; இடையைத் துடியென்கிறான்; நடையைப் பிடியென்கிறான்; இங்ஙனம் வியந்து நின்ற இவனைக்கண்டு நயந்து நின்ற தலைவியும்,

‘ தன்னேரில் விஞ்சையனோ!
தார்மார்பில் முருகனோ!
பொன்னேரார் தாமனோ!
புதுநிலவார் சோமனோ!



கன்னேருந் தோள்வலியார்
காமனோ! மாமனோ!
என்னேயான் கண்ட இவர்
யாரோவென் றதிசயித்தாள்’

என்றபடி வியந்து அயர்ந்து நிற்கிறாள்.

‘ கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில’

என்றபடி இருவர் பார்வைகளும் ஒத்த பார்வையாய், ஒருவரை ஒருவர் வலித்து, அசைவற்று நிற்கிறார்கள்.

இதைத் தோழி காண்கிறாள்; “இருவர் பார்வைகளும் ஒத்திருக்கின்றன. ஒருவரோ டொருவர் கண்ணாலேயே பேசிக்கொள்பவர்கள் போலக் கலந்து நிற்கிறார்கள். மேலுக்கு மட்டும் பிரிந்து நிற்பவர்கள் போலத் தோன்றுகிறார்கள். ஆயினும், இவர்கள் உண்மைக்காதலரே ஆவார். இவர்களில் தலைவியை நான் கேட்டால், ‘அவர் யாரோ எனக்குத் தெரியாது. நான் தினைப்புனங் காக்கிறேன். அன்றி, இங்கு வருவார் போவார் ஒவ்வொருவரையும் கூர்ந்து பார்த்துக் கொண்டே இருக்கிறேனோ?’ என்கிறாள். தலைவனைக் கேட்டால், ‘நானும் அறியேன். அவளும் பொய் சொல்லாள்’ என்பதுபோல, ‘எனக் கொன்றுந் தெரியாது. மான் வேட்டையாடி வந்தேன். மயிலைக் கண்டு நிற்கிறேன். மானைக் கண்டதுண்டா?’ என்கிறான். இனி இவ்விருவரும் தம் இச்சையின்படி இருக்கட்டும். இடையூறாய் நான் இருப்பது கூடாது” என்று நீள நினைந்து,

கட்டளைக் கலித்துறை.

'மெய்யே யிவற்கில்லை வேட்டையின் மேன்மன மீட்டிவரும்
பொய்யே புனத்தினைக் காப்ப திறைபுலி யூரனையாள்
மையேர் குவளைக்கண் வண்டினம் வாழுஞ்செந் தாமரைவாய்
எய்யே மெனினுங் குடைந்தின்பத் தேனுண் டெழில்தருமே'

என்றபடி இருவருங் கூடியிருக்க வுடன்படுகிறாள்.

அங்ஙனங் கூடின தலைமகன்,

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள'

என்று அவளுடைய சேர்க்கை யின்பத்தை வியந்து பேசுகிறான். 'மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறி வழியாலும் ஒரே காலத்தில் அனுபவிக்கக்கூடிய இன்பம், இவளொருத்தி யிடத்திலேதான் இருக்கிறது' என்பது இதன் பொருள்.

இப்படி வியந்தபடியே இருவரும் பிரிகிறார்கள். பிரிந்த தலைமகன், மறுபடியும் ஒருமுறை காணவேண்டுமென்று, தலைவியைப் பூங்காவனத்தில் நாடி வருகிறான். அதற்கு முந்தியே தலைவியும், அங்குவந்து இருக்கிறாள். இருவரும் உழுவல் அன்பாற் கலக்கிறார்கள். மறுபடியும் பிரிகிறார்கள். இப்படித் தலைமகளை ஒரு பற்றுக்கோ டில்லாமல் அடிக்கடி சந்திப்பது அருமையாதலை யறிந்த தலைமகன், அவளுடைய தோழியைக் கண்டு, தன் எண்ணத்தைக் குறிப்பாகவும் சற்று வெளிப்படையாகவும் உணர்த்துகிறான்.

'காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்'

என்றபடி தலைவியைக் கண்ட தோழி, "மாலைக்காலத்தில் நீ இங்ஙனம் வருந்துங் காரணம் என்னை?" என்று தெரியாதவள்போலக் கேட்டதற்குத் தலைமகள், "தோழி! இந்



நோய் காலையில் அரும்பிப் பகலில் மொட்டாய் முதிர்ந்து, மாலையில் மலரும்" என்று கூறுகிறாள். அக்குறிப்பை உணர்ந்த தோழி, 'மிஞ்சின காரியம், அஞ்சினால் ஆகாது' என்று உடனே அவ்விருவரையும் பிரிதலில்லாமற் கூட்டுவிக்க முயல்கிறாள்.

இப்படித் தோழி பலமுறை முயன்றும், இருவரையும் பிரியாமற் கூட்டுவிக்க இயலாமல், அவர்கள் கூடுவதும் பிரிவதுமாகவே யிருக்கிறார்கள். தினைப்புனம் அறுவடையாகிறது. இனி, தலைவிக்கு அங்குக் காவற்றொழில் இல்லை. ஆகையால் தலைவனைச் சந்திப்பதும் இல்லையாகிறது. களவுப் புணர்ச்சிக்கு இடமில்லை. தலைவி தன் பெற்றோரிடத்திற் சேர்ந்திருக்கவேண்டியவளாகிறாள். இது தெரிந்த தோழி, இருவரையும் இராக்காலத்திற் கூட்டுவிக்க முயல்கிறாள்.

இப்படி இந்தக் கள்ளப் புணர்ச்சி, நாளாவட்டத்திற் சிலரும், பிறகு, பலரும் அறிந்துகொள்ளும்படி விளம்பரமாகிறது. ஊரரெல்லாம் அலர் தூற்றுகிறார்கள். அது தெரிந்த பெற்றோர், தலைவியை அறையில் அடக்கிக் கட்டுத்திட்டத்தில் வைக்கிறார்கள். தலைவியைக் காணாமையால், தலைவன் இரங்குகிறான். அப்போது தோழி, அவனைக் கண்டு, "இன்னும் நீ தாமதித்திருத்தல் தகாது. தலைவியைப் பெற்றோரிடத்தில் மணம் பேசி, வெளிப்படையாய் மாலையிட்டுக் கொள்ளவேண்டும்" என்கிறாள். இதற்கு வரைவு கடாவுதல் என்று அகப்பொருளிலக்கணத்தில் வழங்கி வருகிறது.

அப்படியே தலைமகன் மணம்பேசுகிறான். பெற்றோர் மறுக்கிறார்கள். மற்றோர் வெறுக்கிறார்கள். உற்றோர் ஒறுக்கிறார்கள். தலைவன் இரங்குகிறான். தலைவி ஆற்றாமையால் வருந்துகிறாள். அதுகண்ட தோழி தலைவனை நெருங்கி,

"ஐயனே! இனி நீ தாமதிக்கவேண்டா. உன் பிரிவால் தலைவி தவிக்கிறாள். அவளை உன்னூர்க்குக் களவிற் கொண்டுபோய், உன் உறவோர் அறிய, உகந்து மணங்கொள்" என்று உளவிற் கூறுகிறாள். அவனும் ஓமென்றுடன்படுகிறான். இரவில் எவரும் அறியாதபடி தலைவியைத் தோழி அழைத்துக்கொண்டு போய்த் தலைமகனிடத்திற் சேர்க்கிறாள். அவளை அவன் காவடமாக அழைத்துக்கொண்டு போகிறான். அவளுடைய சுற்றத்தார், உளவறிந்து வந்து, தலைவனை வழிமறுத்துத் தடுக்கிறார்கள்; வள்ளியம்மையைக் களவிற் கொண்டுபோன வடிவேலனைத் தடுத்துச் சண்டை செய்த வேடர்போலத் தாக்குகிறார்கள். தலைவன், தன் காதல் முதிர்ச்சியால், அதைப் பொருட்படுத்தாமல் தாங்கி நிற்கிறான். தலைவியும், 'எங்கே, நம்மை இவர் தனியேவிட்டுப் பிரிந்துபோய் விடுவாரோ!' என்று தலைவனை விடாமற் பற்றி ஏங்கி நிற்கிறாள்.

அது கண்ட சுற்றத்தார், "ஆஹா! உண்மைக் காதலென்றால் இதற்கே தகும். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்றது இதனாலேயேயாம். இவனை இவள் அன்புமயமாகவே காண்கிறாள். இவள் கற்புநெறிப் பட்டாளாகையால், இவனைத் தன் உயிர்போல எண்ணி, இணைபிரியக் கவல்கிறாள். இவனும் இவளைத் தன் தெய்வமென மதிக்கிறான்; போற்றுகிறான்; தன் உயிர் போகினும் இவள் போகாதபடி ஆற்றுகிறான்;

> 'வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
> அதற்கன்னள் நீங்கு மிடத்து'

என்றபடி காக்கிறான். இவர்களைப் பிரிப்பது உடலின்றும் உயிரைப் பிரிப்பதாகும்" என்று இருவரையும் பிரியம்போல் விட்டுப் போகிறார்கள். தலைவன், தலைவியைக் கொண்டு, தன்னூர்ப் புறத்திற் சேருகிறான். அங்கொரு



தனியிடத்தில் இருவரும் தங்கியிருக்கிறார்கள். தலைவனுடைய தாய் தந்தையர், அது தெரிந்துபோய்த் தலைவியைக் கண்டு, சந்தோஷங்கொண்டு, இருவரையும் ஊர்க்குள் தம் வீட்டுக்கு வரும்படி அழைக்கிறார்கள்; "நீவிர் இருவிரும் பலரறிய மணம்புரிந்து வாழலாம்" என்கிறார்கள். அதற்குத் தலைவன் உடன்படின் அப்படியே செய்கிறான்; இல்லையேல், தலைவியின் ஊர்க்குச் சென்று, அவளை மணக்கிறான். இன்னும் அவன், தன் பெற்றோரும், உற்றோரும், மற்றோரும் வேண்டாவிடினும், தன்னூரிலேயே அவளைத் தமிழ் நாட்டு வழக்கின்படி பலரறிய விளம்பரமாய் மணக்கிறான்.

பிறகு இருவரும் ஒரு நன்னாளில், இல்லறமென்னும் நல்லறஞ் செய்யத் தொடங்குவர். அப்போது, தலைவன், தலைவியை நோக்கி, "காதலி! நீ தொட்ட நஞ்சும் அமுதாம்; பஞ்சும் பட்டாம்" என்று, அவள் இட்டதை உண்டு, தொட்டதை உடுத்து மனமகிழ்ந்து வாழ்வான்.

> 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை'

என்றபடி தன்னையன்றி வேறு தெய்வமில்லையென்றெண்ணி வாழும் தலைவியோடு இரண்டறக் கலந்து இணைபிரியாமல் வாழும் தலைவன், கல்வியறிவிலும் உலக அறிவிலும் சிறந்தவன். ஆகையால், கற்பு நெறியே பொற்பு நெறியென்று அவளுக்குக் கற்பிப்பான்;

> 'அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
> செந்தண்மை பூண்டொழுக லால்'

என்றபடி அறவோரை வழிபடூஉ முறையை விளக்குவான்.

> 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
> கைம்புலத்தா றோம்பல் தலை'

என்றபடி தென்புலத்தாராகிய பிதிரர்க்கும், தெய்வத்திற்கும், விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், தனக்கும் அவள் செய்யவேண்டிய கடனைத் தானும் உடனிருந்து உவகையோடு செய்து காட்டுவான்.

இப்படியவள் ஊசியுஞ் சரடும்போல, அவனோடு மனம் வேறுபடாமல் ஒற்றுமையாய்,

‘மங்கல மென்ப மனை மாட்சி’

என்றபடி மாட்சியிலுங் காட்சியிலுஞ் சிறந்த மனையாளாய் வாழ்ந்துவருங் காலத்தில்,

‘மற்றதன் நன்கலன் நன்மக்கட் பேறு’

என்றபடி மகப்பேறு பெற்று மகிழ்வாள். கருவுற்றிருக்கையில் அவள், தன் கணவன், பாத்தையரை விரும்பிச் சென்றானென்று ஐயுற்று ஊடுவாள். மனம் வாடுவாள். அவ்வூடலைப் பெரியோர் வந்து நன்மதிகூறித் தணிப்பார்கள். பிறகு, இருவரும் கூடலையுற்று மகிழ்வார்கள். இதற்கெனவே நந்தமிழ் நாட்டில் விறலிவிடுதூது முதலிய காமத்தூது நூல்கள் எண்ணிறந்தன வழங்கிவருகின்றன.

தலைவி கருவுற்றிருக்குங் காரணத்தாலேயே, தலைவன் அப்பாற் சேறல் உழுவல் அன்புக்குகந்ததன்று என்பது உத்தமர் கொள்கை. ஆயினும் இயற்கையில் அது அங்ஙனம் அன்று. விலங்குகளிற் சிலவன்றிப் பலவும், தம் பெட்டை கருவுற்றிருக்கையில், வேறு பெட்டையோடு கூட ஒவ்வுகின்றன. விலங்குகட்கும் மாந்தர்க்கும் அறிவில் வேறுபாடுள்ளது யாவர்க்கும் தெரிந்த விஷயம். ஆகையால் இந்நூற்றொடக்கத்திற் கூறியுள்ளபடி புறவையும் சிட்டையும் பறவையிற் பிறவையுங் கண்டேனும் மாந்தர் தெளிவடைவாராக. ஆண்மகன் நோயுற்றிருக்கையில் பெண்மகள் தன் காமங்கழிக்கப் பிறனோடு மயங்கி முயங்கின் என்னாகு



மென்று எண்ணிப்பார்க்க நேரமில்லாத மூடரே, தந் தலைவியர் கருவுற்றிருக்கையில், அவர்களை வஞ்சித்துக் கரவடமாகப் பாத்தையர்தோள் சேர மகிழ்ந்து செல்வார்கள். இது கூடாவொழுக்க மென்பதனாலேயே நமது மூதாட்டியாராகிய ஔவையாரும்,

‘மைவிழியார் மனையகல்’

என்றும், ‘உருவுங் குணமும், வயதும் பிறவும் ஒத்த உத்தமத் தலைவியை இணைபிரியாமலும் அவள் கருவுற்றிருக்கையிலும், நோயுற்றிருக்கையிலும், பிரிந்திருக்கையிலும், இன்னும் எப்போதும் மறுமாதரை மனத்தாலும் தீண்டாமலும், தனி மனை நோன்புற்று, (ஏகபத்தினி விரதம் பூண்டு) அவள் ஒருத்தி தோளையே பருவமறிந்து சேர்க’ என்னுங் கருத்தமைத்து,

‘மெல்லினல்லாள் தோள்சேர்’

என்றும் அருளிச் செய்தார்.

பிறகு தலைவன், அது வரையில், தான் கற்றுணர்ந்த உண்ணாட்டுக் கல்வியும் கேள்வியும் ஒழுக்கமும் போதாவென்று, வெளி நாட்டுக் கல்வியும் நல்லொழுக்கமும் கற்க நாடிக் கல்வி மேற் பிரிதலாகத் தலைவிக்குத் தெரிவிப்பான். அதற்கவள் உடன்படாள் :

“யாவரும் விரும்புங் கல்விமேல் உமக்கு ஆசை உண்டாகுமானால், எலும்பைப் பெண்ணாக்கும்படி பாடிய சம்பந்தரைப்போல, நீரும் கல்வி கற்று வருவது உண்மையானால், பிரிந்து போகலாம். இப்போது என்னை நீர் பிரிந்து போனால், உமது பிரிவாற்றாமல், நான் சாவது சாதம். இதுவே என் விரதம். நான் செத்தால் சாம்பராவது உண்மை. பிறகு என் எலும்பை, வேண்டுமானால், காப்பாற்றி வைக்கச் சொல்லுகிறேன். நீர் திரும்பிவந்து,

சம்பந்தரைப்போல உமது கல்விச் சிறப்பால் பாடல் பாடி, என்னை உயிரோடு எழுப்பிக் கொள்ளும்" என்கிறாள்.

இது பற்றியே பெரியாரும்,

"யாரும் விரும்பிய கல்விமேல்
ஆசை உமக்குள தாயிடின்
பாருற என்பொரு பாவையாப்
பாடிய பாவலர் போலவே
நீரும் அருந்தமிழ் கற்றிடும்
நேர்மை யறிந்திவ ணேகுவீர்"

என்று அருளிச் செய்திருக்கின்றார்:

"கேட்டினும் உண்டோருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்"

என்றபடி இப்படிக் கல்வி மேலும், பொருள்மேலும், போர் மேலும், சீர்மேலும் தலைவியை விட்டுத் தலைவன் பிரிவதால், அவர்களுக் கிடையிலுள்ள காதலின் அளவு விளங்குகின்றது; முறுக்கேறி அற்புக் கயிறு வலுக்கின்றது. 'கேடு வருவதும் நன்மைதான். ஏனெனில், அதனால் உற்றார் உறவினருடைய உள்ளன்பின் அளவு விளங்குகின்றது' என்று மேலைக் குறளிற் கூறியபடி, நாயகியின் அன்பை அளக்க, நாயகன் கல்விமேற் பிரிதல் முதலியவைகள் அளவு கோல்களாய் உதவுகின்றன.

இதுபற்றியே சிவப்பிரகாசரும், "காதன் மனையாளுங் காதலனும் மாறின்றிக் கண்ணிரண்டும் ஒரு பொருளையே காண்பதுபோல, ஒற்றுமையா யொரு நற்காரியத்தைச் செய்வார்கள்" என்றருளினார்.

தலைவன், பிரியமனம் வாராமல், சிலநாள் தாமதிக்கிறான். எத்தனை நாள் தாமதிப்பான்? எடுத்த காரிய முடிக்க வேண்டுமே! இச்சித்த காரியம் நிறைவேற வேண்டுமே!



ஆண் மகனாகையால், அது குறித்துத் துணிந்து, தலைவிக்குத் தெரியாமல், தோழி யறியச் சமயம் பார்த்துப் பிரிந்து போய்விடுவான். இப்படிப் பிரிந்து செல்லுங்காலம், மாசி பங்குனி அல்லது சித்திரை வைகாசி மாதங்களில் ஒன்றாகும். இதையே பின்பனி அல்லது இளவேனிற் காலம் என்பார்கள். பிறகு, தலைவன் தன்னிடத்திற் சொல்லிச் சென்றபடி தோழி, தலைவியைக் கண்டு, அவன் பிரிந்து சென்றதையும், கார்காலத்தில் திரும்பி வருவேன் என்றதையும் தெரிவிப்பாள். அது கேட்ட தலைவி, மிக வருந்தி அக்காலத்தை எதிர் நோக்கி யிருப்பாள். அவள் வருத்தத்தைத் தோழி ஆற்றிக்கொண்டிருப்பாள். பிறகு, தலைவன்,

'கோடுங் குளனுங் குளத்தரு கேநின்ற குன்றுகளும்
காடுஞ் செடியும் அவளாகத் தோன்றுமென் கண்களுக்கே.'

என்றபடி அவள் நினைவே நினைவாய் வேறு நினைவின்றி யிருந்து, தான் சொல்லிச் சென்றபடி, கார்காலத்திற் காலந் தவறாமல் திரும்பி வந்து தலைவியைக் கூடி மகிழ்விப்பான். இருவரும் இப்படிச் சிற்றின்ப வெற்றியுற்று இல்லறத்தை நல்லறமாக நடத்திக் காட்டுவார்கள்; அறம் பொருள் இன்பங்களைத் தம் அவா அடங்கப் பெற்று மகிழ்வார்கள்; பிறகு, அவைகளை வெறுத்து, வீட்டறத் (இல்லறத்) தைத் துறந்து, வீட்டறம் (மோக்ஷ சாதனம்) காட்டும் காட்டகத்திற் சென்று தத்துவமுணர்த்துங் கடுந்தவம் புரிவார்கள். அதனால் அவர்களுக்கு அழிவிலா இன்ப நிலைக் கிருப்பிடமாகிய வீடுபேறெய்துமென்க.

இதுவே ஆதியில் நஞ் செந்தமிழ் மூதாதையர் அடைந்த சிற்றின்ப வெற்றியின் சிறப்பாகும். அக்காலத்தில் நந்தமிழகத்தில் ஆடவரும் மகளிரும் அபேதமாய் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு மேற்குறித்ததே சான்றாகும்.

இல்வாழ்க்கையில் இறங்குவதற்கு முன், ஓர் ஆடவனும் அணியிழையும் தனி யிடத்திற் சந்தித்தார்கள். இருவர் மனங்களும் இரண்டறக் கலந்தன. பிறகு அவர்கள் மணம் புரிந்துகொள்வதற்கு உடந்தையாய்ப் பெற்றோரும் மற்றோரும் இருந்து வந்தார்கள். அப்படி அவர்கள் இருக்க மறுத்தாரேனும், தலைவியைத் தலைவன் தன்னூர்க்கு அழைத்துக்கொண்டுபோய் உற்றார் உறவினர் அறிய மணம் புரிந்து வாழ்ந்துவந்தான்.

இம்மண முறை, தற்காலத்திய ஐரோப்பிய மண முறையினும் மேம்பாடுடையதா யிருக்கின்றது. இதுவே ஒழுங்கான மண முறை. இதுவே உள்ளன்புடைய காதலர்க்குகந்த ஒழுக்கம். இவ்வுலக வாழ்க்கையாகிய பாலைவனத்தில் காதலர் கூட்டுறவு, அவ்வன நடுவிற் பசுந்தரைபோல இன்பந் தருகின்றது. இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்று அப்பர் ஓதியருளியபடி யில்லாமல், துன்பமே எந்நாளும் இன்பமில்லை என்றோதும் இயல்புடைய இவ்வுலகப் போலிச் சுகானுபவத்தில் உண்மைச் சுகானுபவமாயுள்ளது மணவாழ்க்கையா லெய்தும் மனைவாழ்க்கையேயாகும். இதுவே எல்லாரையும் நன்னெறியிற் செலுத்தவல்லது. இதுவே காமம் வெகுளி மயக்கமென்னும் நாமங் கெடுவதற்கும் பிறவி நோயை அடுவதற்கும் நல்ல மருந்தாயுள்ளது. ஆகையால் இதில் ஈடுபடும் நாயகன் நாயகியருள்ளங்கள் தந்நிலையிற் றனிநிலையாகச் சந்தித்து, இரும்பைக் காந்தங் கவருமாறு இரண்டறக் கலக்க வேண்டும். எங்கோ ஓரிடத்தில் உள்ள நாயகனோடு எங்கோ ஓரிடத்திலுள்ள நாயகியைக் கலக்குவித்துப் பிறகு அவர்கள் உள்ளங்களை என்றும் ஒன்றாகாமல் * கலக்குவிக்கும் தற்போதைய மணமுறை

* கலங்கச் செய்யும்.



தகா முறையாம். இயற்கைக்கு மாறான செயற்கை முறையாம். தாய்ப்பாலில்லாக் குழவிக்கு நாய்ப்பால் வழங்குவது போலாம். தற்காலம் நந்தமிழ் மக்கள், சாதி மதாசாரத்திற் கெட்டபடியே, உண்மைக்காதன் மணமுறையிலுங் கெட்டு, ஆடவர் மகளிர் ஐக்கிய நிலையாகிய அபேத நிலையை விட்டு, பேத நிலையைத் தொட்டு, மனையற இன்பத்தின் மாண் புணராமல் வாடுகிறார்கள். ஆஹா! அக்காலத்தில் நந்தமிழ் மக்கள் மதியே மதி! அவர்கள் உண்மைக்காதல் மண முறையே உலகச் சம்மதி. தற்காலத்துப் போலி மண முறை, தானாய்க் கனியாத பழத்தைத் தடிகொண்டடித்துக் கனிவிக்க முயல்வதுபோல், இயற்கைக்கு விரோதமாய் இயங்குகின்றது. நற்குணமுள்ள நாயகனுக்கு, படுநீலி மனைவியாகிறாள். வாசித்தவனுக்கு மூடி வாய்க்கிறாள். கிழவனுக்குப் பணங் கூட்டுவிப்பதால் குமரி மனைவியாகிறாள். குடியன் வெறியனுக்கு, உத்தமி மனைவியாகிறாள். இப்படி, ஆனவனுக்கு ஆகாதவளும், ஆகாதவனுக்கு ஆனவளுமாய் நம் மணமுறையே தலைகீழாய் அம்மணமாய்த் தயங்குகிறது.

இன்னும் ஒன்று. ஆரியமண முறையில், முதல் வகுப்பார்க்குள் வழங்கி வரூஉம் பேதைப் பெண்கள் மணமுறை (பால்ய விவாகம்) விலக்கத்தடை, பேதைமையின் பாற்படு மன்றி மேதைமை ஆகாது. என்ன கருதியோ, அவர்கள் பேதைப் பெண்கள் மணமுறை விலக்கைக் குறித்து வெறுப்புற் றிருக்கிறார்கள்? முனிவர் கொள்கைகளுக்கு அது முற்றும் எதிரிடை என்கிறார்கள். மணமென்பது, கேவலம் சிற்றின்பங் கருதியே செய்வதன்று, மற்றின்பமாகிய பேரின்பங் கருதியே ஆகுமென்கிறார்கள். சிற்றின்பம் வெற்றின்பமென்று வாயாற் கூறுவதன்றிச் செய்கையாற் காட்டத் தவறி யிருக்கின்றனர். இப்போது அரசவைக

ளில் சில மதியூகிகள் கொண்டு வந்துள்ள குழந்தைக் கலியாண விலக்குச் சட்ட திட்டத்தை அனுசரணைக்குக் கொண்டு வரவொட்டாமல், கொன்றைமாலைபோற் குறுக்கிட்டுத் தடுக்க முயல்கிறார்கள். குழந்தைக் கலியாணம் மத சம்பந்தமானது; மனித சம்மதமானது அன்று என்று நன்று கூறுகிறார்கள்.

ஆதியில் ஆரியர் பாதகண்டத்தில் குடியேறிய காலத்தில் எங்கெங்குஞ் சண்டையும் சச்சரவும் கொள்ளையும் பெண்களைச் சிறைபிடித்தலும் குலவி யிருந்தன. அப்போது, பேதைப் பெண்களுக்கு வயோதிகரான பிதா மாதாக்கள் கட்டுக் காவலாய் இருக்கமுடியாமல், காளையர்களைக் கணவன்மாரெனத் தேடி, அவர்களிடத்தில் இவர்களை மனைவியரென மணமுடித்து ஒப்புக் கொடுத்தார்கள். முதல் வகுப்பார், எப்போதும் தம்மைக் காத்துக் கொள்ளும் வலியற்றவர்கள். இந்த அதிகார முகப்பிற் குறித்தபடி தமிழ் மக்கட்குள் கற்றாய்ந்து தண்மைக் குணம் பூண்டவர்களே அந்தணரென்று இதை வாசிப்போர் நன்குணர்வர். இது போலவே ஆரியர்க்குள்ளும், கற்றாய்ந்து அறவோராய்ச் செந்தண்மை பூண்டு ஒழுகுவோரே முதல் வகுப்பாராய்ச் சிறந்திருந்தார்கள். கலகம் சண்டை சச்சரவு முதலிய நேர்ந்திருக்குங் காலத்தில் அவர்களுக்குத் தற்காப்புச் செய்துகொள்ளல் கூடாமையா யிருந்தது. சத்திரியர் முதலியோரே, அவர்களைக் காத்துவந்தார்கள். சத்திரியர்க்குள்ளேயே கலவரம் ஏற்பட்டிருந்தபோது இவர்களை அவர்கள் எங்ஙனம் காப்பாற்றுவது? ஆகையால் இவ்வனுசிதமான குழந்தை விவாகம் குடி புகுந்தது. இது முனிவர் கூறியது மன்று; முதல்வன் எழுதியது மன்று. அந்தக் காலத்தில் தான் அப்படி யிருந்ததென்றாலும், கலவரமின்றி நிலவரமா யிருக்கும் இந்தக் காலத்திலும் அவ்வனு



சிதமான குழந்தைக் கலியாணம் இருந்து வருவதற்குக் காரணம் இல்லை.

'பழையன கழிதலும்
புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே'

என்பதைக் கவனித்துத் தெளிக.

'எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு'

என்னும் செந்தமிழ் வேத வாக்கியம் பேத வாக்கியம் அன்று.

'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார்'

என்பதையும் கவனிக்கவேண்டும். இங்ஙனம் இவர்கள் கவனித்துத் திருந்தினா லன்றிப் பெண்கள் சீரடையார். குழந்தைக் கலியாண விலக்கைத் தடுக்கும் கலைஞானிகள், உடன்கட்டை யேறுதலைப் போற்றவேண்டும். உடன்கட்டை ஏறுவதுங் கூடாது; குழந்தை மணத்தையுங் கொண்டாட வேண்டுமென்றால், கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசையென்னும் பழமொழிப்படி காரியம் கெடுகிறது.

குழந்தை விவாகம், முனிவர் விவேகம், கேவலம் சிற்றின்பங் கருதி யன்று; அது பேரின்பங் கருதிச் செய்யும் பெரிய சமஸ்காரம்; கடவுள் சம்மதமானதென்றால், உடன்கட்டை யேறுவதையும் அங்ஙனமே உட்கொண்டிருக்கவேண்டும். லார்ட் உவிலியம் பெண்டிக் என்பார் அந்தக் காலத்தில் உடன்கட்டை யேறுதலை, மீறுதலென்று தடுத்தபோது, முதல் வகுப்பாரிற் கலைஞானிகளும் பிறரும் எங்கே போயிருந்தார்கள்? அது கடவுள் சம்மதமானதா யிருந்திருந்தால், உடன்கட்டை யேறு மனைவிமா

ரெல்லாம் வேறு வழியில் உயிர் துறந்திருக்கவேண்டும். அங்ஙனம் ஒன்றையுங் காணோமே! உடன்கட்டை யேறியிருந்த தீயவழக்கமும் தற்காப்பின்றியே பிரவர்த்தித்திருந்தது. மேற்குறித்த துரைமகனார் உடன்கட்டை ஏற்றத்தைத் தடுத்தபோது முனிவர் கொள்கையைக் காட்டி மறுக்க மாட்டாதவர்கள் இப்போது குழந்தைக் கலியாண விலக்குச் சட்டத்தை எங்ஙனம் தடுக்க முடியும்?

இவைகளுக்கிடையில் மறுமண மென்பதொன்று தொங்கிக் கொண்டிருக்கிறது. உடன் கட்டை யேற்ற விலக்கை ஒப்பின கலைஞானிகள், மறுமணத்தை ஒப்புக்கொள்வதற்கென்ன தடை?—சிற்றின்ப வெற்றி முற்றின்ப வெற்றியாக வேண்டுமானால், குழந்தை விவாகம் விவேகமல்ல வென்று கொள்ளவேண்டும். இவ்வதிகாரத்திற் குறித்தபடி ஆண் பெண் அபேதமாய் மணமுறையைக் கைப்பற்ற வேண்டும். இவ்வபேதம், ஆண் மகன் மறுமணம் செய்து கொள்ளுவது போலவே பெண் மகளும் செய்து கொள்ளலாம் என்பதற்கும் ஆக வேண்டும். எல்லாம் முனிவர் கூற்று. எல்லாம் இறைவன் செயல் என்று இருந்து விடும் முதல் வகுப்புக் கலைஞானிகள், அக்காலத்தில் முனிவர் இருந்தது போலவே எல்லாம் ஈசன் செயலென்று பேசாமல் இருக்கவேண்டும். தம் ஆண் மக்களை மட்டும், பரதேச பாஷாஞானவான்களாக்கவேண்டும், பரதேச ஊண் உடை நடை கொடி பாவனைகளுக்கு உட்படுத்த வேண்டும்; அதன் மூலமாய் அவர்களைத் துரைத்தனச் சேவையிலீடுபடுத்திச் செல்வர்களாக்கவேண்டும் என்று எண்ணிச் செய்யக் கூடாது. பெண் மக்களையும் அங்ஙனம் பீடுபெறச் செய்யவேண்டும். பெண் மக்களுக்குத்தான் கல்விவேண்டும். நோயாளிக்குத் தான் மருந்து வேண்டும் என்றபடி, உடலமைப்பு முதலியவைகளில் ஆண்களை விட எத்தனையோ மென்மைத் தன்மை



பெற்றுள்ள பெண்களே கற்றறிவுள்ளவர்களானால், தேச நலம் சிறக்கும். ஆங்காங்குத் தற்போது நிழலிலிருந்து ஆண் மக்கள் செய்யும் உத்தியோக முயற்சிக்குப் பெண்களே தகுதியானவர்கள். ஆண்மக்கள் தங்கள் உடல் வலியால் வெளியிற் றிரிந்து செய்யும் *எழுபடையாண்மை, †உழுபடையாண்மை, நகர்க்காவல், பரதேச வியாபாரம் முதலியவைகளில் பாடு படுவார்கள். இங்ஙனம் ஆணையும் பெண்ணையும் அபேதமாய்ப் போற்றுவாரே தேச சேவை ஆற்றுவாராவார். சிற்றின்ப வெற்றியிற் சிறந்தோராவார்.

கடவுளமைப்பில் எதுவும் வீண் அல்ல. கலைஞானிகள் கூறும் புராணக் கதைகளிற் சாவித்திரியைக் கவனித்தால் எல்லாம் நன்றாய் விளங்கும். நாரதர் வந்து தடுத்தும் அவள், 'சத்தியவானையே உத்தமக்கணவனாய் உகந்துகொள்வேன்' என்று ஒரே பிடியாய்க் கூறினாள். அவள் பிரியம் போலவே, தாய் தந்தையரும் ஒப்புக்கொண்டார்கள். அப்போது சாவித்திரி தன் பிரியம்போற் கணவனை வரிக்கத் தகுதி பெற்றிருந்தாள். இப்போது அத் தகுதி யெங்கோ ஓடி ஒளித்துக் கொண்டிருக்கிறது. 'இரண்டாம் வகுப்புக் கன்னிகையாகிய சாவித்திரிக்கும் முதல் வகுப்புக் கன்னியர்க்கும் வேற்றுமை யுண்டு என்பார் முதல் வகுப்புக் கலைஞானிகள். என்ன வேற்றுமையோ, யாம் ஒன்றும் அறிகிலேம். இவ்வேற்றுமை யெல்லாம் இடையில் வந்ததேயாகும். சீதையும் பேதைப் பருவங் கடந்து பெதும்பைப் பருவம் கடந்து மங்கைப் பருவம் நீங்கி மடந்தைப் பருவ மோங்கிய போதே, முனிவர்க்குந் தேவர்க்கும் யாவர்க்கும் முதல்வராகிய இராமபிரானை 'வசிஷ்டர் முதலிய விசிஷ்ட முனிவர் உடன்பாட்டோடு மணம் புரிந்தாள். இதுவல்லவோ சிற்றின்ப வெற்றி! இதை நாள்தோறுங் கவடக

---

* சேனைவீரம் † உழவு முயற்சி.

ளிற் கண்டுங் கேட்டும் சிற்சில முதல் வகுப்புக் கலைஞானிகள் குழந்தை விவாகம் விவேகம் என்று கொண்டாடுகிறார்கள். குழந்தை விவாக விலக்குத் திட்டச் சட்டத்தை நட்டமென்று பட்டப் பகலை இரவென்று கூறும் அந்தகர் போலக் குறை கூறித் தடுக்க முயன்று கூட்டம் போட்டுப் பேசுகிறார்கள்.

இங்ஙன மிருந்தால் நந்நாட்டார்க்குச் சிற்றின்ப வெற்றி யெங்ஙனஞ் சிறக்கும்? பண்டைய அஞ்ஞானம் எங்ஙனம் பறக்கும்? வறுமை யொழிந்து நந்நாட்டுப் பசு, செல்வப்பால் எங்ஙனம் கறக்கும்? இப்படி இவர்கள், இன்னும் பட்டப் பகலை இரவென்று சாதித்து வேதித்து வாதித்துவரின் நந்நாட்டுப் பசு செல்வப்பால் காக்கும் (ஒளிக்கும்) என்று கொள்க.

எல்லாம் மதவிதி யென்று வாய்மதம் பேசிப் பேசிக் காலங்கழித்துத் தங்கலம் பாரிக்கும் போலிக் கலைஞானிகள் பிரவர்த்தித்திருக்கு மட்டும் நந்நாடு சீரடைவது குதிரைக் கொம்பாகும். தற்போது இந்தூர் இந்து அரசர் அமெரிக்க மாதாம் மில்லரென்பாரைத் தம் மனைவியாக்க முயன்று வருவதூஉம் சிற்றின்ப வெற்றிக்குத் தக்க உதாரணமாம். இவ்வதிகார முகப்பிற் கூறியுள்ள ஆதித் தமிழர் மண முறைப்படி இந்தூர் அரசர், மில்லர் மாதரசியாரை மணக்க வேண்டுமென்கிறார். இவ்வம்மையார் கற்புக்கரசியாராய்ப் பொற்பு வாய்ந்திருக்கிறார். இவர்க்குக் கல்வி நலமும் சிறந்திருக்கின்றதாம். வயதும் இருபதுக்குக் குறைந்திருக்குமென்று கேள்வி. இருவர் காதலும் இசைந்திருக்கின்றன. இப்படித் தன்னிச்சையிலெழுந்த உத்தம மணவினை புகுந்த தன்று என்று ஆரிய மதத்தார் தடுக்கிறார்கள். இம்மதத்தார் தவிர ஏனையோர் இதைச் சம்மதமென்று ஒப்புக்



கொள்ளுகிறார்கள்; உண்மைக் காதலராகையால் இருவரும் எங்ஙனமேனும் கடி மணம்புரிந்து கணவன் மனைவியராய் வாழவேண்டு மென்கிறார்கள். இதுவன்றோ சிற்றின்ப வெற்றிக்கு நேர்வழி காட்டும் சீரிய காரியம்! இதனை யன்றோ நம்மவர் போற்ற வேண்டும்! கேவலம் பொருள் வருவாயொன்றையே நோக்கி நாடு எக்கேடு கெட்டா லென்ன என்பாரைப்பற்றி ஏங்குகின்றோம்.

மேனகை மகளாகிய சகுந்தலையைத் துஷ்யந்தன் மணந்தபோது அவளுக்குப் பேதை, பெதும்பைப் பருவங்கள் போய், மங்கைப் பருவமும் ஆய், மடந்தைப் பருவந் தொடர்ந்து (பதினாறு வயதாய்) இருந்தது. இப்போதுள்ள முதல் வகுப்புக் கலைஞானிகள் அப்போது இல்லாமலா போனார்கள்? சகுந்தலையை வளர்த்த கண்ணுவரை விடவா வேறு கலைஞானிகள் வேண்டும்? அவர் ஏன் சகுந்தலைக்குப் *பெதும்பைப் பருவத்திலேயே மணமுடிக்கவில்லை? சகுந்தலை விசுவாமித்திரர் மகளாகையால் இரண்டாம் வகுப்பாகிய சத்திரிய வகுப்பிற் சேர்ந்தவள் என்று சிலர் சமாதானஞ் சொல்லுவார்கள். விசுவாமித்திரர் சத்திரியரா யிருக்கையில் சகுந்தலை பிறக்கவில்லை.

'அந்தண ரென்போர் அறவோர்'

என்றபடி அவர் அந்தணரா யிருந்தபோது தான் அவள் பிறந்தாள். அவளை வளர்த்த கண்ணுவரும் முதல் வகுப்பார்க்கு மேல் வகுப்பாராகிய முனிவர் வகுப்பைச் சேர்ந்தவரென்று சொல்லவும் வேண்டுமோ! அவர் ஏன், அக்காலத்தில் குழந்தைக் கலியாண வழக்கம் உண்மையா யிருந்தால், தம் வளர்ப்பு மகளுக்குக் குழந்தைக் கலியாணம் செய்விக்காமற் சும்மா விருந்தார்?

* பத்து வயது.

பரிமள கந்தியை மணந்த சந்தனு பயித்தியக்காரனா? பராசர்க் கிவள் மனைவியாயிருந்து, வியாசர் பிறக்கவில்லையா? அங்ஙனம் பிறந்த வியாசர், அந்தணர்க்கெல்லாம் முத்திநெறி காட்டும் வேதத்தைச் சிக்கறுத்து வேதவியாசராய் அந்தணர்க்குள் அக்கிரத்தானம் வகிக்கவில்லையா? குழந்தை விவாகம் முனிவர் கொள்கை என்பார் கூற்று இதனால் நிலை கெடுவது காண்க.

பெண்களைப் பத்தின்மேல் வைத்திருத்தல் பாவம் என்றுரைத்தார் மேலோர் என்றபடி பத்து வயதானதும் பாமரர்க்கேனும் பாணிக் கிரகணம் பண்ணுவித்து விடவேண்டும் என்று தப்பர்த்தங் கொள்வர் சிலர். அவர்கள் உலகஞான மற்றவர்களென்பதற்குத் தடையில்லை. "ஒரு வயதுக் குழந்தைக்கெதிரில் இங்ஙனம் பேசுவது தவறு" என்று பெற்றோரிற் சிலர், தம் மங்கைப் பருவமடைந்த பெண்ணைக் குறித்துப் பேசுவது வழக்கம். இங்கே ஒரு வயதுக் குழந்தையென்றால், கேவலம் பன்னிரண்டு மாதக் குழந்தையென்பது பொருளல்ல. குறைந்த அளவு, பன்னிரண்டு வயதாய்ப் பரிபக்குவமான பெண் என்பதே பொருள். இதுபோலவே பெண்களைப் பத்தின்மேல் வைத்திருத்தல் பாவம் என்றால், பத்து வயதென்பது பொருளல்ல; பரிபக்குவமான பிறகு என்பதே பொருள். இவ்வளவு நாம் எழுதிக் காட்டுவதும் சிற்றின்ப வெற்றி, திகழ்ந் தொளிர்வதற்கேயாம். குழந்தைக் கலியாணக் குருட்டு வழக்கமாகிய இருள் மூடியிருப்பதாலேயே சிற்றின்ப வெற்றிக்கு வழி தெரியாமல் நந்நாடு சீரழிகின்றது. ஆண் பெண் அபேதமென்பதுபோய்ப் பேதத்துக்கிடமாய் ஏதமுற்று வாடுகிறது. சந்ததி வளர்ச்சி தளர்ச்சியுறுகின்றது. சிசுமாரணம் சிறக்கின்றது. குமாரர்க்கு உடல்வலி உணங்குகிறது. ஆயுள் குறைகின்றது.



'அரிதரிது மானிடராதலரிது'

என்றபடி அருமையாய்ப் பிறந்த மக்கள், குறை ஆயுளாய்ச் சாகிறார்கள். தொத்து நோய்களும் தத்து நோய்களும் பிரவர்த்தித்து உலகம் பாழாகின்றது.

ஆகையால் ஆண் பெண்களை அபேதமாய் விட்டு விடுவதே உத்தமம். சகுந்தல துஷ்யந்தரைப் போலவும், மேனக விசுவாமித்திரரைப் போலவும், சாவித்திரி சத்தியவானைப் போலவும், அருந்ததி வசிஷ்டரைப் போலவும், பரிமளகந்தி பராசரைப் போலவும், அம்பிக அம்பாலிக வியாசரைப் போலவும், அபேத மணம்புரிவதே சிற்றின்ப வெற்றிக்கு வழி காட்டியாம். இடையில் வந்த வீண் குழந்தை மணக்கொள்கை, குருட்டு வழியாகும்; கொஞ்சமேனும் நான்முறைக்கு ஒத்ததன்று.

'நான்முறை தெரிந்து
சீலத் தொழுகு'

என்று ஔவையார் ஓதியபடி, நான்முறையே மேன்முறையென்று கொள்ளவேண்டும். வேறு குருட்டு வழக்க முறையாகிய குழந்தை மணமுறை, இருட்டு வழியிற் செலுத்தி இடர் எய்துவிக்கும் என்க. இடர் என்றால், ஒன்றிரண்டல்ல; எண்ணிறந்தன: பணவாசையாற் கிழவனைக் குழந்தைப் பெண் மணப்பது; கிழவியைக் குமரன் மணப்பது; குழந்தைப் பெண்ணை மணந்துகொள்ள, போலி மதாசாரக் கல்வி நலஞ் சிறந்த குமரனொருவன், கூலி கேட்பது. இதையே வரசுல்கம் என்கிறார்கள். குழந்தைக் கைம்பெண்கள் மறுமணமின்மையால் நாளுக்கு நாள் அதிகரித்து வாடுதல்; களவிற் புணர்ந்து கற்புக் கெடுவது; அதனால் மானிட வளர்ச்சி தளர்ச்சியுறுவது; தற்கொலை முதலிய தலை சிறப்பது. சந்ததிகள் உடல் வலியின்றியும்

ஆயுள் வலியின்றியும் இளமையிலேயே வளமை குன்றி வாடுதல். இத்தனை கேட்டுக் கிடையிலும், முதல் வகுப் புக் கலை ஞானிகள், குழந்தை விவாகமே விவேகமென்றும், அதனாலேயே குலநலஞ் சிறக்குமென்றும், மற்றை வகுப் பார்க்கும் தமக்குமுள்ள வேற்றுமை அதனாலேயே நன்கு விளங்குமென்றும் வீண் எண்ணங்கொண்டு ஒரே பிடிவாதஞ் சாதிக்கிறார்கள்.

மதமென்றும் மதாசாரமென்றும் இருந்தால் வகுப்பு வாரியாய் இருப்பது, உண்மையல்ல. உண்மை மதாசாரம் ஒரு போதும் வகுப்புவாரியாகவே யிராது; எவன் எப்படிப் போனாலென்ன? நான் மட்டும் நலஞ்சிறந்து மற்றவர்களை அடக்கியாண்டுவந்தாற் போதுமென்றிராது. காந்திமகான் சொல்வதுபோல, இதை எல்லாரும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஆதியில் அந்தணர்க்குள் மட்டும் இந்தக் குழந் தைக் கலியாணக் குருட்டுப் பழக்கம் இருந்துவந்ததற்குக் காரணம் மேலே நாம் கூறியுள்ளோம். அன்றியும் இன்னும் ஒரு காரணமும் உண்டு. தந்நலம் பாரிக்குந் தன்மையினால் முதல் வகுப்பார், தங்குலக் கன்னியரைப் பிறவகுப்பார், அதிலும் முக்கியமாய் இரண்டாங் குலத்தவரான சத்தியர் கொள்ள இடமுண்டாமென்றே குழந்தைப் பருவத்திலேயே அவர்களுக்கு மணமுடித்து விடவேண்டுமென்னுங் கொடிய வழக்கத்துக்கு இடங்கொடுத்தார்கள்.

இப்போது எங்கும் கலவரமின்றி நிலவரமாயிருக்கிறது. நகர வாசிகள் கல்வி நலஞ் சிறந்து விளங்குகிறார்கள். பழை யனவாகிய குருட்டு நம்பிக்கை, கழியவகை தேடுகிறார்கள். புதியனவாகிய வெகு ஜன நலத்தை விரும்புகிறார்கள். நன்றாய் வாசித்துணர்ந்த கல்விமான்களெல்லாம், வயது வந்த மாதர் விதவையராயினும், அவர்களைத் தாம் மணக்கத்



துணிந்திருப்பதாக விளம்பரப்படுத்துகிறார்கள். முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு என்னும் வகுப்புவாரி வேறுபா டென்பதே கிடையாது.

‘ எக்குடிப் பிறப்பினும்
யாவரே யாயினும்
அக்குடிக் கற்றோரை
மேல்வரு கென்பார் ’

என்றபடி யெல்லாங் கல்வியளவாய் முடிந்திருக்கிறது. ஆகையால் இனியேனும் எல்லாரும் வெகுஜன நலத்தை விரும்பிக் குழந்தை மணம் போன்ற பழைய குருட்டுவழி யின் விலகி, நேர்வழியில் நடக்கத் தொடங்குக.

பழைய ஆண் பெண் அபேத மார்க்கம் தலை சிறக்கவும் சிற்றின்ப வெற்றிக்கு வழி திறக்கவும் கூட்டங்கூடி ஒரே நாட்டமாய்ப் பேசி முடிக்கவேண்டும். பேசி முடித்தபடி செய்கையிலுங் காட்டவேண்டும் :

‘ சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல் ’

என்பது மகான் வாக்கு. ஆகையால், சாதி மதாசாரத் தலை வர் பலரும், நீதிமான்களாய், நிதானத்தோடு ஆண் பெண் அபேதமே சிற்றின்ப வெற்றிக்கு வழிகாட்டியென நன் குணர்ந்து, குழந்தைக் கலியாண முதலிய கொடுஞ் செய் கைக் கிடந்தராமல், குதூகலமாய் வாழ்வார்களென்று கோரு கிறோம்.

தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்களிற் குழந்தைக் கலி யாணமென்பதே இல்லையென்று முதலில் கூறியுள்ளோம். அக்காலத்தில் ஆண் பெண் பரிபக்குவமாய் வயதுவந்த பிறகு அபேதமாய்க் களவிற் கூடிப் பிறகு கற்பில் தலை

சிறந்து விளங்கியிருந்தார்கள். காதலரிருவரும் *குமரனும் குமரியும் ஆகையால், அவர்களுக்குள் கணவன் மனைவியர்க்குள்ள குண நலங்கள் இயற்கையிலேயே சிறந்து விளங்கின. முனிவரைக் காத்தல், விருந்தினரைப் போற்றல், ஆதுலர்க்கிரங்கல், இல்லறத்துக்கிசைந்த பண்டங்களைத் தேடுதல், சமையல் தொழில் தேர்ச்சி, வரவுக்குத் தக்க செலவு, கற்பே பொற்பென்று காத்தல், கணவனை தெய்வமென்று ஏத்தல், அவனைக் குறிப்பறிந்து உண்பித்தல் முதலிய பெண்மைக் குணங்களெல்லாம் மணம்புரியுமுன்பே மணமகளுக்குச் சிறந்து விளங்கின. இங்ஙனமே, தெய்வங்கொள்கை, அடக்கமுடைமை, துறந்தார்க்குத் துப்புரவு, இறந்தார்க்கும் இரந்தார்க்கும் இட்டுண்ணல், இன்சொல் வழங்கல், அடக்கமுடைமை, அன்புடைமை, விருந்தோம்பல், செய்ந்நன்றி தெரிதல், நடுநிலை நிற்றல், ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறுமை, அழுக்காறின்மை, அவாவின்மை, புறங்கூறாமை, வீண்சொல் விளம்பாமை, பாவவிலக்கு, உலக நடை ஓம்பல், கொடை, புகழ், இரக்கம், உண்மை, திருடாமை, கள்ளுண்ணாமை முதலிய ஆண்மைக்குணங்கள் எல்லாம் மணம் புரியுமுன்பே மணமகனுக்கு மாண்புற்று விளங்கியிருந்தன. இங்ஙனம் இருந்ததனால் அவர்கள் கூட்டுறவு பழநழுவிப் பாலில் விழுந்தபடி இன்பநலஞ் சிறந்திருந்தது.

பழந்தமிழர் மணமுறையில் மற்றொரு சிறப்பு, போற்றத்தக்கது. அது, சிற்றின்பவெற்றிக்கும் ஆண்பெண் அபேதத்துக்கும் அறிகுறியான களவுப்புணர்ச்சி, பிறகு மணஞ்செய்துகொண்டு வாழ்வதாகிய கற்புப்புணர்ச்சி யின்றிச் சிறவாதிருந்தமையேயாம். களவுப் புணர்ச்சியே இப்போது நடந்து வரூஉம் மணநிச்சயம், வரசுல்கம், பரியம் முதலிய

* குழந்தைகளல்லர்; வயதுவந்தவர்கள்.



வைகளாகமாறியிருக்கின்றது. அக்காலத்தில் களவுப்புணர்ச்சியின்றித் திருமணமென்னும் கற்புப்புணர்ச்சியே கிடையாது. காதலரைப் பெற்றோருடைய அனுமதியில்லாமலே, அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து, உழுவலன்பாற் கூடி மகிழ்வதே களவுப்புணர்ச்சியாம். அது இக்காலத்தில் முற்றும் தவறென விலக்குக்கிடமாய்த் தண்டனைக் குட்பட்டிருக்கிறது. தலைவன் ஒருகால் களவுப்புணர்ச்சிக்கு இடஞ்செய்யினும், தலைவிக்குத் தக்க வயது வந்தில்லையேல், தண்டனைக்கு உள்ளாகிறான். தக்கவயது வந்தவளேனும் தலைவி அங்ஙனம் செய்யின், அது தவறென்று குலநீக்கமடைகிறாள். பெண் மகளுக்குச் சுயேச்சையென்பதே கிடையாதென்பது கலைஞானிகளின் துணிபு. வேறெதில் தன்னிச்சையில்லா விடினும், உழுவலன்பாற் கணவனை வரிக்கும் செய்கையில் மட்டும் அவளுக்குச் சுயேச்சையிருந்தே தீரவேண்டுமென்பது இந்நூற்றுணிபு. அப்போது தான் உழுவலன்பு தலை சிறந்து நிற்கும். அப்போது தான் இல்வாழ்க்கையென்னும் வண்டி தடைபடாமற் செல்லும். அப்போது தான், 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும், திண்மையுண்டாகப் பெறின்' என்ற நாயனார் வாக்கின்படி கற்பு, திட்பமாம். அப்போது தான் மனைமாட்சியாகிய மங்கலமும் அதற்கு நன்கலமாகிய மகப்பேறும் தலை சிறக்கும். அப்போது தான் தலைமகனுக்கும் இல்லற மல்லது நல்லறமன்று என்ற அருள் வாக்கியத்தின் பொருள் கைவல்லியமாகும். அப்போது தான் அவனுக்கு இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை என்பதன் உண்மை உரைக்கு உதாரணந்தெரியும். இப்படி உழுவலன்பாற் கூடியவர்களே திருவள்ளுவரும் அவர் மனைவியாராகிய வாசுகியம்மையாரும் என்பது எல்லார்க்குந் தெரியும். அவ் விருவருடைய மனையறத்தின் மாட்சியைத் தெரியாதார் தெரியாதாரே

யாவர். சீதாபிராட்டியார் முதலியோர்க்கு இச்சுயேச்சை, சுயம்வரம் மூலமாய் விளங்கியிருந்ததையும் எல்லாரும் உணர்வர். தமயந்தி சந்திரமதியர்க்கும் பிற கன்னியர்க்கும் அச்சுயேச்சை வரிப்புச் சுகந் தந்தசெய்தி உலகப்பிரசித்தம். குழந்தைமணக் கொடுஞ்செயல் பிரவர்த்தித்திருப்பதனாலேயே, பெற்றோரும் மற்றோருங்கூடி மணமகனைத் தேடுந் தொழிலைப் பெருந்தொழிலாகப் பணவிரயத்தோடு செய்து முடிக்கிறார்கள். பணத்தால் விலை கொடுத்துக் கொள்ளும் அன்பு எத்தனை உண்மையன்பாயிருக்குமென்று இதை வாசிப்போரே ஊகித்துணர்ந்து கொள்க. காட்டகத்து வாழும் மனிதமிருக பக்ஷிகளுக்குள்ளும், மற்றையபோலி நாகரிகம் சிறவாவிடினும், இவ்வுழுவலன்பு ஒன்று மட்டும் தலை சிறந்தோங்கியிருக்கிறது. காட்டுப் பிராணிகளினும் கடைப் பிராணிகளாய் இவ்வுழுவலன்பு விஷயத்தில் நாட்டுப் பிராணிகள், நடந்துகொள்வது நகைப்புக் கிடமாம்.

ஆரியருடைய காந்தர்வமணமும் தமிழருடைய களவுமணமும் ஏறக்குறைய ஒன்றேனும், பின்னையது கற்புமணமின்றிச் சிறவாதென்றிருந்ததாதலால், இதுவே சாலச்சீரியதாம். ஆகையால் ஆரியருடைய குழந்தை மணமென்னும் கொடுமணமும், காந்தர்வ மணமென்னும் கடுமணமும், தமிழர் மணமென்னும் களவு, கற்புகளாலாகிய கடிமணத்திற்கு முன் தலையெடுக்காதென்றுணர்க. காந்தர்வ பைசாசமென்னும் ஆரிய மணங்களில், கற்புநிலை தவறலும் அற்புநிலை அகறலும், பொற்புநிலை திரிதலும் பிரவர்த்தித் திருந்தமையால், பெண்களை இராவணன் செய்ததுபோல வலிந்து கவருதலும், இயமன், சுவாகா என்னும் கன்னிகை அழகுடையவளாயிருந்தமையால், தன்மேல் அவள் காதல் செலுத்தாதிருந்தும் ஒரு தலைக்காமத்தால் அவளைத் திருமணஞ்செய்து கொண்டதுபோலப் பெண்களை வலுவந்த



மாய்க் கைப்பற்றுதலும் முதலிய கூடாவொழுக்கங்கள் பிரவர்த்தித்திருந்தன. அவைகளையேனும் ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். ஆனால், தற்போது முதல் வகுப்பாரிற் பெரும்பாலாரும், பிறவகுப்பாரிற் சிறுபாலாரும் செய்யும் குழந்தை வியாபாரக் கொடுமணம் ஒப்புந்தரத்ததன்று; வாய் திறந்து செப்புந்தரத்ததன்று. ஆதி அடிமை வியாபாரத்துக்கும் இதற்கும் யாதொரு பேதமுங் கிடையாது. அடிமை வியாபாரமே ஒருவாறு ஒப்புக்கொள்ளக் கூடியதாம். இதைச் சற்றேனும் ஊகித்துணரும் வன்மையில்லாத முதல் வகுப்புக்கலைஞானிகள், காந்தி யடிகள் முதலிய கற்றறிந்தார் கூறும் கூற்றைக் கூற்றையஞ்சுமாறு அஞ்சி அகற்ற ஆங்காங்குக் கூட்டங் கூடிக் கொன்றைமாலை போல் குழுக்கூட்டுக் குழந்தைக் கடுமணத்தைக் கடிமணமென வற்புறுத்திப் பேசி மகிழ்கின்றனர்.

அந்தோ! இவர்கள் கோட்பாடு எத்தகையதென ஆராய்வாம் :—பரிபக்குவ மடையாத கன்னிகை மணமே சரியென்று மனப்பால் குடிக்கும் இவர்கள், பின்வரூஉம் இயமன் சுவாகா மணத்தை இசைவோடு வாசித்து யோசித்துப் பார்ப்பார்களாக. இங்குச் சுவாகா என்பாள் பரிபக்குவமான கன்னிகையாயிருந்தும், இயமன்மேல் அவளுக்கு உழுவலன்பு இல்லாமையால், அவளை அவன் வலிந்து மணந்தான். அதனால் அவன் ஒரு தலைக்காமியாய் அவளுடைய உள்ளன்பைப் பெறாமல், அவளை இழந்துவிட நேர்ந்தது.

சுவாகா என்னுங் கன்னிகை அதிக அழகுடையவளாயிருந்தாள். இயமன் அவள்மேல் இச்சை வைத்து விவாகஞ்செய்து கொண்டான். அவள் அழகால் அவளை யாராவது விரும்பிக் கொண்டுபோய்விடப் போகிறார்கள் என்று எண்ணின இயமன், அவளை எலுமிச்சம்பழமாக்கி விழுங்கி

உள்ளே வைத்திருந்து, தனக்கு அவளோடு எப்போது பேசவேண்டும் என்று எண்ணம் உண்டாகிறதோ, அப்போது அந்த எலுமிச்சம்பழத்தைக் கக்கிப் பெண்ணாக்கி, அவளோடு பேசி விளையாடுவது வழக்கம்.

ஒரு காலத்தில் இந்திர வனத்தில் வந்த இயமன், தன் மனைவியாகிய எலுமிச்சம்பழத்தைக் கக்கிப் பெண்ணாக்கி, அவளோடு கொஞ்சிக் குலாவி விளையாடிக் கொண்டிருந்து, அந்த இளைப்பால் மறந்தாற்போல், அவளை எலுமிச்சம்பழமாக்கி விழுங்காமல் விட்டு நித்திரை செய்தான். அப்போது அங்கு அக்கினிபகவான் வந்தான். இயமன் தனக்கு அவள் மேலிருந்த ஒருதலைக் காமத்தால் அவளை வைத்திருந்தான். அன்றி, அவளுக்கு அவன்மேல் இச்சை கிடையாது. ஆகையால், அவள் அக்கினியைக் கண்டதும் இச்சை கொண்டு, அவனோடு கூடி உல்லாசமாயிருந்து, அவனை, இயமன் விழிப்பதற்குள், ஓர் எலுமிச்சம்பழமாக்கி விழுங்கி, உள்ளே வைத்திருந்தாள். உடனே இயமன் விழித்தெழுந்து, அவளையும் பழையபடி பழமாக்கி விழுங்கித் தன்னிடத்திற்குப் போய்விட்டான்.

பின்பு, தேவரும் முனிவரும் அக்கினியைக் காணாமல் தேடத் தொடங்கி, அவன் எங்கும் அகப்படாமையால், விஷ்ணுவினிடத்திற் சென்று முறையிட்டார்கள். முறையிட்டார் குறை தீர்க்கும் முகுந்தனாகையால், அவர், அக்கினியிருக்குமிடம் அறிந்து, இயமனை வரவழைத்து, அவன் வயிற்றிலிருந்த பெண்ணைக் கக்குவித்துப், பிறகு அவள் வயிற்றிலிருந்த எலுமிச்சம்பழமாகிய அக்கினியையுங் கக்குவித்தார். அக்கினி வெளிப்பட்டதும், இயமனுக்குத் தன்னுடைய ஒருதலைக் காமத்தின் உண்மை வெளிப்பட்டது. ஆகையால் அவன் அவளுக்குத் தன்மேற் சிறிதும் காதல் இல்லையென்று கண்டுகொண்டு, அவளைத்



துறந்து சிறந்து வாழ்ந்தான். இதனால் இயமனுக்குக் காமம் ஒருதலையான் இன்னாததாய் முடிந்தது. ஆகையால் அது காவடிப்பளுவு போல இருதலையானும் சிறக்கின் இனிது என்று கொள்க.

இக்கருத்தே பற்றி நாயனார் தமது செந்தமிழ் மறையில்,

'ஒருதலையான் இன்னாது காமங்காப் போல
இருதலை யானு மினிது'

என்றருளினார்.

பரிபக்குவமான கன்னிகையே ஒருதலைக் காமத்தால் மணந்தவனைத் தள்ளி மற்றொருவனைக் கூடினாளென்றால், குழந்தைப் பெண்களின் கொடுமணங்களின் குறைப்பாட்டைக் குறித்துக் கேட்பானேன்? பெண்களை விற்கும் பெருங்குறை இக்கதையைப் படித்தபிறகேனும் விலகுமென்று எண்ணுகிறோம். இது பற்றியே சாந்தக் கவிராயரும்,

'தக்க சுவாகாவைத் தருமன் விழுங்கவவள்
எக்கியனை யுண்டா ளிரங்கேசா!—மிக்க
ஒருதலையா னின்னாது காமங்காப் போல
இருதலை யானு மினிது'

என்றோதினார்.

இங்குச் சுவாகாவுக்கு ஒரு பிரட்டத்துவமும் வந்துவிடவில்லை. இக்காலத்தில் கன்னிவிதவைகளுக்கே பிரட்டத்துவம் வந்து விட்டதென்று பெருங்கூச்சல் இடுகிறார்கள். தனக்குப் பிரியமில்லாத இயமனை நீக்கிப் பிரியமுள்ள அக்கினியை மணந்தாள் சுவாகா. எப்படி மணந்தாள்? இறையோனாகிய நாராயண பரமாத்மாவே அதற்கு உடன் பட்டான். ஏன்? உண்மை, யன்பே உகந்தது;

போலிமதாசாரக் கன்மக் கட்டுப்பா டெல்லாம் கெடுதி விளைப்பன என்று தெரிந்த பரமாத்மா, எத்தனை தகுதி யாக அதற்கு ஒப்பினார் என்று யூகித்துணர்ந்து கொள்க. பரமாத்மாவுக்கு உடன்பாடா யிருந்தது, சீவாத் மாக்களாகிய முதல் வகுப்புக் கலைஞானிகளுக்கு உடன்பா டில்லையானால், எங்ஙனம் ஆண் பெண் அபேதம் சிறந்து, சிற்றின்ப வெற்றி சேரடையும்? இயமனையும் அக்கினியையும் சுவாகாவையும் பரமாத்மாவையும் எந்த வகுப்பிற் சேர்ப் பார்களோ? தற்போதைய முதல் வகுப்புக்கலை ஞானி களின் எண்ணம் எப்படிச் சாயுமோ? அறியேம்.

'காதலர்க்குப் பார்வை யொத்தாற் பேச்சாற் பய னில்லை' என்னுங் கருத்துக்கு விரோதமான மணங்களெல் லாம் திருமணங்களல்ல; தெருமணங்களாகவே சீரழியும். உண்மைக் காதலுக்குப் பேச்சில்லை. அது குறிப்பில் நிகழ் வது. அதுவே ஆதியில் தமிழர்க்குள் நடந்த கற்பு மணத் திற்குப் பொற்புடையதா யிருந்தது. அதைப்பற்றி இந்த அதிகார முகப்பிலும் விரிவாய் விளம்பினாம். ஆயினும் இங்குக் கலை ஞானிகளுக்குச் சம்மதமான பழங்கதை ஒன்றா னும் அதை விளக்குவாம்:

ஒரு காலத்திற் பரமசிவன் கைலாயத்திற் பார்வதி யோடு உத்தியான வனத்தின் ஒரு புறத்தில் ஏகாந்தமா யிருக்கையில், அதற்குத் தேவர்கள் இடையூறா யிருந்தார் கள். பார்வதி தன் கர்ப்பத்துக்கு விகாதமாயிருந்த தேவர் களுக்கு, "உங்கள் மனைவிமார்களிடத்தில் உங்களுக்குப் புத்திரரில்லாமற் போகக்கடவது! இனி, உங்களில் எவனா வது இங்கு வந்தால், பெண்ணுருவாகக் கடவன்!" என்று சாபங் கொடுத்தாள்.

அந்தச் சாபத்தை அறியாத இளை என்னும் அரசன் அங்கு வந்தபோது, பெண்ணுருவடைந்தான். அதற்காக



இளை யென்பவள் வருந்தி, அதற்கு அடுத்த இடங்களிற் சஞ்சரிக்குங் காலத்தில், புதன் எதிர்ப்பட்டான். இருவர் பார்வைகளும் ஒத்தன. உடனே காந்தர்வ மணஞ்செய்து கொண்டு, இருவருஞ் சேர்ந்து புரூரவனைப் பெற்றார்கள். இதனால் வேறிடத்திற் செலுத்துதலின்றிப் புதன் கண்க ளோடு, இளையின் கண்ணிணைகளின் பார்வை ஒத்தமை யால், வாய்ச்சொற்களின்றியே இருவரும் கலந்தமை காண்க.

* இதுபற்றியே பின்வரூஉம் செய்யுளும் வழங்கி வரு கிறது:

'பேச்சின்றிப் பார்வையாற் பீடார் புதனிளையை
ஏச்சின்றிச் சேர்ந்தா னிரங்கேசா—வீச்சின்றிக்
கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல'

இந்த மணமே சிறந்த மணமாகத் திகழ்ந்திருந்தது. குறிப்பிற் கூடு மணமாகிய களவு மணத்தால், இளைக்கும் புத னுக்கும் இன்பெய்தியது கண்டுணர்க. இங்குப் புதனென் பானை முதல் வகுப்புக்கு மேலானவனான தேவ வகுப்பிற் சேர்த்திருக்கிறார்கள், தற்போதைய கலைஞானிகள். தேவ வகுப்பிற் சேர்ந்த ஒருவன் சிறிதெனக் கொண்ட மணத்தைப் பூதேவ வகுப்பிற் சேர்ந்தார் எங்ஙனம் கொள்ளுவார்களோ அறியேம்! அதை அடியோடு தள்ளுவார்களென்றால், புரூரவனையும் அவன் வகுப்பாரையும் அடியோடு அகற்ற வேண்டும். களவு மணத்தின் உளவு அறியாக் கன்ம வயப்பட்டாரே இக்காலத்தில் கலை ஞானிகளெனப் பிரவர்த் தித் திருக்கிறார்கள். புத இளையர் மணம் உண்மைக் களவு மணமாகையால்தான், உடனே புரூரவன் பிறந்தான்; சக்கர வர்த்திகளுக்குள் தலை சிறந்திருந்தான்.

* இது இந்நூலாசிரியர் இயற்றியது.

இங்ஙனம் களவுப் புணர்ச்சியிற் கலந்து, கற்புப் புணர்ச்சியிற் றிகழ்ந்தார்க்கே புணர்ச்சி மகிழ்ச்சி, புதுமையாகத் தோன்றும். இதையே மற்றின்பம் யாவினும் மேலான சிற்றின்ப மென்பார்கள். பேரின்ப மென்பதில் சீவாத்ம ஐக்கியம் இல்லை; பரமாத்ம ஐக்கியமே பாங்குடையதாகும். ஆகையால் சீவாத்ம ஐக்கியத்தால் வீடு பெறும் சிற்றின்பமே மற்றின்பம் யாவினும் மேலான தென்றும். இதுபற்றியே நாயனாரும்,

'தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு'

என்றார்.

இதற்குத் துன்முகன் கங்கை கதையைச் சான்று கூறலாம்.

தேவேந்திரன் கொலுவுக்குக் கங்கை வந்தாள். அவள் வந்த அவசரத்தில் காற்றடித்ததனால் ஆடை விலகிற்று. அங்கிருந்தார் அனைவரும் கண்களை மூடிக்கொண்டு அவளுடைய மானத்தைக் காத்தார்கள். துன்முகன் ஒருவன் மட்டும் அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அது கண்ட தேவேந்திரன், "இங்கு நீ பெண்ணாசையோடு இருப்பது தகாது, பூமியிற் போய்ப் பிறந்து கங்கையைக் கூடியிருந்து வா" என்று சாபமிட்டான.

அப்படியே அவன் இந்திர சாபத்தை எற்று, யயாதி மகனாகப் பிறந்தான். கங்கையும் அவனுக்குத் தக்கபடி மானிட மகளாய்ப் பிறந்து, அவனை மணந்து மனமொத்து வாழ்ந்தாள். இதனால் துன்முகற்கு, இந்திர பதவியினும், கங்கையின் தோள்தோயும் சிற்றின்பப் பதவி சீரியதாயினமை காண்க.



இப்படி ஒத்த உள்ளமும் உருவமும் பருவமும் உடையார் கூடுவதே களவாலும் கற்பாலும் சிறந்த திருமணமாம். இதில் இருபாலாரும் வயது வந்து இன்பவுணர்ச்சிக் குரியவர்களாய் இருக்கவேண்டும். இன்பவுணர்ச்சிக் குரியால்லாத குழந்தைகளுக்குத் திருமணஞ் செய்வதால், எய்தும் போலி அநுகூலம் ஒன்றேனும், உண்மைப் பிரதிகூலங்கள் பலவென் றுணர்க.

கோவல கண்ணகியர் வாழ்ந்து வந்த கொள்கையும், நளாயினி செய்து வந்த பதிபக்தியின் பான்மையும், குழந்தை மணத்திலிருந்து பிறந்தனவல்ல. இவ்விருமணங்களும் குமார குமரியர் மணங்களாகவே சிறந்திருந்தன. எப்படி எப்படித் திருப்பிப் பார்த்தாலும் புராணேதிகாசங்களில் எல்லாம் குமார குமரியர் மணங்கள் காண்கின்றன அன்றி, குழந்தைக் கொடுமணவினை ஒன்றேனுங் காணவில்லை.

இது காறுங்கூறினயாவும் தமிழர், ஆரியர்களுடைய சீரிய மணமுறைகளும், இன்பவுணர்ச்சிகளுமேயாகும். இவைகளில் தமிழர் மணமுறையே சால்புடைத்தாயிருந்திருக்கிறது. அவர்களுடைய அறிவின் மேன்மையும் குணத்தின் பான்மையும் கொண்டாடத் தக்கனவாய் இருக்கின்றன. இப்படிப்பட்ட சிற்றின்பவொழுக்க முறையான சீரிய நூல்கள் உலகிற் கிடையா என்றே கூறலாம். ஆண் பெண் அபேதம் என்றறிந்து கூடிய காதலர் இருவரும், உடலிரண்டேனும் உயிர் ஒன்றாய்க்கூடியிருந்து வாழ்ந்தார்கள்; மலரும் மணமும் போல ஐக்கியமாய்க் கூடியிருந்தார்கள். அதனால் அறிவாளிகளான மக்கள் தோன்றிச் சிற்றின்ப வெற்றிக்கு அறிகுறியாய் விளங்கினார்கள். தசரதர் செய்யத் துணிந்தது போலவே, பழந்தமிழரும் காதலின்ப நுகர்ந்து,

'தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது' என்றபடியும்

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்றபடியும்

அறிவுடை மக்களைப் பெற்று, இல்லறத்தைத் துறந்து, துறவறத்தை மேற்கொண்டு வனம் புகுவது வழக்கமாயிருந்தது. அவர்களுடைய கருத்து,

'அவாவென்ப எல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாப் பிறப்பீனும் வித்து'

என்ற

அருமறைப் பொருளின்படி ஆசையே பிறவிக்குக் காரணம் என்பது. ஆகையால், அவர்கள் விட்டதே வீடு எனக் கருதி, இல்லற வாசையை அறவிடுத்து, முத்திநலம் எய்த வனநடுவிற் சென்றார்கள். இதுவே சிற்றின்பவெற்றிக்கு அறிகுறியாம். சிற்றின்பத்தைக் கைக்கொண்டதனால் மற்றின்பமாகிய பேரின்பம் பெறுதலே வெற்றிக்கு விளக்கமாம். தசரதர் தவமேற்கொண்டு வனநடுவிற் செல்லத் துணிந்தாரென்றால், தாமே தமியராகவா செல்லத் துணிந்தார்? மனைவியரோடு வானப்பிரத்தராகவே செல்லத்துணிந்திருந்தார். ஆண்மகனுக்குத் தான் வீடு பேறுண்டு. பெண்மகளுக்கு இல்லையென்பார் கூற்று இதனால் அழிந்தொழிவது காண்க. இருவர்க்கும் சிற்றின்பத்தில் எப்படி ஒத்த குணமும் பொறுப்பும் உண்டோ, அப்படியே பேரின்பத்திலும் உண்டு. முதல் வகுப்புக்கலைஞானிகள் இதை முற்றிலும் வெட்டியுரைப்பார்கள். நந்தமிழ் அகத்தில் வழங்கிய நூன் முறைகளிற் சிறந்ததாகிய தொல்காப்பியத்தில் ஆண்மகனைப் போலவே பெண்மகளும் வீட்டு நெறிக்கு உகந்தவளென்று கொள்ள

'சிறந்தது பயிற்ற
இறந்தது பயனே'

என்று



கூறியிருக்கின்றது. ஆண் வேறு பெண்வேறாகப் பிரிந்து ஆணுக்குப் பெண் தாழ்வாய் அல்லல் உற்றதே கிடையாது. ஆகையாலேயே அவ்வையாரும்,

'பிறன்மனை புகாமை
அறனெனத்தகும்'

என்று ஆண்

மகனுக்குக் கூறியதுபோலவே பெண்மகளுக்கும்,

'கற்பெனப் படுவது
சொற்றிறம் பாமை'

என்று கூறி

யருளினார். இருவரும் வேறன்று, ஒன்றெனக் கருதியிருந்தமையானன்றோ ஆரிய மதத்தாரும் கணவனோடு மனைவி உடன் கட்டையேறுதலை ஒப்பியிருந்தார்கள்? அதை ஒப்பினவர்கள், ஆண்பெண் அபேதத்தை ஏனோ ஒப்ப வகையறியாமல் வேறு கூறவேண்டும்? ஆண் பெண் அபேதத்தை ஒப்பினவர்களே குழந்தைக் கொடு மணத்தை வெறுப்பார்கள். குழந்தைக் கொடு மணத்தை ஒழித்தவர்களே சிற்றின்ப வெற்றியுற்றுச் சீரடைவார்கள்.

தமிழகத்தில் முற்காலத்தில் கணவன் மனைவியர் காதலொழுக்க முறையைத் திருக்குறளானும் தெள்ளிதின் உணரலாம்.

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று'

என்னும் திருக்குறட்பயன் சீரியதாகும்.

'மருந்தேயாயினும் விருந்தோடுண்'

என்ற மூதுரையின் மாட்சியும் இதற்குக் காட்சியாயிருக்கிறது. இன்னும் இது பற்றியே,

'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு'

என்னும் திருக்குறளைத் தேர்ந்து தெளிக.

கபீர் தாசர்க்கு அமைந்திருந்த மனைவியைப் போலவும் மாறநாயனார்க்கு வாய்த்திருந்த இல்லாளைப் போலவும் கணவன் மாரோடு இணக்க முற்று வாழ்வாரே மேலைக் குறளிற் கூறியபடி செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பதற்கு உகந்தவர்களாயிருப்பார்கள். ஆண்பெண் அபேதபாவம் ஏற்பட்டிருந்தமையாலேயே நாயனாரும் வருவிருந்து பார்த்திருப்பான் என்று ஆண்மகனை மட்டும் குறித்துக் கூறினார்.

ஆண்மகனும் பெண்மகளும் எல்லா விதத்திலும் ஒத்து வாழவேண்டும். அவர்களுக்குள் உருவு வேற்றுமையிலும் பால் வேற்றுமையே யல்லாமல் மற்றொன்றுமில்லை. கை, கால், குணம் முதலியவைகளும் ஒன்றேயாகும். குறியே வேறாயிருக்கின்றது. குறி வேறுபாட்டாலேயே பெண்களைத் தாழ்ந்தவர்களென்று கொள்வது பெரியார் சம்மதமன்று. ஒவ்வொரு தாவரமும், சங்கமமும், அதாவது அசரமும் சரமும், அதாவது, மாஞ் செடி மிருகபக்ஷிகளும் இப்படியே அமைந்திருக்கின்றன. பனையிலும் ஆண் பெண் என்றுண்டு. சமுத்திர அலையிலும் ஆண் பெண் என்று உண்டு. மற்றெல்லா உயிருள்ள பொருள்களிலும் உயிரில்லாப் பொருள்களிலும் ஆண் பெண் உண்டு. ஆனால் அவைகளுக்குள் பேதம் என்பதில்லை. ஆணின்றிப் பெண்ணில்லை. பெண்ணின்றி ஆண் இல்லை. பெண்ணினுடைய இயற்கை அமைப்பு முதலியவைகள் ஆணைக் காட்டிலும் மென்மைத் தன்மையாக அமைந்திருக்கின்றன. பூட்டு பெண்ணானால், சாவி ஆணாயிருக்கிறது. பூட்டின்றிச் சாவி பிரயோஜனமில்லை.



சாவியின்றிப் பூட்டுப் பிரயோஜனமில்லை. ஊசியுஞ் சரடும் போல என்ற பிரயோகத்தினும் பூட்டுஞ் சாவியும் போல என்ற பிரயோகமே ஆண்பெண் அபேதத்தை விளக்கச் சரியானதாகும். சிற்றின்ப வெற்றிக்கு ஆணின்றிப் பெண்ணிருந்து பயனில்லை. பெண்ணின்றி ஆணிருந்தும் பிரயோஜனம் இல்லையாம்.

இப்படி ஆண்பெண் அபேதமாய்க் கண்ணிரண்டும் ஒன்றையே காண்பது போல ஒற்றுமையாய் வாழ வேண்டும். அதனால் அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும் என்றபடி அறிவுடைமக்களைப் பெற வேண்டும்.

'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும்'

என்றபடி இல்லற ஆசை யற்றுத் துறவறஆசை யுற்றுக் கணவன் மனைவியர் வீடுபெறக் காடு நண்ணிக் கடுந்தவம் புரியவேண்டும். இதுவே சிற்றின்ப வெற்றிக்குச் சிறந்த வழியாகும்.

இனி வரூஉம் அதிகாரங்களிற் சிற்றின்ப வெற்றிபெற, அபேதமாய்க் கூடிய கணவன் மனைவியர் இருவரும் மனை மாட்சியோடு புதல்வரைப் பெற்று விருந்தினரை யேற்றுச் சுகமாய் வாழ்ந்து வீடுபே றெய்தும் விஷயங்களை,

'மக்கட் பிறவியே மாண்புடைத் தென்றல்,
இல்லற வாழ்க்கையே யின்புடைத் தென்றல்,
கற்புடை மனைவியே பொற்புடை யாளெனல்,
நன்மக்கட் பேறே நலமுடைத் தென்றல்,
நோயற்ற வாழ்வே சால்புடைத் தென்றல்'

முதலிய பலதலைக் குறிகளால் எழுதி முடிப்போம். ஆகையால் இதை வாசிப்போர்,

'அறம்பொரு ளின்பம்
வீடும் பயக்கும்'

என்றபடி இகசுகத்துக்கேயன்றிப் பரசுகத்துக்கும் பாத்திரர்களாய் வாழ்வார்கள்.

---

## இரண்டாம் அதிகாரம்

---

### (மக்கட் பிறவியே மாண்புடைத் தென்றல்.)

'அரிதரிது மானிட ராத லரிது' என்றபடியும், 'எறியுங்கட லினுகத் துளையில், யாமைக் கழுத்துப் புகுவதுபோல், பொறிவெம் பிறவி அனேகத்தால், புருடன் விவேகியெனப் பிறந்து' என்றபடியும், 'இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாது வருமோ அறிகிலேன்' என்றபடியும் அதிக அருமையாய்க் கிடைத்தது இம் மனிதப் பிறப்பு. இதனுடைய மாட்சிமையைக் காட்சியளவாலேயே காண்கிறோம். இதனால் சாதிக்க முடியாத காரியம் உலகில் எதுவும் இல்லை. ஆயிரக் கணக்கான காதங்களையும் நாட் கணக்கில் கடந்து செல்லும் புகைவண்டித் தொடர்களையும், நீராவிக் கப்பல்களையும், மின்சாரத் தந்திகளையும், ஆகாய விமானங்களையும், கம்பி யில்லாத் தந்திகளையும் பிறவையுங் கண்டுபிடித்திருக்கிறது, இம்மானிடப் பிறவியே யன்றி வேறெதுவும் அன்று. இதற்கு அடுத்த பிறவியாகிய விலங்குகளில் தலைமை வகிக்கும் சிங்கத்தையும் இது அடக்கி, அதன் முதுகில் ஏறிச் சாரிபோக வல்லதாயிருக்கின்றது. கட்செவியாகிய பாம்பையும் பிடித்து, நச்சுப் பல்லைப் பிடுங்கியெடுத்து ஆட்டி, வேடிக்கை காட்ட வல்லதா யிருக்கின்றது. மதயானையைப் படுகுழி வெட்டிப்



படுத்துப் பழக்கித் தன் வசப்படுத்த வல்லதா யிருக்கிறது. இரசவாதத்தால், இரும்பைப் பொன்னாக்க வல்லதா யிருக்கின்றது. பூதக் கண்ணாடியால் துரும்பைத் தூணாக்கவும், தூசியை மலையாக்கவும் வல்லதா யிருக்கின்றது. தண்ணீர்க்குள் மூழ்கி மூச்சுத் திணறாமல் கப்பல் யாத்திரை செல்லக் கற்றுக்கொண் டிருக்கிறது. 'மின்னாமல் இடித்தது' என்றபடி திடீரென்று நீர் நடுவிற் பாம்புபோலச் சீறும், பாம்ப் (Bowb) வெடிகுண்டுகளாற் பகைவரைக் கொல்லவல்லதா யிருக்கின்றது. ஆயிரக் காவதங்களுக்கு அப்பாலுள்ள புத்துலக மென்னும் அமெரிக்காவைக் கண்டு பிடித்து, அத்தேச வாசிகளோடு நேசஞ்செய்ய வல்லதா யிருக்கின்றது. நம் கண்ணுக்குத் தோன்றுகிறபடி பூமி தட்டையல்ல; உருண்டையாய் அந்தரத்தில் தொங்கினபடியே சூரிய பகவானைச் சுற்றி உருள் தண்டாகாரமாய் ஓடுகிறதென்று உணர்ந்திருக்கிறது. அதற்குக் காரணங் கேட்டால், 'சந்திர கிரகணத்தில், பூமியின் நிழல் சக்கர வடிவமாய், அதன் மேல் விழுவதைப் பார்த்தால் விளங்கும்' என்கிறது. இனி வரூஉம் சூரிய சந்திர கிரகண நக்ஷத்திர இயக்கங்களை இப்போதே தப்பறக் கணக்கிட்டுச் செப்பவல்லதா யிருக்கிறது.

'ஆசைக்கோ ரளவில்லை
அகிலமெலாங் கட்டியா ளினும்
கடன்மீதிலே ஆணைசெலவே நினையும்'

என்றபடி, அரசாட்சியிற் கிடைத்த மட்டில் மனநிறைவடையாமல் ஆயிரம் ஆயிரம் காதங்களுக் கப்புறத்திலாளும் ஆணையைச் செலுத்தவேண்டு மென்று ஆசைப்படுகிறது. இது ஆசை வசப்பட்டது, ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம் போன்றது. ஆசையால் இது செய்யமாட்டாத குற்றமும் இல்லை; குணமும் இல்லை. இது எண்ணாத

எண்ணம் இல்லை; பண்ணாத யோசனை இல்லை. இது அறஞ் செய்யவுந் தரும், ஆசை வசத்தால் மறஞ் செய்யவும் கூடும். இதனால் ஆகாத காரியம் எதுவும் இல்லை.

இப் பிறவி யென்று ஒன்று இருப்பதனாலேயே உலகந் தோன்றுகிறது. இது வளர்வதனாலேயே உலகம் வளர்கின்றது. இது மாறுவதனாலேயே உலகம் மறைகின்றது. ஆசைக் கயிற்றில் ஆடுவதனால் இதற்கு உலக மயக்கு ஒழிவதில்லை. மற்றைப் பிராணிகளுக்கும் இதற்கும் உள்ள ஆசைக்கு வேறுபாடுண்டு. மற்றைப் பிராணிகளுடைய ஆசைக்குப் பகுத்தறிவில்லை. இதற்குப் போலிப் பகுத்தறிவென்பதொன்று புகுந்திருக்கிறது.

இந்தப் பகுத்தறிவால் வந்த கேடு பெருங்கேடாம். அதனால் இது இவ்வுலக ஆசையென்பதொன்றுமே போதாதென்று அவ்வுலக ஆசையென்பதொன்றையும் ஏற்படுத்திக் கொண்டது.

“ பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு ’

என்ற செந்நாப்போதார் திருவாக்கை என்னவோ என்று உய்த் துணரமாட்டாமல் தயங்கி மயங்கி உயங்குகிறது.

‘ உன் பற்றொழிய ஒருபற்று மில்லை உடையவனே ’

என்றபடி ‘(அறியாமையால்) அவன் பற்றே பெரும்பற்றாயிருந்து, பிறகு, (அறிவால்) அப்பற்றையும் அகற்று’ என்பது மேலைக் குறளின் கருத்து.

இந்தப் பேருபதேச உட்கருத்தை உணராத போலி ஞானிகளே அகப்புறப் பற்றுகளால் மறைப்புண்டு அஞ்ஞான வுலகத்தைச் சுஞ்ஞான உலகமென்று மோசம்



போவார்கள். இதுபற்றியே சங்கராசாரியரும் தமது பஜகோவிந்த சுலோகத்தில்,

‘ மெய்திரைந்து வெண்மயிராய் மெல்லுதற்குப் பல்லின்றிக்
கைவிதிர்த்து மூங்கிற்கோல் காலாகி—ஐயொழுக
மந்திபோற் குந்தி மனிதன் நடந்தாலும்
பந்தம் விடாதவனைப் பார் ’ என்றருளினார்.

‘ உடலின் தோல் திரைந்து, மயிர் நரைத்து, வாயில் மெல்லுவதற்குப் பல்லின்றி, கைநடுங்கி, மூங்கில்தடி மூன்றாங்காலாக வூன்றி, கோழை ஒழுகக்குரங்குபோலக் குந்தி நடக்கும் (கூன் கிழவனானாலும்) மனிதனுக்கு ஆசைமாத்திரம் விடாது ’ என்பது இதன் பொருள்.

இப்படி ஆசை வசப்பட்டு உழலும் அஞ்ஞானிகளே சிற்றின்பம் பேரின்பமென்று இன்பத்தை இருகூறாக்குவார்கள்; சிற்றின்பவெற்றிக்கு இல்லறமே சிறந்த வழியென்பார்கள்; பேரின்பவெற்றிக்குத் துறவறமே பெரிய வழியென்று பேசுவார்கள்.

‘ ஆசாபசாசைத் துரத்து ’

என்ற பெரியார்க்கு இந்தப் பாகுபாடு இல்லை.

இப்படி உண்மை ஞானிகளுக்கு வெற்றின்பமாய்த் தோன்றும் சிற்றின்பமே மனிதன் சுஞ்ஞானியாவதற்கு நுழையும் சோபான மார்க்கத்தில் முதல் மார்க்கமாம். ஆகையால் நாயனாரும் இதைப்பற்றித் தமது தெய்வத் திருக் குறளில்,

‘ இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான் முயல்வாரு ளெல்லாந் தலை ’ என்றருளினார். இன்னும் அவரே,

‘ அழுக்காறாகிய பொறாமையையும், ஆசையையும், கோபத்தையும், கடுஞ்சொல்லையும் விட்டவனே இல்லறத்தானாவான் ’ என்னுங் கருத்தமைந்த

'அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்'

என்னுங் குறளை அருளிச்செய்தார். பேராசை வசப்பட்ட பேய்ஞானியாகிய மனிதன் இல்லறத்தை நல்லறமா நடத்த வேண்டுமென்று நாயனார் ஏன் விரும்பினார்? மக்கட் பிறவி யன்றி மற்றெந்த உயிருள்ள பிறவிக்கும் பகுத்தறிவால், ஒத்த மனைவியோடு இல்லற நடாத்தும் இயற்கை இல்லை. இல்லற நடாத்தும் இயல்பினாலே மக்கட்பிறப்பிற் பிறந்தானுடைய மாட்சிமை விளங்கும். மக்கட்பிறப்புக்கே பகுத்தறிவென்பது சிறப்பு. ஆகையால், அதை உபயோகிப்பதற்கு இல்லற வழியே சிறந்ததாகும்.

இப்படி இல்லறமே 'நல்லறமென்று அவ்வழியில் நுழைந்து சென்று தத்துவஞானியாய் விளங்கப் பிறந்த மனிதன், 'ஆதியில் எப்படியிருந்தான்? இப்படியானான்' என்று இங்குச் சற்று ஆராய்வது நங்கடமையாயிருக்கிறது.

ஆதியில் மனிதன் புல்லாயிருந்தான் என்கிறார் மாணிக்க வாசகர். அவர் கூற்று தத்துவமுணர்ந்தார் கூற்று. ஆகையால் அதைக் கூர்ந்து பார்ப்பது நங்கடமையாயிருக்கிறது. பிறகு அவன் புழுவானானென்கிறார். புல்லாயிருக்கு முந்தி, மனிதன் கல்லாகவும், கல்லாயிருக்கு முந்தி மண்ணாகவும் இருந்தானென்பது மாணிக்கவாசகருடைய கொள்கை. மண் இறுகியே கல்லாயிற்று. கல்லுருகியே புல்லாயிற்று. புல்லிலிருந்தே புழுவுண்டாயிற்று. இதற்கு ஆங்கிலத்தில் (Evolution theory) பரிணாமவாதம் என்பார்கள். தமிழில் விரிவுக்கொள்கை என்பர். ஒன்றிலிருந்து மற்றொன்று பிறத்தல்—ஓருருவில் மற்றோருரு வெளிப்படுதல். புழுவி லிருந்து ஊர்வனவும் பிறவும் தோன்றின. ஊர்வனவற்றி லிருந்து நடப்பன பிறந்தன. நடப்பனவற்றிலிருந்து பறப்



பன பிறந்தன. மனிதன் நடப்பன வற்றிலிருந்தே தோன்றி
னான். ஆகையால் அவனுடைய உருவாதிகள், வாலில்லாக்
குரங்கு (Apes) களுடைய உருவாதிகளை ஒத்திருக்கின்றன.
அவைகளுடைய எலும்புகளும் இவனுடைய எலும்புகளும்
உருவத்திலும் எண்ணிலும் ஒத்திருக்கின்றன. அவை
களுடைய மூளையும் இவனுடைய மூளையும் அளவில் வேறு
படினும், உருவத்தில் ஒன்றேயாய்த் தோன்றுகின்றன.
அவைகளுடைய பாதங்களுக்கும் இவனுடைய பாதங்
களுக்கு மட்டும் சிறிது வேறு பாடிருக்கின்றது. அவை
களின் பாதங்கள் பற்றுவதற்கும் எற்றுவதற்கும் அள்ளு
வதற்கும் கிள்ளுவதற்தும் ஏற்றவாறு அமைந்திருக்கின்றன.
மனிதன் பாதங்கள் நடப்பதற்தும் அளப்பதற்கு மட்டுந்
தான் உதவும். அவைகளின் நா, அதிக நீளமாய் மெலிந்தி
ருப்பதால் அவைகள் பேசமாட்டா. மனிதனுடைய நா
அப்படியன்று. அளவாய் நீண்டுந்தடித்தும் இருப்பதால்,
தெளிவாய்ப் பேசவுதவுகிறது.

உலக முழுவதையும் துருவிப்பார்த்ததில், ஆதிமனிதன்
எப்படியிருந்தானென்றுணர்வது அசாத்தியமாயிருக்கிறது.
ஆதிமனிதன் இப்போது பேசுகிறபடி அப்போதும் தப்பறப்
பேசினான் என்பதற்கில்லை; இப்போது உணருகிறபடியும்
புணருகிறபடியும் அப்போதும் தப்பறச் செய்தான் என்ப
தற்கில்லை. ஆதியில் இவன், காடுகளிலும் மேடுகளிலும் வசித்
திருந்த காலத்தில், அம்மணமாகவே திரிந்து கொண்டிருந்தி
ருக்கவேண்டும். அப்போது இவனுக்கு மானம் என்ப
தொன்று இருந்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. இவன்
பேச்சற்றிருந்திருக்க வேண்டும். எல்லாம் சைகையாலும்
செய்கையாலுமே நடந்திருக்க வேண்டும். பேச்சில்லை யென்
பதனாலேயே இவனுக்குக் குரல் இல்லை யென்றேற்படாது.
குரல் இருந்திருக்கலாம், அதையும் சில சைகைக்கு உபயோ

கித்திருப்பான். இப்போதும் குரங்குகள் முதலிய சில
பிராணிகளுக்குள் ஒரு விதமான பேச்சுக் குரல் கேட்கிறது.
அதன் பொருள் அவைகளுக்கே தெரியும். இது போலவே
மனிதனும் ஆதியிற்பேச்சற்றிருந்தானேனும், குரலற்றிருக்க
வில்லை. அந்தக் குரலின் சைகையாலேயே எல்லாம் நடந்து
கொண்டிருந்தது. இதற்கு அங்கிலத்தில் (Dumb theory)
ஊமைக் கொள்கை என்று பெயர். இதனாலேயே இப்
போதுள்ள மனிதன் தவிர மற்றைப் பிராணிகளை வாயில்
லாப் பிராணிகளென்கிறோம். வாயில்லை யென்றால், அவை
களுக்கு உணவுண்ண வாயில்லை யென்று பொருளல்ல;
மனிதனுக்குத் தெரியும்படி பேச வாயில்லை யென்றே
பொருள்.

ஆதியில் மனிதனும் இப்படியே வாயில்லாதவனா யிருந்
தான். வாலில்லாக் குரங்கின் மூளையைப்போல, இவனுக்கு
மூன்று பங்கு கொண்ட பெரிய மூளையிருப்பதால் இவனுக்
குப் பகுத்தறிவென்பது நாளா வட்டத்தில் ஏற்பட்டது.
அதனால் இவன் சைகைப் பேச்சை, செய்கைப் பேச்சாகத்
தெளிவாய்ப் பேசத் தொடங்கினான். அதற்குத் தக்கபடி
இவன் நாவும் தடிப்பாய்க் கிளிப்பிள்ளை நாவைப்போல
அளவாய் அமைந்திருக்கிறது. இவன் பேசுகிறபடி இவ
னுடைய நாவைவிட அதிக நீளமான நாவுடைய பிராணிகள்
பேசாமைக்குக் காரணம், அளவு கடந்த மெல்லிய நாவே
யென்று மேலே கூறியுள்ளோம். நம்மோடுடனிருந்து பழ
கும் நாய்க்கும் பூனைக்கும் நாக்கள் மெலிந்து நீண்டிருப்பத
னாலேயே அவைகள் முறையே குரைக்கவும் உறுமவும் வல்
லனவாயிருக்கின்றனவன்றிப் பேசும் வலியற்றிருக்கின்றன.
மிருகங்களில் யானையையும் சிறு பிராணிகளில் முயலையும்
பிறவையும் ஆராய்ந்து பார்க்கினும் இப்படியே யிருக்கின்
றன. கிளி முதலியன போன்ற பிராணிகள் பேசினாலும்



மனிதன் கற்றுக் கொடுத்த அளவே பேசவல்லனவன்றிப்
பகுத்தறிவால் தாமே ஒன்றுஞ் சொல்லவும் செய்யவும் வல்
லன அன்று. யானை, மாடு, ஆடு, குரங்கு, சிட்டு, காடி, புலி,
சிங்கம் முதலியனவும் மூளையிற் பருத்த மனிதன் கற்பித்த
படி ஆடும் அன்றித் தாமாகவே ஒன்றும் செய்யவல்லன
வல்ல. முதுகெலும்புப் பிராணிகளில் முதன்மை பெற்ற
வன் மனிதன். அவைகளுக்குள் மூளை பருத்தவன் மனிதன்.
இவனுடைய உடல் அமைப்பும் கைகால் முதலிய அவயவ
அமைப்புகளும், நாற்காற் பாய்ச்சலில் நடக்கும் அவைக
ளின் உடல் அமைப்பு முதலியவைகளினின்றும் வேறுபடு
கின்றன. இவன் குழந்தையா யிருக்கையில் சில மாத காலம்
நாற்காற் பிராணிபோல நகர்கின்றானன்றி, நடக்கத் தொடங்
கினதிலிருந்து, இருகாலிலேயே தலையை உயர்த்தி முன்
னோக்கி நடக்கிறான். மற்றைப் பிராணிகள் நாற்காற் பாய்ச்
சலிலேயே எப்போதும் நிலத்தை நோக்கி நடக்கின்றன.
குரங்குகள் மட்டுமே இவனைப்போலச் சில சமயங்களில்
இரு கால்களில் நடக்கின்றன. இவனும் அவைகளைப்
போலவே ஒரு காலத்தில், மரங்களிலும் செடிகளிலும் புதர்
களிலும் அதர்களிலும் வாழ்ந்து வந்தவன்தான். இவ
னுக்கு மூளை பலத்தால் பகுத்தறிவும், பகுத்தறிவின் பலத்
தால், அவைகளை அடக்கி யாளும் வன்மையும் ஏற்பட்டன.
ஆதியில் இவன் தன் கைகால்களையே கோழியைப் போல
வும், பிற பிராணிகளைப் போலவும், ஆயுதமா யுபயோகித்
துத் தற்காப்புச் செய்து கொண்டிருந்திருக்க வேண்டும்.
நாளாவட்டத்தில் இவனுக்குத் தன் கைகால்களே போது
மான ஆயுதங்களாக இல்லை யென்று காணும்படி ஆசை
அதிகரித்தது. முதலில் இவன் பழங்களை மட்டும் தின்று
பிழைத்தான். இலைகளையுங் காய்களையுந் தின்று வந்தான்.
இவைகளைத் தின்று பிழைப்பதற்கு இவனுக்கு ஆயுதம்

தேவையில்லாதிருந்தது. பிறகு, பூமியிற் புற் பூண்டுவகைகளிற்றோன்றும் கிழங்குகளை அகழ்ந்தெடுத்துத் தின்னவேண்டுமென்று எண்ணங் கொண்டான். அப்படி அகழ்வதற்கு இவனுடைய கையாயுதமும் காலாயுதமுமே போதா. ஆகையால் கல்லாயுதங்கண்டு பிடித்தான். (Necessity is the mother of invention) 'தனக்குந் தனக்கானல் மிடுக்கனுங் களை கொத்துவான்' என்பது பழமொழி. இக்கல்லாயுதத்தால், இவன் அடைந்த நன்மைகள் பல; நவீன நாகரிக முறைப்படி இப்போதவைகளை நன்மைகள் என்று சொல்வதற்கில்லை. கல்லாயுதத்தால் இவன் கிழங்குகளை அகழ்ந்தெடுத்த தொன்று மட்டுமா செய்தான்! மிருகங்களையும் கொன்றான். கற்களாலேயே பற்பல கத்திகளும் ஈட்டிகளும் செய்தான். மரங்களையும் வெட்டினான். அவைகளின் பட்டைகளைப் பேர்த்தான். போர்வைகளாக அவைகளைத் தன் உடலிற்போர்த்தான். அப்போதிவனுடைய பகுத்தறிவு இருந்த அளவில், இப்போது சொல்லிக்கொள்ளும் மானம் என்பது ஒன்று இருந்ததில்லை. களங்கமற்றிருந்தான். இது குறித்தே விவிலிய நூலாகிய பைபிலிலும், "ஆதி மனிதன் தன் மனைவியோடு அம்மணமாய் வாழ்ந்தான். விலக்கின கனியை உண்டபிறகே, தான் அம்மணமாய் இருப்பதைப் பகுத்தறிந்தான். மானத்தை இலைகளாலும் பட்டைகளாலும் மூடிக் கொண்டான். ஆணென்றும் பெண்ணென்றும் வேறு பிரித்தான்" என்று சொல்லியிருக்கின்றது. இவனுக்குக் கல்லாயுதம் இருந்ததனால் கை சும்மா இல்லை. தனக்குக் கீழ்ப்பட்டு, நிமிர்ந்து இருகாலில் நடக்க மாட்டாத மிருக பக்ஷிகளைக் கொன்று, அவைகளுடைய தோலால் போர்வையாக்கிக் கொண்டான். இப்படிக் கல்லாயுதங் கொண்ட மனிதன் வாழ்ந்த காலத்தையே கற்காலம் என்கிறார்கள். இதற்கு அங்கிலத்தில்



(Stone age) என்று பெயர். இந்தக் கற்காலத்துக்கு முந்திய காலந்தான் தத்துவ காலம். இது எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னிருந்திருக்க வேண்டும். (Early age) ஆதிகாலமென்றும் இதற்குப் பெயர் வழங்குகின்றது. சுமார் முப்பதினாயிர வருடங்களுக்கு முந்தி என்கிறார் சிலர்; இந்தக் காலம் பதினாயிரம் வருடங்களுக்கு முந்தியது தான் என்கிறார்கள் இன்னும் சிலர். விவிலிய வேதமாகிய பைபிலின் படியும் பதினாயிரம் ஆண்டுகள் தாம் ஆகின்றன. நம்மத வழக்கத்துக்கு இது சம்மதமாயில்லை. இராமாயண பாரத நடந்த காலங்கள் இரண்டாயிரத்துச் சில்லரை வருடங்கள் தாம் ஆகின்றன என்று இப்பொழுது கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நந்தமிழகத்தோர் நாகரிகமடைந்திருந்த காலம் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியேயென்றுகணக்கெடுத்திருக்கிறார்கள். சங்ககாலங்களும், முதல் இடை கடைகளை நோக்குமிடத்துப் பதினாயிரமாண்டுகளுக்கு முந்தியிருக்குமன்றிப் பிந்தியிரா. எப்படியேனும்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்,

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என்றபடி கடைமுறையாக மனிதப் பிறவியிற் பிறந்தோன் ஆதியில், விருப்பு வெறுப்பற்று, நன்மை தீமையற்று, மானம் ஈனமற்றுக் களங்கமற்றவனாய்க் கவடற்றவனாய்த் தன்னந்தனியனாய் இன்புற்றிருந்தான் என்பதற்கையமில்லை. இது குறித்தே இந்நூலில்,

மக்கட்பிறவியே மாண்புடைத் தென்றல் என்று இந்த இரண்டாம் இயல், தலையங்கம் பெற்றிருக்கிறது. இப்படிப்

பட்ட மாட்சிமையுற்ற மக்கட்பிறவி, என்ன காரணத்தாலோ விருப்பு வெறுப்புற்று, நன்மை தீமையென்னும் வேற்றுமை பிரித்து, களங்கம் கவடுபெற்று, மானம் ஈனமுற்று, தத்துவ ஞான மற்றுத் தயங்குகின்றது. இதற்குக் காரணம் மனிதன் இடையிற் பெற்றுக்கொண்ட போலிப் பகுத்தறிவே யாகும் என்பர் மேலோர்.

இப்படித் தனக்கெனவோர் பற்றின்றிச் சுட்டற நிற்பவனே சுஞ்ஞானியாவான். இப்படிப்பட்ட சுஞ்ஞானியாயிருக்கவேண்டுமென்றே, நாயனார், தமது திருக்குறளில்,

'வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில'

என்றார்.

கற்கால மனிதன், நாளேற நாளேறப் பிற்கால மனிதனாய்க் கள்ளங்கவடுகளில் உள்ளத்தைப் பறி கொடுத்து, மானம் ஈனமென்னும் பாகுபாடு கொண்டு, பேராசை வசப்பட்டுக் கெட்டான். அந்தக் கல்லாயுதங்கொண்டே, வில்லாயுதமும் தேடிக்கொண்டான். அந்த வில்லாயுதத்தால் விலங்குகளையும் பறவைகளையும் போதுமான மட்டும் கொல்லத் தொடங்கினான். அவைகளின் தோலை ஆடையாக்கிக் கொண்டதுமன்றி ஊனை உண்ணவுந் தொடங்கினான். மரங்களின் கிளைகளைக் கொண்டே நெருப்புண்டாக்கவுங் கற்றுக்கொண்டான். இறைச்சியைப் பச்சையாய் மென்றுண்ணும் பல்லமைப்பில்லாதவனாகையால், அதை அவன் தீக்கடை கோலால் தீயுண்டாக்கி, வதக்கியுண்ணத் தெரிந்துகொண்டான். இதனால் இவனுடைய குடல், செரிக்குந் தன்மையில் வலிகுன்றியது. நெடுநாள் இப்படித் தோலாடையும் இலையாடையும் சுற்றித்திரிந்த இவன் கல்லாயுதங்கொண்டு, கிழங்ககழ்ந்தெடுக்க நிலத்தைத் தோண்டு



கையில், இரும்பு முதலிய உலோகவகைகளைக் கண்டெடுத்தான். இதுவே கற்காலத்துக்குப் பிறகு தோன்றிய உலோககால மாகும். இந்தக் காலத்தில் இவன் தன் ஆயுதங்களை இரும்பாலும், எஃகாலும், செம்பாலும், பிறவாலும் செய்துகொண்டான். இக்காலத்தில்தான் இவன் உலோக வகைகளால் (இரும்பால்) நிலத்தை உழும் உழுபடை முதலியவைகளைச் செய்து கொண்டான். அதற்கு முந்தியிவன் நிலத்தை உழுவதற்கும், பகைவனை எதிர்த்துப் படையெழுவதற்கும் மரத்தாலும் கல்லாலுமே ஆயுதங்கள் செய்துகொண்டிருந்தான். மத்திய காலமாகிய உலோக காலத்தில்தான் இரும்பாலும் எஃகாலும் ஆயுதங்களைச் செய்துகொள்ளத் தொடங்கினான்.

ஆயுத பலத்தாலும், இவன் தன் போலியறிவாலும் செய்யாத கொடுமைகள் இல்லை. இவனுக்கு வயது முதிர முதிர, போலிப் பகுத்தறிவு வளர வளர, பொறாமையும், சூதும், கவடும், கள்ளமும், தீமை நிறைந்த உள்ளமும் வளர்ந்தன. இதையே விவிலிய நூலார் மனிதன் பாவியானனென்கிறார்கள். அவர்கள் சொல்வதிலும் உண்மை யிருக்கிறது: நாளேற ஏற மனிதனுக்குப் போலிப் பகுத்தறிவு ஞானமேறித் தீமையையும் நன்மையென்று செய்யத் தொடங்கினான். அப்படிச் செய்யாமல் தம் மனத்தை நல்வழியிற் செலுத்தினவரே, நந்நாட்டுப் பெரியோராகிய முனிவராவார். அவர்களிற் சுகரென்பார் இவ்வுலக ஞானத்தை வெறுத்து, போலிப் பகுத்தறிவின் மயக்கைப் பழித்துக் கிளி வடிவாயிருந்த திலோத்தமை வயிற்றிற் சிசுவாயிருக்கையிற் கர்ப்பத்தை விட்டு வெளிப்பட்டு உலகிற் பிறவாமல், காலதாமதஞ் செய்துகொண் டிருந்தார். இவர் பிதா வியாச முனிவர். சுகர், தந்தாய் வயிற்றிலிருக்கும்போதே, உண்மையுணர்ச்சியுடைய தத்துவஞான முற்றிருந்தார். ஆகையால்

அவர்க்கு உலகப்போலி யாசாரத்தில் உழல மனமில்லை. தாய் வயிற்றிலேயே நெடுங்காலம் இருந்தார். அவரை இந்திரன் முதலிய தேவரும் பிறரும் எத்தனையோ வேண்டியழைத்தார்கள். அவர்களனைவருக்கும் அவர், தந்தாய் வயிற்றிலிருந்தபடியே, தக்க சமாதானஞ் சொல்லிப் பன்னீராண்டு கழித்தார். அதற்கப்புறமும் அவர் தாயால் கர்ப்பத்தைத் தாங்கமுடியாது. பிறகு திருநெடுமால் தோன்றி, அவரை, "வெளியே வா" என்றழைத்தார். அதற்கவர், "மாயவராகிய உமது மாய வலையிற் பட்டுழல அஞ்சியே நான் வெளிப்பட அஞ்சுகிறேன்" என்றார். அது கேட்ட மாயவர், "நம்முடைய மாய்கை எவரையும் விடாது. உம்மை யது கண்ணாடியில் உழுந்துருள் பொழுதேனும் வாட்டாது விடாது. அதற்கு நீர் ஒப்பியே தீரவேண்டும்" என்றார். "அப்படியே!" என்று ஒப்பிய சுகர், கண்ணாடி வருவித்து, அதைச் சாய்த்து நிறுத்தி, உழுந்தை உருட்டச் சொல்லி, உடனே தாம் வெளியில் வருவது போலப் போக்குக் காட்டினார். உழுந்தும் உருண்டு ஓடிற்று. சுகரும் தெருண்டு வெளியில் வந்து, உலக மாய்கையி னீங்கி, பிரமஞானமாகிய தத்துவ ஞானத்தில் தலை சிறந்து விளங்கினார். மாயவன் மாயம் அவரை ஒன்றும் செய்யாமல் ஒடுங்கிற்று. இது குறித்தே நீதி சூடாமணியில்,

வெண்பா.

'கெர்ப்பத்தி லேசுகனார் கேடில்பொருளைக்குறித்தார்
இப்புதுமைக் கன்பாம் இரங்கேசா-உற்பத்தி
ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர் வில்லாத வர்க்கு'

என்று வந்திருக்கின்றது.

சுகரைப்போலவே பட்டினத்தடிகளும், பரம ஞானியாய்ப் பாக்கியம் பெற்றவர் முனிவரினும் சிறந்து விளங்



கியவர். காவிரிப்பூம்பட்டினத்திற் கோடீசுவராய் வாழ்ந்தவர். இவர்க்குப் பட்டினத்துப் பிள்ளை யென்று வழங்குவது, இடமடியாகப் பிறந்த பெயர். இவர் காலத்திருந்த பத்திரகிரியார் என்ற அரசரும், செல்வத்தில் இவர்க்கு இணையல்லர். இவர் விஷயத்தில் மருதவாணர் கருணைகூர்ந்து, ஒரு நாள் இவர் வீட்டிலில்லாத போது, ஒரு பெரியவர் போலத் தோன்றி,

'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே'

என்றெழுதி யிருந்த ஒரு சிறு நறுக்கை இவர் மனைவியாரிடத்திற் கொடுத்துச் சென்றார். பிறகு வீட்டுக்கு வந்த இவர், அச்சிறு நறுக்கைக் கண்டவுடனே ஞானோதயமாய்ச் சுமார் பத்துக்கோடி மதிப்புள்ள செல்வத்தையும், தம் மனைவி முதலியவைகளையும், 'சட்டி சுட்டது கைவிட்டது' என்றபடி துறந்து சென்றார். இந்தப் புறப்பற்றுக்களை விட்டபடி இவர் தம் அகப்பற்றுக்களையும் அடியோடு தொலைத்துப் பிச்சைபுக்குண்டு, ஞானசமாதியில் வீற்றிருந்து, வானோர்க்குயர்ந்த வுலகத்திற் புகுந்தருளினார். இது குறித்தே நீதி சூடாமணியில்,

"பீடுபெறு பட்டினத்துப் பிள்ளையைப்போ லேதுறவார்க்(கு)
ஈடு தருமோ இரங்கேசா—நீடுலகில்
யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்(கு)
உயர்ந்த வுலகம் புகும்" என்று வந்திருக்கிறது.

இப்படி இந்தக் காலந்தான் முனிவர் காலம் என்று வழங்குகிறது. இந்த முனிவர் காலந்தான் திருந்தியகாலம்; சீர்திருந்தியகாலம்; நாகரிககாலம். இதைத்தான் ஆரியர் வேதகாலப்—பேதகாலம் என்கிறார்கள்.

இன்னும் இந்தக் காலத்தையே ஆங்கிலேயர் (Civilised) நாகரிககாலம் என்கிறார்கள். நகரம் என்பதி

விருந்தே நாகரிகம் என்னும் பதம் வந்ததாக நாம் எண்ணிக் கொள்ளவேண்டும். இயற்கைக்கு விரோதமாக எல்லா விஷயத்தையுங் கெடுத்து, முன்னேற்றத்தைத் தடுத்துக் கெடுதிதொடுத்துக் கொள்வதே நாகரிகம் என்னும் பதத்திற்குப் பொருளாகும். தற்சமயம் சென்னை யடைந்திருக்கும் போலி நாகரிகங்கள் பலவற்றில், மோட்டாரிற் பிரயாணஞ்செய்யும் ஒன்றைக் கவனித்தாலும் போதும். கால், கை முதலிய உறுப்புகள் நன்றாயமைந்திருப்பவர்கள் நடந்து செல்வதே நாகரிகமாம். நொண்டிகளைப்போல அவர்கள் வண்டிகளிலும் மோட்டார்களிலும் செல்வதால், தேகப் பயிற்சியின்றிக் கெடுகிறார்கள். இப்படி எத்தனை எத்தனையோ நகரவாசப் போலி நாகரிகங்கள் கெடுதி விளைப்பதை உணராதாரே அவைகளைக் கொண்டாடிப் பின்பற்றி மகிழ்வார்கள்.

இந்தக் காலந்தான் நாகரிககாலம், முனிவர்காலம் அல்லது சோற்காலம் என்று பெயர் பெறும். சொற்பொழிவுக் காலம் என்றும் சொல்லலாம். முனிவர்களுக்குக் காரியங்களெல்லாம் சொற்பொழிவாலேயே நடந்தன. இதனாலேயே, இவர்களைப்பற்றி நாயனார் தமது திருக்குறளில் சொல்லேருழவர் என்கிறார்.

> ‘வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
> சொல்லே ருழவர் பகை’

என்பதில் சொல்லேருழவர் என்னுந் தொடர், முனிவரையே குறிக்கும். வல்லவனுக்குப் புல்லாயுதம் என்பதுபோல முனிவர்க்குச் சொல் லாயுதமாயிருந்தது. அவர்களுடைய சொற்களாலேயே எல்லாம் நிறைவேறிற்று. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியிருந்த இயேசுநாதர்க்கு ஆயுதமாயிருந்த தெது? அவர்தாம் எடுத்த காரியத்தை



எதனால் நிறைவேற்றினார்? தமது சொல்லாயுதங்கொண்டே அஞ்ஞானப் பகையை வென்றார். மகமதுவுக்கும் அப்படியே அவருடைய சுஞ்ஞானச் சொற்பொழிவே அஞ்ஞான இருளை அகற்றவல்ல ஆயுதமாயிருந்தது. சொற்காலமாகிய அவர் காலத்திருந்தார், அவருடைய அருமை அறியாமல் அவர்க்குக் கற்கால மனிதரைப்போலக் கொடுமை செய்யத் தொடங்கினார்கள். எல்லாவற்றிற்கும் அவர் சுஞ்ஞானியா கையால்,

> ‘அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
> தஞ்ச லறிவார் தொழில்’

என்றபடி அஞ்சியிருந்து காரிய சித்திபெற்றார். ஓர் ஊரிலிருந்து மற்றோரூர்க்குப் பகைவரை அஞ்சி ஓடினார். இயேசுநாதரும் அப்படியே, தம் பகைவரை யஞ்சித்தம்மை ஒப்புக்கொடுத்தார். திருநாவுக்கரையரும் சமணரை யஞ்சி, அவர்கள் தண்டனைகளுக்கு உட்பட்டிருந்தார். பிரகலாதனும் தன் தந்தையிட்ட தண்டனைகளை ஏற்றுக்கொண்டான். பிரகலாதன் தந்தையாகிய இரணியன் தற்காலத்தான் என்னும்படி மிலேச்சனாய்க் கொடுமை மிகுந்திருந்தான். அவனுக்கு மகனென அவதரித்த பிரகலாதன், தான் சொற் காலத்தா னென்பதற் கடையாளமாய் எத்தனையோ சாந்தமாக, அவனுக்கு நல்லுபதேசஞ் செய்தான். அப்படி அவன் செய்ததெல்லாம் வீணாயின.

> ‘பொல்லார்க்கு நன்மைசொல்லப் போயினார் நம்முயிரைக்
> கொல்லாமை கோடி பெறும்’

என்றபடி அவனைக் கொல்ல இரணியன் எத்தனையோ சூழ்ச்சி செய்தான். திருஞான சம்பந்தரையும் அப்படியே சமணர் கொல்லத் துணிந்து மடத்தை நெருப்பிட்டுக் கொளுத்தினார்கள்.

இவைகளெல்லாம் உலோக காலம் (Metal age) அல்லது விற்காலம் என்னும் உலோககாலத் திறுதியில் நடந்ததாகும். உலோக காலத்தை நாம் விற்காலம் என்போம். ஏனெனில் உலோககாலத்தில் தான், மரப் பகழிகள் மாறி, இருப்புப் பகழிகளும் அவைகளுக்குத் தகுந்த விற்களும் ஆயுதங்களா யிருந்தன. பற்பலவிதமான வில் லம்புகள் புறப்பட்டன. இருப்பாயுதங்களாகிய கத்திகளும் ஈட்டிகளும் உலக்கைகளும் தோன்றின. இரும்பே அன்றிச் செம்பும் ஆயுத வகைகளுக் குபயோகமாயிற்று.

இப்படி இவ்வெல்லா ஆயுதங்களுக்கும் முதலாயுதமாகத் திகழ்ந்திருந்தது வில்லாயுதமே. ஆகையால், உலோக காலத்தை விற்காலம் என்றோம். இக்காலந்தான், உலகத்திற் கொலைகளும் களவுகளும் கொடுமைகளும் அடிமைகளும் பிறவும் மலிந்திருந்த காலம். இந்தக் காலத்தின் இறுதியில் தான், சொற்காலம் தொடங்கிற்று. முனிவர்கள் தோன்றினார்கள். ஜகத் குருமார் அவதரித்தார்கள். சங்கராசாரியர் அவதரித்தார். இராமானுஜர் தோன்றினார். மத்வர் பிறந்தார். இவர்களுக்கு முந்தியே இன்னும் இயேசுநாதர், மகமத், புத்தர் முதலிய எத்தனையோ மகான்கள் அவதரித்துச் சொல்லாயுதத்தால் வில்லாயுதத்தை அடக்க முயன்றார்கள்.

விற்காலத்துக்கு முந்திய காலந்தான் கற்காலம்--கல்லையே ஆயுதமாகக்கொண்டு வாழ்ந்த காலம். இக்காலத்தார், மிலேச்சர் ; மூடர் ; எழுத்தறியார் ; சொல்லை சரியாய்த் தெரியார்; சைகையாலேயே ஊமைப் பேச்சுக் கற்றிருந்தார்கள் ; கல்லால் கத்தி ஈட்டி முதலியன செய்திருந்தார்கள்; கல்லால் பூமியை அகழ்ந்து கிழங்கெடுக்கக் கற்றிருந்தார்கள்; கல்லாயுதத்தால் மரங்களை வெட்டினார்கள் ; அவைகளின்



பட்டைகளை யுரித்தார்கள் ; முரட்டாடையாக்கிக் குளிர்க்கும் போர்த்துக் கொண்டார்கள். இக்காலத்தில் மானம் என்பது ஒன்று இருந்ததில்லை. ஆண் பெண் பேதமுங் கிடையாது. இப்படியே இன்னுஞ் சிலர் நீலகிரி முதலிய இடங்களில் இருக்கிறார்கள். இவர்களுக்குக் கவலை யென்பதே கிடையாது.

‘ வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து ’

என்று சொற்காலத் தவராகிய நமது மகான் சொன்னபடி, இவர்கள் வேர்த்தாற் குளித்துப் பசித்தால் புசித்துக் காலந் தள்ளினார்கள். இவர்கள் ஆகாரம், கிழங்கும் கனியும் கலந்திருந்தது. இவர்களுக்கு விற்கால மனிதர்க்குத் தெரிந்திருந்ததுபோல ஊன் உணவு தெரியாது. இவர்கள் காலத்தில் விலங்குகளைக் கொல்லவேண்டுமென்னும் விவேகம் பிறக்கவில்லை. இவர்களுக்கு முந்தியகால மனிதரைத் தான் ஆதி மனிதர் என்கிறார்கள். ஆகையால் அவர்கள் காலத்தை நாம் முற்காலம் என்போம். கற்காலத்துக்கு முற்காலத்தார்க்கு ஆயுதமே இல்லை. எல்லாங் காலாயுதமும் கையாயுதமுமாகவே யிருந்தன. அவர்கள் குளிருக்கு இலைகளையும் தளிர்களையும் போர்த்துக் கொண்டார்கள். புதர்களிலும் செடிகளிலும் புகுந்துகொண்டார்கள். பரிசுத்தமான பழங்களையும் காய்களையும் உண்டு, ஆற்றுநீரையும் சுனைநீரையும் குடித்தார்கள். இவர்களே ஆதி மனிதர்கள். இவர்களுக்குள்ளும் ஆண் பெண் பேதங்கிடையாது. கலியாண வரம்பு கிடையாது. ஊமைப் பேச்சும் இல்லை. சைகைப் பேச்சு என்னும் சங்கதியே கிடையாது. எல்லாம் குரற் பேச்சாகவே குரங்குகளுக் கிருப்பதுபோல் இருந்தது. இவர்கள் காலத்தைத் தான், அங்கிலத்தில் (Early age) ஆதிகாலம் என்கிறார்கள். இதையே நாம் முற்காலம் என்போம்.

இந்த முற்காலத்துக்குப் பிறகு தான் கற்காலம் உண்டாயிற்று. கற்காலத்தார் சைகைப் பேச்சாகிய ஊமைப் பேச்சை உபயோகித்தார்கள். மா என்பது அம்மாவைக் குறித்தது; பா என்பது அப்பாவைக் குறித்தது. ஓரெழுத்துப் பேச்சுகளே வழங்கின. இவர்கள் காலத்துக்கு அடுத்த காலந்தான் சொற்காலம். இவர்கள் காலத்தையே அங்கிலத்தில் (Stone age) கற்காலம் என்கிறார்கள்.

இந்தச் சொற்காலத்தில் தான் வேதம் எழுதாக் கிளவியா யிருந்ததென்கிறார்கள். முனிவர்கள் வாக்கிற் பிறந்த சொற்களே வேதம் என்கிறார்கள். காதளவாய் உலவியதே வேதம். ஆகையால் அதற்குச் சுருதியென்று பெயர். இந்தச் சொற்காலத்தில் தான் முனிவர் பலர் தோன்றிக் கொலையையும் பிறவையும் தடுக்கச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இதைத் தான் அங்கிலத்தில் (Civil age) என்கிறார்கள். இந்தச் சொற்காலத்துக்குப் பிறகு தான், 1தமிழ்க்கு வரிவடிவாகிய எழுத்துகள் ஏற்பட்டன. இதற்கு முந்தி எந்தப் பாஷைக்கும் வரிவடிவு இல்லை. முதலில் எல்லாம் சொற்களாகவே வழங்கின. பிறகு சொற்றொடர்கள் உறழ்ந்தும் பிறழ்ந்தும் வழங்கின. கடைசியாகவே வரிவடிவாகிய எழுத்து ஏற்பட்டது. இந்தக் காலத்தை நாம் பிற்காலம் என்போம். இந்தப் பிற்காலத்தில் தான், பனையேட்டிலும் பிறவற்றிலும் வரிவடிவாகிய எழுத்து ஏற்பட்டது. இப்போதிருப்பது தற்காலம்.

தற்காலத்தில் மனிதன் கெட்ட கேட்டைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை. நகரம் நகரம் என்று எங்குப் பார்த்தாலும் நரகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பாஷைகளும் எண்ணிறந்தவாயின. எந்தப் பாஷையிலும் உண்மை உணர்வதற்கிடமில்லை. தாந்தோன்றிக் கக்ஷிப் பிரதி கக்ஷிகள்



பலவாயின. பாஷாபிமானங்கள் ஏற்பட்டன. மதாபிமானங்கள் பிறந்தன. குருட்டு நம்பிக்கைகள் தோன்றின. சொற்காலத்திலும் பிற்காலத்திலும் முனிவர்கள் எத்தனை முயன்று தத்துவம் போதிக்கச் சொற்பொழிவு செய்தும், நூல்கள் எழுதிவைத்தும், பிற்காலத்தார் அவைகளைக் கொஞ்சம் பின் பற்ற முயன்றார்கள். ஆயினும் தற்காலத்தார் அதையும் விட்டு ஆட்சிச் சண்டையே மாட்சியென்றும், அதனால் வரூஉம் கலகக் காட்சியே உலோகோபகாரமென்றும் சாக்ஷியாய் நடந்துகொள்ளுகிறார்கள்.

தத்துவ விசாரணையே தவிர்ந்தது; போலி மதாசாரத் தேசாசாரச் சண்டையே அவிர்ந்தது. அழுக்காறு குடிகொண்டது. அவா ஓங்கிற்று.

'அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாப் பிறப்பீனும் வித்து'

என்றபடி அவா வளர வளர ஆட்சியில் ஆசை வளர்ந்தது. ஐக்கியம் தளர்ந்தது—அன்பு நீங்கிற்று—வன்பு ஓங்கிற்று—விற்காலக் கொடுமையாகிய ஆயுதவாட்சி தலைசிறந்தது. அதனால் எங்கெங்கும் போர்களும் கலகங்களும் தோன்றின.

முற்காலமே நற்காலமென்று எல்லாரும் எண்ண இடமுண்டாயிற்று. அக்காலத்துப் பழக்க வழக்கங்களையும் ஆட்சி முறைகளையும் தெய்வங் கொள்கை முதலியவைகளையுமே எல்லாருங் கொண்டாடுகிறார்கள். ஆனால் அவைகளைப் பின்பற்ற வாய்க்காமல் திண்டாடுகிறார்கள். நாட்டுப் புறத்துச் சனங்கள் சொற்கால பிற்கால மாந்தாகவே களங்கமற் றிருக்கிறார்கள். அவர்களுக்குள் மதச்சண்டை, அரசவைச் சண்டை, உத்தியோகச் சண்டை, வர்த்தகச் சண்டை முதலிய பேராசைச் சண்டைகள் இல்லை. இச் சண்டைகளெல்லாம்,

'சாத்திரத்தைக் கேளார் சாத்திரத்தி லேகூறும்
சூத்திரத்தை உன்னிச் சுகமடையார்—ஆத்திக்
குணர்ந்திருந்து பேசுவார் கோடானு கோடிப்
பணம்பெற்றாற் போது மென்பார்'

'தந்தையென்றும் பாரார்தந் தாயென்று நோக்கார்வாய்
நிந்தைசொல்லி வாழ்ந்திடுவார் நிச்சயமாய்—வெந்த
ரணம்பெறினு மஞ்சாத ராக்ஷதர்க ளாவார்
பணம்பெற்றாற் போதுமென் பார்'

என்றப்படி பணவாசை காரணமாக இப்போது எங்கெங்கும் நகரமாக்களுக்குட் பிரவர்த்தித்திருக்கின்றன.

எத்தனை தெய்வச் சண்டை! எத்தனை மதச்சண்டை! எத்தனை அரசவைச் சண்டை! எத்தனை ஆட்சிச் சண்டை! எத்தனை வர்த்தகச் சண்டை! எத்தனை பிறசண்டைகள்! இவைகளே எங்கும் நிறைந்து நாகயாதனையென்னும் நகரவாசங்களில் நிலவியிருக்கின்றன. இப்படி இவைகள் நிரம்பி நிலவியிருப்பதால், குடிகளும் குடிகள் மிகுத்து மடிகளுக்கு ஆட்களாய் ஏழைகளாய்க் காலங் கழிக்கிறார்கள். எத்தனையோ பேர் உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் வழியின்றிக் குழியில் விழுந்து தவிக்கிறார்கள்.

தற்கால மனிதரிற் சிலர் விற்கால மனிதரைப்போல ஆயுதபலம் பொருந்தி யிருப்பதால், அவர்களுக்கு அடங்கிச் சொற்கால மனிதர் பலர் அடிமைகளாய் வாழ்கிறார்கள்; பொருளாசை பிடித்து, பிசாசம் பிடித்தவர்போலத் தலை சுற்றி யாடுகிறார்கள். ஆகையால் இவர்களே, தங்குற்ற முணர்ந்து சுயநலம் பாரிக்கும் துர்க்குணம் தணந்து குற்றங் கடியவேண்டும்; ஏழைகளுக் கிரங்கவேண்டும். இக்குற்றங் கடிதலைப்பற்றிச் சொற்காலக் கதையொன்று வழங்குகிறது:

மதுரையி லொருகாலத்தில் வேதியர் வாழும் அக்கிராரத்தில், ஓர் ஏழை வேதியன், காசியாத்திரை போவதாகத்



தன் மனைவிக்குத் தெரிவித்தான். அவளுக்கு வேறு துணை
யில்லை. ஆகையால், அவள், 'எனக்கார் துணை?' என்றாள்.
உனக்கு, 'அரசன் துணை' என்றான் கணவன். அப்போது
அரை இரவாகையால் அரசன் நகர் சோதனைக்கு வந்திருந்
தான்; அவர்கள் பேசிக்கொண்டதை நன்றாய்க் கேட்டான்;
தன் விஷயத்திற் குடிகளுக்கிருக்கும் நம்பிக்கைக்காக மன
மகிழ்ந்தான். மறுநாள் முதல் அவன் அவ்வீட்டையும்
அதன் பொருட்டு மற்ற வீடுகளையும் காவல்புரிந்து வந்தான்.
அவ்வேதிய மாதுக்குக் கொடுத்ததுபோலவே, அவ்வக்கிரா
ரத்து மற்றைப் பெண்களுக்கும் அரிசி பருப்பு ஆடை
அணிகள் வழங்கினான். அப்படிப் பதினெட்டு மாதங்கள்
கழிந்தன. கடைசியாய் ஒருநாள் இரவில் அவ்வரசனாகிய
பாண்டியன் அவ்வீட்டண்டை வந்தபோது ஆண்மகன்
பேச்சரவங் கேட்டது. ஆகையால், அவன், சந்தேகங்
தெளியக் கதவைத் தட்டினான். "யாரடா, கதவிடிக்கிற
வன்?" என்று கணவன் சந்தேகத்தோடு அதட்டிக்கேட்
டான். "அந்தோ! இவனுக்குச் சந்தேகத்துக்கிடம்
பண்ணிவிட்டோமே! கற்புடைய பார்ப்பனிக்குக் கெடுதி
வருமே!" என்று பாண்டியன் கொஞ்சமேனுந் தாழ்க்கா
மல், மற்ற வீட்டுக் கதவுகளையும், 'திருடர் பயம், சாக்கிரதை'
என்று தட்டிக்கொண்டே போய் விட்டான்.

விடிந்ததும் அக்கிரகாரத்தார் அனைவரும் பாண்டியனை
அணுகி, "யாரோ ஒருவன், போக்கிலி, எங்கள் அக்கிரகாரத்
துக்குள் நுழைந்து, நிர்நிமித்தமாக எங்கள் அகத்துக் கதவு
களைத் தட்டி, அதட்டி எங்களுக்குப் பயங்காட்டினான்.
அவனைப் பிடித்துத் தண்டிக்கவேண்டும்" என்றார்கள்.
"அப்படியே ஆகட்டும்" என்றான் பாண்டியன். அது
கேட்ட வேதியர், "அவனை உடனே கண்டு பிடிக்கவேண்
டும். தாமதமாகாது. ஒருகால் அவன் இன்றைக்கும் வந்

தானும் வருவான். அவனை அதிசாக்கிரதையாய்ப் பிடித்துக் கையைத் தறித்து விடவேண்டும்" என்றார்கள். உடனே பாண்டியன், "நான் தான் அவன்" என்று சொல்லி, வாளால் தன் கையைத் தறித்துக்கொண்டான். அதுகண்ட வேதியர், அரசனால் உண்மை அறிந்து, அவன் கையிழந்தமைக்கு வருந்தி, எப்போதும் போல அது வளரும்படி யாகஞ்செய்தார்கள். அப்படியே அவனுக்குப் பொற்கை வளர்ந்தது. அதனால் அவன் பொற்கை மாறன் என்று பெயர் பெற்றான்.

குற்றம் சிறிதானாலும், பெரிதாகக்கொண்ட பாண்டியனைப் போல, இப்போதும் நடந்துகொள்வார் உளரானால், மக்கட் பிறவியே மாண்புடைத்தாகும். குற்றந் தினையளவு சிறியதாயினும் அதைப் பனையளவாக் கொள்வாரே பாதுக்கம் சகியாத பாக்கியவான்களாவார். அவர்களே மக்கட் பிறவியை மாண்புறுத்துவோ ராவார். இது பற்றியே நீதி சூடாமணியிலும்,

"கையரிந்தான் மாறன் கதவிடித்த குற்றத்தால்
எய்யுஞ் சிலைக்கை யிரங்கேசா—பையத்
தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்"

என்று இருக்கின்றது.

இந்த வுலகில் மனிதன் வாழ்ந்து வருங்காலத்தை அங்கில முறைப்படி மூன்று பிரிவாகப் பிரிக்கிறார்கள். முதலாவது கற்காலம் (Stone age). இரண்டாவது உலோககாலம் (Metal age). மூன்றாவது நாகரிககாலம் (Civilised age). இந்த மூன்றோடு முன்னும் பின்னும் சேர்த்து ஐந்து காலமாகப் பிரிக்கலாம். கற்காலத்துக்கு முற்காலத்தை ஆதி



காலம் (Early age) என்றும், நாகரிககாலத்துக்குப் பிற்காலத்தைப் பிற்காலமென்றும், அதற்குப் பிற்காலத்தைத் தற்காலமென்றும் நாம் பிரித்தெண்ணுவதே தக்க முறையாம். ஆகையால்,

காலம் (பிரிவுகள்)

அங்கில முறை
(1) கற்காலம்
(2) உலோக காலம்
(3) நாகரிககாலம்

இந்திய முறை
(1) முற்காலம்
(2) கற்காலம்
(3) விற்காலம்
(4) சொற்காலம்
(5) பிற்காலம்
தற்காலம்

இந்திய முறைப்படி மனிதனுடைய காலம் ஆறுபிரிவாகப் பிரிகின்றது. இதில் முதலாவது முற்காலம். இதைப்பற்றி யார்க்கும் அவ்வளவாய்ச் சரியாய்த் தெரியாது. தெரிந்து கொள்ளக்கூடிய சரியான ஆதாரம் இல்லை. பூமியிற் புதைந்து கிடக்கும் மரங்களும் எலும்புகளும் பிறவுமே அக்கால இருப்பை அளந்து காட்டுவனவாம். அவைகள் பெரும்பாலும் நதிக்கரைகளிலும் காட்டிடங்களிலுமே அகப்படுகின்றன. ஆப்பிரிக்காக் கண்டத்தில் எகிப்து நாட்டில்

நைல் நதிக்கரையில் சிற்சில புதை பொருள்கள் கிடைத்தமையால் முற்கால இருப்பை ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

கற்காலத்தைப் பற்றியும் அவ்வளவாய்த் தெரிந்துகொள்ள இடமில்லை. ஆனால் அக்கால மனிதர் அதற்கு முற்கால மனிதரைப்போல, செயற்கையற்று ஓரிடத்திலேயே வாழ்ந்தவர்கள் அல்ல. கேவலம் காய்கனிகளையே தின்று பிழைக்கவும், இலைகளையும் தழைகளையுமே குளிர்க்குப் போர்த்துக்கொண்டு மகிழ்ந்திருக்கவும் அவர்களுக்கு விருப்பம் இல்லை. கொஞ்சம் ஆசை அதிகரித்தது. இந்த ஆசையே அல்லலுக்கிடம் பண்ணுவது. ஆகையால் அவர்கள், பூமிக்குள் மறைந்திருக்கும் கிழங்குகளையும் பிறவையும் அகழ்ந்தெடுத் துண்ணவும், குளிர்க்கு மரப்பட்டைகளைப் போர்த்துக்கொள்ளவும் இச்சித்தார்கள். அதனால், கல்லாயுதங்கண்டு பிடித்தார்கள். இவர்கள் இருப்பைப் பற்றிச் சரியாய்த் தெரிந்துகொள்ள இக்காலத்தாரால் முடியாதுதான். ஆனாலும் இவர்களுடைய கல்லாயுதங்களும் பிறவும் எகிப்திலும் பிறவிடங்களிலும் அகப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆங்காங்குள்ள நகரப் பல்பொருட்காட்சி (Museum) சாலைகளிற் காணலாம்

விற்காலத்தார் (Metal age men) அல்லது உலோக காலத்தாரைப்பற்றி இன்னுங்கொஞ்சம் விரிவாகத் தெரிந்துகொள்ள இடம் இருக்கிறது. இவர்கள் தம் ஆயுதபலத்தால் கற்காலத்தாரினும் அதிக தைரிய சாலிகளாய்க் காரியம் புரிந்தார்கள். உண்பதற்குக் கிழங்குகளும் கனிகளுமே போதாவென்று மிருக மாமிசங்களையும் புசிக்கத்தொடங்கினார்கள். உடுப்பதற்கு இலைகளும் தழைகளும் மரப்பட்டைகளுமே போதாவென்று, தாம்கொன்ற மிருக சருமங்களையும் போர்த்துக் கொண்டார்கள். யாத்தாலும் உலோகத்தாலும்



வில்லம்புகள்செய்து போர்வினை புரிந்தார்கள். வேட்டையாடினார்கள். கூட்டங் கூட்டமாய்க் குன்றுகளிலும், மேடுகளிலும், காடுகளிலும் வசித்தார்கள். இலைகளாலும், தழைகளாலும், தோல்களாலும் குடிசைகோலக் கற்றுக்கொண்டார்கள். புதர்வாசமும், செடிவாசமும் அத்தனை சேமமானவைகளல்ல வென்று கண்டுகொண்டார்கள். குரற் பாஷை பேசினகாலம் போய்க் கைச்சமிக்கைகளும் பிறவும் சேர்ந்த ஊமை பாஷைக்கிடம் பண்ணினார்கள்.

சொற்காலத்தார் தாம் அங்கிலத்தில் (Civilised age men) நாகரிகக்காலத்தார் என்று பெயர் பெற்றார்கள். இவர்கள் "கல், வில் முதலியன தக்க ஆயுதம் அல்ல ; சொல் ஆயுதமே சிறந்தது. கல்லாலும் சொல்லாலும், பிராணிகளும் செடி கொடி முதலிய தாவரங்களும் நிர்மூலமா யழிகின்றன. சீவ இரக்கம் இருக்கவேண்டும். நம்மை நாம் சற்றே கிள்ளிக்கொண்டால் எத்தனை நோகின்றது. அப்படித் தானே பிராணிகளுக்கும் நோகும்" என்று முனிவர் முதலியோர் சொல்லக்கேட்டு திருந்தினார்கள். அந்தச் சொல்லையே ஆயுதமாகக் கொண்டிருந்தார்கள். அதன்படி நடக்க முயன்றார்கள். மிருகபக்ஷிகளை வதைக்கக்கூடா தென்றார்கள். இந்தக் காலத்தில் ஏற்றமாயிருந்தவர் தாம், அசோகர், புத்தர் முதலிய உத்தமர்கள். அவர்களுக்குக் கல்லாயுதமும் இல்லை. வில்லாயுதமும் இல்லை. இரண்டு மின்றிச் சொல்லாயுதத்தாலேயே மனிதன் சரியாய் வாழலாம் என்று கண்டறிந்தார்கள். தாம் கண்டதை

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றுணர்ந் தார்"

என்றபடி பிறர்க்கும் கற்பிக்கத் தொடங்கினார்கள். இவர்களே யன்றி யெத்தனையோ முனிவர்கள் தோன்றினார்கள். உலோக

வகைகளின் அனுகூலங்களை உணர்ந்து இயற்கைப் பயிர்களே யன்றிச் செயற்கைப் பயிர்களையும் விளைவிக்க, பூமியை உழுபடை முதலியவைகளைச் செய்து கொண்டார்கள். வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை யென்று கண்டறிந்து, விதைத்துப் பயிரிடவுங் கற்றுக்கொண்டார்கள். காய் கனி கிழங்கு ஊன் முதலியவைகளே யன்றித் தானிய முதலியவைகளையும் ஊனாக உட்கொண்டார்கள். இவர்கள் இருந்து நிலவியதற்கு அடையாளங்கள் எண்ணிறந்தன இப்போதும் இருக்கின்றன. எத்தனை யெத்தனை சிலாசாசனங்கள்! எத்தனை யெத்தனை கையேடுகள்! எத்தனை யெத்தனை கோயில்கள்! எத்தனை யெத்தனை குளங்கள்! எத்தனை யெத்தனை கட்டிடங்கள்! எத்தனை எத்தனையோ அடையாளங்கள் உலகெங்கும் பரவியிருக்கின்றன. இவைகளையும் ஆங்காங்குக் காட்சிப் பொருட்சாலைகளிலும் புத்தகாலயங்களிலும் காணலாம்.

இப்படி இவர்கள் காலத்திருந்து பனையேடுகளில் நிலவிவந்த நூல்கள் எண்ணிறந்தன. நந்தமிழகமே பனையேட்டுச் சுவடிகளுக்குப் பேர் போனது. இன்னும் மற்றைத் தெலுங்ககம் அங்கிலவகம் முதலிய பிறவகங்களிலும் மரப்பட்டைகளிலும் கட்டைகளிலும் எழுதியிருந்த நூல்கள் எத்தனையோ உள. இவைகள் அனைத்திலும் சிறந்த நீதிநூல் நந்தமிழகத்துத் திருக்குறள் நூல் ஒன்றே யாகும்.

சொற்காலத்துக்கு அடுத்த காலமாகிய பிற்காலத்தார் சீர்பெற வேண்டுமென்று, இந்நூல் உலோகோபகாரமாக வெளிவந்தது. மக்கட் பிறப்பின் மாட்சியைக் கெடுத்து அல்வழியிற் படர்வாரும் நல்வழிப்படவேண்டு மென்றே இந்நூலை அக்காலத்தில் நாயனார் எழுதினார் என்பர். இதன்படி யாரேனும் நல்வழியிற் சென்றால், அவரே தத்துவமுணர்ந்தாராவர். மக்கட்பிறவியின் மாட்சியை விளக்க வேண்டு



வோர் ஒவ்வொருவரும் திருக்குறளில் உள்ள நீதிமொழிகளை வேத வாக்கியமாகக்கொண்டு நடக்கவேண்டும். தம்மை இகழ்வாரையும் அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலப் பொறுத்துக்கொள்ள வேண்டும். இப்படியே மக்கட் பிறப்பின் மாட்சியைக் காட்சியளவாற் காட்ட விரும்பிய நாயனாரை ஒருவன், சோதிக்க வெண்ணி, ஏசாதும் ஏசிப்பேசாதும் பேசினான். அவரையே யன்றி, அவர் மனைவியாரையும் பழித்து இழித்துரைத்தான். அதற்கவர், அவனை நோக்கி, "அகழ்வாரைத்தாங்கு நிலம்போலத் தம்மை, இகழ்வார்ப் பொறுத்தல் தலை" என்றார். அது கேட்டவன், "ஐயரே! 'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்ற தம்முடைய திருவாக்கைச் சோதிக்கவே இங்ஙனம் வைதேன். தேவரீர் சொல்லளவாற் பிறர்க்கு மட்டும் நீதி கற்பிக்கு நூலியற்றிச் செயற்கையளவாலும் கற்பிக்கின்றீரோ இல்லையோ என்று சந்தேகங்கொண்டேன். அதனால் இவ்வகிருத்தியம் செய்யலானேன். இப்போது தேவரீர், தம்மை இகழ்ந்தவனாகிய என்னைப் பொறுத்ததனால், செயற்கை யளவாலும் நீதிமானாகத் திகழ்ந்திருக்கின்றீர். தேவரீரே அடியேனுடைய தெய்வக் குருமணியாவீர்" என்று அவரைச் சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி; அன்று முதல் அவர்க்கு உண்மைத் தொண்டனானான்.

இது குறித்து மற்றொரு மெய்க் கதையும் உண்டு:

சோழனிடத்தில் ஒருவன் வந்து, "ஐயனே! சோன் தன்னைப் பொறுமையிற் சிறந்தவனென்று புகழ்ந்து கொள்ளுகிறானாம். நான் போய் அவனுக்கு எந்த விதத்திலேனும் கோப மூட்டுகிறேன்" என்று சூள் உரைத்துச் சோழனிடத்திற்குச் சென்றான். அங்கவன் சோழனைக் கொஞ்சமேனும் அரசனென்றெண்ணி மதியாமல், அவனுடைய அரண்மனை முற்றத்திலிருந்த அரச மரத்தை வெட்டத்

தொடங்கினான். அது கண்ட சேரற்குக் கோப மூளவில்லை. நகைத்துக் கொண்டிருந்தானன்றித் தன்னைப் பகைத்துக் கொண்டு, அத்தகாக் காரியஞ் செய்பவனை ஒன்றுங் கேட்கவும் இல்லை. அது கண்ட சேரன் தாயார், அம் மர வெட்டியை நோக்கி, "நீ யார்?" என்று கேட்டாள். அதற்கவன், "நான் தான் உன் நாயகன்" என்றான். அது கேட்ட பிறகும் சேரனுக்குக் கோப மூளவில்லை; அதிக சாந்த சீலனாய்த் தன் தாயை நோக்கி, "அம்மே! அவன் சொன்ன சொல்லால், அம் மரத்துக்குச் சொந்தக்காரன் அவனே யென்பதிற் சந்தேகமில்லை" என்றான். அது கேட்ட மரம் வெட்டி, சேரன் பொறுமையை வியந்து பயந்து தன் கையிலிருந்த கத்தியை அப்பால் வீசி யெறிந்து, விரைந்தோடிச் சேரனுடைய பாதங்களில் விழுந்து வணங்கி, "அடியேன் கொஞ்ச மதியாற் பிழைத்தேன். இத்தீங்கிழைத்தேன். பொறுத்தருள்க" என்று முகமன் கூறித் திரும்பிச் சோழற்குச் செய்தி தெரிவித்துப் போனான். அது கேட்ட சோழன் முதலியோர் சேரன் பொறுமையை வியந்து கொண்டாடினார்கள். இது பற்றியே நீதி சூடாமணியில்,

"முந்து மரந்தரித்த மூர்க்கன்சொற் கேட்டுமவன்
எந்தைபிரான் என்றான் இரங்கேசா—கொந்தி
அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்று கூறியிருக்கின்றது. இதுவே ஆதி மனித சீவ சுபாவம்.

சொற்காலத்திற்குப் பிற்காலமும் தற்காலமும், பற்பல நூல்களாலும், யுக்தியாலும் அனுபவத்தாலும் அறியக் கிடக்கின்றன.

இப்படி முற்காலம், கற்காலம், விற்காலம், சொற்காலம், பிற்காலம், தற்காலம் என்னும் அறுவகைக் காலத்தி



லும் மனிதன் அடைந்த மாறுதல் பல. உருவத்தில் மட்டும் அன்றிப் பருவத்திலும், குணத்திலும், குறியிலும், நடையிலும், உடையிலும், நாகரிகத்திலும், ஆயுதப் பயிற்சியிலும், கைத்தொழிலிலும், கானத்திலும், பானத்திலும், கலியாணத்திலும், குடும்பத்திலும், கூட்டத்திலும், பிறவற்றிலும் மாறுபட்டிருப்பதற்கு அளவில்லை. இது குறித்தே நமது சொற்காலப் பெரியாரும்,

"அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சன்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை சன்மமோ
என்செய் வேன்கச்சி யேகம்ப நாதனே"

என்றருளினார்.

இப்படிப் பற்பல கால அளவால் வேறுபட்ட மனிதன், கைத்தொழில் அளவாலும் வேறுபட்டு, உழுகலப்பை, பாம்பு பலகை, பலகை மரம், எழுவாயுதம், உண்கலம், அடுகலம், நாவாய் முதலிய இன்றியமையாப் பொருள்களைச் செய்யக் கற்றுக்கொண்டான். அவைகள் பலவற்றுள் அவன் உண்கலமாகிய மண்கலம் செய்துகொண்ட மாட்சி கவனிக்கற் பாற்று:

ஆற்றுவெள்ளம் அவனுக்குக் களிமண் அடித்துக் கொண்டுவந்து கொடுத்தது. அதையெடுத்து, அளவாய் வேறு மண் சேர்த்துப் பிசைந்து, சக்கரத்தைச் சுழற்றித் தன் மனம் போனபடி பானை சட்டிகளை வனைந்துகொண்டான். இந்தச் சக்கரச் சுழற்சியையே இன்றளவும் குயக்கலம் வனைவதிற் கையாண்டு வருகிறார்கள். ஆனால் போலி

நாகரிகத்து நகரவாசிகளென்னும் நரக வாசிகள் தாம் இதற்கும் இயந்திரத் தந்திரம் கற்றுக்கொண்டு, தத்தமக்கு வேண்டிய அளவாய்ச் செய்துகொள்ளாமல் கலங்களைக் கணக்கின்றிச்செய்து, பிறநாட்டுக்குக் கலங்களில் அனுப்பி, அந்நாட்டாரைப் பல விதத்திலும் கெடுத்துவருகிறார்கள். இப்போது எங்கெங்கும் இயந்திரங்களிற் செய்த கலங்களே பரவிப் பண்டைய கைத்தொழிற் கலயவளர்ச்சியைக் குறைத்துக் கெடுத்தன. இது ஒன்று மட்டுமா? மனிதனுக்கு இன்றியமையாதன மூன்று கைத்தொழில்கள். அவை, உழவு, நெசவு, கலஞ்செயல் என்பனவாம். அந்த மூன்றையுமே பேராசைக் கோட்பட்ட சில நாட்டார் இயந்திரங்களிற் செய்து, தந்திரமாய்ப் பிறநாட்டுக் கனுப்பி, அந்நாட்டாருடைய பொருளாகிய இரத்தத்தை உறிந்து விடுகிறார்கள்.

ஆதி மனிதன் ஆசையென்னும் பேய்க் கோட்பட்டு எப்படிக் காலத்துக்குக் காலம் தன்னிலை மாறிக்கெட்டானென்று இதுவரையிற் கூறினோம்! அப்படிக் கெட்டிருப்பவனை இன்னும் இப்படி இயந்திரத்தொழிலாலும், தந்திரத்தொழிலாலும் கெடுப்பதே தற்காலப்போலி நாகரிகத்துக்கு அடையாளமாயிருக்கிறது.

பொருளாசைக்கும் அளவுண்டு. ஆட்சிக்கும் அளவுண்டு. காட்சிக்கும் அளவுண்டு. மாட்சிக்கும் அளவுண்டு. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாம். எந்நாட்டாரும் தந்நாட்டு வளத்தை வளர்த்து நலம்பெறவும் பிறநாட்டுக்கு நன்மை செய்யவும் வருந்தியுழைக்கவேண்டும். சுயநலம் பாரித்தல் என்னும் கொடுமைக்கு அடிமைகளாகப்படாது. பாதுக்கஞ் சகியாத பண்புடையோராகவேண்டும். உலகத்தொண்டாற்றவேண்டும். உடல் பொருளாவி மூன்றையும்



மன்னுயிர்க்கு வழங்கி, அவைகளுக்காகவே உயிர் வாழவேண்டும்.

'பிறர்க்கென வாழ் உனக்கென வாழற்க'

என்பது உத்தமோபதேசம். இந்த நல்லுபதேசத்தை காணயழாய்ப் பின்பற்றுவாரே நாகரிகமாந்தாராய் நகரங்களில் வாழ்வதற் குரியவராவார். நாடுகளில் வாழ்வார்க்கு நல்லுபதேசஞ்செய்து, அவர்களை அல்வழியினின்று நல்வழியிற்றிருப்புதற்கு அருகராவார். கற்றறிவு குலமேன்மை பெற்றவராவார். கருணையும் புகழும் பூண்டவராவார். மாறு கருதா நன்றி செய்தவராவார். சீரும் சிறப்பும் பேரும் ஒழுக்கமும் பெற்றவராவார். திண்மையும் உண்மையும் திரண்டவராவார். வனப்பும் வடிவும் வாய்ந்தவ ராவார்.

இது பற்றியே விவேகானந்தராம் பெரியாரும், நந்நாட்டார்க்கும் பிறர்க்கும் பின்வருமாறு நன்மதி புகட்டியுள்ளார்:

" மனச் சோர்வு கொள்ளற்க. தேகபலத்திலும் மனோபலமே மாண்புடையது. நாட்டார்க்குள் பகைமை பொறாமை யென்பன குடிபுகின், கேடெய்வது சரதம். ஆகமங்களையும் உபநிஷதங்களையும் புகழ்ந்து கொள்வதிலும், நன்னடக்கை யில்லாமலே, 'நாங்கள் முனிவர் குலங்கோத்திரத்தில் முதல்வராயிருக்கின்றோம்' என்று பெருமை பேசிக் கொள்வதிலும் அருமை ஒன்றும் இல்லை. கருமையாகிய எருமையும் எமன் வாகனம்; ஆகையால் எமகோத்திரமென்று சொல்லிக்கொள்ளும். கோத்திரத்திலும் சாத்திரத்திலும் பெரியோமென்று ஆத்திரத்தோடும் அகம்பாவத்தோடும் பேசிக்கொள்வோர், வேறெந்தச் சாதியாரினும் பல ...ற்றவராவார். மனச் சோர்வை விட உடற் சோர்வையே முதலில் கவனிக்க வேண்டும். அங்கிலத்தும், (Sound mind

in a sound body) 'உடல்வலியே மனவலி' என்று வழங்குகிறது. குமரர் உடல்வலி பெறவேண்டும். அதனால் மனவலி, தானே வந்தடையும். மனவலியில்லான் சமயப் பற்றுள்ளவனுவது அரிது. இளைஞர் பலரும் எழுத்தூண் போன்ற தோள் வலியுள்ளவர்களாக வேண்டும். வெளியில் நன்றுயுலாவிப் பயிலவேண்டும். எதையுங் காலால் நடந்துபோய்ச் செய்யவேண்டும். இளமையிலேயே வண்டி வாகனமேறி நொண்டிகளாகன்மின். உடற் பயிற்சியே உம்பர் நாட்டுக்கு வழி காட்டியாகும். உங்கள் நரம்புகளில் வலு வேற வேற, மூளையில் வலுவேறி, கீதார்த்தம் நன்கு விளங்கும். உங்கள் நரப்பு நாளங்களில், பச்சிரத்தம் சுத்தமாய்ப் பாய்ந்தோடும்போது, கிருஷ்ண பரமாத்மாவின் உன்னத ஞானம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல உங்களுக்குத் தெள்ளிதின் விளங்கும். உங்கள் உடல் உரமாய் நிற்கவேண்டும். ஆண்மை மக்கள், ஆண்மக்கள் என்று நீங்கள் சரியாய் அறிந்து கொள்ளும்போது உங்களுக்கு வேதாக மோபநிஷதங்களின் நுட்பம் நன்கு விளங்கும். உங்களுக்கு வேண்டியவைகள் இரும்புத் தோள்கள், எஃகுக் கம்பிகள்போன்ற நரம்புகள், முருக்கம்பூ நிறமான பச்சிரத்தோட்டம், மதயானை போன்ற உடல்வலி-வளவளத்த கொள்கைகளும், கொளகொளத்த சரீரமும் கூடா. நீவிர் எல்லீரும் அடிமைகளாகவே பழகி வருகிறீர்கள். கீழ்ப்படியப் பழகவேண்டும். கட்டளையிடுவது சுலுவு. அதை நிறைவேற்றுவார் கிடைப்பதே அரிது. உங்களுக்குள் பிரமசரிய நிலை தவறியிருப்பதால் கட்டளைக்குக் கீழ்ப்படிவது இன்னதென்றே தெரியாமல் இருக்கிறீர்கள். கீழ்ப்படிந்து கட்டளையை நிறைவேற்றக் கற்றுக் கொள்ளுங்கள். பிறகு, கட்டளையிடும் பதவி தானாகவே உங்களுக்கு வரும். வேலைக்காரனுயிருந்து, முதலாளியானல் தான் ஒவ்வொருவனும், தனக்குக் கீழ்ப்பட்டவர்கள் மேல்



அன்பு செலுத்துவான்; அவர்களுடைய உழைப்பின் அளவை நன்கு உணர்ந்து கொள்வான். முதலாளியின் கட்டளையை மறைமொழியாய்ப் போற்றவேண்டும். அவன் பாம்பைப் பிடியென்றாலும், உடனே அதை அஞ்சாமற் பக்குவமாய்ப் பிடித்துக் கொள்ளவேண்டும். அது கடித்து, மாளாமற் பிழைத்தால், பிறகு, அவனோடு வாதாடலாம். 'உங்கட்டளை அபாயமானது. நான் உபாயமாய்ப் பிடித்ததனுல்தான் பிழைத்து வந்தேன். இல்லையேல் என்னை அது கடித்திருக்கும்' என்று உங்களில் ஒவ்வொருவனும் ஞாயம் பேசலாம். கட்டளை பிழைத்திருந்தாலும் நிறைவேற்றிப் பிறகதை மறுத்துப் பேசவேண்டும். உங்களுக்குள் பொறாமைக்கு இடங்கொடுக்கக்கூடாது. அப்போது தான் அசாத்திய காரியங்களையும் சாத்தியமாய்ச் செய்யும் ஆற்றல் அடைவீர்கள். தற்காலத்தில் அடிமைகளாயுள்ள உங்களுக்கு அஷ்டமத்தில் சனியானுயிருப்பது பொறாமைதான். அதுவே நமது நாட்டைப்பற்றி வாட்டுகிறது. ஆகையால் பொறாமையை விலக்குங்கள். நந்நாட்டாரொருவர் முன்னேற முயன்றால், அவரை அடக்கமுயல்வதே நமக்கு வழக்கமாயிருக்கிறது. வெளிநாட்டார் வந்தால், நாம் மயங்கி மௌனமாயிருப்பது மன்றி, அவர்களுடைய முன்னேற்றத்துக்கும் உதவி புரிகிறோம். அவர்கள் உதை கொடுத்தாலும், கால் நோகுமென்று உபசாரங்கூறுகிறோம். நமது தேசமக்களையே நாம் தெய்வங்கள் போல ஆராதிக்கவேண்டும். நமக்குள் பொறாமைத்தீ அணைய, அன்பு நீர் ஊறவேண்டும். அப்போதுதான் நாம் ஒருவரை ஒருவர் நேசித்துப் பூசிப்போம். நமக்குள், "இதை நிறைவேற்றுவோம்" என்கிற உறுதி இருக்கவேண்டும். வெளிநாட்டார்க்கு இவ்வுறுதி மிகுதி. அவர்களுடைய உறுதிக்கு முன், நம் உறுதி இறுதியாய்த் தலைகாட்டாதொழிகிறது. உழைப்பவன் பிழைப்பவன் என்

பதை மறந்தே போனீர்கள். வெளிநாட்டான் உங்களை வேலையிட அழைப்பவனாகவும், அதை நீங்கள் இழைப்பவராகவுமேயிருந்து ஆயிரம் வருடமாகக் காலந்தள்ளி வருகிறீர்கள். உங்களுக்குள் உறுதி இறுதியாயிருப்பதனால்தான் நீங்கள் தேவர்களைப்போலப் பதிற்று முக்கோடி பேர் இருந்தும், முப்பத்து மூவாயிரத்துக்குங் குறைவான வெளிநாட்டார் உங்களை ஆள்கிறார்கள். அவர்களுடைய உறுதியே உங்களை ஆள்கிறது. அவர்கள் தங்கையே தமக்குதவியென்று, தம்மைத் தாமே நம்பிக்காரியம் புரிகிறார்கள். உங்களுக்குள் அந்த நம்பிக்கை இல்லை. இனியேனும் உங்களை நீங்கள் நம்பி உறுதியாய் நில்லுங்கள்.

தன்னம்பிக்கையே நன்னம்பிக்கை. பலமே உயிர். துர்ப்பலமே மரணம். சுதந்திரமே தூய்மை. அந்தத் தூய்மையே அடிமையென்னும் நோய்மையை ஒழிக்கும் அருமருந்து. இதுவே வாய்மை. தன்னம்பிக்கையே மனிதரையுந் தேவராக்கும். இந் நன்னம்பிக்கை யில்லாமையினாலேயே இந் நன்னாடாகிய நந்நாடு நாசமடைகிறது. நாம் பலப்பல எண்ணுகிறோம்; சிலச்சிலவும் செய்கிறோமில்லை. கிளிப்பிள்ளைகளைப்போலப் பிறநாட்டாரிடத்திற் பழகி, அவர்கள் சொன்னதைச் சொல்லக் கற்றுக்கொண்டிருக்கிறோம். வாயால் அளந்தத்தையே அளக்கிறோம். அன்றிச் செய்கையால் ஒன்றையுங் காட்டுகிறோ மில்லை. வலுவற்ற மூளையால், எதையும் எண்ணிச்செய்ய இயலாது. அதற்கு வலுவேற்றவேண்டும். நீங்கள் எல்லாந் தெரிந்தவர்களென்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அதனால் தான், ‘எல்லாம் சொல்லுமாம் பல்லி, காடிப்பானையில் விழுமாம் துள்ளி’ என்றபடி, பல தொல்லைகளுக்கு ஆட்களாயிருக்கிறீர்கள். உங்கள் இரத்தம் நீர்த்துத் தண்ணீராயிருக்கிறது. அதனால் தான், மூளை உலர்ந்து தளர்ந்து தோல் உரிந்து வருகிறது.



உடம்பு சோர்வடைகிறது. உங்களுக்கு வேறோருடம்பு வேண்டும். பேச்சாலாயே எல்லாம் ஆய்விடுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குச் சாதிப்பேச்சே பெரும் பேச்சாயிருக்கிறது. சாதி! சாதி!! சாதி!!! இதுவே பாத நாடெங்கும் பேச்சு! பேச்சு!! பெரும் பேச்சாயிருக்கிறது. நீதிமானே சாதிமான்; இதையாருங் கவனிப்பாரில்லை. பெரிய சாதியாராம்! சின்ன சாதியாராம்! நடுத்தரமான சாதியாராம்! தொடாத சாதியாராம்! தொடுகிற சாதியாராம்! உண்டால் தீட்டாம்! கண்டால் தீட்டாம்! தொட்டால் தீட்டாம்! (காற்றுப்) பட்டால் தீட்டாம்! எங்கும் இந்த உளறுபடிப் பேச்சுத்தான் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது. இதனால் ஐக்கியமும் மனோபலமும் ஒளித்துக்கொண்டிருக்கின்றன. நீவிர் எல்லீரும் உடல் வலியற்ற சோகைகள். இதுதான் உண்மை. நமது நாட்டாண்மைச் செந்நீர் வெளுத்து வருகிறது. அதனால்தான், உங்களுக்கு உடல் வலி குறைந்து வருகிறது; அதனால்தான் கவலையற்றிருக்கிறீர்கள். எதையும் அசட்டை செய்கிறீர்கள். உண்டுடுத்து நீங்கள் மட்டும் இரண்டு கால் மாடு போல வாழ்ந்தாற்போது மென்கிறீர்கள். ஏழைச் சகோதரர் எப்படிப் போனால் எமக்கென்னவென்றிருந்து விடுகிறீர்கள். இனி நீங்கள் பொதுநலம் பாரிக்கும் புகழணியைப் பூணவேண்டும். அதற்குத் தக்க வலுவடைய முயலவேண்டும். மற்றவையெல்லாம் தாமே வந்தடையும்.

நமது சமயம், சமயத்துக்குத் தக்கபடி மாறிவிடுகிறது. குளித்துப் புசிக்குமட்டுந்தான் சமயவுணர்ச்சி, சிலர்க்கிருக்கிறது. பிறகு அவர்கள் தம் இஷ்டம் போல் வீண்காரியதுரந்தராய்க்காலம் போக்குகிறார்கள். பொருள், பொருளென்று அழிபொருளை நாடி மானமழிகிறார்கள். சமயமே எல்லாரையும் வேறு பிரித்து விடுகிறது. அதனால் ஒற்றுமை

யென்பது இன்னதென்றே ஒருவர்க்கும் தெரிகிறதில்லை. சமயத்தில், நாம் வேதாந்திகளா? அல்ல, அல்ல! பௌராணிகச் சித்தாந்திகளா? அதுவும் அல்ல; தாந்திரிகர்களா? அதுவும் அல்ல; அதர்வணவேத மாந்திரிகர்களா? அதுவும் அல்ல; நாத்திகர்களா? அதுவும் அல்ல; வேறெதுவும் அல்ல; 'தொடாதே, தொடாதே! தீண்டாதே, தீண்டாதே!' சமயிகள். ஆகையால், நமது சமயம், சாப்பாடு; நமது கடவுள், சோற்றுப்பானை; நமது சமயம் வளருமிடம், சமயலறை; நமது சமயக்கொள்கை, 'என்னைத் தொடாதே, நான் பரிசுத்தன், குளித்திருக்கிறேன், தீண்டாதே' என்பதாம். இன்னும் ஒரு நூறாண்டு இப்படியே செல்வோமானால், நாம் வெறியராய்த் தீர்வோம். நந்நாட்டில் பயித்தியக்காரர் வைத்தியசாலைகள் பல விடங்களிற் கட்டவேண்டியதா யிருக்கும்.

எந்நாடேனும் தன்னாட்டாரிற் சிலரைப் பகைத்துப் பிழைக்க முடியாது. சிலர் மிலேச்சராம்; சிலர் சண்டாளராம்; சிலர் முகத்திற் பிறந்தவராம்; சிலர் தோளில் தோன்றியவராம்; சிலர் தொடையில் இறங்கினவராம்; சிலர் காலில் கழன்றவராம். இது வென்ன விந்தை! பிழைக்கும் விந்தையா இது! இது ஒரு பெரிய நிந்தை யென்றல்லவோ சொல்லவேண்டும்! இந்நிந்தை வேறெந்த நாட்டினும் இல்லை. இவ்விந்தை, என்று தோன்றிற்றோ, என்று ஒருவரோடொருவர் மனமொப்பி அளவளாவுதலின்றி யொழிந்ததோ, அன்றே அழிந்தது பாரதநாடு. அதற்கு அன்றே தொடர்ந்தது அட்டமத்தில் சனியன்.

மற்றொரு பாடம் நீங்கள் நன்றாய்க் கற்று மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்: பிறர் செய்வது போலச் செய்யக் கூடாது. என்றென்றும் அது நாகரிகம் ஆகாது. புலியைப் பார்த்துப் பூனை சூடிக்கொள்வது போலவும்,



அரியைப் பார்த்து, நரி, கரி மேற் பாய்வது போலவும், நடை உடை பாவனைகளிற் பிறரை நீங்கள் பின் பற்றுவது பெரும்பிழையே யன்றிப் பேதைமையுமாம். வேஷம் போடுவது எந்நாளும் மோசமான காரியம்; இழிநிலைக்கு வழி காட்டி யென்பதற் கையமில்லை. ஒருவன் தன்னையும் தன் முன்னோர்களையும் பழித்துப் பிறர் செய்கையைப் பெருமைப் படுத்தித் தானும் அதைச் செய்வானாயின் அவனுக்குப் போங்காலம் நெருங்கி விட்டதென்பதற்கு யாரைக் கேட்க வேண்டும்? பண்டைய பாரதநாட்டுப் பழக்க வழக்க வாழ்விற் பிறழாதீர்கள். நீவிர் எல்லீரும் பிற நாட்டாரைப்போல உண்டுடுத்து நடை நொடி பாவனை காட்டத் தொடங்கினால், நாடு சீரடையுமென்று ஒரு காலும் நினையாதீர்கள்.

நாம் மடி கட்டிக் கொண்டு, பிறரைத் தீண்டற்க என்று சொல்லித் திரியும் மடிகள், அதாவது, சோம்பேறிகளா யிருக்கிறோம். 'சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்' என்றபடி ஒற்றுமையின்றித் திரிகிறோம். ஐக்கியம் நம்மால் ஆகாத காரியம். நவக்கிரகங்கள்போல நாம் வக்கிரித்துக் கொண்டிருக்கிறோமன்றி, ஒன்று சேர முடியாது. நமக்குள் ஒருவரையொருவர் நேசிப்பதும் பூசிப்பதும் ஒருகாலும் இல்லை. ஆகையால் பிறநாட்டாரை யாசிக்கிறோம். நம்மில் ஒவ்வொருவர்க் குள்ளும், சுயநலவுணர்ச்சி வேரூன்றிப் படிந்திருக்கிறது. நாலு பேர் ஒன்று கூடி யொருவரை யொருவர் பகைக்காமல் எதுவும் செய்ய முடியாது.

நமக்குள் சுயமான ஏற்பாடுகளும் திட்டங்களும் கிடையா. அவை யில்லாமையால், நம் இல்லாமையை இல்லாமையாக்க முடியவில்லை. அவை யில்லாமைக்குக் காரணம் நமக்குள் ஒருவர் மேல் ஒருவர்க்குள்ள பொறாமையே யாம். இணக்க மறிந்திணங்க வேண்டும். பொறாமையோடு கூட வேண்டும். ஒருவரோடு கூடிப் பொறாமையால் பிரியலாகாது.

‘கூடிப் பிரியேல்’ நாட்டாரோடு கூடி, ‘நாடொப்பன செய்’ என்றபடி நாட்டுக்கு நன்மை செய்யச் சித்தமாயிருக்க வேண்டும். எல்லாரும் பேதமின்றிக் கூடினால் தான் சேதமின்றி வாழலாம். நாட்டுக் காரியத்திலும், வீட்டுக் காரியத்திலும், கூட்டுக் காரியத்திலும், மற்றெதிலும் சமரச ஞானமே சாலவும் நன்று.

நாம் யார்? நாட்டு மனிதரேனும், கட்டுப்பாடில்லாமையாற் காட்டு மனிதர்க்குச் சமானமாயிருக்கிறோம். தன்னலம் பாரிக்குந் தன்மையிற் சிறந்திருப்பதனால், நரமாமிச பக்ஷணிகளைப் பார்க்கிலும், நாம் கேவலமான மனிதரா யிருக்கிறோம். நெற்றியில் மதக்குறியைக் குறுக்கே போடுவதா, நெடுக்கே போடுவதா, இந்தப்புறம் போடுவதா, அந்தப்புறம் போடுவதா என்பதைக் குறித்துப் பல்லாண்டுகளாய்ச் சண்டை போட்டு மாண்டு போகிற மனிதர்கள் நாம். உண்ணும் உணவைப் பிறன் பார்த்தால், தீட்டா, இல்லையா என்பதைப் பற்றி வளர்த்தி வளர்த்தி வாயாடிப் புத்தகம் புத்தகமாய் எழுதுகிற வம்பர்கள் நாம். இப்படி வீணுக்கும் வம்புக்கும் உழைக்கும் மூடமதிவாணர் நம்மைப் போன்றவர் உலகில் வேறெங்கும் இல்லை. வருங்காலத்தில் இப் பாரதநாடு பெருமையுற்று விளங்க வேண்டுமானால், நமக்குள் சுய ஏற்பாடும் திட்டமும், ஒற்றுமையும் பொறுமையும், விடா முயற்சியும் இருக்கவேண்டும். கூடி வாழ்வதென்றால் ஒரு மனப்படுத லென்பதே பொருள். சீனன் ஒவ்வொருவனும் பிரிந்து தனித்தனியே சிந்திக்கிறான்; அதனால், வெற்றி பெறுகிறானில்லை. ஜப்பானியன் ஒவ்வொருவனும் கூடிக் கலந்து ஒரு மனதாய்ச் சிந்திக்கிறான்; அதனால் தோல்வியடையாமல் வெற்றி பெறுகிறான். இது உங்களுக்குத் தெரிந்ததே யாகும்.



குழந்தையைப் போல எதற்கும் பிறரை நம்பி யிருப்
பதே நமக்கு இயற்கையாய்ப்போய்விட்டது. உட்கார்ந்த
இடத்திலேயே உணவு, வாயில் வந்து விழாதா என்று எல்
லாரும் எதிர்நோக்கியிருக்கிறார்கள். அதையும் சிலர்,
தொண்டைக்குள் தள்ளுவாரில்லையே யென்று ஏங்கியிருக்
கிறார்கள். சோம்பேறிப் பையனொருவன், வாசலில் வந்த
வாழைப் பழக்காரியைக் கண்டு, ‘அம்மே, காலணாவுக்கு
எத்தனை?’ என்றான். அவள், ‘மூன்று’ என்றாள். அவன்,
‘ஆஹா! மூன்று! ஒன்றென்றல்லவோ எண்ணினேன்!
உரித்துக் கொடுத்தால் எத்தனை?’ என்றான். அக் குறிப்
பைக் கண்டுகொண்டு அவள், ‘உரித்துக் கொடுத்தால்
இரண்டு’ என்றாள். அதற்கு அவன், ‘இன்னும் இரண்
டென்று சொல்லுகிறாய்? என் வாயில் ஊட்டி விட்டால்
எத்தனை?’ என்றான். அதற்கு அவள், ‘ஊட்டினால் ஒன்று’
என்றாள். அது கேட்டவன் அகமகிழ்ந்து, காலணாவை
அவள் கையிற் கொடுத்து விட்டு, வாழைப்பழத்தை ஊட்
டிக்கொண்டு உள்ளே வந்து விட்டான். அவளும் வெளியே
போய் விட்டாள். ஊட்டிக்கொண்ட அவசரத்தில் அவன்
உதட்டிற் கொஞ்சம் பழம் ஒட்டிக்கொண்டது. அதை
நாக்கால் உள்ளே தள்ளிக்கொள்ள சோம்பல் கொண்ட
அவன், ‘ஐயோ, அவள் போய் விட்டாளே! அப்போதே
அவளுக்குக் காட்டியிருந்தால், இதை உள்ளே தள்ளி
விட்டிருப்பாளே! இப்போதிதை உள்ளே தள்ளுகிற
வர்கள் யார்?’ என்று விசனப்பட்டானும். இந்தப் பைய
... போகிறவர்களே நம்மவர்கள். உங்கள்
...க்குத் துணை ... கொள்ளவேண்டும். தன்
...யத்தை நீங்களே செய்து ... என்றாய்ப் பாடம்
கையே தனக்குதவி யென்பதை நீங்கள் நன்றாய்ப் பாடம்
பண்ணிக் கொள்ளவேண்டும். உங்கள் கைகளே உங்களுக்கு
உதவாவிடில் நீங்கள் எப்படி உயிர் வாழ முடியும்? உங்கள்

தேகத்தைக் காப்பாற்றிக் கொள்வதுபோல, உங்கள் தேசத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். நீங்கள் உருவத்தால் பல தேகம் பெற்றவர்களேனும் ஒற்றுமையால், தேசமென்னும் ஒரே தேகத்தைப் பெற்றவர்களாயிருக்கிறீர்கள். உங்கள் தேகத்தைக் காப்பாற்றக் கை கால் முதலிய அவயவங்கள் ஒன்று சேர்வதுபோல, தேசத்தைக் காப்பாற்ற நீங்களெல்லாம் ஒற்றுமையாய் ஒன்று சேரவேண்டும். ஒவ்வொருவனும் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அன்றி, அன்னியர் உதவியை எதிர்பார்த்தல் ஆகாது.''

இப்படி முற்காலத்திலும், கற்காலத்திலும், விற்காலத்திலும், சொற்காலத்திலும், பிற்காலத்திலும், தற்காலத்திலும் மாட்சிமையுற்று விளங்கிய மக்கட் பிறவியில் ஒருவரும் தம்மொப்பார் இல்லையென்று அவதரித்து, மேலுலகமாகிய அமெரிக்கா முதலிய பிறவிடங்களில் வாழும் மக்களையுந் தம்முடைய இதோபதேசமாகிய மதோபதேசத்தால் மாண்புபெறச் செய்தவருமாகிய விவேகானந்தர் நம்மவர்க்கே அன்றி பிறநாட்டார்க்கும் பிரசங்கஞ் செய்திருக்கிறார். பிறநாட்டார் இதை நேசித்து வாசித்து நல்லொழுக்க நெறியிற் படர்ந்து முத்தி நெறியை அடர்ந்து வாழ்வதும், அன்றித் தாழ்வதும் அவர்கள் மனோநிலையைப் பொறுத்ததாகும். இன்னும் அவர்கள் மிஸ்மேயோவைப்போன்ற 'இந்தியமாதா' நூலாசிரியரைப் பொருட்படுத்திக் காமாலைக் கண்ணன் வெய்யிலை எப்போதும் மஞ்சள் நிறமாய்க் காண்பதுபோல, நமது பரதகண்டத்தையும் அதிற் றோன்றிய மகான்களையும் இழித்துப் பழித்து எண்ணியும் பேசியும் தம் மக்கட் பிறவியையே தாழ்த்திக்கொள்ளட்டும். உலக சதாசாரத்திற்கும் உன்னத ஞானத்திற்கும் பிறப்பிடமாகிய பரதகண்டத்திற் பிறந்த மக்கட் பிறவியே மாண்புடையது



என்பது மகான்களின் கொள்கை. பரதகண்டத்தின் மாட்சிமை அதன் பெரும்பாகமாகிய ஆசியா கண்டத்திற்கும் உண்டு. அன்றி, மற்ற நான்கு கண்டங்களில் ஒன்றுக்கும் இல்லை. ஆகையால், பிற கண்டத்தாருடைய உதவி, எந்த விஷயத்திலும் இதற்கு எக்காலத்தும் வேண்டாத காரியமாம். உதவி என்றால், எதில்?

'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்'

என்றபடி சுயநலம் பாரித்துச் சீக்கிரத்தில் அழிந்துபோகும் கேவலமான பொய்ப்பொருள் தேடும்வகையில் அல்ல. மெய்ப்பொருள் தேடும்வகையி லென்பதே மேலோர் துணிபு. ஆசியா கண்டமாகிய இவ்விடத்திலிருந்தே மேனாட்டார் மெய்ப்பொருளென்றெண்ணும் விவிலியமதம், அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. மிஸ்மேயோ முதலியோரும் கிறித்தவர்களென்றால், இப்பரதகண்ட தேசமாகிய ஆசியாவிலிருந்து சென்ற அம்மதத்தைச் சம்மதமாக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், நம்மிடத்துக்கொண்ட மதாசார சதாசாரத்தைக் கொண்டே இட்டின மாத்திற் கூர்மை பார்ப்பதுபோல, நம்மையும் நமது கண்டத்தையும் கண்டித்தெழுதக் கற்றுக்கொண்டார்கள். தாய்ப்பா லில்லாத குழந்தை, சரீரபலம் பெற்றிருப்பதுபோல, சுயவாட்சியில்லாதிருந்தும் பரதகண்டம் தொன்றுதொட்டு மாட்சிமையுற்ற மக்கட் பிறவியைக் கொண்டதாகையால், இத்தனை சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் பெற்று விளங்குகிறது. மிஸ்மேயோவைப் போன்றவர் வாழும் பிறதேசமானால், இத்தனை யாண்டாகப் பரவாட்சியிற் பாடுபட்டுக் கேடு கெட்டுப்போயிருக்கும்.

ஆகையால் 'மக்கட்பிறவியே மாண்புடைத் தென்றல்' என்ற இந்த அதிகாரத்தில், குறித்த விஷயம் அடங்கலும்,

ஆட்சியிலுங் காட்சியிலும் தொன்றுதொட்டு மாட்சியுற்று விளங்கி வரூஉம் நம் பாரதநாட்டையே சிறப்பாகவும் மற்ற நாட்டைப் பொதுவாகவும் குறிக்குமெனக் கொள்க.

தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவன் யாரே னும் மக்கட் பிறவியில் மாட்சிமை யுள்ளவனாவான். அவனைப் போன்றவர் பலர் கூடி வாழ்வதே பாக்கியமுற்ற நாடாகும். இதுவே விவேகானந்தரின் உன்னதோபதேசமாம். அவருடைய இதோபதேசத்தை மேற்குறித்தபடி நன்குணர்ந்து நடப்பவனே நாகரிக புருஷனும். அவனே மக்கட் பிறவியிற் பிறந்தவனேனும் தேவனாவான். மன்னுயிரையுந் தன்னுயிர்போல மதிப்பவனே மகானாவான். சன்மார்க்கமென்னும் நன்னெறியிற் படர்பவனே முத்தி நெறியென்னும் செந்நெறியைத் தொடர்பவனாவான். சன்மார்க்கத்திற் செல்பவரே உய்யு நெறி கண்டவராவார். 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' என்னும் விவேக நெறியே வேத நெறியாம். வேறெதுவும் பேத நெறியாம். மேனாட்டாரிற் சிலர் தற்போதிதைப் பின்பற்ற முயல்கிறார்கள். அநேகமாகிய நூல்களையும் எழுதி வெளியிடுகிறார்கள். சன்மார்க்கமென்றால் வேறெதுவோ என்றெண்ண வேண்டா— நோயற்ற வாழ்வே சன்மார்க்கமாம். இயற்கை வாழ்வே சன்மார்க்கமாம். நோயற்ற வாழ்வென்றால், உடலுக்கு மட்டும் நோயற்ற வாழ்வு என்பதல்ல. உடல், மனம், வாக்கு (மன வாக்கு காயம்) என்னும் மூன்றினும் நோயற்ற வாழ்வு வாழவேண்டும். அப்போதுதான் குறைவற்ற செல்வமாகிய முத்தி யின்பம் சித்தியாகும். இதுகுறித்தே இராமலிங்க சுவாமிகளும்,

'ஒருமையுட னினது மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
*     *     *
நோயற்ற வாழ்வு வாழவேண்டும்'



என்று தமது அருட்பாவில் பாடியிருக்கிறார். நோயற்ற வாழ்வு என்றால், இயற்கை நெறியிற் படர்கின்ற பேரின்ப வாழ்வு. சன்மார்க்கமென்பது வேதாந்த மார்க்கமும் அன்று; சித்தாந்த மார்க்கமும் அன்று; இரண்டுக்கும் அதீதமான சமரசமார்க்கம். இதுவே இப் பாரதகண்டமேயன்றிப் பிற கண்டங்களும் செல்லவேண்டிய சன்மார்க்கம். இந்நெறியிற் படர்வாரையே இராமலிங்க சுவாமிகள்,

"சன்மார்க்க சங்கத்தீர்!
சிற்றடியே னுமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன்
தயவினொடுங் கேட்பீர்"

என்று விளித்துத் தமது குறைகளைக் கூறுகின்றார். இது குறித்தே தாயுமானவரும்,

'சன்மார்க்க ஞானமதிற் பொருளும் வீறும்'

என்னும் பனுவலைப் பாடி யிருக்கின்றார். உடல், மனம், வாக்கு என்னும் மூன்றும் தூய்மையாயிருப்பதற்கு ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். உழைப்பவன் பிழைப்பவன் என்றது இதனாலேயே யாமென்றுணர்க. முதலாவது, உடல் தூய்மையைப் பற்றிச் சொல்லுங்கால், பிணியால் பிணிப்புண்டு வாழாமையே உடல் தூய்மையாம். உடற்பிணி வருமுன் காத்துக் கொள்வதே மதியின் பயனும். அதற்கு மனத்தூய்மையே யின்றியமையாதது.

'புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்'

[illegible]டி வாய்மையே மனத்தூய்மைக்குப் பிறப்பிடமாம். வாயிற் பிறப்பதெல்லாம் வாய்மையே. ஆனாலும், இங்கிது, வாக்குத் தூய்மையால் மனத் தூய்மையாகும்; மனத் தூய்மை காரணச் சிறப்பாய் உண்மையை உணர்த்துகிறது.

யானல் உடல் தூய்மையாகும். அதனால் நோய்மைக்கு இடமில்லை. இதுவே நோயற்ற வாழ்வு என்றறிந்தென்க.

'வாய்மை பெறு
நோய்மை யறு'

என்பது பழமொழி.

இப்படிப்பட்ட வாய்மையிற் சிறந்தோரே துறந்தோராகிய முனிவரெல்லாரும் என்பது எல்லார்க்குந் தெரியும். அரிச்சந்திரனும் வாய்மை யென்னும் நன்னீரிற் குளித்திருந்ததனாலேயே, அவனுக்கு எத்தனையோ இடுக்கண்கள் வந்தும் நோய்மையே இன்னதென் றுணராமல் இருந்தான். உடலின் நோய்மைக்குக் காரணமாயிருப்பது மலச்சிக்கல்—மலபந்தனம். அது போலவே மன நோய்மைக்குக் காரணமாயிருப்பது மலபந்தந்தான்—ஆணவ முதலிய மும்மலக்கட்டு. இக்கட்டில் அகப்பட்டவன் அடையாத இக்கட்டில்லை. உடல் தூய்மையை மலபந்தனமாகிய நோய்மையற்றோரே பெறுவர். மனத்தூய்மையை மும்மல பந்தமாகிய நோய்மையற்றோரே அடைவர். இப்படி அடைந்திருந்தோரே நமது மூதாதையராகிய முனிவரென் றுணர்க. அம்முனிவரைப்போலவே நாமும் நகரவாசத்தையும் நாட்டு வாசத்தையும் துறந்து, காட்டுவாசஞ்சிறந்து வாழவேண்டுமென்பதில்லை. மேற்குறித்த அரிச்சந்திரனும் பிறரும் காட்டு வாசமுற்று, வாய்மையாளராகவுந் தூய்மையாளராகவும் புகழ்பெற்றிருந்தார்கள்? இல்லை; இல்லை. மாணிக்கம் கூலத்திலிருந்தாலும் மாணிக்கம் தான். கண்ணாடிக்கல் கூடத்திலிருந்தாலுங் கண்ணாடிக்கல்தான். உள்ளூரிலிருந்தாலும் ஞானவான் ஞானவான் தான். காட்டிலிருந்தாலும் அஞ்ஞானி அஞ்ஞானிதான். புலி காட்டில் தான் வாழ்கிறது. அதற்கு ஏதேனும் நன்ஞான முண்டா? கோட்டான் குகையிலிருக்கிறது. அதற்கு ஏதேனும் யோகசாதன



முண்டா? பள்ளாட்டிற்குத் தாடி நீண்டிருக்கிறது. முனிவராகுமா?

'உள்ளூ ரிருந்துந்தம் உள்ளமறப் பெற்றாரேல்
கள்ளவிழ் சோலையாங் காட்டினார்—காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரேல் யாரேனும்
நண்ணி நடுவூ ருளார்'

என்பது அறநீதி. ஊர்நடுவில் வாழ்ந்தாலும் மனந் தம் வசப்பட்டார், காட்டில்வாழும் முனிவர்க்குச் சமானமாவார். காட்டில் வாழ்ந்தாலும், மனந் தம் வசப்படார், நாட்டிலிருப்பவர்க்குச் சமானமாவார். ஆகையால், எங்கிருப்பினும் ஒருவர், மனம் தம் வசப்பட்டு வாழ்வதே சிறந்ததாம்.

'சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே'

என்றார் தாயுமானாரும்.

ஆகையால், மக்கட்பிறவியே மாண்புடைத்து என்று விளக்கிக்காட்ட ஒவ்வொருவரும் மனத்தை அடக்கியாள வேண்டும்.

'உணர்ச்சிஅச் சாக உசாவண்டி யாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—உணர்ந்ததனை
ஊர்கின்ற பாகன் உணர்வுடைய னாகுமேல்
பேர்கின்ற தாகும் பிறப்பு'

என்றார் அறநூலார். அறிவே சக்கரமாகவும், ஆராய்ச்சியே வண்டியாகவும், மெய் வாய் கண் மூக்கு செவி யென்னும் ஐம்புலன்களே அவ்வண்டியை ஈர்த்தோடும் அதிவேகமான குதிரைகளாகவும், அறிவாளியே பாகனாகவும் அதிசாக்கிரதையாய்ச் செலுத்தினால், பிறவி நோய் ஒழியும்.

'அற்றது பற்றெனில்
உற்றது வீடு'

என்றபடி, உணர்ச்சியாகிய சக்கரத்திற் செப்பனிட்ட ஆராய்ச்சி யென்னும் வண்டியில் ஐம்புலன்களென்னும் அதி வேகக் குதிரைகளைப் பூட்டி, அறிவாளியாகிய பாகன் அதி சாக்கிரதையாய்ச் செலுத்தினால், இவ்வுலகப் போவிச் சுகானுபவப் பற்றறுவது சாதம். அதனால் பிறவிநோய் தீர்ந்து முத்திநலம் எய்துமென்று கொள்க.

இப்படி முத்திநலம் எய்துவதற்கு

‘ துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம் ’

என்றபடி யார்க்குந் துறவறந்தான் சிறந்ததென்றில்லை. திருவள்ளுவருடைய சீரிய மனையறத்தால், இல்லறமே சிறந்ததென்று எல்லார்க்குந் தெரியும். ஆகையால், துறவறமாகிய மற்றின்ப வெற்றியை மறந்து, இல்லறமே சிற்றின்ப வெற்றிக்கு ஏற்ற சாதனமென்று எல்லாரும் நன்குணரவேண்டும். ‘அறம் பொருளின்பம் வீடடைதல் நூற் பயனே’ என்றபடி எல்லாருங் கல்விநலஞ் சிறந்து கற்புடைய நங்கையைப் பொற்புடன் தக்க பருவத்தில் மணந்து, மனமொத்து வாழ்ந்து, நன்மக்கட் பேறெய்தி, நலம்பெற்று, மக்கட்பிறவியே மாண்புடைத்தென்பதை விளக்க வேண்டும்.

‘ விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூற்
கற்றாரோ டேனை யவர் ’

என்றபடி கல்வியறிவற்ற கயவராய்க் காலங்கழிக்கக் கூடாது.

---

## மூன்றும் அதிகாரம்

### (இல்லற வாழ்க்கையே இன்புடைத் தென்றல்)

சென்ற அதிகாரத்திற் குறித்த மக்கட் பிறவியின் பயனைப் பெற்ற ஒவ்வொருவரும்,

‘ ஆக்கையாற் பயனென்? அரன்
கோயில் வலம்வந்து,
பூக்கையா லட்டிப்
போற்றியென் னாதவிவ்
வாக்கையாற் பயனென் ?’

என்று நாவுக்கரையர் பாடியபடி, தெய்வபக்தி யுள்ளவர்களாய்ச் சிறந்திருக்கவேண்டும். தெய்வபக்தியின் சிறப்பை நமது மூதாட்டியாம் ஔவையாரும்,

‘ தெய்வ மிகழேல் ’ என்றும்,
‘ தெய்வஞ்சீறிற் கைதவமாளும் ’ என்றும்,
‘ சிவத்தைப் பேணில் தவத்துக் கழகு ’ என்றும்
‘ திருமாலுக் கடிமை செய் ’

என்றும் அருவ வணக்கத்தாலும் உருவ வணக்கத்தாலும் உலகத்தார்க்கு விதந்து ஓதி யிருக்கின்றார். ‘தெய்வ மிகழேல்’ என்றதினும், ‘தெய்வஞ்சீறிற் கைதவமாளும்’ என்றதினும் பொதுப்படத் தெய்வமென்றாரேயன்றி, சிவனென்றும், பிரமனென்றும், விஷ்ணுவென்றும், அவனென்றும், இவனென்றும், உவனென்றும் நாமரூபத்தாற் சுட்டினாரில்லை. ஆகையால், இது அருவ வணக்கத்துக்கு வழிகாட்டியாம். ‘சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு’ என்றதினும், ‘திருமாலுக் கடிமைசெய்’ என்றதினும், சிவமென்றும் திருமாலென்றும் நாமரூபங் கற்பித்திருப்பதனால், இது உருவ

வணக்கத்துக்கு வழிகாட்டியாம். இவ்வுருவ வணக்கமே அருவ வணக்கத்துக்கு முதற்படியாகும்.

சுவாமி விவேகானந்தர் முதலிய மகான்களும், சரியை கிரியை யோக ஞானமென்னும் நான்கு படிகளையும் கிரமமாய் மிதித்தேறிச் சென்றோரே, பரம யோகியராவார் என்று பாங்குடன் ஓதியிருக்கின்றார்கள். புலியைப்பற்றிப் பாடங் கற்றுக்கொள்ளும் சிறு பிள்ளைகட்கு, முதலில் அதன் படத்தைக் காட்டிப் போதிப்பதுபோல,

'வந்தவா றெங்ஙனே ?
போமா றேதோ?'

என்று தத்துவ விசாரணையி லிறங்கும் ஒவ்வொருவர்க்கும் கடவுளுண்மையை உருவ வணக்கத்தாலேயே கற்பிக்க வேண்டும். தெரிந்ததிலிருந்து, தெரியாததையும், உருவத்திலிருந்து அருவத்தையும் ஒருவாறு கற்பிக்கவும் கற்றுக் கொள்ளவும் முடியுமன்றி, எடுத்த எடுப்பிலேயே எல்லாம் மானதமாய் ஆகவேண்டுமென்றால், அது சுருதியுக்தி யனுபவங்களுக்கு முரணாக முடியும்.

அங்கிலத்தும் (From the known to the unknown) 'தெரிந்ததைக்கொண்டு, தெரியாததைத் தெரிவி' என்னுங் கொள்கை உண்டு. இது இகத்துக்குமட்டுமன்றிப் பரத்துக்கும் உகந்ததாகுமென்று கொள்க. 'பரம் என்று சொன்ன மாத்திரையிலேயே, விசாரணையின்றிக் குருட்டாட்டமாய், நம்பி வணங்கு' என்னும் கிறிஸ்தவ முதலிய பரமதக் கொள்கை நம்மிந்துமதம் எதிலும் இல்லை. எல்லாம் விசாரணையினாலும் சாதனத்தாலுமே ஆகவேண்டும். 'சாதனமின்றி யொன்றைச் சாதிப்பாருலகிலில்லை' என்பதே நம்மிந்துமதக் கோட்பாடு. ஆகையால், யாரேனும் சாதனமின்றி எதையும் உணரவும் உணர்த்தவும் முடியாது. இந்தக்



கொள்கை இகபர மிரண்டுக்கும் ஏற்றது. ஆகையால், தெய்வங் கொள்கையிற்றிகழ [illegible] ஒவ்வொருவரும் சரியை கிரியையாகிய உருவ வணக்கத்தில் ஈடுபட்டே யோக ஞான சாதனங்களிற் பாடுபடவேண்டும். இப்படிச் சுருதியுக்தி அனுபவங்களால் நிலைபெற்றதே நம் மிந்துமதம். இதுபோன்ற மதம் உலகில் வேறில்லை என்பது பற்றியே தாயுமானாரும்,

'இம்மதமே உலகிலுள்ள
எம்மதங்களுக்கும்
சம்மதமாம், மற்றவைக்குத்
தாயகமாம், மாமுனிவர்
வாயகமாம், எல்லார்க்கும்
சாயகமாம்'

என்னுங் கருத்தமைத்து, எத்தனையோ திருப்பாடல்களைப் பாடி யிருக்கின்றார். மாணிக்கவாசகரும் அப்படியே,

'யானே பொய் யென்னெஞ்சும் பொய்
என்னன்பும் பொய் யானால் வினையேன்
அழுதா லுன்னைப் பெறலாமே?
தேனே, அமுதே, கரும்பின் தெளிவே,
தித்திக்கும் மானே, அருளாய்
அடியே னுனை வந் துறுமாறே'

என்று அருமையான அருவுருவ வணக்கத்தால் நம்மதச் சிறப்பை உலகத்தார்க்கு உள்ளன்போடு உகந்து உரைத்திருக்கிறார். இவர் கொள்கையும், முதலில் உருவ வணக்கமாகிய பாவனையேயாம். சிவப்பிரகாச தேவரும் தமது அவிரோத உந்தியாரில்,

'பாவனை நீதம் பதியா விடத்தேக
பாவனை பற்றிநின் றுந்தீபற
பழுத்தா லொழித்திடென் றுந்தீபற'

என்றபடி, "ஆதியில் உருவவணக்கமே உகந்தது. பிறகு அது
தானாகவே ஒழிந்துவிடும்" என்று விதந்து கூறியிருக்கின்றார்.

இப்படியே சுவாமி விவேகானந்தரும், அமெரிக்கா
முதலிய மேனாடுகளிற் பிரசங்கஞ்செய்து மாந்தரை மனந்
திருப்பித் தமது சீடர்களாக்கிக்கொண்டிருக்கிறார். ஆகை
யால், ஒவ்வொருவரும் சரியை கிரியையில் ஈடுபடவேண்டும்.
சரியையை அரும்பு என்கிறார் தாயுமானார்; கிரியையை மல
ரென்கிறார்; யோகத்தைக் காய் என்கிறார்; ஞானத்தைக்
கனி யென்கிறார். இப்படி ஈடுபடாமல் தந் நாட்களை வீணிற்
கழிப்பவர் சிற்றின்பவெற்றி யுறுவது குதிரைக் கொம்பாகும்.
இதுபற்றியே மாணிக்கவாசகரும்,

'கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே'

என்று அறிவுறுத்துகிறார்.

சரியை கிரியை யோக ஞானங்களில் ஈடுபடுவார்க்கு,
சென்ற அதிகாரத்தில் விவேகானந்தர் கூற்றாகக் கூறியுள்ள
படி, திடசரீரம் வேண்டும். இப்படித் திடசரீரம் பெறுவ
தற்கு இல்லறவாழ்க்கையே இன்புடைத்தாகும். சரியை
யென்பது, கோயிலுக்குப் போய்த் திருவலகிடுதல், திரு
மெழுக்கிடுதல், கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பு, நிலப்பூ
வென்னும் நால்வகை மலர்களையும் நன்காய்ந்தெடுத்து மாலை
தொடுத்தல், சாத்தல், திருப்புகழ் படித்தல், திருவிளக்
கேற்றல், நந்தவனத்துக்குத் தண்ணீர் பாய்ச்சல், தொண்
டரைக் கண்டவுடனே வணங்கல், தொண்டு செய்தல் முத
லியவைகளாம். கிரியையென்பது, பூசைக்குவேண்டும் உப
கரணங்களைச் செய்துகொள்ளுதல், உருவேற்படுத்தி நீராட்
டல், தூபங்காட்டல், நைவேத்தியஞ் செய்தல் முதலியவை
களாம். மேற்குறித்த சரியை கிரியைகளால் ஞானோதயத்



தொடக்கமாவதே யோகமாகும். இதுபற்றியே ஔவை
யாரும்,

'மோன மென்பது, ஞான வரம்பு'

என்று ஓதினார்.

இந்நான்கு பாதங்களினும் பயின்று முத்தி நலம் பெறு
வதற்குத் திண்ணிய சரீரமும் நுண்ணிய மதியும் இன்றி
யமையாதன. சென்ற அதிகாரத்திற் கூறியபடி, ◦தேக
பலமே மனோ பலமென்று கொள்க.

'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை'

என்றபடி, பிரமசாரி (கலியாணமின்றித் தவஞ் செய்வோன்),
வானப் பிரத்தன் (மனையாளோடு கூடி வன நாடித் தவஞ்
செய்வோன்), சந்நியாசி (மனையாளைத் துறந்துபோய், வன
நண்ணித் தவஞ் செய்வோன்) ஆகிய மூன்று ஒழுக்கத்
தார்க்கும், அவர்கள் செல்லும் நல்லொழுக்க வழிக்கு,
கிருகத்தன் (மனையாளோடு இல்லறத்தை நடத்துவோ)
னே நிலைபெற்ற துணையாவான். கலியாணமின்றித் தவஞ்
செய்வோனே பிரமசாரி யென்பான். ஆசாரியனை அடுத்து
ஓதுதலும், நோன்பாற்றலுமே இவனது நல்லொழுக்க நெறி
களாம். மனையாளோடு கூடி வன நாடித் தவஞ் செய்வோனே
வானப் பிரத்தனாம். வீட்டைத் துறந்து காட்டை யடைந்து,
மனையாள் தொண்டு செய்யத் தவம்செய்வதுவே இவ
னுடைய நல்லொழுக்க முறையாம். மனையாளையும் வீட்
டையும் துறந்து காட்டை யடைந்து தவஞ் செய்வோனே
சந்நியாசியாம். இவனையே முற்றத் துறந்த முனிவனென்
பார் மூதுணர்ந்தோர். இப்படி இந்த மூன்று வழியிற்
செல்வோர்க்கும் உகந்த துணையாயிருப்பவனே கிருகத்தன்.
மனையாளோடு கூடி வாழ்ந்து, மேற் குறித்த மூவர்க்கும்,

‘அட்டுண்டு வாழ்வார்க்கு
அதிதிக ளெஞ்ஞான்றும்
அட்டுண்ணு மாட்சி உடையவர்’

என்ற சங்க நீதியின்படி ஆதாரவாயிருப்பவனை இல்வாழ்வான் (கிருகத்தன்) என்பான். அவர்களுக்கிவன், பசிக்கு உணவளித்து, ஆற்றவேண்டும்; குளிர்க்கு ஆடைவழங்கிப்போற்றவேண்டும்; நோய்க்கு மருந்தளித்துத் தேற்றவேண்டும்; இருக்க இடமும் மடமும் ஏற்படுத்தி ஏற்றவேண்டும். இப்படி இவன் நாட்டகத்தில் வீட்டகத்தில் வாழ்வது தன் பொருட்டேயன்று. தென்புலத்தார்க்கும், தேவர்க்கும், விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், கடைசியாகத் தனக்கும் உதவியாயிருக்கவே இவன் தவத்தை மறந்து, அதாவது, துறவறத்தை மறந்து, அதற்கு ஆதாரவாக இல்லறத்திலிருந்து வாழ்கிறான். இது மட்டுமன்று. இன்னும் இவன் உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் வருவாயின்றி வந்து, இரந்தவர்க்கும், அனாதைகளாய் வந்து, இறந்தவர்க்கும் ஆதாரவாயிருக்கவேண்டும். இரந்தவர்க்கு உணவாதிகள் வழங்கவேண்டும். இறந்தவர்க்கு ஈமக்கடன் தீர்க்கவேண்டும். அவர்களுக்கு மனைவிமைந்தர் இருப்பின் அவர்களை ஆதரிக்கவேண்டும். இவன் தன் வருவாயில் ஆறிலொரு கூறை அரசனுக்கு வழங்குவதால், அரசனையும் ஆதரிப்பவனாகிறான். இது பற்றியே கம்பரும் தமது ஏரெழுபதில்,

“உழவினால் இல்வாழ்வான்,
தன் வயலில் நாற்றுமுடி நடுவதால், வேந்தர்
முடியில் முடிநடுபவனாகிறான்”

என்றோதினார்.

‘உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு’



என்றபடி உழவுத்தொழிலே மற்றெல்லாத் தொழில்களுக்கும் ஏற்றமானதென்று கண்டுகொண்டு அதையே மென்மேலும் வளர்க்கவேண்டும். அதனால் வரும்பலனை மேற்குறித்தபடி ஆறு கூறாக்கவேண்டும். தற்காலத்தில் ஒருவன் மாதமாதம் ஆயிரம் ஆயிரமாய்ப் பாயிரத்தோடு சம்பாதித்தாலும், எல்லாவற்றையும் ஒரே கூறாக்கித் தானே உடைமையாய் வைத்துக்கொண்டு, இலக்ஷாதிகாரியெனப் பொய்ப்பெயர் பெற்றுப்பிறரைக் கண்குளிரப் பிக்ஷாதிகாரிகளாகக் கண்டு களிப்பதுபோல, “எந்த வழியில் எய்தினாலென்ன? ‘பணம் பந்தியிலே குலம் குப்பையிலே,’ ‘திட்டு வந்து பெட்டியில் விழுகிறதா, கிட்டுவந்து பெட்டியில் விழுகிறதா?’ என்றபடி பணம் பெற்றாற்போதும்” என்று பணம் ஒன்றையே பெரும்பற்றாகக் கொண்டு வாழப்படாது. வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்யவேண்டும்.

‘ஒல்லும் வகையா லறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்’

என்றபடி தத்தமக்கியன்ற அளவால், தருமஞ்செய்யவேண்டுமென்றிருப்பதால், பொருளைத் தேடுவது இன்றியமையாத முயற்சி தான். ஆயினும், அறவழியில் தேடவேண்டும்.

‘தொழுதூண் சுவையின்
உழுதூண் இனிது’

என்றபடி, தொழுது வாழுகிய அரசசேவையிலும், பிறமறத்தொழிலிலும் பொருள் தேடக்கூடாது. கள் விற்றுக் கலப்பணந் தேடுவதினும், கற்பூரம் விற்றுக் காற்பணந் தேடுவது அறவழியாம். பிறவழியெல்லாம் மறவழியாம். இது குறித்தே நாயனாரும், பருத்தியைத் தாமே நிலந்திருத்தி விருத்திசெய்து, அதையே தமக்கு விருத்தியாக் கொண்டு ஆடைநெய்து வாழ்ந்தார். பிரம்பு, ஈந்து முதலிய

வைகளால் கூடைசெய்தலும், பருத்தி முதலியவைகளால்
ஆடை நெய்தலும் பொருள் வருவாய்க்கு அறவழிகளாம்.
இதையே தற்காலத்தில் காந்தியடிகள் முதலியோர் உத்த
மத் தொழிலென நந்நாட்டார்க்குக் கற்பிக்கின்றனர். இந்த
வுத்தமோத்தமத் தொழிலை நந்நாட்டார், பிறநாட்டார்க்
குப் பறிகொடுத்து விட்டுத் தற்போது அனுபவிக்குங்கட்ட
நட்டங்களுக்கும் வறுமைக்கும் அளவு முண்டோ? ஆகை
யால், இல்லற வாழ்க்கையே இன்புடைத்தென்று மேற்
கொண்ட ஒவ்வொருவனும், உழவையும் நெசவையும் கைத்
தொழில்களிற் பிறவையும் பேணிக்கொளல்வேண்டும். இத்
தொழில்களைக் குறித்தே, 'உத்தியோகம் புருஷலக்ஷணம்,'
'உழைப்பவன் பிழைப்பவன்' முதலிய பழமொழிகள்
வழங்குகின்றன.

> 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
> தொழுதுண்டு பின்செல் பவர்'

என்னுந் தெய்வமறையின்படி, தொழுதுண்டு வாழ்வாரெல்
லாந் தாழ்வாரே ஆவார் என்று தெரிந்துகொள்க. 'நியாய
வாதிகளும், வைத்தியர்களும், பிறரும் தொழுதுண்டு பின்
செல்பவரல்லர்; மாந்தர்க்கு இதஞ்செய்பவர்; அவர்களு
டைய தேக நிலையைக் காப்பவர்; நீதி நெறியைப் பரிபாலிப்
பவர்; அவர்களுக்கு வேறெந்தத் தொழிலாளரும் இணை
யல்லர்' என்று சிலர் இயம்புகின்றனர். எப்போது? நியாய
வாதிகள்,

> 'பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
> வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்'

என்றபடி பழிபாவத்துக் கஞ்சிச் சம்பாதிக்கும்போது, அவர்
களுடைய தொழில் மற்றெல்லாத் தொழிலுக்கும் ஏற்ற
மானதாகும். அப்படி யாரேனும் சம்பாதிக்கிறார்களா?



இல்லை; இல்லை; முக்காலும் இல்லை. நியாயவழியில் சம்
பாதிக்க முயன்றால், அவர்களுக்கு அளவுக்கு மிஞ்சின பொரு
ளேது? வண்டியேது? வாகனமேது? வீண்பெருமையேது?
போலிப்புகழேது? அநியாய ஆஸ்தியேது? எல்லாம் நாஸ்
தியாய், வருவாய் அளவாய், தமக்கென வாழாமல் பிறர்க்
கென வாழ்ந்து, காந்தியடிகளைப்போல உலகம் போற்றும்
உத்தமர்களாய் விளங்கமாட்டார்களா?-உண்மையிற் கொலை
செய்தானென்று தெரிந்தும் ஒருவனைப் பொருளாசையால்,
தம் பக்கஞ் சேர்த்துக்கொண்டு வாதிப்பார்களா? வீண்
பேருக்கும் போலிப்புகழுக்கும் ஆசைப்பட்டுத் தாழாதாரை
யுந் தாழ்ந்து வாழ்ந்து காலம்போக்குவார்களா? தம்மை
நாடிவரும் வழக்காளிகளுக்குக் காந்தியடிகள் நன்மதி கூறித்
தாமொரு காசுக்கும் ஆசைப்படாமல், அவர்களை ஒருமைப்
படுத்திவிட்டு வந்ததுபோல, இவர்களும் மனச்சாக்ஷிக்கு
விரோதமின்றி வழக்காளிக்கு நீதி நிலையைத் தெரிவித்து
ஒருமைப்படுத்தி அனுப்பிவிட்டு, அதற்கென ஒரு நியாய
மான சிற்றூதியம் பெற்றுச் சிறந்து, இகபர சுகானுபவி
களாய் வாழமாட்டார்களா? இப்படி வாழ்பவன் இப்
போது ஒருவனும் இலன். காந்தியடிகள் ஒருவர் தவிர இது
வரையில் ஒரு நியாயவாதியேனும் தன்னலம் பாரிக்காமல்
பிறர்க்கென வாழ்ந்தவனும் இல்லை; வாழ்கின்றவனும்
இல்லை; வாழ்பவனும் இல்லையென்றே இயம்புவேன்.
ஏனெனில்,

> 'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருளல்ல தில்லை பொருள்'

என்ற மறைமொழியை ஒருவனும் எண்ணுகிறானில்லை.
போலிப் பொருளைப் புகழ்ப் பொருளா மதித்து ஒவ்வொரு
வனும் தன்னலம் பாரித்துப் பிறர்க்கென வாழாமல் மோசம்
போகிறான். இப்பேர்ப் பட்டவனெல்லாம்

'ஒல்லும் வகையால் அறவினை யோவாதே
செல்லும் வாயெல்லாஞ் செயல்'

என்ற திருக்குறளுக்கு இலக்காய் எங்ஙனம் வாழ்வான்? இல்லற வாழ்க்கையே இன்புடைத்தென்று பிறர்க்கென வாழும் பெரியாராகிய காந்திமகானைப்போல இகபர சுகத்தை யெங்ஙனம் காண்பான்?

'எல்லா முன்னடிமையே
எல்லா முன்னுடைமையே
எல்லா முன்னுடையசெயலே'

என்றமறை மொழியை யெங்ஙனந் தேர்ந்து, அதற்குத்தக விளங்குவான்?

வைத்தியனும் இப்படியே போலிப்புகழுக்கும், பட்டத்துக்கும், திட்டத்துக்கும் இட்டப்பட்டுத் தனக்கென வாழ்கிறான். ஆகையால்,

'வருகணத்து வாழ்ந்திடுமோ
வீழ்ந்திடுமோ இந்த மலக்கூடு'

என்றபடி, இன்னும் அரைக்கணத்தில் வீழ் நிலையில் நிற்கும் உயிரையும் உய்விப்பேன் என்று வீண்புரளிசெய்து, அபரிமிதமான மருத்துவக்கூலி மருந்துக்கூலிகளை மனச்சாக்ஷிக்கு மாறாகக் கள்ளன்போலக் கைக்கொண்டு போகிறான். என்னே, இவன் மருத்துவ மயக்கு இருந்தபடி! பிறநாட்டுப் போலி மருத்துவமுறை இவனுக்கு அரை குறையாய்த் தெரிந்ததனால் வந்தகேடன்றோ இது? நந்நாட்டு மருத்துவப் புலவராகிய தேரையரும் புலிப்பாணியும் பிறரும் இங்ஙனமா, தமக்கென வாழ்ந்து அநியாயமாய்ப் பிறர்பொருளை மருத்துவ வலைவீசி வாரிக் குவித்துத் தொகுத்துவைத்தார்கள்? அல்லது, அவர்கள் தமது மாணவரையேனும் அங்ஙனம் செய்ய ஏவினார்களா? இந்தப் பொருளாசைப்பித்து கள்



கட்டாரைப் புதுமையாகப் பிடித்துப் பதுமைகளைப் போல ஆட்டுவிக்கிறது. இல்லறவாழ்க்கையே இன்புடைத் தென்று காணவேண்டுவான், பொருளாசைப் பித்துக்குத் தக்க மருந்தாகிய அவாவின்மையை உட்கொண்டு, அதற்குத் தக்க பத்தியமாகிய பொறுமை, மனநிறைவு, சாந்தம், இன்சொல் முதலியவைகளை அனுசரிக்கவேண்டும். கொஞ்சம் இந்தப் பத்தியம் தவறினால், பித்து வளரும். பருவத்தில் வளரும் உடற்பித்துப் போல, பொருளாசைப்பித்தும் சாந்தமின்றிக் கருவத்தில் வளரும். தான் என்னும் அகந்தையே பொருளாசைப்பித்தை வளர்க்கும் அபத்தியப் பதார்த்தங்களில் முதன்மையானது.

'வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள்'

என்ற சங்க நீதியின்படி, ஆயிரம் சம்பாதிப்பவன் பாயிரத்தோடு காலாயிரத்தையேனும் அறவழியிற் செலுத்திவிட வேண்டும். 'எல்லாம் நான் செய்தேன் என்னும் ஞானம் அஞ்ஞானம்' என்றபடி எதிலும் தான் அடைந்த வெற்றியை யுன்னி இறுமாந்திருக்கக் கூடாது. ஒவ்வொருவனும் நூற் பல நாடி நல்லவை கற்க வேண்டும். பல கற்றோரும் யாமென்று தற்புகழக் கூடாது. கற்றது கைம்மண்ணளவு, கல்லாதுலகளவென்றுணர வேண்டும். "தானே வாழவேண்டும். பிறர் வாழக்கூடாது. அவர்கள் [illegible]மகவு கெட்டாலென்ன? தனக்குச் [illegible] நாளுக்கு நாள் நூறு, ஆயிரமாய், ஆயிரம் பதினாயிரமாய், பதினாயிரம் இலக்ஷமாய், இலக்ஷம் கோடியாய்ப் பெருகித் தன் சந்ததியே பணக்காரச் சந்ததியாக வேண்டும்" என்று ஒருவன் பணத்தையே பெரும் [illegible]ற்றுத் தேடி அதனால், குணத்தைத் தேடிக் குணக்கார

னாகாமல் மூதேவிக்கு முதற் பிள்ளையாய்க் காலம் போக்கக் கூடாது. 'காதவழி பேரில்லான் கழுதையோடொக்கும்' என்றது, பணத்தாற் போலிப்புகழ் பெற்றானைக் கருதியன்று. காந்தி மகானைப்போல மன்னுயிரைத் தன்னுயிர் போல மதிப்பவனைக் கருதியேயாகும். உடல் பொருளாவி மூன்றையும் பிறர்க்கு வழங்கும் பெருமிதமுடையானைக் கருதியேயாகும். பிறர் துயர் தன் துயரென்றெண்ணி, அதை மாற்ற முன் வரும் உத்தமனைக் கருதியேயாகும். ஏழைக்கிரங்கி, அவர்கள் துக்கஞ் சகியாத தூயவனைக் கருதியேயாகும். போலிப் பொருளைப் பொருளெனக் கருதாது, உண்மைப் பொருளை உயர் பொருளெனக் கண்டு கொள்ளும் உத்தமனைக் கருதியேயாகும். இன்னும் என்ன சொல்வேன்! இப்படி யெல்லாம் எவன், பழி பாவத்துக் கஞ்சிப் பொருளைத் தேடுங்கால், உலகம் பழிக்கும் வழியின் விலகிச் சம்பாதித்தலே தகுதியுடைய தென்றும் அவ்வாறு தக்க வழியில் தேடியதைத் தென்புலத்தார் முதலிய சற்பாத்திரத்திற் செலவிடுவதே இல்வாழ்க்கையின் இரகசிய மென்றும் கண்டுகொண்டு அதன்படி நடக்கிறானோ, அவனே உத்தம புருஷன்; அவனே மகான்; அவனே பரம புருஷன். அப்படிப்பட்டவனுடைய சந்ததியானது எந்நாளும் அழிவின்றி நீடித்து விளங்கு மென்பதற்கு ஐயமில்லை. அவனுடைய இல்லறவாழ்க்கையே இகபரம் இரண்டிலும் இன்புடைத் [illegible]க நிலவு மென்பது நிச்சயம்.

இப்படி இல்லறவாழ்க்கையை இன்புடைத் தாக்குவதற்கு, பயிர்க்கு உயிர்க் காதாரமாம தண்ணீரைப் போல இன்றியமையாதது வேறொன்றிருக்கிறது. அதுவே அன்புநீர். இவ்வன்பு நீர் பாய்வதில்லையேல், மேற் குறித்த இல்லறவாழ்க்கைப் பயிர் விளைவு குன்றித் தீயும். இது பற்றியே, ஆன்றோரும்,



'இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்'

என்று கூறியுள்ளார். இங்கிவர் பைங்கூழென்றது இல்வாழ்க்கைப் பயிரையே யாகும். இந்த இல்வாழ்க்கைப் பயிர் விளைவதற்கு நிலம் தேடி வேறெங்கும் போய்ப் பணங் கொடுத்து வாங்க வேண்டியதில்லை. பணங் காசு செலவில்லாமலே இல்வாழ்வானுடைய வாயிற் பிறக்கும் இன்சொல்லே இதற்கு விளை நிலனாம். இது பற்றியே தெலுங்கிலும்,

'நோரு மஞ்சிதியேனி ஊருமஞ்சிதி'
(நாவினிமையானால் நாடினிமையாகும்)

என்னும் பழமொழி வழங்கி வருகிறது. இது பற்றியே நாயனாரும் தமது திருக்குறளில் இனியவை கூறல் என்றோ ரதிகாரம் வகுத்துப் பத்துக் குறளால் விளக்கியிருக்கிறார்.

'முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானும்
இன்சொ லினதே யறம்'

என்றது அவைகளில் ஒன்றாகும். தூரத்திற் கண்டவுடனே விருந்தினரை முகமலர்ச்சியோடு விரும்பி நோக்கவேண்டும். அவர்கள் சமீபத்தில் வந்தவுடன் இன்சொற்கள் இயம்ப வேண்டும். அவர்கள் அவ்வா வேற்புக்கும் முகமனுக்கும் மகிழ்வது கண்டு, அவர்களுக்குத் தன்னாலாக வேண்டிய உதவியை இல்வாழ்வான் குறிப்பிற் கண்டுணர்ந்து செய்ய வேண்டும். இதுவே உயர்ந்தோர் மாட்டாகிய வுலக வழக்காகும். பார்வையும் சொல்லுமாகிய இரண்டு வலைகளும் அன்புக் கயிற்றாற் பின்னியிருக்கின்றன. ஆகையால் அவைகளில் அகப்பட்ட மீன்களும் விலங்குகளும் போன்ற விருந்

தினரும் பிறரும் தப்பியோட வழியின்றி இல்வாழ்வானுக்கு வசப்பட்டுவிடுகிறார்கள். இப்படி இல்லறவாழ்க்கையை இன்புடைத்தாக் காணவேண்டுவான், தான் இருந்த இடத்திலிருந்தே வெகு சுளுவில் இன்சொல்லென்னும் விளைநிலனைத் தேடிக் கொள்ளுகிறான். அதில், குறிப்பறிந்து ஈதல் என்னும் வித்திடுகிறான். இப்படி இன்சொல்லென்னும் நிலத்தில், குறிப்பறிந் தீதலென்னும் வித்திட வல்லவன், தான், நெற் பயிர் முதலிய விளைக்கும் நிலத்தில் வித்தும் விதைக்க வேண்டியதில்லை. வித்தில்லாமலே அது தானாய் விளையும். இவன் நற்குண நற்செய்கை உடைமையைக் காணும் அயலார், இவன் நிலம் வித்தின்றி விளைவு குன்றுவதைக் காணச் சகியார். எங்ஙனமேனும், அதன் விளைவு, அறவழியிற் செலவழிவதாகையால், அதை வித்திப் பலன் தரவைப்பர். இது குறித்தே நாயனாரும் தமது தெய்வத் தமிழ் மறையில்,

'வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்'

என்று அருளிச் செய்திருக்கிறார். ஈதலென்னும் வித்திட்டு, முளை கிளம்பிப் பயிரோங்குகையில், இல்லற வாழ்க்கையை இன்புடைத்தாய்க் காண்பவன், வன்சொல்லாகிய களைகளைப் பிடுங்கி யெறிகிறான். இப்படி யிந்தக் களை களைவதில்லையேல், இல்வாழ்க்கை யென்னும் பயிர் விளைவதில்லை. இது பற்றியே நாயனாரும் தமது திருக்குறளில்,

'இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது'

என்று கூறி யருளினார். வன்சொல்லாகிய களை, களைந்தவுடனே இல்வாழ்க்கைப் பயிர், நல்லறப் பயனாகிய கதிரீனவேண்டுவான், வாய்மை யென்னும் எருவிடுகிறான். இவ்வெருவின் அருமையைக் குறித்தே நாயனாரும்,



'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற'

என்றார்.

'யாம் உண்மை நூல்களாகக் கண்ட எல்லா நூல்களினும், உண்மை உரைத்தல் என்னும் நல்லறத்தினும் மேலான அறமென்று வேறெதையும் சொல்லியில்லை' என்பது இதன் கருத்து. இதற்காக அரிச்சந்திரன் என்ன செய்தான்! தாரம் விற்றான், சேய்விற்றான். தன்னையும் விற்றான். இது பற்றியே இராமலிங்க சுவாமிகளும்,

'தாரம்விற்றும் சேய்விற்றும் தன்னைவிற்றும் பொய்யாத
வாரம்வைத்தான் முன்னிங்கோர் மன்னனென்பார்'

என்றார்.

இப்படி இந்த உலகத்தில் நெற்பயிர் முதலிய வோங்குவதற்கு எரு விடுவது அவசிய மென்பதை வற்புறுத்தவே நாயனாரும்,

'ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு'

என்றருளினார்.

ஆகையால் இல்வாழ்க்கைப்பயிரிடுவோனுக்கு, எருவாகிய வாய்மை எத்தனை இன்றியமையாததென்று கண்டு கொள்க. எருவிட்ட பிறகவன் ஏராளமாகவுந் தாராளமாகவும் தண்ணீர் பாய்ச்ச வேண்டுமாகையால், வாய்மை யெருவிட்டவன் தன் மனமாகிய ஏரியிற் கட்டி வைத்திருக்கும் அன்பு நீரை, ஐம்புல மதகுகளின் வழியாய்ப் பாய்ச்சுகிறான். வாய்மை எருவிற்கும் அன்பு நீருக்கும் இசைந்த பொருத்தம் பெரிய பொருத்தமாகையால், அவனுடைய இல்வாழ்க்கைப் பயிரானது தழைத்துச் செழித்தோங்கி, அறக்கதிரை அபரிமிதமாய் ஈனும். இதுவே இல்வாழ்வான் ஒவ்வொருவனும் சிறுபோதிலிருந்தே விளைக்க வேண்டிய நற்பயிராகு

மென்க. இப்படிப்பட்ட அன்பு, இல்வாழ்வானுக்கு இன்றி
யமையாத தென்பதை இப்போது நாம் தப்பற வுணர்ந்
தோம். முதலில் அன்பை, அவன் தன் மனைவி மக்கள் மேற்
செலுத்தவேண்டும். அவர்கள் உதவியின்றி, அவனுக்கு
அறன் இறனாக நடவாது. ஆகையால், அதை அவன் பிறர்
மேற்செலுத்தி அறந்தேடு முந்தி, தன் மனையாள்மேல்
செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறான். அவளும் தானும்
பூண்டு ஈர்த்தாலன்றி, இல்லறவண்டி தடையின்றி நடை
பெயராது. மகானாகிய சிறுத்தொண்ட வள்ளலும், தமது
மனைவி மைந்தருடைய உதவியாலேயே கொடையறத்
தைத் தடையின்றி நடத்திப் பேறுபெற்றார். திருவெண்
காட்டு நங்கையாராம் அவ்வம்மையார், அவரோடு மன
வொருமை பூண்டு ஈர்த்ததனாலேயே, வைரவருக்குப் பிள்ளைக்
கறிபடைக்கும் பெருந்தொண் டென்னும் வான் சகடம்
தடைபடாமல் ஓடிற்று. சீராளன் என்னும் புதல்வனும்,
தந்தை குறிப்பின்படி சிந்தையின்றி நடந்து கொண்டா
னாகையால், அவ் விந்தையான வண்டி சிந்தை மகிழத்
திகழ்ந்தோடிற்று. மனைவி மைந்தர்மேல் உள்ளன்பு
செலுத்தி ஒருமைப்படினன்றி, பிறர் மேற்செலுத்தும் அறம்
சிறவாது. ஆகையால், இல்வாழ்க்கைக்குப் பெரும்பண்பா
வுள்ளது, அதாவது, அருங்குணமா வுள்ளது, அன்பே
யாகும். அகத்தில் அது வளர வளரப் புறத்தில் அதன்
பயனாகிய அறம் சிறந்தோங்கும். இது பற்றியே நாயனார்,
தமது திருக்குறளில்,

‘அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது’

என்றருளினார்.

அன்போடு கூடிய இல்வாழ்க்கையின் பண்பையும்
பயனையும் தெரிந்துகொள்ள வேறெங்கும் போகவேண்டிய



இல்லை. நாயனார் சரிதையையே நாடி யறியலாம்: திரு
மயிலையில் அவர், வாசுகி யம்மையாரோடு இல்லற நடாத்
திய காலத்தில், யாரோ ஒரு பெரியார் அவரிடம் வந்து,
“இல்லறம் பெரிதா, துறவறம் பெரிதா? எனக்குச் சந்
தேகமா யிருக்கிறது. தெரிவிக்க வேண்டும்” என்றார். அதற்
கிப் பெரியாரிற் பெரியார், ஒன்றும் மறுமொழி கூறாமல்,
மௌனங் கலகநாத்தி யென்று சும்மா விருந்தார். அக்
குறிப் புணர்ந்த பெரியார், ‘இவரோ நங்கவலை தீர்த்தற் குரி
யார்’ என்று நாயனாரில்லை விட்டு அகலாமல், அப்படியே
சமய நோக்கிக் காத்திருந்தார்.

ஒருநாள் வாசுகி யம்மையார், கேணியில் நீர் முகந்து
கொண்டிருந்தார். அப்போது நாயனார் அதி அவசரமாய்,
“வாசுகீ!” என்று தம் மனைவியைப் பேரிட் டழைத்தார்.
நிறைகுட நீரோடு அரை கிணற்றில் சேந்திக் கொண்டிருந்த
கயிற்றை அப்படியே, ‘சுட்டது சட்டி, விட்டது கை’ என்
பது போலப் பொட்டென விட்டுச் சட்டென, “இதோ
வந்தேன், வந்தேன்” என்று சொல்லிக் கொண்டே வல்
விரைந்து பரிந்தோடி வந்தார். அரை கேணியில் விட்ட
நிறைகுடம் கயிற்றோடு விட்டது, விட்டபடியே அசைவற்
றுத் தூங்கிக்கொண் டிருந்தது; பளுவாற் கீழிறங்கவு
மில்லை; அப்படி யிப்படி அசையவும் இல்லை. கண்டார்
அங்கு வந்திருந்த பெரியார். அதிசய முற்றார்! அவர்க்கே
அவ்வனுபவம் நன்கு விளங்கிற்று. கணவன் மனைவியர்
உள்ளன்புண்மை நிறைந்திருந்தால் இல்லறமே பெரி
தெனத் தெரிந்துகொண்டார். இன்னும் பார்ப்போம்
என்று அவர், பொறுமையோடு காத்திருந்தார்.

மற்றொரு நாள், பட்டப் பகலில் நாயனார், தாம்
நெய்து கொண்டிருந்த குழல் ஊசி நழுவிக் கீழே விழுந்த

போது, அதைத் தேடி யெடுக்க, "வாசுகி! விளக்கேற்றிக் கொண்டுவா. குழலைத் தேடவேண்டும்" என்றார். உடனே அவ்வம்மையார் விளக்குங் கையுமாய் அங்கே விரைந்தோடி வந்தார். கண்டார் பெரியார், "என்ன இது! அதிசயமாயிருக்கிறதே! பகலிலாவது விளக்கேற்றித் தேடவேண்டுமென்பதாவது! அவர் அப்படிச் சொன்னதை வேற்று மனைவியானால் தன் கணவற்குப் பித்தேறியதென்று பரிகசித்துப் பேசி யிருப்பாள். இவ் வம்மையார், அதைத் தேவ வாக்காகக் கொண்டு, விளக்கோடு விரைந்தோடி வந்தாரே! பதிபக்தி யென்றால் இதற்கே தகும். கணவனன்பு என்றால் இதுவே தக்கதாகும். இது இருக்குமேல், இல்லறமே பெரிது. இதற்கு முக்தித் துறவறம் துச்சமாகும். இன்னும் என்ன அதிசயம் பிறக்குமோ, பார்ப்போம்" என்று காத்திருந்தார்.

மற்றொரு நாள் அதிகாலையில் நாயனார், தாம் பழையது உண்கையில், "வாசுகி! விசிறி கொண்டுவா, பழையது சுடுகிறது" என்றார். உடனே அவ்வம்மையார் ஓலை விசிறியெடுத்துக் கொண்டு விரைந்தோடி வந்தார். கண்டார் பெரியார்; கவலை விண்டார்; "என்னே! இப்புதுமை இருந்தவாறு! பழையதாவது, சுடுகிறதாவது! அதற்கு விசிறி வேண்டுமென்றால், வேறொருத்தியானால் பைத்தியமென்று பரிகசித்திருப்பாள்! இப்புண்ணியவதி உள்ளன்புடையாளாகையால், கொண்டான் மனங்கோணாது, விசிறி கொண்டுவந்து விசிறினாள். இப்போது இல்லறம் பெரிதென்று நன்குணர்ந்தோம். எப்போது? காதலிருவர் கருத்தொத்து, ஆதரவு பட்டபோது. இது பற்றியே ஔவையாரும்,



'ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்து—ஆதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு'

என்று ஓதியருளினார். போதும், இம்மூன்று அத்தாட்சியே போதும். இன்னும் வேறு சாக்கியும் வேண்டுமோ! நாயனார் மகான் என்பதிற் சந்தேகமில்லை. 'இல்லறமா, துறவறமா பெரிது?' என்று நாம் கேட்டதற்கு, வாய் திறந்தொன்றும் பேசாமல், அவர் மௌனஞ் சாதித்திருந்தமைக்கு இதுவே காரணமாகும். சொல்லா லறிவிப்பதைக் காட்டிலும் அவர், தம் செய்கையால் தெரிவிப்பது சிறந்ததென் றுணர்ந்தார். விடைபெற்றுக் கொள்வோம்" என்று நீள நினைந்து, நாயனாரையும் அவர் மனைவியாரையும் வலம் வந்து வணங்கிப் போய்விட்டார்.

இன்னும் இப் பதிபக்தியின் பான்மை, நாயனார் அகத்திலேயே, அவர் மனைவியாராகிய வாசுகி யம்மையார் இறக்குந் தறுவாயில் இருந்தபோது நன்கு விளங்கிற்று:

அம்மையார்க்கு உயிர் கொஞ்சத்திற் பிரிந்து போகாமல், போவதும் வருவதுமாய்ப் பொந்தியில் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவர் கண்ணைத் திறக்கிறார். வாயை விரிக்கிறார். உதட்டை அசைக்கிறார். மறுபடியும் தூங்குபவர்போல அசைவற்றுக் கிடக்கிறார். மறுபடியும் கண்ணைத் திறக்கிறார். இப்படி அவர், நாயனாரைப் பார்த்தபடியே உயிர் போகாமல் இருந்தார். அது தெரிந்த இவர், "ஏனோ, இப்படி உனக்கு உயிர் ஊசலாடுகிறது?" என்று அம்மையாரை அதி ஆவலாய் வினவினார். அதற்கவர், "ஐயரே, தினந்தோறும் தேவரீர் உண்ணும்போது, நத்தங் குடுக்கையில் தண்ணீரும், ஊசியும் சமீபத்தில் வைக்கக்

கட்டளை யிட்டபடி, அடியாள் தவறாமற் செய்து வந்தேன். ஆனாலும் அதன் காரணம் விளங்கவில்லை; விளக்கி யருள வேண்டும்" என்று விநயமாய்க் கேட்டனர். அதற்கு நாயனார், "ஏ, மங்கையர்க்கரசி! எனக்கு நீ உண்பதற்குச் சோற்றை இலையி லிடுகையில், அது சிதறமாயின், ஊசியாற் குத்தித் தண்ணீரில் அலம்பிக் கொள்ளலாமென் றெண்ணியே அங்ஙனஞ் செய்வித்தேன். ஒருநாளும் நீ பதறவும் இல்லை; சிதறவும் இல்லை; உதறவும் இல்லை. அதனால், நான் அவைகளை உபயோகிக்கவில்லை. அதனால், அவைகளை வைப்பித்ததற்குக் காரணம் உனக்கு விளங்கவில்லை. இப்போது விளங்கிற்றா?" என்று விளக்கினார். உடனே, அம்மையார்க்கு உயிர் பிரிந்து போயிற்று. இதுவன்றோ, உள்ளன்பின் உச்சநிலை! இதைச் சிலர் அன்பன்று; அச்சமென்று வாய் மதம் பேசுவர். யார் எப்படிப் பேசினாலும், இதை நான் மட்டும் அன்பின் உச்சநிலை யென்றே உறுதியாய் உரைப்பேன். கொஞ்சமேனும் நாயகன் மனங் கோணாமல் நடப்பதற்கு இதுவே தக்க சான்றாகும். எந்தெந்த விதத்தில் நாயகன் மனங் களிக்குமோ, அந்தந்த விதத்திலும் கொஞ்சமேனும் பின் வாங்காமல் இதம் புரிவதே கற்புடை மனைவியின் உள்ளன்புக்கு ஒழுங்காகும். அன்றி, நாயகன் பொல்லாதவன். அவன் மனம்போல், நடவாவிட்டால் தண்டிப்பான் என்று அஞ்சி நடப்பது, கற்புடைமைக்கு ஒழுங்கன்று. உள்ளன்புக்கு அடையாள மன்று. அது பயத்தின் பாற்படும். அப்படி மனைவியைப் பயமுறுத்திப் பணிவிடை பெறுபவன் இல்லறத்துக்கு இசைந்தவன் அல்லன். அப்படி அவன் பயமுறுத்திப் பணிவிடை பெறும்படி மனைவி வாய்க்கப் பெறின், கூறாமற் சந்நியாசங் கொள்ளவேண்டு மென்பர் மேலோர். இது குறித்தே ஔவையாரும்,



'பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாகில்
கூறாமற் சந்நியாசங் கொள்'

என்றார்.

ஔவையார் சரிதையில் இது குறித்தே கதை யொன்று வழங்குகிறது. வெயிற்காலத்தில் அவ்வையார் ஒரு நாள் ஒருவன் வீட்டுத் தெருத்திண்ணையில் தங்கினார். அப்போதவர்க்குப் பசியுந்தாகமும் அதிகமாயிருந்தன. மிகவும் களைத்துச் சோர்ந்து படுத்திருந்தார். அவ்வக முடையான் ஈவிரக்கமுடையவன். ஏழைகளுக்கு இட்டுண்ண வேண்டுமென்னும் எண்ணமுள்ளவன். பெண்டாட்டியோ, பெரு நீலி; பசியென்று வந்தவரை உசி யென்று நாய்போற் குரைத்துத் துரத்துவாள். ஔவையாரைக் கண்டவுடனே அவன், "யார், பாட்டீ! களைத்திருக்கிறாயே! என்ன வேண்டும்?" என்றான். "ஐயனே! வேறொன்று மின்று. கொஞ்சம் அன்னமிட்டாற்போதும், பசி காதடைக்கிறது. தாகம் நாவறட்டுகிறது" என்றார். என் செய்வான், பாவம்? அதைக் கேட்டவன் பேய்போல் விழிக்கிறான். பிணம்போல் அசைவற்று நிற்கிறான். உள்ளே சென்றால், என்னாகுமோ என்று நடுங்குகிறான். ஆயினும் ஒருவாறு மனந்தேறி உள்ளேறினான். இல்வாழ் பேயைக் கண்டான். இதங் கூறினான். பையக் கையைப்பற்றிக் குந்த வைத்தான். தலைமயிரை அவிழ்த்து இதமாய் ஈருருவிப் பேன் பார்த்தான். "விருந்து" என்று வாயெடுத்தான். உடனே அவள் கையெடுத்து ஆடினாள். "உன் பவிஷுக்கு விருந்தொரு கேடா, போடா" என்று பாடினாள். முறமெடுத்துக்கொண்டு வந்து சாடினாள். அடி பொறாமல் அவன் ஓடினான்.

'இருந்து முகந்திருத்தி ஈரொடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினான் பாடினான் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடினான் தான்'

என்பது அதைக் கண்கூடாக் கண்ட ஔவை வாக்கு.

மறுபடியும் அவன் உள் நுழைந்து, பக்குவமாய் அவளோடு பேசிக் கொஞ்சம் அன்னமிடுவித்து, அதற்கெதிரில் ஔவையை உட்காருவித்துப் புசிக்கச் சொன்னான். அது கண்ட அம்மையார், இதை,

'காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணாக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லான் இட்ட அமுது'

என்று அவளுடைய அன்பில்லாமையைக் கணவன் மேலேற்றி, அன்பில்லான் இட்ட அமுது என்று பாடினார்; அதை உண்ண மனமில்லாமல், கையுதறி யெழுந்த ஔவையார் மறுபடியும் அவனை நோக்கி,

'சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே—தொண்டா
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்'

என்றார்.

"சண்டாளியாகிய சூர்ப்பநகையைப்போலவும், அவள் பாட்டியாகிய தாடகையைப்போலவும் உருவெடுத்து வந்த பேயைப் பெண்டாகக் கொண்ட தொண்டா! உன் வாழ்வும் ஒரு வாழ்வாயா? நீ நெருப்பிலே விழ்ந்திறத்தல் நேர்மையாம்" என்பதிதன் பொருள். பின்னும் அவர், அவனை நோக்கி, "கணவனுக்குகந்த மனைவி வாய்த்தால்,



வறுமையில் வாடினாலும் செல்வம் சிறந்தபடியாம். ஆகையால் எத்தனை துன்பம் அனுபவித்தாலும் அவளோடு கூடி வாழலாம். கொஞ்சமேனும் ஏறுமாறான மனைவி வாய்த்தால், யாரோடுஞ் சொல்லாமல், கணவன் அவளைத் துறந்து சந்நியாசியாய்ப் போய்விடுவதே தக்கதாம். ஆகையால் இப்போதே நீ துறவியாய்ப் போ" என்னுங் கருத்தமைத்து மேற்குறித்த முதற் செய்யுளையும் பாடினார்.

இன்னுமவர்,

"ஏசி இடுவதினும் இடாமையே நல்லது; எதிர்த்துப் பேசு மனையாளினும் பேயே நல்லது; உட்பகையைக் காட்டிலும், வெளிப்பகையே நல்லது. இப்படி நீ சங்கடப்படுவதைக் காட்டிலும் சாவதே நல்லது" என்னுங் கருத்தமைத்துப் பின் வருகிறபடி பாடினார்;

"ஏசி யிடலினி டாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்விலாச்
சங்கடத்திற் சாதலே நன்று"

இப்படிச் சொல்லிக்கொண்டே ஔவையார் அப்பால அகன்றார். அவ்வகமுடையான் எப்படியானானோ தெரியாது.

ஆகையால், இல்லற வாழ்க்கையே இன்புடைத் தென்று காண வேண்டுவான் எவனும், தன் மனைவியின் மேல் ஒத்த உள்ளன்பு கொள்ள வேண்டும். கொண்டான் குறிப்பறிந்து நடப்பவளாக அவளைப் பழக்கிக் கொள்ள வேண்டும். தாய் தந்தையரும் அவளை அதற்காகவே இளந்தையிலிருந்து பழக்குவிக்க வேண்டும். அன்பென்பது இயற்கையிலேயே ஒவ்வொருவ ரகத்திலும் ஊற்றெடுத்துப் பாயும் தண்ணீர் போன்றது. இந்தத் தெண்ணீராலேயே இன்ப நிலை வளர்ந்தோங்கும். இது பற்றியே தாயுமானாரும்,

'அன்பர் பணிநான் அருமையாய்ச் செய்துவந்தால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே'

என்று பாடினார். இங்கே அன்பர் பணியென்றது, தொண்டர் பணியை-இன்ப நிலையென்றது, பேரின்ப நிலையை-ஆனாலும், அன்பர் என்பதற்கு அன்புடையாரென்றும் பொதுப் பொருளுண்டாகையால், எல்லா அன்பிற்கும் சிறந்த அன்பாகிய இல்லற அன்பையே இங்கு நாம் கொள்ள வேண்டும். இந்த அன்பே கண்கூடாக் காணுமன்பு. இதுவே ஆண் பெண் அபேத நிலையன்பு. இதுவே மக்கட் பிறவியின் மாட்சிமையைக் காட்சியளவாய்க் காட்டுமன்பு. இதனாலேயே சிவனார் திருவுருவை, பாதிப்பெண் (அர்த்தநாரி) ணுருவாய்க் கற்பித்துக் காண்பித்திருக்கிறார்கள். அவரைப்பித்தாய்ப் பேசினாலும், ஆண் பெண் அபேத நிலைக் குறிகுறியாய்க் காட்டியிருக்கிறார்கள். சத்தியுஞ் சிவனும் சரியென்னும் சங்கேதம் அவருடைய பாதிப் பெண்ணுருவாகிய அர்த்தநாரீச சொரூபத்தில் விளக்கமாயிருக்கிறது. இல்லற வாழ்க்கையின் இன்ப நிலையை இதிலிருந்து யூகித்துணர வேண்டும். திருமூலரும் அன்பைப்பற்றிக் கூறினபோது,

'அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்திலார்
அன்பே சிவமா யாரும் அறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே'

என்றருளினார். திருமூலர் கூறியது பேரின்ப அன்பு என்று பேசுவார் தெரியாதார். சகசிவபரம் என்னும் மூன்றுக்கும் சம்பந்தம் இல்லாமல் இல்லை. ஆகையால் சிற்றின்ப வெற்றியே பராபரமெனக் கருதும் பேரின்ப நிலைக்கு வழிகாட்டியாம் என்று கொள்க. இந்து மதம் இக்கொள்கை பெற்றிருப்பதனாலேயே, உலகத்திலுள்ள வேறெந்த மதமும்



இதற்கு இணையாகாதென்று கொள்க. மற்றை மதங்களில் ஒவ்வொன்றும், உலகம் வேறு கடவுள் வேறு (சகம் வேறு பரம் வேறு) என்று அஞ்ஞான நிலையில் உண்மை தெரியாதுழல்கிறது. ஆனால், அது சொல்வதுமட்டும், "கடவுள் எங்குமுள்ளவர், அவர் இல்லாத இடம் இல்லை" என்று சொல்லளவாய் இருக்கிறதன்றிப் பொருள் அளவாயிராது. பிறகு அதுவே, "கடவுள் இவ்வுலகை ஆறு நாளில் உண்டாக்கினார்" என்று கடவுளை வேறாகவும் உலகை வேறாகவும் பிரித்துப் பேசி இருட்டில் உழல்கிறது. நம்மிந்து மதமோ அப்படியன்று;

'உலகமும் பல்லுயிரும் ஒன்றிநிறைந் தோங்கி
இலகுஞ் சிவனெம் மிறை'

என்றபடி உலகையும் கடவுளையும் அபேதமாய்ப் பேசுகிறது. இதுவே யார்க்குஞ் சம்மதமான மெய்ஞ்ஞான நிலையாகும். எங்கு நிறைந்த கடவுள் இவ்வுலகத்துக்குமட்டும் வேறாயிருந்து, இதை ஆறு நாளில் உண்டாக்கினாரென்றால், யார்தாம் ஒப்புவார்? தர்க்கமும் சட்டமும் திட்டமும் பலபற்பல சாத்திரங்களும் சூத்திரங்களும் ஆராய்ந்ததனாற் பலனென்னை?

'அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு'

என்னும் திருக்குறட் பயனைத் தெரியார், அன்பொழுங்கையென்றுந் தெரியாதாரேயாவார். இல்லற வாழ்க்கையே இன்புடைத்தென்று காண வேண்டுவார் அன்பை வளர்க்க வேண்டும். அனையிலாடி அம்பலத்திலாட வேண்டும் என்றபடி, இவ்வன்பை மனைவி மக்களிடத்திற் செலுத்தி வளர்க்க வேண்டும். இப்படி இதை வளர்த்தால்தான், பிறகிதன் பலனைப் பிறரும் அனுபவித்தற்கிடமாய் அறநிலை வளரும்-மறநிலை தளருமென்க.

இப்படி அன்பின் இருப்பே இன்பின் இருப்பென்று எல்லாருங் கண்டுணர்வதே, இல்லறவாழ்க்கையின் இன்ப நிலைக்கு வழி காட்டியாம். மனைவியோடு இருந்து, மக்கள் முதலியவர்கள்மேல் அன்பு பூண்டு, ஒற்றுமையாய் இல் வாழ்க்கையைச் செலுத்துபவன், அறவழியின் விலகாமல் விழிப்பாய் இருப்பான்.

"அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோ டிமனத் துறவுடையோன்'

என்னும் பெரியார் வாக்கின்படி, அறவழியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி நாயனாரைப்போல் மனத் துறவுடையவன், துறவறத்தை மேற்கொண் டிருப்பனைக் காட்டிலும் கோடிபங்கு சிறந்தவனாவான். இது குறித்தே நாயனாரும் தமது தெய்வத் திருமறையில்,

'அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்'

என்றார்.

"உண்மையாகவே ஒருவன், இல்வாழ்க்கைக்கு இயம்பிய அறத்தின் வழியே நின்று, பழிக்குப் பயந்து, தென்புலத்தார், தெய்வங்கள், விருந்தாளிகள், சுற்றத்தார், பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி முதலியோர்க்குப் பங்கிட்டுத் தானும் உண்டு, மனைவி மக்கள் மேலும் அன்புடையவனாய் நிற்பானானால், வீட்டைவிட்டுக் காட்டை அடைந்து, கடுந்தவம் செய்து அடையும் பயனைக் காட்டிலும் சிறந்த பயனை அடையல் ஆம்" என்பது இதன் கருத்து.

இப்போது இப்படி ஒருவரும் செய்வதே இல்லை. எங்கோ நாட்டுப் புறத்தில் இரண்டொருவர் இப்படி அரிதாய் இருந்தால் இருக்கலாம். இப்படி இருப்பதற்கு, இதற்கு முந்தி நாம் கூறியபடி பேராசை கூடாது.



கிடைத்த மட்டில் திருப்தி அடைந்திருப்பவனே இப்படி இருக்கக்கூடும். நகர்ப் புறத்தில் எவனுக்கும் பேராசை நெருப்பு எரிந்துகொண்டே யிருக்கிறது. கூலிக்காரன், குப்பைவாரி முதல், சட்டசபையில் இருப்பவன் வரையில் எல்லாரையும் பேராசைப் பேய் பிடர் பிடித்தாட்டுகிறது. சம்பாதிப்பதை யெல்லாம், போதாது போதாது, பற்றாது, பற்றாது என்று குடிக்கும் கூத்துக்கும், கள்ளுக்கும் சுள்ளுக்கும், காப்பிக்கும் கேப்பிக்கும், சூதுக்கும் வாதுக்கும், தாராளமாகவும் ஏராளமாகவும் செலவழிக்கிறான். அதிலும் மிஞ்சினால், பாங்கி யென்னும் பெரிய காசுக் கடையில் வட்டிக்குப் போட்டு ஆஸ்தியென்று வைக்கிறான்; நிலமேல் நிலம் வாங்குகிறான். பொய் வீடு கட்டி ஏழை எளியவர்களிடத்தும் அநியாய வாடகை வாங்குகிறான். நடைப் பிணம்போல மோட்டா ரென்னும் எண்ணெய் வண்டியிலும் வாகனத்திலும் ஏறிக் கெடுகிறான்.

"பொய்வீடு கட்டிப் புலால்வீட்டைப் போஷித்து
மெய்வீட் டினையிழந்த மேடங்காண்—பொய்வீடு
போவென்னு முங்கள் புலால்வீட்டை உண்பதற்கு
வாவென்னு நல்ல வனம்"

என்னும் மதுரகவியின் கருத்தைக் கவனிப்பான் ஒருவனு மில்லை. பொய் வீடுகளையே மேலு மேலுங் கட்டுகிறான். புலால் வீடாகிய தன் உடம்பை பருக்க வேண்டுமென்று கேவலமாகிய மது மாமிசங்கள், காப்பி கோக்கோ, மீன் முட்டை முதலிய அபத்திய பதார்த்தங்களையே அதிகமாகப் பண விரயஞ்செய்து வாங்கி உண்டு, அதைப் பன்றிபோல் கொழுக்க வளர்க்கிறான். இவனுக்கு உண்மை தெரிவது ஏது?

"முடிப்ப முடித்துப் பூசுவ பூசி
உடுப்ப உடுத்துண்ப வுண்டு—இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிகொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்"

என்பதுபோல், தான் முடிக்கவேண்டியதையும், பூசவேண்டியதையும், உடுக்கவேண்டியதையும், உண்ணவேண்டியதையுமே அதி அவசியமாய்க் கவனித்து, எத்தனையானாலுங் கடன் வாங்கியுஞ் செலவிட்டு முடித்தும், பூசியும், உடுத்தும், உண்டுங் காலங் கழிக்கிறான். ஏழைகள் வந்து என்ன வேண்டியும் காது கொடான். கண் விழித்தும் பாரான். பிணம்போற் கிடக்கிறான். ஆனால் பிணத்துக்கும் இவனுக்கும் ஒரே ஒரு பேதம் இருக்கிறது!—இவனுக்கு மூச்சு ஓடிக்கொண்டிருக்கிறது; அதற்கு மூச்சில்லை. இதுவே பேதம். இவன் பிறர்க்கென வாழானாயினும் தனக்கென வேனும் வாழ்கிறானா? இல்லை. இல்லை. இவன் தன்னையுங் கெடுத்துக் கொண்டு பிறரையுங் கெடுக்கிறான். இப்பேர்ப்பட்டவனை மகன் (மனிதன்) எனல்—மனிதன் என்று சொல்லாதேயுங்கள்; நெல்லிற் பதர்போல மனிதரிற் சொத்தை யென்று சொல்லுங்கள் என்கிறார் நாயனார். இப்படிப்பட்ட சொத்தைகளே ஆங்காங்கு நகரந்தோறும் நிரம்பி யிருக்கிறார்கள். இதுவே நகர வாசத்தில் இல்லறம் நடாத்தும் இயல்பு. இந்நகர வாசமென்னும் நரகவாசத்து மாந்தருடைய காற்றுத் தற்காலத்தில் நாட்டு வாசிகளிற் சிலர் மேலும் வீசுவதால், அவர்களும் கூசுவதின்றி மேற்குறித்த மூச்சுப் பிணங்களாய்க் காலந் தள்ளுகிறார்கள். தற்போது அவர்கள் வாழும் பொய்வீடு, அவர்களைப் போகவென்று வெளியே தள்ள விருப்பதை அவர்கள் கொஞ்சமேனும் எண்ணுகிறார்களில்லை. பொய் வீடு, போ என்று தள்ளுகிறபடி, அவர்களில் ஒவ்வொருவனையும் நல்ல



வனமாகிய சுடுகாடு, வாவென் றழைத்துக் கொளுத்திச் சாம்பராக்க இருப்பதையும் அவர்கள் நினைக்கிறார்களில்லை. அந்தோ!

"உன்னக் கருத்துண் டுரைப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு—முன்னமறைக்
கெட்டாத சோணகிரி ஈசரிரு தாள்பணிய
ஒட்டாது பாவம் உயர்ந்து"

என்றபடி, இவர்கள் முற்பிறப்பிற் செய்த பாவம் இவர்களை இப்படி அஞ்ஞான இருட்டில் அலைக்கழித் தாட்டுகிறது; பேராசைக் கடலில் வீழ்த்தி அழுத்துகிறது. அதனால், இவர்கள் எத்தனை வந்தாலும் பற்றாதென்று, நித்திய தரித்திரர்களாய்க் காலங் கழிக்கிறார்கள்—வாயிருந்தும் பேசாத ஊமையர்கள்போலப் பணமிருந்தும் மன நிறையாத அஷ்ட தரித்திரம் பிடித்தவர்களாய் அழிகிறார்கள்—தமக்கென வாழ்ந்து நாட்டை வறுமையாக்கி எமனுக்கு ஆட்களாய்க் கழிகிறார்கள்.

இப்படி ஆசாபசாசைத் துரத்த வகை யறியாத
மாக்களில் ஒருவனும் பிறர்க்கென வாழமுடியாது. பாதக்
கஞ் சகியாத பரமாத்மாவாய் வாழமுடியாது. தன்னுயிர்
போல மன்னுயிரை மதிக்கமுடியாது. இவர்களுக்கு அன்பு
என்ப தென்றும் அன்பு ஆகவே முடியும். இன்பு என்பது
இன்னதென்றே அறிதல் ஆகாது.

"என்பி லதனை வெயிற்போலக் காயுமே
அன்பி லதனை அறம்"

என்றபடி அறமே இவர்களை அரம்போல அராவி வாட்டிக் கொன்றுவிடும். இவர்கள் மேலே மதுரகவிகள் அறம்பாடி மறம் புரிவர். அதனாலும் இவர்கள் அகால வாழ்வில் அழிவர். இது குறித்தே ஔவையாரும்,

"கல்லா வொருவற்குத் தன்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்"

என்றார்.

இவர்கள் அல்லவையாகிய சுயநலக் காரியங்களையே செய்து வாழ்வதால், இவர்கள் வாழ்வு வெகு சுளுவில் தாழ்வாய் முடியும். இவர்களுக்கு அறமே மறமாய்க் கேடு சூழும். இவர்கள் பணம் பணமென்று சேமித்துக்கொண்டிருப்பதனால், பிரயோசனமின்றிப் பிணங்களாய்க் கழிவார்கள்.

இப்படித் துரியோதனன் செல்வத்தா லழிந்தது போல, அழிபவரோ தற்காலத்துப் போலிப் பணக்காரமாக்களாவார். இவர்களுக்கு வந்துற்ற செல்வப் பெருக்கை ஆற்றுப் பெருக்கென அறியாமல், இவர்கள் மோசம் போகிறார்கள்.

"ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மானிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீரும் வீறும் உயர்ந்து"

என்னும் உத்தம நீதியைத் தம் ஊழ்வினை வலியால் உன்ன மாட்டாமல் கெடுகிறார்கள்.

ஆகையால் இவர்களால் அறவழியில் இல்வாழ்க்கையை நடாத்த எப்படி முடியும்? முடியவே முடியாது. இது குறித்தே மகானாகிய காந்தியடிகள், வறுமையைப் போற்றி, அதைத் தாமே நுகர்ந்து, அதன் பயனைத் தெரிந்துகொண்டிருக்கிறார். அதனால்,

'பெற்றவட்கே தெரியும் அந்தவருத்தம்
பிள்ளைபெறாப் பேதை அறிவாளோ'



என்றபடி, ஏழைமக்களுக் கிரங்குகிறார். அவர்கள் பிழைக்கும் வகைதேடி உழைக்கிறார். இல்வாழ்க்கை அன்பின் இருப்பை உள்ளபடி உணர்ந்தாராகையால், அது கொண்டவர், தம்முயிரைப்போல் மன்னுயிரை மதிக்கும் மாண்புடன், அவர்களுக்கு இதஞ்செய்யும் அறனை வளர்க்கிறார்.

'அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்?'

என்னும் நாயனார் திருக்குறளைத் துலக்குகிறார். மற்றவர்களெல்லாம் அதைக் கலக்கி விலக்குகிறார்களன்றி, அதன் உண்மையைக் கெடுக்கிறார்கள். அதனால் அவர்கள் நிலப்பொறையாய், தம் மனச்சாட்சியைக்கொன்று நின்று போலி வாழ்வு வாழ்கிறார்கள்.

காந்தியடிகளைப்போல இல்வாழ்க்கையைத் தருமவழியிற் செலுத்துபவன், அதை விட்டுத் துறவியாய் வனம்போகத் துணியான். இல்வாழ்க்கையை அறவழியிற் செலுத்த வகையில்லாதவனே, அதைத் துறந்து வனம் புகுவான். அவனைப் பயங்காளியென்றே பெரியோர் குறைகூறுவார்கள். அப்படிப் பயங்காளியாய்ப் பணவாசையை விட்டுத் துறவியாய்ப்போனாலும் ஒருவாறு ஒப்பலாம். அப்படியும் இன்றி, இல்வாழ்க்கையையும் அறவழியிற் செலுத்தாமல், இரண்டுங் கெட்டான் பெருமையை நாம் என்னவென்று சொல்லுவோம்? இது பற்றியே உண்மைத்துறவியும் உத்தம யோகியுமாகிய சிதம்பர சுவாமிகளும்,

'இல்லறத்தா னல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லே னாயினேன்—* * *
போரூரா!
* * *
என்றோதா னீடேறு வேன்'

என்றார் என்க.

காட்டில் மனைவியோடுகூடித் தவம்செய்தல், மனைவியை விட்டுப்போய்த் தவஞ்செய்தல், கலியாணமில்லாமல் பிரமசாரியாகவே இருந்து தவஞ்செய்தல் ஆகிய மூன்று நிலையினும், நாட்டில் மனைவியோடிருந்து இல்லற நடாத்துவதே ஏற்றமானதாகும். அதுவே முதன்மையாம். ஏன்? முறையே வானப்பிரத்தனும் சந்நியாசியும் பிரமசாரியுமாகிய அவர்கள் மூவரும் காட்டில் படும்பாடு பெரும்பாடு. அங்கே பசிக்கு அன்னங்கிட்டுவதரிது. உறக்கஞ்சரியாய் இராது. ஊண் உறக்கம் அரிதானால், ஊன் ஒடுங்கவேண்டியது தானே? அவர்களுக்குப் பசிவரும் போதெல்லாம் இல்வாழ்வானை நாடி நாட்டுக்கு ஓடிவரவேண்டியதுதான். இல்வாழ்வானுக்கு இந்தக் கஷ்டம் ஒன்றும் இல்லை. சௌக்கியமாய்த் தன் பெண்டு பிள்ளைகளின்மேல் அன்பு செலுத்திப் பிறர்க்கென வாழ்ந்து பேரறம் புரியவேண்டியது தான். இவனில்லையேல், காட்டில் கடுந்தவமும் இல்லையாகும். இது குறித்தே தெய்வப் புலவரும்,

'இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை'

என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் முற்றத்துறந்த பரமயோகியாகிய பட்டினத்தடிகளும் பசிபொறாது நாட்டுக்கு வந்து பிச்சைக்காகக் கையைத்தட்டிப் பட்டபாடு பகரவும் வேண்டுமோ? இது குறித்தே இன்னும் சொன்னால், தவம் செய்வான் தானும் உண்ணாமல் பசிபொறுத்திருக்கிறான்; பிறர்க்கும் ஊட்ட வலியற்றவனாயிருக்கிறான். இல்வாழ்வான் இயல்பினால், தானும் தன் பெண்டுபிள்ளை ஆளடிமை மாடு மக்களும் வயிறாரவுண்பதன்றித் தென்புலத்தார் முதலியோர்க்கும் வானப்பிரத்தன் முதலிய தவசிகளுக்கும் வயிறார ஊட்டியுதவுகிறான். ஆகையால், தவஞ் செய்வாரையுக்



தாங்கித் தன்னையும் தாங்கிக்கொள்ளுகிற இல்வாழ்வானே, அவையிரண்டி லொன்றையுஞ்செய்ய வலியில்லாமல் தவஞ்செய்வாரைக் காட்டிலும் பொறுமையும் பெருமையும் உடையவனாவான். இது குறித்தே நாயனார்,

"ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து"

என்றார்.

இல்லறவாழ்க்கையே நல்லறவாழ்க்கை. அதுவே சாலவும் சிறந்தது. துறவற வாழ்க்கை யெந்நாளும் அபாயகரமானதாகும். ஐம்புலன்களையும் அதிசாக்கிரதையாய் அடக்கும் பயிற்சி, துறவிக்கு இன்றியமையாதது. சற்றுத் தவறினால் துறவி, நிலைபெயர்ந்து கலங்கநேரிடும். ஐம்புலன்களையும் ஐந்து குதிரைகளுக்குச் சமானமென்று சொல்லலாம்; உணர்ச்சியைச் சக்கரமென்னலாம்; அது கொண்டு செய்யும் ஆராய்ச்சியை வண்டியென்று வழுத்தலாம். இப்படிப்பட்ட ஐந்து குதிரை வண்டியை ஓட்டுகிற பாகனாகிய துறவி, உணர்வுடையவனாயிருந்தால்தான் துறவறங் கைகூடும். இதுபற்றியே பெரியாரும் தமது அறநூலில்,

'உணர்ச்சிஅச் சாக வுசாவண்டி யாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—உணர்ந்ததனை
ஊர்கின்ற பாகன் உணர்வுடைய னாகுமேல்
பேர்கின்ற தாகும் பிறப்பு'

என்றார்.

இப்படி வருந்தியுழைத்துச் செய்யும் துறவறவாழ்க்கை சற்றுப் பிசகினால் பழிப்புக்கிடமாகும். ஐந்து குதிரைகளில் ஒரு குதிரையேனும் பாகனிஷ்டப்படி செல்லாமல், வெருளுமானால், துறவறம் தொலைந்தது; அடியோடு கெட்டது என்னலாம். இல்லறத்தானுக்கு இந்தக் கஷ்டம் இல்லை. ஐந்து குதிரைகளையும் அவன், அவைகளிஷ்டம்போல்

மேயவிடலாம்; ஆனால், அவைகளை எந்நேரமும் அடக்கி வருத்தவேண்டு மென்பதில்லை. அவைகள் மேய்வதும் தன் சொந்த வயலிலேயே ஆகையால், இல்லறத்தானுக்கு யாதொரு கஷ்டமும் இல்லை. இதுபற்றியே நாயனாரும் தமது திருக்குறளில்,

'அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று'

என்றார்.

'சாதிபேதத்தையு மாதர்போகத்தையும்
தள்ளிவைத்ததே சமாதி'

என்ற முதுமொழி ஈரறத்தார்க்கும் இசைந்ததானாலும், இல்லறத்தான் நாட்டிலிருப்பதால், போலிச் சாதிபேதம் பாராட்டவந்தாலும். அவனுக்கென மனைவியிருப்பதால், மறு மாதர் போகத்தையும் மாற்றுவது சுலபம். இவ்விரண்டுங் கெட்டுக்காட்டில் வாழும் துறவி, இந்த விஷயங்களில் சர்வ சாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும். முக்கியமாய், அவன், மாதர் போகத்துக்குத் தப்பிப் பிழைப்பதே சாலச் சிறந்ததாம். முனிவராலும் மாதர் போகத்தை விலக்க முடியாதென்று கம்பர் முதலிய கவிகள் எத்தனையோ இடங்களிற் சொல்லியிருக்கிறார்கள். அவைகளில்,

'ஊக்க முள்ளத் துடைய முனிவரால்
காக்க வல்லது காமன்கை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது வல்லியின்
பூக்கொய் வாள்புரு வக்கடை போதுமே'

என்பதுவும் ஒன்று.

"முற்றத்துறந்த முனிவரெவரும், காக்கவேண்டியது, காமன்கைவில்லென்று சொல்லளவாயிருப்பதன்றி, உண்மையில் ஆராய்ந்து பார்க்கப்போனால், பெண்களின் புருவ வில்லையே அவர்கள் அதிசாக்கிரதையாய்த் தம்மேற் கட்பகழி



செலுத்த வொட்டாமற் பாதுகாத்துக் கொள்ளவேண்டி
யிருக்கிறது" என்பதிதன்பொருள். மன்மதன் உருவிலி;
அவன் வில் கரும்புவில்; கணை அரும்புக்கணை. அவைகளுக்கு
அஞ்சாமல் வெகு சுளுவிற் காத்துக்கொள்ளலாம். பெண்
களின் புருவவில்லும் கட்கணைகளும் உருவோடு தோன்றி
வருத்துவன. ஆகையால், அவைகளைக் காத்தால், காமன்
கைவில்லைக் காத்தபடியாம். காமனைக் கண்டதார்? சொல்
லளவாற் கேட்டதன்றி அவனைப் பார்த்தாரெவரும் இலர்.
பெண்களை நேரிற் பார்ப்பதால், அவர்களுடைய புருவவில்
விற்பிறக்கும் கட்பகழியைக் காத்துக்கொள்வதே வீர
மாகும். இப்படிக் காத்துக்கொள்ள வலியில்லாமையினா
லேயே இராவணன், தன் தவமுதலிய அவமாய் அடியோடு
அழிந்தான். இராவணன், வீரனேனும், சீதை விஷயத்தில்
அவன் நடந்துகொண்டது பேடித்தன்மையாகும். இரா
மனை, மாயமா னேவிப்பிரித்த பிறகே அவன், சீதை
யிடத்திற் செல்லத் துணிந்தான். கேவலம் காமங்கருதி
அவன், சீதை காலிற் படிந்து பணிந்து வேண்டினான்.
எத்தனையோ போர்களில் வெற்றியுற்று விளங்கிய வனேனும்
அவன், கேவலம் ஒரு பெண்ணாசை யென்னும் உருவிலிப்
பகைவனை வெல்லவலியின்றி முக்கோடி ஆயுளையும் பேரையும்
புகழையும் சீரையும் சிறப்பையு மிழந்து அழிந்தான்.

இப்படி வீராதிவீரனான இராவணாசுரனாலேயே காமன்
வில்லைக் காத்துக் கொள்ள முடியாமற் போனபோது,
அதற்கு முன்னே முனிவர் எம்மாத்திரம்? ஆகையால்
அவர்கள் ஐம்புலன்களை அதிசாக்கிரதையாய் அடக்கித் தம்
வசப்படுத்திக்கொள்ளவேண்டும். இது பற்றியே நாயனாரும்,

'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு'

என்றார்.

சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமுமாகிய ஐம்புலன்களையும் அடக்கியாள்பவனே உண்மை உலகு இன்னதென்று இலேசாய்த் தெரிந்துகொள்வான். அப்பேர்ப்பட்டவனுடைய துறவறமே பிறன் பழிப்பதில்லையாகும் என்றும் கொள்க. இதற்குப் பாரதப் போரில் வீஷ்மரை உவமானமாகக் கொள்ளலாம். இப்படி அருபொருளாய்த் துறவற நிலையைப் பெண்ணாசை விலக்கி விளக்கியவர் வீஷ்மர் ஒருவரே. இல்லற நிலையை விளக்கியவர் விபீஷணர் ஒருவரே யென்று சொல்லுவதற்கில்லை. திருவள்ளுவ நாயனார், சிறுத்தொண்ட நாயனார் முதலிய எத்தனையோ மகான்கள் இல்லற நிலையை விளக்கியிருக்கிறார்கள். இது பற்றியே, அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை என்று தேற்றேகாரத்தோடு தெளிவாய்க் கூறியிருக்கிறது. துறவறத்தை மட்டும் பிறன் பழிப்பதில்லையாயின், அதுவும் நன்று என்று உம்மை கொடுத்து ஒருவாறு இல்லறத்தோடு சேர்த்திருக்கின்றது. நாயனார் இல்வாழ்வாராயிருந்ததனால், துறவறத்தை இப்படி அதுவும் என்று உம்மை கொடுத்து இரண்டாவதாகப் பேசினார் என்று சிலர் யோசிக்கலாம். அப்படி யன்று. அவர்க்கு அக்கையாகிய அவ்வையார் இல்லற வாழ்வாகியா? அவரும் ஏன்

'இல்லற மல்லது நல்லற மன்று'

என்று இயம்பினார்? இவ்வம்மையாரே நான்கு விதமக்கட் பொருளைச் சுருக்கமாக ஒரு வெண்பாவில் விளக்கின போது,

ஈதல், அறம் என்றார்; தீவினை விட்டுத் தேடுதல் பொருள் என்றார்; உண்மை யன்போடு காதலரிருவர் மனமொத்துக் கூடி இல்லறஞ் செய்வதே இன்பம் என்றார்; இம் மூன்றையும் விட்டதே வீடு என்றார். விட்டதே வீடு என்பதற்கு இம் மூவாசையும் அற்றுப் பரனாசை யுற்றதேவீடு என்று கொள்க. வீடு என்னும் முதனிலை நீண்டதொழிற் பெய



ருக்கு ஆசை வீடு—ஆசை விடுதல் என்றே பொருள் கொள்ள வேண்டும். ஆகையால், ஆசை விடுபட்டுப் பரனை நினைந்து பரமபதம் பெறவேண்டுவார் ஒவ்வொருவரும் சோபான மார்க்கமாக் கொள்ளவேண்டிய நல்லறம் இல்லறமேயன்றித் துறவறம் அன்றெனத் தெளிந்து கொள்க. இதனால், இவ்வதிகாரத் தலைப்பெயராகிய 'இல்லற வாழ்க்கையே இன்புடைத் தென்றல்' என்ற தொடர், நிலைபெற்றமை காண்க.

இன்னும், "காமனை நாங்கண்டதில்லை. அவன் கைவில்லும் தெரியாது. அவன் சேனைகளாகிய பெண்களையே கண்களிற் காண்கிறோம். இவர்களுடைய புருவ வில்வளைவுக்குத் தப்பினால் போதும். இதற்குத் தப்பினால் அதற்குத் தப்பினபடியே யாம். இதற்குத் தப்பிப் பிழைப்பவரே சரியான முனிவராவார்" என்று மேற் குறித்த செய்யுளிற் கம்பர் சொன்னபடி, நாயனாரும், "மேலுலகத்தில் வாழும் தேவர்களை நாம் கண்டதில்லை. இல்வாழ்க்கையைத் தப்பற நடத்துபவன் இனித்தேவனாவது சாதம். ஆகையால் இவனை நாம் கண்ணிற் காண்பது தேவனைக் கண்டபடி யாம். சொல்லளவாய்க் கேட்பதன்றிப் பொருளளவாய்ப் பார்ப்பதற்கின்றி மேலுலகத்தில் வாழும் தேவனைக் காட்டிலும், சொல்லளவாலும் காட்சியளவாலும் இல்வாழ்க்கையிற் சிறந்து விளங்கும் பூவுறையுந் தேவனே சிறந்த தேவனாவான்" என்னுங் கருத்தமைத்து,

'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'

என்று இல்லற வாழ்க்கையின் இன்ப இலக்கணத்தை வியந்து புகழ்ந்தருளினார்.

இப்படிப்பட்ட இல்லற வாழ்க்கையை இன்புடைத்தாகக் காணவேண்டுவான் ஒவ்வொருவனும், ஆணும் பெண்

னும் அபேதம் என்றும், மக்கட்பிறவியே மாண்புடைத்தென்றும் நன்குணர்ந்துகொண் டிருப்பதனால், 'கற்புடைமனைவியே பொற்புடையாளெனல்' என்று அடுத்த அதிகாரத்தில் விளக்கமாய்க்காணலாம். அப்படிக்காணுமுன் அவன், இல்லற வாழ்க்கையைச் சீர்பெறச் செய்யவேண்டிய நீதியிலக்கணத்தைச் சென்ற அதிகாரங்களிற் கண்டபடி சிந்தையில் இருத்திக் கொள்ளவேண்டும். பிறர் மனைவியரைப் பெற்றதாய் போல் மதிக்கவேண்டும். பிறர்துயரத்தைத் தன்துயரேன் றெண்ணவேண்டும். பிறர் பொருளை வெறுக்கவேண்டும். பிறரைப்பற்றி யிழித்துரைத்தலாகாது.

இப்படி ஒவ்வொருவனும் ஒரே உறுதியாய்க் குறைந்த பக்ஷம் இருபத்தொரு பிராயம் வரையிற் பிரமசரிய நிலையில் நின்று கற்றுய்ந்தொழுகவேண்டும். இங்கே இருபத்தொரு வயதென்றது கடிமணப்பருவத்தை. இதைத்தற்கால அரசாட்சிச் சட்டத்தார் பதினெட்டாகவும் ஒப்பியிருக்கிறார்கள். ஏன்? நந் நாட்டுப்பழக்க வழக்கத்தின்படி. இன்னும் இதைப் பதினாறாகவும் குறைக்கவேண்டுமென்று சில கலை ஞானிகள் கூட்டங் கூடிப் பேசுகிறார்கள். இதைப்பதினாலாக்கினாலும் அவர்களுக்குச் சம்மதந்தான். சிலர் இதற்கு வயது வரையறையே வேண்டியதில்லை. அவரவர் இஷ்டம்போல் இன்னும் இளவயதாகிய பதின்மூன்று, பன்னிரண்டிலேயே கலியாணம் செய்து விடலாம் என்கிறார்கள். ஆணுக்குமண வயது இருபத்தொன்று என்று நாம் குறித்தபடி, பெண்ணுக்கு மணவயது பதினேழே சரியானதாகும். அதையும் மேற்குறித்த அரசாட்சிச்சட்டத்தார் பதினான்காகக் குறைத்திருக்கிறார்கள். ஏன்? மேற்குறித்த முதல் வகுப்புக்கலை ஞானிகள் கூட்டங்கூடிப்பேசித் தடுத்தனாலேயே யாம். அவர்கள், பெண்களின் மணவயது பன்னிரண்டாயிருந்தாலும்பற்றும் என்கிறார்கள். அவ்வளவு காலம் நீடிப்பதும் தப்பு;



எட்டு, பத்து, ஏழாயிருந்தாலும் பெண்களுக்குத் திருமணஞ் செய்யத் தக்க காலந்தான் என்கிறார்கள். முதலிரண்டாம் அதிகாரங்களிற் கூறியபடி, ஆணுக்கு இருபத்தொன்றும் பெண்ணுக்குப் பதினேழுந்தவிர அதற்குக் குறைந்த வயதிற் செய்யும் திருமணங்களெல்லாம் தெருமணங்களாகவே சீரழி யும். பழங்கலை ஞானிகள் இதை யொரு பதுமைமணமென்று மதிக்கிறார்கள். இப்பாத கண்டத்துக்கே அடுத்துள்ள இதை யொரு புதுமைமணமென்று புத்திமான்கள் புகல்கின்றனர். ஆகையால் இல்லற வாழ்க்கையை இன்புடைத்தாய்க் காண வேண்டுவோர் இக்கடிமணவயது விஷயத்தில் அதிக விழிப் பாய் இருக்கவேண்டும். இல்லையேல் பழிப்புக் கிடமாம். மேலே நாம் குறிப்பிட்டபடி பெண்களுக்குப் பதினேழென் னுந் திருமணவயது வருமட்டும் அவர்களைக் கன்னிமாடத் தில் வைத்துக் காக்கவேண்டும். ஆண்கள் எவ்வாறு இருபத் தொன்றென்னும் திருமணவயது வருமளவும் பிரமசரிய நிலையில் நின்று, கற்றுய்ந்தடங்கிக் குருகுல வாசம் பண்ண வேண்டுமோ, அப்படியே பெண்களும் கன்னிப்பருவநிலையில் நின்று, கற்றுய்ந்தொழுகிக் கன்னிமாடவாசத்திற் றிகழ வேண்டும். இவ்விருதாரத்தார்க்கும் ஐங்குரவராகிய மாதா பிதா குரு தமையன் அரசனாகியோர், மேற்குறித்த உத்தம நிலையில் மணப்பருவம் எய்துமட்டும் அவர்களைத் தக்ககாவ லோடு நிறுத்திப் போற்றவேண்டும். சாதிவேற்றுமை நீதி வேற்றுமைக் கிடம்பண்ணும். ஆகையால் இம்மண விஷயத்தில் சாதி வேற்றுமையே அறவொழியவேண்டும். இல்லற வாழ்க்கையை இன்புடைத்தாய்க் காண்பது, சாதி வேற்றுமையன்று. மன வொற்றுமை. ஆகையால், அதை யே பெருநோக்கமாக் கொள்ளவேண்டும்.

ஆண்கள் பிரமசரிய நிலையிற் பிறழாது நின்று கல்வி கற்கவும், தேகபலம் பெறவும், இருபத்தொருவயது வரை

பில் இன்புற்றுச் காலங் கழிக்கவும், பெண்கள் கன்னிப்பருவ நிலையில் நின்று கல்விகற்கவும், தேகபலமும் அழகும் பெற்றுத் திகழவும், பதினெழுவயது வரையில் உல்லாசமாய்க் காலங் கழிக்கவும் ஆங்காங்கு இடவசதிகளும் மடவசதிகளும் ஏற்படுத்த வேண்டும். இதற்காக நாட்டார் கூட்டங் கூடிப் பேசி, மேற் குறித்த வசதிகளைத் தத்தம்மக்களுக்குத் தாமே ஏற்படுத்திக் கொள்ளவல்ல பணக்காரர் தவிர மற்றையோர்க்கு அனுகூலமாகச் சுலபமான வழியிற்பொருள் சேகரித்து, தாபிக்கவேண்டும். இப்படிப்பட்ட உத்தம காரியங்களிற் பொருள் விரயஞ்செய்ய நந்நாட்டார், முன்வர வேண்டும். பெண்களுக்கும் அவர்கள் தேக நிலைக்குத்தக்கபடி கல்வியும் கைத்தொழிலும் தேகப் பயிற்சியும் சிறந்திருக்கவேண்டும். ஆகையால், பழங்கலை ஞானிகளின் வெறும் பேச்சுகளுக்குச் செவி கொடாமல், ஒவ்வொருவரும் தத்தம்மக்களை இல்வாழ்க்கைக்கு இன்புடையவர்களாக்க முயல வேண்டும்.

இப்படி இதிற்சொல்லியுள்ளவைகளைக் கவனித்துச் செய்கையளவாய்க் காட்டினால் தான், நந்நாட்டிற் பத்தாவுக்கேற்ற பதிவிரதைகளைக் காணலாம். அவர்களுக்குப் பிறக்கும் மக்களே நன்மக்கட்பேறாய் நாட்டுக்கு நலஞ்செய்ய வல்லவராவார்.

இல்லற வாழ்க்கையையே இன்புடைத்தாய்க் காண வேண்டும் ஒவ்வொருவரும் ஆணானாலும் பெண்ணானாலும் நந்நாட்டு நூல்களைக் கற்றாய்ந் தொழுக வேண்டுமன்றி, பிற நாட்டு நூல்களைக் கற்று அவைகளிற் கூறியுள்ள பழக்க வழக்கங்களுக்கு இடங்கொடுத்துக் கெட்டலையக் கூடாது.

தமிழர்கள் தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ளுவதற்கு அனுகூலமாகத் தமிழ் நீதி நூல்களையும் சங்க நூல்களையும் புராணேதிகாசங்களையும் தப்பற ஓத



வேண்டும். நீதி நூற்களில் ஆத்திசூடி முதல் திருக்குறள் ஈறாகவுள்ள ஒவ்வொன்றையும் ஓதி யுணர்ந்து மனந் திரும்ப வேண்டும். அங்கிலம் முதலியவைகளை முதற் பாஷையாகப் பயிலக்கூடாது. தமிழ் நாட்டார் தெலுங்கு கற்கலாம். தெலுங்கர் தமிழ் ஓதலாம். கல்வியளவாலேயே ஊதியம் பெற்றுப் பிழைக்கலாம் என்னும் குருட்டு நம்பிக்கையை அகற்ற வேண்டும். ஒவ்வொருவரும் ஆணானாலும் பெண்ணானாலும் ஏதாவதொரு கைத்தொழிலைக் கற்க வேண்டும். கைத்தொழிலே பிழைப்புக்கிடமென்றும் எழுத்துக் கல்வி நன்னடக்கைக்கும் நீதிக்கும் ஒற்றுமைக்கும் அறிவுக்கும் உண்மைக் கடவுளன்புக்கும் இடமென்றும் தெரிந்து கொள்ள வேண்டும். யார் யார்க்கு எவ்வெக் கைத்தொழிலிற் பிரியமோ, அதை யுணர்ந்துகற்பிக்க வேண்டும். இப்போது வகுப்பு வாரியாய்த் துரைத்தனக் கல்வி கற்பிக்கப் படுவது போலவே, கைத்தொழிற் கல்வியையும் பயிற்றுவித்தல் ஆகாது. நியாயவாதி மகன் நியாயவாதியாகவே இருக்க வேண்டுமென்பதும், வாத்தியார் மகன் வாத்தியாராகவே இருக்கவேண்டுமென்பதும் உகந்ததன்று. நியாய வாதம் என்பது ஒரு தொழிலே அன்று. வாத்திமையையாவது ஒரு தொழிலாகச் சொல்லலாம். வாத்தியார்க்கும் ஏதாவதொரு கைத்தொழில் தெரிந்திருப்பது நல்லது. முற்காலத்தில் வாத்திமார், ஓலையில் பாய், தடுக்கு, மலர் மடல் முதலியவைகள் முடையக் கற்றிருந்தார்கள். இன்னும் அவர்கள், நெசவுத் தொழிலிலும் வல்லவர்களாயிருந்திருக்கிறார்கள். நெசவுத்தொழில் செய்தபடியே அவர்கள், பிள்ளைகளுக்குங் கல்வி கற்பித்துவந்தார்கள். ஆகையால், பிள்ளைகளும் அத்தொழிலை இலேசாய்க் கற்றிருந்தார்கள்.

இக் காலத்தில் ஆண் பெண் இருபாலாரும் இத் தொழிலை ஏற்றமானதாக்கொள்ள வேண்டும். திருவள்ளுவ

நாயனாரை ஒவ்வொருவரும் பின்பற்றவேண்டும். எல்லாரும் நோவாமல் நோன்பு நோக்கிறபடி நகத்தில் அழுக்குப்படியாமல் ஆயிரம் ஆயிரமாக் குடிகள் பணத்தை மாதச் சம்பளமாப் பெற்றுக் கொள்ளவேண்டு மென்றும், வழக்கு மூலமா நீதி வாதஞ்செய்து ஆயிரமாயிரமாப் புரட்டி விடவேண்டு மென்றும் எண்ணித் தாமும் ஏழைகளாய்க் குடிகளையும் ஏழைகளாக்கி விடக்கூடாது.

கைத்தொழில்கள் பலவற்றினும் நெசவுத்தொழிலே ஏற்றமானது. இதைப் பற்றி ஆங்காங்கு உயர்வாகப் பேசவேண்டும். மேற் குறித்த பிரமசரிய மடத்திலும் கன்னிமாடத்திலும் நெசவுத் தொழிலைக் கட்டாயக் கைத்தொழிலாகக் கற்பிக்க வேண்டும். உழவுத்தொழிலை ஆண்களுக்கே உத்தமத் தொழிலாகக் கற்பிக்க வேண்டும். இது போலவே பெண்களுக்கு நூல் நூற்குந் தொழிலும் சாயம் போடுந் தொழிலும் கூடுமானால் நெசவுத் தொழிலும் கட்டாயமாய்க் கற்பித்தாக வேண்டும்.

இல்லற வாழ்க்கையே இன்புடைத்தாகக் காணவேண்டுமானால், எழுத்துக் கல்வியோடு கூடவே உழவுத் தொழிற் கல்வியும் நெசவுத்தொழிற் கல்வியும் கற்பிக்க வேண்டும். அந்தக் காலத்திலும், "ஆதாம் உழுதான், ஏவாள் நூற்றாள். ஒருவனும் பெரிய மனிதனென்று நகத்தில் அழுக்குப் படாமல், பிறர் உழைப்பாற் பெருகிய பணத்தை ஆயிரம் ஆயிரமாக அடித்துக்கொண்டு போகவில்லை" என்னும் கருத்தமைந்த பின் வருஉம் ஆங்கிலக்குறள் வழங்கி வந்திருக்கிறது:

'When Adam tilled and Eve span
Who was then a gentleman'



'அந்தக் காலத்தில்,
ஆதாம் உழுதான் ஏவாள் நூற்றாள்
பெரிய மனிதன் யாவன்?'

என்பதே அது.

'ஓதுவானெல்லாம்
உழுவான் தலைக்கடையில்'

என்னும் நந்நாட்டுப் பழமொழியும் இதற்குச் சான்று பகரும். இப்போதும் இது தப்பறப் பலித்திருக்கின்றது. நகரவாசத்திலிருப்போர்க்கு இது நன்கு விளங்காது. நாட்டுப்புறங்களிற் போய்ப் பார்த்தால் இந்தப் பழமொழியின் இரகசியம் வெளியாகும்.

ஆகையால், பயிர்த்தொழிலே உயிர்த்தொழி லென்றும், நெசவுத்தொழிலே உடற்றொழி லென்றும் உத்தமக் குடிகள் உணரவேண்டும். பயிர்த்தொழிலாகிய உயிர்த் தொழிலை ஆண்மகனும், நெசவுத்தொழிலாகிய உடற்றொழிலைப் பெண்மகளும் தத்தம் குலத்தொழி லெனப் போற்ற வேண்டும். இவைகளிலிருந்தே வர்த்தகத்தொழில் சிறக்கவேண்டும். வர்த்தகத் தொழிலையும் எல்லாரும் சாதி வேற்றுமையின்றிக் கைக்கொள்ள வேண்டும். உழவாலும் நெசவாலும் வரும் ஊணிலும் உடையிலும் தத்தமக்கு வேண்டிய அளவைக் கைக்கொண்டு, எஞ்சியதால் ஒவ்வொருவரும் பண்டமாற்றாகிய வர்த்தகஞ் செய்தே தீரவேண்டும். ஆகையால் எல்லாரும் வர்த்தகர்களாவது இன்றியமையாததாகும்.

இதை விட்டு வீணாய்ச் சாதி வாரியாய்ப் பிரிந்திருக்கும் தொழிலுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை யென்று மேற் குறித்த உயிர்த்தொழில் (பயிர்த்தொழில்—ஊண்தொழில்) உடற்றொழில் (நெசவுத்தொழில்—உடைத்தொழில்) இரண்

டையும் பெரும்பாலும் கல்வி யறிவற்ற ஏழைகளுக்கே விட்டிருப்பதால், இல்லறவாழ்வு இன்புறாமல், அன்பற்ற யாக்கை போல் துன்புறுகிறது. இனி இல்வாழ்வானுக்கு வேண்டிய இடம் பொருளேவல்களைப் பற்றிப் பேசுவாம்:

இல்லற வாழ்க்கையே இன்புடைத்தென்றல் என்று காண வேண்டுவான் ஒவ்வொருவனும் மேற் குறித்தபடி

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'

என்று மனைவி மக்களிடத்து அன்பு செலுத்திப் பழகப் பழகத் தென்புலத்தார் துறவிகள் முதலியோரிடத்தில் அருள் செலுத்தி அறஞ் செய்யவல்லவனாவா னென்பதற் கையம் இல்லை.

இதற்கு இடவசதி, இன்றி அமையாதது. இதற்கு நகரவாசமே நலமுடைத்தன்று. நாட்டுவாசமே சாலச் சிறந்ததாகும்—மேற் குறித்தபடி இருபத்தொரு வயதளவும் பிரமசரியத்தைப் பெரிய விரதமாக் காத்து, தன்னைப் போலவே கன்னிமாட விரதத்தைக் கவனத்தோடு காத்திருந்த பதினேழு வயதுக் கன்னிகையைக் கடிமணம்புரிந்த ஒருவன், கவலையற்றுத் தன்னைப் பெற்றோர் உற்றோரோடு கூடி வாழ்வதற்கு நாட்டுவாசமே எந்நாளும் மேட்டிமையாகும். நகரவாசம் எந்நாளும் நரகவாசம் என்பதற் கையமில்லை. நகரமென்பது ஆசைக் களஞ்சியம்; பேராசைப் பேய்கள் வாழுமிடம். இல்லற வாழ்க்கையை இன்புடைத்தாக் காணவேண்டினான் எவனும் நகரவாசத்தைப் பூலோக நரக வாசமென்று ஒதுக்கி விடவேண்டும். ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரங்கள் செறிந்த நகர வாசத்தில் இல்லற வாழ்க்கையை இன்புடைத்தாக் காண வேண்டினவனும் சேர்ந்தானானால், அவைகளோடிவனும் ஒரு பம்பரமாய்த் தொம்பரக் கூத்தாட வேண்டியவன்தான்.



பொறாமைப் பேய், இவனைப்பிடித்து ஆசைக் கயிற்றிற் சுற்றி அதிவேகமாய் ஆட்டும். இவன் ஆடி ஆடி அந்த மயக்கத்தால் எதை எதையோ, தன்னலங் கருதியே நாடி நாடிப் பிறனுடைய தீமையையே தேடித் தேடி.

'ஓடி ஓடி ஓடி ஓடி உள்ளங்கால் வெளுத்ததும்
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்ததும்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மானிடர்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே'

என்றபடி தனக்கும் தன்னைச் சேர்ந்த பெண்டு பிள்ளை முதலியோர்க்கும் யாதொரு நன்மையுமின்றி இகத்திலேயே நரக வாசம் பண்ணி நாசமாவான். வீண் டம்பாகாரப் போலிச் சுகாதாரமாகிய பொய்ப் பொருளை ஒருகால் இவன் ஏராளமாய்க் குவித்து வைத்து விட்டுச் செத்தாலும், அதனால் இவன் குடும்பத்தாரேனும் சீர் அடைகிறார்களா? இல்லை, இல்லை; அவர்களும் இவனையே பெரும்பாலும் பின் பற்றித் தந்நலங் கருதிப் பொறாமைக் கோட்பட்டுக் கெடுகிறார்கள். ஆகையால், நகர வாசமே வேண்டாம். இப்போதும் இச் சென்னையில் பெரும்பாலும் குடி இட வசதியின்றியும், குடி நீர் வசதியின்றியும், காற்றோட்ட மின்றியும், சுத்தமான பால் தயிர் நெய் காய்கறி முதலிய உணவுப் பொருள் வசதி யின்றியும், கைப்பொருளொன்றையே பெறும் பொருளிற் பெரும் பொருளா எண்ணி வாழும் ஆறிலக்ஷம் ஜனங்களும் நாட்டு வாசம் பண்ண வேண்டுமானால் ஆகாத காரியமா? வெகு சுளுவில் ஆகும். பொறாமைப்பேயை ஓட்டவேண்டும். அதற்குக் காந்தி மகானைப் போன்ற பூசாரிகள் செபிக்கும் மந்திரங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவைகளை எந்நேரமும் உருப்போட்டுக் கொண்டேயிருந்தால், பொறாமைப் பேய், தானாகவே விலகி ஓடும். தன்னலம் பாரிக்கும் சடாமுனி

அஞ்சி அகலும். ஆசைக்கயிறு பட்பட்டென்று அறுந்து விழும். பிறர் நலம்பேணும் பெருங் கடவுட் குணானுபவம் தலைசிறக்கும். மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கின சிபிச்சக்கரவர்த்தியின் பெருந் தன்மையாகிய பிரம ஞானம் ஓங்கும். மக்களாய்ப் பிறந்தும், தம்மைத் தேவாமிசமாகவும், தம்மைப் போன்ற பிறமக்கட் பிறவியை மாக்களெனவுமதித்து, உள்ள முருகாத கன்மனக் கன்மஞானம் நீங்கும். பிறர் நலம்பேணும் பெருங் குணானுபவத்துக் கனுகூலமான மேற்படி காந்தி மந்திரோச்சாடனத்திற்கு எந்நாளும் நகரவாசம் உசிதமானதன்று. காந்தி மகான் உபதேசிக்கும் மந்திரம் என்ன? "உணவுக்கு உன் கையாலேயே 'உழைப்பவன் பிழைப்பவன்' என்றபடி உழுது பயிரிட்டுத் தானியந் தேடிக்கொள். உடைக்கு உன் மனைவி கையாலும் உன் கையாலுமே நெய்து, உருவாக்கி ஆடை தேடிக்கொள். பொய்ப் பொருளை அளவுக்கு மிஞ்சித் தேடிச் சேர்த்து வைக்க வேண்டுமென்று பொருமைப் பெரிய சாலையிலிருந்து பிரியும் தன்னலம் பாரித்தலென்னும் சந்து வழியில் நுழைந்து வருந்தாதே. எப்போதும் பொறுமைப் பெரிய சாலையிலிருந்து பிரியும் பிறர் நலம் பேணலென்னும் நேர் வழியில் நுழைந்து சங்கடந் தீர்வதிலேயே நோக்கமாயிரு. இப்பாரத கண்டத்தில் உன்னோடுடன்பிறந்த ஒரு தாய் மக்களிற் சிலரை, தீண்டாதவரென்றும் வேண்டாதவரென்றும் வெறுத்து விடாதே. அவர்கள் வேண்டாதவரென்றால், எதற்கும் வேண்டாதவராகவல்லவோ இருக்கவேண்டும்? அவர்கள் உன் வயலைத் தொடலாம், தானியத்தைத் தொடலாம், மாட்டைத் தொடலாம், கலப்பையைத் தொடலாம், கயிற்றைத் தொடலாம், களஞ்சியத்தைத் தொடலாம், போரைத் தொடலாம், ஊரைத் தொடலாம்,



மாட்டோடு மாடாயிருந்து உழைக்கலாம். ஆனால், உன் வீட்டைத் தொடக்கூடாது. ஒரு வேளை தெருத்திண்ணையைத் தொட்டாலும் நடையிற் காலை வைக்கக்கூடாது. வைத்தால், வந்தது தீட்டு. சுத்தம் பண்ண ஐயர் வரவேண்டும். ஐயருக்கு அரை அணா தக்ஷிணை கொடுத்தால் தீட்டுப் போய் விட்டது. அவர்கள் உன் பச்சை நெல்லைத் தொடலாம். நீ முதல் வகுப்பானாயிருந்தால், அவர்கள் உன் பச்சரிசியைத் தொடக்கூடாது. நீ பிறவகுப்பானானால் அவர்கள் உன் பச்சரிசியைத் தொடலாம், புழுங்கலரிசியைத் தீண்டக் கூடாது. உனக்காக அதை அவர்கள் மாடாட்டக் குற்றலாம்; தொடாமற் குற்றவேண்டும்; உன் பசுமாட்டைத் தொடலாம்; பாலைத் தீண்டக்கூடாது. நீமட்டும் பிரமாவின் முகத்திலோ, புஜத்திலோ, தொடையிலோ, பாதத்திலோ பிறந்தாய். அவர்கள் எதிலிருந்தும் பிறக்கவில்லை. எங்கிருந்து பிறந்தார்கள்? நீயே எண்ணிப் பார். யோசனைகள் பண்ணிப்பார். உன் வாயிலிருந்து தீண்டாதவரென்று பிறந்தார்களா? அப்படித்தான் ஆயிருக்க வேண்டும். பிரமாவுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமே இல்லையே! பிரமாவினுடைய மூச்சிலிருந்து பிறந்தார்களென்றாலும், சம்பந்தம் ஏற்பட்டு விடுமே! என்ன சொல்லுவாய்? காட்டுப் பூச்சிகளென்பாயோ? காட்டுப் பூச்சிகளையும் பிரமாதானே உண்டாக்கியிருக்க வேண்டும்! உன் வீட்டு மாட்டைவிடவா, அவர்கள் தாழ்ந்திருக்கிறார்கள்? உன் வீட்டுக் கேணியில் மாடு வாய்வைத்துத் தண்ணீர் குடிக்கலாம், நாயும் நக்கலாம். தீண்டாதவர் பாத்திரத்தில் முகந்தாலும் வந்தது தீட்டு. கேணியே கெட்டது. தண்ணீரையெல்லாம் இறைத்துவிடவேண்டும். வேறு தண்ணீர் சுரக்கவேண்டும். இதெல்லாம் பட்டணத்துக் குழாயில் பரவா

இல்லை. பட்டணத்து மீன் கடையில் தீண்டாதவரையுந் தீண்டிக்கொள்ளலாம். பட்டணத்து மாக்கறிக் கடையில் பார்ப்பானுக்கும் பறையனுக்கும் தீட்டுப் பாதகம் இல்லை. புகைவண்டி, மின்சாரவண்டி, எண்ணெய் வண்டி (Motor) இவைகளிலும் பறைத்தீட்டு இல்லை. இறங்கினவுடனே ஓரே ஒரு முழுக்குப் போட்டால் எல்லாம் ஓடிப்போய் விடும். அதுவும் தண்ணீர் அகப்படாவிட்டால் வேண்டியதில்லை. அந்தக் கஷ்டம் கடவுளுக்குத் தெரியாதா? உன் வீட்டில் மாடு செத்தால், பறையன் வரவேண்டும். அதை அவன் தோலோடு புதைத்துவிடக் கூடாது. உன் காற் செருப்பு முதலியவைகளுக்குத் தோல் தந்துவிடவேண்டும். கறியை அவன் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். உன் காலால் பறையன் தொட்ட தோலை மிதித்தால் தீட்டில்லை. இப்படியும் இருக்குமா? காலமெல்லாம் பசு மாட்டின் பலனை நீயே நேரில் அனுபவித்து, அது செத்த பிறகு அதை அருமையாய்ப் புதைக்க நீயே உன் கையால் அதற்குச் சமகிரியை செய்யாமல், பிறன் கையில் விடலாமா? பசுவை நீ காமதேனு என்கிறாயே! அதைப் பறையன் தொடவிடலாமா? நன்றாய் நிதானி. இப்போதாவது தீண்டாமைப் பேயை ஓட்டு. ஆறுகோடி மக்களை மக்களாகவே கொள். அவர்கட்குச் சுகாதார வழிதேடு. நீ பிரமசரிய நிலையில் நிற்கவேண்டியபடி அவர்களையும் அதில் நிற்கத் தூண்டு. உடற்சுத்தம், உடைச்சுத்தம், உயிர்ச் சுத்தமாகிய மனச்சுத்தம் அவர்களுக்கு உண்டாகும் வழியைத் திறந்துவை. இதுவே நீ பிறர் நலம் பேணும் துறையிலிறங்கவேண்டிய முதற்படி.'' இதுவும் இதுபோன்ற பிறவுமே காந்திமகானுடைய நல்லுபதேச மந்திரங்களாம். மருந்து நோயாளிக் குபயோகமாவதுபோல, தாழ்த்தப்பட்ட வகுப்பாரையே நாம் முதலில் கவனிக்கவேண்டும்.



அவர்களைத் தாழ்த்தியவர்களே உயர்த்தவேண்டும். சாபமிட்டவர்களே விமோசனம் தேடவேண்டும். முனிவர்கள் சபித்தால், அவர்களே விமோசனம் சொல்வது வழக்கமென்று எல்லார்க்குந் தெரியும். ஆகையால் நாம் ஆறுகோடி மக்களைத் தீண்டாதவரென வொதுக்கி, ஏனோ, பக்கபலமின்றி வருந்தவேண்டும்?

இல்லற வாழ்க்கையை இன்புடைத்தாக்காணவேண்டியவன் இப்படித் தாழ்ந்த வகுப்பினரை உயர்த்தும் முதற்படியில் வெகு சுளுவில் இறங்குவதற்கு நகரவாசத்தையும் நாட்டுவாசமாக்கிக்கொள்ளவேண்டும். எத்தனைதான் தகப்பன் தேடிவைத்த பொருளிருந்தாலும், பெரிய பெரிய மாடி வீட்டிலிருக்கவேண்டுமென்றும், அதனாலேயே தன்னை அன்னியர் பெரிய மனிதனென்று பேசினாற் போதுமென்றும் குருட்டு நம்பிக்கைக்கு இடந்தரப்படாது. திருவள்ளுவநாயனாரைப்போலவும் காந்திமகானைப் போலவும் குடிசை வீட்டிற் குடியிருக்கப் பழகவேண்டும். அதற்குப் பணமே தேவையில்லை. தந்தை தேடின தொகையிருந்தால் அதை ஏழைகளின் இடவசதி முதலியவைகளுக்கு வழங்கிவிடவேண்டும்.

'பெண்விழைந்து பின்செலினுந் தன்செலவிற் குன்றாமை
கண்விழைந்து கையுறினுங் காதற் பொருட்கின்மை
மண்விழைந்து வாழ்நாள் மதியாமை இம்மூன்றும்
நுண்விழைந்த நூலோர் செயல்'

இந்தச் சங்கச் சங்கில் கலந்துவைத்திருக்கு மருந்தே காந்திமகானுடைய மந்திரோபதேசச் சாரமாகும். எத்தனையோ நூறாண்டுகளுக்கு முந்தியே இம்மருந்தை இல்வாழ்வானுடைய தன்னலம் பாரிக்கும் பேராசைப் பெருவியாதிக்குத் தக்க மருந்தென்று நந்நாட்டுப் பண்டிதர்கள்

கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். இதுவொரு பெரிய திருகடுக மருந்தாகும். பிறன் மனை நோக்காத பேராண்மையே முதலாவது கடுகமாகிய சுக்குக்குச் சமானமானது. அதனால் 'பெண் விழைந்து பின் செலினும் தன் செலவிற் குன்றாமை' என்றார். இவனே காமாதுரனாய்ப் பெண்ணைத் தேடிச் சென்றால்தான் தோஷம், பிறன் மனையாகிய அவளே இவனைத் தேடிவந்தால் தோஷமில்லை என்றெண்ணி ஒருவின் அதற்கு இடங்கொடுத்துக் கெடப்போகிறானென்பதனாலேயே, அவளே இவனைத் தேடி வலியவந்தாலும் இவன் தன் அறவழிச் செலவில் தப்பக்கூடாதென்றார். இதை உடல் நோய்க்குச் சுக்கை மதிப்பதுபோல், முதன்மையாக ஒவ்வொருவனுங்கொண்டு தனிமனை நோன்பு (ஏகபத்தினி விரதம்) பூண்டொழுக வேண்டும். இதுபற்றியே நாயனாரும் தமது தமிழ்மறைக் குறட் சுலோகத்தில்

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்(கு)
அறனொன்றோ ஆன்ற வொழுக்கு'

என்றார்.

"பிறன் மனைவியைக் கேவலங் காமவின்பங் கருதி நோக்காத பெரிய வீரமானது சான்றோர்க்கே உரியது. அதனால் அவர்கள் அறவழியிற் றிறம்பாதவரென்பது ஒன்று மட்டும் அன்று; உயர்குல வொழுக்கத்துஞ் சிறந்தவரென்றபடியாம்" என்பதிதன் கருத்து. இல்லறத் தூய்மையிற் சிறந்தவர்க்கு இதுவே முதற் குணமாம். பிறன் பொருளை உள்ளத்தாலும் உள்ளாத உத்தம குணமே, இரண்டாவது கடுகமாகிய திப்பிலிக்குச் சமானமானது. அதனால் "கண் விழைந்து கையுறினும், காதல் பொருட்கின்மை" என்றார். இவனே பொருளைத் தேடிச்சென்று திருடினால்தான் தோஷம், அதையே வேறெவனேனும் அபகரித்துக்கொண்டு வந்து கொடுக்க வாங்கிக்கொண்டால், தோஷமில்லை என்



றெண்ணி, ஒருவன் அதற்கு இடங்கொடுத்துக் கெடப் போகிறானென்பதனாலேயே, 'கண்விழைந்து கையுறினும் காதற் பொருட்கின்மை, அதாவது பிறன்பொருள், இவனைத் தேடி வலியவந்து கையில் விழுந்தாலும், அதை இச்சிக்கக் கூடாது' என்றார். இதை உடல் நோய்க்குத் திப்பிலியை மதிப்பதுபோல, இரண்டாவதாக ஒவ்வொருவனுங்கொண்டு, பிறன் பொருளை எட்டியென்று பேசிய பீமசேனனைப்போலவும், புதையலைக் கண்டு, ஆட்கொல்லி யென்றஞ்சி யோடிய சந்நியாசியைப் போலவும் நிராசை விரதம் பூண்டு வாழ வேண்டும். இது குறித்தே நாயனாரும் தமது தமிழ் மறைத் திருக்குறட் சுலோகத்தில்,

'உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்'

என்றார்.

"எந்தக் குற்றத்தையும் செய்தால்தான் பாவமென்பதில்லை; அதை நினைத்தாலும் பாவம். ஆகையால் பிறன் பொருளைக் களவு செய்ய நினைப்பதுந் தவறாம்" என்பதிதன் கருத்து. இல்லற வாழ்க்கை நலத்திற் சிறந்தார்க்கு இதுவே இன்றியமையாத இரண்டாங் குணமாம். இந்த மண் வாழ்க்கையை நிலை யென்று மதியாத நிர்மல குணமே, மூன்றாவது கடுகமாகிய மிளகுக்குச் சமானமானது. அதனால், 'மண் விழைந்து வாழ்நாள் மதியாமை' என்றார். என்றைக்கும் இப்படியே இந்தப் பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களோடு, அழியாமல் வாழ்ந்துகொண்டிருப்போமென்று, இராவணன் எண்ணியிருந்து மோசம் போனது போல, ஒருவன் தப்பெண்ணங்கொண்டு கெடப் போகிறானென்பதனாலேயே, 'மண் விழைந்து வாழ்நாள் மதியாமை' அதாவது, மண் பெண் பொன் என்னும் மூவாசை வசப்பட்டு இவ்வுலக வாழ்க்கையைச் சதமென்றெண்ணி மோசம்

போகக்கூடாது' என்றார். இதை உடல் நோய்க்கு மிளகை மதிப்பதுபோல, மூன்றாவதாக ஒவ்வொருவனுங்கொண்டு, இந்த மண் வாழ்க்கையைத் துச்சமென்றெண்ணி யில்லறத்தைத் தவறாமல் நடாத்திய மகான்களாகிய வல்லாள ராஜனைப் போலவும் கபீர்தாசரைப் போலவும் மனத்துறவு பூண்டு வாழவேண்டும். இது குறித்தே நாயனாரும் தமது தெய்வத்தமிழ்த் திருமறைச் சுலோகத்தில்,

> 'நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
> புல்லறி வாண்மை கடை'

என்றார்.

"நிலையில்லாத பொருள்களை யெல்லாம் நிலையானவை என்றெண்ணி மோசம் போகும் அற்பமதி, சான்றோர்க்குக் கேவலமாம்" என்பதிதன் கருத்து. இது குறித்தே, அரிச்சந்திரனும், விசுவாமித்திர முனிவரை நோக்கி,

> 'புலைய னும்விரும் பாதஇப் புன்புலால் யாக்கை
> நிலையே னாநுண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
> தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்
> கலையு ணர்ந்தநீ எமக்கிது கழறுவ தழகோ'

என்றான்.

அவனுக்குத் தன்னுடைய அரசச்செல்வம் துச்சமாய்த் தோன்றிற்று. அதை அவன் நிலை யென்று எண்ணவேயில்லை. அவன், தன் வாழ்நாளை நிலை யென்று எண்ணினால் தானே, செல்வத்தை நிலை யென்று எண்ணி யிருப்பான்? சரீரத்தைப் புலையனும் விரும்பாத புன்புலால் யாக்கை என்று மிகவும் கேவலமாய்ப் பேசுகிறான், 'இந்தச் சரீரத்தை நிலை யென்றெண்ணுவது சனமருள்' என்கிறான்.

இப்படி, 'பிறன் மனை நயவாமை' 'பிறன் பொருள் விழையாமை' 'தன் வாழ்நாள் மதியாமை' என்னும் திரு



கடுக மருந்தை, 'தன் மனைவி மக்கள்மேலன்பு' என்னும்
தேனிற் கலந்துண்டு, 'தென்புலத்தார், தெய்வம், விருந்து
முதலியோரைப் பேணல்' என்னும் பத்தியம் தவறாமல், சத்
திய நெறியிற் படர்வான், இகபரசுகானுபவியாய் வாழ்வா
னென்பதே மேலோர் துணிபு. இவ்வாழ்க்கையாகிய இல்
வாழ்க்கைக்கு வசதியான இடம் எந்நாளும் நாட்டுப்புறமே
அன்றி, நகர்ப்புறம் எவ்விதத்திலும் வசதியாகா தென்று
முன்னமே நாம் கூறியுள்ளோம். எப்போது ஒருவன் தன்
வாழ்விடத்தை நகர்ப்புறத்தில் ஏற்படுத்திக் கொள்ள
விரும்புகிறானோ, அப்போதே அவன்,

> 'ஆசைக் கடியான் அகிலலோ கத்தினுக்கும்
> ஆசற்ற நல்லடியா னவானே—ஆசை
> தனையடிமை கொண்டவனே தப்பா துலகந்
> தனையடிமை கொண்டவனே தான்'

என்றபடி ஆசைக்கடியவனாய்க் கெடுகிறான். அதனால், அவ
னுடைய இல்வாழ்க்கையின் குணங்களாகிய அன்பும் அற
னும், முறையே வன்பும் மறனுமாய் மாறிக்கெடுகின்றன.
ஆகையால் நாட்டிலேயே ஒவ்வொருவனும், நல்ல வசதியான
இடமாய் நாடி ஏற்படுத்திக் கொண்டால் தான் இல்லற
வாழ்க்கையை இன்புடைத்தாய்க் காணலாம். எந்தக் கார
ணத்தாலும் நகரத்தை நாடிக் குடியேறக்கூடாது. இந்நூலா
சிரியராகிய யாமும் எந்நாளும் நாட்டு வாசத்தையே மேட்
டிமையாக் கொண்டிருக்கிறோமன்றி நகர வாசத்தை புறக்
கணித் தொதுக்குகிறோம். ஏதோ இந்நூலெழுதுவது
போன்ற வெகு சன்னோபகாரமான காரியத்தைப்பற்றியே
ஒரொருகால் நகரத்தை நாடி வந்து சில காலந் தங்குவோம்.
அப்போதும் குடியர் மடியர் முதலியவர்களுடைய கூட்
டுறவை அற விலக்குவோம். அவர்களைச் சந்திக்குந்தோறும்
அவர்களுடைய மதியைத் துலக்குவோம். எந்நாளும் இல்

வாழ்வான் தன் சுகாதார நிலையைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். வசிக்குமிடம் மேடுபள்ள மின்றிச் சமநிலமாயிருக்கவேண்டும்.

'ஆறில்லா ஊருக் கழகுபாழ்'

என்றபடி, உண்ணீர்க்குத் தண்ணீர் வசதியான வூரில் வாழ வேண்டும். உயிர்க்கு ஆதாரமாகிய பயிர்க்கும் தண்ணீர்ப் பாசனம் தவறுத ஊராயிருக்க வேண்டும். குடியிருக்குமிடம் நீரூற்று முதலிய ஓதஞ் செறிந்ததாயிருக்கப்படாது. அப்படியிருக்கின், விஷக்காய்ச்சல், காசம் முதலிய நாச நோய்களுக்கு, அது பிறப்பிடமாகும். பணவசதியுள்ள பணக்காரர்க்கு இடவசதி யெளிதில் ஏற்படும். ஆகையால் ஏழைகளே இதை நன்றாய்க் கவனிக்கவேண்டும். பண்ணையருகில் வாழும் ஏழைகள் இதைக் கூர்ந்து யோசிக்க வேண்டும். புளிக்கீழும் அதன் அருகிலும் குடிசை வேய்ந்து வாழ்வது கூடாத காரியம்.

வெண்பா.

'புளிநிழலில் வாழ்வார்க்குப் பொல்லாத நோயாம்
வளியேறிக் காய்ச்சல் வளரும்—ஒளிகுறையும்
கண்ணிரண்டுஞ் சூடேறும் காயமெலாம் கொப்புளமாம்
புண்டிரண்டு சுக்காகிப் போம்'

என்பது பெரியார் கொள்கை

"புளியமாநிழலிற் குடிசைகோலிக் குடியிருப்பார்க்குப் பொல்லாத காசநோய் முதலிய வுண்டாகும்; வாதம் அதிகரித்துக் காய்ச்சல் வளரும். இரண்டு கண்ணும் பார்வை மங்கிப் புகையும்; உடம்பெல்லாம் கொப்புளப் புண்களாய், நாளுக்கு நாள் இளைத்து வாடும்" என்பதிதன் பொருள். இதனாலேயே மலேரியா என்னும் விஷக்காய்ச்சலும் வளருமென்க. இதன் இலைகள் சிறியன. ஆயினும், நெல்லியைப்



போல், அதிகமாய் உதிர்வதால், அருகிலுள்ள நீர் நிலைகள் கெடும். நீர் நிலைகளுக்கருகில் நெல்லியிருப்பது நல்லதென்பதும், இப்படியே அதன் இலை யுதிராதிருந்தால்தான் ஆகுமென்று கொள்க. இலை உதிர்ந்து அழுகி நீர் கெடுவதால், நாற்றமெடுத்துக் கொசுக்களுக்குப் பிறப்பிடமாகும். அவைகளாலேயே விஷக்காய்ச்சல் வருகிறதென்பது, மருத்துவக் கலைஞானிகளின் கொள்கை. வேம்பு, புங்கு, பூரசு, பூவரசு, முதலிய மாவடிகளில் குடிசைகோலிக் குடியிருப்பது நலமானாலும், அவைகளின் இலைகள் உதிரும்படி, அருகில் குடிநீர் நிலை இருக்கலாகாது. நெல்லியின் வேர், நீரிற் பாயலாமன்றி இலைகள் உதிரலாகாது. மாடி வீடுகளிலும், மற்ற வீடுகளிலும் நகரத்தில் வாழும் குடிகளும் பள்ளத்தாக்கான இடத்தை விட்டு அகலவேண்டும். மேட்டிடமே எந்நாளும் எவ்விடத்திலும் மேட்டிமையாம். காட்டிடத்தில் வாழ்வாரும், பண்ணை யருகில் வாழ்வாரும், பாலை யருகில் வாழ்வாரும், கடலோரத்தில் வாழ்வாரும், மலையடியில் வாழ்வாரும் ஆகிய ஐந்திணை மாக்களும், தம் வாழ்விடம் மேற்குறித்தபடி வசதியாயிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்துக் குடிசை கோலிக்கொள்ளவேண்டும். அங்ஙனம் இல்லையேல், அவர்கள் பாடு, பெரும் பாடாகும்.

'நல்லா ரொருவ ருளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யு மழை'

என்று ஔவை ஓதியபடி,

'மூர்க்க ரொருவ ருளரேல் அவர்பொருட் (டு)
யார்க்கு மெய்தும் அழை'

என்று யாமும் ஓதுவோம். யாரோ ஒருவர், முன் யோசனையின்றி, மூர்க்கமாய்ச் செய்யுங் காரியத்தால், வெகு சனங்களுந் துயருற நேரிடுகிறது. விஷக்காய்ச்சல் முதலிய

தொத்து நோய் கண்டால், ஒருவரோடு, அல்லது அவர் குடும்பத்தாரோடு பிரவர்த்தித்திருந்து, மற்றவர்களை விட்டுப் போவதில்லை. அவைகள் அடுத்தவரையும் பற்றி வாட்டுகின்றன. பரலோகத்துக்கு வழி காட்டுகின்றன. அதனால், அகால மரணங்களும் கணக்கின்றி யேற்படுகின்றன.

மேற்குறித்த ஐவகை நிலத்து மக்களும் அவரவர் தேசாசாரத்துக்குத் தக்க வுணவுப் பொருள்களைச் சேகரித்துண்ணவேண்டும். மாறினும் எறினும் நோய் செய்யும். வடநாட்டார் சோளம், வரகு, கோதுமை முதலியவைகளையே உணவாகக் கொள்ளுகிறார்கள். தென்னாட்டார்க்கும் அவை பழக்கமாயிருந்தால், உட்கொள்ளலாம். வடநாட்டார் வரகு முதலியவைகளையும் சோறாக்கி யுண்ணாமல், மாவாக்கிப் பூரி, உரொட்டி, அடை முதலியவைகளாகச் செய்து உண்கிறார்கள். தென்னாட்டார் பெரும்பாலும் அரிசி முதலியவைகளைக் கஞ்சி வடித்துச் சோறாகவே உண்கிறார்கள். சிலர் களி முதலியவாகவும் புசிக்கிறார்கள். வடநாட்டார் பச்சரிசியே பான்மையாமென்று, சோறாக்கித் தின்கிறார்கள். பச்சரிசியே சத்துள்ளது. புழுங்கலரிசி, புழுங்குவதால் சத்துக் கெடுகிறதென்பது மருத்துவ நூலார் மதிப்பு. வடநாட்டார் செய்துண்ணும் உரொட்டி முதலியவைகளே சத்துள்ளன. ஆகையால், அவைகளே இல்வாழ்வானுக்குச் சரியான ஆகாரங்களென்று மேலோர் எண்ணுகிறார்கள். வடநாட்டிலுந் தென்னாட்டிலும் எந்நாளும் எழைமக்கள் கேழ்வரகு, கம்பு முதலிய தானியமாக்களால் களிசெய்து புசிக்கிறார்கள். இதுவே, மற்றெல்லா வுணவு வகைகளினும் சிறந்ததாகும். நோயாளர்க்கு நொய்க்கஞ்சியு மாக்கஞ்சியுமே மதிப்புள்ள ஆகாரங்களாம். குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே சாலச் சிறந்ததாம். தாய்ப்பால் கிடையாதேல், பசுப்பாலே பான்மையதாகும். பசுப்



பால், கறந்த மூன்றேமுக்கால் நாழிகைக்குமேல் சத்துக் கெடும். ஆகையால், அதற்குள் அதை உபயோகித்துக் கொள்ளவேண்டும். குழந்தை மாதக்கணக்கானதானால், தனிப்பால் உபயோகிப்பது தகாது. சரிக்குச் சரியாகத் தண்ணீர் கலந்து காய்ச்சி யுபயோகிக்கவேண்டும். குழந்தைகட்கு மாதக் கணக்கிலேயே தாய்ப்பாலை மறக்கடிக்கவேண்டும். பசுப்பால் ஊட்டக் கிடையாதேல், வெள்ளாட்டுப்பால் விசேடமாகும். குப்பி(Bottles)களில் முலைக்(Nipple)காம்பென்னும், துடைப்பா(Rubber)னை மாட்டி, குழந்தைகளைச் சப்பவிடுவது தப்பாகும். பாலடைச் சங்கு மூலமாய்ப் பாலைப் புகட்டுவதே பான்மையாகும். குழந்தைகளைப் பாதுகாக்கு முறையில், கீழ் நாட்டார், மேனாட்டாருடைய போலி நாகரிக முறைகளைக் கைக்கொள்வது, கயமையின் பாற்படும். ஒரு வருஷத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் தனிப்பசுப்பால் தகாது. ஒன்றுக்கு அரைப் பங்கேனும் தண்ணீர் கலந்து காய்ச்சவேண்டும். குழந்தைகளுக்குப் பாலூட்டும் பசுக்களின் உணவுப் பொருள்களைப் பற்றிக் குடிமக்கள் நன்கு கவனிக்கவேண்டும்: துவரம் பொட்டு, பருத்திக்கொட்டை, அகத்திக் கீரை, பசும் புல் முதலியவைகளே பாற்பசுக்களுக்குப் பாங்கான உணவுகளாம். வைக்கோல் அளவாகப் போடவேண்டும். பிண்ணாக்குகளும் பிறவும் சந்தர்ப்ப நோக்கி உபயோகிக்க வேண்டும். பசுக்களுக்கு உண்ணீர், தெண்ணீராகிய தண்ணீரே நன்னீராம். கழுநீர் முதலியவைகளும் சுகாதாரத்துக்கு விரோதமின்றியிருந்தால், ஆகும். எல்லாவற்றினும் பசுக்களுக்குச் சோளத்தட்டும் கேழ்வரகுத் தட்டுமே கேடிலாவுணவுகளாம். சோளத் தட்டையே ஊட்டி வளர்த்த பசுக்களின் பாலில் வெண்ணெய் அதிகமாக் காண்கிறது; உருசியும் சிறந்திருக்கிறது; உண்பார் உடம்புக்கும் ஆரோக்கியமாம்.

பசுக்களும் இளைக்காமல், காமதேனுவைப் போல் வசீகரமாய்த் தோன்றுகின்றன. இந்தக் குழந்தை வளர்ப்பு, சமையல், உணவுப் பொருள்கள் முதலிய விஷயங்களை அடுத்த அதிகாரங்களில் அகலமாய்க் காணலாம்.

ஆகையால் இல்லற வாழ்க்கையை இன்புடைத்தாய்க் காணவேண்டுமெவ்வொருவனும் இவ்வதிகாரத்திற் கண்டபடி நீதிமானாகவும், புத்திமானாகவும், பத்திமானாகவும் நடந்து கொள்ளச் சரியான இடந்தேடி இல்லங்கோலிக் கொள்ள வேண்டும். அப்படி இல்லங்கோலிக் கொண்ட பிறகு, இல்லாளை அவன் எப்படித் தேடிக் கொள்ள வேண்டுமென்பதும், அவளோடு அவன் கூடி வாழ்ந்து எப்படி அவளைப் பொற்புடையாளாக்கிக் கொள்ள வேண்டுமென்பதும் அடுத்த அதிகாரத்தில் விவரமாய் விளங்கும். பொற்புடையாளென்றால், அவள் உடற்பொற்பு அதாவது மேலழகுடையவளா யிருப்பது ஒன்று மட்டும் அன்று; மனப்பொற்பு, வாக்குப் பொற்புகளாகிய மற்றிரண்டு முக்கியமான அழகுகளையும் பெற்றிருப்பவளாக வேண்டும். ஆகையால், அடுத்த அதிகாரம் 'கற்புடை மனைவியே பொற்புடையாளெனல்' என்னுந் தலைப்பெயர் பெற்றிருப்பது காண்க.

---

# நான்காம் அதிகாரம்

(கற்புடை மனைவியே பொற்புடையாளெனல்)

(குறள்)

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்

கணவனுண்டபின் உண்பவளே கற்புடை மனைவி. கணவன் துயின்றபின் துயில்பவளே கற்புடை மனைவி. கணவன் எழுமுன் எழுபவளே கற்புடை மனைவி. இதுவே கற்புடை மனைவியின் ஒழுங்கு என்றார் புராண காலத்தார். அவர் அப்படிச் சொன்னது கட்டளையல்ல. அவர் காலத்திலிருந்த வழக்கத்தை அனுசரித்தே அவர் அப்படிச் சொன்னார்.

"அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடி
பின்தூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என்தூங்கு மென்கண் ணிரா"

என்று திருவள்ளுவ நாயனார் தம் மனைவியார்க் கிரங்கினமையும், அவ்வம்மையாருடைய இல்லற வாழ்க்கையின் உண்மை ஒழுங்கைக் குறித்ததேயாகும். இப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்ற கட்டளைக்கு அஞ்சி நடப்பது கற்புடைமையாகாது. இயற்கையிலேயே அப்படி அன்பு வசப்பட்டு நடக்க வேண்டும். 'தாய் தந்தையரைக் கனம்பண்' என்று விதிய வேதம் சொல்கிறதென்று அந்தக் கட்டளைக் கஞ்சிப் பெற்றோரைக் கனம் பண்ணவேண்டுமென்பதில்லை. அப்படிச் செய்பவன் தாய் தந்தையரைக் கனம் பண்ணவனாகான்; அந்தக் கட்டளையைச் சொல்லளவாற் கனம்

பண்ணவனாகிறான். இயற்கையிலேயே உள்ளன்போடு கனம் பண்ணுகிறவனே அந்தக் கட்டளையின் பொருளளவாற் கனம் பண்ணவனாவான். வேதக் கட்டளைகளும், புராணக் கட்டளைகளும், நீதிக் கட்டளைகளும் ஆகிய எல்லாமும் அவ்வக்காலத்துப் பழக்க வழக்கங்களேயாகும். அவைகளையே முனிவர்களும் ஆசாரியர்களும் பின் வருபவர்கட்குக் கட்டளைகளாக்கினார்கள். கட்டளை யென்றால் ஒழுங்காகச் செங்கலுக்கும் அச்சுக்கும் பேர். ஆகையால், இயற்கைக்கு மாறாக நடைகோணித் தமக்குப் பின்னையோர் அன்பிலும், அறிவிலும், ஆட்சியிலும், காட்சியிலும் கெடப் போகிறார்களென்று முனிவரும் பிறரும் கட்டளைகளை எழுதி வைத்தார்கள். முனிவர்களாகிய பெரியோருடைய அனுபவ அறிவின் விளக்கமே வேதமும், ஆகமமும், புராணமும் என்றுணர்க. திருவள்ளுவர் குறளியற்றினார், நீதியை விளக்கினாரென்றால், பின்னையோர்க்குத் தங்காலத்திருந்த நீதியின் ஒழுங்கைக் கட்டளையாக விளக்கிக் காட்டினார். திருவள்ளுவருடைய நீதிக் கட்டளைகள் நமக்குள் புகுந்து கொள்வதிற் பலனில்லை. சும்மா, அவைகளை மனப்பாடம் பண்ணுவதிலும், அவைகளுக்குப் பரிமேலழகர் முதலிய மேதாவிகள் எழுதிவைத்த உரைகளை வியப்பதிலும் குணமில்லை. அவைகளை மனப்பாடம் பண்ணிக்கொண்டு, 'நாலுமிரண்டும் சொல்லுக் குறுதி' என்று சவைகளில் ஒப்புவித்துப் பிரசங்கம் பண்ணுவதிலும் பெருமையில்லை. அந்தக் கட்டளைக்குகந்த செங்கல்லாயிருக்கின்றோமா என்று நம்மை நாம் தடவிப் பார்த்துக் கொள்ளவேண்டும். கட்டளைக்குட் புகுந்து ஒழுங்காய் வெளிப்படும் செங்கல்லைப் போல நாமும் அவைகளுக்குள் நுழைந்து மேடுபள்ளமில்லாமல் ஒழுங்காயிருக்கின்றோமா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். அவைகளைப் பொருளளவாய்க் கனம் பண்ண வேண்டும். நாயனாரே



அப்படிச் செய்திருக்கிறாரென்று சென்ற அதிகாரத்தில் நாம் செப்பியுள்ளோம். இது பற்றியே அறநூலும்,

'கட்டளை கோடித் திரியிற் கருதிய
இட்டிகையுங் கோடும் அதுபோலும்—ஒட்டிய
காட்சி திரியின் அறந்திரியு மென்றுரைப்பர்
மாட்சியின் மிக்கவர் தாம்'

என்று முறையிடுகிறது.

நாயனார் முதலியோர் எழுதிவைத்த நீதிக்கட்டளைகளை நமக்குக் காட்சியளவான சாட்சிகளாயிருக்கின்றன. அவைகளில் நாம் புகும் போது சற்றுக்கரடு முரடாய் அழுத்தமாயிருந்தால், அதுவே காட்சி திரிந்ததற் கடையாளமாகிய சாட்சியாகும். அக்கட்டளைக்குப் பொருத்தமாயில்லாமல், சற்று வருத்தமாய் நுழைவதானால், நமது அறந்திரிந்தபடியாம். மரமுதலியவைகளின் கோணலை விலக்கி ஒழுங்காக்கவல்ல நூற்கயிறுபோல, மாந்தர் மனக்கோணலை விலக்குவதால் நூல் என்பது காரணவாகு பெயராய் நீதி நூற்களைக் குறிக்கிறதென்பது சான்றோர் கொள்கை.

'சான்றோ ரென்கை ஈன்றோர்க்கழகு'

என்பது அவ்வை நீதி—"தம்மக்களைப் பிறர் கல்வியறிவொழுக்கங்களால் நிரம்பினவரென்பது, பெற்றோர்க்கு மகிழ்ச்சியாம்" என்பதிதன் பொருள்.

இப்படித் தம்மக்களை, பெற்றோர், சான்றோராக்க வேண்டு மென்றால், ஆண்களை மட்டும் அப்படிச் செய்ய வேண்டும், பெண்களைச் செய்யவேண்டியதில்லை யென்பதில்லை. ஈன்றோர் என்று பொதுப்படக் கூறியிருக்கின்றதை யெல்லாருங் கவனிக்கவேண்டும். ஆண்மக்களை யீன்றோரென்று வேறு பிரித்துக் கூறியில்லை. 'அறஞ்செய விரும்பு' 'வித்தை விரும்பு' 'வீடு பெறநில்' என்பவை

களினும் இப்படியேயா மென்று கண்டுகொள்க. ஆனால் 'உத்தமனாயிரு' என்று ஆண்மகனுக்குச் சொல்லியிருக்கிறதேயன்றிப் பெண்மகளுக்கில்லையே யென்று சிலர் வீண் பேச்சுப் பேசுவார்கள். 'உத்தமனாயிரு' என்றதிலேயே 'உத்தமியாயிரு' என்பதையும் அருத்தா பத்தியாற்கொள்ள வேண்டும். 'கொலை செய்தவன் தலையிழப்பான்' என்று அரசநீதி யிருக்கிறதென்றால், அதற்குக் கொலை செய்தவள் தலையிழப்பாள் என்பதும் அடுத்த பொருளாயிருப்பது போல 'உத்தமியாயிரு' என்பதூஉம் அடுத்த பொருளா யிருக்கிறது. 'வித்தை விரும்பு' முதலியவைகளும் இப்படியே இருபாலார்க்கும் இசைந்ததாகும்.

ஆகையால் கல்வியறிவொழுக்கங்கள் இருபாலார்க்கும் இன்றியமையாதன. ஆண்மகனேனும் தன்னிஷ்டம்போல் வீரனாய் விளங்குவதற்கேற்ற உடலமைப்பு வன்மை முதலியவைகளைப் பெற்றிருக்கிறான். அதனால் பெண்மகளுக்கவன் அடங்கி நடக்கவேண்டுமென்பதில்லை. ஆகையால், அவனுக்கு

'பிறன்மனை புகாமை அறமெனத் தகும்'

என்று மனைவியை வஞ்சித்து வேறொருத்தியை நாடிச் செல்லப்படாதென்று கட்டளை பிறந்திருக்கின்றது. பெண்மகள் தன்னிஷ்டம்போல் ஆண்மகனுக்கு அடங்காதிருக்கத் தக்க உடலமைப்பைப் பெறாமல், மென்மைத் தன்மையைப் பெற்றிருக்கிறாள். இவளுக்கே இல்வாழ்க்கையிற் பொறுப்பு மிகுதி

'கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை'

என்றபடி கணவனுக்கடங்கி நடக்கவேண்டுமென்னும் கட்டளை பிறந்திருக்கிறது. இந்தக் கட்டளைக்குள் வருத்தமின்றிப் பொருத்தமாய் நுழைந்து விளங்கவேண்டுமானால்,



பெண்மகளே ஆண்மகனைக் காட்டிலும் கல்வியறிவொழுக்கங்களைத் தன் மாதா, பிதா, குரு முதலியோர்களிடத்திருந்து அதிகமாய்ப் பெறவேண்டியவளா யிருக்கிறாள். மருந்து நோயாளிக்குக் குணங்கொடுப்பதுபோல, கல்வியறிவொழுக்கங்கள் பெண் மகளுக்கே பெரிதும் வேண்டியவைகளா யிருக்கின்றன.

ஆகையால் மேற்குறித்தபடி மனக்கோணலை நீக்கும் நூலாராய்ச்சி பெண்மகளுக்கே மிகுதியாகவுந் தகுதியாகவும் வேண்டியிருக்கிறது.

'நூன்முறை தெரிந்தே சீலத்தொழுகு'

என்று அவ்வையாரென்னும் பெண்மணி பேசினாரென்றால், கொஞ்சமேனும் அவர் தம் பாற் பற்றின்றி ஆண்பாற்கேயா அங்ஙனம் கூறியிருப்பார்? அவர் அப்படித்தான் தம் பாற் பற்றின்றிப் பேசினாரென்றால், யார் தாம் ஒப்புவார்?

'பெண்களுக்கு எப்படிப்பட்ட கல்வி பயிற்றுவது?' என்னுங் கேள்விக்கு 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' 'காவல்தானே பாவையர்க்கழகு' என்னும் இவ்விரண்டு கட்டளைகளுக்குள்ளும் அவர்கள் கொஞ்சமேனும் கரடுமுரடின்றிப் பொருத்தமாய் நுழைந்து,

'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி'

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

என்னும் இவ்விருகட்டளைகட்கும் தாம் எடுத்துக் காட்டாய் இல்லற நடாத்தும் இயல்புடைய உன்னதக் கல்வி பயிற்ற வேண்டுமென்பதே தக்க விடையாம்.

இதற்கு அவர்கள் இப்போது, பரபாஷை பயின்று பரிக்ஷையிற்றேறி, பண்டிதைகளாகவும், பணம் பறிப்பவர்களாகவும் பட்டம் பெறவேண்டுமென்பது பொருளல்ல.

அவர்கள் நந்நாட்டு நுண்ணிய நூல்களையே கற்க வேண்டும். முதலில் அவர்கட்குச் சீலமே சிறந்ததாகும். 'சீலத்துக்குத் தக்க கோலம்' என்னும் பழமொழியே பெண் கல்விக்குத் தக்கதன்றி, 'காலத்துக்குத் தக்க கோலம்' என்னும் ஆண் கல்விக்குந்தகாத பழிமொழி அடுத்ததன்று. ஆகையால், பெண்களுக்குச் சீலத்துக்குத்தக்க நூன்முறையே சிறந்ததாகும். நந்நாட்டுத் தமிழ்க் கல்வியறிவொழுக்கங்களே தக்கதாமன்றி மேனாட்டுக் கல்வியறிவொழுக்கங்கள் கூடாவாம். அவைகள் ஆண்களுக்கே முற்றும் கூடாவென்று கொள்க—ஆண்களுக்கே முற்றுங்கூடாத பரதேசக் கல்வி, பெண்களுக்கு எங்ஙனம் அடுக்கும்? இந்தப் பரதேசக்கல்வியை ஒரு பொருளா மதித்து, நம்மவர் கூட்டங் கூடிப் பேசுவதும் கலாசாலைகளையுங் கல்லூரிகளையும் ஏற்படுத்துவதுமாய், நினைக்க நேரமின்றிக் கெடுகிறார்கள். இப்படிப் பரதேசக் கல்வி கற்று, ஆண்கள் அடிமைகளாய்க் காலந்தள்ளுவதே போதாவென்று, பெண்களையும் அடிமைகளாக்க முயல்வது, பேதமையிற் பெரும் பேதமையாமென்று கண்டு கொள்க. இரவல் இரக்கையில் எத்தனை நாளைக்குப் பறக்கலாம்? இதை நன்கு கவனிக்க வேண்டும். நமக்கே சொந்தமாய் இரக்கை வளர வேண்டும். அதை வளர்க்க வேண்டும். ஆகையால் நந்நாட்டுக் கல்வியே கற்க வேண்டும். அதனால் நலஞ்சிறக்க வேண்டும். பிறநாட்டு நூல்களை நந்தாய் மொழியிற் பெயர்த்தெழுதி, வேண்டுமானால் விஷயங்களை உணர்ந்து கொள்ளலாம். எல்லாம் தாய் மொழியிலேயே ஆகவேண்டும். அதையே அரசவை முதலிய எல்லா அவைகளிலும் அனைவரும் உணரும்படி பேசவேண்டும். தாய்மொழி தவிர ஏனையமொழிகளைப் பேய்மொழிகளா ஒதுக்கவேண்டும். கரும்பிருக்க



இரும்பு கடித்து இளைப்பது வெறியர் குணமென்று யார்தாம் ஒப்பாதவர்?

சிதம்பரத்திலும் பிறவிடங்களிலும் பெரிய பெரிய பைந்தமிழ்க் கல்லூரிகளையும் கலாசாலைகளையும் வைப்பதிற் பலனில்லை. பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமண போஜனம் பண்ணுவிப்பதிற் பலனென்ன? சாதாரண ஏழைமக்கள் கண்திறவாமல் இருட்டில் அலைகையில் ஏனையோர்க்குக் கண்ணின்மேல் கண் திறப்பிப்பதிற் பயனில்லை. கீழ்த்தரக் கல்விக்கே இருபதல்ல, இருநூறு நூறாயிரமும் செலவிடலாம். அதற்காக வெளிவருவார் யாருமில்லை. நந்நாட்டுக் கல்வி கற்பிக்க நாமே முயலவேண்டுமன்றி, துரைத்தனத்தாரை எதிர்பார்ப்பது பேதமையாகும். ஆங்காங்கும் நாட்டுப் புறங்களில் ஊர்க்கொரு குருகுலவாசமும் கன்னிமாடமும் ஏற்படவேண்டும். அவைகளில் முறையே ஆண்களை இருபத்தொரு வயதளவும், பெண்களைப் பதினேழுவயதளவும் பாங்குடன் கல்வியொழுக்கங் கைத்தொழிற்களிற் பயிற்றுவிக்கவேண்டும். இதைக் கட்டாயமாக்கிப் பிசகுவார்க்குத் தண்டனையும் விதிக்கவேண்டும். கைத்தொழில்களில் நெசவுத்தொழிலையே முதன்மையாக் கொள்ளவேண்டும். ஆண்களும் பெண்களும் முறையே பயிர்த்தொழிலையும் நெசவுத்தொழிலையும் உயிர்த்தொழில்களாகப் பரதேசப் பருந்தடித்துக்கொண்டு போகாதபடி பரிந்து பாதுகாத்துக் கொள்ளவேண்டும். பெண்கள் பஞ்சு நூற்கலாம். பாவோடலாம். கூடை முடையலாம். முறம் பின்னலாம். தாழை, பனை, ஈந்து, கோரை முதலியவைகளிற் பாய்களுந் தடுக்குகளும் பண்ணலாம். பானைசட்டி பண்ணலாம். சித்திரந்தீட்டலாம். இன்னும் வயல்களில் நாற்று நடலாம், களைகொத்தலாம், விதை விதைக்கலாம். தாளடிக்கலாம், நெற்குவிக்கலாம். களத்திற்போர் போடலாம். களஞ்சியத்தில் மணி

களைச் சேர்க்கலாம். அவர்கள் கழுத்தில் மணிகளைப் பொன்னாலும் பிறவாலும் செய்து கோத்துக்கொள்வது பிரதானமன்று, சீவாதாரமன்று; களஞ்சியத்தில் தானியமணிகளைச் சேர்ப்பதற்குக் கருவியா யிருப்பதே சீவாதாரமும் சீவகாருண்ணியமுமாம். இன்னும் என்ன எழுதுவோம்! நந்நாட்டிற் பெண்களாலாகாத வேலை எதுவும் இல்லை. அப்படியிருந்தும், 'வயிறே வனவாசம், பயிரே பரமபதம்' என்றெண்ணி உழைத்து, நடுத்தர நிலையில் நிற்கும் பெண்களெல்லாம் இப்படியுமின்றி அப்படியுமின்றி வௌவால் போற்றொங்குகிறார்கள். ஏழைப்பெண்களே மேற்குறித்த தொழில்களிற் சிலவற்றை வயிற்றுப்பாட்டுக்காகக் கைக்கொண்டிருக்கிறார்கள். இப்படித் தம் வயிற்றுப்பாட்டுக் கெனவாழும் வாழ்க்கையும் ஒரு வாழ்வாமா? ஒவ்வொருவரும் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்வதே பெருமையாகும். பணக்காரர் வீட்டுப் பெண்கள் சமையல் தொழிலுக்கும் அறிவற்றவர்களாய், ஆள் சமைத்து வைத்ததை, அகமுடையானுக்கும் தமக்கும் பரிமாறிக் கொண்டுண்ண முடியாத முழுச்சோம்பேறிகளாய்க் காலங்கழிக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் ஆள்வேண்டும். தலைக்கு எண்ணெயிடவும், சிகைக்காயைப் புத்தேய்க்கவும், மயிர்ச் சிக்கெடுக்கவும், படுக்கைபோடவும், டாய் விரிக்கவும், அலம்பவும், புலம்பவும் முதலிய சிறு தொழில்களுக்கும் அவர்கள் சோம்பேறிகளாய் ஆட்களை வைத்து நாட்களைக் கழிக்கிறார்கள். அவர்களிடத்துள்ள ஆட்களும் அவர்களைப்போலவே சோம்பேறிகளாய் எந்தக் கைத்தொழிலிலும் பழகாமல், வயிற்றுச் சோற்றுத் தொழிலே பெருந்தொழிலாக் கற்றுப்பழகிக் காலந்தள்ளுகிறார்கள். நடுத்தர நிலையிலுள்ளவர்கள் வீட்டுப் பெண்களும் காட்டுப்பெண்களாய், 'கடுப்பே கைலாசம், அடுப்பே வைகுந்தம்' என்பதுபோலச் சமையல் தொழிலாகிய



மடைத்தொழி லொன்றையே பெருந்தொழிலாக்கொண்டு மகிழ்ச்சியோடு காலந்தள்ளுகிறார்கள். கானிஷ்மாரிக் (ஜனத்தொகைக்) கணக்கெடுத்துப் பார்த்ததில் நந்நாட்டுப் பெண்களில் நாகரிகமானவர்களும் படிப்பின்றிச் சமையற்றொழிலிலும் பிள்ளை பெறுந்தொழிலிலுமே பிரக்கியாதி பெற்றவர்களாய்ப் பெரும்பாலும் காலங்கழிக்கிறார்களென்று விளங்குகிறது. நூற்றுக்கு ஏழளவிலேனும் படித்தவர்களென்பதற்குக் கணக்கேற்படவில்லை. இப்படியும் நம்பாத நாடு சீர்குலைந்தழியுமா?

பெண்களுக்குப் பிள்ளைபெறுந் தொழிலும் சமையல் தொழிலுமே பெருந் தொழில்களாயிருக்கின்றன என்றால், அவைகளை அவர்கள் அனுபவத்தாலேயே செய்துகொண்டு வருகிறார்களன்றித் தெரிந்து செய்கிறார்களில்லை. அதற்காகவே இந்நன்னூல் வெளியாகிறது. மனம் வாக்கு காயம் என்னும் மூன்றாலும் பெண்களும் ஆண்களுங் கல்வி கற்க வேண்டும். மனத்துக்கும் வாக்குக்குமட்டும் உகந்த கல்வி தான், எழுத்துக் கல்வி, காயத்துக்கு உகந்த கல்வி கைத்தொழிற் கல்வி ஒன்று தான். எல்லாவற்றிற்கும் எல்லார்க்கும் உகந்த கல்வி, எழுத்துக் கல்வி ஒன்று தான். அஃதின்றிக் கைத்தொழிற் கல்வி மாத்திரம் சிறவாது. பெண்ணும் ஆணும் முறையே கன்னிமாடத்தும் குருகுலவாசத்தும் வாழுங்காலத்தில் எழுத்துக் கல்வியும் கைத்தொழிற் கல்வியுமாகிய இரண்டையுமே சமமாகப் பயிலவேண்டும். எழுத்துக் கல்வி உயிர் போன்றது. கைத்தொழிற் கல்வி உடல் போன்றது.

'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூற்
கற்றாரோ டேனை யவர்'

என்றபடி பெண்கள் கல்வியற்ற விலங்குகளாய் வாழ்வதால், கணவன்மார்களுக்குக் 'கால் விலங்குகளாய்க் காலந்தள்ளு

கிறார்கள். அவர்கள் பெறும் பிள்ளைகள், அந்த விலங்கைக் கழற்றிக்கொள்ள முடியாமல் இறுக்கியுள்ள சுள்ளாணிகளாய் இருக்கிறார்கள். இது குறித்தே ஒருவர்,

'பெண்டாட்டி பெருவிலங்கு
பிள்ளைகளோ சுள்ளாணி'

என்றார். ஏனோ இப்படி அவர்களை நந்நாட்டார் ஆண்களோடு அபேதமாய் எண்ணிக் கல்வியறிவொழுக்கங்களிற் பயிற்றாமல், காட்டு விலங்குகளாகவும் கால் விலங்குகளாகவும் ஆக்கிக் கெடுக்கவேண்டும்?—பெண்களுக்குப் படிப்பேன்? 'அடுப்பூதிக்குப் படிப்பொரு கேடா? ஆண்பிள்ளையைப்போல வுத்தியோகமா செய்யப்போகிறாள்?' என்று வீண் பேச்சுப் பேசுகிறார்கள். ஆண் பிள்ளைக்கும் சமையல் தொழிலும் பிள்ளை பெறுந்தொழிலின் பெருமையும் நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டுமென்றால், பெண்களுக்கு அவைகளைப்பற்றிப் பழக்கத்தால் அரை குறையாய்க் குருட்டாட்டமாய்த் தெரிந்திருப்பது மட்டும் பற்றாது. நூலளவாலும் விவரமாய் விளங்கவேண்டுமென்று விளம்பவும் வேண்டுமோ? சமய நூலுணர்ச்சியை விடச் சமையல் நூலுணர்ச்சியே இருபாலார்க்கும் இன்றியமையாததாகும். சமையல் நூலுணர்ச்சியால், உணவைச் சரிப்படுத்தி நோய்க்கிடங்கொடாமல் உடலை வளர்த்தாலன்றி, சமய நூலுணர்ச்சிக்கு ஆதாரம் ஏது? இவ்வெல்லாக் குறைகளையும் களையவே இவ்வதிகாரத்திற் கற்புடை மனைவியே பொற்புடையாளென்னும் விஷயம் விரிவாய் வெளிப்படுகின்றது.

கற்பு என்பது கல்+பு என்று பிரிவதால் தொழிற்பெயராகும். தோற்பு என்புழிப்போல. தோற்பு, தோல்வி, தோற்றல் என்பன ஒரு தொடர். கற்பு, கல்வி, கற்றல் என்பன ஒரு தொடர். கற்பு என்பதற்குக் கணவன் கற்



பித்த சொற்படி நடத்தலென்பதே பெரும் பொருளாகக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்தே அவ்வையாரும்,

'கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை'

என்றார். கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி என்றதூஉம் இக்கருத்தைப்பற்றியேயாமென்றுணர்க. இதுவே தொன்றுதொட்டு வரூஉம் முறைமையுமாகும். இதனால், மனைவி கல்லாதவளாகவே இருக்க வேண்டும். மூடியாகவே மூலையி லிருக்க வேண்டும். எதற்கும் புருஷனையே எதிர்பார்த்து ஏங்கி யிருக்கவேண்டும். அவனுக்கு விலங்காகவே விலகி யிருக்க வேண்டும். அவன் காலுக்கு விலங்காகவே காலங் கழிக்க வேண்டும். பிள்ளை பெறும் இயந்திரமாகவே அவன் கையில் ஆட வேண்டுமென்பது பொருளல்ல. பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நாற்குணங்களில் மடம் என்பதற்கு எல்லாந் தெரிந்தும், எல்லாங் கற்றும், எல்லாங் கேட்டும் கணவனெதிரில் பெண்ணொருத்தி, அன்பும் மரியாதையும் காரணமாக, தெரியாதவள் போலவும், கல்லாதவள் போலவும், கேளாதவள் போலவும் இருக்க வேண்டுமென்று பொருள் கொள்ளுகிறார்கள். இது அபேதமாய்க் கணவனோடு கூடிவாழும் பெண்பிள்ளை நிற்க வேண்டிய நிலையை விளக்குகிறது. இப்படிப்பட்ட குணமே பெண்களுக்கு ஆபரணமாம் என்பதனாலேயே.

'பேதமை யென்பது மாதர்க் கணிகலம்'

என்றார் ஔவையார்.

'இளையானடக்கமே அடக்கம்'

என்றபடி எல்லாந் தெரிந்து கணவனோ டபேதமாய்க் கலந்து அன்பும் சிறப்பும் செலுத்துபவளே கற்புடை மனைவியாம். நன்றாய் வாசித்துணர்ந்து கணவன் சொற்றவறாமல்

நடந்த புனிதவதியாரே கற்புடை மனைவியாம். புனிதவதியார்க்கு எத்தனையோ திரண்ட செல்வம் இருந்தது. எத்தனையோ கல்வி யறிவாற் கவி பாடும் வல்லமை யிருந்தது. எத்தனையோ தெய்வபக்தி யிருந்தது. இருந்தும் அவர் தம், பதிபக்தியிற் பிசகினாரில்லை. அவற்காகவே தம் ஊன உடலைச் சுமந்திருந்தார். கடைசியாகத் தம்மை அவன் தெய்வமெனப் பாவித்து விலக்கினானென்னுங் குறிப்புணர்ந்த பிறகே, அவர் தம் உடல் பொருளாவி மூன்றையும் பரம பதிக்குச் சிரமமின்றி அர்ப்பணம் செய்தார். இதுவே உத்தமப் பதிபக்திக்கு உகந்த உதாரணமாம்.

ஆகையால் ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் மனவாக்கு காயங்களாற் கல்வி கற்பிக்க வேண்டும். அப்படி அவர்கள் கற்றால்தான்,

'கற்றல், நிற்றல்'

என்றபடி அறிவொழுக்கங்களிற் சிறந்து தத்தங் கணவன்மாரோடு இரண்டறக் கலந்து உள்ளன்பும் மரியாதையுஞ் செலுத்தி வாழ்வார்கள். அப்போதுதான் அவர்கள், கற்பையே ஆடையாக வுடுத்திருப்பார்கள். அன்பையே பூவாக முடித்திருப்பார்கள். நாணத்தையே வாசனையாகப் பூசி யிருப்பார்கள். நற்குண நற்செய்கைகளையே ஆபரணங்களாகப் பூண்டிருப்பார்கள். மக்கட்பேறென்னும் செல்வ மிகுத்துச் செழிப்பாய் வாழ்வார்கள்.

இப்படிப்பட்ட கல்வி, ஆண்களுக்குக் குரு குல வாசத்திற் கிடைக்கச் செய்வதுபோலவே பெண்களுக்குங் கன்னிமாட வாசத்திற் கிடைக்கச் செய்ய வேண்டும். இதற்காக ஆங்காங்குக் கூட்டங் கூடிப் பேச வேண்டும். பொருளுள்ளவர்கள் தத்தம் மக்களுக்குக் குரு குலவாசத்தையும் கன்னிமாட வாசத்தையும் தத்தம் இடங்களில் ஏற்படுத்திக்



கொள்வது போலவே, பொருளில்லார்க்கும் பொதுவாகக் குரு குல வாசங்களையும் கன்னிமாட வாசங்களையும் ஏற்படுத்தப் பொருளுதவி புரிய வேண்டும். அங்கே ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் ஆரம்பத்தில் மனவாக்குப் பயிற்சிக் குகந்த எழுத்துக் கல்வியையும், பிறகு தேகப் பயிற்சிக் குகந்த வேடிக்கை விளையாட்டுகளையும் அதன் பிறகு கைத்தொழிலுக் குகந்த பயிர்த்தொழில், நெசவுத் தொழில், கலத்தொழில், சித்திரத்தொழில், கல்லறுக்குந் தொழில், மர மறுக்குந் தொழில், வீடுகட்டுந் தொழில், சிற்பத்தொழில், எண்ணெயாட்டுந் தொழில், பசுக்காத்தற்றொழில், வாணிபத்தொழில் முதலிய எல்லாத் தொழில்களையும் அவரவர் மதியளவிற் கற்பிக்க வேண்டும். ஆண்கள் ஐந்து முதல் இருபத்தொரு வயதளவும் பதினாறு வருஷ காலமும், பெண்கள் ஐந்து முதல் பதினேழு வயது பரியந்தம் பன்னிரண்டு வருஷ காலமும் முறையே குருகுலத்திலும் கன்னிமாடத்திலும் கல்வி பயின்றாற்போதும். பிறகவர்கள் நற்குண நற்செய்கையிற்றிகழ்ந்து தனிமனை நோன்பு (ஏக பத்தினி விரதம்) பூணும் கணவன்மாராகவும், கொண்டான் குறிப்பறியும் பெண்டிராகவும் அன்பு மிகுந்து ஒற்றுமையாய் வாழ்வார்கள்.

கணவன் குறிப்பின்வழி நிற்பவளே கற்புடை மனைவி யென்றது இப்படிப்பட்டவளைக் குறித்தேயாகும். ஆனாலும் 'தாயைப்பார்த்துப் பெண்ணைக் கொள்' என்றிருப்பதால், தாய்மாரும் தத்தம் பெண்களின் நடைநொடி பாவனைகளுக்கு உத்தரவாதிகளா யிருக்கிறார்கள். தாய்மார் திருந்தி யிருக்கவேண்டும். பெற்றோர் திருந்தி யில்லையேல், பிள்ளைகள் திருந்தி யிருப்பது அரிதாகும். இது குறித்தே, 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்னும் பழமொழி வழங்கிவருகிறது. அப்பன் குடியனாகவும் மடியனாகவும், தடிய

ளாகவும் இருந்தால் பிள்ளையும் பெரும்பாலும் அப்படியே யிருப்பானென்பதற்கு யாரையுங் கேட்கவேண்டியதில்லை. இரணியன் வயிற்றில் பிரகலாதன் பிறந்தபடி எங்கோ ஓரிடத்தில் அப்பன் பொல்லாதவனேனும் பிள்ளை உத்தமனாயிருப்பதும் உண்டு. இதுபோலவே கைகேயி வயிற்றிற் பரதனும் இலங்கையில் திரிசடையும் தோன்றியிருந்தார்கள். இது, கோடியிலொன்றும் கூடுவது அரிது. ஆகையால் பெண்கள் கற்புடையவர்களாயிருக்கவேண்டுமானால் தாய்மார் திருந்தியிருக்கவேண்டும். அவர்களை நன்னெறியிற் செலுத்தத் தாய்மார்களே வழிகாட்டுங் கைகாட்டிகளாக இருக்க வேண்டும். கற்புடை மனைவிகளாகக் கன்னிமாடத்திற் பெண்கள் பயிலுகையில், தாய் மொழியில் எழுத்துக் கல்வி பயின்று தத்தம் மனவாக்குகளைச் சுத்தம் செய்யவேண்டும். 'அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம்' என்றே ஆரம்பிக்க வேண்டுமன்றி நந்நாட்டுக் குதவாத வேறு நூல்களைப் பிற வழிகளிற் றொடங்கலாகாது. கன்னிமாடங்களிற் பெண்களைப் பெண்களே கற்பிக்க வேண்டுமானாலும், பந்தாடல், பூக்கொய்தல், நீர் விளையாடல், சங்கீதம் பாடல், சித்திரந் தீட்டல் முதலியவைகளில் அவர்களை அவர்கள் இஷ்டம் போல் விடவேண்டும். கன்னிமாடத்தில் அவர்களுக்குக் கோலம் போடுதல், கோலாட்டம் பின்னுதல், பிரித்தல் முதலியவைகளையும், சமையல் செய்தல், பக்ஷண பலகாரம் ஆக்குதல் முதலியவைகளையும் நூலளவாலும் அநுபவ அளவாலும் பழக்கவேண்டும். கோலம் போடுதலால், வீட்டுக்கழகென்பது ஒன்றுமட்டுமன்று. கோலமா, அரிசிமாவாகவே சுண்ணாம்பு கலவாமலிருந்தால் எண்ணாயிரம் எறும்புகளுக்கு ஆகாரமாம் என்னும் சீவகாருணிய விசேஷத்தை அவர்களுக்கு விளக்கிக் காட்டவேண்டும். அதிகாலையில் நித்திரை விட்டெழுதலைப்பற்றி,



காலை யெழுந்து கடவுளை வாழ்த்தலதே
வேலையெனக் கொள்க விரைந்து.............(1)

விடிய எழுந்தால் விவேகம் வளரும்
மடியொழிந்து போகுமே மாய்ந்து.............(2)

சூரியன் தோன்றுமுன் தூக்கத்தை விட்டெழுந்து
காரியஞ் செய்க கடிது.............(3)

காலை யெழுந்துகை கால்முகம் பூசிநன்
னூலை வாசிப்பதே நோன்பு.............(4)

பதினைந்து நாழிகைப் பாதியிராத் தூக்கம்
மதியுடையோர் கொள்ளும் வழக்கு.............(5)

கோழி யெழும்போது கூட எழுந்திருப்பார்
வாழிபல் லாண்டு மகிழ்ந்து.............(6)

இந்தக் குறள் வெண்பாக்களைப் பாடம் பண்ணுவிப்பதோடு

'வைகறைத் துயிலெழு'

என்னும் செவ்வை வாக்காகிய அவ்வை வாக்கையும் அவர்களுக்கு வற்புறுத்தி விளக்கிக் காட்டவேண்டும்.

வைகறையில் துயிலெழுந்து சாணந் தெளித்தலின் விசேஷத்தையும் சுக்கிரவாரம் பருவம் அமாவாசி முதலிய காலங்களில் சாணத்தால் தரையை மெழுகலும் சுவரைப் பூசலும் ஆகிய பரிசுத்தத்தொழிலின் பான்மையையும் அவர்களுக்கு விளக்கிக் காட்டவேண்டும். ஆறுமணிகாலந் தூங்கி, விடிய எழுவதால், விவேகம் வளர்வதற்கு யாரைக் கேட்கவேண்டும்? காற்றோட்டமான இடத்திற் படுப்போரும் வைகறையில் எழுவதே வசிகரம் என்றால், காற்றோட்டமற்ற சிற்றறைகளிற் குடும்பசமேதராய்ப் படுப்போர், அதிகாலையில் எழவேண்டுமென்பதற்கு ஐயம் என்ன? சிற்றறைகளில் அடைபட்ட தம்பதிகளின் நாசி வழியாய் இரவெல்லாம் விடுபட்ட கரியமலவாயு அசுகாதார விரோதமான

தென்று தத்துவநூலார் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகையால் அந்தக் கரியமல வாயுவைக் குறைக்கவும் பிராண வாயுவை வளர்க்கவுமே வைகறையில் நித்திரை விட்டெழுந்து அப்புறம் போகவேண்டும். உடனே ஒவ்வொரு கற்புடை மனைவியும், பசு முகத்தில் விழிக்கவேண்டும். காலைக்கடனைக் கழித்துப் பல் விளக்கி முகம்பூசிச் செந்திலத மிட்டுக் கணவன் முகத்தைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்பதற்கும், தம் வயிற்றிற் பிறக்குங் குழந்தைக்கும் உருவ வொற்றுமையுண்டு. இத்தனையும் வைகறை யிருட்டிலேயே ஆக வேண்டும். இதற்கு முந்தி அவள் வேறொருவர் முகத்திலும் விழிக்கப்படாது. பிறகவள் சாணத்திற் கை யிட வேண்டும். கோமயமென்னும் சாணத்திலும், கோமூத்திரத்திலும் எத்தனையோ உத்தமமான சுத்தி யிலக்கணங்கள் இருக்கின்றனவென்று தத்துவ நூலார் சோதித்தறிந்திருக்கிறார்கள். கோமயம் பட்ட இடத்தில் ஈக்கள் சேரா. ஈக்களால் எண்ணிறந்த சுகாதார பங்கங்கள் நேரிடுவதை எல்லாரும் உணர்வர். வீட்டீக்களிற் கொடிய விஷப் பூச்சிகள் வேறெவையும் இல்லை. பாம்பேனும் பல்லாற் கடித்துக் கொல்கிறது. ஈக்கள் பறந்து மோந்து கொல்கின்றன. வேறெங்கெங்கோ வுள்ள தொத்துநோய்ப் புழுக்களைத் தமது கால்களிலும் சிறகுகளிலும் ஒட்டிக்கொண்டு வந்து கொட்டி விடுகின்றன. இப்படிப்பட்ட ஈக்களுக்கும் சாணத்துக்கும் எத்தனையோ தூரம். ஈ யென்னும் விஷத்தை மாய்க்கும் அமுதமென்றும் சாணத்தைச் சாற்ற வேண்டும்; உயர்வாகப் போற்ற வேண்டும். ஆகையால், நம் முன்னோர்கள் அதை ஒரு பெரும் பொருளாப் பற்றி வைகறையில் வீட்டு முற்றங்களில் தெளிக்கவும் மெழுகவும் வேண்டுமென்று பாடங் கற்பித்தார்கள். தற்காலத்து நவீன நாகரிகப் பெண்கள் இதைக் கொஞ்சமேனுங் கவனிப்ப



இல்லை. சாணத்தைத் தொட முகங் கோணுகிறார்கள். அப்பப்பா, அசி, ஆப்பீ என்கிறார்கள். அதற்குள்ளடங்கியுள்ள சுகாதாரத் தத்துவ நிலையை அவர்களுக்கு விளக்குவாரில்லை. ஆகையால், கன்னிமாட வாசத்துப் பெண்களுக்குச் சாணத்தைக் கண்டு நாணத்தைக்கொள்வது தவறென்று அதனுடைய உண்மையை விளக்கிக் காட்ட வேண்டும். மகள் மகள் முறையாய் நாட்டுப் பெண்கள் மட்டும் தற்காலத்துப் போலி நாகரிக முறையென்னும் வலையிற் சரியாய் அகப்படவில்லையாகையால், சாணத்தின் தன்மையை உணராமலே குருட்டாட்டமாய் அதை மெழுகவும் பூசவும் முட்டை தட்டவும் உபயோகித்து வருகிறார்கள். கன்னிமாடவாசத்திற் பெண்களுக்குக் கல்வி யென்றால், இப்படிப்பட்ட கல்வியை ஆரம்பத்திற் கற்பிக்க வேண்டுமன்றி,

“ தலையில்லாதவன் முண்டம்.
கண்ணில்லாதவன் குருடன்.
காலில்லாதவன் நொண்டி.
வாயில்லாதவன் ஊமை.
மீசையில்லாதவன் மோழை ”

என்று கற்பிப்பதில் ஒன்றும் பலனில்லை.

“ பசுவின் சாணத்தால் வீடு மெழுகலாம்.
பசுவின் சாணத்தால் முட்டை தட்டலாம்.
பசுவின் சாணத்தால் எச்சில் மாற்றலாம்.
பசுவின் சாணத்தால் ஈக்களை ஒழிக்கலாம் ”

இதுவே இல்லாளுக்கு வேண்டிய ஆரம்பப் படிப்பாகும். இல்லாளை நல்லாளாக்கவேண்டிய பாட புத்தகங்களே இந் நவீன நாகரிககாலத்திற் கிடையா. இல்லாளாகிய பெண்மகளும் வெளியாளாகிய ஆண்மகன் படிக்க ஏற்பட்டிருக்கும் புத்தகங்களில்,

'வாயில்லாதவன் ஊமை'

யென்று வாசித்து நாளைக் கழிக்க வேண்டுமென்பதில்லை. இப்படியே சென்னைத் துரைத்தனத் சட்டசபை அங்கத்தினரும் கல்வி மந்திரியைக் கேட்டிருக்கிறார்.

'வாயில்லாதவன் ஊமை'

என்பதை 'வாயிருந்தும் பேசாதவன் ஊமை' என்று எழுதத் தெரிந்தவர்கள் ஏற்படவேண்டும். பணத்தைக் கவனியாமல் படிப்பைக் கவனிக்கவேண்டும். ஏழைகளைக் கவனிப்பார் யாருமில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆதிகாலத்துப்பாட புத்தகங்கள் ஏராளமாய் ஏற்படவேண்டும். கூடியவரையில் அவர்கள், ஆதி நாள் முறையை அனுசரித்தே, தாய்மொழிக் கல்வி கற்கவேண்டும். அகரத்திலிருந்து கற்கத்தொடங்க வேண்டுமன்றி பகரத்தையும் டகரத்தையும் பிடித்துக்கொண்டு பட, டப, படபட, டபடப வென்று பரபரப்பாய் அதி அவசரமாய், ஏழைகளின் பணத்தை வாரிக்குவித்து வைத்துக் கொள்ளவேண்டுமென்று, 'ஏ, பீ, ஸீ, எம், ஏ, டீ, பீ, ஏ, டீ' என்று பிரபலமாய்ப் பயின்று பெருமோசத்துக்கு ஆளாகப்படாது. தாய்மொழியே வாய்மொழியென்று முதலில்,

'காலையில் எழு
கடவுளைத் தொழு' என்றும்,
'கல்வியைக் கல்
கற்றபடி நில்' என்றும்,
'காலையிற் குளி
கல்வியிற் றெளி' என்றும்,
'காலையில் வாசி
கற்றாரை நேசி' என்றும்

எழுத்தறியு முந்தியே பிள்ளைகட்கு வாய்மொழியாகத் தாய் மொழியைக் கற்பித்து நாக்கைத் திருப்பவேண்டும்.



நாக்கையும் வாக்கையும் திருப்பினபடியே அகராதியாக எழுத்துப் பயிற்சி செய்விக்கவேண்டும். தரையில் எழுதுவிக்கவேண்டும். அகராதியாக வுயிர்களையும், ககராதியாக இக், இங், இச்சென்று மெய்களையும், எழுத்து முறையாகச் சில நாட்கள்வரையிற் பயிற்றவேண்டும். கேட்ட எழுத்தையும் காட்டின எழுத்தையும் தவறாமற் சொல்லத் தெரிந்த பிறகு, பிள்ளைகளுக்கு வரிவடிவைத் தரையில் எழுதிக் காட்டி எழுதுவிக்கவேண்டும். முதலெழுத்து முப்பதும் நன்றாய்த் தெரிந்த பிறகு, பிள்ளைகளுக்குச் சார்பெழுத்தாகிய ககரம் காகாரம் முதலியவைகளைப் பாடம் பண்ணுவிக்கலாம். இவைகளையும் தரையில் எழுதுவிக்கையில், ககரத்துக்குப் பிறகு காகாரத்துக்குக் கால் போடுவதையும், கிகாரத்துக்குக் ககரத்தின் தலையிலேயே வளைவுக்கோடிடுவதையும், கீகாரத்துக்கு அதைச் சுழிப்பதையும், குகாரத்திற்குக் ககரத்தையே அடியில் வளைவுக்கோடிடுவதையும், கூகாரத்துக்குக் ககரத்துக்குப் பக்கத்தில் சுழித்திழுப்பதையும், கெகாரத்துக்குக் ககரத்துக்கு முந்தியொரு கொம்பு வளைவிடுவதையும், கேகாரத்துக்கு அக்கொம்பையே சுழிப்பதையும், கைகாரத்துக்கு, ககரத்துக்கு முந்தி இருசுழி வளைவிடுவதையும், கொகரத்துக்கு, காகாரத்துக்கு முந்தியொரு கொம்பிடுவதையும், கோகாரத்துக்கு அக்கொம்பையே சுழிப்பதையும், கௌகாரத்துக்கு, கெகாத்துக்குப் பிறகு ளகரமிடுவதையும் விளக்கிக்காட்டிக் கற்பிக்கவேண்டும். குழந்தைகளையும் பிறரையும் கெடுத்து, அவர்கள் மதிவளர்ச்சியைத் தடுத்து, அல்லலில் விடுத்து அழிக்கும் போலிப் படங்களைப்போட்டுப் பாட புத்தகங்களை மூட புத்தகங்களாக்கி விடக்கூடாது. யானையைப் படத்திற் காட்டுவதால், பிள்ளைகள் அதை அப்படத்தளவாகவே மதித்து விடுகிறார்கள். அவர்கள் பாராத பொருளைத் திடமொன்று படத்திற் சிறிய பொருளாகக் காட்டி

விடுவதால், அவர்களுடைய மதிவளர்ச்சி கெடுகிறது. கேட்டு, யூகித்துணரும் மதி குன்றுகிறது. ஆதிநாளில், இப்படிப் படம் என்பதே கிடையாது. அப்போது ஒவ்வொரு பொருளையும் வாத்தியார் மானதமாகவே கற்பித்தபடி பிள்ளைகளும் மானதமாகவே யூகித்துணர்ந்தார்கள். கூடுமானால் எந்தப் பொருளையும் நேரிற் காட்டலாம். மேலே சார்பெழுத்துக்களை வரிவடிவில் விளக்கிக் காட்டச் சொன்னபடி, யானையைப்பற்றி, 'அது இத்தனை பெரியது' என்று வாத்தியார் தந்தலைக்குமேலே கையை உயர்த்திக் காட்டலாம். தும்பிக்கை உலக்கைபோலிருக்கும், கால் உரல்போலிருக்கும், உடல் தொம்பை போலிருக்கும், தலை ஏற்றச்சால் போலிருக்கும், காது முறம்போலிருக்கும், வால் துடைப்பம்போலிருக்கும் என்று விளக்கலாம். அப்போதவர்களும் அதை ஊகித்துணரத் தொடங்குகையில் மதி விசாலமாகும். கூடுமானால் நான்கு உரல்களை யானைக்கால்கள்போல நாட்டி, அவைகளின்மேல் ஒரு பெரு மூங்கிற் றொம்பையை அதன் உடல்போலப் படுக்கவைத்து, ஏற்றச்சாலை யதிற் றலைக்கு மாறாக மாட்டி, அதில் உலக்கையைத் துதிக்கை போலத் தொங்கவிடலாம். ஏற்றச்சாலுக்கு இருபுறத்திலும் முறங்களை மாட்டிக் காதென்று காட்டலாம். வாற்புறம் துடைப்பத்தைக் கட்டலாம். பெரும் பொருளின் உருவத்தைச் சிறுபடத்திற் காட்டுவதினும் இம்முறை எத்தனையோ ஏற்றமானது. 'From the known to the unknown' 'From the concrete to the abstract' 'From the large to the small' 'தெரிந்ததிலிருந்து தெரியாததையும், தூலத்திலிருந்து, சூக்குமத்தையும், பெரியதிலிருந்து சிறியதையும் கற்பி' என்னும் தற்காலக் கொள்கைக்குப் படமூலமாய்க் கற்பித்தல் முற்றும் முரண்படுகிறது. கடைசியாகச் சொன்ன 'பெரியதிலிருந்து சின்னதைக் கற்பிக்க' முறையே ஒழுங்



ஙனமா யிருக்கிறது. அத்தனை பெரிய யானையைச் சிற்றுருவாகிய படத்திலிருந்து கற்பிப்பதென்றால் பிள்ளைகளுக்கு உய்த்துணரும் வன்மை தளர்கிறது. எவ்வெப்பொருள் எவ்வெத்தனை உருவுடையதோ, அவ்வத்தனையாகக் காட்டுவதே பிள்ளைகளின் மதியை வளர்ப்பதற்கு அனுகூலமாம். அப்படி அப்பொருளைக் காட்ட இயலாதேல் மானதமாய்க் கற்பிப்பதே மாண்பாகும். இதுவே பழந்தமிழ்நாட்டுக் கல்விமுறை. இம் முறையை அனுசரித்த பழந் தமிழ்நாட்டுக் கல்விக்குகந்த சுவடிகள், எழுத்தறிவிப்பதிலிருந்து முறையாக வெகு விரைவில் வெளியாகும்.

குருகுல வாசத்திலும், கன்னிமாட வாசத்திலும் கற்கையில் ஆண்களும் பெண்களும் மேற்குறித்த சுவடிகளையே படிக்கவேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறின்றி ஒரே சுவடியாகவே யிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான், அவர்களுடைய அபேத நிலை விளங்கும். பால் வேற்றுமையன்றிப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் வேறு வேற்றுமையில்லை யென்பதே ஆன்றோர் துணிபு. கொலை, களவு, கள், காமம், பொய் முதலிய ஐந்தீமைகளும், அவைகளுக்கு விதித்துள்ள தண்டங்களும் இருபாலார்க்கும் ஒன்றே. ஆகையால், அவர்கள் கற்கவேண்டிய நீதி நெறிக் கல்வியும் ஒன்றேயா யிருக்கவேண்டும்.

இப்படிக் கன்னிமாடத்திற் கற்கும் பெண்ணொருத்தி ஐந்து வயது முதல், மங்கைப்பருவம் அதாவது பதின்மூன்று வயது அடையும் வரையில், ஆடவும், ஓடவும், பாடவும், எழுத்துக் கல்விகற்றுத் தேறவுமா யிருக்கவேண்டும். தன்னை யறிந்த பிறகு அதாவது பதின்மூன்றிலிருந்து பதினேழு வயது வரையில், நான்கு வருஷகாலமும், தன்னுடைய உடலமைப்பு முதலியவைகளை அறிவிக்கும் சிற்றின்ப வெற்றி

முதலிய இப்படிப்பட்ட நன்னூற்களை நலம்பெற வாசிக்கவும் வாத்தியாரோடு யோசிக்கவும் தொடங்க வேண்டும். பின்னடியில் தனக்கு உபயோகமான கைத்தொழிலிற் றேர்ச்சி பெறவேண்டும். இதில் பெண்களுக்கு முக்கியமானவை நூல் நூற்றல், கூடை முடைதல், ஆடை நெய்தல் முதலியனவாம். தற்காலத்தில் பெண்களை வேறெந்தக் கைத்தொழிலிலும் அதிகமாகப் பயிற்றாமல், 'தையலுக்கு வேண்டியது தையல்' என்றபடி துணி தைக்குந் தொழிலிலேயே பழக்குகிறார்கள். நந்நாட்டு நாகரிக வழக்கப்படி நமக்குத் தையல் தொழிலே அநாவசியம். தையாத உடை உடுப்பதே நந்நாட்டு ஆண் பெண் இருபாலார்க்கும் ஆதிநாளிலிருந்து வரூஉம் உன்னத வழக்கமாம். நந்நாட்டுச் சீதோஷ்ண நிலையின் இருப்புக்குகந்த உடைகளுக்குத் தையலே அநாவசியம். கிழிந்த துணியைத் தைப்பதற்குக் கற்றுக்கொண்டிருந்தார்களன்றி நந்நாட்டார், பெரும்பாலும் பிறநாட்டாரைப் போலக் கத்தரியால் ஆடையை வெட்டி வெட்டி உருவைக் குலைத்து வேற்றுருவாக்கிக் காற்றோட்டமில்லாத சட்டைகளையும் பிறவையும் உபயோகித்துப் பெருமை குன்றினாரில்லை. ஆகையால் நாம், பெண்களுக்குத் தையல் வேலையை ஒரு பெரும் புதையல் வேலையாகப் பொருட்படுத்துகிறோமில்லை. பதினாறு முழம் சேலைகட்டும் பெண்டிர்க்குப் பாவாடையும் பிறவும் அநாவசியம். ஆதிகாலத்திற் பெண்கள் வார் என்னும் மார்க்கச்சுக் கட்டினார்களென்றால், தற்காலத்தில் வழங்கும் (வாஸ்ட் கோட், போடிஸ்) என்னும் அங்கிலமுறை வெட்டுப்பட்டு உருவானவைகளல்ல. அக்காலத்திய மார்க்கச்சுகளைத் தையாமலே நெய்யக் கற்றிருந்தார்கள். அவைகளும், தற்காலத்திய கச்சுகளைப் போலப் பெண்களின் மார்பளவை அழுத்தி உருக்குலைத்துக் காட்டாமல், இயற்கையளவாகக் காற்றோட்டமாய் உரு



வளவை உள்ளது உள்ளபடி அழகாய்க் காட்டக்கூடியனவாய் இருந்தன.

பதினைந்தாம் பிராயத்திலிருந்து பெண்கள் தந்தேகதத்துவ நூற்பயிற்சி செய்வதோடு, சுகாதார நூற்பயிற்சியும் செய்யவேண்டும். ஒவ்வொன்றையும் அனுசாரணையிற் செய்து தெளியவேண்டும். பிறர்க்குப் போதிக்குமுன், ஒவ்வொன்றையும் தாமே செய்து தேறவேண்டும். பதார்த்த குணமுணர்ந்து சமையல் செய்தல், பரிமாறுதல் முதலியவைகளும் தெரியவேண்டும்.

நந்நாட்டுச் சீதோஷ்ண நிலைக்குகந்தபடி பெண்களின் பருவத்தை ஏழாகப் பிரித்திருக்கிறார்கள் :

ஐந்துமுதல் ஏழுவயதளவும் பேதைப் பருவமாம்.
பதினொரு வயதளவும் பெதும்பைப் பருவமாம்.
பதின்மூன்று வயதளவும் மங்கைப் பருவமாம்.
பத்தொன்பது வயதளவும் மடந்தைப் பருவமாம்.
இருபத்தைந்து வயதளவும் அரிவைப் பருவமாம்.
முப்பத்தொரு வயதளவும் தெரிவைப் பருவமாம்.
நாற்பது வயதளவும் பேரிளம் பெண்ணாம்.

பெரும்பாலும் பெண்கள் மடந்தைப்பருவ காலத்தின் கடைசியிலேயே கலியாணஞ் செய்துகொள்ளவேண்டும். இருபத்திரண்டுவருஷம் கணவனோடு கூடி வாழ்ந்து, பேரிளம்பெண் பருவத்துக்குள் பிள்ளைப்பேறு முதலியவைகளைப் பெற்று மணவாழ்க்கையைப் பூர்த்திசெய்து, உலக நலத்துக்காக உழைக்கவேண்டும்.

அன்றியும் பெண்களுக்கு வாலைப் பருவம் பதினாறு வயதளவு மென்றும், தருணிப் பருவம் முப்பது வயதளவு மென்றும், பிரௌடைப் பருவம் ஐம்பத்தைந்து வயதளவு மென்றும், அதற்கப்பால் சாமளவும் விருத்தைப் பருவ மென்றும்,

மென்றும் பிறநாட்டாராகிய ஆரியர் பிரித்துவைத்திருக்கிறார்கள். கன்னி மாடத்திலிருக்கும் பெண்பிள்ளை ஒவ்வொருத்தியும் மேற்குறித்த பருவங்களையும் பின்வரும் விஷயங்களையும் நன்குணரவேண்டும். வாலைப்பருவமாகிய மங்கைப் பருவத்திலேயே அதாவது, இந்நாட்டுச் சீதோஷ்ண நிலையின்படி பெரும்பாலும் பதின்மூன்று பதினான்கு வயதிலேயே பெண்ணொருத்தி தன்னையறிகிறாள்.

‘வம்பிமகள்
தன்னை யறிந்தாள் சருக்கரைப்பிட் டெங்கும்
அன்னை யறிந்தாள் அகமகிழ்ந்தாள்’

என்று விறலிவிடு தூதென்னும் நூலில் விளம்பியுள்ளபடி தன்னையறிந்தாளென்பதைச் சாதாரண வுலகவழக்கில் *தெருண்டாள், சமைந்தாள்; ஆளானாள் என்று வழங்குகிறார்கள். தெருண்டாளென்பதும் தன்னையறிந்தாளென்பதும் ஆகிய இரண்டும் ஒன்றேயாம். சமைந்தாள் என்பதற்குப் பக்குவமானாள் என்று பொருள். எதற்குப் பக்குவமானாள்? தலைவனோடு கூடுவதற்கு. இதற்கே பூத்தாள் என்றும் சொல்லுகிறார்கள். இங்கே பூத்தது என்பதற்குப் பட்டினத்தார் கூறியபடி எருவாய்க் கிருவிரற்கடையளவில், மேலேயுள்ள கருவாய்திறந்தது என்பது பொருள். பூத்ததனால், இனி ஆண்மகரந்தமாகிய சுக்கிலத்தின் சேர்க்கையால் ஒருத்தி காய்ப்பதற்குத் தக்க பருவ மங்கை ஆனாள் என்பதனாலேயே ஆளானாள் என்றும் வழங்குகிறார்கள்.

‘தன்னையறிந்தவன் தலைவனை யறிவான்’ என்று வழங்குவது பேரின்பத்தைக் கருதியிருப்பது போல, தன்னையறிந்தவள் தலைவனையறிவாள் அதாவது தன்னை

* இதையே திரண்டாளென்கிறார்கள்.



யறிந்தவள் நாயகனோடு கூடிவாழ அறிவாள் என்று சிற்றின்பத்தைக் கருதியதாகும். ஒவ்வொரு பெண்மகளும் கன்னி மாடவாசத்திலேயே தன்னை யறிவாளாகையால், அங்கிருக்கையிலேயே அவள், தன்னுடைய கருப்பையிலக்கணத்தை நன்குணர வேண்டும். தன்னையறிவதற்கும் கருப்பைக்கும் சம்பந்த முண்டென்று, ஒவ்வொரு பெண்மகளும் தன்னுணர்ச்சியினாலேயே நன்றாய்த் தெரிந்துகொள்வாள். ஆயினும் அவள் தன் கருப்பையமைப்பை உள்ளது உள்ளபடி உணர்ந்து கொண்டால் தான், பிரசவ காலத்தில் நாட்டு மருத்துவச்சி முதலிய மூடப்பெண்களிடத்திற் குருட்டாட்டமாய் அகப்பட்டு நோய்க்காளாக மாட்டாள்.

கருப்பையென்பதற்குக் கருக்குழி யென்றுந் தமிழில் வழங்குகிறது.

‘கருவினுரு வாகிவந்து வயதளவிலே வளர்ந்து’

என்பதிலிருப்பது போலக் கருவென்றும் கருப்பைக்கு வழங்குவது உண்டு. கருப்பை, மெல்லிய தோலாலும் நரம்பாலும் அமைந்திருக்கிறது. வயிற்றுக்குள் ஈருள் மண்ணீருள் முதலியவைகளுக்கு அடுத்தாற்போல, மூத்திரப்பை, மலப்பை, கூபகம் இவைகளுக்கு இடையில் அதிக பத்திரமாய்க் கருப்பை பொருந்தி யிருக்கிறது. அது மெல்லிய தோலாலாகிய சவ்வினாலும் நரம்புகளாலும் அமைந்திருப்பதனால்தான், பிண்டம் வளர வளரத் தானும் துடைப்பான் (ரப்பர்) போல் வளர்ந்து இடங்கொடுத்துக்கொண்டே போகிறது. பிண்டம் வெளிப் பட்டவுடனே அது எப்போதும் போலச் சுருங்கிப்பழைய நிலைக்குவந்துவிடுகிறது. ஈருள் மண்ணீருள்களுக்குச் சமீபத்தில் இருப்பதனால் அது, போதுமான சூட்டைப் பெறுகிறது. தன்னைப் போல வளர்ந்தும் சுருங்கியும் சமயோசிதமா யியங்கக்கூடிய

மெல்லிய மல மூத்திரப் பைகளுக்கிடையில் அது இருப்பதும், தன்னுடைய வளர்ச்சிக்கொரு தடைவாராதிருக்கும் பொருட்டும், தனக்கு எந்தவிதத்திலும் அதிர்ச்சி வாராதிருக்கும் பொருட்டுமேயாம். அது, குழந்தையைச் சுளுவாய் வெளிப்படுக்கும் பொருட்டே அடிவயிற்றிற் பொருந்தியிருக்கிறது.

பிறப்பிடமாகிய பெண்மகளின் கருப்பையும், ஆண் மகனுடைய குறியாகிய விதைக்கொட்டையென்னும் பீஜமும், விந்துக் குழலென்னும் கோசமும் போலவே அமைந்திருக்கிறது. ஆண்மகனுக்கு, அவைகள் வெளியே தோன்றுகின்றன; பெண்மகளுக்கு, உள்ளடங்கித் தலைகீழாயிருக்கின்றன. கருப்பையானது, தட்டையாய் மேற்புறம் அகன்று, கீழ்ப்புறம் திரண்டுருண்டு சிறுத்திருக்கும். இப்படிச் சிறுத்திருப்பதற்குக் கழுத்தென்று பெயர். கழுத்துக்குச் சிறிது தூரத்தில் வாயிருக்கிறது. இந்தவாயைச் சுற்றியே பெண்குறியென்னும் அல்குல் பொருந்தியிருக்கிறது. சுருக்குப்பையின் வாயைப்போலவே கருப்பையும் தன் வாயை அழுத்தமாய்ச் சுருக்கிக்கொள்ளும் தன்மையுடையது. அப்போது அதற்குள் ஓர் ஊசி நுழைக்கவும் இடந்தராது. கருப்பற்றுதிருக்கையில், அதனுடைய தோல் தடிப்பாய் நீண்டிருக்கும். கருப்பற்றின பிறகு நீளங்குறைந்து அகலமாக ஆகத் தோலுந் தடிப்பிற் குறைந்து மெல்லியதாகும். கருப்பையின் நீளம் சாதாரணமாய்க் கருப்பற்றுதிருக்கையில் மூன்றங்குலமும், அகலம் இரண்டங்குலமும், கனம் ஓரங்குலமுந்தான் இருக்கும். உடல் இயற்கைக்குத் தக்கபடி இந்த அளவு ஏறுவதுங் குறைவதுமுண்டு. மானிடக்கருப்பை இதுவரையில் ஆறங்குல நீளத்திற்கு அதிகமிருந்ததில்லை. ஆண் கருவிகளாகிய கோசப் பீசம் முதலியவைகளைப் போலவே, பெண்கருவியாகிய கருப்பையும், மூளை, இதயம் (heart)



முதலியவைகளோடு நரப்புத் தந்தி மூலமாய்ப் பொருந்தமுற்றிருக்கிறது. கருப்பையில் ஏதாவது அனுவத்தனை குற்றங் குறை உண்டானாலும், உடனே அதை நரப்புத்தந்தி மூலமாய் இரைப்பை அறிந்துகொள்ளும். இரைப்பைதான் கருப்பைக்கு அதிக சமீபத்தில் இருக்கிறது. இதனாலேயே, கருப்பையில் கருப்பற்றியவுடனே இரைப்பையில் உணவு தங்குவதில்லை. வாந்தியும் மயக்கமும் தியக்கமும் உண்டாவதற்குக் காரணம் இதுவேயாகும். மற்ற மல மூத்திரப்பைகளிற் போலவே கருப்பையிலும் உடற் கழிவு தங்குகிறது. அவைகள் தத்தம் அழுக்கை வெளிப் படுத்துவது போலவே கருப்பையுந் தன்னிடத்திற் றங்கியுள்ள மதநீரை வெளிப்படுத்திவிடுகிறது. மலப்பையில் தங்குவது உணவின் பசையற்ற அழுக்கு. மூத்திரப்பையில் தங்குவது சலநீர். கருப்பையில் தங்குவது, நாதச் செந்நீர். வெண்ணீரும் சிலகாலத்தில் உண்டு. இந்த மூன்றுபைகளும் அதனதன் காலக்கிரமப்படி கழிவை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும். பெண்களுடைய தேகநீர்கெட்டு மேகநீராயிருக்கையிலேயே கருப்பையிலிருந்து வெண்ணீரும் வெளிப்படும். ஆணிரத்த சத்தாகிய விந்துவை இழுத்துச் சேர்த்துத் தன்னுடைய சூடு கொடுத்துக் காத்துவளர்த்துப் பக்குவகாலத்தில் வெளிப்படுத்தும் வல்லமை கருப்பைக்கு இயற்கையாயிருப்பதனாலேயே, அதனுடைய உபயோகம் வேறெந்தக் கருவிக்கும் இல்லையென்று நன்றாய் விளங்குகிறது. மாதமாதம் அதிலிருந்து வெளிப்படும் செந்நீரும் வெண்ணீரும் மிதமிஞ்சின மத நீரேயாகும். இவைகளை வெளிப்படுத்துவதாலும் கருப்பையின் உபயோகம் நன்கு விளங்கும்.

கருப்பையே மனிதப்பயிர் விளையும் விளைநிலத்துக்குச் சமானமாயிருக்கிறது. இப்படிப்பட்ட நிலவுரிமை யான

ராகிய பெண்கள், அதன் தன்மையுணர்ந்து, பண்படுத்திக்
கொண்டிருந்தால்தான், பிறகதில் விதைக்கும் வித்துக்
கெடாமல் தக்கபடி முளைந்து விளைந்து பலன்தரும். நிலம்பண்
பட்டில்லையேல், அதில் இடும் நல்ல வித்தும் அழுகிப் பலன்
தராமற்கெடும். ஆணிரசம் என்னும் வெள்ளிரத்தச் சுத்த
சத்தாகிய விந்து, நோய்கொண்டு மெலிந்துள்ள கருப்பை
யென்னும் நிலத்தில்விழுந்தவுடனே அழுகிப்போவதால்,
அநேகங் கெடுதல்களுக்கு இடமாம். அது பிள்ளைப்பேறில்லா
மலட்டுக்கும் வழியாக்கும். ஆகையால் ஒவ்வொரு பெண்
மகளும், தன் கருப்பை இருப்பை நன்றாய்த் தெரிந்து
கொண்டிருப்பதே நாணயமாம்.

தன்னையறிந்த பெண்மகள் தலைவனை யறிவதற்கு
முன்னே,

'தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே-ஒரு
தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே'

என்று பெரியார் பணித்தபடி, இப்படிப்பட்ட நன்னூற்கள்
மூலமாய்த் தன்னுடைய கருப்பை யிலக்கணத்தைத் தப்பற
வுணர்வதே சால்புடைத்தாகும். அதுவே, தன்னைமுற்றும்
உணர்ந்தபடியாகும். இந்நாட்டுச் சீதோஷ்ண நிலையின்படி,
பத்திலும், பதினொன்றிலும், பன்னிரண்டிலும், பதின்மூன்
றிலும், பதினான்கிலும், பதினைந்திலும் ஒவ்வொரு பெண்
பிள்ளையும் ஆளாய்விடுகிறாள். அதனால் அவள் தன்னையறிந்
தாளென்கிறார்கள். சினைப்பையில், இளவயதாகிய இரண்
டாவது வயதிலிருந்தே சினைகள் முதிரத்தொடங்கி, அவள
வளுடைய உடல் நிலைக்கு உகந்தபடி பத்திலிருந்து பதி
னைந்தாம் பிராயம்வரையில் பழுத்து வெடித்து, நாதக்
குழல்களின் வழியாய்க் கருப்பைக்குட் சென்று, அங்குள்ள
மூக்குச் சளிபோன்ற சவ்வோடும் கழிவுடையான செந்
நீரோடும் வெளிப்படுவதொன்றாலேயே ஒருத்தி, தன்னை



முற்றிலும் எப்படி அறிந்தவளாய்விடுவாள் ? ஒருகாலும்
இல்லை. தன்னுடைய கருப்பை இருப்பைத் தக்கபடி கல்வி
கேள்வி அனுபவங்களால் உணர்ந்துகொண்டு, அதற் கோரி
டையூறும் வாராமற்காத்துக் கொள்பவளே தன்னையறிந்த
வளாவாள்.

வயது வந்த ஒவ்வொரு பெண்பிள்ளையும் முதலாவது
தன் அடிவயிற்றிற் கூபகம் என்னும் பல எலும்புக் கூட்டம்
இருப்பதைக் கவனிக்கவேண்டும். அது முது கெலும்பின்
அடிக்கோடியில் கடைசி முள்ளந்தண்டோடு கூடியிருக்
கிறது; ஆசனச் சந்தெலும்புகளில், இரண்டு தொடைஎலும்பு
களும் சேர்வதனால் கால்களோடு இணைந்திருக்கிறது. ஆளான
பெண்ணின் கூபகம், ஆசனச் சந்தெலும்புகள் இரண்டு,
பிடிகை எலும்பு ஒன்று, புச்சஎலும்பு ஒன்று ஆகிய
நாலெலும்புகளாலாயிருக்கிறது. ஆசனச் சந்தெலும்புகள்
கூபகத்தின்முகப்பும் பக்கங்களு மாயிருக்கின்றன. ஒவ்
வொரு பெண் பிள்ளைக்கும் பிறந்து சிலகாலம் வரையில்,
ஒவ்வொராசனச் சந்தெலும்பும், இடுப்பெலும்பு, ஆசன
எலும்பு, மேகன எலும்பு என்று மூன்று பிரிவுள்ள
தாயிருக்கிறது. வயது வந்த பிறகு இப்பிரிவினை யில்லாமல்
மறைந்துபோகும்.

ஆண்மக்களுக்குப் போலவே, பெண்மக்களுக்கும்
இரண்டு விதைக்கொட்டைகளுண்டு. அவைகள் பக்கத்துக்
கொன்றாய் கருப்பையின் இரண்டு பக்கங்களிலும் பொருந்தி
யிருக்கின்றன. ஆண்களுடைய விதைக்கொட்டைகள் நீண்டு
ருண்டு பலாக்கொட்டைகள்போல ஒரேபைக்குள் பொருந்தி
யிருக்கின்றன. இடையில் ஒரு மெல்லிய தோலிருந்து,
அவைகளை வேறுபிரிக்கின்றது. பெண்மக்களுடைய விதைக்
கொட்டைகள் நீண்டுருண்டு இலுப்பைக் கொட்டைகள்
போல வெவ் வேறு பையில் அமைந்திருக்கின்றன. இவை

களுக்குச் சினைப்பைகளென்றும் நாதாசயங்களென்றும் பெண்பீசங்களென்றும் பெயர். இவைகள் சுமார் ஒன்றரை அங்குல நீளமும், முக்கால் அங்குல அகலமும், அரை அங்குலத்தடிப்பு மடிப்பு முள்ளவைகள். ஆண்களுக்கு விந்து என்னும் இரத்தசத்தானது விதைக்கொட்டைகளிலிருந்து, சுக்கிலநரம்பு வழியாய் நீர்த்தாரைக்குள் வெண்ணிறமாய்ச் செல்லுகிறது. பெண்களுக்கு நாதம் என்னும் இரத்தசத்தானது விதைக்கொட்டைகளிலிருந்து, நாதக்குழல்கள் வழியாய்க் கருப்பைக்குள் செந்நிறமாய்ச் செல்லுகிறது. நாதக் குழல்களென்பன, பெண்களின் விதைக் கொட்டைகள் அல்லது, பீசங்களுக்கொன்றாய் இரண்டு பக்கத்திலும் தாரையைப் போல நீண்டு, ஒரு முனை, கருப்பையின் மேல்முனையோடு கூடியும், மற்றொன்று குஞ்சம போல் விரிந்து அந்தரத்தில் தொங்கிக்கொண்டுமிருக்கும். இந்தக் குஞ்ச முனைதான் சினைப்பையோடு ஒரு நரம்பினால் இணைந்திருக்கிறது. நாதக்குழல் ஒவ்வொன்றும், நாலு அல்லது ஐந்து அங்குல நீளமுள்ளதாயிருக்கும். அவைகளின் உள்தொளை மிகவும் குறுகலானது. அதனால்தான், ஆண்களுக்கு விந்து ஒரேதடவையில் அதிசீக்கிரத்தில் வெளியாய் விடுவதுபோல, பெண்களுக்கு நாதம் ஒரேதடவையில் வெளியாய்விடுவதில்லை. கொஞ்சங் கொஞ்சமாய்ப் பையப் பைய வெளிப்படும். இதைக் கவனித்துப் பெண்களைத் தனியே தவிக்கவிடாதவனே கொக்கோக வித்தையை யுணர்ந்த நாகரிக புருஷனாவான். அதிசீக்கிரத்தில் ஒரேதடவையில் தனக்கு விந்து வெளிப்படுவதையே பிரதானமாக்கொண்டு, அதற்குப் பலவிதத்திலும் ஆதாரமாயிருந்த தன் மனைவியைத் தவிக்கவைப்பவன், அவளுடைய நாத நிலை உணராத பேடியாவான். அப்பேர்ப்பட்டவன் இப்பேர்ப்பட்ட உன்னத நூலைவாசித்த பிறகேனும் திருந்தக் கடவன்.



தன்னுடைய விந்து நிலையை உணர்ந்து, அதைத்தன் வசப்படுத்தி வைத்துக்கொள்ளக் கடவன். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நான்கு கவசம் பூண்டு, தன்னை மறந்து அவசமாய் இருக்கும் நாயகியின் நாத நிலையை உணர்ந்து கொள்பவனே சிற்றின்ப ஞானத்திற் சிறந்த வெற்றி பெறுபவனாவான். புறத்தொழில்களாகிய ஆலிங்கனம் முதலியவைகளாலேயே நாயகியைக் கனிவித்து, அவளுக்கு இன்ப மூட்டக்கடவன். எப்போதவள் நாத நிலை உச்சத்திலிருக்கின்றதோ, அப்போதவள் இன்ப முதிர்ச்சியால் தன்னை மறந்து அவசமாவாள். அக்குறிப் புணர்ந்த பிறகும், அவளைத் தனியே தவிக்கவிடாமல் நாத நீரூறுமட்டும் அவளோடு கூடியிருந்து, அக் குறிப்பை நுட்பமா யுணர்ந்து, கடைசியாகத் தன் சுகானுபவத்தைக் கவனிப்பவனே சுஞ்ஞானியாவான். இதனாலேயே பெண்பாவம், பெண்தோஷம் என்று பெரியார் பேசுகிறார்கள். பெண்ணாவாரம் பெரிது என்பதும் இதனாலேயேயாம். எங்ஙனும் கற்புடைய மனைவியர், தம் சுகானுபவ பங்கத்தை வாய்விட்டு வெளியே சொல்ல மாட்டார்கள். சுகானுபவ முதிர்ச்சியையேனும் ஒருவாறவர்கள் குறிப்பிற் காட்டுவார்கள். ஆகையால், நாயகன் ஒவ்வொருவனும் சுகானுபவ விஷயத்தில், அதிசீக்கிரத்தில் ஒரே தடவையில் விந்து வெளியாய்விடும் தன்மையுள்ள தன்னைப்போலவே, பையப் பையப் பல தடவையில் சிறுகச் சிறுக நாதம் வெளிப்படும் தன்மையுள்ள தன்னாயகியையும் எண்ணி, அவளைத் தனியே தவிக்கவிடக் கூடாது. பெண்களின் நாதக்குழல் மிகச் சிறிய குறுகிய துவாரமுடைய தென்பதை இப்போதேனும் தப்பறவுணர்ந்து மறவாதிருக்க வேண்டும்.

பெண்களின் விதைக்கொட்டை அதாவது சினைப் பையில் ஏறக்குறைய 50000 சிற்றறைகள் நிறைந்த தசை பொருந்தியிருக்கும். அவைகள் தேனடைப் புழுக்கூடுகள் போலத் தோன்றும். இந்த ஒவ்வொரு சிற்றறையிலிருந் தும் பெண்களுக்கு இருபத்தெட்டு நாட்களுக் கொருமுறை கருப்பையிலிருந்து விடாய் வெளிப்படுகையில் ஒவ்வொரு சினை வீதம் வெடித்து வெளிப்படும். இது மிக நுண்ணிய தாய் ஓரங்குல நீளத்தில் நூற்று முப்பத்தைந்தாம் பாகமாக இருக்கும். இதைப் பூதக்கண்ணாடியாலேயே சரியாய்ப் பார்க்க முடியும். ஒவ்வொரு சிற்றறையிலும் மஞ்சட் கருவுண்டு. இந்தச் சினையைக் கருப்பையிற் கொண்டுவந்து சேர்ப்பதற்கே நாதக்குழல் அமைந்திருக்கிறது. இப்படி இந்தக் குழல், நாதச் சினையைத் தன்னிடத்திற் கொள்வ தால், சிறிது பருக்கிறது. இது கொஞ்சம் அளவுக்கு மிஞ்சிப் பருப்பதனாலேயே அநேகம் பெண்களுக்கு மாத விடாய் காலத்தில் வயிற்றுவலி உண்டாகிறது. சில பெண் களுக்கு இந்தச் சினை பருத்தும், நாதக்குழற் புழை சிறுத் தும் இருப்பதனாலேயே அது, கருப்பையில் வந்து சேராமல் நாதக்குழலிலேயே வளர்ந்தூர்ந்து சில நாட்களில் மரித்து விடும். அப்போது அப் பெண்கள் வயிற்றுவலியாற் படும் பாடு பெரும்பாடாயிருக்கும். கருத்தரிக்காமலே அவர்கள் மலடிகளாய் விடுகிறார்கள். இதற்குச் சிகிச்சையே கிடை யாது. நாதக்குழலை அகற்ற யாரால் ஆகும்! சினைப்பையி லிருந்து வெளியான சினைப்புழு, கருப்பைக்குள் வந்து சேர எட்டுநாளாகும். அதுவரையில் அது உயிருடன் பிழைத்தே யிருக்கும். மாதவிடா யாகும்போது தான் நாதக்குழலுக்குச் சினைப்புழுவைத் தனக்குள் இழுக்கும் சக்திஉண்டு. *மற்றைக்

* மாதவிடாய்த் தொடக்கத்துக்கு முந்திய காலமும், நிற்பாட் டிற்குப் பிந்திய காலமும்.



காலங்களில் வெடிக்கும் சினைப்புழுவை நாதக்குழல் தனக்குள் இழுத்துக்கொள்ளாது. அது அங்கேயே மரித்துத் தொந் திக்குள் இறங்கிவிடும். நாம் மேலே காட்டியபடி பெண் குழந்தைகளுக்கு இரண்டு வயதிலிருந்தே இந்தச் சினைப் புழுக்கள் தோன்றும். மாதவிடாய் நின்றுபோன கிழவிகளுக் கும் இது உண்டு. இரண்டிடத்திலும் கருப்பைச் சம்பந்த மான மாதவிடாய் இல்லாததனால், அந்தச் சினைப் புழுக்களை நாதக்குழல்கள் இழுத்துக்கொள்வதில்லை. ஆகையால் அவைகளால் ஒரு பிரயோஜனமுமில்லை. முன்னையவை பருவம் வாராததனால் பிஞ்சாயுலர்ந்தும், பின்னையவை பருவங் கடந்ததனால் தேய்ந்து உலர்ந்தும் சுருங்கிவிடுகின்றன.

மாத வெளிப்பாட்டின் காலத்தில் வெடித்து வெளிப் படும் பெண் சினையானது நாதக்குழலின் வழியே ஊர்ந் தூர்ந்து எட்டுநாள் வரையில் விடாமற் பயணம்போய்க் கருப்பையிற் சேருகிறதென்று முன்னமே சொன்னோம். அங்கது சேர்ந்த பிறகாவது சேரும்போதாவது, ஆண் தாதுவில் உள்ள கருக்கிருமி யொன்றைச் சந்திக்குமாயின், இரண்டும் பொருந்திக் கலந்து ஐக்கியமாய்விடும். இதுதான் கருத்தரித்தலென்று பெயர் பெறும்.

ஆண் குறியில் தசையும் இரத்தக் குழாய்களும், உறுதி யான நார்போன்ற மூன்று குழாய்கள் (Cylindrical Fibrous Compartments) சூழ இருக்கின்றன. இதில் நரம்புகளே அதிகம். ஆகையால் இரத்தோட்டம் வெகு சீக்கிரத்தில் உண்டாகிறது. அதனால் இதற்கு விறைக்கும் வல்லமை குழந்தைப் பருவத்திலிருந்தே உண்டாய் விடு கிறது. இது விறைத்துக்கொள்ளும் போதெல்லாம், பெண் சேர்க்கை இருக்க வேண்டுமென்றெண்ணுவது பித்தர் செய்கையாகும். இப்படி யெண்ணுவதாலேயே சில வெறி மக்கள், பதினொன்று, பதினைந்தென்னும் சிறு பருவத்

திலேயே, பெண்சேர்க்கை எளிதில் கிட்டாமையால், தத்தம் கைகளாலேயே ஒருவிதப்புணர்ச்சி யுணர்ச்சி யுண்டாக்கிக் கொண்டு கெடுகிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்குக் குறிகளில் நரப்புத் தளர்ச்சி உண்டாவதால், பெண் சேர்க்கையின் போது ஆண்தன்மையின்றி அவமான முண்டாகுமென்பது திண்ணம். ஆகையால் இதுவிஷயத்தில் இளைஞர்கள் எச்சரிக்கை யாயிருக்கவேண்டும். விரைப்பையிற் கொட்டைகள், நரம்பினாலும் தசையினாலும் ஆனவைகள். ஒவ்வொரு கொட்டையையும் சோதித்துப் பார்த்தால், சுமார் முந்நூறடிக்குமேல் நீளக்கூடிய சிறுபுழையுள்ள மெல்லிய நரப்புக் குழைகளைக் காணலாம். இவைகளுக்கு விந்துதாரைகள் அல்லது தாதுக்கள் என்று பெயர். இவைகள் கொட்டை நரம்போடு சேர்ந்து மேலேறி, மூத்திரப்பைக்குப் பக்கத்திலுள்ள சுக்கிலாசயத்துட்சென்று, விந்தை வெளிப்படுத்தும் குழலோடுகூடி நீரோடும் வழியோடு முடிந்துவிடும். விரைக் கொட்டைகளிலுள்ள இந்நரப்புக் குழைகளிலேயே விந்து பிறந்து, மூத்திரப்பைக்கு அடியிலுள்ள சுக்கிலாசயத்துட் சென்று தங்கியிருக்கும்.

விந்துவைப் பூதக்கண்ணாடியிற் சோதித்துப்பார்த்தால், முட்டைவடிவமாய்ப் பருத்த தலைகளும் நீண்டவால்களுமுள்ள கோடிக் கணக்கான கிருமிகள், வால்களை யாட்டினபடியே நீந்திக்கொண் டிருப்பதைப் பார்க்கலாம். இவைகளே பிண்டோற்பத்திக்கு (சிசுவுண்டாவதற்கு) முதற் காரணமாயிருக்கின்றன. இவைகள், பெண் சினையின் மஞ்சட் கருவோடு கூடுவதனால்தான் கருத்தரிக்கிறது. விந்துவின் ஒரு துளிக்கு எண்பது துளி இரத்த சத்துச் சேரவேண்டி யிருக்கிறதென்பதை ஆண்மக்களில் ஒவ்வொருவரும் நன்கு கவனிக்கவேண்டும். ஒரு துளி விந்து சேதமானால் எண்பது துளி சுத்தரத்தம் சேதமானபடியாகும்.



இது பற்றியே,

'விந்து விட்டையோ,
நொந்து விட்டையோ!'

என்னும் பழமொழியும் வழங்கி வருகிறது. இந்த விந்து ஊறுவதிற் குறையிருப்பதனாலும் ஆண்மலடு நேரிடுவது உண்டு. விரைக்கொட்டையில் விந்துவூறி நரம்பு வழியாய் மேலேறிச் சுக்கிலாசயத்துக்குப் பயணம் போகும் இடை வழியில் ஏற்படும் தடைகளாலும் ஆண்மலடு நேரிடுவது உண்டு. இவைகளுக்கு மணிமந்திர மருந்துகளில்லையேனும் தந்திரச் செய்கைகள் அநேகம் உண்டு. அவைகளை வைத்திய நூல்களிற் கண்டுகொள்க. விந்துவுக்கும் மூளைக்கும் விசேஷ சம்பந்தம் உண்டு. இரண்டும் உறுதியானால் ஒரே காலத்தில் ஆகிறதுபோல, மெலிந்தால், ஒரே காலத்தில் மெலிகின்றன. ஆகையால், விந்துவை வீண்விரயஞ் செய்பவன், உடல் வலியிழந்து, நரம்பு சோர்ந்து, நாடி குன்றி நடைப் பிணமாவான். கடைசியாகப் பெண்களால் அவமானமடைந்து வெறிபனாய்த் திரிவான்.

ஆண்மக்கள் வயிற்றில் அதிக உயரத்தில், பின்பக்கமாய் வலக்குண்டிக்காய் இருக்கிறது. அதில் வந்து சேரும் இரத்தக் கழிவுகளிலிருந்து மூத்திரம் சுரக்கிறது. பிறகது அங்கிருந்து, நீர்க் குழாய்வழியா யோடி மூத்திரப்பை யென்னும் ஜலாசயத்தில் கூடி நின்று, நீர்விடவேண்டிய சமயத்தில் மூத்திரக்குழாய் வழியாய் ஆண் குறியிற்சென்று வெளியாகிறது.

ஆண்மக்கள் அதிகாலையிற் படுக்கை விட்டெழுமுன் மூத்திரப்பையும் மலப்பையும் நிறைந்திருப்பதால், அவைகளுக்கிடையிலுள்ள சுக்கிலாசயமென்னும் விந்துப்பையை நெருக்குகின்றன. அதனால், அதன் மெல்லிய நரம்புகளுக்குக் கிளர்ச்சியுண்டாகி, ஆண்குறியைக் கம்பிபோல

நோய் நிற்கும்படி விரைப்பிக்கின்றன. மல்லாந்து படுத்திருக்கையிலும், மூத்திரப்பை, சுக்கிலாசயத்தை அழுத்துவதால், ஆண்குறிக்குக் கிளர்ச்சியுண்டாகிறது. ஆகையால் எப்போதும் மலசலம் அடக்காதவர்களும் இடப்புறமாய் ஒருக்கணித்துப் படுத்துக்கொள்ளுகிறவர்களும் இக்கிளர்ச்சிக்கு இடங்கொடாமல் வாழலாம். விந்துவில் சுமார் அறுபதுகோடிக் கிருமிகள் இருக்கின்றன. கருத்தரிக்க, அவைகளில் ஒன்றேனும் கருக்குழியில் நுழைந்து அங்குள்ள பெண்சினையைச் சந்தித்தாற்போதும். இரண்டும் பாலுநீரும்போல இரண்டறக்கலந்து அசைவற்று நின்றுவிடும். இதுதான் ஆண் பெண் அபேத ஐக்கியநிலை. இதுதான் அண்டப்பகுதியிற்றோன்றும் பிண்டப்பகுதி யாகும். இதைத்தான் பட்டினத்தடிகள் தமது திருவாக்கால்,

'ஒருமட மாதுமொருவனு மாகி
இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு'

என்றோதினர். இப்படி அசைவற்று நின்ற பிண்டம், அண்டத்திலிருந்தபடியே,

'பதும வரும்பு கமட மிதென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைக ளென்ற
உருவமுமாகி'

என்றபடி உருவாகத் தொடங்கும்.

பெண்மக்களின் அடிவயிற்றின் கீழ், மெத்தென்று குறுமயிர் படர்ந்திருக்கும் மேடான இடத்திற்குக் கடிதடம் என்று பெயர். அதற்குக் கீழ் இருப்பவைதாம் நிதம்ப உதடுகள். புணர்ச்சி புணர்ச்சியால் இவ்வுதடுகளுக் கிடை-



யில் ஒருவிதப்பசைநீர் சுரந்து, அங்குள்ள பூநரம்பை ஆண்குறியோடு பொருத்திப் பெண்மகளுக்கு இன்பமுண்டாக்கும். பூநரம்பென்பது நிதம்ப உதடுகளுக்கிடையில் ஆண்குறிபோல் சற்று நீண்டுள்ள சிறிய உறுப்பாகும். இதற்குப் பலவிதமான காவியப் பெயர்கள், மன்பதபீடம் என்றும், மொக்குள் என்றும், கிளிமூக்கு, மணிமூக்கு என்றும், மன்மத மண்டபம், காமக் குருபீடம் என்றும் அபரிமிதமாய் வழங்குகின்றன. ஆண்குறிக்கு இருப்பது போலவே இதற்கும் எண்ணிறந்த நரப்புத் தொடர்ச்சியிருப்பதால், பெண்களுக்கு ஆணின் பரிசத்தால் கூச்சம் உண்டாக்கி இன்பந்தரக்கூடிய உறுப்புக்களில் இதுவே முதன்மையானது. இதன் நுனி, குண்டூசித் தலைபோல் சிறுகத்திரண்டிருக்கும். இதுவே பெண்மகளின் இன்பநிலை.

இந்தப் பூநரம்புக்கடியில் மூத்திரதாரை வந்துமுடியுமிடமிருக்கிறது. இதன் வழியாகவே சிறுநீரிறங்கும். மூத்திரதாரைக் கடியிலிருப்பதே முன் நாம் கூறியுள்ள அல்குல் துவாரமாகும். இது ஏறக்குறைய நாலங்குலத் தூரமுள்ளதாய், கருப்பையின் வாய்வரையில் நீண்டு சூழ்ந்திருக்கிறது. இது துடைப்பான் (rubber) குழாய்போல, நரம்புகள் சூழ்ந்திருக்கிறது; ஆகையால் கருவாயிலிருந்து குழந்தை, பேறுகாலத்தில் சுலபமாய் வருவதற்கனுகூலமாக விரிந்து வழிவிடக் கூடியதாயிருக்கிறது. இது எப்போதும் சுருங்கியே யிருக்கும். மங்கைப் பருவமடைந்து கன்னிகழியாதிருக்கும் இளம் பெண்களுக்கு, இந்த அல்குல்வாயின் உட்புறக்கோடிக்கும் கருவாய்க்கும் இடையில் ஒரு மெல்லிய வெங்காயத் தோல் போன்ற வெள்ளைத்தோல் (சவ்வு Hymen) மூடிக்கொண்டிருக்கும். இதில் ஒரு சிறு புழையும் (துவாரமும்) உண்டு. இந்தப் புழை வழியாலேயே மாதவிடாய் வெளிவரும். சிலருக்கிந்தத் தோல், புழையின்றித்

தடிப்பாயிருக்கும். சிலருக்கு இந்தத் தோலே இராது. இது புழையின்றித் தடித்திருப்பதால், மாதசூதகம் வெளிப்படுகையில் வலியுண்டாகும். அன்றிப் புணர்ச்சி யுணர்ச்சிக்கும் புத்திரப் பேற்றுக்கும் பிரதிகூலமாகும். சிலருக் கிந்தத்தோல் நோயால் கைந்து போவதும் உண்டு. ஆகையால், பெண்ணொருத்தியின் கன்னி யழியாமைக்கு, இந்தத் தோலின் இருப்பையே ஒரு காரணமாக் கூறுவது தவறு. முதற்புணர்ச்சியில் இந்தத் தோல் இருப்பவர்களுக்கு, இது கிழிவதால் வலியுண்டாகும். செந்நீரும் காண்பதுண்டு. ஆனால், நாளாவட்டத்தில் இதைப்பற்றிய சிந்தையே இல்லாமற்போகும். (நான்குவார) ஏறக்குறைய ஒரு மாத சூதகப் போதுதான் பெண்களுக்குப் புணர்ச்சி யுணர்ச்சி மிகுந்திருக்குங்காலம். அப்போதுதான் அவர்களுக்குக் கருவாய் திறந்திருக்கும். நாதச்சினையும் மாதச்சூதகமும் பொருந்தி, அவர்களுடைய மஞ்சட்கரு, வெண்கருவாகிய விந்துக் கிருமியை எதிர்நோக்கியிருக்கும். அப்போதுதான் அவர்களுக்குக் காதற்பண்பாகிய காமப்பேறும் அதன் பயனாகிய புத்திரப்பேறும் சித்தியாகும். அந்தக் காலத்தில்தான் ஆண்மகன் அவளை ஐங்காதத்திலிருந்தாலும் வந்து கூடவேண்டுமென்று பெரியோர் வகுத்திருக்கிறார்கள்.

> 'பூப்பின்கண் இல்லாளைப்
> பிரிதலுங் கூடாது'

என்பது சங்கிநீதி. நாற்குணமாகிய வேலிக்குள் அடைபட்டுக்கிடக்கும் பெண்களின் குறிப்புணர்ந்து, அவர்களுடைய இச்சையைப் பூர்த்தி செய்பவனே சிற்றின்ப வெற்றியிற் சிறந்தவனாவான். மாதவிடாய் காலத்தில்தான், அவர்கள் அதிசாக்கிரதையாயிருந்து கணவன் முகத்திலேயே விழிக்கவேண்டும். அந்தக் காலத்தின் அருமையையுணர்ந்து அவர்களைப் போற்றுபவனே உலகைப் போற்று



டவனாவான். அவர்கள் கொள்ளும் ஆகாராதிகளுக்கேற்ற
படியே நாதச்சினையும் வலுவடைந்திருக்கும். அந்தக் காலத்
திலும் மற்றெந்தக் காலத்திலும் கணவன் மனைவியர் உண்ண
வேண்டிய உத்தம உணவாதிகளை இச்சிறு நூலின் மற்றோ
ரதிகாரத்தில் தெற்றெனத் தெரிந்து கொள்ளலாம்.
மாதவெளிப் பாட்டுக்குச் சிலதினங்களுக்கு முந்தியே,
அதாவது ஏறக்குறைய நான்கு நாட்களுக்கு முந்தியே
பெண்சினைமுதிர்ந்து வெடித்து நாதக்குழல் வழியாய்க்
கருப்பையை நோக்கிவரத் தொடங்கும். அங்கிருந்து அது
கருப்பையிற்சேர எட்டு நாளாகுமென்று முந்தியே நாம்
சொல்லியிருக்கிறோம். சில பெண்களுக்கு மாத வெளிப்
பாட்டின் போதே நாதக் குழலிற் சினை முதிர்ந்து வெடிப்ப
தும் உண்டு. சிலர்க்கு மாதவெளிப் பாட்டுக்கு இரண்
டொரு தின முந்தியும் பிந்தியும் சினை முதிர்ந்து வெடிப்ப
தும் உண்டாம். ஆகையால், பெண்களுக்குக் கருத்தரிக்
குங் காலம் மாதத் தீட்டுக்கு முந்திய நான்கு நாட்களும்,
பிந்திய எட்டு நாட்களுமாகிய பன்னிரண்டு நாட்களுமே
யாமென்று பண்டிதர் பலரும் பகருகிறார்கள். மற்றைப்படி
உரைப்பதெல்லாம் குருட்டாட்டமாய்க் கூறுவதே யாகும்.
இந்தப் பன்னிரண்டு தினங்களில் தான் பெண்களுக்கு
காதாசய இயக்கத்தாலும் கருவாயின் விரிவாலும் காதற்
பண்பாகிய காம வுணர்ச்சி தலை சிறந்து நிற்கும். பெண்
சினையைப் போலவே ஆண் சினையும் கருப்பையில் எட்டு
நாள் வரையில் உயிருடனிருக்குமென் றுணர்ந்து கொள்க.
இப்படிச் சரியாக கால மறிந்து கணவன் மனைவியர்
கூடுவதால், தப்பாமற் புத்திரப் பேறுண்டாகுமென் றிருக்
கையில், சிலர் மலடாவதற்குக் காரண மின்னதென்று
முன்னேயே கூறி யிருக்கின்றோம். ஆண் மலடும் உண்
டென்று உரைத்தோம். பெண் மலடும் உண்டென்று பேசி

னேம். இம் மலட்டுக்குக் காரணம் இந்நூலிற் கூறிய படியோ வேறோ என்று தக்க வைத்திய நிபுணரைக் கேட்டறிந்து கொள்க.

'மாதத்துக் கிரண்டு முறை மாதரைப் புல்குவதும்'

என்றபடி மாத விடாய்க்கு முந்திய நான்கு தினங்களில் ஒரு முறையும், அதற்குப் பிந்திய எட்டுத் தினங்களில் மூன்று தினங்கள் கூடாவென்று விலக்கி யிருப்பதால், அவைகள் போக, எஞ்சிய ஐந்து தினங்களில் ஒரு முறையுமாக மாதத்துக் கிரண்டே முறை மாதரைக் கூடுவதே மகான்களுடைய கொள்கையாம். இதைவிட்டு மற்றைப் படி கோழி சிட்டு முதலியவைகளைப் போலவும், பன்றியைப் போலவும் பலமுறை கூடுவதெல்லாம் வெறியர் செய்கையாம். படுக்கை யறையிலும் இரு படுக்கை ஏற்படுத்திக் கொள்வதே கணவன் மனைவியருடைய கல்வி கேள்வி யறிவுகளின் விளக்கமாகும். குடிசை அகத்திலிருப்பவர்களும், கயிற்றுக் கட்டில்களை யேனும் தேடியமைத்துக் கொண்டு கணவன் வேறு மனைவி வேறாய்த் தனித்தனிப் படுப்பதே உடற் சுகத்துக் குகந்ததாம். தரையிற் படுப்பதால் இயற்கை மின்சாரச் சக்தி பாய்ந்து கேடு விளையக் காரணமாம். கணவன் மனைவியர் ஒரே படுக்கையிற் படுப்பதால், ஒருவர் மூச்சு மற்றொருவர் மேற் பாய்ந்து நோயுண்டாக்கும். ஆதலால் எப்போதும் வெவ்வேறு கட்டிலில் தனித்தனிப் படுப்பதே சால்புடைத்தாகும்.

பெண்களின் சரீர சுகத்தை அறிவிப்பது, அவர்களுடைய மாத விடாயே யென்பது நெடு நாளைய அனுபவமாம். அது மாதமொரு முறை தவறாமல் வரவேண்டும். அந்த உதிர நிறம் செவ்வந்தி நிறமாய் அல்லது செவ்வல்லி நிறமா யிருப்பதே ஏற்றமென்க. மஞ்சள் அல்லது கருமை



நிறமா யிருந்தாலும் அல்லது முறை தப்பி வந்தாலும், கருக்குழியில் நோய் சூழ்ந்திருக்கிற தென்பதற்கு அடையாளமாம். மாதவிடாய், தீட்டென்பதும், அது கண்டவளைத் தீண்டப்படா தென்பதும், முதல் வகுப்புக் கலைஞானிகளுடைய குருட்டுக் கொள்கைகளாம். இங்கே தீட்டென்பதற்கும், ஐந்தாங்குலத்தவரைத் தொட்டாற் றீட்டு என்பதற்கும் பொருள் ஒன்று தான் என்கிறார்கள். அந்தத் தீட்டிலேயே பத்து மாதம் மூழ்கியிருந்து, அது வளர்க்க உருவாகிப் பிறந்த பிறகும், அந்தத் தீட்டையே பாலாக வுண்டு வளர்ந்ததை ஊகித் துணராத பாமரரே, அதைத் தீட்டென்று அருவருத்து, அது கண்டவளைத் தீட்டுக்காரி யென்று புறந் திண்ணைகளில் ஒதுக்கி வைப்பார்கள். அவள் காற்றும் படப்படா தென்பார்கள். அவள் தொட்ட பாத்திரத்தைத் துடைப்பைக் கட்டையாற் புரட்டித் தள்ளி யலம்புவார்கள். மூன்றுநாள் அப்புறம் இருப்பது பற்றாதென்று, அவளை ஐந்து நாள் வரையில் அப்படியே தெருத் திண்ணையில் அழுத்தி வைப்பார்கள். ஆற்றிலேனும் கேணியிலேனும் அவளப்படியே சென்று, அநேகம் ஆண்பிள்ளைகளுக் கிடையிலேனும் தலை முழுகிவர வேண்டுமென்பார்கள். வெட்ட வெளிச்சம் பட்டப் பகலில் மாதத் தீட்டுக்காரி யொருத்தி அநேகம் ஆண் மக்களுக் கிடையில், எங்ஙனம் தன் அந்தரங்கத் தானத்தை நன்றாய் அலம்பிக் குளிக்க முடியும்?

இதைச் சற்றேனும் கவனியாத முற்காலத்திய குருட்டுத் தீட்டுப் பழக்கம் அற நீங்கவேண்டும். தீட்டான முதல் மூன்று நாள், புணர்ச்சி யுணர்ச்சி கூடாதென்பதே பெரியோர் கொள்கை. இது தவிர மற்றவை யெல்லாம் போலி யாசாரங்களென்று ஒதுக்கித் தள்ளுக. இத்தேச சீதோஷ்ண நிலையின்படி, இருபாலாரும் ஒருவரை ஒருவர்

தொடுவதனாலேயே காம உணர்ச்சி உண்டாய் விடுவ தியற்கையாகையால் இத்தனை குருட்டுப் பாமரப் போலி ஆசாரங்கள் பிரவர்த்தித்திருக்கின்றன. எல்லாம் மனமடங் கக் கற்பதில் அடங்கி யிருக்கிறது. தாயுமானவர் சொன்ன படி மனமிறக்கக் கற்க வகை யறியாத மாக்களே இதைப் பிரமாதமாக் கொண்டு வீண் காலம் போக்குவார்கள். தீட் டுத் தீட்டென்று தினம் இருகாற் குளிப்பதனாலேயே எக் குலத்தானும் மனமாசற்றவ னாகான். காகங்கூட நாள் தோறும் ஒருமுறைக் கிருமுறை தவறாமற் குளிக்கிறது. இது பற்றியே யாமியற்றிய திருக்குறள் நீதி வெண்பா விலும்,

"காலையிலும் மாலையிலுங் காகங் குளித்து வஞ்ச
வேலையிலு மிக்கு விளங்குவபோல்—நீல
மனத்துக்கண் மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்"

என்று வந்திருக்கிறது.

மனத்தகத்தில் அழுக்காறும், ஆசையும், வெகுளியும், கடுஞ் சொல்லும் நிரம்பியுள்ள தீட்டைத் துடைக்க வகை யறியாரே, போலியாசாரமாகிய புறத் தீட்டைக் கழுவுத லென்பதில் பிரமாதமாய்க் கவனஞ் செலுத்தி அஞ்ஞான வுலகத்தை மயக்கி ஆள வழி தேடுவார்கள். ஆகையால் மாதவிடாய்த் தீட்டை இனியேனும் உள்ளபடி யறிந் துணர்ந்து கொள்க.

இப்படி மாதவிடாயைத் தீட்டென்று புறக்கணித்து ஒதுக்குகிறவர்களே, பெண்ணொருத்தியின் முதற் பூப்பை ஒரு பெரு மங்களகாரியமாகக் கொண்டாடி மகிழ்கிறார்கள். ஏன்? இதனால் கிரியாசத்தியின் இச்சாபூர்த்திஞானோதைய மாவதனால் என்க. இந்தச் சத்தியின் பக்குவ நிலை எல்லார்க் கும் இன்ப மூட்டுமன்றித் துன்பந் தொடாதென்று



கொள்க. முதற் பூப்பால் பெண்ணொருத்தியின் கரு, தன் னுடைய பரிபக்குவ நிலையை விளக்கிக் காட்டுகிறது. மற்றை மல மூத்திரப் போக்குகளை அலம்பிச் சுத்தஞ் செய்து கொள்ளுகிறபடி, பூப்பின் கழிவையும் அலம்பிச் சுத்தஞ் செய்து கொள்ளவேண்டும். தீட்டு முதலிய மூட வெறிக்கு இடந்தந்து சத்தியின் மகத்துவத்தைக் கெடுக்கப்படாது. மற்றை மா முதலியவைகளும் விலங்குகளும் பூக்குங் காலத்தை நாம் மகிழ்ந்து புகழ்ந்து கொண்டாடுகிறபடி மனித சத்தியின் பூப்பையும் அருவருப்பின்றி மகிழ்ந்து கொண்டாடவேண்டும். ஒருவன், தான் நட்ட செடி, பூப் பதைக் கண்டு எத்தனை மகிழ்கிறான்! அருவருப்பின்றி அதை எத்தனை புகழ்கிறான்! அப்படியே, தான் * நட்ட நாயகி யின் பூப்பையும் அருவருப்பின்றி அகமகிழ்ந்து கொள்ள வேண்டும்.

இருபத்தெட்டு நாள் அல்லது நான்கு வாரத்துக் கொருமுறை வரும் மாதவிடாயே மாதர்க் கணிகலமென்று கொள்ளவேண்டும். சிலர்க்கு நான்கு வாரத்துக்கு ஏறியுங் குறைந்தும் வருவதும் உண்டு. இது அவரவருடைய உடல் நிலைக்கு உகந்தபடியிருக்கும். சிலர்க்கிது கண்ட முதல் நாளி லேயே நின்றுவிடும். சிலர்க்கு இரண்டு மூன்று தினங்கள் நீடித்திருப்பதும் உண்டு. சிலர்க்கு ஐந்து ஆறு ஏழெட்டு தினங்கள் விடாமற் காணும். ஆகையால் மூன்று நாளல்ல, ஐந்து நாளல்ல, ஏழெட்டு தினங்கள் தீட்டென்றாலும் பற்றாது. ஐந்தாநாள் தலை முழுகி வந்த பிறகும் சிலர்க்குத் தீட்டு நில்லாமல் இருந்தபடியே இருக்கும். ஆகையால், ஐந்தா நாள் முழுகிக் குளித்துவிடுவதால் தீட்டொழிந்தது என்பார் இங்கே என்ன சொல்ல முடியும்? சிலர்க்கு மறு பூப்பு வரையிலும் தீட்டுக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கண்ட

* நட்ட=விரும்பிக் கொண்ட.

படியே யிருக்கும். உடற் கூறு ஒருவிதமன்று. பலவிதமென்று பகரவும் வேண்டுமோ? கருவுற்பத்திக்குச் சித்தமாயிருக்கிறேனென்று, கருப்பை, தன்னைச் சுத்தஞ் செய்துகொண் டிருப்பதற்கு அடையாளமாகத் தன் வாயைத் திறந்து, பூப்பை வெளிப்படுத்தி விடுவதே மாதவிடாயாகும். இது சிலருக்குக் கொஞ்சமாகவும், சிலருக்கு அதிகமாகவும் அளவில் குறைந்தும் மிகுந்தும் இருக்கும். யாருக்கும் வீசம்படிக்கு அதிகமா யிருக்கப்படாது. இருந்தால் வியாதியாம். மிகக் குறைந்தும் இருக்கப்படாது. அதிகமானால் பெரும்பாடென்னும் நோயாம். குறைந்தால் சூதகக் கட்டென்னும் வியாதியாம். பூப்பின் வெளிப்பாட்டொழுக்கைச் சிலர் அசுத்தமென்று அருவருப்பது அறியாமையாம். மாதமொருமுறை அத்தி மாம்போலக் கருவாய் பூப்பதால், அதிலிருந் தூறும் தேனொழுக்குப் போல்வதே பூப்பு; இழுக்கல்ல. இழுக்கென்பார் வழக்கு இழுக்காகவே முடியும். இது, இழுக்கானால், முன் நான் கூறியபடி கருவிலும், பிறந்த பிறகும் சிசுவை வளர்க்குஞ் சக்தி இதற்கு எங்ஙனம் இருக்கும்? இதுதான் கருப்பையிற் சிசுவைப் பத்துமாத காலம் பாதுகாக்கிறது. பிறந்த பிறகும் இதுதான் அதைப் பாலாய் ஊட்டி வளர்க்கிறது. இப்படிப்பட்ட மலர்த்தேன் போன்ற உயர் பொருளை அழுக்கென்று கூறி வெறுப்பது பேதைமையிற் பேதைமையாமென்க. விலங்குகட்கும் பூப்புண்டு. ஆனால் பெண் மக்களுக்குப்போல அவைகளுக்கு மாதமொருகால் என்னும் வரையறையில்லை. ஆண்டுக்கொருகாலே அநேகமாய்ப் பூப்புண்டு. அவைகளின் பூப்பு நீர் பெண்மக்களுக்கிருப்பதுபோல செந்நிறமாயிராது. அதற்கு மதநீர் என்று பெயர். மலர்களில் ஒழுகும் மதநீர் தேனென்று பெயர் பெற்றுச் செந்நிறமா யிருப்பது போலவே, பெண்மக்களுடைய பூப்பு நீரும் செந்நிறமா



யிருக்கிறது. இதைத் தெரியாதார் கேவலமான உதிர நீர் என்று உல்லிங்கனஞ் செய்து ஒதுக்குவார்கள். இதைப் பற்றி விரிக்கிற் பெருகும். இதற்கு நாத நீரென்றும் பெயர். விந்துநீர் வெண்மையா யிருப்பதுபோலவே நாத நீர் செம்மையாயிருக்கிறது. சாதாரண உடல் உதிரத்திற்கும் இதற்கும் வேறுபாடுண்மையாலேயே, அதைப்போல இது உறைந்து கட்டியாகாமல் நீர்த்தே இருக்கும். இது அநுபவமானது. இதனால், இதில் எழுதியுள்ளபடி இதை யொரு உயர் பொருளாக மதிப்பதே சரியென்றுணர்க.

கருப்பையின்மேல் தொங்கும் சினைப்பைகளிரண்டும், சிசு பிறப்பதற்குவேண்டிய தொழிலை மாதத்துக் கொருமுறை தவறாமற் செய்வதால், அவைகளிலிருந்து மாதமாதம் ஒவ்வொரு முட்டை வீதம் பக்குவமாய்க் கருப்பைக்குப் போய்க்கொண் டிருக்கிறது.

பெரும்பாடு, சூதகக் கட்டு முதலிய வியாதிகளுக்கும், பூப்பிலிகளாகவே சிலரிருப்பதற்கும் காரணங்கள் உண்டு. அவைகளைத் தக்க பண்டிதர் மூலமாகப் பரிகரித்துக்கொள்ள வேண்டும். இதிற் குறித்துள்ள ஆண்மலடு பெண்மலடு முதலியவைகளையும் தக்கபடி யூகித்துணர்ந்து மருத்துவர் மூலமாய்ப் பரிகரித்துக் கொள்ளலாம். சில மலடுகள் கருவிலேயே அமைப்பா யிருப்பதால், மருந்து முதலிய தந்திரங்களாலும் மந்திர யந்திரங்களாலும் குணப்படா. போலி மருந்து மணிமந்திர விளம்பரங்களைக் கண்டு மோசம்போக வேண்டா.

ஆண் பெண் பிறப்புக் கருவிகளே நாட்சென்று முறையே பதினாறிலும் பதினான்கிலும் பரிபக்குவமாகிறபடியால் அவைகளைக் குறித்து, அவர்களே கவனிக்கவேண்டும். இப்படிப்பட்ட உத்தம நூல்களை வாசித்து இருபாலரும்

நன்றாய் யோசித்து, அவைகளைத் திருத்தமாகவும் பிண்டோற்பத்திக்குப் பொருத்தமாகவும் வைத்துக்கொள்ள முயலவேண்டும். இதனாலேயே குருகுலவாசத்தும் கன்னிமாடத்தும் மன்னியிருக்குங் காளையரும் பாவையரும் இது விஷயத்தில் அக்கரையாய்க் கருத்தைச் செலுத்துவதே பொருத்தமான காரியமென்று இந் நூலிற் றிருத்தமாயெழுதி யிருக்கின்றோம். இது சற்றே வருத்தமான காரியமானாலும், நன்மக்கட்பேறென்னும் ஞால வளர்ச்சியைக் கருதுங்கால், எளிதாகவும் இன்ப நலமாகவு முடியும்.

இப்படிக் கற்புடை மனைவியே பொற்புடையாளாக வேண்டுமென்னில் இதிற் குறித்த விஷயங்களைத் தப்பற வுணர்ந்து சால்புடன் வாழவேண்டும். ஒவ்வொரு மாதும் கன்னிமாட வாசத்திலேயே காலையிலெழுந்திருக்கப் பழக வேண்டும். சாணந்தெளித்தல், கோலமிடல் முதலியவைகளைப் போற்றிக்கொள்ள வேண்டுமென்று இதற்கு முந்தியே கூறியுள்ளோம்.

ஒவ்வொரு பெண்மகளும் ஆண் மகனைப்போலவே காலையிற் குளிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். காலையிலெழுந்தவுடனே பல் விளக்குவதையுங் கவனியாமல், பழையதென்றும், காப்பியென்றும், இட்டளியென்றும், உழுந்து வடையென்றும் மந்திர செபம் செய்யக் கற்றுக் கொள்ளப்படாது. காலையிலெழுகையில் பல்மட்டும் தான் அழுக்காயிருக்கிறது. மற்றை உறுப்புகளெல்லாம் சுத்தமாயிருக்கின்றனவென்று எண்ணிக்கொள்ளக் கூடாது. கோடிக் கணக்கான மயிர்த்துவாரங்கள் உடலை மூடியிருப்பதால், அவைகளின் வழியே உடலின் உள்ளழுக்கு வெளிப்பட்டு அவைகளை அடைத்துக்கொண்டு நோய்க்கிடம் பண்ணுகின்றன என்பதை ஒவ்வொரு பெண்மகளும் நன்குணர வேண்டும். இதுவே ஆயுர்வேத வாக்கியம். இதைத் தப்பு



வோர் உலக வாழ்க்கைக்கு உகந்தவராகார். நமது உடலிலுள்ள கண் காது முதலிய ஒன்பது துவாரச் சுத்தத்தோடு உடலின் மயிர்க்காற் சுத்தமும் முக்கியமானதாகும். ஆகையால், எந்நாட்டுப் பெண்களும், காலையிற் குளித்தலே பெரிய வேலையென்று கொள்ளவேண்டும். முதல் வகுப்பார் தாம் குளிக்கவேண்டும், மற்றைய வகுப்பார்க்குக் காலைக் குளியல் அநாவசியமான மதாசாரமென்று மோசம் போகக்கூடாது. இதற்கும் மதாசாரத்துக்கும் யாதொரு பொருத்தமும் கிடையாது. குளியாதார் எவரும் உண்டுடுத்துக் களியாதாரே யாவார். குளிப்பதற்காகச் சில பெண்கள் வெள்ளிக்கிழமை, அமாவாசி, கார்த்திகை முதலிய நாள் நக்ஷத்திரங்களை எதிர் பார்த்திருந்து நோய்க் காட்களாய்க் காலங் கழிக்கிறார்கள். எண்ணி யெட்டுநாளான பிறகும் கட்டின ஆடையைக் கழற்ற அஞ்சுகிறார்கள். 'கந்தையானாலுங் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக்குடி' என்னும் பழமொழியைப் பழிமொழியா அசட்டை செய்கிறார்கள். காவிரி முதலிய ஆற்றோரத்தூரில் வாழும் மாதர்களிற் சிலர் மாத்திரம் குளிநீர் எளிதிற் கிடைப்பதால் குளிக்கக் கற்றுக் கொண் டிருக்கிறார்கள். அவர்களும் உடற்சுத்த உசிதத்தை அறிந்து குளிப்பவர்களல்லர். எல்லாம் வழக்கத்தை அநுசரித்து நடந்துவருகிறது. ஆற்றில் நீரில்லையேல், அவர்களும் அது காரணமாகவே அநேக நாள் குளியாமலிருந்து விடுகிறார்கள். இப்படி எந்தப் பெண்மகளும் குளிக்கும் சிறப்பை உணராமல், சோம்பலை மேற்கொண்டு உடற்சுத்தத்தைக் கெடுத்துக்கொள்ளப்படாது. சுத்தமுணர்ந்து நித்தங் குளிக்கவேண்டும். ஐந்தாங்குலத்துப் பெண்மணியானாலும் குளியாமல் அடுப்பங்கரைக்குப் போவதில்லை யென்று வைராக்கியம் செய்துகொண் டிருக்கவேண்டும். குடிசையில் வாழ்பவர்க்கே இதை நாம் குறித்துக்காட்டி யெழுதுகிறோம்.

மாடிகளிலும் மெத்தைகளிலும் வாழ்வார்க்கு நமது உபதேசம் ஏறாது. பணப் பித்தேறினவர்களுக்கு இவ்வுபதேசம் செவிடன் காதில் ஊதின சங்காகும். காலையில் சமையலில் இறங்கினாலும், உறங்கினாலும் குளியல்மட்டும் தவறப்படாது.

குளித்த பிறகுதான் சமையலறைக்குள் நுழைய வேண்டும். அடுப்பங்கரையைச் சாணத்தால் மெழுக வேண்டும். அங்கேயும் கோலமிடவேண்டும். பாத்திர சுத்தத்தைப்பற்றி நாம் அதிகமாய் எழுதவேண்டியதில்லை. பெண்மகள் தன்னுடைய சரீரபாத்திர சுத்தத்தைக் கவனிக்கவேண்டியது போலவே சமையற் பாத்திர சுத்தத்தையும் பாங்குடன் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு பாத்திரத்தையும், தானே துலக்கவேண்டும். வெறொரு சூத்திரத்தி யென்னும் அழுக்கேறி யிடத்திற் பாத்திரங்களை அலம்ப விடப்படாது. அவள் தன்னுடலை அலம்பப் பழகாதவள் பிறருடைய பாத்திரங்களை எப்படி நன்றாய் அலம்புவாள்? கற்புடைமனைவியின் ஒழுக்கம், ஒவ்வொரு வேலையையும் தன்கையாற் செய்து முடிப்பதாகவே யிருக்க வேண்டும். குடிநீர் திரட்டிக்கொண்டுவந்து தனியேவைக்க வேண்டும். குடிநீரையும், சமையல் நீரையும் ஒன்று சேர்த்து, அழுக்காக்கப்படாது. குடிநீரை மூடிவைக்க வேண்டும். எப்போதும் அதுகாய்ந்து ஆறினதாகவே யிருப்பது நல்லது. ஒவ்வொரு கற்புடை மாதும் குடிநீரைக் குறித்து விழிப்பா யிருக்கவேண்டும். நீரே உயிர்தாங்கி ஆகையால், அதைப் போற்றுபவள், தன் கணவன் முதலியோரைப் போற்றுபவளாகிறாள். ஆகையால், கற்புடை மனைவியே குடும்பத்துக்கு உயிர்நிலையம் ஆகிறாள். நீரை எப்போதும் வடிகட்டிக் காய்ச்சி உண்பதே சரியான பழக்கமாம். நீரைக் காய்ச்சி உண்ணவேண்டும். மோரை விளாவி



உண்ண வேண்டும். நெய்யை உருக்கி உண்ணவேண்டு மென்பது உத்தம மருத்துவர்கொள்கை:

'நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி'

என்பது ஆயுர்வேதநீதி. அதற்கப்புறம் அடுப்பில் நெருப்பிட்டுச் சமைக்குமுறையையும் பதார்த்த குணவிளக்க முறையையும் மற்றோரதிகாரத்திற் காணலாம். கணவற்குப் பரிமாறு முறையையும்,

'சிறுகாலை அட்டில் புகாதாள்
இல்வாழ் பேய்'

என்றபடி அதிசீக்கிரத்திற் சமையல் முடிக்கும் முறையையும் வேறோர் அதிகாரத்தில் விளங்கக் காணலாம்.

கணவனுக்கு இனியளாய் இருப்பவளே கற்புடை மனைவியாம்; கணவனிடத்தில் இதமாய் மிதமாய்ப் பேசுபவளே கற்புடையமனைவியாம்; திருமகள் போலிருக்கும் மருமகளே மாமிக்கு உகந்தவளாம். தொத்து நோய் முதலிய கெடுதல்களில்லாத குடும்பத்திற் பிறந்தவளே குலதெய்வமாம். வருவாய்க்குத் தக்க செலவு செய்பவளே கற்புடை நங்கையாம். சமையல்வேலையே தன்னுடைய வேலை யென்று கருதி அது முடிந்த பிறகு, ஏதேனும் கைத்தொழிலால் ஊதியந் தேடிக்கொள்ளாமல் உறங்கிக் கிடப்பவளே ஊதாரியாம். அக்கம் பக்கத்துச் சோம்பேறிப் பெண்மக்களோடு வீண் வம்பு பேசிக் காலங்கழிப்பவளே காட்டேரியாம். இதுபற்றியே நாயனார்,

'மனைத்தக்க மாண்புடையா ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'

என்றார். "இல்லறத்துக்கு இசைந்த உயர்குணம் கொண்டவளே உத்தமி. தன் கணவன் வரும்படிக்குத் தக்க செலவு

செய்பவளே சற்குணி. அவளே இல்வாழ்க்கைக்கு இசைந்த துணையாவாள்" என்பதிதன் பொருள். "எத்தனை பெரிய வருவாயோடு கூடியிருப்பினும், மனைவி நற்குண நற்செய்கை உடையவளா யில்லாதிருந்தால் ஒரு பிரயோசனமு மில்லை; மனைவி நற்குண நற்செய்கை உடையவளானால், அக்குடும் பத்தில் ஒன்று மில்லாதிருந்தும் எல்லாம் இருந்த படியாம்; அவள் துன்மார்க்கியானால், அக்குடும்பத்தில் எல்லா மிருந்தும் எதுவும் இல்லாதபடியாம்" என்னுங் கருத் தமைந்த பின்வரூஉம் பெருநாவலர் வேதவாக்கியத்தை ஒவ்வொரு கற்புடை நங்கையும் பாடம் பண்ணி மறவாம லிருக்கவேண்டும்:

'இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை'

"கற்பென்னும் பலமே பெண்களுக்குப் பெரும்பலமாம். கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை—கற்பு என்பது கணவனுடைய சொல்லைத் தப்பி நடவாமை. அது மட்டும் ஒருத்தியிடத்தில் இருக்குமாயின் அவள் புருஷனுக்கு வேறு இருப்பு வேண்டியதில்லை" என்னுங் கருத்தமைந்த பின் வரூஉங் குறளைப் பெரிதுங் கவனிக்கவேண்டும்:

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்'

"கற்பென்றால், அயல் அகமுடையானோடு சோரம் போகாமையே. அதுமட்டும் சரியாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டும். கணவன் தவிர வேறொருவனுக்கு முன்தானை விரிக்கப்படாது. அது ஒன்றுதான் முக்கியமானது. மற்றைப்படி எப்படி யிருந்தாலென்ன ?" என்று கணவனை எதிர்த்துப் பேசுவதும், அடி என்று எதிர் நிற்பதுமாகிய துர்க்குணமுடையவள், மேற்சொன்னபடி ஏகநாயக விரத முடைய வளேனும் எமனுக்குச் சமானமாவாள். "கற்புடை



மனைவி, மழையே பெய்யென்றால் பெய்யும். அவள் கணவனே தெய்வமென்றிருந்தாற் போதும். வேறு தெய்வத்தைக் கும்பிடவேண்டியதில்லை" என்னுங் கருத் தமைந்த பின்வரூஉம் குறளை மனப்பாடம் பண்ணுக:

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'

இது குறித்த கதைவிளக்கத்தை எமது குலமகளொழுக்க வரிசை ஒன்றிற் பரக்கக்காணலாம். "பெண் மகள் கற்பால் தன் பெருமையைக் காத்துக் கொள்ள வேண்டும். தன் கணவனையும் உண்டி பரிமாறுதல் முதலிய உபசாரங்களால் காப்பாற்ற வேண்டும். தன் பிறந்தகம் புக்ககமாகிய ஈரகங்களுக்கும் புகழைக்காக்க வேண்டும். இந்த விஷயங் களில் கொஞ்சமேனும் பின்னிடையாதவளே பெண் ணென்னும் பேருக்குத் தகுந்தவளாவாள். அவளே தன்னைக்கொண்ட கணவற்குக் கண்ணாவாள். இல்லையேல் அந்த மண்ணுவாளை விட்டு வனம் புகவேண்டும்" என்னுங் கருத்தமைந்த பின்வரூஉங் குறளையும் பேணிக்கொள்க:

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

"கற்புடையாள் தன் மனத்தை ஒருவழிப்படுத்தி உறுதி யாய் நிற்பதே கற்புக்குக் காவலாம். அவளிடத்தில் இஃதில் லாதபோது, அவளுடைய கணவன் அவளைச் சிறையிலிட்டுக் காத்தாலும் பிரயோஜனமில்லையாம். புருஷத்துரோகஞ் செய்து சோரம் போகிறவளைப் பெட்டியிலிட்டுப் பூட்டி வைத்தாலும், அங்கும் அவளோடு ஒரு சோர நாயகனைச் சேரப் படுத்திருப்பான்" என்னும் உலக வழக்கப்பொருளை உள்ளிட்ட பின் வரூஉந் திருக்குறளைப் பெரிதும் பாராட்ட வேண்டும்:

'சிறைகாக்குங் காவல் எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை'

பெண்மக்கள் கணவனோடிரண்டறக் கலந்து மனமொத்து வாழக் கற்றுக்கொள்வது தான் கற்பு. இது பற்றியே அவர்களுக்குக் கன்னிமாட வாசத்திற் பாடங் கற்பிக்கவேண்டும். இப்படியே ஆண்மகனுக்கும், அவளைச் சரிசமானமாய்ப் பாவித்து நடத்தும் பான்மையைக் குருகுல வாசத்திற் கற்பிக்கவேண்டும். இப்படி "மனமொத்த கணவனோடு இனமொத்து வாழப்பெற்றால், பெண்ணொருத்திக்கு, அதுவே பூலோக சுவர்க்கமாகும்" என்னுங் கருத்தமைந்த பின் வரூஉம் குறளைப் பேணிக்கொள்க:

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு

"கற்புடை நங்கையைப் பெறாதான் பகைவர்க்கெதிரில் அவமானமடைந்து தலையிறக்கங் கொள்ளநேரும்" என்னுங் கருத்துடைய குறளும் ஒன்றுண்டு:

'புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை'

என்பதே அது. மனைவி கற்புடையாளல்லளெனின், கணவன் தன் பகைவர்க்கெதிரில் ஆண் சிங்கம்போல இறுமாந்து நடக்க இயலாது. இதுவே, "தலைப்பாகையை இறக்கி வைத்தாள்" என்று வழங்குகிறது. "மூன்றுங் கெட்ட மூளிக்கு முக்காடொரு கேடா?" என்று பெண்களைக் குறித்து வழங்குவதுபோலவே, "சோரம்போன மனைவியைக் கொண்டவனுக்குச் சொக்காய் ஒரு கேடா? தலைப்பாவொரு தகுதியா?" என்று ஆண்களைக் குறித்து வழங்குவதையும் உய்த்துணர்க.

இதுவரையில் இவ்வதிகாரத்தில் இந்நீண்ட வுரையிற் கூறிப் போந்தவைகளனைத்தையும், தானே நேரில் வாசித்



துணரா வாய்க்காதவளேனும், பிறர் வாசித்துணர்த்த வுணர்ந்துகொள்பவளே கற்புடையாள். அதன்படி நடப்பவளே பொற்புடையாள். அவளே மனைமாட்சி யுடையாள். அம் "மனைமாட்சியாகிய நற்குண நற்செய்கைகளே அவளைக் கொண்டாற்கு மங்கலமாகும். அப்படிப் பட்டவளுடைய மங்கலத்துக்கு நன்மக்கட் பேறே நலமுடைய ஆபரணமாகும்" என்னுங் கருத்தமைந்த பின் வரூஉம் குறளைப் பாடம் பண்ணுக:

'மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு'

இதுபற்றியே குமார குருபரரும் தமது நீதிநெறி விளக்கத்தில்,

"கற்புடுத்து அன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு"

என்று கூறினார்.

ஒவ்வொரு நங்கையும் கற்பாடை கட்டிக்கொள்ள வேண்டும். அன்பு மலரை முடித்துக்கொள்ள வேண்டும். நாணமென்னும் மஞ்சளை நன்றாய்ப் பூசிக்கொண்டிருக்க வேண்டும். நற்குண நற்செய்கைகளாகிய நகைகளைப் பூண்டுகொண்டிருக்க வேண்டும். இப்படித் தன்னை அலங்கரித்துக் கொண்டிருப்பவளுக்கு மக்கட்பேறென்னுஞ் செல்வமு முண்டாயிருந்தால், அவளைக் கொண்ட கணவனுக்கு அதைவிடச் செய்தவம் வேறொன்றுமில்லை.

ஆகையால், பெண்மகளைக் காட்டிலும் ஆண்மகனே இவைகளெல்லாம் நன்குணர்ந்து, குடும்பத்தை வளர்க்க வேண்டும். கற்புடை மனைவியே பொற்புடையாளென்

பதைக் கைவல்லியமாகக் காணவேண்டும். நன்மக்கட்பேறே நலமுடைத்தென்பதை அடுத்த அதிகாரத்திற் பரக்கக் காணலாம்.

---

## ஐந்தாம் அதிகாரம்.

---

### (நன்மக்கட்பேறே நலமுடைத்தென்றல்.)

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்றபடி ஒருவன் பெற வேண்டிய பேறுகளிற் பிள்ளைப் பேற்றைவிடப் பெரிய பேறு வேறு இல்லை. அதுவும்,

'அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே'

என்றபடி அறிவறிந்த மக்கட்பேறு யிருக்கவேண்டும்.

'பன்றி பலகுட்டி பயன்றதனு லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கென் றோது'

என்றார் இன்னொருவர். பன்றிக்குப் பல குட்டி யிருப்பது போல, எண்ணிக்கைக்குமட்டும் எழெட்டு மூடப்பிள்ளைகளிருந் தென்ன பயன்? யானைக்குட்டிபோல மதிவாணனாகிய மகன் ஒருவனே போதும்.

இதற்காக ஒருவன் என்ன செய்ய வேண்டும்? எப்படி மணக்க வேண்டும்? எப்படி வாழவேண்டும்? கற்புடை மனைவியை எப்படிக் காணவேண்டும்? அவள் பொற்புடையாளாவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி ஏராளமாகவும் தாராளமாகவும் முதல் நான்கு அதிகாரத்திலும் வரிசையாக விளக்கிக்காட்டியிருக்கின்றோம்.



கற்புடை மனைவியென்பதனாலேயே, அகமுடையான் எப்படி யிருந்தாலும் இருக்கலாம். ஆண்பிள்ளைக்குத் தீட் டில்லை. ஆண்பிள்ளை சிங்கம், ஆகையால் என்ன வேண்டு மானாலும் செய்யலாம். எப்படி வேண்டுமானாலும் இருக்க லாம் என்று நந்நாட்டுப் போலியாசாரப்படி, இப்போது நடந்துவரூஉம் ஆரியாசாரப் போலி மண முறையால் ஒவ்வோ ராண்பிள்ளையும் கொண்ட மனைவியைத் திண்டாட விட்டுக் கூத்திவீடே கதியாய்த் திரிந்து நெறிதவறி யிருக்கக் கூடாது. இருந்தால் இவனும் அவளைப்போலவே கற்புக் கெட்டவனென்பதற்குச் சந்தேகமில்லை. ஆரியாசாரப் போலி மணங்களெல்லாம் விலங்குத் தன்மையாய் நடக் கின்றன. கலியாண ஏற்பாடும் கட்டளையும் சத்தியமும் கணவன் மனைவியர்க்கு விளங்கும்படி தமிழிற் சொல்வ தில்லை. எல்லாம் முதல் வகுப்புப் பூசாரி, தம் வழக்கத்தை ஒட்டியும் தாம் பெறாஉம் தக்ஷிணையை ஒட்டியும் மனப் பாடமாய் ஒப்புவித்துக் கொண்டே போகிறார். மண மக்க ளிருவரும் செவிட்டுப் பிள்ளையார்கள் போல, 'எப்போது மூன்று முடிச்சு விழுமோ!' என்று எதிர்பார்த்துக் குந்தி யிருக்கிறார்கள்.

எப்படித் தாய்மொழி மூலமாய்ப் படிப்பில்லையேல், எத்தனை யிருந்தும் இல்லாமற் போகிறதோ, அப்படியே தாய்மொழி மூலமாய்க் கலியாணக் கட்டளைகளும் சத்தியங் களும் பிறவும் இல்லையானால், யாருக்கு என்ன பிரயோசன மாகும்? முதல் வகுப்புப் பூசாரியாகிய அன்னியனே நிய மித்து மண முடிப்பதால், அவன் தன் தக்ஷிணையைக் கவனிப்பதுபோல மற்றெதையுங் கவனிப்பதில்லை. ஆகை யால், இனி வரூஉம் நம் மக்கள் மணங்களையெல்லாம் நம் பெரியோரே பூசாரிகளாயிருந்து நடத்துவிக்க வேண்டும். தக்ஷிணை சங்கதியையே முற்றும் விலக்கிவிட வேண்டும்.

‘கணவனே உடல்.
கணவனே உயிர்.
கணவனே பொருள்.
கணவனை யன்றிக் கடவுளு
மில்லை.
கணவனை வழிபடு.
கணவனை நேசி.
கணவனைப் போஷி.
மாமன்மா மியரை விசுவாசி’

‘மனைவியே உடல்.
மனைவியே உயிர்.
மனைவியே பொருள்.
மனைவியை யன்றி மனையற
மில்லை.
மனைவியை வாழ்த்து.
மனைவியை நேசி.
மனைவியைப் போஷி.
மாமன்மா மியரை விசுவாசி’

என்ற மந்திர ஓமஞ் செய்யவேண்டும்.

‘சனிக் கிரகாய நம:
இராகுக் கிரகாய நம:
கேதுக் கிரகாய நம:’

என்னும் மந்திர ஓமங்கள் அநாவசியம். நவக்கிரக ஓமம் பண்ணுவதைப் பார்க்கிலும், தேகாரோக்கிய ஓமம் பண்ணலாம். ஓமப் புகையால், புது மணமக்கள் இருவர்க்கும் எத்தனையோ தேக சுக வளர்ச்சிக்கு இடமிருக்கிறது. கற்புக் கெட்ட அகலிகையை மிதிக்கிறபடி, அம்மிக்கல்லை மிதிப்பதாகும். கற்பு மிகுந்த அருந்ததியைக் காண்கிறபடி, ஆகாசத்தைப் பார்ப்பதாகும் என்று எத்தனையோ கஷ்டப்பட்டு விசாரித் துணரவேண்டி யிருக்கிறது. மண நடத்துவிக்கும் பூசாரிக்கும் இதன் பொருள் தெரியாது. திருமண காலத்தில் இப்படி மந்தணப் பொருளைக் குறிப்பதைக் காட்டிலும் வெளிப்படைப் பொருளாய் விளக்குவதே விசேஷமென்க. எமது குலமகளொழுக்க வரிசையில் இதற்கெனவே இனி வெளிவரும் வாசுகி யம்மையார் சரிதையைத் திருமண காலத்தில் வாசித்துக் காட்டுவது வாசியாம். ஐம்பெரும்பூத சாக்ஷியாகவும், உற்றார் சாக்ஷியாகவும், உறவோர் சாக்ஷியாகவும், ஊரவோர் சாக்ஷியாகவும் திருமண



நடத்துவிக்கும் குலப் பெரியார் சாக்ஷியாகவும் திருமண நடக்கும்படி ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். தேகாரோக்கிய ஓமம் முடிந்தவுடனே மங்கலியதாரணம் ஆக வேண்டும். மங்கலியதாரணமான வுடனே கணவன் மனைவியர் ஒத்துவாழ வேண்டியதற் குகந்த கட்டளைகளைப் படிக்க வேண்டும்:

1 இன்னார்க்கு இன்னாளாகிய
நான், மனைவி முறையால் உடல் பொருளாவி
மூன்றாலும் கடமைப்பட்டு வாழ
இசைந்திருக்கிறேன்.

2 அவர்க்கு வாழ்விலுந்
தாழ்விலும் மன மொருமித்து
உள்ளன்பு பூண்டிருக்க ஒப்பி
யிருக்கிறேன்.

3 அவரே நான்,
நானே அவரென்று வேற்றுமை யின்றி
ஒற்றுமை பூண்டிருக்கக்
கடவேன்.

4 அவர் என்னோடு ஒத்து வாழ்ந்து
உயிருட னிருக்குமளவும் அவர் அநுமதியின்றி
அவரை விட்டுப் பிரியாதிருக்கக்
கடவேன்.

இங்ஙனம்,
சங்கரி
கையெழுத்து.

1 மின்னாராகிய சங்கரியார்க்கு, இன்னாளாகிய
நான், கணவன் முறையால் என் உடல் பொருளாவி
மூன்றானும் கடமைப்பட்டு வாழ
இசைந்திருக்கிறேன்.

2 அவர்க்கு வாழ்விலுந்
தாழ்விலும் மன மொருமித்து
உள்ளன்பு பூண்டிருக்க ஒப்பி
யிருக்கிறேன்.

3 அவரே நான்,
நானே அவரென்று வேற்றுமை யின்றி
ஒற்றுமை பூண்டிருக்கக்
கடவேன்.

4 அவர் என்னோடு ஒத்து வாழ்ந்து
உயிருட னிருக்குமளவும் அவர் அநுமதியின்றி
அவரை விட்டுப் பிரியாதிருக்கக்
கடவேன்.

இங்ஙனம்,
சங்கரன்
கையெழுத்து.

அதற்கடியில், மணநடத்துங் காரியத்தர் கையெழுத்து. இன்னும் இருவர் சாக்கிக் கையெழுத்துகள்.

மனைவி யிருக்கையிலும், கணவன் மறு மணம்புரியலா மென்னும் வெளி விளையாட்டுப் போலிக் குருட்டுப் பழக்கம் அற நீங்கவேண்டும். சந்ததியில்லையேல் அங்ஙனம் செய்யலா மென்பதும் பெருந் தவறு.

'இருதாரம் ஒருநாளுந்
தேட வேண்டாம்'



என்னும் நீதியை விலக்கி, இருதாரந் தேடி வாழ்பவரைக் காட்டிலும் வெறியர் வேறொருவரில்லை. சந்ததியில்லையேல், இருப்பு ஏராளமாயுள்ளவர், தங்குலத்தார்க்குள் மகவொன்றை வளர்ப்புப் பிள்ளையாய்ச் சுற்றத்தாரறிய ஏற்றுக் கொள்ளலாம்.

'இறந்தவ ராயுமை இவ்விடத் திருத்திப்
பாவனை மந்திரம் பலபட வுரைத்தே
உமக்கவர் புத்திரர் ஊட்டின போது
அடுபசி யாற்குலைந் தாங்கவர் மீண்டும்
கையேந்தி நிற்பதைக் கண்டதார் புகலீர்'

என்றபடி, ஆண் சந்ததியிருந்து எண்ணீர் உண்ணீரொன்றிரைத்தால்தான் நரக நீக்கமென்பது,வெறி யுபதேசமாகும். அதனால் மோசம் போகவேண்டாம். இந்த வுபதேசம் முதல் வகுப்புக் கலைஞானியர்க்கே, மற்ற சமஸ்காரங்களெல்லாம் இருப்பனபோல இருக்கட்டும். எந்த விஷயத்திற்கும் அவர்கள் தாம், முதலில் வந்து வாதிக்கிறார்கள். ஏன் குழந்தைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்றால், அது ஒரு சமஸ்காரம். முனிவர் சொன்னது. ஆகையால் அவர்களுக்கொரு நமஸ்காரம் என்கிறார்கள். எண்ணீர் ஏன் இறைக்கவேண்டுமென்றால், இறந்தவர்களுடைய பசியை அடக்குவதற்கு இதுவொரு சமஸ்காரம். இதற்காக முனிவர்க்கொரு நமஸ்காரம் என்கிறார்கள். இதுவரையில் அக்கலை ஞானிகளில் ஒருவரேனும், "சமஸ்காரமும் நமஸ்காரமும் மத சம்பந்தமானவைக ளென்பது உண்மையானால், நூற்றி லொன்றுக்கும் பற்றாத கூட்டத்தாரிய நமக்கு மட்டுமா இருக்கும்? முனிவர்கள் இப்படியா ஒருதலையாய், சமஸ்காரங்களையும் நமஸ்காரங்களையும் ஏற்படுத்தி வைத்திருப்பார்கள்? அப்படியிருந்தால், ஏனைய தொண்ணூற்றொன்பதின்மரின்கதி யென்ன? சமஸ்காரத்திலும்

சமஸ்காரத்திலுமே சாதிவாரி (Sectarian) யென்றால் மற்றைய ஆட்சியிலுங் காட்சியிலும் மாட்சியிலுங் கேட்பானேன் ?" என்று எண்ணினாரில்லை. ஆகையால், குழந்தை விவாகமும் எள்ளுந் தண்ணீரும் இறைப்பதற்குப் பிள்ளை வேண்டுமென்பதும் ஒரு தலையான குருட்டுப் பழக்கங்கள் என்பதற்குத் தடையில்லை. தன்னலம் பாரிக்கும்போலி ஞானிகளே அவைகளைக் கொண்டாடி மகிழ்வார்கள்; டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மையார் முதலியோர் கொண்டு வந்த குழந்தைக் கலியாணத் தடைச் சட்டத்தைத் தவறு என்று விலக்கத் ஆடை தட்டுவார்கள். தட்டியும் என்ன பிரயோஜனம்? அவர்களுடைய கூக்குரல் நூற்றுக்கு ஒன்றாகவும் வலுவடைந்தில்லை யாதலால், பலியாமல், சட்டந் திட்டமாய் அம்மையார் இட்டமாய் நிறைவேறிவிட்டது.

இப்படியே சந்ததி கருதி, மறுதார மணப்பதையும் தடுத்துச் சட்டமாக்க வேண்டும். சந்ததியற்றவன் மோக்ஷமற்றவனென்பதையும் வெறிப்பேச்சா விலக்க வேண்டும்.

"தமது மக்களே தமது பொருள். ஏனென்றால், அம்மக்கள் தாம் தேடும் பொருளைத் தம்மைப் பெற்றவர்கள் போல் தான தருமஞ் செய்கிறார்கள்" என்னுங் கருத்துடைய பின் வரூஉம் குறளைக் கவனிப்பாம்.

'தம்பொருளென்பதம் மக்கள் அவர்பொருள்
தத்தம் வினையான் வரும்'

தத்தம் வினையான் என்று பொதுப்படக் கூறினாரே யன்றி, எண்ணீர் இறைப்பதால் என்று பரிமேலழகராகிய முதல் வகுப் புரையாசிரியரும் மொழியவில்லை.

எப்படியேனும் இறந்த நாளைக் கொண்டாடுவதால் என்பதே இதன் பொருள். இறந்த நாளில் ஆதுலர்க்கு அன்னதானஞ் செய்வதனாலேயே என்பதிதன் பொருள்.



சந்ததியில்லாமைக்காக ஆண்மகன் வேறொருத்தியை மணப்பதைக் காட்டிலும், ஆண் மலடுண்மையால் பெண் மகள் வேறொருவனை மணக்கலாம் என்றும் ஏற்படும். ஆண் மகனுக்குள்ள சௌகரியங்களெல்லாமும் பெண் மகளுக்குமிருக்கவேண்டும். இருவரில் ஒருவர் யாரிறந்தாலும் இருப்பவர் இஷ்டமானால் மறு மணம் புரியலாம் என்னுஞ் சட்டமும் திட்டமாய் வரவேண்டும். உடன் கட்டை யேறுதல் ஒரு சமஸ்காரமாய் முனிவர் மொழிந்ததாயிருந்தும் எப்படிச் சட்டதிட்டத்தில் அடியோடு ஒழிந்து போயிற்றோ, அப்படியே கணவன் மனைவியர் ஒத்து வாழும் வாழ்க்கைக்கு விரோதமாய் ஒரு தலையாயிருக்கும் வெறிப்பழக்கங்களெல்லாம் அற நீங்கவேண்டும். இவைகளெல்லாம் மத சம்பந்தமும் சம்மதமும் பெற்றதென்றால், பரம் பொருள் ஒன்றேயென்று எல்லார்க்கும் உள்ளபடி, ஒன்றாயிருக்குமன்றி, முதல் வகுப்புக்கு வேறு, இரண்டாம் வகுப்புக்கு வேறு, மூன்றாம் வகுப்புக்கு வேறு (இரட்டையர்களுக்கு வேறு) ஒத்தையர்களாகிய சூத்திரர்க்கு வேறு என்றிராது. ஐந்தாங் குலத்தவர்க்குக் கதி மோக்ஷமே யில்லை யென்று அவர்களை விலங்குகளென விலக்கி வைக்காது.

சந்ததி யில்லாதவன் பணக்காரனானால், தன் தாய் தந்தையர் போல் தான தருமஞ் செய்து ஏழைகளைக் காக்கட்டும்; தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழட்டும். இதையே நாயனார், 'அவர் பொருள் தத்தம் வினையான் வரும்' என்றார். இதை விட்டுச் சந்ததியில்லாதவன், தன் மனையாளுக்குச் செய்து தந்த சத்தியத்தை அழித்து, வேறொருத்தியைப் பிள்ளைப் பேற்றுக்காக மணந்து, ஒரு திருட்டுக் குருட்டுப் பிள்ளையைப் பெற்று வைத்து, ஆத்தியை சாத்தியாக்க வேண்டுமென்று தப்புப் பொருள் கொண்டு கூத்தாடுவது வெறியர் செய்கையாகும். இந் நன்னூலை வாசிப்பார் ஒவ்

வொருவரும் யோசிப்பாராகி, எந்த விதத்திலும் முறை தவறாது, (ஏகபத்தினி விரதம்) தனிமனை நோன்பு நோற்று வாழ்வதே மேட்டிமை யாகும். இல்லையேல், பாண்டு மகாராஜன் குந்திக்கும் மாத்திரைக்கும் அனுமதி அளித்ததுபோல, தம் மனைவிமார்க்குப் பரபுருஷ சம்பந்தந் தேடி வைத்தாலும் வைக்கலா மன்றித் தாரமிருக்கத் தாரம் தேடிச் சங்கடப் படக்கூடாது. அக்காலத்தில் புத்திரப் பேற்றை இராஜாங்கத்தில் அத்தனை முக்கிய மென்று கருதி யிருந்தார்களாகையால், அம்பிகை அம்பாலிகை என்னும் இராணிகளுக்கும் வியாச முனிவராகிய பரபுருஷ சம்பந்தம் பரமயோக்கியமாயிருந்தது. அதை விட அவர்கள் மறு மணமே செய்து கொண்டிருக்கலாம். ஆண் மகனுக்கிருந்தபடி பெண் மகளுக்குச் சுயேச்சையில்லாதிருந்ததால், அக்காலத்திற் பெண்களைப் பிள்ளை காய்க்கு மரங்களாகக் கருதிப் பீடழிந்தார்கள். இன்னும் அந்த அனுசிதப் பழக்க வழக்கங்களாலேயே நந்நாடு சீரடையாமல் செல்வஞ் சுருங்கி வறுமையிற் றிகழ்ந்திருக்கிறது.

இன்னும் என்ன சொல்லலாம்? பெண்களைக் கன்னி மாட வாசங்களில் விட்டுக் கல்வி கற்பிக்க வழிதேட வேண்டும். இல்லையேல் நந்நாட்டுப் பதினைந்துகோடிப் பெண் மக்களும்,

'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூற்
கற்றாரோ டேனை யவர்'

என்றபடி விலங்குகளாய்ப் பிள்ளை யுற்பத்தி செய்யும் இயந்திரங்களாகவே யிருப்பார்களென்பதற்குத் தடையென்ன?

குருகுல வாசத்திலும் கன்னி மாடவாசத்திலும் உள்ள ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் பெற்றோர் பிரியம் போலக் கடிமண நிச்சயம் செய்து விடக்கூடாது. ஆனதுக்கு



ஆகாததும் ஆகாததற்கு ஆனதுமாய் முடியுமாகையால், அவர்கள் தத்த மிஷ்டம்போல் காதலர் காதலியாக அடி நாள் வழக்கப்படித் தாமே நிச்சயித்துக் கொண்டு வெளிவர வேண்டும். காதலர் பிரியம் தெரியாமல் மணமுடிப்பதெல்லாம், பொம்மைக் கலியாணங்களாய் முடியும். முன்னைய அதிகாரங்களில் நாம் குறித்தபடி, கணவற்கு வயது இருபத்தொன்றுக்குக் குறையப்படாது; மனைவிக்கு வயது பதினேழுக்குக் குறையப்படாது. இவைகளுக்கு மேலா யிருப்பதே மேன்மையாம். இன்னும் இவ்வதுவை வயது வரையறை ஆண்மகனுக்கு இருபத்தொன்றாகவும், பெண்மகளுக்கு இருபதாகவும் நீடிக்கலாம். அன்றிக் குறைவது தவறு. எவ்வளவுக்கெவ்வளவு வயது நீடிக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு உடல் வலிவும், ஆயுளும், ஆரோக்கியமும் வளருமென்றுணர்க. இதுபற்றியே ஆண்களைக் குறித்து,

'அறுநான்கிற் பெற்ற புதல்வனும்'

என்று கூறியிருக்கிறார்கள். அறுநான்காகிய இருபத்தினாலுவயதில் ஒருவனுக்கு ஆண் குழந்தை பிறந்தால், பிறகவன் நாற்பத்தினாலுவயதாய்த் தள்ளாதவனாகத் தொடங்கும் போது, அக்குழந்தை இருபதுவயது ஆண்பிள்ளையாய், ஆலம் விழுதுபோல, அவனுக்கு ஒத்தாசையாய்த் தாங்கிக்கொள்வான். இப்படி உடல் முதிர்ந்து, பிறவிக்கிடம் பண்ணல்தான், கான்முளைகள் பலப்படும். ஆகையால், நந்நாட்டுக் குருட்டுப்பழக்க வழக்கங்களையே பெரும்பாலும் பின்பற்றிக் கெடுகிற ஒவ்வொருவரும் இதைத் தீர யோசித்துத் தத்தம் மக்களுக்கு நிறைவயதிற் கலியாண வேற்பாடு செய்யவேண்டும்.

இந்நூலாசிரியராகிய எமக்கும், இருபத்தேழிலேயே திருமண முடிந்தது. அப்போது எம்மனைவிக்கு இருபது

வயது. அடுத்த ஆண்டில் ஆண்மகப் பேறுபெற்றோம். பையன் பலசாலியாகவும், பிறந்தபோதே ஒரு வயதுக் குழந்தை என்னலாம்படி உடல் வளர்ச்சியும் பெற்றிருந்தான். தாய்க்கும் பால் மிகுதியாய்ப் பையனை ஊட்டி வளர்க்கத் தகுதியாயிருந்தது. இதை வாசிப்போர் எக்குலத்தாராயினும் இதைத் தீரயோசித்துத் தக்க வயதிற் கலியாணம் செய்துகொள்ளக் கடவர். எந்த விதத்திலும் ஆண் வயது இருபத்தினாலுக்கும் பெண் வயது இருபதுக்குங் குறைய வேண்டா. இருவரும் நன்றாய்க் கற்றவராகவும், நோய் நொடிகள் அற்றவராகவும் இருக்கவேண்டும். இருவரும் திருமணத்துக்கு முந்தியே இல்லற விஷயத்தில் நூலளவாலும், கேள்வியளவாலும், அநுபவ அளவாலும் நன்றாய்ப் பழகியிருக்கவேண்டும். இருந்தால்தான் அவர்கள், தாம் திருமணஞ்செய்து கூடிய காரணம் இன்னதென்று நன்றாத் தெரிந்துகொள்வார்கள்.

உடல், பொருள், உயிர் என்னும் மூன்றிலும் கணவன் மனைவியர் இணைந்திருக்கிறார்கள். மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களாலும் அவர்கள் ஒற்றுமையாய் வாழவேண்டும். உடல் ஒன்றால் மட்டுமே இணைந்திருக்கிறோம் என்றெண்ணிக்கொண்டு, அவர்கள் தம் இஷ்டம்போல், ஒருவரை ஒருவர் வஞ்சித்து வாழக்கூடாது. கணவன் செல்வாக்காலும், தன் மூடமதியாலும், மனைவியை நோக்கி, “அடி, பெண்ணே! உனக்கென்னடி வாய்? நான் ஆண்மகன், சிங்கம், எப்படிப் போனாலும் உனக்கென்ன? நீயென்ன, பெட்டைத்தி; நாய் மதத்திலும் நாலு மாற்றுக் குறைவு. உன் வரையிற் பார்த்துக்கொள். குழந்தைகள் இருந்தால் எங்கே போய் விடும்? நான் என்னவோ, என்னை நம்பினவளைக் கைவிடமாட்டேன். அவள் விஷயத்தில் ஆயிரம் ஆயிரமாகத்தான் செலவு செய்வேன். அவளுடைய ஒயி



லும், குரலாகிய குயிலும், சாயலாகிய மயிலும் உனக்கு வருமா? போடி பைத்தியக்காரி” என்று ஏசிப்பேசி, கொண்ட மனைவியைக் குப்பைவாரியாக மதித்து, உல்லிங்கனஞ் செய்து விட்டுவிட்டு, வேசியிடே மோக்ஷமென்றெண்ணி மோசம்போகப்படாது. கொண்ட மனைவியை அடிமையாக நடத்தும் இந்நாட்டார்க்கு இப்படிப்பட்ட நூலே அவசியமில்லை. ஆயினும், சாகிற வுயிர்க்கும் தொண்டைமருந்து (கண்டா விழ்தம்) ஊற்றித் தேற்றியிருக்கிறார்கள் என்பதை அநேக இடத்தில் நாம் பார்த்திருக்கிறபடியால், பெண்ணடிமையான நாட்டிலும் பெண்ணொருமையைக் குறித்துப் பேசும் இந்நூல், பலன்தராமற் போகாதென்று எழுதுகிறோம்.

பெண்ணுடல் ஆணுடலைப்போல அத்தனை வலுவுடையதல்லவென்று அநுபவத்திலேயே எல்லார்க்குந் தெரியும். அதனாலேயே அவர்களை ஏய்க்கவேண்டுமென்றெண்ணும் வெறியனை யாம் எள்ளளவும் மதியோம். அப்படியானால், குழந்தைகளும் எத்தனையோ வலுவிற்குறைந்திருக்கிறார்கள். அதனாலேயே அவர்களைக் கொன்றுவிடலாமா? அப்படியே அந்தக் குழந்தை காய்க்கு மரங்களாகிய பெண்களையும் பெரிதும் போற்றவேண்டும். மரம் செழிப்பாயிருந்தால் தானே, காய்கள் பருத்துவளரும்? சில குருட்டு மடையர்கள், குழந்தைகளை மட்டும் கொஞ்சிக் கொண்டாடுவார்கள்; அவைகளுக்காதாரமான மனைவியைக் கண்ணெடுத்தும் பாரார்கள். பெண்கள், சரீர பலமற்றவர்களென்பதனாலேயே அவர்களைத் தாழ்த்தவேண்டுமென்றெண்ணுவது நாட்டின் மதியீனத்தைக் காட்டுகிறது. பெண்களைச் சிலர் நாயை அடக்கியாள்வது போலவே அடக்கிக் கிடுகிடுவென்று நடுநடுங்கும்படி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கேட்டால், “உமக்கென்ன தெரியும்? அவளை

அப்படித்தான் அடக்கியாளவேண்டும். இல்லாவிட்டால் அவள் ஊதிவிடுவாள். பிடாரியாச்சே! பிடாரிக் கிடங்கொடுத்தாலும் பெண்ணுக் கிடங்கொடுக்கலாமா? ஏதோ, குழந்தை பிறக்கவேண்டுமேயென்று அவளை அடுப்பங்கரையில் விட்டு வைத்திருக்கிறேன். இல்லாவிட்டால், அவள் இங்கு இருக்கவேண்டியதில்லை" என்று நந்நாட்டு மதியீனத்தை நன்றாய்ப் பிரசங்கம் பண்ணுகிறார்கள்.

இந்தப் பிரசங்கங்களையெல்லாம் எத்தனையோ கேட்டுக் கேட்டு, எங்காதும் புளித்திருக்கிறது. பெண்களைத் தாழ்த்தும் பழக்கம் நெடுநாளாய் மகன்மகன் முறையாய் வந்திருக்கிறது. சற்றே ஒருவன் தன் மனைவியை நேசித்துப் பூசித்து வைத்திருந்தால், அவன் தாய் வந்து, "என்னடா பையா? எத்தனை நாளாய் அவளைக் கண்டாயடா, பைத்தியக்காரா? 'வந்ததே சிறுக்கி பந்தடித்தாள்' என்றபடி வந்த புதுமையில் அவள் இராட்டினஞ் சுற்றினாள். எல்லா வேலையையும் தன்மேற் போட்டுக்கொண்டு பம்பாம் ஆடுவதுபோல ஓயாமல் ஒழியாமல் செய்து வந்தாள். இப்போது உன்னாலேயே அவள் கெட்டு, 'வரவரச் சிறுக்கி கழுதை மேய்க்கிறாள்' என்றபடி கோவேறுகழுதையாத் தீர்ந்தாளே! அடே, பாவி, உனக்கென்னடா, உங்கப்பா, இருந்தது தெரியாதா? என்னை அவர் அடக்கியாண்ட வீரதீரம் உனக்கில்லாமலா போயிற்று? சிறுக்கிக்கு ஆத்தாள் என்னவோ மருந்துசெய்து கொடுத்திருக்கிறாள். அந்த மருந்து மயக்கத்தில் அகப்பட்டு விழிக்கிறாய். பெற்ற தாயைப் பழிக்கிறாய். உனக்கென்னடா குறைவு? ஆண் மகன் சிங்கம்; கொண்டைக்காரி தெருவாலேபோனால், பின்னல்காரி புறக்கடையால் வரக்காத்திருக்கிறாள்" என்று கூட்டுறவைக் குலைக்கின்ற கூக்குரல் எத்தனை வேண்டும்?



இந்தச் சென்னைப் பட்டினத்திலேயே இப்படி எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன.

ஆனாலும், இவைகளெல்லாம் இப்போது கொஞ்சம் ஒழிந்திருக்கின்றன. வெள்ளைக் காராட்சியில் இது ஒன்றுதான் நூற்றுக்கு ஒரு பங்கானாலும் கொஞ்சம் திருந்தியிருக்கிறது. ஏனென்றால், அவர்களுக்குள் நெடுநாளாய் ஆண் பெண் அபேதமான பழக்கம் தொடர்ந்துவருகிறது. இந்த மாமி நாத்தி கொடுமை அவர்களை அத்தனை வருத்துவதில்லை. ஆண்களும் பெண்களும் முந்தி மனமொத்த பிறகே மணஞ்செய்து கொள்ளுகிறார்கள். அங்கே பொம்மைக் கலியாணக்கொடுமை அவ்வளவு அதிகமாய்க் கிடையாது. மணமானதும், கணவன் மனைவியரை, மாமி நாத்தி தொந்தரையில்லாமல், தனிவாழ்க்கையில் விட்டு விடுகிறார்கள். எத்தனை ஏழையானாலும், கணவன் தன் புதுமனைவியை, இன்பமாதம் (Honey moon) என்னும் முதல் மாதத்தில் துன்பமின்றி வைத்துக்கொண்டிருக்கிறான். இன்னுங் கொஞ்சம் புத்திமானானால் அவன் அந்த இன்பமாதத்தையே இன்ப வருஷங்களாக்கிக் கொள்ளுகிறான். மாமி நாத்திகளுக்கும் பெண்கள் அடிமைகளா யிருக்கவேண்டு மென்பதில்லை. இங்கும் இப்படியே பெற்றோரும், மற்றோரும், உற்றோரும் ஒன்று கூடிப் புதுமணக் கணவன் மனைவியரைப் புத்தகம் நிருமித்துத் தனிவாழ்க்கையில் அமர்த்தவேண்டும். இதுவே நந்தமிழ் நாட்டு ஆதிக்கணவன் மனைவியர் வாழ்க்கைமுறை. இந்த வெள்ளைக்காரர் வழக்கமுறையை இங்கும் சில சுதேசக் கிறித்தவர்கள் அனுசரித்துத் தம்மக்களுக்குப் புதுமணமானதும் புதுக் குடித்தனம் கோலிக்கொடுத்துத் தனியே வைக்கிறார்கள். இப்படி வைப்பதற்குக் குழந்தைக் கலியாணக் கொடுமையின் தலையில் இடிவிழவேண்டும். அது அறவே நந்நாட்டைவிட்டு அகல வேண்டும். குழந்தைக் கலி

யாணக் கொடுமையால்தான், மாமி நாத்திகள் கொடுமை கொழுந்து விட்டெரிகிறது. இல்லாள் குழந்தையாயிருப்பதனால்தான் குடும்பத்திற் பழக, அவளுக்கு வாத்தியார் வேண்டியதாயிருக்கிறது. கணவனும் குழந்தைக்குத் தகுந்த பையனாயிருப்பதனால்தான், அவன் ஐயனாகு மட்டும், ஆத்தாள் வாத்திமைத் தொழிலை மேற்கொண்டிருக்க வேண்டியதாயிருக்கிறது. ஆத்தாளும் கொடுமை செய்வதில் மாமி மாமி முறையாய் வந்தவளாகையால், தன் போதனா முறையைக் கடுமையிலும் கொடுமையிலும் செலுத்தி மருகியை ஆளத் தொடங்குகிறாள். தன் மகளுக்குமட்டும் அவளொரு வேலைக்காரிபோல் உழைக்கிறாள்; மருமகளுக்கு எமன் போலத் தீங்கு இழைக்கிறாள். மகளுக்கு எப்போதோ ஒரு முறை நான்கு நாளைக்கொருகால் எண்ணெயிட்டுத் தலை முழுக்காட்டுகிறாள். மருமகளுக்குமட்டும் அடுத்தடுத்து மாத மாதம் வீதம் போட்டுத் தவறாமல் தலை மாட்டுகிறாள்.

மேலதிகாரங்களில் நாம் கூறியபடி, நாயகனை நாயகியைத் தேடிக்கொண்டு தக்க பருவத்தில் குடித்தனஞ் செய்யத் தொடங்கினால், இந்தக் கஷ்டங்களுக்கு இடம் இராது. தாய் தந்தையர்களே நேரிற் சென்று வயது வராத குட்டிகளுக்குங் குழந்தைகளுக்கும் மணம் பேசி முடிப்பதால், இத்தனை கொடுமைகளும் வளர்கின்றன. ஆகையால் இந்நூலை ஓதின பிறகேனும், நந்நாட்டுப் பழைய வழக்கின்படி கணவன் மனைவியர் ஏற்பட வேண்டும்.

இப்படிக் கணவன் மனைவியர் ஏற்பட்டு வாழ்வதற்கு நூற்றில் தொண்ணூற்றொன்பது பேரும் ஒப்புவார்கள். ஒருவர் தாம் ஒப்பார். அவர் தாம் நந்நாட்டில் வாழும் முதல் வகுப்புக் கலைஞானியார். அவர் ஓரே பெருங் கூச்



சல் போடுகிறார். குழந்தை மணத்தை யொரு பெருஞ் சமஸ்கார மென்று, முனிவரை நமஸ்காரம் செய்கிறார். செய்யட்டும். தொன்றுதொட்டு வந்த தங் குழந்தைக் கலியாணத்தையே கொண்டாடட்டும். இனியேனும் கொஞ்சம் நன்றாய் எண்ணிப்பார்க்கட்டும். முனிவர்கள் பொதுப்படக் கூறாமல், நூற்றில் ஒருவர்க்கு மட்டும் சிறப்பாய் ஒரு சமஸ்காரத்தை ஏற்படுத்தி யிருப்பார்களா என்று நன்றாய் நிதானித்துப் பார்க்கட்டும். இந்நூலை ஆய்ந்தோய்ந்து வாசித்துணர்ந்து நன்மையை நாடட்டும். அவர் ஒரு சிறு தொகையான வகுப்பாரே யாகையால், கூடிய சீக்கிரத்தில் மனந்திரும்பி,

'ஒப்புரவொழுகு'

'எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு'

'எப்பொருள் யார்யார்வாய்ச் சேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்ற நீதிக் கட்டளைகளுக் குள்ளடங்கி, நீர் வழியோடும் தெப்பம் போலப் பெரும் பாலாராகிய தொண்ணூற்றொன் பதின்மரையும் பின் பற்றித் தாமும் சிற்றின்ப வெற்றிக்குகந்த சீரிய மணஞ் செய்து, நாம் கூறியபடி சுகானுபவியாய் வாழ்வாரென்று கோருகிறோம்.

கணவன் மனைவியர் இருவரும் உடலால் மட்டும் ஒற்றுமையாய் வாழ்வது பற்றாது. உயிராலும் ஒற்றுமையாய் வாழவேண்டும். அவர்கள் தனித்தனி யேதேனும் கைத்தொழில் வாய்த்தொழில் மூலமாய்ப்பொருள் தேடவகை யுடையவர்களாயிருக்கவேண்டும். ஆகையால் பொருளாலும் ஒற்றுமையுடையவர்களாய் வாழவேண்டும். மனைவியுங் கணவனைப்போலவே தன்னாலான மட்டும் உழைப்பவளை பிழைப்

பவள் என்றபடி பொருள் வருவாய்க்கு வழிதேடவேண்டும்.
நூற்குந்தொழில், தைக்குந்தொழில், நெசவுத்தொழில்,
கல்வி கற்பிக்குந்தொழில், நடவுத்தொழில், களை களையுந்
தொழில் முதலிய பெண் தன்மைக்குகந்த எந்தத் தொழிலை
யும் செய்யலாம். ஒருவன் வரும்படியையே எதிர்பார்த்துக்
கொண்டிருந்து குடும்ப பாரத்தை வளர்க்கக்கூடாது.
ஆண்மகன் ஒருவன் தான் தன் மனவாக்குக் காயங்களின்
வன்மைக்குத் தக்கபடி வருவாய்க்கு வழிதேடவேண்டும்,
பெண்மகள் என்றும் அவன் கையையே யெதிர்பார்த்துக்
கொண்டு, அவனுக்கு அடிமையாய்க் குடும்பக் கூட்டத்
தைப் பிள்ளை குட்டிகளால் வளர்த்துச் சோம்பேறியாய்க்
காலங்கழிக்கவேண்டும் என்னுங் குருட்டுப் பழக்கத்தால்
அநேகங் குடிகள் கஞ்சிக்கலைந்து நாசமாகின்றன. ஆகை
யால், பெண்மகளும், தன்மனவாக்குக் குகந்த மேற்குறித்த
புண்ணியத்தொழில்களில் ஏதேனும் ஒன்றைக் கண்ணிய
மாய்க் கைப்பற்றிப்பொருள் வருவாய் தேடிக் குடும்பபாரத்
தைக் குறைக்கவேண்டும்.

மேலே நாம் வாசித்தபடி பெருங்கூட்டங் கூடிப் பெண்
மகளுக்கும், ஆண்மகனுக்குக் குருகுலவாசம் போலவே,
கன்னிமாடவாசத்துக்கு வழிதேடும்போது கைத்தொழிற்
கும் வழிதேடி வைக்கவேண்டும். அப்போது தான் இந்
நாட்டார்க்குப் பழியொன்றுமில்லை. இப்போது உள்ள
ஆண்மகன் உழைப்புப்பொருள் வருவாய் முறையால் நந்
நாட்டை வறுமைப் பிணிவாட்டுகிறது. ஏறக்குறைய ஓர்
ஆண்மகன் பொருள் வருவாயை ஐந்தாறு மக்கள் எதிர்
பார்த்து வாடிவதங்கியிருக்கிறார்கள். அதனால் பொன்னா
டாகிய நந்நாடு சீர்குலைந்து, ஏங்கியிருக்கிறது. உத்தியோகம்
என்றால் நகத்தில் அழுக்கேறாமல் நிலையாய் ஓரிடத்தில் உட்
கார்ந்து கூலிக்கு எழுதுவதும் படிப்பதுமே என்று தப்



பார்த்தம் பண்ணி நந்நாட்டார் தவிக்கிறார்கள். உத்தியோக
மென்றால், ஆதியில், சேனாவுத்தியோகம் அதாவது போர்
செய்வதென்றே பொருளாயிருந்தது. இப்போதது இரா
ஜாங்கத்தில் மாதக்கூலிக்கோ, தினக்கூலிக்கோ நகத்தில்
அழுக்கேறாமல் சோம்பியிருந்து வேலைசெய்வதென்று புதுப்
பொருள் பெற்று விளங்குகிறது. இந்த அர்த்தம் சமயோ
சிதமானதேயன்றி அதற்குப் பொருத்தமானதன்று.
தொழில் முயற்சி யென்பதே உத்தியோகமென்பதற்குப்
பொருத்தமான அருத்தம். ஆண்மகனுக்கு ஏற்ற மிறைத்
தல், ஏர் உழல், மண்வெட்டியாற் கொத்துதல், வீடுகட்டு
தல், வர்த்தகஞ்செய்தல் முதலிய பல வெளியேறிச் செய்யும்
தொழில்கள் உளவானால், பெண்மகளுக்கும், தண்ணீர்
மாறல், நாற்றுநடல், அறுப்பறுத்தல், அரிதாள் வேய்தல்,
களைகொத்துதல் முதலிய வெளிவேலைகளும் நூல்நூற்றல்,
சாயம் போடுதல், பாவோடுதல் முதலிய உள்வேலைகளும்
உள. அவன் மனவாக்குக் காயவன்மைகளுக்கேற்றதொழில்
கள் போர் வீரத்தொழில், நகர்காவற்றொழில் முதலியவை
களுக்குப் பெண்கள் உதவமாட்டார்கள். ஆகையால்
பெண்களுக் குகந்ததொழில் நிழலிலிருந்து கருக்கெடாமல்
செய்யக்கூடிய தற்போதைய துரைத்தனத் தொழிற் சாலை
களில் நடக்கும் எழுத்து வேலைகளாகிய போலி உத்தி
யோகங்களேயாம். நடுநிலையாய் எண்ணிப் பார்க்கையில்
ஆண்கள் வெளிவேலைக்கே சரியானவர்கள். பெண்கள்
உள்ளிருந்தபடியே உடல் நிலைதளராமற் செய்யும் துரைத்
தன எழுத்து வேலைகளாகிய வுத்தியோகங்களுக்கே சரி
யானவர்கள். ஆண்கள் தபாற்சேவகராக இருந்தால், பெண்
கள் தபாற் சாவடிகளில் கணக்கர்களாகவும், தபாலதிகாரி
களாகவும் தாராளமாயிருக்கலாம். ஆண்கள் வெளியேறித்
திரியும் வேலைகள் (Executive out-door works) பல

வற்றிற்கும் பாத்திரவான்களாயிருக்கையில், பெண்கள் உள்ளிருந்து செய்யும் உத்தியோகங்கள் (Indoor works) பலவற்றிற்கும் பக்குவமானவர்களாயிருக்கிறார்கள். இப்படி நந்நாட்டிற் பெண்கள், பிறநாடுகளிற்போல நூற்றுக்கு ஒருவரும் இருப்பதாகக் காணோம். ஏனென்றால், ஆண்களே கல்விக் குரியாரென்று, பெண்களை ஒதுக்கி வைத்துப் பரபாஷையை ஏராளமான பொருட்செலவாற் கற்று, பி.ஏ., எம்.ஏ. முதலிய சோதனைகளுக் காட்களாய்த் தக்க வருவாயின்றித் தவிக்கிறார்கள். இவைகளெல்லாம் நமக்கு வேண்டிய கல்விச் சோதனைகளே அல்ல; வேதனைகளாய் முடிந்திருக்கின்றன. நெசவுத் தொழிலையும், பயிர்த் தொழிலையும், வேறு கைத்தொழில்களையும் போற்றி நந்நாட்டு ஆண்பெண் இருபாலாரும் பழையபடி சௌக்கியமாய் வாழ வேண்டும். தாய்ப்பாஷையாலேயே படிப்பைப் போற்ற வேண்டும். அன்னிய பாஷையாற் படிப்பை வளர்க்கப் பார்ப்பது கரும்பிருக்க இரும்பு கடித்தெய்த்தபடியாம். தாய்ப்பாஷையாலேயே படிப்பை வளர்ப்பதற்குகந்த சுவடிகளைப் பழையபடி யாம் வெளியிட உத்தேசித்திருக்கிறோம். குருகுல வாசத்துக்கும் கன்னிமாடவாசத்துக்கும் உகந்த நாட்டுப் படிப்புப் பாடச்சுவடிகள் பழைய முறையில் அநேகம் வெளிவரும். அவைகளைப்படிப்போர் எந்தப்பொருளையும் தாய் மொழியாலேயே, உள்ளது உள்ளபடி ஊகித்துணர்ந்து கொள்வார்கள். ஆண்பெண் இருபாலாரும், அவைகளிற்பயில்வதால், உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய ஊதிய உழைப்பிற்குப் பிறரை எதிர்பார்த்து ஏங்கவேண்டியதில்லை. எந்தவிதத்திலேனும் அவர்கள் 'உழைப்பவன் பிழைப்பவன்' என்றபடி எந்தத் தொழிலையும் சிந்தையுவந்து நிந்தையறச்செய்து பிழைக்கும் விந்தையான விவேகம் பெற்று வாழ்வார்கள்.



பெண்களுடைய தேகஅமைப்பால் எப்போதும் அவர்கள் சமைத்தல், பிள்ளை பெறுதல் முதலிய தொழில்களுக்கே உரியவர்கள்; அவர்களுக்கு வெளி வேலையே உகந்ததல்லவென்பது நந்நாட்டாருடைய கொள்கையா யிருக்கின்றது. ஆனாலும், உள்வேலைகளில் எத்தனையோ கைத்தொழில்கள் அவர்களுடைய உதவியை நாடி ஓய்ந்திருக்கின்றன. அவர்களையேன் கலயம் வனையும் தொழில், அதாவது, மட்பாத்திரம் செய்யுந் தொழிலிற் பழக்கப்படாது? நெசவுத்தொழிலிலும் நூற்குந் தொழிலிலும் பழக்கப்படாது? சித்திரத் தொழிலிலும் பிற தொழில்களிலும் பழக்கப்படாது? இன்றளவும் மேற்குறித்த தொழில்களைக் குலத் தொழில்களாகக் கொண்டிருக்கும் குடும்பங்களில் ஆண்பெண் இருபாலாரும் அத்தொழில்களைச் செய்கையில் நாம் பார்த்து வருகிறோமல்லவா? குயவன் பானைவனைந்தால், குயத்தி யதற்கு எழுத்து வேலைசெய்யவும், மெருகேற்றவும், மண் பிசையவும் காண்கிறோம். கைக்கோளன் நெய்தால், கைக்கோளத்தி பாவோடுகிறாள். இன்னும் என்ன வேண்டும்? தொழிலில் இந்த வழக்கம் இருக்கையில் படிப்பிலும் இந்த வழக்கம் இருக்கவேண்டும். ஆண் பெண் இரு பாலாரும் சமமாய்ப் படிக்கவேண்டும். ஆண்களைவிடப் பெண்களுக்கே படிப்பு அத்தியாவசியமானது. ஆண்களுக்கு இயற்கையாகவே மனோதைரியம் உண்டு. பெண்களுக்கது குறைவாகையால், அக்குறையை நிரப்பப் படிப்பு அவசியம் வேண்டும். கணவன் மனைவியர் குடும்பக் கண்களாயிருக்கையில், ஒரு கண் தெரிந்தும் மறுகண் தெரியாமல் குருடாயும் இருக்க வேண்டுமென்னுங் கொள்கை நந்நாட்டார்க்கு அட்டமத்திற் சனி பிடித்ததால் உண்டானதாகும். படிப்பிருக்கட்டும். கைத் தொழிலிலேனும் நந்நாட்டார் தலையெடுத்தார்களா? இல்லை, இல்லை. ஆண்களே தலையெடுக்காத

போது பெண்கள் தலையெடுப்பதெங்கே? உத்தியோகஞ் செய்வதற்குத்தான் படிப்பதென்னும் பரபாஷைப் படிப்புப் பயித்தியம் நந்நாட்டை விட்டொழியுமட்டும் நாம் சீர்பெற மாட்டோம். பெண்களை அடுப்பூதிகளென்றும், பிள்ளைகாய்க்கும் மரங்களென்றும், அடிமைகளென்றும் எண்ணி யிறுமாந்திருக்கு மட்டும் நாம் சீர்பெறமாட்டோம். பெண்களைப் பணக்காரர், நகைதாங்குஞ் சுமைதாங்கிகளென்றும், காம இன்ப நிலையங்களென்றும், மற்றைப் பண்ட பதார்த்தங்களைப் போல அவர்களும் ஓர் உடைமைகளென்றும் கருதியிருக்குமட்டும் நாம் கவலை தீரமாட்டோம்.

முன்னைய அதிகாரத்திற் கண்டபடி பெண்களை ஆண்கள் வேறு பிரித்தெண்ணாமல் இரவின்றிப் பகலில்லாதபடி, பெண்ணின்றி ஆணில்லையென்பதை நன்குணர வேண்டும். அவர்களுக்கே கல்வி முக்கியமானது. அவர்களே குடும்பத்தை உள்ளிருந்து நடத்தவேண்டியவர்கள்; சீர் திருத்தவேண்டியவர்கள்; அரையிலாடியே அம்பலத்திலாட வேண்டுமென்றபடி அவர்களாலேயே ஆண்மக்களும் பெண்மக்களும் சீர் பெறவேண்டும். ஆகையால் அவர்களுக்கே ஆண்மக்களினும் கல்வி அதிகமாய்வேண்டும். இந்த விஷயத்தில் இத்தனை காலமாய் நந்நாடு சீர் பெறாதிருப்பதனாலேயே இத்தனை கேவல நிலையில் நிற்கிறது.

ஆகையால், ஒவ்வோராண்மகனும் தக்கவயதிலொரு நாயகியைத் தேடிக்கூடி நலமடைய முயலவேண்டும். இருவர்க்கும் இன்பநலம் ஒன்றாயிருப்பது போலவே, துன்பபலமுந்தொடர்ந்திருக்கிற தென்பதை இந்நாட்டில் ஆண்மகனே நன்றாய் எண்ணிப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட நூல் இருபாலார்க்கும் இசைந்ததாயினும் ஆண்பாலாரே பெரும் பாலாரும் படித்தபாலாராயிருப்பதால்,



மற்றைப்பெண்பாலார்க்கிதைப் படித்துக் காட்டி அறிவூட்ட வேண்டும். ஆண் பெண் இருபாலாரும் இயற்கையிற் சந்தித்த மாத்திரையிலேயே ஒருவரை ஒருவர் இச்சிக்குங் காந்த சக்தி பொருந்தியிருப்பதால், இந்நூல் இருபாலார்க்கும் இன்றியமையாததாகும். இந்த அபூர்வமான சக்தியை உள்ளபடி மதிக்கும் ஒருவன், தன்னாயகியை யென்றுந் தனக்குக் கீழ்ப்பட்டவளாக மதியான். தான் உடலும் அவள் உயிரும், அல்லது, அவன் உயிரும் தான் உடலுமாகக் கூடியிருந்து உயர்வு தாழ்வு கருதாது ஒத்துவாழ்வான்.

இந்நூல், நூற்றுக்கு ஒன்றுக்கும் பற்றாத போலி ஆசார நகரவாசிகளுக்கே வெளி வந்துள்ள ஏனைய நூற்களைப் போன்றதன்று. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதின்மரான சதாசாரமுள்ள நந்நாட்டு வாசிகள் அனைவர்க்கும் உபயோகமாக வெளி வருகிறது. ஆகையால், கணவன் மனைவியர் நன் மக்கட்பேறு பெற்று நலமடையும் விதத்தைக் காட்டும் இவ்வதிகாரத்தில், ஏழைகளும் இலேசாய் அநுசரிக்கக்கூடிய இதோபதேசங்களே வெளியாகின்றன.

கணவன் மனைவியர் படுக்கை அறையைப் பற்பல வீண் தட்டு முட்டுச் சமான்களால் நிரப்பி ஆகாயத்தை அசுத்தமாக்கிக்கொள்ளக் கூடாது. வெவ்வேறு படுக்கையில் நிலமட்டத்துக்கு மேல் சற்றே உயரப்படுப்பதே உசிதமாகும். இதைப் பற்றி முந்திய அதிகாரத்திலும் மொழிந்துள்ளோம். ஒருவரை யொருவர் இன்ன சாதியரென்று யூகித்துணர்ந்து கொள்ளவேண்டும். இங்கே சாதியென்றது பெண் சாதி ஆண் சாதியுமல்ல; உலகில் வழங்கும் மற்ற வீண் சாதியுமல்ல. பெண்கள் காம இச்சையைக் கருதி ஆண்களோடு கூடியிருக்கையில் அவரவர்களுடைய பிறப்புரிமையின் அநுபவத்தால் * மூன்று சாதியாய்ப் பிரிகிறார்கள் என்பது

* பெண்மான், பெட்டைக் குதிரை, பெண்யானை (பிடி)

பெரியோர் துணிபு. ஒவ்வொரு சாதிக்கும் பேருண்டு, அப்பேர்களைப் பற்றிப் பிரயோஜனமில்லை. ஆனாலும், முதற்சாதிப் பெண்ணுக்குச் சுருங்கிய கூந்தலும் நெருங்கிய தனங்களும், மருண்டபார்வையும், தெருண்ட நீர்மையும், மின்னலிடையும் கன்னல் மொழியும், இயற்கை நறுமணமும் பொருந்தியிருக்கும். இரண்டாஞ் சாதிப்பெண்ணுக்கு நீண்டகூந்தலும், தாமரைக் கண்களும், சிவந்தவுதடும், குழறிய வார்த்தைகளும், அன்ன நடையும், அரம்பைத் துடையும், ஆகாய இடையும், அழகான கட்கடையும் இருக்கும். முதற்சாதிப் பெண் குறைந்த உணவுண்பாள். நித்திரையைப் பொருட்படுத்தமாட்டாள். இரண்டாஞ் சாதிப்பெண் நித்திரையிலும் உணவிலும் மிகப் பிரியங் கொண்டிருப்பாள். மூன்றாஞ் சாதிப் பெண் நெற்றி, கன்னம், மூக்கு முதலியவைகள் பருத்திருப்பாள்; கால் கைகள் குறுகி, கூந்தல் சுருண்டிருப்பாள். தொங்கும் உதடும் கடுமையான வார்த்தைகளுங் கொண்டிருப்பாள். இப்படியே ஆண்களிலும் பிறப்புரிமையாய்க்காம இன்பத்திற் கமைந்துள்ள * மூன்று சாதிப்பிரிவினை யுண்டு. இவைகளைக் கணவன் மனைவியர் தத்தம் சேர்க்கை அனுபவக் குறியால் தெரிந்து கொள்ளலாம். அப்படித் தெரிந்து கொண்டு அததற்குத் தக்கபடி நடந்து கொண்டால் தான் சிற்றின்பம் வெற்றின்பமாகாமல் வெற்றியின்பமாகும்.

கணவன் மனைவியிருவரும் இவ்வதிகார முகப்பிற் கூறியபடி உடலின்பத்துக்காகவே படுக்கையறையிற் சந்திப்பதென்னும் பழங்காலத்துப் பாமர நம்பிக்கையை ஒழிக்கவேண்டும். இருவரும் மனமொத்த இனமொத்தவர்களானால், முதலில் உடலாலனுபவிக்கும் போலிச் சுகத்தையொரு பொருளாமதியார். படுக்கையறையில்

* ஆண்முயல், ஆண்மாடு(காளை), ஆண்குதிரை.



இருவரும் மனமொத்துப் பற்பல இதவசனங்கள் பேசவேண்டும். செவிட்டுப் பிள்ளையார்களைப் போலவும், குருட்டு ஊமையர்களைப் போலவும் ஒருவரை ஒருவர் தொட்டிழுப்பதையே பெருந்தொழிலாக் கொள்ளப்படாது. சில பெண்கள் முதனாளிற் பயந்து நடுங்குவார்கள்; சிலர் என்னவோ, ஏதோ என்று அலறுவார்கள். சிலர் வெளியே போய் விட எண்ணுவார்கள். எல்லாவற்றிற்கும் பெண்களுக்கியல்பாயுள்ள நாணமும் அச்சமுந்தாம் காரணம். ஆண்மகன் அறிவுள்ளவனானால் அதைக் கவனிக்கவேண்டும். மாதர்க் கிதம் என்றபடி இதங்கூறவேண்டும். இன்பூறும் கதைகளை அன்பூறமொழிய வேண்டும். கோபத்தைக் காட்டப்படாது. ஆண்மகனாகிய தன்னைப் போலவே பெண்மகளும் நாணமற்றிருப்பாளென் றெண்ணப்படாது. பெண்களின் இயற்கை யமைப்பே நாணத்துக் கிருப்பிடமானது. கலியாணமான ஒவ்வொருவனுக்கும் பொறுமை வளரவேண்டும். அதற்கு முந்திப் பொறுமை யற்றவனேனும், அதற்குப் பிந்தி யதைப் பழக்கத்திற் கொண்டுவர வேண்டும். தன்னோடு தனிமையில் வந்திருக்கும் பெண்ணுரு, தன்னுடைய உடற்சுகம் ஒன்றின் பொருட்டேயன்று, மற்றை வாக்குச் சுகம், மனச்சுக முதலியவைகளுக்கும் இருப்பிடமானதென்று தெளிய வேண்டும். இதற்காகவே நம்புராணக் கதைகளில் வள்ளியம்மைக்கு வடிவேலர் சலாம் செய்தாரென்று வந்திருக்கிறது. சிவபிரான் பார்வதியிடத்திற் பெரிய கிழவராய்ச் சென்று பேசினாரென்று சொல்லியிருக்கிறது. இப்படிப் புராண கதைகளையும் பிறகதைகளையும் படித்துணர்ந்த நந்நாட்டு மக்களுக்குப் பெண் மக்களிடத்திற் சலுகையாய் நடந்து கொள்ள வேண்டிய முறையைப்பற்றி அதிகமாய் வளர்த்தி யெழுத வேண்டியதில்லை.

முதல்நாளிற் சில பெண்கள் தைரியமாகவேயிருப்பார்
கள். இவர்களைத் தாம் மூன்றாஞ் சாதிப்பெண்களெனக்
கண்டு கொள்ளவேண்டும். இவர்களுக்கும் நாணம், மடம்
என்பவைகளில்லாதன போலத் தோன்றினும், அச்சம்
பயிர்ப்பென்பன இல்லாமல் இரா. ஆகையால் ஆண்மகன்
எச்சரிக்கையாகவே பெண்மகளோடு எப்போதுங் கூடி
உறவாடவேண்டும்.

'மெல்இல் நல்லாள்தோள் சேர்' என்ற அவ்வை
மொழியாகிய செவ்வை மொழியாலேயே மாதர்களுடைய
உடன் மென்மைத் தன்மை ஒன்று மட்டுமன்று, மனமென்
மைத் தன்மையு நன்கு விளங்கும். ஆகையால், இருவர்க்
கும் படுக்கை அறையில் மனவொற்றுமையே பிரதானமான
தாகும். இப்படி மனவொற்றுமையின்றிப் புணரும் புணர்ச்சி
மிருகப் புணர்ச்சியினுங் கேவலமானதாகும். படுக்கை
யறையில் ஆண்மகன் எந்நாளும் தன்னுடைய உடல் வலி
யைக் காட்டிப் பெண்பிள்ளையைப் பயமுறுத்திச் சேரக்
கூடாது. இதற்கு உதாரணமாக அம்பிகை வயிற்றிற் குருட்
டுப் பிள்ளையும் அம்பாலிகை வயிற்றில் பாண்டுப்பிள்ளையும்
பிறந்த கொடுமையைச்சாற்றலாம். பிறகு தாதி வயிற்றில்,
விதுரனென்னும் மதுரகுணமுள்ள மைந்தன் பிறந்த நன்
மையை ஒவ்வோர் ஆண்மகனும் கவனிக்கவேண்டும். அன்பு
பிறக்குமிடம் அருங்காதலியிடம். ஆகையால் அன்புக்கு
வித்திடும் ஆண்மகன், பின்பு அறக்கதிர் சிறக்கவேண்டு
மானால், அது முளைத்து வளருமிடமாகிய பெண்மகளிடத்
தில் எந்நாளும் இதமாகவும், மிதமாகவும், பதமாகவும் உடல்
உயிர் உள்ளங்களால் இன்பநுகரக்கற்றுக்கொள்ள வேண்
டும். நாயகி எப்போதும் தன்னை உயிர் என்று எண்ணிக்
கொள்ளும்படி கணவன் நடந்து கொள்ளவேண்டும்.
அப்போதவளுக்குக் கோபமும் பயமும் நீங்கி மகிழ்ச்சி



நிறைந்திருக்கும். இருவரும் பரிமளமிகுந்த நறுமலர் மாலை
சூடிக் கொண்டிருக்க வேண்டும். ஆனாலும் அக்காலத்தில்
ஆடைகளால் தங்களை மூடிக்கொண்டு சுகபங்கந் தேடிக்
கொள்ளக்கூடாது. சிலர் விளக்கிருப்பதுந் தப்பென்று,
தொப்பென்றதை அணைத்துவிடுகிறார்கள். இருட்டிற் சேர்வ
தும் தவறு என்பது ஆயுர் வேத முணர்ந்தார் கொள்கை.
இருட்டிற் சேர்வதாற் குருட்டுப்பிள்ளையும் திருட்டுப்
பிள்ளையும் கரிப்பிள்ளையும் உண்டாகுமென்பது உரவோர்
கொள்கை. ஒருவர் முகம் ஒருவர்க்கு நன்றாய்த் தெரிய
வேண்டு மாகையால் சிறு வெளிச்சமும் குறு வெளிச்சமு
மானாலும் இருக்கவேண்டும். தங்களிருவருருவும் திரண்டு
ருண்டு குழந்தையாய்ப் பிறக்கவேண்டுமானால் வெளிச்சத்
தில் ஆடையின்றிக் கூடவேண்டு மென்றார் ஆன்றோர்.

ஆலிங்கனம், முத்தம், மோப்ப முதலியவைகளால் நாய
கிக்கு இன்பமூட்டிக் களிப்பவனே நாகரிக புருஷனாவான்.
நாயகியின் இலக்கணங்களை நன்கு தெரிந்தவனே நாகரிக
புருஷனாவான். தன் நாயகி பதுமினிப் பெண்ணாயிருந்தால்,
அவளுடைய கண்கள், தாமரையைப் பழிக்கும்; நாசித்
துவாரங்கள் சிறுத்து அழகாயிருக்கும்; சொற்கள் மென்மை
யாய் அமுதத்தை நிகர்க்கும்; கூந்தல் நீண்டு கழுகை
ஒய்க்கும்; உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் எல்லா
அங்கங்களும் அழகாய் இன்பநிலையமாய் விளங்கும்; மார்பு
தளராமல் உறுதியாயிருக்கும். உள்ளம் அறநெறியிற்
பிறழாமல் நிர்மலமாய்ப் பிறர்க்குதவிபுரிவதிலேயே நிலைத்
திருக்கும். மேனி யெங்கும் செவ்வல்லிமணம் வீசிச்சிறந்
திருக்கு மென்று தெரிந்து கொள்ளவேண்டும். சித்தினிப்
பெண்ணானால், மார்பு நெருங்கி உறுதியாயிருக்கும். உடல்
உயரம் சமமாய், மூக்கு எள்மலர் போலவும், கண்கள்
தாமரை போலவும் அழகாயிருக்கும். புத்தி கூர்மையாய்

ஆண்மகனை மகிழ்விக்கும் ஆற்ற லுள்ளதா யிருக்கும். கணவனைத் தவிர மற்ற ஆடவனை நாடா உறுதியும், இன்சொல்லும், உண்மையும், இரக்கமும், அன்பும், பொறுமையும், தெய்வபக்தியும் செறிந்திருக்கும். அறநெறியிலேயே மனஞ்செல்வதால், காதல், உண்மைக் காதலாயிருக்குமன்றிக் கேவலமான காமத்தைக் கருதியதாகவே யிராதென்று தெரிந்து கொள்ளவேண்டும். சங்கினிப் பெண்ணானால், மார்பு உறுதியாய்க் குறுகியிருக்கும்; கண்கள் கமலமலர்தாம்; உடல் உயரம் நீண்டிருக்கும்; சொற்கள் கற்கண்டு; கழுத்து மூன்று வரியடர்ந்திருக்கும்; சாந்தமும் கற்பும் சமமாய் மேனியில் உவர் நாற்றஞ் செறிந்திருக்கும். கேவலமான காமக்காதலே மிகுந்திருக்கும். கணவற்கும் பிறர்க்கும் அஞ்சா நெஞ்சு விஞ்சியிருக்கும்; கணவன் தவிர மற்றவனுடைய கூட்டுறவிலேயே நினைவு நிலைத்திருக்கும்; மூக்கு எடுப்பாய் உணவு அளவுக்கு மிஞ்சியிருக்குமென்று தெரிந்து கொள்ளவேண்டும். அத்தினிப் பெண்ணானால், உள்ளங் காமத்திலேயே மூழ்கியிருக்கும்; உடல் கொழுத்திருக்கும்; கண்கள் சிவந்து நெருப்புப் போலிருக்கும்; கூந்தல் கொஞ்சமாய்க் குறுகியிருக்கும்; மார்பு கடினமாய், அளவுக்கு மிஞ்சிப்பருத்திருக்கும்; நாசித்தொளை அகன்று மேனி கண்ணாற்றம் வீசும்; வாழ்நாளெல்லாம் காமத்திலேயே கண்ணாயிருக்கும். உதடுபருத்திருக்கும்; மனம் தீமையிற்செறிந்து, கணவனையன்றிப் பாபுருஷ சகவாசத்திலேயே நிலைத்திருக்குமென்று தெரிந்து கொள்ளவேண்டும்.

‘மானே முதலா மூவகையாய்
மருவு மாதரிலக் கணமும்
காணார் முயலே முதலாகக்
கணவர் மூவர் இலக்கணமும்’

என்றபடி பெண்மான், பெட்டைக் குதிரை, பெண்யானையென்னும் மூவகைப் பெண்களிலக்கணமும் ஆண்முயல்,



காளைமாடு, ஆண் குதிரை முதலிய மூவகை ஆண்களிலக்கணமும் நன்றாய் அறிந்துகொள்ள வல்லவனே ஆடவரிற் சிறந்தவனும்.

‘மானொடு குறுமுயன் மருவல் பெட்டையாம்
ஊனமில் பரியுடன் இடபம் ஒன்றுதல்
கான்வரு பிடியொடு பரிக லந்திடல்
ஆனதோர் சமரதமாகு மூன்றுமே’

மான் சாதிப்பெண்ணோடு முயற்சாதி ஆண் கூடுவதே முறைமையாகும். பெட்டைக் குதிரைச் சாதிப்பெண்ணோடு காளைச் சாதி ஆண் கூடுவதே அழகாகும். பெண்யானைச் சாதிப் பெண்ணோடு ஆண் குதிரைச் சாதி ஆண் கூடுவதே அடுத்ததா மென்றறிபவனே ஆண்மகனில் அறிவுடையவனும். பேதைப்பெண்ணுக்கு உச்சியில் அமுத நிலையென்றும், பெதும்பைப் பெண்ணுக்கு நெற்றியில் அமுத நிலையென்றும், மங்கைக்கு உதட்டில் அமுத நிலையென்றும், மடந்தைக்குக் கழுத்தில் அமுத நிலையென்றும், அரிவைக்குக் கன்னத்திலென்றும், தெரிவைக்கு நிதம்பத்திலென்றும், பேரிளம் பெண்ணுக்கு அல்குலிலென்றும் அறிந்து கொள்பவனே அறிவுடையவனாவான். மிதமிஞ்சிப் புசித்தவள், மிகவும் பசித்தவள், அதிகமாய் நடந்தவள், மனஞ்சலித்தவள், நோய் கொண்டவள், வெடிப்பாய்ப் பேசுபவள் முதலியோருடைய புணர்ச்சியை விரும்பாதவனே விமலனாவான். உதடு, மார்பு, கண், நெற்றி, நாசி, புறங்கை, தொடை, கடிதடம் முதலிய இடங்களில் புறத்தொழில் செய்பவனே புருஷரில் நாகரிகனாவான். நாகதத்துவப் பெண், பூததத்துவப் பெண், பசாசதத்துவப் பெண்ணென்று பெண்களின் மூன்று தத்துவங்களையும் உணர்ந்து புணர்ந்து வாழ்பவனே உத்தமனாவான். இதழ்பருகல், தழுவல் முதலியவைகளாலேயே நாயகியைக் கனிவித்து,

இன்பமூட்டுபவனே இங்கித முணர்ந்தவனாவான். பெருவிரல், புறந்தாள், பாடு, முழந்தாள், அல்குல், நாபி, மார்பு, முலை, கைம்மூலம், கழுத்து, கபோலம், வாய், கண், நெற்றி, உச்சி என்னும் பதினைந்திடங்களை பெண்களுக்கு அமுதநிற்கு மிடங்களென்றறிபவனே அறிவுடையவனாவான். வளர்பிறைப் பிரதமைமுதல், பருவம் வரையில் இடது காற்பெருவிரல் முதல் உச்சிமட்டும் ஒவ்வோரிடமாக ஒவ்வொரு பெண்ணுக்கும் அமுதம் ஏறிக்கொண்டே போகும்; தேய்பிறைப் பிரதமைமுதல், அமாவாசை வரையில் வலது உச்சியிலிருந்து வலது காற்பெருவிரல் மட்டும் ஒவ்வோரிடமாக இறங்கிக்கொண்டே வருமென்றுணர்ந்து புணர்ந்து வாழ்பவனே உத்தமனாம். அமுத நிலைக்கு ஏழாமிடத்தில் எப்போதும் நஞ்சு நிலைத்திருக்கு மாகையால், அவ்விடத்தில் ஒரு தொழிலும் செய்யக்கூடாது. செய்தால், வெறுப்பாயிருக்குமென்றுணர்பவனே ஆடவரிற் சிறந்தவனாவான். உச்சி முதலிய இடத்திற்குத் தக்கதொழில் சமயோசிதமாய்ச்செய்து, எகார, ஐகார, அகார, இகார, உகாரமந்திரங்களாகிய ஐந்தெழுத்துக்களையும் ஐங்கணைகளாகப் பாவித்துச் செபிப்பவனே உத்தம புருஷனாவான்.

> ‘நெஞ்சி லரவிந்தம் நீள்சூதங் கொங்கைதனில்
> துஞ்சும் விழியில் சோகமலர்—வஞ்சியர்தஞ்
> சென்னியிலே முல்லை திகழ்நீல மல்குலிலே
> அன்னவே ளெய்யுமியல் பாம்’

என்றபடி பெண்களின் நெஞ்சிலே தாமரை மலரையும், மார்பிலே மாமலரையும், கண்களிலே அசோகமலரையும், உச்சியிலே முல்லைமலரையும், அல்குலிலே நீலமலரையும் மன்மதன் எய்வானென்று உணர்பவனே உன்னத புருஷனாவான்.



> ‘நினைக்கு மரவிந்தம் நீள்பசலை மாம்பூ
> அனைத்திட ருண்டாக்கு மசோகு—வனத்திலுறு
> முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலம்
> கொல்லுமத னம்பின் குணம்’

என்றபடி மன்மதனுடைய ஐந்து கணைகளிலொன்றாகிய தாமரையை அவன் எய்ய எய்ய, பெண்களுக்குத் தமது காதலர்மீது நினைவெழுந்தபடியே யிருக்கும்; மாமலரை எய்யுந்தோறும் அவர்களுக்கு மார்பிடத்திற் பொன்னிறமான தேமல் படரும்; அசோகமலரை எய்யுந்தோறும் எல்லா விதத்துன்பமும் உண்டாகும்; முல்லை மலரை எய்தால், அவர்களுக்கு ஒருவித மயக்கமுண்டாய்ப் படுக்கையிற் கிடத்திவிடும்; நீலோற் பல மலரை எய்தால் பேச்சு மூச்சற்றுப் பிணம்போலாக்கிவிடு மென்றெண்ணி, பெண்களை அனுவசியமாய்ப் பிரியாதிருந்து வாழ்பவனே பெரிய குடும்பியாவான்.

பெண்களைக் கண்களைப்போலப் பாவிப்பவனே பாரமார்த்திகம் உணர்ந்தவனாவான். முதலதிகாரத்திற் குறித்தபடி அவர்களைச் சத்திசொரூபங்களாக எண்ணிவாழ்பவனே இங்கித முணர்ந்தவனாவான். எந்நாளிலும் எப்பருவத்திலும் எவ்விடத்திலும் பெண்மகளை ஆண்மகன் காக்கவும் போற்றவுங் கடமைப்பட்டிருக்கிறான். ஆகையால், பள்ளியறையில் அவளை அவன் ஒரு சிற்றின்பக் கருவியாய் எண்ணி மிருகபட்சிகளைப்போல நடத்தி அடிமைப்படுத்தி வாழக்கூடாது. சமபோகமே சம்போகமாகையால், சமத்துவ மிருக்கவேண்டும். தன்னுடைய சுகானுபவத்திலேயே நோக்கமாய் அவளைப் பற்றிக் கவனியாமல் ஒருவன், காலம் போக்குவது மூடத்தனமாகும். முன்னைய அதிகாரத்திற் குறித்தபடி பெண்ணாரவாரம் பெரிதாகையால், அவளுடைய சுகானுபவம் எப்போதும் காலதாமதமாகவே நிற்குமென்று

ணர்ந்து, தன்னுடைய சுகானுபவத்தைத் தாமதப்படுத்தக் கற்றுக்கொள்பவனே கற்றவரிற் கற்றவனாவான். முன்னைய அதிகாரத்திற் கூறியபடி யன்றிப் பெண்கள் மாதருதுவாவதற்கு முந்தின நான்கு நாட்களும், பிந்தின பன்னிரண்டு நாட்களில் நான்கு நாட்கள் போக எட்டு நாட்களும் ஆகிய பன்னிரண்டு நாட்களே கருத்தரிக்கும் புணர்ச்சிக்குரிய நாட்களாம். அப்போதுதான் அவர்களுக்குப் புணர்ச்சியிற் பெருவிருப்பிருக்கும். மற்றை நாட்களில் அவர்களை வலுவிற் புணர்பவன் மூடரில் முதன்மையாவானென்பதற்கு யாரைக் கேட்கவேண்டும்? பெண்கள் மாதருதுவான முதல் நாளிற் கூடின், புருஷனுக்கு எல்லாவித நோய்களும் உண்டாகும். இரண்டாநாளிற் கூடினால், இரண்டு கண்ணுமில்லாத குருட்டுப்பிள்ளையும் திருட்டுப்பிள்ளையும் பிறப்பதோடு புருஷனுக்கே விழிப்பழுதுண்டாகும். மூன்றுநாளிற்கூடினால், கருவுரு வழியும். நாலாநாளும் புணர்ச்சிக்கு உகந்தநாளன்று. அன்றுதரிக்கும் கரு அற்பாயுளாயிருக்கும். ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டா நாட்களே பரமயோக்கியமான நாட்களாம். பதின்மூன்று, பதினான்கா நாட்களிற் பெண்கள்பிறந்தால், குலத்துக்கீனமாகும். அமாவாசை பருவகாலங்களில் புணர்ச்சியை விரும்பிச் செய்யின் தாது மெலிவடையும். ஐந்தாநாள் முதல் வரிசையாய்க் கொண்ட எட்டு நாட்களே புணர்ச்சிக்குரிய நாட்களாம். அவைகளிலும் ஒற்றைப்பட்ட நாட்களிற் கருத் தரித்தால் பெண்ணாகவும், இரட்டைப்பட்ட நாட்களில் கருத்தரித்தால் ஆணாகவும் பிறக்கும். மற்றைப் பதினான்கு நாட்களிற் கருத்தரிக்காது. தரித்தாலும் சேமமாய்ப் பிறவாது. பிறந்தாலும் பிழைக்காது. இவ்விதி விலக்குகளை அறிந்து, பெண்மகளைப் பெரிது மகிழ்விப்பவனே பிறர் நலங் கருதி



உழைக்கும் பெருந்தகை யாவான். 'பிறர்க்கென வாழ்; உனக்கெனவாழற்க' என்னும் உத்தம நீதிக்கு உகந்தவனாவான். படுக்கை யறையிலும் ஓர் ஆண்மகன், தனக்கென வாழாமல், தன்மனைவிக்குச் சுகமூட்ட வாழ்பவனாகவே தன் பழக்க வழக்கங்களைப் பண்படுத்திக் கொண்டால் தான் சிற்றின்ப வெற்றியிற் சிறந்தவனாவான். அப்பேர்ப்பட்டவன், இல்லறத்தானாயினும், பிரமசரிய நிலையில் நிற்பவனாயினும், வானப்பிரத்தனாயினும், சந்நியாசியாயினும் எல்லாம் ஒன்றுதான். அவனைக் குடும்பத்தொல்லை ஒன்றும் பற்றாது. நிரபராதியாய் நிலைத்திருப்பான். புத்திரப்பேறெய்தினும் புத்தி விசாலமாய்ச் சித்தசுத்தி யெய்தியிருக்கும்.

படுக்கையறை இடம்பாகாரமாய்ப் பற்பல போலி நிர்வாணப் படங்கள் நிறைந்திருக்க வேண்டுமென்பதில்லை. வியாசர் எங்கே பிறந்தார்? திருவள்ளுவர் எங்கே ஜெனித்தார்? பாராசர்க்குப் படகே படுக்கை வீடாயிருந்தது. அன்றி, ஆற்றிடையில் அங்கொரு சிறுதிட்டே படுக்கை வீடாயிருந்த தென்பாரும் உளர். பகவற்குப் படுக்கைவீடு இலுப்பைத் தோப்பு. பிறந்த பிள்ளைகள் ஞானசாகரங்களாய் விளங்கின. ஆகையால், படுக்கையறையின் அலங்காரத்தில் ஒன்றுமில்லை. கணவன் மனைவியருடைய நின்மல நெஞ்சமே நன்மக்கட் பேற்றுக்கு அடிப்படையாகும். அநேகமாய் நாட்டுப் புறத்திற் புல் வீடே சரியான படுக்கை வீடாம். அங்கு வீசும் பரிசுத்தமான காற்றோட்டமாய்ப் பொருந்தி யிருப்பதே சரியான படுக்கை வீடாம். அன்றி, நகரவாசத்தில் மாடியி லமைந்துள்ள போலியலங்காரக் காற்றோட்டமற்ற சிற்றறையே படுக்கை வீட்டுக்குகந்ததென்று வீணெண்ணங்கொண்டு இயற்கைச் சுகாதாரபங்கந்தேடிக் கொள்வது மூடத்தனத்துக்கு முதற்படியாகும்.

புணர்ச்சிக் காலத்தில் நாயகிக்குத் தலைவலி காண்ப துண்டானால், மலட்டுச் சின்னமாகும்; கருக்குழியிற் பாசி பற்றியிருப்பதற்கு அடையாளமாகும். அதற்குக் கோழி யின் *பிச்சும் பருத்திப் பருப்பும் சம எடையாக எடுத்துத் தண்ணீர் விடுத்தரைத்துச் சந்தனச் சாந்துபோல் வழித் தெடுத்து, மாதவிடாயான நான்கா நாள் முதல் மூன்று நாட்களிலுங் கடிதடத்தினுள்ளும் புறம்பும் தடவி, ஆண் மகனும் அப்படியே தடவிக்கொண்டு புணர்ந்தால் கருத் தரிக்கும். இப்படி ஒரு தடவையிற் பலியாவிட்டால், அடுத்தடுத்து மும்முறை செய்தால் அவசியம் பலிக்கும். புணர்ச்சிக் காலத்தில் நாயகிக்கு இன்பவுணர்ச்சியின்றி உடல் முழுதும் உளைக்குமானால், இதுவும் மலட்டுக்கு அறிகுறி யென்றறிந்து கொள்ளவேண்டும்; கருக்குழியில் வாயு பற்றி யிருக்கிற தென்று கண்டு கொள்ளவேண்டும். இதற்குக் காற்பலம் காயத்தை ஒருபலம் நல்லெண்ணெயிற் கரைத்துக் கலந்து, சாணளவு மெல்லிய வெள்ளாடையில் துவட்டித் திரியாக்கி, மூன்று துண்டாகத் துணித்து முன்போலவே நான்கா நாள் முதல் மூன்று நாளும் ஒவ்வொரு துண்டாக நிதம்பத்தில் புகுத்தி, ஆண்மகனும் அவ்வெண்ணெய்ப் பசை யைத் தடவிக்கொண்டு புணர்ந்தால் கருத்தரிக்கும். புணர்ச் சிக்காலத்தில் நாயகிக்குத் தொண்டைவலி யுண்டானால், கருக் குழியில் தசைப்பற்றிருக்குமென்றுணர்ந்துகொள்க. அதற்கு அரைக்காற் பலம் திப்பிலி, அதே எடையுள்ள கற்பூரம், கோழிப்பிச்சு ஆகிய மூன்றையும் அரைத்துச் சாந்துபோ லெடுத்து மேற்கூறியபடி மூன்று நாட்களிலும் நாயகனும் நாயகியும் உள்ளும் புறம்புந் தடவிக்கொண்டு புணர்ந்தால் கருத்தரிக்கும். புணர்ச்சிக் காலத்தில் நாயகிக்கு முதுகு

* ஈரற் பித்து



நோய் கண்டால் கருக்குழியில் கிருமி நிறைந்திருக்கிற தென்பதற்கு அடையாளமாம். அதற்கு அரிதாரம், இந்துப்பு, காயமென்னும் மூன்றிலும் வகைக்கு அரைக் காற் பலம் எடுத்து, வெந்நீர் விடுத்தரைத்துச் சாந்து போலெடுத்து, மேற்கூறியபடி இருவரும் உள்ளும் புறம்பும் பூசிப்புணர்ந்தால் மலமொழிந்து கருத்தரிக்கும். புணர்ச் சியில் கண்டைச் சதைஉளைப்பதும் உண்டு. அது கருக் குழியில் சூடேறியிருப்பதற்கு அடையாளமாம். அதற்குக் கடுக்காய்த்தோல் காற்பலம், சர்க்கரை அ[illegible]லம், புழுகு இரண்டு குன்றிமணி எடை எடுத்து மூன்றையும் வெந்நீர் விடுத்தரைத்து மூன்றுருண்டையாக்கி நாயகிக்கு மட்டும் நாளுக்கு ஓர் உருண்டையாக மூன்று நாளைக்குங் கொடுத்துக் கொண்டு வரவேண்டும். குங்குமப்பூ, அதிமதுரம், சீரகம் ஆகிய மூன்றையும் வகைக்கு அரைக்காற்பலமெடுத்து, பனி நீர் விடுத்தரைத்து முற்கூறியபடி இருவரும் உள்ளும் புறம் பும் பூசிக்கொண்டு புணரவேண்டும். இங்ஙனம் மூன்று நாளும் செய்தால் மலடு நீங்கிக் கருத்தரிக்குமென்று கண்டுகொள்க. புணர்ச்சியில் நாயகிக்கு ஏப்பம் வந்தால், கருக்குழியில் ஈரம்பற்றி யிருக்கிறதென்று கண்டு கொள்ளவேண்டும். அதற்கு, சவர்க்காரம், கடுக்காய்த்தோல், நவச்சாரம், ஆகிய மூன்றையும் சம எடையாக வகைக்கு அரைக்காற் பலம் எடுத்து அரைத்துச் சீலையிலூட்டி மேற்கூறியபடி இருவரும் பூசிப் புணர்ந்தால், கருத்தரிக்குமென்றுணர்க.

இந்தப் பரிகாரங்கள் தலைவன் தலைவிய ரிருவர்க்கு மாகையால், இருவரும் இவைகளை அநுசரிக்கையில், கைப்பு, புளிப்பு, துவர்ப்பான கறிபதார்த்தங்களையும் குளிர் நீரை யும் விலக்கிப் பத்தியமா யிருக்கவேண்டும்.

இதை விட்டு, நந்நாட்டாரிற் பெரும்பாலாரும் அஞ் ஞானப் பித்தேறினவர்க ளாகையால், மேற்குறித்த

சாதாரண மலட்டு நோய்க்கும் மந்திர தந்திர யந்திரஞ் செய்து மோசம் போகிறார்கள். கிரகதோஷ மென்கிறார்கள். தெய்வக்குற்றம் என்கிறார்கள். கிரகதோஷ மென்றால் மலடேற் படுவதற்குக் காரணம் விளங்கவில்லை. எல்லாம் நவக்கிரக தோஷமென்றால், மணிமந்திர மருந்தென்னும் மூன்று மகாங்களா லென்னபயன்? பூசாரிக ளாட்டும் மணியாலும், மாந்திரீகன் காட்டும் மந்திரத்தாலுமே ஒன்றும் பிரயோஜன மில்லை யென்றால். நவக்கிரகதோஷ மென்று பரிகாரஞ் செய்வதிற் பலனென்ன? திண்ணைக்குத் தேள் கொட்டினால், மிடாவுக்கு நெரிகட்டுமா? தேக சம்பந்தமான மலட்டுக்கும், மாக சம்பந்தமான கிரகத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? இப்போது யாமுள்ள வீதியிற் குடியிருக்கும் நாற்பது வயதுள்ள பேரிளம் பெண்ணாகிய ஒருத்திக்குக் காலில் மேகப்புண் தோன்றிப் படர்ந்து கொண்டே போயிற்று. வைத்தியர்களிடத்தில் மருந்துண்ணும்படி அவளுக்கு யாம் எத்தனை சொல்லியுங் கேளாமல், அவள் மந்திரத்தையே நாடிச் சென்றாள். அவள், தன்வீட்டுக் கூடத்தில் ஒரு பெரிய அகலில் பருந்திரி யிட்டு விளக்கேற்றி வைத்துக் குடிகாரர்களாகிய பூசாரிகளுக்கெதிரிற் குந்தி யிருந்து பேயாடிக் குறிசொல்லும் பெரு மூடி. ஆகையால், அவளுக்கு உடம்பாலுற்ற நோய்க்கும் அவள் மந்திரத்தையே நாடிச் சென்றாள். கோடம்பாக்கத்துக்குச் சென்னை யிலிருந்து புகைவண்டியில் வெகு சுளுவிற் செல்லலாமாயினும் அவள் அங்ஙனஞ் சென்றால் மந்திரம் பலியாதென்று கானடையாகவே சென்றாள். அங்கொரு மந்திரவாதி மண் மந்திரித்துக் கட்டினான். ஒரு முறை கட்டினமையால் புண் அதிகமாயிற் றென்று மும்முறை சென்று கட்டிக் கொண்டாள். ஒன்றும் பிரயோசனமில்லை. எம்மைப்



பார்க்கக் கூசினாள். மறுபடியும் யாமே வலுவிற் சென்று அவளுக்கு நற்புத்தி புகட்டினோம். வைத்தியரிடத்திற் சென்றால் * புண்ணாறும் இல்லையேல் புண்ணாறுமென்றோம். அதற்கு மவள் ஒரே பிடிவாதமாய்ச் செவிடன் காதில் ஊதின சங்கு போல ஒன்றும் பேசாமலிருந்து, தெய்வக் குற்றமென்று திருப்போரூர்க்குப் போனாள். அங்கும் அவளுக்குக் குணமாக வில்லை. கிருத்திகை தோறும் அங்கு மும்முறை சென்றாள். சென்றும் பயனின்றிப் பிறகு எய்மிடத்தில் வந்து முறையிட்டுக் கொண்டாள். பட்டறி கெட்டறி என்றபடி அஞ்ஞானப்பேய்க்கோட் பட்டாடியலைந்து வந்த அவளைத் தேற்றினோம். எங்கள் குடும்ப எண்ணெயாகிய * மேகரோக நிவாரண எண்ணெயை, எண்ணி ஏழே நாள் கொடுத்தோம். உப்புத் தவிர மற்றெல்லாம் இச்சா பத்தியமாகவே உட்கொள்ளச் சொன்னோம். புண்ணாறுவது போய் ஆறுவதாயிற்று. பதினைந்து நாட்களுக்குள் முற்றுங் குணமடைந்தாள்.

ஆகையால் மலட்டு நோயும் உடல் நோயே யன்றி மற்றெதுவும் அன்றென்றும் மகான்கள் யூகித் துணர்ந்து தெரிவித்திருக்கிறார்கள். முற்கூறிய மருந்துகளிற் பல முறையையும் ஒரேமுறையாகக் கூட்டி, உள்ளுக்கும் மேற்பூச்சுக்குமாக, * மலட்டு மாத்திரைகளென்றும், † மலட்டுப் பற்றென்றும் இருவிதமாக ஏழைகளும் எளிதிற் கொள்ளுமாறு

---

* புண் + ஆறும் = புண் ஆறிவிடும்
புண் + நாறும் = புண் நாற்ற மெடுக்கும்

* இவ்வெண்ணெய் விளம்பரத்தை இப்புத்தக முகப்பிற் காண்க.

* இவ்வட்டவணையிற் காண்க.

† ,, ,,

எவ்வெட்டளவுக்கு எம்மிடத்திற் சித்தமாய் வைத்திருக்கின்றோம்.

புணர்ச்சியில் நாயகிக்கு இயற்கையாயுள்ள நாணம் அற்று, அதிக இச்சை உண்டானால், கருத்தரிப்பதற் கடையாளமாம். விந்து முழுதும் வெளிப்பட்டு விடாமல் உள்ளிடத்திலேயே தங்கிவிடுமானாலும் கருத்தரிப்பதற்கு அடையாள மென்று பெரியோர் பேசுவார்கள். புணர்ச்சி முடிவில், நாயகிக்கு ஒருவித உணர்ச்சி ஏற்பட்டு, உடல் அருகளிக்குமாயின், கருத்தரிக்கு மடையாள மென்று தெரிந்தோர் செப்புவார்கள். வெறுத் தொதுக்கத் தக்க பொருள்களிற் பிரியமும், பசியின்மையும், மயக்கமும், தியக்கமும் உண்டானாலும் கருத்தரித்தலுக்கு அடையாளமாம். அடிவயிறு கருப்பையை ஒட்டிச் சாருமாயின் விந்து வெளிப்படாமல் தங்கிற்றென்றும் கருத்தரிப்பது நிச்சயமென்றும் நினைத்துக்கொள்ள வேண்டும். மார்பு நரம்புகள், வெளிப்படையாகத் தோன்றினாலும் கருத் தரித்திருப்பதற்கு அடையாளமாகும். கொங்கைகள், முகங்கறுத்து விம்மி வன்மையாயிருக்கு மாயின் கருத்தரித்ததற்கு அடையாளமாம். நாபியைச் சுற்றிச் சுருக்கு நோயும் வயிற்றுப் புரட்டலும் உண்டானாலும் கருத்தரித் திருப்பதற்கு அடையாளமாம். கண்ணரம்புகள் ஒளி மிகுந்தும் நிறம் மாறியுந் தோன்றினாலும் கருத் தரித்திருப்பதற்குக் கரியாகும். நாயகியின் சிறுநீரை, நான்கு தினங்கள் வரையில் ஒருபாத்திரத்தில் வைத்திருந்து, பிறகதை வடித்துப்பார்த்தால் நுண்ணிய கிருமிகள் தோன்றினாலும் கருத்தரித் திருக்கிறதென்று கண்டு கொள்ளலாம். நாயகியின் சிறு நீரிற் பூனைக்காஞ்சொறியிலையை ஓரிரவெல்லாம் ஊறவைத்து, விடிய எடுத்துப் பார்த்தால், அதிற் செம்புள்ளி தோன்றினால்



கருத்தரித்திருக்கிற தென்றும், கரும்புள்ளி தோன்றினால் கருத்தரிக்க வில்லையென்றும் கண்டு கொள்ள வேண்டும்.

கருத்தரித்த நாயகி உட்காரும் போதும் எழுந்திருக்கும் போதும் இடதுகையை விட, வலது கையையே அடிக்கடி ஊன்றினால், வயிற்றிலிருப்பது ஆண் குழந்தையென்று அறிந்து கொள்ள வேண்டும். வயிறு அதிக உயர்ந்து வட்டமாயிருந்தால், வயிற்றிலிருப்பது ஆண்சிசு வென்று திட்டமாய்த் தெரிந்து கொள்ளலாம். கருப்பையின் வலப்பக்கத்தில் பிண்டம் இருப்பதாகத் தோன்றினாலும் ஆண்மகவென்று அறிந்து கொள்ள வேண்டும். ஆண் சிசுவானால் நாயகிக்கு அதிக வருத்த மிராது. கருப்பம் சுளுவாகத் தோன்றும். இடது கொங்கையைப் பார்க்கிலும் வலது கொங்கை மிகவும் முகங்கறுத்து விம்மிக் கடினமாயிருக்கும். சரீரம் அதிக நிறமாறிக் கருமையாகாமல் பசுமையாயிருக்கும். கண்வட்டங்களில் உதிரம் அற்றுக் கறுத்திருந்தாலும், வலது வட்டம் பேதமாகவும் பிரகாசமாகவுந் தோன்றும். ஒரு பாத்திரத்திலுள்ள தெளிந்த நீரில் நாயகியின் முலைப் பாற்றுளியை விட்டால், அது பாசி மிதக்குமாயின் ஆண் சிசு வென்றும், உள்ளழுந்துமாயின் பெண்சிசு வென்றுங் கண்டு கொள்ளலாம். இப்படியே மேற்குறித்த குறிகளுக் கெதிரிடை யாயுள்ளவைகளை யெல்லாம் பெண் சிசுவுக் கடையாளங்களென்று அறிந்து கொள்க.

நாயகியின் வயிற்றில் சிசு மரித்திருந்தால், உடனே மார்பு தளர்ந்து துவண்டு போகும். நாபியைச் சுற்றிக் குளிர்ந்திருந்தாலும், சிறுநீர் தடித்து, அல்குல் குழம்பித் துர் நாற்றம் வந்தாலும் சிசு மரித்திருப்பதற்கு அடையாளங்களாகும். கருவில் சிசுவின் அசைவு தோன்றாமல் இருந்தாலும் சிசுமரித்த தென்று செப்பவேண்டும். வெந்நீரில் கையை நனைத்து, யாராவது கருவுற்றிருப்ப

வளின் வயிற்றின் மேல் வைத்தால், சிசு உயிருடனிருக்குமாயின், அக்கையை அங்கு வைக்க வெட்டாமல் அகற்றும். மரித்திருந்தால், சும்மாவிருக்கும். கருவுற்றிருப்பவளுக்கு மயக்கங் கப்பிக் கொண்டு, இறந்தவர்களைக் கனவிற் கண்டு பயந்தால் சிசு மரித்த தென்று தெரிந்து கொள்ளலாம். நாயகி அதுவரையிற் புசிக்கத்தகாத பொருள்களைப் புசிக்க விரும்பினாலும் சிசு மரித்த தென்று தெரிந்து கொள்ளலாம். நாயகியின் வாய்வழியாய் வரும் சுவாசம் துர் வாசனையாய் நாறும். நாயகி படுக்கையிற் புரண்டாலும் சாய்ந்தாலும் பிண்டம் பளுவாய் ஈயக் குண்டு போல வுருளும். இவைகளையெல்லாம், கன்னிமாட வாசத்திற் கற்றுணர்ந்த நாயகி, தானே குறிப்பிற் கண்டு கொள்வாள். அல்லது மருத்துவச்சி மதியுடையவளானால் நன்றாய்த் தெரிந்து கொள்வாள். இதற்குச் சிலர் ஒயிட் ஒயின் சாராயத்தை வேலம் பட்டையிற் கலந்து மருந்தாய்க் கொடுத்துப் பரிகாரஞ் செய்வார்கள். எந்நாளும் சாராய மென்பதே கூடாத மருந்தாம். சாராயத்தை நம்மவர்கள் மருந்தென்பதில்லை; விஷமென்று விளம்புவார்கள். ஆகையால், அதை யார்தரினும் விலக்கி விடுவதே விவேகமாகும். சாராயத்துக்கு வதிலாக ஆறு மாதத்திய புளிங்காடியைக் கொடுக்கலாம். அதுவும் அதி சாக்கிரதையாய்ச் சேர்த்து வைத்த வீட்டுக் காடியே விசேஷமாமன்றி, இயந்திரத்திற் செய்த பிற நாட்டுக்காடி கூடாதாம்.

குறத்தி, வில்லிச்சி, குருவிக்காரி முதலிய உழைப்பாளிகளாகிய பெண்களே வெகு சுளுவிற் கருக் கொண்டு, சிசுவுக்கு வின்ன மின்றிக் கருவுயிர்த்துச் சேமமாயிருக்கிறார்கள். பணக்காரர் வீட்டுப் பெண்கள், கருக்கொள்வதும், பிள்ளை பெறுவதும், பிள்ளை தக்குவதும் அருமையாய் நோயுற்று வாடுகிறார்கள். காரணம் என்ன ? இவர்களுக்கு உடலசை



வின்றிச் சுகங்கெடுகிறது. உணவுக்குங் குறை வின்றிக் கொழுப்பேறி யிருக்கிறார்கள். அதனால் கருப்பை நெருக்குண்டு, கருவைவளர்க்கும் வலுவின்றித் தளர்ந்திருக்கிறது. அவர்களுடைய கருப்பைகள் சரியாய் வலுவடைந்து கருவைப் போஷித்து வளர்க்கிறது. அவர்களுக்கு உணவாதிகள் மிதமாய் வயிறு காய்வதால், கருப்பைக் கருகிலுள்ள இரைப்பையால் அதற்கொரு தொந்தரவும் நேரிடுகிறதில்லை. எந்நாளும் அவர்களுடைய கருப்பை, யாதொரு தடையுமின்றித் தாராளமாய் வளரவும் தளரவும் இடங்கொடுக்கிறது. பணக்காரன் வீட்டில் எஜமானி தன் பிள்ளைப் பேற்றுக்குத் துரைசானியை வரவழைத்து மருத்துவம் பார்த்துக் கொண்டும், பிள்ளை தக்காமல் வருந்துகிறாள். பிள்ளையில்லையே யென்று பெருங்கவலை கொள்ளுகிறாள். வேலைக்காரி அப்படி யில்லை. இரண்டாம்பேருக்குத் தெரியாமல், அதிசயிக்கும் படியாய் அத்தனை சுளுவிலும் விரைவிலும் குளிகுளித்துப் பிள்ளையுந் தாயுமாய் வெளியே வந்து சேமமாய் வாழ்கிறாள். எஜமானி, தான் இருந்த இடத்தை விட்டு அசையாமல், எந்நேரமும் நெய்யுஞ் சர்க்கரையுமாய்ப் பலகார பாலாகாரங்களைத் தின்று உடலைக் கெடுத்துக் கொள்ளுகிறாள். அவள் உடலுக்கு அசைவேயில்லை. கொழுப்பேறியிருக்கிறாள். வேலைக்காரியின் ஆகாராதிகளுக்கும் எஜமானியின் ஆகாராதிகளுக்கும் எத்தனையோ பேதம் இருக்கிறது. வேலைக்காரி காலையில் பழையது உண்கிறாள். அவள் வயிறு எந்நேரமுங் குளிர்ந்திருக்கிறது. எஜமானி உண்டு முடிந்தபின், வேலைக்காரி பகலில் ஒரு மணிக்குத்தான் அதிக பசியாய் இருக்கையில் ஆவலாய் உண்கிறாள். எந்நேரமும் அவள் உழன்று கொண்டே யிருப்பதால், உடல் வலுவேறி நோய்க் கிடங்கொடாமல் வாழ்கிறாள். எஜமானி காலையில் காப்பி குடிக்கிறாள். இட்டளி முதலிய பலகாரங்

களைத் தின்று வயிற்றைக் கெடுத்துக் கொள்ளுகிறாள். பகலிற் பசியெடுக்கிறதோ இல்லையோ, எதையும் அவள் கவனிக்காமலே, சமையல் ஆனாலும், பதினொரு மணியானாலும் பரவா இல்லை யென்று கறிகளையும் கூட்டுகளையும் வைத்துக் கொண்டு, மூக்கைப் பிடிக்கத் தின்றுவிட்டுத் தூங்குகிறாள். வேலைக்காரி அளவாயுண்பது போலவே இரவில் அளவாய்த் தூங்குகிறாள். பணக்காரிக்கு வாய்ப்பது போல வேலைக்காரிக்குப் பகல் தூக்கம் வாய்ப்பது அரிது. வேலை செய்து சரீரம் வருந்தினால் தான், வேர்வை யுண்டாகும். வேர்வை மூலமாய் உடலின் உள்ளழுக்கு வெளியாய், நோயற்ற வாழ்வுக்கு இடம் உண்டாகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றிருக்கின்றதே யன்றி, நோயுற்ற வாழ்வானாலும் இலக்ஷ ரூபா ஆஸ்தியே குறைவற்ற செல்வமென்றில்லை. 'எல்லாமிருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடையச் சட்டி இல்லை' என்றபடி இலக்ஷமிருந்து மென்ன? கோடியிருந்து மென்ன ? ஒரு பிரயோசனமு மில்லை. உடல் வலியிருந்தால் அது ஒன்றே ஒரு நூறு கோடியாம். உடல் வலியற்ற மாது, எங்ஙனம் கணவனோடு வாழ்வாள் ! எங்ஙனம் காலத்தோடு கருத்தரிப்பாள் ? பிள்ளை பெறுவாள், பீடுபெற வாழ்வாள்? எதுவும் அவளால் ஆகாது. 'உழைப்பவன் பிழைப்பவன்' என்றபடி வேர்வை நீர் வடிய வேலை செய்து உடலை உழற்றுபவளே உத்தமியாய் வாழ்ந்து மக்கட் பேறடைவாள். ஏழையாயினும் களங்கமற்ற வுள்ளமுள்ளவளே கருத்தரிக்கப் பெறுவாள். எந்நாளும் அவளுக்குக் கவலை யென்பதே கிடையாது; பேராசை இல்லை ; ஆகையால், அவளுக்குக் கருவளர்ச்சி இடையூறின்றி நிறைவேறுகிறது. உடல் உழன்று கொண்டே யிருப்பதால் இரத்த நாளங்கள் வலுவடைகின்றன. கருப்பைக் குலை, நிலை தளராமல் தலை சிறந்தோங்கிச் செவ்வை யுறுகிறது. அதனால்



இச்சை, இன்பம், உற்சாகம் முதலிய குணங்கள் குறைவின்றி நிறைகின்றன. மனமும் திடப்படுகிறது. தாயின் உடல் வலுவடைவதால், சிசுவின் உடலாதிகளும் வலுத்து வளர்கின்றன. ஆகையால், பெண்கள் எந்நாளும், தங்கள் உடலை உழைப்பிற் கிலக்காக்கி மனதை நிர்மலமாய் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இதைப்பற்றி ஆண்கள் கவனித்துப் பெண்களுக்குப் பொருள் வரவு, செலவு முதலிய காரியா காரியங்களிற் கவலை உண்டாக்காமற் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் உழைப்பால் வேண்டுமானால் பொருள் வருவாய் ஏற்படுத்திக் கொள்ளலாமன்றி, பொருட்கவலை அவர்களுக்கு நேரிடும்படி செய்யக் கூடாது. பெண்கள் மனம் எத்தனை கவலை யற்றிருக்கிறதோ அத்தனை அழகான பிள்ளைப் பேற்றை அடைகிறார்கள்.

கருத்தரிக்க வேண்டுமென்று விரும்பும் பெண்மணிகள் கருப்பையைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். கருப்பை சுத்தமாயிருந்தால்தான் கரு நோயின்றி வளரும். மாதருது நீர், நிறம்பேதி யாதிருந்தால் தான், கருப்ப விருப்பம் அதிகமாயிருக்கும்.

புணர்ச்சியைக் கணக்கின்றிச் செய்யும் விலைமாதர்க்குக் கருத்தரிக்காத காரணம் என்ன? அவர்களுக்கு மாதருது சரியாயிராது. இருந்தாலும் நிறம் பேதித்திருக்கும். அவர்களுக்கு உண்மைக் காதலென்பதே இன்ன தென்று தெரியாது. பணவாசையால் அவர்கள் கருப்பையமைப்பைக் கெடுத்துக் கொள்ளும்படி மிதமிஞ்சிப் புணர்ச்சி செய்து கெடுகிறார்கள். அவர்களுக்கு உண்மைக் காதலுணர்ச்சியே அடியோடு அழிந்து போகிறது. கருவாய் எந்நேரமுந் திறந்திருப்பதால் அவர்களுடைய கருப்பை, நிலை குலைந்து பற்பல நோய்களுக் கிடமாய்க் கெட்டழிந்து போகிறது. ஆகை

யால், அவர்களுக்குக் கருத்தரிப்பதே அரிதாய் நிலை தளர்கிறது. ஆகையால், பெண்ணொருத்தி, தன் கணவனை யன்றி வேறோர் இற்புறத்தவரை நாடாக் கற்புடை மாதாய்க் கருவுயிர்த்துப் பிள்ளைப் பேறு பெற்றுச் சேமமாய் வாழ வேண்டுமானால், கணவனோடிரண்டறக் கலந்து மாத மிரு முறைக் கதிகமாய்ப் புணர்ச்சி யுணர்ச்சி யின்றி அதிசாக்கிரதையாய் இல்வாழ்க்கையைச் செலுத்த வேண்டும். கணவன் ஆண் மகனாகையால், அவனுக்குக் கருப்பையைப் பற்றியும், அதில் தரிக்கும் கருவைப் பற்றியும், கருவுயிர்ப்பைப் பற்றியும், பிள்ளை வளர்ப்பைப் பற்றியும் ஒன்றுந் தெரியாது. அவனுக்கு இவளே இதமாகவும், பதமாகவும், மிதமாகவும் கருவைப் பற்றிய விஷயங்களைத் தெளிவாய் விளக்கி, மித மிஞ்சின புணர்ச்சி யுணர்ச்சியைக் குறைக்க வேண்டும். கணவன் நெடுநாள் பிரிந்து போயிருந்து, அவன் எப்போது வருவானோ வென்றேங்கி யெதிர்நோக்கியிருந்த கற்புடை நங்கை, அவன் வந்து சேர்ந்த வுடனே கருத்தரிப்பதைச் சாதாரணமாய் எல்லாரும் அறிந்திருக்கிறார்கள். என்? கருப்பை, அதிக பரிசுத்தமாய், கருவடைய விந்துக் கிருமியை அதிக ஆவலாய் எதிர் நோக்கியிருந்தமையாலேயே அத்தனை விரைவிற் கருத்தரித்தது. விலைமாது இதற்கு நேர் மாறாயிருந்தமையால் கருத்தரிக்கவில்லை.

புணர்ச்சியின் போது, பெண்களுக்குப் பயம், விசனம், அதிசயம், அருவருப்பு முதலிய சஞ்சலங்கள் இருக்கக் கூடாது; இருந்தால் கருத்தரித்தலுக்கு விரோதமாகும். ஆகையால், நாயகன், இதைக் கவனித்துச் சந்தோஷமுண்டாக்க வேண்டும். பெண்கள் மனம் சிறுகாற்று வீசினும் அலைந்தாடும் நீர்நிலைபோல, சிறிதுகவலைக்கிடம் பண்ணினும் அல்லலுக்குள்ளாகி வாடும். இதை அவர்கள், தமக்



கேதாவது விசனசமாசாரம் எட்டினவுடன் வாய் விட்டுப் புலம்புவதாலும் உணரலாம்.

'சொல்லி யழுதாற் றுயரமெனக் காறுமடி'

என்ற மகான் திருவாக்கிற் கிணங்க நந்தமிழ் நாட்டுப் பெண்கள் தங் கணவர் முதலியோர் இறந்தாலும், வேறெந்தச் சுற்றமாவ திறக்கக் கேட்டாலும் விசனத்தால் மனந் தாளாமல் வாய் விட்டு வக்கனை ஒப்பாரி பாடி அழுவதாலும் இது விளங்கும். எந்நாளும் பெண்களே இப்படிப் புலம்புகிறார்களன்றி ஆண்கள் வாய்விட்டுப் புலம்புவதில்லை. ஆகையால் ஆண்களின் மனம் பெண்களின் மனதைவிடச் சகிக்குந் தன்மையுடைய தென்பது நன்றாய்த் தெரிகிறது. இயற்கையிலேயே மனவுறுதியுடைய ஆண்கள் பெண்களைத் தேற்றிச் சந்தோஷமாய் வைத்திருக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். எந்த இடத்தில் கற்புடை மனைவியைக் குடி, கூத்தி, சூது முதலிய கெட்ட பழக்கத்தால் கணவன் அல்லற் படுத்தி அழவைக்கிறானோ, அந்த இடம் எந்நாளும் சந்ததி யின்றி நிர் மூலமாய் அழிந்து போகும். சந்ததியிருந்தாலும் அவனைப் போலவே குடியிலும், மடியிலும், சூதிலும், வாதிலும் தோய்ந்து, செல்வந் தேய்ந்து, வறுமை பாய்ந்து, அழிந்து ஒழிந்து போகும்.

'சந்ததிக் கழகு வந்தி செய்யாமை' என்றிருப்பதால், ஒவ்வொரு கணவனும் இதை நன்றாய் நிதானித்தறிந்து,

'சூதும் வாதும் வேதனை செய்யும்'

என்பதை ஓர்ந் துணர்ந்து, சூதாடும் இடத்திலும் செல்லக் கூச வேண்டும்.

'கள்ளுண்பான் கற்றோர் கூட்டத்திற் றள்ளுண்பான்'

ஆகையால், அவன், கள் சாராய முதலியவைகளின் நாற்றத்தையும் வெறுத் தொதுக்க வேண்டும்; தன்மனைவி

யிடத்திலேயே கண்ணுக்கும், காதுக்கும், வாய்க்கும், மூக்குக்கும், உடலுக்கும் ஒரே காலத்தில் அனுபவிக்கக் கூடிய சுகானுபவம் இருக்கிற தென்பதை யூகித் துணர்ந்து, அவளே இன்பக் களஞ்சியம், அவளே சிற்றின்ப வெற்றிக்குச் சிறந்த துணை, அவளே நன்மக்கட் பேற்றுக்கு வைப்பென்று நலம்பெற வுணர வேண்டும். அப்போது தான் இவ்வதிகாரத் தலைப்பின்படி நன் மக்கட் பேறே நலமுடைத் தென்பதைக் கைவல்லியமாக் காணலாம்.

மனைவியை யெந்நேரமும் சந்தோஷ மூட்டி வைத்திருக்க வேண்டு மென்றால், அவளோடு கணவன் நினைத்த போதெல்லாம் *உடற் கூட்டின்பநுகர வேண்டுமென்பது பொருளன்று. வாய்க்குச் சுகம், அவளோடு இன் சொற் பேசுதல் அன்றி, கண்டபோதெல்லாம் அவளுடைய இதழமுதுண்ணலன்று; கண்ணுக்குச் சுகம், அவளுடைய இயற்கை யழகைக் காணுதல் அன்றி, எந்நேரமும் அவளைப் படுக்கையறையில் அம்மணமாய்க் கலவியின் பொருட்டுக் காண்பதன்று; செவிக்குச் சுகம், அவளுடைய குயிற் குரலோடு கூடிய கிளி மொழியைக் கேட்பதன்றி, எந்நேரமும் அவளைக் கூடி முயங்கும் ஓசையைக் கேட்பதன்று; மூக்குக்குச் சுகம், இயற்கை வாசனையாகிய கற்பு மணத்தை மோப்பதன்றி, காமவிகாரஞ் செய்யும் சந்தன மலராதிகளை மோப்பதன்று; உடற்குச் சுகம், இடையறாதவளோடு உள்ளன்புடன் நெருங்கிப் பழகுதலன்றி, எந்நேரமுங் காமங்கருதி, அவளைக் கட்டித் தழுவுவதன்று.

பெண்களுக்கு இயற்கை யாகவே புணர்ச்சியில் இச்சை உதிக்க வேண்டும்.

'கன்னிகை யொருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங்
கைக்கொள்வள் பக்கு வத்தில்'

* சரீர சம்பந்தமான காம இன்பம்.



என்றபடி அவர்களுக்குப் பக்குவமென்ப தொன்றுண்டு. ஆண்களுக்கும் பக்குவமென்ப தொன்றுண்டானாலும், முதல் முதல் * விந்தோதயமாகும் ஒரே பக்குவந்தான். அவர்களுக்கது பதினான்கு முதல் பதினாறு வரையில் எந்தக் காலத்திலாவது உண்டாகும். பிறகு அவர்களுக்கு மாத மாதம் பக்குவமாத லென்பதொன் றில்லை. பெண்களுக்கே இந்நியதி உண்டு. ஆகையால், 'தாயறியாச் சூலில்லை' என்றபடி அந்தப் பக்குவம் அவர்களுக்கே தெரியும். அன்றி, அருகிற் பழகியிருக்கும் கணவனுக்கும் தெரிவரிது. அந்தப் பக்குவ காலத்தில், அவர்களே புணர்ச்சி யுணர்ச்சியைக் குறிப்பிற் காட்டுவார்கள். அதை யூகித் துணர்பவனே ஆடவரிற் சிறந்தவனாவான். ஆண் பிள்ளை யென்றால், அவனுக்கே தகும். மற்றையோ ரெல்லாம் வீண் பிள்ளைகளென்றே விளம்பவேண்டும். அப்படி அந்தப் புணர்ச்சி யுணர்ச்சிக் குறிப்பை அவர்கள் காட்டு மட்டுங் காத்திருப்பவனே காதற் பண்பை உணர்ந்தவனாவான்.

'யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்?
தானோக்கி மெல்ல நகும்'

என்றார் நாயனார்.

'காதலியைக் காதலன் நேர்நோக்கு நோக்குகையில் புணர்ச்சி யுணர்ச்சியின் நாணத்தால், பூமியை நோக்கித் தலை கவிழ்ந்து இறங்கிக் கொள்வாள். அவன், நேர்நோக்கு நோக்காமல் வேறெதையோ நோக்குகையில், காதலி, அது தான் சமயமென்று அவனை யேறெடுத்துப் பார்த்துப் பைய நகைப்பாள்' என்பதே அது. இது போன்ற பற்பல குறிப்புகள் உள. அவைகளைத் தத்தம் மனைவிய

* வயது வந்ததற் கடையாளமாக முதல் முதல் ஆண்மகனுக்கு விந்து வெளியாதல்.

ருடைய இயற்கை யனுபவ அளவால் கணவன்மார்
அறிந்துகொண் டிருக்கவேண்டும்.

இது விஷயத்தில் கேவலம் வாயில்லாப் பிராணி
யாகிய பெண்ணாயும், அறிவுள்ளதா யிருக்கின்றது; தனக்கு
இச்சை யில்லாதபோது, ஆண் நாய் அருகில் வந்தால்,
பின்னங் கால்களைத் திருப்பி, மண்ணை வாரி, அதன் முகத்தில்
வீசுவதோடு உர்ரென்று கோபக் குறியுங் காட்டுகிறது.
கார்த்திகை மார்கழி மாதங்களில் கருத்திறந்து பக்குவமா
யிருக்கையில் இதனருகில் ஆண் நாய் வாரமல் வேறு கவ
னமா யிருந்தாலும், இதுவே வலிய அதனிடத்திற் சென்று,
அதன் காதைக் கடிப்பதும், நக்குவதும்; அதற் கெதிரிற்
குதிப்பதும், துள்ளுவதும், குரைப்பதுமாய்த் தன் பின்
புறத்தைத் திருப்பிக் காட்டி நிற்கும். கழுதையும் இப்
படியே, தனக்குப் பிரியமில்லாத காலத்தில் ஆணைத் தன்
பின்னங் கால்களால் வேகமாய் உதைத்துத் துரத்தும்;
பிரியமுள்ள காலத்தில் அப்படியே அசைவற்று நின்று
விடும். பசுமாடும் பக்குவமடைந்த கிடாரியும் இப்படியே.
பருவகாலத்தில் சேங்கன்றின்மேல் தாமே ஏறிக் குறிப்
பைத் தெரிவிக்கும்.

இவைகளுக்குத் தான் மாதவிதமின்றிப் பருவவித
மாய்; ஆண்டுக் கொருமுறை யென்றும், இருமுறை யென்
றும், மும்முறை யென்றும் கருத்தரிக்கும் இன்ப வுணர்ச்சி
யேற்பட்டிருக்கின்றது. ஆகையால் இவைகள், எந்நேர
மும் ஆண்களுக்கு இடந் தருவதில்லை. மேலும் இவை
கள் விலங்குகள். ஆகையால் இன்ப நுகர்ச்சியின் பாகு
பாடு இன்னதென் றறியா. மாந்தர் அப்படியன்று. பெண்
களுக்கு மாத ருதுவுண்டு. ஆகையால் அவர்கள் எப்
போதும் காம நுகர்ச்சிக்கு இடந்தர வேண்டும். ஆறறி
வுடையவர்களாகையால் மாந்தர் இன்ப நுகர்ச்சியை எப்



போதும் வரையறை யின்றி எய்தலாமென் றெண்ணி யிருப்
பாரும் உளர். அவர்கள் எண்ணமெல்லாம் சிற்றின்ப வெற்
றிக்குச் சிறந்த எண்ணமன்று. ஆண்மகன் பெண்மகளைப்
போலக் கருக்கொள்ளுதல், கரு வுயிர்த்தல், மாதவிடாய்
கொள்ளுதல், சிசுவைப் பால்கொடுத்து வளர்த்தல் முத
லிய இயற்கைத் துன்பானுபவங்களுக்கு ஆளாயில்லை.
ஆகையால் அவன் தன்னைப் போலவே தன் தலைவியையும்
எண்ணிக்கொண்டு எந்நேரமும் சிற்றின்பப் பிரியனாய்ச்
சீரழிந்து கெடப்படாது. தான் எப்போது வேண்டுமென்
றாலும், மனைவி இடங்கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி,
அவளை அடக்கி மடக்கிப் பயங்காட்டி ஆளப்படாது.
மற்றை விஷயங்களிலும் எப்படியானாலும் ஆகுக. சிற்
றின்ப விஷயத்தில் மாத்திரம் கணவன், மனைவியின் இச்
சையை எதிர்பார்த்துத் தாமதித்திருக்க வேண்டும். அப்
போதுதான் சிற்றின்பம் முற்றின்பமாகும். அப்போது
தான் சந்ததி வளர்ச்சிக் குடந்தையான கருத்தரிப்பதற்
கனுகூலமாகும். கருத்தரிக்க வேண்டுமென்று கணவன்
மனைவியர் உடற் கூட்டுறவு செய்யவேண்டு மன்றி, மற்
றைப்படி மனக் கூட்டுறவும், உயிர்க் கூட்டுறவுமே சாலச்
சிறந்தனவாம்.

கருத்தரிக்க வேண்டுமென்ற எண்ணமுடைய மாதர்
* எவ்வெக் காலத்திற் கணவன்மாரோடு உடற் கூட்டுறவு
செய்யவேண்டு மென்பதை இதுவரையில் இதை வாசிப்
போர் நன்குணர்வர். ஆயினும், செயற்கை யளவாலும்
தவறுமற் கருத்தரிக்க வேண்டுமென் றெண்ணும் எத்திலை
மார், தத்தம் ஆபரணங்களோடு, ஊசிக் காந்தம் (Needle
flint) என்னும் உலோகத்தைக் கோத்தணிந்து கொண்

* எந்தெந்தக் காலத்தில்

டால், தப்பாமற் கருத்தரிக்கும்; கணவன் மனைவியர்க்குள் மனவொற்றுமை வளரும்.

மனைவியோடு சந்தோஷமாய்ப் பேசி மகிழ்வதால் வாதாதிக்கம் நீங்கும்; அவளுடைய இதழமு துண்பதால் பித்தம் தீரும்; புணர்ச்சியால் சீதளம் பிரியும். நல்லறவுணர்ச்சி (தரும சிந்தனை)யுள்ள மனைவியோடு கூடுவதால், உடல் புளகிக்கும், திரிதோஷமும் தீரும்; பாவம் பறக்கும்; உடலுங் கண்களும் வெப்பமறக் குளிரும்; இம்மையில் எல்லாச் சுகானுபவமும் சிறப்பதன்றி, மறுமையிற் றுறக்கமும் சிறக்கும். வேசியோடு கூடுவதால் விவேகம் தளரும்; மானம்போய் வறுமை வளரும். குலப்பெண்களில் மங்கைப் பருவமுள்ள மனைவியைக் கூடினால், கொஞ்சம் சூடேறும், மகிழ்ச்சி வளரும், பசி அதிகமாய் உடல் பருக்கும்; வலுவேறி அழகுண்டாகும். மடந்தைப் பருவமுள்ள மனைவியைக் கூடினால், ஐம்பொறிகளுக்கும் இன்பமுண்டாகும்; வாதமும் பித்தமும் மிதமாகும். நாடி மயில்போல் நடக்கும். அரிவையையுந் தெரிவையையுஞ் சேர்ந்தால், அறிவு சிறக்கும், பசி தீபனம் வளரும். காமம் இறக்கும். நாடி அன்னப் பறவைபோல நடக்கும். பேரிளம்பெண்ணைக் கூடினால், உடலிற் கொஞ்சம் பலவீனங் காட்டும். நாற்பது வயதுக்கு மேற்பட்ட மனைவியை அடிக்கடிக் கூடுவது, அழகல்லவென் றகற்றவேண்டும். * காமாதுரஸ்திரியின் புணர்ச்சியால் மதிமந்தமும், சோம்பலும், வாதமும் அதிகமாகும். நாடி எருமைக் கடாப்போல நடக்கும். ஆனி ஆடியாகிய முதுவேனிற் காலத்திலும் ஆவணி புரட்டாசியாகிய கார் காலத்திலும் பக்ஷத்துக்கு (பதினைந்து நாட்களுக்கு) ஒரு முறையும், ஐப்பசி கார்த்திகை மாதங்க

* மிதமிஞ்சிப் புணர்ச்சியில் விருப்பமுள்ளவள்.



ளாகிய மாரி காலத்தில் பத்து நாட்களுக் கொரு முறையும், சித்திரை வைகாசியாகிய இளவேனிலில் எட்டு தினங்களுக் கொரு முறையும், மார்கழி தை யென்னும் முன் பனியிலும், மாசி பங்குனி யென்னும் பின் பனியிலும் வாரத்துக் கொரு முறையும், பெண்கள் பரிபக்குவமாய்க் காம இச்சை முதிர்ந்திருந்தால் புணரலாம். புணர்ச்சி காலந் தவிர மற்றைக் காலங்களில் தனித்தனி வெவ்வேறு படுக்கையிற் படுக்கவேண்டும். ஏழைக் கட்டிலாகிய கயிற்றுக் கட்டிலேனுந் தேடி, அதன்மேற் படுப்பதன்றித் தரையிற் பாய்மேல் சயனிப்பது தகாதென்பதை மறந்துவிடக் கூடாது. புணர்ச்சி காலத்தில் மூச்சடக்கிப் பெண்களின் நாதமூறும் நிலையை நாடிய நினைவே நினைவாயிருந்து, தன் விந்துவை அடிக்கடி வெளிவிடாமல் மனமடக்கக் கற்றவனே ஆடவரிற் சிறந்த ஆடவனாவான்; மக்கட் பிறவியில் மாண்புடையவனாவான். இதுவே பெண்களை வசப்படுத்தும் பெரிய மருந்தாம். இதைவிட்டு மற்றைப் பச்சிலை மூலிகை மருந்தால் பெண்களை வசியஞ் செய்யவேண்டுமென்று விரும்புவதெல்லாம் பேய் மதியாகும்.

சில சமயத்தில், நாதக் * கிருமிகளில் மூன்று நான்கு ஒரே தடவையில் முதிர்ந்து கருப்பையில் விந்துக் கிருமியின் வரவை எதிர்நோக்கி யிருப்பதும் உண்டு. அவைகள் எதிர் நோக்கினபடியே விந்துவும் வந்து சேருமாயின், இரண்டு மூன்று சில சமயத்தில் நான்கும் ஏககாலத்தில் கருவாய் முதிர்ந்து, இரட்டைப்பிள்ளைகளாகவும், மூன்று அல்லது நான்கு பிள்ளைகளாகவும் பிறக்கின்றன. யாழ்ப்பாணத்தில் ஒரு பெண்ணுக்கு ஏககாலத்தில் ஐந்து குழந்தைகள் பிறந்தனவாம். அமெரிக்காவில் ஒரு பெண்வயிற்றில் அடிக்கடி ஒரே சூலில் மும்மூன்று குழந்தைகளே ஆறு

* இதையே சோணித முட்டை யென்பார்.

முறை பிறந்தனவாம். இப்படிப் பிறப்பதற்குக் காரணம் அநேகமாய் உலகைத் தோற்றுவிக்கும் சத்திசொரூபங்களாகிய பெண்மக்களின் நாதக்குழிழ்களென்னும் முட்டைகளே காரணமாம். ஒரே காலத்தில் ஒருமுட்டை வெடித்து விந்துவை ஏற்றுக் கருத்தரிப்பதற்கு மாறாக, இரண்டு மூன்று முட்டைகள் பரிபக்குவமாய் விந்துவும் அவைகளுக்குத் தக்கபடி சேர்ந்தால் இரட்டைப் பிள்ளைகள் முதலிய பல பிள்ளைகள் ஒரே சூலிற்பிறக்கின்றன. கருப்பையில் ஒரே காலத்தில் தோன்றும் இரட்டைப் பிண்டங்களுக்குப் போதுமான இடமில்லாமற் குறுகியிருந்தால், அவைகள் ஒரே பையில் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு பிறப்பதும் உண்டு. சில சமயத்தில் அவைகளின் முதுகுகள் ஒட்டிக்கொள்வதால், இரண்டும் ஒன்றின்பின் ஒன்றாய்ப் பிறப்பதற்குமாறாக, ஒரே காலத்தில் இரண்டு தலைகள், நான்கு கரங்கள், நான்கு கால்கள், இரண்டு வயிறுகளோடு பிறப்பதும் உண்டு. சில கருக்கள், பெண்களின் கருக்குழியியல்பால் வின்னமாய்ப் பிறப்பதும் உண்டு: கால்களிரண்டும் பிட்டத்திலேயே ஒட்டிக்கொண்டிருக்கும். கைகள் குட்டையாய் விலாவண்டையே தொங்கிக்கொண்டிருக்கும். தலை பருத்துக் கண் குழிந்திருக்கும். எத்தனை வயதானாலும் சில பிறப்புகள் இரண்டடிக்குமேல் வளர்வதில்லை. சிலவற்றிற்கு மாங்காய்த் தலையும் தேங்காய்த் தலையும் வாய்ப்பதுண்டு. இன்னும் இப்படி எத்தனையோ விரூபங்கள் உள. இவைகளுக்கெல்லாம் தாய்க்கருவிற் சேர்ந்திருக்கும் நாதச்சினையென்னும் மஞ்சட் கருவின் இயற்கையே காரணமாம். அன்றி, ஒரே மஞ்சட் கருவாகிய நாதச்சினையில் இரண்டு விந்துக் கிருமிகள் ஏககாலத்தில் சேருமாகில், இரட்டைப் பிள்ளைகள் ஏககாலத்தில் ஒட்டிக்கொண்டு பிறக்கின்றன என்பாரும் உண்டு.



தாய்க் கருவில் நாதக்குழல் வழியாக மஞ்சட்சினைக் கருப்புழு வந்து சேர்ந்ததும், அதைச் சுற்றி மாயையென்னும் ஒரு மெல்லிய சவ்வுபடரத் தொடங்குகிறது. *சுக்கிலக் கிருமியானது சோணித முட்டையென்னும் பெண்கருவிற் சேர்ந்த முதல் நாளில் அணுவுக்கணுவாய் மிகச் சிறுத்திருக்கும். பூதக்கண்ணாடி மூலமாய்ப் பார்த்தால்தான் கண்ணுக்குத் தென்படும். ஆனால் அதிவிரைவில் பருக்கத் தொடங்கிப் பத்துநாட்களில் கடுகத்தனையாய் விடும். இது தொட்டால் ஒட்டிக்கொள்ளும் பிசினைப்போலப் பளபளப்பாய்த் தோன்றும். பதினைந்தா நாளில் மிளகளவாகும். அப்போததற்கிடையிலொரு வெள்ளைப்புள்ளி சற்று நீண்டு தோன்றும். இந்த வெள்ளைப்புள்ளியே அண்டத்திற் பிறக்கும் பிண்டப் பகுதியின் தோற்றமாம். மூன்றுவாரம் அல்லது இருபத்தொரு நாட்களில் அது நறுவிலிப்பழத்தளவாகும். அப்போதது உருண்டை வடிவமாறிப் புழுவைப்போல அரைக்கால் வராகனெடை நிறையுள்ளதாயிருக்கும். நான்குவாரம் அல்லது இருபத்தெட்டு நாட்களில் அத்திக்காயளவான புழுவடிவாய் அரை அங்குல நீளமுள்ளதாகும். அப்போததற்கு மேலே ஓர் அழகான முட்டுப் புறக்கவசம் உண்டாயிருக்கும். மெல்லிய உட்கவசமும் பனிநீரும் ஏற்பட்டிருக்கும். உடற்கூறை விடத் தலையளவு பருத்திருக்கும். ஐந்துவாரம் அல்லது முப்பத்தைந்து தினங்களில், பருத்த தலையில் சிறுத்த நேத்திரப் புள்ளிகள் தோன்றும். எழுவாரங்களில் கண்களும் காதுகளும் ஏற்பட்டு, எலும்புகள், மூளை, ஈரல் முதலிய குறிகள் உண்டாகிப் பிண்டம் மூன்றங்குல நீளம் வளர்ந்திருக்கும். முப்பதாவது நாளிலேயே பிண்டத்திலுள்ள சிசுவை ஊட்டி வளர்க்கும் நாபிக்கொடி உண்டாய் விடும்.

* இதுவே ஆண்கருவென்னும் விந்துக்கிருமி.

இரண்டாம் மாதத்தில் கண், காது, மூக்கு, வாய், நெற்றி, இதயம் (Heart) மூளை, ஈரல் முதலியவைகளுடைய குறிகள் தோன்றிப் பிண்டவளர்ச்சி மூன்றங்குல நீளமுடையதாகும். மூன்றுமாதத்தில் கண்ணிமைகள் தோன்றும்; உதடுகள் பொருந்தியிருக்கும்; ஆண் பெண் பாகுபாட்டுக் குறிகள் தெரியும்; கைகால் விரல்கள் நன்றாய்த் தோன்றும்; உடலில் இரத்தோட்டம் உண்டாய் இதயம் பட்பட்டென்று அடித்துக் கொள்வது கேட்கும். அப்போது பிண்டத்தின் நீளம் நான்கு அல்லது ஐந்தங்குலமாய், மூன்று பலம் அல்லது பத்து ரூபாய் எடையுள்ளதாயிருக்கும்.

நாலாவது மாதத்தில் பிண்டம் என்னும் பெயர் மாறிச் சிசுவென்னும் பெயர் பெறுவதற்குத்தக்கபடி உருவேற்பட்டிருக்கும். நீளமும் ஏழுமுதல் எட்டங்குலமளவுள்ளதாயிருக்கும். நிறையும் ஐந்து பலம் அல்லது பதினைந்து ரூபாய் எடையுள்ளதாகும். மேல் தோல் செவ்வல்லி நிறமாய் அழகாயிருக்கும். சதை வளர்ந்து புஷ்டியாயிருக்கும். கண், காது, வாய் முதலியவைகள் முழுவளர்ச்சியாய்த்தோன்றும். தாயின் கருவில் சிசு, சுழல்வது தெரியும். இந்நாலாவது மாதத்தில், அகாலப் பிரசவமாய்ப் பிறந்தால், சிசு, சில மணிகாலந்தான் பிழைத்திருக்கும். ஐந்தா மாதத்தில் குழந்தையின் நீளம் ஒன்பதல்லது பத்தங்குலமாயிருக்கும். எடை ஏழரை பலம் நிறையுள்ளதாயிருக்கும். ஆறுமாதத்தில் பன்னிரண்டு அல்லது பதின்மூன்றங்குல நீளமுள்ளதாய், எடை பன்னிரண்டு அல்லது பதினைந்து பலம் நிறையுள்ளதாயிருக்கும். சிரசிலும் கண்ணிரப்பைகளிலும் மயிர் தோன்றும்.

ஏழாவது மாதத்தில் தான் எல்லா அவயவங்களும் நிறைவளர்ச்சி பெறும். முகத் துறுப்புக்களாகிய கண் காது



மூக்கு வாய் முதலிவைகள் சரியான அளவாய் வளர்ந்து தோன்றும். எலும்புகளெல்லாம் வலுவடைந்து குழந்தை முழுவுருவோடு விளங்கும். நீளம் பதின் மூன்றங்குலமும், எடை ஏறக்குறைய ஒருவீசை நிறையும் இருக்கும். இம்மாதத்திற் பிறக்கும் சிசுவை அதிபத்திரமாய்ப்பாதுகாத்தாற் பிழைத்துக் கொள்ளும். ஆனால், அதிக பலவீனமாய்க் குளிப்பாட்டுவதற்குங் கூடாமல் கொள கொள வென்றிருக்கும். அதிக நேரந் தூங்கவைக்க வேண்டும். எட்டா மாதத்தில் குழந்தையின் நீளம், ஏறக்குறையப் பதினேழங்குலமிருக்கும். எடை ஒன்றரை வீசை; உடல் முழுதும் மயிர்க்கால்கள் ஏற்பட்டுச் சிவந்து குருத்துக்களாயிருக்கும்.

ஒன்பதா மாதத்தில் குழந்தையின் நீளம், ஏறக்குறைய இருபத்திரண்டங்குலமிருக்கும். எடை ஒன்றரை வீசைக்குச் சற்றதிகமாகும். எல்லா வுறுப்புகளும் வளர்ந்து வலுவேறி மயிர்க் கால்கள்தோறுங் குருத்து முதிர்ந்து கறுத்திருக்கும். குழந்தை தன் இருகரங்களையும் முன்னே கூப்பி, தலையையும் கால்களையும் வளைத்து முட்டை வடிவாக முடக்கிக்கொண்டு, தலை கீழாய் அசைந்தசைந்து புரண்டு நீண்டு துடித்துக் கொண்டிருக்கும்.

கருத்தரித்தவுடனே கருப்பையில் மாற்றம் ஏற்பட்டு அதிலுள்ள இரத்தோட்டத்திலிருந்து ஒரு விதமான நீரூறுகிறது. அதிலிருந்தொரு மெல்லிய சவ்வுவளர்கிறது. இந்தச் சவ்வுதான் நாதச் சினையின் * புறக்கவசத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கும். இந்தச் சவ்வு, மேற்புரை யென்றும், கீழ்ப்புரை யென்றும், இருபிரிவுள்ளது. மேற்புரை, குளிகுளிக்குமட்டும் கருப்பைச் சவ்வாகவே யிருந்து, பிறகு, நாதச்சினையின் புறக்கவசத்தோடு அரைப்பங்கும் அழுக்

* நாதச் சினைக்கு உட்கவசம் புறக்கவசமென்றிரு கவசங்கள் உண்டு.

கோடு அரைப்பங்குமாய் வெளிப்பட்டு விடுகின்றது. கீழ்ப் புரைச்சவ்வு கருவளர வளரக் கூடவே தேய்ந்து மெல்லிய தாய்க் கருமுதிர்ந்த ஐந்து மாதத்துக்குப்பிறகு அடையாளமே இல்லாமல் அடியோடு தேய்ந்து போகிறது. மேற் புரைச்சவ்வு கருப்பையோடு பொருந்தி யிருக்கிற இடத்தில் விரைவாய் வளர்வதால், அதிலிருந்தே நஞ்சுக்கொடி படர்கிறது. இதற்குத்தான் மாயை என்று பெயர். இது கருப்பையின் உட்புறத்தில் கனத்து வட்டமாய் ஒட்டிக் கொண்டிருக்கும். இதன் இரத்த நாளங்களின் குஞ்சம் கருப்பையின் இரத்த நாளங்களின் இடையிற் சென்று இரத்தத்தைக் கிரகிக்கின்றது. இது அநேகமாய் கருப்பையின் இடப்பக்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும். இந்த மாயை, சிசுவின் நாபிக் கொடியோடு பொருந்தி யிருப்பதால், தாய்க்கும் அதற்கும் சம்பந்தம் உண்டாக்குகிறது. இதனாலேயே குழந்தை மூச்சுவிடுகிறது; இதனாலேயே தாயின் அன்னபானாதிச் சத்துக்கள் குழந்தைக்குச் சென்று அதை ஊட்டி வளர்க்கிறது. ஒரு கருப்பையில் இருபிண்டம் இருந்தால், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஒவ்வொரு மாயை உண்டாம். தாயின் அன்னபானாதிச்சாரம் மாயையோடு ஒட்டியிருக்கும் நஞ்சுக்கொடி மூலமாய்க் குழந்தை வயிற்றிற்சென்று, அதை வளர்க்கிறது. சிசுவைச் சுற்றி யின்னுமொரு சவ்வு வளர்ந்து மூடிக்கொண்டிருக்கும். அந்தப்பைக்குள் தண்ணீர் நிறைந்திருக்குமாகையால், அதிற் குழந்தை, யாதோர் அபாயமுமின்றி மிதந்துகொண்டிருக்கும்.

நஞ்சுக் கொடியென்பது சிசுவின் நாபியி லிருந்து படர்ந்து மாயையோடு பொருந்தியிருக்கும். இது ஏறக்குறைய * முப்பத்திரண்டங்குலம் நீளமுள்ளதாய்ச் சில சமயத்திற் குழந்தையின் கழுத்தைச் சுற்றிக்கொண்டுமிருக்

* ஏறக்குறைய ஒரு கஜமென்றும் சொல்லலாம்.



கும். இது, சிசுவின் சந்து எலும்புக்குள்ளிருந்து வரும் இரண்டு காப்பு நாளங்களாலும், மாயையிலிருந்து சிசுவுக்கு உணவைச்செலுத்தும் ஒரு நாளத்தாலும் ஆனது. குழந்தை பிறந்த இருபதல்லது முப்பது நிமிஷங்களில் இதன் உயிர்ப் பாகிய இரத்தோட்டம் நின்றுவிடுகிறது. ஆகையால் குழந்தைக்கும் இதற்கும் அதற்கப்புறமும் பொருத்தமில்லை என்று துண்டித்துவிடுகிறார்கள். பனி நீர் என்பது கருப்பையில் இயற்கையாகவே உண்டாகும் ஒருவித உதயநீர். நாதச்சினையின் உட்கவசத்துக் குள்ளிருந்து சிசுவை அபாயம் வாராமற் காப்பதற்கு இந்த நீர் ஆதியிற் பனித்துளி யளவாயிருந்து சிசு வளரவளரச் சுரந்துவருவதால் பனி நீர் என்று பெயர் பெற்றது. இதனால் சிசுவுக்குப் பலவித நன்மைகள் உண்டு: இதுவே சிசுவை ஆதியிற்காக்கிறது. சூட்டை மிதமாக்குகிறது. கருவிற் பிண்டக் கவசங்களைக் கிழித்து அகலமாக்குகிறது. வெளியதிர்ச்சியின்றிப் பிண்டத்தைப் பாதுகாக்கிறது. சிசு பிறக்கும் கருவாயை *அகற்றுகிறது.

இந்தப் பனிநீர்க்குளத்திலேயே, சிசு தலைபளுவா யிருப்பதால், அது கீழும் கால் மேலுமாக மிதந்து நீந்திக் கொண்டிருக்கும். பத்தாமாதத்தில் குழந்தைமுழுவளர்ச்சி யுற்றிருப்பதால், கீழ் நோக்கிய தலையை, மேலே திருப்பிக் கொள்ள முடியாமல் அப்படியே யிருந்து, முதலில் தலை உதயமாகும்படியே பிறக்கும். இப்படி முதலில் சிரோதய மாவதால் தாய்க்கும் பிள்ளைக்கும் நன்மையுண்டாகிறது. சில சமயங்களில் முதலிற் கால் உதயமாவதும் உண்டு. இதற்குக் காரணம், கருவிற்சிசு, தலையும் உடலும் சம எடையாயிருப்பதும் அல்லது தலையைவிட உடல் அதிக பளுவாயிருப்பதுமாம் என்க. கருப்பையில் இடம் நெருக்கமா யிருப்பதால் சிசு தன் கைகால்களை முடக்கிக் குண்டுருட்டாய்க் கிடக்

* அகலமாக்குகிறது.

கிறது. பிரசவகாலத்தில் அது நீண்டு வெளி வருவதாலும் தாய்க்குச் சிரமமுண்டாம். சிசு வெளியேற ஏற, கருப்பை வாயகன்று, மற்றைப் பாகங்களைச் சுருக்கிக்கொண்டே வரும். இதனாலும் தாய்க்கு நோவதிகமாம். முதலில் அது இலேசாகவும், அதிகநேரஞ் சென்றும் வந்துகொண்டிருக்கும். பிறகு, கருப்பை, மேலும் மேலும் சுருங்குவதாலும், அடிவயிற்றிற் சதைசுருங்கித் தள்ளுவதாலும், யோனித்துவாரம் விரிவதாலும் வலி அதிகமாய் அடிக்கடி வரத்தொடங்கும்.

இந்தச் சமயத்தில்தான் நவீன நாகரிக முறையாளரிற் சிலர், குளோரபாரம் (chloroform) என்னும் மயக்க மருந்தை உபயோகித்து நோதெரியாமற் செய்வதும் உண்டு. இப்படியே விக்டோரியா மகாராணியம்மாளவர்களும் செய்து கொண்டு சிரமபரிகாரமாய்க் கிரமமுடன் குளி குளித்திருந்தார்களாம். யார் செய்துகொண்டதானாலும் இம்முறை முற்றுந் தவறானதாகும். காட்டில் வில்லிச்சிக்குக் குளோரபாரம் ஏது? அவளெப்படிச் சிரமபரிகாரமாய் அதி விரைவிற் குளி குளித்து விடுகிறாள்? எல்லாங் கிரமமான உடல் உழைப்பைப் பொறுத்திருக்கிறது. கருவுற்றிருக்குங் காலத்தில் சோம்பித் தூங்கிக் காலங்கழிக்கும் பெண்மகளே பிரசவவலியேறி வருந்துவாள். மேற்சொன்னபடி பிரசவ வலியின்றிக் குளி குளிக்கும் பெண், பூலோகத்தில் எவளுமிராள். ஆனால் உடல் உழன்று வலுவேறியிருப்பவள் அந்நோ தெரியாமல் அதிவிரைவில் யாவரும் அதிசயிக்கும்படி குளி குளித்து விடுவாள். சிலர் இந்நோவுணர்ச்சியில்லாதிருக்கும்படி சாராயத்தைக் கொடுக்கும் வழக்கமுமுண்டு. மேற்சொன்ன அபின்சார விஷமாகிய குளோரபாரமே கூடாதென்றால், (alcohol) அல்கொஹால் என்னும் சாராயச் சாரப் படுவிஷப் பிரயோகத்தை மதிவாணரில் யார்தாம் ஒப்புவார்கள்? எந்நாளும் தமிழ்மக்களாகிய நமக்கு இவ்



நன்மக்கட்பேறே நலமுடைத்தென்றல், நன்றாய்க் வழக்கமே கிடையாதென்று, நவீனநாகரிக முறைவ கணக் நன்கு கவனித்துச் சாராயப் பிரயோகத்தைப் பிள்ளைப் பேறுகாலத்தில் பெரிதும் விலக்கவேண்டும்.

அடிக்கடி நோவுண்டாகும் பொழுது, பிள்ளையைச் சுற்றியிருக்கும் பை கிழிந்து, பனிநீர் வெளிப்படும். உடனே தலைதோன்றிச் சிசு பிறக்கும். நஞ்சுக்கொடியும் கிழிந்த சவ்வுகளும் வெளிப்படும். திறந்த நாளங்களிலிருந்து உதிரம் தாராளமாய் வந்துகொண்டிருக்கும். கருப்பை அதற்கப்புறமும் சுருங்குவதால் நாளங்களுஞ் சுருங்கி நிலைபெறும். அதனால் உதிரவரவு குறைந்து நிற்கும். குழந்தை பிறந்த சிலநாட்கள் வரையில், தாய்வயிற்றில் மிகுதியாய்த் தங்கியுள்ள நஞ்சு, பஞ்சுபோல் உதிரத்தோடு சேர்ந்து வெளிப்பட்டுக்கொண்டிருக்கும். இப்போதுதான் கருப்பை தன்னுடைய சுய அளவிற் சுருங்கவேண்டியது அவசியம். அப்படிச் சுருங்கினால்தான் உதிர ஊற்று உண்டாகாமல் நிற்கும். இதற்குக் கருப்பையில் கிளர்ச்சியுண்டாகும்படி குழந்தையைப் பால் குடிக்கச் செய்யவேண்டும். முதல் மூன்று நாட்களில் இரத்தம் பாலாக மாறாமலிருப்பதால் முலைக்காம்பில் வாய்வைத் துறியும் குழந்தைக்கு அதனால் ஒன்றும் பிரயோசனமிராது. பிறந்து இருபத்து நான்கு மணிகாலம் வரையில் குழந்தைக்குத் தேன் தவிர யாதொரு உணவும் வேண்டியதில்லை. குளிகுளித்துப் பதினொரு நாட்கள் வரையில் பெண்மகள் அசையாமல், அப்படியே தன் படுக்கையிற் படுத்துக் கொண்டிருக்கவேண்டும். அப்படி அசையாமல் இருந்தால்தான், ஒவ்வோரவயவமும் அததன் யதாத்தானத்தில் சேரும். உதிர ஊற்றும் நின்றுவிடும். பெண்மகள் எத்தனை வலுவுடையவளானாலும் குளி குளித்துக் குறைந்தளவு இருபது நாளேனும் உடலதிர்ச்சி பெறக்கூடிய வருத்தமான வேலைகளைச் செய்யக்கூடாது.

றது. பிரசவம் பாண்மேலும் எதிரிறங்கும் அபாயமான தாய்க்கேடும் ஆகலாம். அப்படி மூடத்தனமாய்ச் செய்வதனால், மேற்படி அவயவங்களிற் சில, நிலை குலைந்து வெளியே வந்து விடும். வந்தால் அவைகளைப் பழைய நிலையில் நிறுத்துவது வருத்தமாக முடியும்.

பிரசவித்த குழந்தையின் உடல், தாயின் தன்மையையும், உயிர், தகப்பன் தன்மையையும் பெற்றிருக்கு மாகையால், கருத்தரிக்குங் காலத்தில் தாய் தான் எத்தனையோ சித்த சுத்தியோடு, நாயகன் தவிர மற்றையோரைக் கனவிலுங் கருதாமலுங் காணாமலும் ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். கருங்குரங்கை வளர்த்து வந்த வெள்ளைப் பெண்ணொருத்தி கருத்தரிக்குங் காலத்தில், அதன் முகத்தில் விழித்ததால் கருங்குரங்கு போலவே பிள்ளை பெற்றாளாம். கிளியை வளர்த்த வேதியமாதொருத்திக்கு அதைப் போலவே குழந்தை பிறந்ததாம். ஆகையால், பெண்கள் அதிக சித்த சுத்தியோடு கணவனையேனும் மற்ற நல்லுருவங்களையேனும் கருத்தரிக்குங் காலத்திற் கருதுவதுங் காண்பதுவும் இன்றியமையாதனவா மென்று கண்டு கொள்க.

'முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே' என்றபடி சரியாய் முந்நூறு நாளளவும் வயிற்றிற் கரு வளர்ந்து தங்கியிருக்கு மென்பதற்கில்லை. முந்நூறு நாளும் சில பிண்டங்கள் தங்கியிருப்பது உண்டாகையால், நம்மகான் இங்ஙனம் அருளிச்செய்தார். ஆயினும், நாற்பது வாரங்களாகிய இருநூற்றெண்பது நாட்களே பெரும்பாலும் பெண்கள் கருத்தாங்கியிருக்குங் காலமாம். கருவுயிர்க்கு நாளை முன்னதாகக் கணக்கெடுத்துக் காண விரும்பும் ஒருத்தி, தான் (வீட்டுக்குத்தூரமான முதல் நாளிலிருந்து) குளிகுளித்த நாளை இருநூற்றெண்பதா நாளாகவோ அல்லது இரண்டொரு நாள் ஏறக்குறையவோ காண்பாள். ஆகை



யால் ஒவ்வொருவரும் வீட்டுக்குத் தூரமான நாளை நன்றாய்க் கவனித்தால், குளிகுளிக்கு நாளை முன்னதாகவே கணக்கெடுத்துத் தெரிந்து கொள்ளலாம். மார்கழி பதினைந்தின் மாதவிடாயானவள் புரட்டாசி இருபத்தைந்தில் அவசியம் குளிகுளிப்பாள். இது வீட்டுத் தூரமான நாளிலிருந்தவை மூன்று மாத முந்திய நாளோடு பத்து நாள் சேர்த்ததாகும். இதுவே எல்லாரும் கவனிக்கவேண்டிய பொதுக் கணக்காகும். இதுவே அங்கில மாதமானால், வீட்டுத் தூரமாய் நாளிலிருந்து மூன்றுமாத முந்திய நாளோடு ஏழுநாளும், அல்லது ஐந்துநாள் சேர்த்தாற் போதும். அப்போது சரியாய் இருநூற்றெண்பது நாளாகாமல் இருநூற்றெண்பத்து மூன்று நாளும் ஆகும். இப்படி இரண்டொரு நாள் ஏறியுங் குறைந்தும் அல்லது சரியாகவும் இருக்குமென்று முன்னமே கூறியுள்ளோம்.

சிலர், பிறவிக்கிடம் பண்ணுவதே கூடாத காரியமென்று சித்தாந்தம் பேசுகிறார்கள். இவர்களுடைய தாய் தந்தையரும் இப்படி எண்ணிக் கொண்டிருந்தால் இவர்கள் எப்படிப் பிறந்திருப்பார்கள்? கருவைத் தரிக்கவொட்டாமல் விலக்குவதே விவேகம்; அப்படி விலக்கினால்தான் மனைவி எப்போதும் மங்கைப் பருவமுடையவளாகவே அழகு கெடாமலிருப்பாள். இடையறாம லெந்நாளும் அவளோடு இன்பநுகரலா மென்று அவர்கள் வீணெண்ணங் கொண்டு விவேக சூனியராய்க் காலங்கழிக்கிறார்கள். தப்பித் தவறிக் கருத்தரித்து விட்டால், அதை அழிக்கத் தொடங்குகிறார்கள். இது மகா பாதகமான காரியம். இப்படிப்பட்டவர்கள் தெய்வதண்டனைக் குள்ளாகுமுன்பு அரசதண்டனைக் குள்ளாவது நிச்சயம். கருத்தரிக்காமல் விலக்குவதே அசம்பாவிதம், அசாத்திய பாவமென்றால், அது தரித்தபின் அழிக்குங் குரங்குகளுக்கு வரும் அவதியைக் கேட்பானேன்?

கருத்தரிக்காமல் விலக்குவதற்குத் துடைப்பான் குழாய்கள் (Rubber pipes) இருக்கின்றனவாம். இன்னும் என்னென்னவோ இயற்கைக்குமாறான காரியங்களெல்லாம் இருக்கின்றனவாம். புணர்ச்சி முடிவில் சற்றேனும் உணர்ச்சி வற்றி, மாடு போல ஆண்மகன் தன் விந்துவைத் தரையில் வத்துவதாம். விந்துவே விழாமல் மனத்தை வேறு வழிப் படுத்தித் தடுப்பதாம். பெண்மகளைப் புணர்ச்சி முடிந்ததும், உடனே எழுப்பி உலாத்தச் செய்வதாம், அல்லது குதிப்பதாம்; அல்லது அவளுடைய அந்தரங்கத்தானத்தை அலம்புவிப்பதாம். இவைகளெல்லாம் மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது போலாகும்.

இத்தகைய வீண்காரியங்களையெல்லாம் போலி நாகரிகமுள்ள பிறநாட்டார்க்கே சொந்த மெனவும் அந்த மெனவும் விட்டொழிக்க வேண்டும். இவைகளைப் பற்றி விரிவாய் எழுதுவது, வீண் என்றே விட்டு விடுகிறோம். நந்நாட்டாரிற் சில பாமரர்கள் தவிர வேறுயாரும் இப்படி எண்ணுவதும் பண்ணுவதும் இல்லை. ஆகையால், இதைப் பற்றி இங்கு விரிவாய் எழுதினால், தெரியாதாரும் தெரிந்து, 'நாமும் ஏன் அப்படிச்செய்து பார்க்கப்படாது?' என்று சோதனை செய்யத்தொடங்கி வேதனைக்காளாவார்கள்.

ஆகையால், 'பெறப்பெறப் பிள்ளையாசை' என்னும் நந்நாட்டார் பழமொழியை நாம் கடைப்பிடித்தொழுக வேண்டும். பிள்ளைகளைச் சரியாய்க் கவனித்து வளர்த்து விட்டால், பெற்றோரையும் மற்றோரையும் அவர்கள் ஆலம் விழுதுபோல ஆதாரவாய்த் தாங்கிக்கொள்வார்கள். அதனால் நாட்டிற்கே பெருநன்மையாம் என்பது பெரியோர் கொள்கை.



கருவுற்றிருக்கையில் ஒவ்வொரு பெண்மகளும் தன் சுகத்தைக் காத்துக்கொள்ள முயலவேண்டும். 'வாணியனுக்குக் கொடாதவன் வயித்தியனுக்குக் கொடுப்பான்' என்னும் பழமொழியின் பாங்கையறிந்து, தலைமுழுக்கு முதலியவைகளையும், நல்லகாற்று, வெளிச்ச முதலியவைகளையும் கவனித்துக் கொள்ளவேண்டும். 'ஆசனசீதம் ஜீவன் நாசம்' என்னும் ஆரியப் பழமொழிப்படி எருவாயும் கருவாயுமாகிய இரண்டிடங்களும் அதிகக் குளிர்ச்சியாய்க் கெடுதிசெய்ய வொட்டாமற் பார்த்துக்கொள்ளவேண்டும். கருவுற்றிருப்பவர்கள் அடிக்கடி எருவாய் முழுக்கு (ஆசனஸ்நானம்) செய்வது அவசியமாம். அவ்விடத்தில் தான் எண்ணிறந்த நரம்புகள் வந்து முடிகின்றன. ஆகையால் உடற்குளியலைவிட, எருவாய் முழுக்கும் கருவாய் முழுக்கு (பகஸ்நான)மே இன்றியமையாதனவாம்.

இந்த முழுக்குகளுக்காக ஒரு நாழிகைப் (இருபது நிமிஷம்) போது இளவெந் நீர்த்தொட்டியில் இடுப்பளவு நனையும்படி உட்கார்ந்திருந்தாற் போதும். கருவுற்றவள் எந்நேரமும் உழன்று கொண்டிருக்கவேண்டும். எத்தனை பணக்காரியானாலும், இருந்த இடத்தில் இருந்து அசையாமல், எல்லாம் ஆட்கள் மூலமாய் ஆய்விடுகிறதென்று சோம்பேறியாய்த் தூங்கப்படாது. அடிக்கடி மெத்தைப்படியில் ஏறி இறங்கப்படாது. கருவுற்றிருப்பவள் இறைச்சி உணவை உட்கொள்ளவே கூடாது. கொண்டால், குழந்தை மந்த மதியுடையதாகும். நந்நாட்டிற் கருவுற்றிருப்பவர்கள் அநேகமாய் மச்சம் முட்டை முதலியவைகளை உட்கொள்ளுகிறார்கள். இது முற்றுங்கூடாத காரியமென்று சற்றும் சந்தேகமின்றிச் சாற்றுவோம். ஆகையால் அவர்கள் மாந்தர்க்கு உகந்த இயற்கை உணவாகிய மாக்கறியுணவையே மகிழ்ந்து கொள்ளவேண்டும். மாக்களி உண்ண

வேண்டும். வெறுஞ்சோற்றுப் பருக்கையைப் பார்க்கிலும் களியுணவு எத்தனையோ வலுவானது. ரொட்டி (அடை) செய்து உண்ணலாம். யார்யார்க்கு எந்தெந்த மாப்பழக்கமோ, அதையே கொள்ள வேண்டும். அரிசி மாவைவிட, கம்பமா, கேழ்வரகுமா, கோதுமைமா முதலியவைகள் மேட்டிமையானவைகள். கஞ்சியிற் சவ்வரிசிக் கஞ்சியே சரியானதாம். இல்லாதார் அரிசி நொய்க்கஞ்சிதான் உட்கொள்ள வேண்டும். நெய், கற்கண்டு, தேன் முதலியவைகளும் கிடைத்தால் உசிதமாம். திராக்ஷை, கிச்சிலி, மாதுளை முதலிய பழங்களும் ஏற்றவைகளாம். பேயன்பழம், அத்திப் பழம், வாதுமைப் பருப்பு, கொட்டிக்கிழங்கு முதலியவைகளும் கிடைத்தால், அநுகூலமாம். அதிமதுரம், கண்டு பாரங்கி (சிறு தேக்கு) அமுக்கராங் கிழங்கு, ஆவாரை, ஆரை, சிறுகீரை, தூதுளை, பொன்னாங்கண்ணி, வேளை, மணித்தக்காளி, அத்திப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, வாழைப்பிஞ்சு, வாழைப்பூ, கத்தரிப்பிஞ்சு, மாம் பிஞ்சு முதலியவைகளும் சரியான உணவுப் பொருள்களாம். குங்குமப்பூவைக் கைவிடாமல், வேளைக் கிருதன்றி எடை வெற்றிலையில் உட்கொண்டுவர வேண்டும். மற்றை உருளைக் கிழங்கு முதலிய பொருள்களை மிதமாய் உட்கொள்ள வேண்டும். கருணைக்கிழங்கைத் தாராளமாய்ச் சேர்க்கலாம்.

மேற்குறித்தபடி மிதமாகவும் இதமாகவும் பதமாகவும் உணவைச் சரிப்படுத்திக் கவனித்து உட்கொண்டுவந்தால், கருவுற்றிருக்கையில் வழக்கமாய் ஆகும் வாந்திக்கும் இடமில்லாமற்போகும். மூடமதியால் எதையும் கவனியாமல், கண்டதைத்தின்னும் காரிகையே கருவுற்றிருக்கையில் வாந்தி பண்ணி வருந்துவாள்; தனிக்கு நாற்றமும் பிடிக்காமல்பித்த மேறிச் சித்தந்தியங்கித் தேம்புவாள். தூக்கமில்லாமல் ஒரே மயக்கமாய் விழுந்துகிடப்பாள். வயிற்றுப்போக்கு,



மூலநோய், திணவு, தொண்டைவலி, மண்டைவலி, கைகால் வீக்கவலி, பல்வலிமுதலிய * பல்வலிகளால் பாதவிப்பாள்.

குழந்தை பிறந்தவுடனே வெளிக்காற்று அதன்மேல் படுவதால், வாள் வாள் என்று அழும். அழாவிட்டால், சிறிது தண்ணீர் சில்லென்று தெளித்தால் அழும். குழந்தையின் உடலை மூடிப் படுக்கையிற்கிடத்துவதே சரியான ஏற்பாடாகும். பாலில்லாக் குழந்தைகளுக்குப் பசுப்பாலே பான்மையாகும். முதலில் தனிப்பால் கூடாது. ஒன்றுக் கிருபங்கு நீர் கூட்டிக் காய்ச்சவேண்டும். பால்கிடையாதேல், புழுங்கலரிசி நொய்க்கஞ்சி நீராகாரமும், கேழ்வரகு மாக்கஞ்சி நீராகாரமுங் கொடுத்துப் பழக்கலாம். வயிற்றில் எத்தனை மாதங்கள் குழந்தை தங்கியிருந்ததோ, அத்தனை மாதங்கள்தான் அது தாய்ப்பாலைக் குடிக்கலாம். பிரம்பேணி பாரந்தாங்கும் என்பதற்குத் தப்பர்த்தம் பண்ணிக்கொண்டு, குழந்தைக்கு வருஷக்கணக்காய்த் தாய்ப்பாலை ஊட்டிவருவது பேதமையாகும். அநேகமாய் அப்படிப் பல்லாண்டு பால்குடித்து வளரும் பிள்ளைகள், மந்தமதிப் பிள்ளைகளாகத் தந்தைமதியை இழந்து, மூடராகவும் காடராகவும் வெறிகொண்டும் நோய் கொண்டும் மனிதப்பிறவியை மிருகப்பிறவி யாக்கிக் கெடுத்துக்கொள்ளும். குழந்தையைக் குளிப்பாட்டுதல் உடுத்தல் முதலியவைகளையும் தக்கபடி கவனித்துவரவேண்டும். படுக்குமிடம் காற்றோட்டமாய் இருக்கவேண்டு மென்பதை மறக்கப்படாது.

குழந்தை கண்டதையும் கேட்டதையும் வாங்கிக் கொடுத்து, அதன் சுகாதாரத்தைக் கெடுக்கப்படாது. எதிலும் மிதம் இருக்கவேண்டும். வேளையறிந்து உணவாதிகள் கொடுத்துப் பழக்கவேண்டும். குழந்தை அழுகிறதென்று

* பல்வலி = பலவலி = அநேகநோய்கள்

பயந்து, அதன் பிரியம்போல் விட்டுவிடக்கூடாது. பெற்றோர்க்குப் பிரியமிருந்தால், அதை உள்ளத்துக்குள்ளே மறைத்து வைத்திருக்கவேண்டும். அன்றி, எள்ளத்தனையும் வெளியிற் காட்டப்படாது.

"பெண்டாட்டிக் குற்றதைச் சொல்லாதே பெற்ற
பிள்ளைக் கிளைப்பங் கொடுக்காதே"

என்பது பெரியார் வாக்கு. எத்தனை ஏழையானாலும் ஒருவன் பேதையானால், தன் பிள்ளைக்குச் * செல்லங் கொடுக்கிறான். இது தான் நந் நாட்டு மக்கள் கெடுவதற்கு முதற்படியாகும். தான் எத்தனை ஏழையானாலும் கடன் வாங்கியேனும் தன் மக்கள் கண்டதையுங் கேட்டதையும் வாங்கித்தந்து மகிழ்விக்கிறான்; மக்களுக்குச் செய்யும் மயிர் நீக்கும்வினை, மணவினை முதலியவைகளிலும் இப்படியே ஒருவன் கடன்பட்டேனுங் காரியமுடித்துக் குடிகெட்டு ஓட்டாண்டியாய் ஒழிகிறான். இக்கெடுவினை மிகக்கொடுவினையென்று நந் நாட்டார் உணரும் வரையில் நாடு சீர்பெறாது. பிற நாட்டார் நம்மைக் கேவலமாய் எண்ணுவது இதனாலேயுமாம். குட்டிவிளவிலை, பூலாவிலை முதலியவைகளை அரைத்துத் தடவிக் குழந்தையைக் குளிப்பாட்டுவதை விட்டு, நந் நாட்டார் பிறநாட்டாருடைய போலியாசாரத்தைக் கைக்கொண்டு விநோலியா (Vinolia) முதலிய சவுக்காரக் (soap) கட்டிகளைத் தேய்த்துக் குளிப்பாட்டிக் கெடுக்கிறார்கள். இளவெந்நீரே குழந்தைகளுக்கு எந்நாளும் ஏற்றமான குளிநீராகும். குழந்தைகளுக்குக் கண்ணுக் கெண்ணெய் கட்டுதல் கொடும் பழக்கமாம். அவைகளின் கண்களிற் கைபிடுவதே முற்றுந்தவறான காரியமாகும். எந்நாளும் குழந்தைகளுக்கு அதிகாலைக்

*செல்லம்=செல்வம்=பணக்காரனெனக் காட்டிக் கொள்ளுதல்.



குளியலே அடுத்ததாகும். மாலைக் குளியல், சோம்பேறிகளுக்கே உகந்ததாம். குழைந்தைகளுக்குத் தலைக் கவசங்களாகிய குல்லாய் முதலியவைகள் கூடாவாம். அவைகளால் வேர்வை முதலியவைகள் உண்டாகி நோய்க் கிடம் பண்ணும். தாயுடன் எந்நேரமுங் குழந்தையைச் சேர்த்துப் படுக்கவிடக்கூடாது. பால்கொடுத்த நேரம் போக மற்றை நேரத்தில் அதைத்தனிப்படுக்கையில் கிடத்திவைப்பதே உசிதமாகும். குழந்தை அழும்போதெல்லாம் தாய், பால் கொடுத்துக் கொண்டே யிருக்கப்படாது. சில சமயங்களில் அது தண்ணீர் வேண்டியும் அழும். அது தெரிந்து காய்ந்தாறின சுத்தநீரையும் சமயோசிதமாய்க் கொடுக்க வேண்டும். ஒரு மாத மேலான குழந்தைக்கு மூன்று மணிக்கொருதடவை பகலிற் பால் கொடுக்கவேண்டும். இரவில் தாய் படுக்குமுன் ஒரு முறையும், விடிய எழுகையில் மறு முறையுந்தான் பால் தரவேண்டும். அதைப் பாலுக்காகவே அருகிற் படுக்கவைத்துக்கொண்டிருப்பது முழு மூடத்தனமாகும். தாயில்லாக் குழந்தைகளுக்குப் பசுப் பாலைக்காட்டிலும் பாங்கான உணவு வேறொன்றில்லை. குருத்துக் குழந்தைகளின் கைகால் முதலிய அவயவங்கள் சூடாகவே இருக்கவேண்டுமாகையால், அவைகளைப் பருத்தியாடையால் மூடிவைக்கவேண்டும். நந் நாட்டார்க்குக் கம்பளி அநாவசியம்.

இவ்வதிகாரத்தில் நன்மக்கட் பேறே நலமுடைத்து என்றுகொண்டதனால், மக்கள் என்பது ஆண்பெண் இருபாலாரையுங் குறிக்கும். சிலர் இதை ஆண்மக்களென்றே ஒரு தலையாய்க்கூறுவர். இவர்களைப்போலவே திருக்குறளுரையாசிரியரிற் சிறந்த வேதியராகிய பரிமேலழகரும், மக்களைப் பெறுதல் என்றிருக்கவேண்டிய திருக்குறள் ஏழாமதிகாரத்தைப் புதல்வரைப் பெறுதல் என்று மாற்றிவிட்டா

றென்றும் சாற்றுவது உண்டு. அதற்கேற்க அவ்வுரையாசிரியர் அவ்வதிகார முகப்பில்,

"*இருபிறப்பாளர் மூவரும் இயல்பாகச் செய்யுங் கடன்கள் மூன்று: அவை, கேள்வியாலுணர்ந்து செய்ய வேண்டிய முனிவர் கடன், வேள்வியாற் செய்யவேண்டிய தேவர் கடன், புதல்வரைப் பெறுதலாற் செய்யவேண்டிய தென்புலத்தார் கடன் என்பனவாம். தென் புலத்தாராகிய பிதிர்க்கடன் புதல்வரைப் பெறினல்லது, செய்யமுடியாது. ஆகையால் இவ்வதிகாரம் புதல்வரைப்பெறுதல் என்னும் பெயர்த்து"

என்று கூறி யிருக்கின்றார். அக்கால வழக்கப்படி வேதியராகிய பரிமேலழகர் பகர்ந்தாரேனும், அது இக்கால வேறுபாட்டுக்குப் பொருந்தாது. இருபிறப்பாள (Twins) ரென்னும் முதல் மூன்று வகுப்பாரே, இப்படிக் கடன் செயற்குரிய ரென்றால், மற்றைய நான்காங் குலத்தவருடைய கதியென்ன? ஐந்தாங் குலத்தவருடைய விதியென்ன?

'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்'

என்றும்,

'மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு'

என்றும் வகுத்த நாயனார், ஒருகாலும் சாதியளவாய் நீதி ஓதியிருக்கமாட்டார். முதன் மூவகுப்பாரே தத்தம் கருமாதிகட்காகப் புதல்வரைப் பெற்றுக்கொள்வதற்குரிய ரென்றால், மற்றையோர்க்குப் புதல்வரே வேண்டியதில்லை; அதனாலேயே கலியாணமும் வேண்டியதில்லை; அப்படிக் கலியாணம் பண்ணிக்கொண்டாலும் அவர்கள் புதல்வி

* வேதியர், அரசர், வணிகர் ஆகிய மூவர்.



யரையே பெறவேண்டுமென்று விபரீதார்த்தத்திற்கிடமாய்ப் பரிமேலழகர் கூற்று மற்றவர்களுக்குக் கூற்றாகும். இந்நூலில் நாம் இதற்கு முந்திக்கூறிய *ஒரு குறளுரையில் பரிமேலழகரைப்பற்றிப் பொது நோக்கமுடையவராகக் கொண்டதுபோல, இங்குங்கொள்வதற் கிடமில்லாமையால் வருந்துகிறோம். ஆகையால் இவ்வதிகாரத்துக்கு யாமிட்ட நன் மக்கட்பேறே நலமுடைத்து என்னும் பெயரைப் போலவே, நாயனார் குறளின் ஏழாமதிகாரமாகிய புதல்வரைப்பெறுதல் என்பதூஉம், மக்களைப் பெறுதல் என்று மாறி வழங்கவேண்டும்.

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்பதிலுள்ள மக்களென்னும் பொதுப்பெயரை நாம் இருபாலார்க்கும் இயைந்ததாக்கொள்வோம். ஆணும் பெண்ணும் அபேதம் என்றும், எண்ணீர் இறைப்பதும் மண்ணீர் இறைப்பதும் அக்காலத்து முதன் மூன்று சாதியாசாரமேயன்றி யார்க்கும் பொதுவாகிய நீதியாசாரமன்று என்றும் கொண்டு அதை யொரு பொருளா மதியோம். மேலைக் குறளில், 'மதிவாணராகிய மக்களைப் பெறுவதினும் வேறு பேறு இல்லை' என்றதை யிருபாலார்க்கும் உகந்ததாக் கொள்ளவேண்டும். நன்மக்கட் பேறே நலமுடைத்து என்று கொண்டதனாலேயும் கண்டதனாலேயுமே நாயனார், 'பழிபாவத்துக் கஞ்சி நடக்கும் மக்களைப் பெற்றால், எழு பிறவியிலும் ஒருவனைத் துன்பந் தொடாது' என்னுங் கருத்தமைத்து,

* 'தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொருள், தத்தம் வினையான் வரும்' என்னுங்குறள்.

“எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்,
பண்புடை மக்கட் பெறின்” என்றார்.

‘தேவாமுதத்தைவிட மிகவும் இனிமையானது எதுவெனில், ஒருவர் தாம்பெற்ற மக்களுடைய சிறு கை துழாவிய கூழை உண்பதாம்’ என்னுங் கருத்தமைந்த பின் வருங் குறளையுங் கவனிக்கவேண்டும் :

‘அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்’

இதிலும் மேலையிருகுறளிலும் போலவே மக்கள் என்று பொதுப்பட வந்திருப்பதைக் கண்டுதெளிக. ஆண்மக்கள் அளாவிய கூழ்தான் அமுதினும் இனிதாகும்; பெண் மக்கள் அளாவிய கூழ், வேம்பினும் கசப்பாகும் என்று இதற்குப் பரிமேலழகர் உரைகொண்டாரென்றால், நாயனார் குறளுக்கவர் உண்மை உரை கண்டாரென்று எங்ஙனம் உரைக்க இயலும்? எல்லாங் காலத்துக்கேற்ற கோலம் என்று கொள்க—

இதுபற்றியே புறநானூறு என்னுஞ் சங்க நூலிலும்:
*           *           *           *

சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து
மயக்குறு மக்களை           *           *

என்றும், புகழேந்தியார் பாடிய களவெண்பாவிலும்,
‘மக்களை யிங்கில்லாதவர்’ என்றும்,

ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவாகிய மக்களென்றே வந்திருப்பதையுங் கவனித்துக்கொள்க.

“மக்கள், மெய்யைத் தீண்டுதல், பெற்றோருடைய உடலுக்குச் சுகமாகும். அவர்களுடைய சொல்லைக் கேட்டல், அவர்கள் காதுக்கு இன்பமாகும்” என்னுங் கீழ்க்



கண்ட குறளிலும் மக்களென்றே ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக வந்திருப்பதை உய்த்துணர்ந்து கொள்க:

‘மக்கள்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு’

இந்நூலில் இதற்கு முந்தியே நாம் கூறியுள்ள

‘தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தத்தம் வினையான் வரும்’

என்ற திருக்குறளிலும் மக்கள் என்றே பொதுவாய் வந்திருப்பதையுங் கவனித்துக் கொள்க.

“தம் மக்களுடைய மழலைமொழியைக் கேளாத் தாய், தந்தையர், புல்லாங்குழலோசையையும் யாழோசையையும் செவிக்கினிமை யென்பார்கள்” என்னுங் கீழ்க்கண்ட குறளிலும் மக்களென்றே பொதுவாக வந்திருப்பதைக் காண்க:

‘குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்’

“தந்தையானவன் தன் மகனுக்குச்செய்யும் நன்றி, கைப்பொருள் சேர்த்து ஆக்கி வைப்பதிலும் பிறவற்றிலும் இல்லை; கற்றோர் சபையில் அவனைத் தலைவனாக்கிவைப்பதிலேயே யிருக்கிறது” என்னுங் கருத்தமைந்த கீழ்வரும் குறளில் மட்டும் மகன் என்று சிறப்பாய் வந்திருக்கிறது:

‘தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்’

இதிலும்,

‘ஒரு மொழியொழி தன்
இனங்கொளற் குரித்தே’

என்றபடி மகன் என்றது மகளுக்கும் ஆமென்று குறிப்பிற் கொள்ளவேண்டும்.

அவனுக்கு உடல் நோய் இல்லையேனும், மதி நோயாகிய மடமையேனுங் குடிகொண்டிருக்கும். இதற்கு உதாரணமாக நாட்டுப் புறங்களில் ஏற்றம் இறைக்கும் தொழில் செய்வோனையும் நகரங்களில் சிற்றுண்டிசாலை (Coffee club) களில் இட்டலி காப்பி உண்ணும் மட்டியையும் கூறலாம். நாட்டுப் புறத்தானேனும் தின்னும் தீனிக்குத் தக்கபடி உழைக்கிறான். நகரத்து மட்டி உழைப்பதும் இல்லை. எந்நேரமும் காப்பி குடிக்கும் பழக்கத்தால், கள் குடிப்பவனைவிடக் கடையனாய்க் காலத்தைக் கழித்துக் கெடுகிறான். இவனே நான்கு பொழுதுண்ணும் ரோகிக்கு உதாரணமாய் மனிதப் பிறவியை விலங்குப் பிறவியாகக் கெடுத்துக் கொள்ளுகிறான். இவனுக்கெப்படி மிதமென்பது வரும்? மிதமில்லாமல் உண்ணும் ஒவ்வொருவனும் பதங்குலைந்து பன்னோய்களுக் காளாய்க் கெடுவது நிச்சயம்.

ஆகையால், மனிதப் பிறவியிற் பிறந்த ஒவ்வொருவனும் எதிலும் மிதத்தைப் பின் பற்றவேண்டும். அதிலும் உண்பதில் மிதம் (temperance) என்பது இன்றியமையாதது. நந்நாட்டார் இதைக் குருகுல வாசத்திலும் கன்னிமாட வாசத்திலும் ஆண் பெண் இருபாலார்க்குங் கற்பிக்கவேண்டும். இல்லறத்தான் ஒவ்வொருவனும் இருபோதுண்பானாகையால், இரவுண்டது நன்றாய்ச் செரிக்கும்படி அதிகாலையில் எதுவும் உண்டு பழகப்படாது. நிசித் தண்ணீரும் பழஞ்சோறும் சோம்பலை வளர்க்குமாகையால், அதிகாலையில் அவைகளை உடல் உழைப்புக் கொள்வோனே உட்கொள்ளலாமன்றி மனவுழைப்புக் கொள்ளும் வாத்தியார், வர்த்தகன், கணக்கன் முதலியோர் உட்கொள்ளவே தகாது. பகல் வரையிலும் வயிற்றைக் கலகல வென்று காலியாகவே வைத்துக் கொண்டிருக்கப் பழகவேண்டும். அப்போது தான் நோயற்ற வாழ்வு வாழமுடியும்.



காலையில் எழுந்ததும் கண்டதைத்தின்று காப்பி குடிக்கும் கெடுவழியிற் செல்வார்க்கு மேற் குறித்த நடுப்பகல் உண்டிவருத்தமாயிருக்கும்.

'பழக்கம் கொடியதுயார்;
பாறையினுங் கோழி
கிழிக்கும் பொதியைக்கிளறும்'

என்றபடி எல்லாம் பழக்கத்தாற் படிந்திருக்கின்றது. நோயற்ற வாழ்வு வாழவேண்டுவோர் ஒவ்வொருவரும் இது கண்டபிறகேனும், காலையிலெழுந்தவுடனே கண்டதைத் தின்று காப்பி குடிக்கும் தீப்பழக்கத்தைத் *தீப்பழக்கமா அஞ்சி அகற்றவேண்டும். நோயற்ற வாழ்வு வாழவேண்டுமானால், காலையில் எழுந்தவுடனே கடு நடை கொள்ளவேண்டும்; மண்வெட்டி யெடுத்துக் கொத்தவேண்டும்; ஏற்றமிறைத்து மாங்களை வைத்துப் பயிராக்கவேண்டும்; மடைமாறிப் பயிருக்குப் பாய்ச்சவேண்டும். பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சினால் உயிருக்கு ஆதாரமாகும். உடலில் வேர்வை நீர் சொட்டும்படி உழைக்கவேண்டும். உழைப்பவன் பிழைப்பவன் என்பதை ஒவ்வொருவனும் ஊகித்துணரவேண்டும்.

எந்நேரமும் பொருள், பொருளென்று எண்ணி யெண்ணி நெஞ்சம் புண்ணாய் உட்கார்ந்த இடத்திலேயே உடல் தேய்ந்து; அல்லலில் தோய்ந்து, அவதிக்காளாகக் கூடாது. மிதமிஞ்சிப் பொருளாசை கொள்வதால், உடற் சுகம் மிதமிஞ்சிக் கெட்டு நோய்க்கிடம் பண்ணிவிடும். எந்நேரமும் நம்மக்களுக்கு உடல் உழைப்பையே உகந்த உழைப்பாப் பழக்கவேண்டும்.

* தீ + பழக்கம் = நெருப்புப் போலச் சுடும் பழக்கம்

காலையில் உழைத்து முடிந்தவுடன், ஒவ்வொருவனும் உடலைக் கழுவுவது (குளிப்பது) முக்கியமான காரியம். மயிர்க்கால்கள் தோறும் இரவெல்லாம் உடல் முழுதும் வெளியான உள்ளழுக்கு அலம்பாமற் போகாது. மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் குழந்தை, குமரன், கிழவன், குமரி, கிழவி முதலிய யாவரையும் இவ்வழுக்குத் தோய்ந்து நோய்க்கிடம் பண்ணுவது உண்மையான விஷயம். இதற்குக் காலைக் குளியலே ஏற்ற மருந்தாம். உழைக்கும் வேலையை மேற் கொண்டிருப்பார் ஒவ்வொருவரும், இவ்வதிகாலைக் குளியலைப் பகலில் வைத்துக்கொள்ளலாம். மற்ற ஆண் பெண் அடங்கலும் அதிகாலையிற் குளித்தே தீரவேண்டும்.

சூரியன் புறப்படு முன் அதிகாலையில் எழவேண்டிய அவசியத்தைப் பற்றி முன் அதிகாரத்தில் மொழிந்துள்ளோம். ஆகையால் ஆண் பெண் இருபாலாரும் கோழி யெழும்போது, கூட எழுந்திருக்கவேண்டும் என்னும் இயற்கைக் கட்டளையை நன்றாய் அறிவார்கள். எழுந்தவுடனே ஆணும் பெண்ணும் எத்தனை ஏழைகளானாலும் அல்லது பணக்காரரானாலும் உழைப்பை நாடவேண்டும். கிழவர்க்கும் குழந்தைக்கும் உழைப்பில்லையாகையால், அவர்களை, உடனே குளிப்பாட்டவேண்டும். வேண்டுமானால் அவர்களைக் குளிப்பாட்டினவுடனே, கொஞ்சம் நீராகாரம் முதலிய குடிப்பிக்கலாம். அவர்களுக்கும் உடலமைப்புக்குத்தக்கபடி உழைப் பிருக்கவேண்டும். மற்றவர்கள் காலையுழைப்பு முடிந்தவுடனே உடற்குளியலைக் கவனிக்கவேண்டும். 'கூழானாலும் குளித்துக் குடி' என்னும் பெரியார் வாக்கு வெறும் வாக்கன்று. 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்று அவர்களே வகுத்துள்ளார்களாதலால், எத்தனை கேவலமான சிறு கந்தையானாலும் அதைத் தோய்த் துலர்த்தியே கட்டிக் கொள்ளவேண்டும். உடற்



சுத்தம் உடைச் சுத்தம் இல்லாதவன் உளச்சுத்தம் உடை
வனாயிருக்கமாட்டானென்பது உத்தமருடைய கொள்கை.
இல்லற வாழ்க்கையிற் போகியாயிருக்கும் ஒவ்வொருவனும்
உடற் சுத்தத்தையும் உடைச் சுத்தத்தையும் கவனித்தால்
தான் உளச் சுத்தத்தைக் கவனிக்க அருகனாம்படி நோயற்ற
வாழ்வு வாழ முடியும். இல்லையேல் அவன் நோயற்ற வாழ்வே
சால் புடைத்தென்பதைக் கைவல்லியமாய்க் காணமுடியாது.

இது பற்றியே நந்நாட்டுப் பெரியார் உடற் சுத்தத்தை
யும் உடைச் சுத்தத்தையும் மதசம்பந்தமான ஆசார
மென்று சொல்லி வைத்தார்கள். கடவுளுக்குப் பூசை செய்வ
தானால், குளித்துத் தோய்த் துலர்ந்த வேட்டி கட்டிக்
கொள்ளவேண்டுமென்றெழுதி வைத்தார்கள். இப்படி மதச்
சின்னமாய்க் குளியலையும் துவைத்த ஆடையையும் புகுத்தி
வைத்தால்தான், அதை முன்னிட்டேனும் நந்நாட்டார் உட
லுடைச் சுத்தங்களைப் பெற்று நோயற்ற வாழ்வு
வாழ்வார்களென்பது அவர்கள் கொள்கை. குளியாமலும்,
துணி துவையாமலும் பூசைசெய்தால், சாமி, கண்ணைக் குத்தி
விடுமென்றும் அவர்கள் பயங்காட்டி உடலுடைச் சுத்தங்க
ளுடைய நயங்காட்டி வைத்தார்கள். ஆகையால் ஒவ்வோ
ராணும் பெண்ணும் உடல் உடைச் சுத்தங்களைப் பெரு
நோக்கமாக் கொள்ளவேண்டும். உடல் உடைச் சுத்தங்
களைக் கவனித்துப் பழகுமவனே, பிறகு தன்னுடைய உளச்
சுத்தத்துக்கும் வழிதேடுவானென்பது மேலோர் துணிபு.
'நோயற்ற உடலில் நோயற்ற உள்ளம்' (A sound mind in
a sound body) என்னும் பெரும் பழமொழியின் அரும்
பொருளை அனைவரும் ஆழ்ந்து யோசித்தறிய வேண்டும்.
கோலஞ் சிறந்தபடியே நற்குணமுஞ் சிறக்குமென்ற
பெரியார்வாக்கைப் பெரிதும் போற்றவேண்டும். ஆகையால்,

குணநலம் பெறவேண்டு மொவ்வொருவரும் தத்தம் உடலுடைகளை அழுக்கின்றி அலம்பிக் கொள்ளவேண்டும்.

சிலர் இரவிற் படுக்கு முந்தியும் இரண்டா முறையாக, வேனிலிற் குளிப்பதும் உண்டு. இது காலதேசவர்த்தமானங்களைப் பொறுத்தது. ஆகையால் காலைக்குளியலே எந்நாளிலும் எந்நாட்டிலும் இன்றியமையாததாகும்.

நோயற்றவாழ்வே சால்புடைத்து என்பதைக் கைவல்லியமாகக் காணவேண்டும் ஒவ்வோர் ஆண்மகனும் பெண்மகளும் பஞ்சபூத சுத்தத்தைக் கவனித்துக் கொண்டால்தான், பஞ்சேந்திரிய சுத்தத்துக்குப் பாத்திரர்களாவார்கள். பஞ்சேந்திரிய சுத்தம் இருந்தால்தான், மனச்சுத்தம் சிறந்திருக்கும். மனச்சுத்தம் இருந்தால்தான் இனச்சுத்தமான நல்லார் நேசமும் பிறநலமும் சித்தியாகும். இந்தச் சித்தியே ஜீவன் முத்தியாகும்.

பஞ்சபூத சுத்தத்தில் முதலாவது மண், அல்லது நிலம். இதைப்பற்றி முந்தியே மொழிந்துள்ளோம். இடவசதியே எல்லாவசதிகளுக்கும் ஆதாரமானது. குடியிட வசதியே மற்ற வசதிகளுக்கெல்லாம் தாய்போன்றது. ஆகையால், தக்க இடந்தேடி ஒவ்வொருவரும், மாடிவீடுதேடி வாழவேண்டு மென்பதில்லை, குடிசை கோலிக் குடியிருக்கலாம். ஆங்காங்கு அவரவரும் தத்தமக்கு வேண்டிய உணவாதிப் பொருள்களைப் பயிரிட்டுக்கொள்ள முயலவேண்டும். எத்தனை யேழையானாலும் ஒருவன் கூலிக்கேனும், தானே பயிரிட்டுண்பதே ஆரோக்கியமாம். இதுபற்றியே அவ்வையார்,

'நெற்பயிர் விளை' என்றார்.

நகத்தில் அழுக்குப்படாமற் செய்யும் எழுத்து வேலை, நியாயவாத வேலை முதலிய வேறு சோம்பல் வேலைகளை



விடப் பயிர்வேலையே பான்மையானதாம். நெசவுத்தொழிலே புண்ணியத்தொழிலாம். இது குறித்தே அவ்வையாரும் 'பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்' என்றார். இப்படி மண்வசதியைக் குடியிருக்கவும் பயிரிடவும் தேடிக்கொள்பவனே சரியான இல்வாழ்வான் ஆவான். இவனையே குடியானவன் என்று கூறுவார்கள். இவனே, விளைவில் மிகுந்திருந்தானானால், வியாபாரியுமாவான். வியாபார மிகுந்தால், இலக்ஷாதிகாரியுமாவான். அதற்கு மேலுமானால், கோடீச்சுரனாவான்.

இரண்டாவது நீர் வசதி: இதிற்கழுவு நீர் முதலியவைகளும் பயிர்பாசனத்துக் காதாரமான மற்ற நீர்களும் அடங்கியிருக்கின்றன. உண்ணு நீர் எப்போதும் ஊற்றுநீர், ஓடு நீராகவே யிருக்கவேண்டும். ஓரிடத்தில் தங்குநீர் எப்போதும் குடிக்கத் தயங்கு நீராகவே கெட்டிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. பயிர்ப்பாசனங்களுக்கு மாத்திரம் தங்குநீரும் தகுதியானதாகும். ஆகையால், ஆற்று நீரைக் கால்வாய் வழியாய் மடக்கிக்கொணர்ந்து ஏரிகளிற்சேர்த்துக் கொள்ளுகிறார்கள். மழைநீர்வெள்ளம் ஏரிகளிற் சேர்வதை எல்லாரும் உணர்வர்.

தற்காலத்து நகரவாசங்களில் உண்ணீர்வசதியே கெட்டிருக்கின்றது. இருப்புக்குழை வழியாய்க் கொண்டுவந்து குடிகளுக்குக் குடிநீர் ஊட்டுவது தற்காலத்திய நகரச்சபையாருடைய வழக்கமாயிருக்கிறது. அது காற்றோட்டமா யில்லாமல், பூமிக்குள் புகுந்து வருவதால் அநேகந் தொத்துநோய்களுக்குப் பிறப்பிடமா யிருக்கிறது. இதைத்தடுப்பதற் கவர்கள் எத்தனையோ முயன்றும் பலனில்லாமற்போகிறது. சென்னைமுதலிய பெருநகரங்களில், இதுவே பெருங்குறையாயிருக்கிறது. குழைநீர் குடிநீராயில்லாவிட்டாலும் குடி

களுக்கு நீர்ப்பஞ்சம் உண்டாய்விடுமென்பது அவர்களுடைய கோட்பாடு. இப்படி நீர்ப்பஞ்சமானாலும் அஞ்சாமல் தடுத்துக்கொள்ளலாம். ஆனால், குழைநீரில் உண்டாகும் புழுக்களால் வரும் தொத்து வியாதிகளையும் தத்து வியாதிகளையும் விலக்குவதென்றால், சுகாதாரக் கூட்டத்தார்க்கும் பிறர்க்கும், பெருங்கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் இடவசதியாயுள்ள நகரங்களிலும் பிறவிடங்களிலும் பழையபடி ஊற்று நீராகிய கேணிநீரையே குடிகளுக்கு ஊட்டுவது சுகாதாரத்தலைவருடைய கடமையாகும். பழையபடி கேணிநீராகிய ஊற்றுநீருண்பதே நகரவாசத்திலும் நாட்டுவாசத்திலும் நலஞ்சிறந்ததாம்.

எந்நாளிலும் உண்ணீர் காய்ந்தாறின தெண்ணீராயிருப்பதே சிறந்ததாகும். சிலர் சோம்பலை மேற்கொண்டு மூடமதியால், குழைநீரை அப்படியே பிடித்துக்கொண்டு வந்து பச்சையாய்க் காய்ச்சி ஆறவிடாமலே அதியின்பமாய் எந்நேரமுங் குடித்துக்கொண்டிருப்பார்கள். எந்நீரினும் வெந்நீரே நன்னீராமென்பர் மேலோர்.

பாலும் குழந்தைகள் தவிரப் பிறர்க்குப் பயன்படாதென்பர் அமெரிக்கன் மருத்துவக்கலைஞானியாராகிய டாக்டர் கூனி யென்பார். எண்ணெ யிட்டுக்கொள்ளும் போதும் எந்நாளும் வெந்நீரே நன்னீராம்.

'சனி நீராடு' என்றபடி சனிக்கிழமையிலும் கூடுமானால் புதன்கிழமையிலும் எண்ணெயிட்டு வெந்நீரிற் குளிக்க வேண்டும்.

'சனி புதன்தனி லெண்ணெய்
வெந்நீரில் மூழ்குவார்.'

என்றார் ஒரு பண்டிதர். எப்போதும் உடம்பைக் கழுவு நீரும் காய்ந்தாறின நீராயிருப்பதே சுகாதார



மாகும். தொத்து நோய்கள் பிரவர்த்தித் திருக்குங் காலத்தில் வெந்நீரே எல்லாவற்றினும் சிறந்ததாகும். குப்பைகளுங் கூளங்களும், இலைகளும் சருகுகளும் வீழ்ந்து அழுகு நீர் கங்கை நீரேனும் கூடாதாம். எங்கும் எந்நாளும் காய்ந்தாறின சுத்த நீரே நன்னீராம். ஆகையால், பானத்துக்குச் சோடா முதலியவும் சாராய முதலியவும் விலக்கத்தக்கவைகளாம். காப்பிக்குடியையுங் கட்குடிக்குச் சமானமென்று ஒதுக்கவேண்டும். பெண்கள் கருவுற்றிருக்கையிலும் ஆண்கள் நோயுற்றிருக்கையிலும் தோஷமில்லையென்று சிலர் சாராயமென்னும் விஷநீரைக் குடிப்பிக்கிறார்கள். அல்கஹால் (alcohol) என்னும் நஞ்சு, அதிற் பொதிந்திருப்பதனாலேயே, குடலையும் உடலையும் சுட்டெரிக்கிறது. அதனால் விஷம் அங்கமெல்லாம் பாய்ந்து, அநேகர் அகால மரணம் அடைகிறார்கள். எப்படியிருந்த போதிலும் குடியானது குடியைக் கெடுத்து, மடியைப் புகுத்திவிடும். உறங்கினவர், செத்தவராவது போல, கள்ளுண்பவர் நஞ்சுண்பவராவா ரென்றார் நாயனார்.

'துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'

என்பது குறள்.

சிலர், 'சாற்றில் வேண்டாம் சேற்றில் போடு' என்பது போல, சாராயங் குடிப்பது தான் தவறு; கள்ளுண்டால் உடம்புக்கு நல்லது; குளிர்ச்சியாயிருக்குமென்று, மிடா மிடாவாய்க் குடிப்பது வழக்கம். பனங்கள் வெய்யிலுக்குக் குளிர்ச்சி யென்று, தித்திப்பாய் அதிகாலையிற் குடிக்கிறார்கள். சாராயம் கழுதை மூத்திரத்திற்குச் சமானமானால், கள் எருமை மூத்திரத்திற்குச் சமானமாகும். இதுவே இரண்டிற்குமுள்ள வித்தியாசம். எந்த விதத்திலும் மயக்கப் பொருளை உட்கொள்வது மனிதத்தன்மையன்று.

சிலர், நாளெல்லாம் வருந்தியுழைப்பவர் மாலையிற் சிரமந் தோற்றாதபடி கொஞ்சங் கிரமமாய்க் குடிக்கலா மென்கிறார்கள். இதைப் பற்றிக் காந்தியடிகள் பல விதத்திலும் கண்டித்துப் பேசுகிறார். யார்க்கும் எந்த விதத்திலும் குடியென்பதே கூடாது என்கிறார். வருந்தியுழைக்குங் கூலிக்காரன், குடியினாலேயே சிரமபரிகாரந் தேடிக் கொள்ள வேண்டு மென்பதில்லை. மாலையில் வீடு சேர்ந்ததும் அவன், வெந்நீரிற் குளித்தால் சிரமபரிகாரமாகும்; குடிக்கும் பணத்தைக்கொண்டு நல்ல காய், கிழங்குகளை வாங்கிக் கறி சமைத்து உண்ணலாம். ஓர் ஓயாக் குடியன், குடிவெறியால், மண்ணெண்ணெயைக் குடித்து மாண்டகதை பொய்யல்ல; மெய்யாய் நடந்ததுதான். இன்னும் இதைப் பற்றி விரிக்கிற் பெருகும்.

காந்தியடிகளின் அபிப்பிராயப்படி, இந்தக் * கள் வகையால், நல்ல வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியவைகள் செய்யலாம். இவைகளால், நல்ல வியாபாரம் நடக்கும். இதைப்பற்றி ஆங்காங்கும் கூட்டத்தார் ஏற்பட்டு, தீர்க்காலோசனை செய்யவேண்டும். முக்கியமாய்க் குடிவிலக்குங் கூட்டத்தார், முதலில் இது விஷயத்திற் கவனஞ் செலுத்திப் பனை, தெங்கு, ஈந்து முதலியவைகளின் பாளைச் சாற்றால் வெல்லம், சர்க்கரை முதலியன செய்யும் சுலபவகையைக் கண்டுபிடித்துக் குடிகளுக்கு வழிகாட்டினால், அவர்கள் குடியையும் மடியையும் ஒழித்து, வர்த்தகம் பெருத்துப் பணக்காரராவார்கள். இவர்கள் இப்படிச் செய்யின் நோயற்ற வாழ்வு வாழலாம். கதர் ஆடை உற்பத்தி வளர்ந்தால், பிறநாட்டுத் துணியிறக்குமதி எப்படித் தளருமென்று கண்டுகொண்டார்களோ, அப்படியே

* தெங்கு, பனை, ஈந்து முதலியவைகளின் சாறு.



பாளைச்சாற்றால், புளித்த கள்ளுற்பத்திசெய்து, அந்தக் குடியால் குடி கெடுவதைவிட, வெல்லஞ் சர்க்கரை செய்து வெளிநாட்டுக் கனுப்பினால், நந்நாடு சீர்பெறு மென்றுணர்ந்து உழைக்கவேண்டும். எண்ணாண்டுப் பயிராகிய ஈந்து மாப்பயிரே அதிக சுளுவான பாளைச் சாற்றுக்குகந்த பயிராகும். தண்ணீர்ப் பாசன முதலிய கஷ்டமில்லாமற் பயிராகக்கூடிய மரங்களில் ஈந்தே முதன்மையானது. இரண்டாவதாகப் பனையைப் பகரலாம். மூன்றாவதாகத் தென்னையைச் செப்பலாம். இவை மூன்றும் மும்மூர்த்தி சொரூபங்கள். ஈந்து உருத்திர சொரூபம்; பனை விஷ்ணு சொரூபம்; தென்னை பிரம சொரூபம். இத்திரிமூர்த்திகளின் அநுக்கிரகத்தை எக்குலத்தாரும் பெறலாம். எப்போது? அவர்களை நல்லபடி பூசிக்கும்போது. அப்படியின்றி அவர்களுக்குக் கோபமூட்டினால் எப்படி யொருவன் கெட்டழிவானோ, அப்படி, அவர்கள் சொரூபங்களாகிய ஈந்து, பனை, தெங்குகளின் சாற்றையிறக்கிச் சர்க்கரைமுதலிய நற்பலன் பெறாமல், அதைப் புளிப்பேற்றிக் கள்ளெனவுண்டு குடியேறுவதால் நந்நாட்டிற் குடி மூழ்கிப்போகிறது. செல்வந் தளர்கிறது. சர்க்கரையால் மட்டும் நந்நாட்டார் பிறநாட்டார்க்குப் பதினைந்து கோடி ரூபா பலன் தருகிறார்கள். ஏராளமாய்க் கரும்பு, ஈந்து, பனை, தெங்கு பயிராகக் கூடிய பாங்கான நில வசதியிருந்தும், கொஞ்சமேனும் மதி வளமற்ற நந்நாட்டார் ஏனோ, இப்படிப் பிறநாட்டாரைக் கொழுக்கவைக்க வேண்டும்? வெளிநாட்டிலிருந்து எது வந்தாலும், அதை மிகுவிலை கொடுத்து வாங்குவதே பெருமை யென்றெண்ணும் நந்நாட்டார்க்கு, மூடவெறி யகலவேண்டும்.

சோடாவைப்பற்றி அதிகமாய் எழுதவேண்டியதில்லை. சோடாவும் அதைச்சேர்ந்த மற்றப் பானவகைகளும் இயக்

திரத்திற் செய்தனவாகையால், அந்தக் காரணத்தாலேயே அவைகளை நிந்தையாக அற விலக்கவேண்டும். இயந்திரத் தந்திரத்திற் செய்த எதையும் நந்நாட்டார் சற்றேனும் மதிக்கக்கூடாது. சோடா முதலியவைகளை விட, நந்நாட்டுப் பழைய வழக்கமான நீர்மோர், பானகம், சுக்குநீர், மிளகு நீர், கொத்துமல்லிநீர், வெந்நீர், முதலியவைகளே உகந்த குடிநீராம். விஷநீரேனும் கண்ணாடிப்பாத்திரத்திலிருப்பதனாலும் குப்பியிற் பளபளவென்றும் தளதளவென்றும் தோன்றுவதாலும் மதிமோசம் போகப்படாது. துருக்கர் வழக்கமான புளிப்பு மாதுளைப்பானகம், எலுமிச்சம்பானகம் (ஷர்பத்) நன்னாரிப்பானகம், தாமரை மலர்ப்பானகம், ஆவாரைப் பானகம் முதலியவைகள் அநேக நன்மைகளுக்கு ஆதாரமானவைகளாம். அவைகளைச் செய்முறையைக் கைமுறையாகக் காணவேண்டுவார், எமக்கெழுதித் தெரிந்து கொள்ளலாம். அன்றி, அவைகளில் எது வேண்டுமானாலும் எமக்கு எழுதிப் பெறலாம்.

காப்பிக் குடியைப்பற்றியும் அதிகமாய் எழுத வேண்டியதில்லை. சாராயக்குடி, கட்குடிகளைப் போலவே காப்பிக்குடியையும் பற்றறத் தொலைக்கவேண்டும். நந்நாட்டார்க்கு எந்நாளும் அது அடுத்ததன்று. ஆவாரம்பூ, அமுக்கராங் (அசுவகந்தி) கிழங்கு, கொத்துமல்லிவித்து ஆகிய மூன்றையும் பொடித்து, கியாழம் இறக்கிப் பசுப்பாலும் சீனியும் சேர்த்துப் பருகலாம். இதுவே நமக்குகந்த காப்பிக் குடியாகும். பிறநாட்டாரைப் பார்த்து, விஷம் (Alcohol) உள்ள காப்பியினும், தேயிலையினும் கியாழம் இறக்கி ஏனோ நாம் குடித்து வெறித்துக் குடிகெட்டுப் போகவேண்டும்? மதுவிலக்குச் சங்கத்தார் இதையுங் கவனித்துச் சென்னை, கும்பகோண முதலிய பெரு நகரங்களிலுள்ள காப்பிக்குடி கடைகளை ஒழிக்க வகைதேட



வேண்டும். இதுபற்றி, எந்நண்பர் ஒருவர் பண்டிதராயிருந்தும் காப்பிக்குடி மயக்கத்தில் ஆழ்ந்து வீழ்ந்து கரையேறமாட்டாமல் வருந்தினராகையால், அவர்க்கு யாமெழுதிய பின்வருங் கண்ணிகளைப் பெயர்த்தெழுதுகிறோம். வாசிப்போர் மனப்பாடம் பண்ணுக:

காப்பிக் குடிவிலக்கிக் காலையிலே இட்டலியை
நாப்பியெனமதித்து நான்வாழ்வ தெந்நாளோ (க)

இட்டலியு மோர்க்குழம்பு மெவ்விடத்தும் * வாங்கியுண்ணுங்
கட்டளைக்குள் ளாய்நான் கதியடைவ தெந்நாளோ (உ)

கள்ளுக் கடைக்குடிபோய்க் காப்பிக் கடைக்குடியை
உள்ளியணு காமலின்ப மோங்குவ தெந்நாளோ (ங)

எச்சிற்கிண் ணத்தில் இருக்கின்ற காப்பியைநான்
நச்சியுண்டு நோயால் நலியாமை எந்நாளோ (ச)

மொட்டைத் தலையில் † முழுக்குடுமி வைத்துநான்
செட்டைக் கடைப்பிடித்துச் சீர்பெறுவ தெந்நாளோ (ரு)

வேதா ரணியப் புகையிலையே வேண்டுமென்று
வாதாடி வாங்கினான் வாயிலிட்டுக் கெட்டேனே (சா)

பாலக்கா டென்னுமொரு பட்டணத்திற் பாடமாம்
நீலப் புகையிலையை நித்தமுண்டு கெட்டேனே (எ)

பீடி பிடித்தேன் பெரியசிக ரெட்டுகளும்
தேடிப் பிடித்தேன் செலவுசெய்து கெட்டேனே (அ)

மணியொன் றக் காறுசிக ரெட்டையென்றன் வாயில்
அணியாக வைத்துநான் அந்தோ அழிந்தேனே (கூ)

தீதாஞ் சிகரெட்டைச் சீக்கிரமாய் விட்டுநான்
மாதாவாந் தேசமகனாவ தெக்காலம் (கய)

---

* தேவலோகத்திலேனும் பிறர் செய்ததை விலைக்கு வாங்கி உண்பது கூடாது. நாமே செய்துகொள்ளவேண்டும்.

† சற்றுநீண்ட சிறுவட்டக் குடுமி

காந்தி மகான்மதியாங் கண்ணாலே நோக்கியின்ப
மாந்தி மடமையைநான் மாந்திசெய்வ தெந்நாளோ (கக)

காப்பிக்கடைக் குடியாலேயே பற்பல தொத்து நோய்கள் பரவுகின்றன; குட்டம் யானைக்கால் முதலியவைகளும் குறையாமல் வளருகின்றன. காப்பிக் கடைக்குச் செலவிடும் பணத்தில் அரைபங்கு செலவிட்டால், வீட்டிலேயே நல்ல பலகாரம் ஒன்று செய்து கொள்ளலாம். வீட்டுக் கல்இயந்திரத்தில் இட்டரைத்த நாட்டுக் கோதுமை ரவையில் காற்படி யெடுத்து, உப்புமா வாக்கினால், நாலுபேர் நன்றாய்ச் சாப்பிடலாம். அதோடு, மேலே காட்டியுள்ள ஆவாரைப்பானமும் பண்ணி உட்கொண்டால், தேகம் பொன்னிறமாகும். இட்டலி, வடை, பூரி, அல்வா, போளி முதலியவைகளையும் வீட்டிலேயே கல் இயந்திரத்தி லிட்டரைத்த மாவாற் செய்துண்பதே ஒழுங்காகும். காப்பிக் கடைகள் ஏராளமாய் ஏற்பட்டிருப்பதால் நந் நாட்டார் அவைகளுக்குள் தாராளமாய் நுழையக் கற்றுக் கொண்டார்கள். அதனால் அவர்கள், தத்தம் மனைவியர்க்குப் பலகாரம் பண்ணத்தெரிந்தும் அவர்களைச் சோம்பேறிகளாக்கிக் கெடுத்தார்கள். இன்னுங்கெடுக்கிறார்கள்.

கட்குடியையும் காப்பிக்குடியையும் அடியோடு தொலைக்கவேண்டியபடி, புகையிலைச் சுருட்டுக் குடியையும் சிவன் வாழும் கயிலைக்குப் போவதானாலும் கண்ணெடுத்தும் பார்க்கப்படாது.

"புகையிலையைக் கண்ணாலே கண்டாலும் ஆகாது. நல்ல மருந்தின் குணத்தை நாசமாக்கி விடும். நாவறட்சியுண்டாக்கிப் பலவீனத்துக் கிடம் பண்ணும். பித்தத்தை வளர்த்து விந்துவைத் தளர்த்தும். மயக்கமாய்க் கிர்ரென்று சுழற்றும். விந்து நீர்த்துப் போம்படி அழற்றும்" என்னுங்



கருத்தமைந்த பின்வரூஉம் பெரியார் பாட்டைக் கவனித்துத் திருந்துக:

(வெண்பா)

'மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யும்
திருந்து பலவீனஞ் சேர்க்கும்—பொருந்துபித்தம்
உண்டாக்கும் விந்தழிக்கும் ஓது புகையிலையைக்
கண்டார்க்கு மாகாது காண்'

எந்தப் பொருளையும் அதிகமாய் வேவிப்பதால், அந்தப் பொருளிலுள்ள விட்டாமின் (Vitamin) என்னும் சீவ சத்துக் கெடும் என்பது, தற்போதைய மருத்துவ நூலார் துணிபு. ஆகையால் கீரைகளையும், கிழங்குகளையும், காய்களையும் கறிசெய் துண்பார், இதை அவசியமாய்க் கவனிக்க வேண்டும். தத்தம் பிரியம் போலத் தண்ணீர் விட்டு, மேற் குறித்த கீரை முதலியவைகளை வேவவைத்துச் சத்தைக் குறைத்துவிடக் கூடாது. இந்தச் சத்துக் குறைந்திருப்பதனாலேயே, உண்ணும் போது சிலர், 'இது அவிந்து போயிருக்கிறது; உருசியில்லை' என்று சொல்லக்கேட்கிறோம். அவிய வேவதனால், உருசிகெடுவது ஒன்றுமட்டு மன்று. உண்பார் உடல்வலியுங் கெடும். நோய்க்கும் இடம் உண்டாம்.

'நோய்க்கிடங் கொடேல்' என்பது ஔவை வாக்கு. இதைச் செவ்வை வாக்காகக் கொண்டு, திருந்தி நடப்பரேல், எல்லாருஞ் சீர் பெறுவர். எந்தப் பண்டத்தையும் உருசி குறையாமல் அரைவேக்காடிடுவதே, உத்தமமாம். இதையே அங்கில நாட்டார் (Half-boil) அரைவேக்காட்டுணவு என்று ஆசையாயுண்பார்கள்.

'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்' (குறள்)

'நோயோ, மற்றெந்தக் கெடுதியோ வருவதற்கு முந்தித்தடுத்துக் கொள்ளாதவனுடைய வாழ்வானது, நெருப்புக்கெதிரில் நில்லாமல் பற்றியெரிந்தழியும் வைக்கோற் போர்போல, கெட்டழிந்து போகும்' என்பது இதன் பொருள். இந்தக் குறளின் கருத்தை விளக்க எழுந்ததே இவ்வதிகாரமாகும். அதனாலேயே இதற்கு, 'நோயற்ற வாழ்வே சால்புடைத்து' என்று பெயர் தந்து, அந்நோய் வராமற் றடுத்துக்கொள்ளும் நன்னெறிகளையே இதில் விளக்கிக்கொண்டுவருகிறோம்.

இன்னும் இந்தக் கள் சாராயக்குடியால் குடிகெடுத்துக் கொண்ட ஒருவன், தானே இரங்குவதாகக் கூறியுள்ள பின் வரூஉம் கண்ணிகளையும் ஈடுபெறக் கண்டு தெளிக :

சாராய முங்குடித்தேன் தக்கறி தோசைகளும்
பூராய மாகவுண்டு புத்திகெட்டு வாழ்ந்தேனே. (க)
கள்ளைக் குடித்தேன் கறிதோசை மீனென்னும்
சுள்ளைக் கடித்தேன் துயருற்று வாழ்ந்தேனே. (உ)
கள்ளிலுள்ள நஞ்சைக் கருதியகற் றென்பாரை
எள்ளியதைக்குடித்தேன் ஈனமுற்று வாழ்ந்தேனே. (ங)
சீர்மைச்சா ராயந் திரவிய நாசமென்னும்
நேர்மையறி யாத நெறிசென்று கெட்டேனே. (ச)
கள்ளுக் கடைகளெல்லாங் கல்விக் கழகமாய்
உள்ளுக்குள் ஞானநமக் கோங்குநாள் என்நாளோ. (ரு)
சாராயம் விற்கின்ற சந்தெல்லாங் கல்விமுறை
ஆராயும் சாலைகளே ஆவதுவு மெக்காலம். (சா)
சோடா முதலான சுத்தமில்நீர் விற்போனைப்
போடாவென் றப்பாலே போக்குவது மெக்காலம். (எ)
ஆவாரைப் பானகமும் ஆனபசுப் பால்மோரும்
ஈவாரைப் போற்றிநா னின்புறுவ தெக்காலம். (அ)



நன்னாரிப் பானகமும் நல்லபுளி மாதுளையின்
தன்னேரில் பானகமும் சாப்பிடுவ தெக்காலம். (கூ)
கள்ளுண்டு வாழ்வாரே கற்றோர் சவையினின்றுந்
தள்ளுண்டு வாழ்வரென்று தாந்தெரிவ தெக்காலம். (க0)
சாராயந் தன்னையுண்டு தம்மறிவைப் போக்குகின்ற
மாராயங் கொண்டு மயங்காமை எக்காலம். (கக)

கீரைகளிற் சிறந்தன, தாளிக்கீரை, முருங்கைக் கீரை, தூதுளங்கீரை, அறுகீரை, தழுதாழைக்கீரை முதலியவைகளாம். தாளிக்கீரையையே நறுந்தாளி யென்பார்கள். முருங்கைக்கீரை முற்றினது கூடாது ; கொழுந்தாயிருக்க வேண்டும். தூதுளங்கீரையையே தூதுளை, அல்லது தூது வேளை யென்பார்கள். தழுதாழை கிடையாதேல், அதற்கு மாறாக, வசலையை உபயோகிக்கலாம். வசலையைப் பசலை யென்றும் வழங்குவார்கள். இவைகளுக்குப் பஞ்ச மூலி யென்று பெயர் இலைக்கறி உணவில் இவைகளுக்கு மிஞ்சியது வேறெதுவுமில்லை. இவைகளில் ஏதேனும் ஒன்றைத் தினந்தவறாமல் நெய் சேர்த்துண்டால், தாது வளரும். நறுந் தாளியைப் பருப்பிட்டுச் சமைத்துண்டால், சரீராரோக்கிய மாம். உருசியிலும் அதற்குமிஞ்சி, வேறெந்தக் கீரையு மில்லை. முருங்கைக் கொழுந்தால் தாதுவளரும் என்பது மேனாட்டார்க்குந் தெரியும். அமெரிக்கரும் அதன்பயனையும் அதன் காயின் பலனையும் நன்றாயறிவார்கள். தூதுளையை வதக்கித் துவையல் செய்வதே வழக்கம். சிலர் அதைப்பருப் புச்சாற்றிலும் சேர்த்துண்பது உண்டு. பசலை அல்லது வசலை யென்பது, இருவகைப்படும். வெள்வசலை ஒருவகை, செவ் வசலை மற்றொருவகை. இதையும் பருப்பிட்டுச் சமைத்துண் பதே பான்மையாகும். வெள்வசலையிலும் கொடிவசலை, கொத்து அல்லது செடிவசலை யென்று இரண்டுண்டு அறு கீரையைப்பற்றி அனைவர்க்கும் தெரியும். ஆகையால் அதைப்

பற்றி அதிகமாயெழுதுவது, அனாவசியமாம். எந்தக் கீரையிலும் புளியிட்டுச் செய்வதுகூடாது. இந்தப் பஞ்சமூலிக் கீரையைப்பற்றித் தேரையர் சிறப்பாகப் பாடியிருக்கிறார். அதை அடுத்த அதிகாரத்திற் காணலாம்.

காய்வகைகளில் வாழை, அவரை, கத்தரி, புடலை, பீர்க்கு, முருங்கை முதலிய பத்தியப் பொருள்களையும் பிஞ்சாகவே சேகரித்துக் கறிசெய்து உண்ணவேண்டும். எதையும் இளங்காயா யுண்டால், எந்நாளும் நோயில்லை. முற்றியதெதையும் பலன் வற்றியதாகத் தள்ளுவதே பான்மையதாம்.

இன்னும் இந்த வுணவுப்பொருள்களின் குணங்களைப் பற்றியே அடுத்த அதிகாரத்தில் எழுதப்போவதால், அங்கே கூறியது கூறல் என்னும் குற்றத்துக் கிடமாமென்று இங்கே இது வரையில் இதை நிறுத்துகிறோம். அங்கே இதைப்பற்றிப் பரக்கக்காணலாம். நோயற்றவாழ்வே சால் புடைத்தென்பதை நிதரிசனமாய்க் காணவேண்டுவோர் உண்ணும் உணவையே முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். ஆகையால்,

'உண்பதிரு பொழுதொழிய
மூன்று பொழுதுண்ணோம்' என்று

முன்னே நாம் கூறியபடி எல்லாரும் இருபொழுதுண்பதே ஏற்றமாமென்க.

'உறங்குவ திராவொழியப்
பகலுறக்கங் கொள்ளோம்'

என்றபடி பகலுறக்கம் எப்போதும் ஆகாது. இந்நூலாசிரியனாகிய எம்மைப் போன்ற ஐம்பத்தைந்து வயதான கிழவனும் பகலுறக்கங் கொள்வது பான்மையன்று. என்றால், காளையர்க்கும் பாவையர்க்குங் கேட்பானேன்?



பாயாளியான நோயாளியும், குழந்தையும், தொண்ணூறுஞ் சென்ற தொங்கு கிழவனுந்தவிர, வேறெவர்க்கும் பகலுறக்கம் ஆகாது. இராத்தூக்கத்துக்கும் அளவுண்டு. அத்தமித்து ஒரு சாமம், அதாவது மூன்று மணி நேரமேனும் விழித்துக்கொண்டிருக்கவேண்டும். ஒன்பது மணிக்கு மேற்கொண்டு தான், ஒவ்வொருவரும் பள்ளிக்குப் போக வேண்டும். இளைஞரும் காலை ஒன்பது மணிக்குப் *பள்ளிக்குப் போவதுபோலவே, மாலை ஒன்பது மணிக்குப் †பள்ளிக்குப் போகவேண்டும். 'மெத்தெனப் படுத்தல் நித்திரைக் கழகு' என்றபடி உடலுக்கு மெத்தெனப் படுத்தல் இல்லையேனும், தலைக்கு மெத்தெனத் தலையணை யிட்டு உறங்குவதே உலக வழக்கமாம். எப்போதும் நித்திரையில் தலை உயர்ந்தும், உடல் தாழ்ந்தும் இருப்பதே உத்தமமாம். இரவிற் பத்து மணிக்குப் படுத்துக்கொள்வதே எந்தத் தேசத்திலும் இசைந்ததாம். நல்ல நடு நிசியில் ஒருவன், தன்னை மறந்து சுழுத்தியில் (முழுநித்திரையில்) இருக்கவேண்டுமென்பது மேலோர் துணிபு. பன்னிரண்டு மணிக்குப் பிறகு, இராவிற்படுப்பது, சுகாதாரத்துக்கு அடுத்த தன்று. இது பற்றியே அங்கிலத்தும், (Even five hour's sleep *after* midnight, is not equal to an hour's sleep *before*) என்றும் (Early to bed and early to rise is healthy, wealthy, and wise) என்றும் வழங்குகின்றன. 'நடுநிசிக்குப் பிறகு நான்கு மணிநேரம் தூங்கினாலும், அதற்கு முந்தி ஒரு மணிநேரம் தூங்குவதற்குச் சரியாகாது' என்பதும், 'சீக்கிரம்படு, சீக்கிரம் எழு; சீரும் செல்வமும் கல்வியும் பெறு' என்பதும் இவைகளின் பொருள்கள். ஆகையால், கூத்தாட்டத்துக்கும், திருட்டுச் சூதாட்டத்துக்கும், வேசையின்பத்துக்கும் தம் வாணாளைப் பறிகொடுத்து வீணாள்

* பள்ளிக்கூடம் † படுக்கை

கழிக்கும் விழலர்க்கு இஃதோர் எச்சரிக்கையாகும். விடிய ஐந்து நாழிகையிருக்கையில், அதாவது நாலு மணிக்கு எழுந்திருத்தல் நலமாம். ஐந்து மணிக்கும் எழலாம். ஒவ்வொருவரும் மொத்தத்தில் ஆறு மணிநேரமே தூங்க வேண்டும். அவசியமானால் ஏழுமணிநேரமுந் தூங்கலாம். அதற்கப்பாலுந் தூங்கினால் ஆயுள் குறையும், அறிவு குறையும், செல்வங் குறையு மென்றார் சிந்தாமணியார்.

கீரை வகைகளிற் சொன்னபடி, கிழங்கு வகைகளிற் கருணையுங் கொட்டியுங் கிட்டியுஞ் சிறந்தனவாம். மற்றைக் கிழங்குகளெல்லாம் மாந்தர்க் குரியனவே. ஆயினும் நோயற்ற வாழ்வு வாழ்வதற்குக் கருணை முதலிய மூன்றே, மாந்தர் மேற் கருணை யுடையவைகளாம்.

வாரத்துக் கொருமுறையல்லது இருமுறை யெண்ணெ யிட்டுக் கொள்வதை, இங்கும் ஒரு முறை வற்புறுத்து கின்றோம். சவர்க்காரம் என்னும் சோப்பை யொழிக்க வகை தேடவேண்டு மென்றும் அதற்கு பதிலாக நந்நாட்டுப் பூலாவும், குட்டி விளாவும் நலமா மென்றும் முந்நியே கூறியுள்ளோம். ஆவாரையும் பாசிப்பயறும் சேர்த்து அரைப்பாகவும் தேய்ப்பாகவும் உபயோகிப்பதும் உத்தம மாம். இவைகளோடு வாசனை வேண்டுமானால், சந்தனத் தூளும், வெட்டி (விலாமிச்சை) வேரும் கலந்து கொள்ள லாம். இது ஏழைகளும் வெகு சுலுவிற் கையாளக் கூடியது. எண்ணெய்க்கும் நந்தேக வளர்ச்சிக்கும் நெருப்புச் சம் பந்த மிருக்கிறபடியால், செருப்புக்கு எண்ணெயிட்டு மினுக்குவிப்பது போலத் தேகத்துக்கும் எண்ணெய் அத்தியாவசியமாயிருக்கிறது. தசரதர் சவவுடலைப் பரதன் வருமளவும் பாதுகாத்து வைத்தது என்று இதை வாசிப்போ ரெல்லாரும் உணர்வர். ஆகையால், எண்ணெய் நானமே எல்லா விதச் சவர்க்கார (சோப்பு) நானத்திலும் ஏற்றமான



தென்று தெரிக. எந்தச் சவர்க்காரமும் எண்ணெயின்றி ஆவதில்லை. நந்நாட்டு எண்ணெய் வகைகளை பிறநாட்டிற் குச் சென்று, சோப்புகள் என்று பெயர் வைத்துக்கொண்டு, திரும்பிவந்து நமது பணத்தை உறிஞ்சி விடுகின்றன.

சிகைக்காயை நவீன முறைப்படி (machine) இயந் திரத்திலிட்டரைப்பது கூடாது. மிளகாய், மிளகு, உழுந்து, பயறு, அரிசி, கோதுமை, கேழ்வரகு முதலியவைகளையும் இயந்திரத்தில் அரைத்து, அநேக நவீன நாகரிகப் போலி கள், தஞ்சரீர சுகத்தைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். கோதுமை, அரிசி முதலியவைகளை நம் அகத்துக் கல் இயந்திரங்களில், நாமே அரைத்துண்பது சுகாதார வளர்ச் சிக்கு அனுகூலமாம். ஆங்காங்கு ஏற்பட்டுள்ள நெல்குத்தும் இயந்திரங்களையும், மாவரைக்கும் இயந்திரங்களையும் தந்திர மாய் விலக்க வழிதேடும் மந்திரம் படிப்பது, சுகாதாரத் தலைவரின் கடமையாயிருக்கிற தென்பதற்கு யாரைக் கேட்க வேண்டும்? சுகாதாரம் வளரவேண்டுமானால், இவ்வியற்கை விரோதமான நவீன விநோதப் பழக்கங்களை விலக்க வேண்டும். 'கோள் கேட்பவன் இல்லையேல், கோள் சொல் பவன் இல்லை' என்றபடி, குடிகள் அப் பிறநாட்டு மோசத் தந்திர இயந்திரங்களுக்கு வேலை கொடுப்பது இல்லையேல், அவைகள் தாமாகவே எடுபட்டுப் போமென்று அதிகாரிகள் கூறுவார்கள். 'பாலுக்குங் காவல், பூனைக்குந் தோழன்' என்பது போல, குடிகளுக்குஞ் சுகாதாரந் தேடவேண்டும்; இயந்திரங்களுக்கும் பொருளாதாரந் தேடவேண்டு மென்று அதிகாரிகள் எண்ணுவது அசாத்தியமான காரியமாகும். ஒருவன் பணக்காரன் ஆவதினும், சரீரபலவானாயிருப்பது ஏற்ற மாகையால், குடிகளுடைய சுகாதாரமே ஏற்றமான தென்றெண்ணி, சுகாதாரத் தலைவர், மேற் கூறிய இயந்திரங் களுக்கு நகரத்தில் இடந்தரத் தகாது.

ஒவ்வொரு பண்டத்தையும் நன்று மென்று தின்று உடலை வளர்ப்பதே உசிதமாம். மாடு முதலிய கொம்புள்ள பிராணிகள் அசைபோடுங் காரணத்தை எண்ணிப் பார்த்தால், எல்லாம் நன்றாய் விளங்கும். அசை போடா மாடு, ஆரோக்கியங் கெட்டிருக்கிறதென்பது, எல்லார்க்குந் தெரியும். இப்படி மாடு, மான், ஆடு முதலிய கொம்புள்ள பிராணிகள் அசை போடுவதனாலேயே அதிக வலுவுள்ளவைகளாய்ச் சிறந்திருக்கின்றன. ஒரு மாடு இருவர், அல்லது மூவர் மனிதரை, அநாயாசமாய்ச் சுமந்து செல்லும் ஆற்றலுடையதாயிருக்கின்ற காரணத்தை உற்று நோக்குக. அதற்குச் சாக (இலை முதலிய இயற்கை உணவு) பக்ஷணமே இயற்கை உணவாயிருப்பது, அதற்குக் காரணமாம். அவைகளை அது சமைத்துண்பதில்லை; இலை, புல் முதலியவைகளை இயற்கை கெடாமலே உண்கிறது. அதற்கு மாமிச பக்ஷணமுமில்லை. அத்தனை பெரிய ஆல சரீரமுள்ள யானையும் சாகபக்ஷணியே யாம். அதற்குள்ள பலம், மாமிச பக்ஷணியும் மிருகராஜனுமாகிய சிங்கத்திற்கு மில்லை. ஆகையால் நாம் எந்தப் பொருளையும், அதன் இயற்கை கெடாமல் உண்பதே உத்தமமாம். அப்படிச் செய்ய நாம் பழக்கப்பட்டிராததனால், எந்தத் தானியத்தையும் உமி போக்கி யுண்கிறோம். அதையும் சும்மா வுண்கிறதில்லை. அக்கினிபகவானுக்குப் பாதிக்கு மேலும் (விட்டமின்) சீவசத்தைப் பறி கொடுத்து, உண்கிறோம். சீவசத்து அதிகமாயுள்ள தானியம், பழ முதலியவைகளுடைய தோலையுங் கோதையும் தப்பி விடுகிறோம். எதைத்தின்றாலும், சீவசத்துக் குறைந்துள்ள வெறும் மாவையே தின்கிறோம். அதுவும் சீரணமாகுமோ, என்னவோ என்று சந்தேகித்துக் காயத்தையும், வெங்காயத்தையும், காரத்தையும், புளிப்பையுங் கலந்து கெடுக்கிறோம். எதையும் நன்றாய் மென்று



இயற்கை உருசி கெடாமல் உண்பதே உத்தம மென்பது மேலோர் கொள்கை. மனிதன் மாமிசபக்ஷணியே அல்லன்; அவன் பல்லமைப்பு அதற்கு இயைந்ததன்று. புலிப்பல், சிங்கப்பல், பூனைப்பல்லுக்கும், சாகபக்ஷணியாகிய மனிதப் பல்லுக்கும் வேறுபாடுண்டு. மாமிசபக்ஷணிகளாகிய சிங்கமுதலியவைகளுக்கு, அதைப் பச்சையாகவே மெல்லத் தக்க ஊசிப்பற்கள் இருக்கின்றன. மனிதனுக்கு அப்படியில்லாதிருந்தும் எப்படியோ மாமிசத்தையும் அவித்தேனும் உண்ணக் கற்றுக் கொண்டு கேடுகெட்டான். அவன் இயற்கையில் மாமிசபக்ஷணியானால், அதைக் கண்டவுடனே பழத்தைக் கண்டால் நீரூறுவது போல, அவன் வாயில் நீர் ஊறும். அங்ஙனம் இல்லாததனால், அவன் மாமிசத்தையும் மச்சத்தையும் அதிக அருவருப்போடு கொண்டுபோய்ச் சமைத்துண்டு சந்தோஷிக்கிறான்.

‘தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்’

என்றார் நாயனார்.

விஷக்காய்ச்சல், பேதி, பெருவாரி முதலிய கொடு நோய்கள் பிரவர்த்தித்திருக்கையில் மாமிசபக்ஷணம் அபாயகரமானது. அந்நோய்கள் இரத்த சம்பந்தமானவைகளைத் தொத்துவதும், உண்பாரைப் பற்றுவதும் வெகு சுலபம். உலகத்திலுள்ள பலசாலிகளிற் பேர்போன வீரரெல்லாம் சாக பக்ஷணிகளாகவே யிருந்திருக்கிறார்கள். புத்தரும், தாம் விருப்பு வெறுப்பற்றவர் என்பதைக் காட்டவே சில இடங்களில் மாமிசம் உண்டாரென்று கேள்விப்படுகிறோம். ஆயினும் அவர், யாககாலத்திலும் உயிர்வதை கூடாதென்று விலக்கினார். ஆனால், நாயனார்,

‘அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று’

என்று எந்தவிதத்திலும் கொல்லாவிரதமே குணமுடையதென்று எச்சரிக்கிறார். ஆகையால் எந்தக் காலத்திலும் மனிதனுக்கு இயற்கை உணவாகிய கீரை, காய், கனி, கிழங்காதிகளே சிறந்தனவாமென்று கொள்க. நன்றாய் மென்று விழுங்குவதற்கு உறுதியான பற்கள் வேண்டும். ஆகையால், ஒவ்வொருவரும் பற்களைத் தக்கவாறு பாதுகாக்க வேண்டும்.

வெற்றிலை, பாக்கு, புகையிலை மெல்லும் வீண்பழக்கத்திற்கு இடந் தரப்படாது. அவைகளை அதிகமாய் மெல்லுந்தோறும் பற்களின்மேல் செத்து, அவைகள் அதிவிரைவில் கழன்று விடுகின்றன. அதனால், அப்பழக்கத்திற்கு அடிமைகளாயுள்ள வாலிபரும், தம்பலம் நறுக்கும் உரல் உலக்கைகளைத் தங்கிறார்கள். உணவைப்பற்றியே இத்தனை தூரம் சொல்லிவந்தோமாகையால், உடையைப் பற்றியுங் கொஞ்சஞ் சுருக்கமாய்க் கூறுவோம்: இந்தச் சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கபடி சுதேசவுடை உடுப்பதே உத்தமமாகும். தலைக்கவசம் இந்நாட்டார்க்கு அனாவசியமென்று சில வைதிகர் கூறுகிறார்கள். அது உண்மையேயானாலும், வெய்யிலையும் குளிரையுந் தடுப்பதற்கு, இலேசான தலைக்கவசம் அவசியமாயிருக்கிறது. வடநாட்டார் தலைக்கவசம் இல்லாமல் இரார். உடற்சட்டை, காற்சட்டை முதலியவைகளும், இப்படியே இலேசானவைகளாய்க் காற்றோட்டமாயிருக்கவேண்டும். பாதரக்ஷை எல்லார்க்கும் இன்றியமையாதது. கண்ணுக்கு எண்ணெயிட்டுக் கொள்வதினும் உள்ளங்காற்கு எண்ணெயிட்டுத் தேய்த்துக்கொள்வது, எத்தனையோ ஏற்றமானதென்பார், மருத்துவ நூலார். உள்ளங்காற்கும் கண்ணுக்கும் நரப்புத் தொடர்ச்சி உண்டு. ஆகையால், செருப்பால் உள்ளங்காலைக் காத்தால், கண்ணைப் போற்றினபடியாகும். இப்படிப்பட்ட சாதாரண வெகு



சுளுவான உடை அணியாமல், மேனாட்டாருடைய கல்வி மயக்கத்தால், அவர்களுடைய உடைகளைக் கீழ்நாட்டாராகிய நாமும் அணிந்துகொண்டு நடிப்பது நகைப்புக்கிடமாம். அன்றிச் சுகாதாரத்துக்கும் பகைப்புக் கிடமாம். தலைக்கவசத்தோடு வெளியிற்சேறல், வைதிக விரோதமென்னுங் கலைஞானிகள், பாதரக்ஷையை மட்டும் எப்போதும் போற்றுங் காரணத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். நல்லவெய்யிலில் தலைக்குச் சூடேறுவதைவிடக் காலுக்குச் சூடேறுவது சுளுவு. காலுக்குச் சூடேறினால், அது கண்ணுக்குச் சூடேறுவதாமென்று அவர்கள் நன்றாயறிவார்கள்.

சூரியன் காய்வதால் உண்டாகும் ஒளி, சூடுமுதலியவைகளையும் அவைகளுக்குத் தக்கபடியுள்ள நம் வாழ்விட அமைப்பு முதலியவைகளையும் நாம் மூன்றாவதாகக்கவனிக்க வேண்டும். சூடு அல்லது உஷ்ணம் என்பதும் காற்றைப் போலவே கண்ணுக்குத் தெரியாத பொருளாம். இதை நாம் அநேகமாய்க் கட்டைமுதலியவைகள் எரிகையில் அதிக உறைப்பாய்க் காண்கிறோம். மற்றை யிடங்களில் அது, நீர்க்குட் சூடுபோல் மறைந்திருக்கிறது. அனலின்றி எதுவும் நிலைக்காது; புனலின்றி எதுவும் வளராது; காற்றின்றி எதுவும்தேறாது; ஆகாயமின்றி எதுவும் ஓங்காது; மண்ணின்றி எதுவும் முளையாது. ஆகையால், சூடுதான் வளர்ச்சிக்கு ஆதாரம். சூட்டால் எதுவும் தளர்ந்து வியாபிக்கிறது. குளிர்ச்சியால் எதுவும் உறைகிறது. சூடே உயிர்நிலை. கோழி, குஞ்சு பொரிப்பதற்கு எது உயிர்நிலை என்பது, எல்லார்க்கும் தெரியும். அடைகாக்கையிற் கோழியைத் தொட்டுத் தடவிப் பார்த்தவர்களுக்கு அதன் உடற்சூட்டின் உச்சம் நன்கு விளங்கும். அதன் உடல் அத்தனை சூடாயிருப்பதனால்தான், அது, முட்டைக்

கருவிலேறிக் குஞ்சுக்கு உடல் உயிராதிகளை உண்டாக்கு
கிறது. சூட்டின் மகத்துவம், அதைக்கூர்ந்து கவனிப்
பார்க்கே விளங்கும். இப்படிப்பட்ட சூட்டில் பிறப்பதே
ஒளியாகும். ஒளியும் சூட்டைப்போலவே, செடி, கொடி
முதலிய தாவரங்களையும், மனிதன், விலங்கு முதலிய சங்க
மங்களையும் கெடாமல் வளர்க்கிறது. ஒளி யில்லா இடத்
தில் முளைத்தமுளை, மஞ்சளாய் வெளுத்திருக்கும். ஒளியுள்ள
இடத்தில் முளைத்தது, பச்சைப் பசேலென்று தோன்றும்.

ஆகையால், ஒளியும் சூடும் போதுமான அளவு, உள்
ளிருக்கும்படி வீடுகட்டிக் கொள்ளவேண்டும். உடம்பையும்
அவைகளில் மிதமாய்ப் பழகும்படி வளர்க்கவேண்டும்.
ஓதமான இடங்களிலும், பள்ளத்தாக்கான இடங்களிலும்
வீடுகட்டிக்கொள்வது விரும்பத்தக்கதன்று. குழந்தைகளை
யும் ஒளியும் சூடும் மிதமாயுள்ள இடங்களில்விட்டு வளர்க்க
வேண்டும். இருட்டில் வளர்ந்த பிள்ளைக்கு வெளிச்சத்தில்
கண் கூசும். இவ்விரண்டுக்கும் ஏற்றவாறு, வீடு கட்டிக்
குடியிருப்பாரே விவேகிகளாவார். சூரியனுடைய சூட்டி
னாலும் ஒளியினாலுமே உலகம் நிலை திரியாதிருக்கிற தென்
பது உத்தமக்கலைஞானிகள் அனுபவத்திற் கண்டுபிடித்த
விஷயமாகும். வீடுகளை ஓதமான இடங்களிற் கட்டிக் குடி
யிருப்பார், மலேரியா முதலிய காய்ச்சல் தொத்து நோய்க
ளுக்கு இரையாய் மாள்வார்கள்.

மாந்தர் உள்வாங்கி வெளிவிடும் மூச்சுக் காதாரமாகிய
காற்றோட்டமே, அவர்களுடைய உடலின் இரத்தோட்டத்
திற்கு ஆதாரமாயிருக்கின்றது. எந்நாளும் காற்றோட்ட
மான இடத்திலேயே வீடுகட்டிக் குடியிருக்கவேண்டும்.
காற்று எளிதில் உள்நுழைந்து வெளியேறும்படி, விசால
மான பலகணிகள் அமைந்திருக்கவேண்டும். 'பலகணி
யில்லாக் கட்டடம் பாழ்' என்பது பழமொழி. நாட்டுப்



புறத்து நாகரிகமற்ற சனங்கள், இதைக் கவனிக்கிறதே
யில்லை. இதைப்பற்றிச் சுகாதாரக் கூட்டத்தார் கவனஞ்
செலுத்த வேண்டும். நகரங்களிலும் இதைக்கவனியாமல்
வீடுகளைக் கட்டினால், நகரவாசம் நரகவாசமாய்விடும். ஒரு
சிற்றறையிற் பலபேர் படுத்துறங்குவதும், ஒருவர்மூச்சு
மற்றொருவர் மேற் படும்படி படுப்பதும் கூடாவாம். எந்த
இடத்திலும் காற்றுக்கு வரும்வழி (Ingress) செல்வழி
(Egress) இரண்டிருக்க வேண்டும். வரும் வழிக்கு
நேராகச் செல்வழி யிருப்பதே எங்கும் நலந்தருவதற்
கேதுவாகும். மனிதரும் பிராணிகளும் வெளி விடு
மூச்சு அசுத்தமானது. ஆகையால், கணத்துக்குக் கணம்
அதை அப்புறப்படுத்தச் சுத்தமான காற்று, ஓடிக்
கொண்டேயிருக்கவேண்டும். காற்றுக் கண்ணுக்குத் தோன்
றாத பொருள். ஆகையால், அசுத்தம் யாருக்கும் தென்படு
கிறதில்லை. ஓர் அறையில் மல மூத்திரமிருந்தால், உடனே
அவைகளைச் சுத்தப்படுத்தத் தண்ணீர் தேடுவது போலவே,
ஓர் அறையிற் கூட்டம் பெருத்துக் காற்று அசுத்தமானால்,
அதை அப்புறப்படுத்தச் சுத்தவாயு அத்தியாவசியமாயிருக்
கிறது. காற்றோட்டமில்லாத அறையிற்படுத்த அனேகர்
மூச்சுத்திணறி மாண்டிருக்கிறார்கள். சென்றவாரத்திலுங்
கூட பம்பாயில், நால்வர் ஒரு குடும்பத்தார், மூச்சுத் திணறி
மாண்டார்கள். காரணம், அவர்கள், ஒரு சிற்றறையில்
காற்றோட்ட மில்லாமல், கதவடைத்துப் படுத்துறங்கியதே
யாம். இதைப் பற்றியும் சுகாதாரக்கூட்டத்தார், இலாந்தர்
வெளிச்சக் (Lantern show and lecture) காட்சியால்
சனங்களைத் தெளிவிக்கவேண்டும். குழந்தைகளைப் பாது
காக்கு முறையிலேயே இதைப் பெரும்பாலும் வற்புறுத்த
வேண்டும். அநேகமாய் ஏழைகளின் குடிசைகளே
காற்றோட்ட வசதியின்றி, கொள்ளை நோய்களென்னும்

சளை நோய்களுக்கு இலக்காயிருக்கின்றன. கொள்ளை நோய்க் கிருமிகளும் பிறவும் காற்றோட்டத்தினால் அப்புறப்படா விட்டால், அவைகள் பரந்து கெடுதிவிளைக்கின்றன. நகரச் சாக்கடைகளிலும் காற்றோட்டமாயிருப்பதே நன்மையாகும். அவைகளைக் காற்றோட்ட மில்லாமல் மூடி வைப்பது தவறு. போன வாரத்திலும் கல்கத்தாவில், மூடி வைத்த சாக்கடையில் இறங்கிச் சுத்தஞ் செய்யச் சென்ற இருவர் கூலிகள் மூச்சுத்திணறி மாண்டார்களென்று பத்திரிகையிற் படித்தோம். இயற்கைக் காற்றோட்டம் இல்லாத வீடுகளில் விசிறிகளை உபயோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். சிற்சில சமயங்களில் இயற்கைக் காற்று வீசா விட்டால், விசிறிக்காற்றே விசேடமானது.

காற்றுச் சுத்தமாவதற்கு வீட்டைச் சுற்றிச் செடிகள் இருப்பது நல்லது. இதனால்தான், நகரங்களிற் சாலையோரங்களிற் சாலையாகவும் சோலையாகவும் மரங்களை வைத்து வளர்ப்பது வழக்கமாயிருக்கிறது. அவைகள் வெய்யிலைத் தடுத்து நிழல் தருவதற் கென்றெண்ணுவது இரண்டாவதேயாகும். காற்றைச் சுத்தமாக்குவதற் கென்றெண்ணுவதே முதன்மையாம். சூரிய வொளியில் அவைகள், கரியமல வாயு (Carbonic acid gas) வென்னும் விஷவாயுவை உட்கொண்டு, பிராணவாயு (Oxygen gas) வென்னும் அமுத வாயுவை நமக்கு உதவுகின்றன. இன்னும் இதைப் பற்றித் தனிக்கட்டுரையில் விரிவாய்க் காணலாம்.

ஆகாயத்தைப் பற்றி அதிகமாய் எழுதவேண்டியதில்லை. காற்றுக்குப் பிறப்பிடமாகிய ஆகாயமே எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக்கொண்டு எங்கும் வியாபித்திருக்கிறது. இது இல்லாத இடம் பாழ் என்று பெயர் பெறும். இதற்கு அங்கிலத்தில் (Vacuum) வாக்குவம் என்று பெயர். இது ஆகாசத்தில் சிலமைல்கள் தூரத்



துக்கப்பால் வாயுமண்டலத்தைக் கடந்து வியாபித்திருக்கிறது. இதில் எந்தப் பிராணியும் உயிருடன் இருக்க முடியாது. இந்தப் பாழையே நந்தமிழமக்கள் ஆறாவது பூதம் என்கிறார்கள். இதையுங் கடந்தவர்கள் தாம், சிவன் முத்தரென்கிறார்கள். இது பற்றியே நந்தமிழ்மகானாகிய பட்டினத்தடிகளும் 'பாழைக் கடந்து பயிராவதெக்காலம்' என்றருளிச் செய்தார். இந்தப் பாழாகாயத்தின் கீழ் உள்ள வெட்ட வெளிதான் சிவாகாசம். இது தான் சிதாகாசம் என்றும் பெயர் பெறும். இந்தச் சிதம்பரகசியமாகிய வெட்ட வெளியைக் கடந்தவன்தான் பாழாகாசத்தின் பண்பை உணர்வான். அங்குத்தான் சலனமற்று மூலப்பகுதியோடு இரண்டறக் கலப்பான். அப்பாலுக்கப்பாலாம் அதையுங் கடந்தவன்தான், தானேயதுவாய், அது தானாய்த்தயங்கு மோனத்தில் வீற்றிருப்பான். இன்னும் இதைப் பற்றித்தனிக் கட்டுரையிற் காண்க.

வெட்டவெளி யென்னும் சிவாகாயத்தின் அசைவுதான் காற்று. இது ஏன் அசையவேண்டுமென்னும் கேள்விக்கு விடை விரிவாகும். ஆயினும், 'சூரிய வெப்பத்தால், வெட்டவெளி உட்டினமாவதாலேயே ஆகாயம் அசைய நேருகிறது. அவ்வசைவே காற்று' என்று சுளுவாகவும் சுருக்கமாகவும் இங்கே விடை கூறி விட்டுவிடுவோம். சூரியன் சூட்டால் சூடாகும் ஆகாயம் விரிந்து பரந்து பறப்பதே காற்று என்று கண்டு தெளிக. உஷ்ணத்தால் ஒவ்வொரு பொருளும் விரிந்து சுளுவாகிப் பறக்கிறது. குளிர்ச்சியால் ஒவ்வொரு பொருளும் உறைந்து பளுவாகி இறங்குகிறது. முன்னையதற்கு இடப் (more space) பெருக்கம் வேண்டும்; பின்னையதற்கு இடச் (less space) சுருக்கம் வேண்டும். இவ்விரு காரணங்களாலாகும் காரியங்களே காற்றுமழைகளாம் என்று கண்டு தெளிக.

ஆகாயம் விசாலமாயுள்ள இடமே, மனிதவாசத்துக்கு உகந்த இடமாம். ஆகாயம் எத்தனை தூரம் பரந்திருக்கின்றதோ, அதற்குத் தக்கபடி, கூடுமானால் மற்றைப் பிராணிகளுடைய சஞ்சாரமுங் கூடியிருக்கவேண்டும். காற்றோட்டமான இடமாய் இல்லா விட்டாலும், ஆகாயப் பரப்பதிகமான இடமாயிருப்பதே மனித வாசத்துக் குகந்த இடமாகும். காற்று ஓட்டமின்மையால், மூச்சுத்திணறி நால்வர் மரித்த விஷயத்திலும், போதுமான ஆகாயமில்லாமையே ஆபத்துக்கிடம் பண்ணிற்று. கல்கத்தாவில் மூடிவைத்திருந்த சாக்கடையிலிறங்கின இரண்டு கூலிக்காரர்கள் மரித்தகாரணமும், போதுமான ஆகாய மில்லாமையே யாம். காற்றோட்டமாயில்லாவிட்டாலும், விசிறி முதலியவைகளால், அதை உண்டாக்கிக்கொள்ளலாம். ஆகாயப் பரப்பில்லாவிட்டால், அதை அப்போதே ஆக்கிக் கொள்வது அருமை ஆகும். ஆகையால், வீடெடுத்துக் கட்டடமாக்கும் போதே அறைகளையும், கூடங்களையும், மாடங்களையும், மாடிகளையும், குடிசைகளையும், கடைகளையும், நடைகளையும், நாடக சாலைகளையும், பள்ளிக் கூடங்களையும், பள்ளியறைகளையும், பிறவையும் போதுமான ஆகாயப் பரப்புள்ளவைகளாய் ஆக்கிக் கொள்ளவேண்டும். இவைகளுக் கெல்லாம் சுகாதார நிபுணர்களின் உதவியை நாடவேண்டும். அன்றித் தாந்தோன்றிகளாய், "இதெல்லாம் என்ன பிரயோசனம்? நவீன நாகரிகம் யார்க்கு வேண்டும்?" என்று நகரவாசிகள் பிடிவாதம் பண்ணிப் பிழைசெய்து, நகரவாசத்தை நரகவாசமாக்கிக் கொள்ளக் கூடாது. அக்காலத்தில் நகரவாசம் போன்ற ஜனநெருக்க வாசங் கிடையாது; இடை வெளிகள் ஏராளமாய்க் குடியிடங்களுக்கு அமைந்திருந்தன. எப்போதும் நாட்டுப் புறங்களில் இடை வெளிக்குப் பஞ்சம் இல்லை. பொருளாசை யாற்



போலி நாகரிகர் என்னும் மாந்தர் நெருங்கி வாழு நகரங்களிலேயே இடைவெளிக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், ஒவ்வொருவரும் இதைத் தீர்க்காலோசனை பண்ணி, இடவசதி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

குழைநீர் பரிசுத்தமென்றெண்ணிக் குடிநீர்க்கு அதைத் தண்ணீராய் உபயோகிக்கும் முரட்டுப் பழக்கத்தை உடனே ஒழிக்கவேண்டும். எந்நாளும் எவ்விடத்தும் குடிநீரையும் குளிநீரையும் காய்ந்து ஆறினபிறகே கொள்ளவேண்டும். குழந்தைகளைத் தக்க மருத்துவச்சி மூலமாய்ப் பிரசவிப்பித்து வளர்க்கவேண்டும். குருட்டாட்டமாய் மருத்துவம் பார்க்கும் நாட்டு மருத்துவச்சிகளை நம்பி மோசம் போகலாகாது. குழந்தைகளுக்குப் பால்புகட்டுதல் முதலியவைகளில், போதுமான கவனஞ்செலுத்த வேண்டும். இவர்களே பெரியவர்களாய் நந்நாட்டைத்தாங்கி, அது முன்னேற்றமடையும் உத்தமத்தொண்டு புரிந்து, உதவ வல்லவர்களாயிருக்கிறார்கள்.

முன் சொன்னபடி, குடியை அடியோடு தொலைக்க வேண்டும். புகையிலையின் நாற்றமே கூடாது. அதைப் பொடியாகவும் முகர்வது பிசகு. அடிக்கொருமுறை வெற்றிலை மெல்வது கூடாது. சுருட்டைத் தொலைக்க வேண்டும். தினமோர் இலைக்கறி யுண்ணவேண்டும். இருவேளை போசனமே இசைந்தது. சாராயக்குடி கட்குடியைப் போலவே காப்பிக்குடியையும் பற்றறத்தொலைக்கவேண்டும். காப்பிக்கொட்டை, தேயிலை, கொக்கோ முதலியவைகளுக்கு வதிலாக, ஆவாரை, அசுவகந்தி (அமுக்கராங்கிழங்கு) கொத்துமல்லிவிதை முதலியவைகளை வழக்கத்திற் கொண்டுவா வேண்டும். அதனால், கள்ளுக்கடை, சாராயக்கடைகளைப் போலவே காப்பிக்கடைகளையும் தொலைக்கவழி தேடவேண்டும். மாவரைக்கும் இயந்திரங்களையும் ஒழிக்கவேண்டும்.

வீட்டில் பழையபடி விளக்கெண்ணெய் விளக்கேற்றுவதே உத்தமமாம், மண்ணெண்ணெய் வேண்டா; அபாயகரமாம். கண்ணொளியுங் குன்றும். மண்ணெண்ணெய் விளக்கே வேண்டாவென்றபோது, * காந்தக விளக்கை ஒழிக்கவேண்டுமென்பதற்குக் கேட்பானேன்? விரைவில் ஒரு நாட்டார் குருடாய்த் தவிக்கவேண்டுமானால், காந்தக விளக்கேற்றிக்கொள்ளட்டும். மோட்டா ரென்னும் எண்ணெய் வண்டி அவசரப்பிரயாணத்தை அறவிலக்க வேண்டும். காந்தியடிகள் கழறுவதுபோல எங்கும் கால் நடையே சீராரோக்கியமாம். பேராசைப் பேய்பிடித் தாடுகிறவர்களே, அவைகளில் அதிவிரைவாய் ஓடி இரண்டு கைகளிலும் பணத்தை வாரிக் குவிக்க முயலுவார்கள்.

'பையச்சென்றால் வையந்தாங்கும்' என்பது பெரியார் உபதேசம். எப்போதும் உடல் இயக்க (bodily exercise) மே உத்தமமானது. உடற்பயிற்சியில்லார் நடைப்பிணங்களாவார்கள்.

இவைகளையெல்லாம் நகரவாசத்திற் சுகாதாரக்கூட்டத்தாரும் கவனித்து, பொதுஜனத் தேகப்பயிற்சிக்கு அநுகூலஞ் செய்யவேண்டும். குழந்தை மணமே யன்றி மரணமுங் குறைவதற்கு வழி தேடவேண்டும். ஜலாதார ஏற்பாடு குழாய் மூலமாயில்லாமல், பழையபடி ஆற்றூற்றுக்களிலும் கேணிகளிலும் ஆகவேண்டும். ஒரே தொத்து நோயாற் பலபேர் மரிப்பதைவிட, பற்பல நன்னீர்க்கேணிகளில் ஜலந்திரட்டியுண்டு, சரீரபலத்தோடு குடிஜனங்கள் வாழ்வது மேலல்லவா? ஏதாவது ஒரு கேணி நீர் கெட்டதனால் நோய்வரினும், ஒருவர் இருவரோடேயே ஒழியுமன்றிப் பலரும் சாவ வழியில்லை. இதுவே பண்டைக்

* மின்சார விளக்கு



காலத்திய பெரியோர் முறை. குழாய் நீரால் குடிகளுக்குச் சோம்பல் வளர்கிறது. அஃதில்லையேல் அவர்கள் ஆற்றுக்கும், ஊற்றுக்கும், கேணிக்கும், குளத்துக்கும் மெய்வருந்திச் சென்று உடற்சுத்தமாய் ஆரோக்கியத்தோடு வாழ்வார்கள்.

தற்காலத்திய வழக்கம்போல் ஆங்காங்குக் குழந்தை (Baby week) வாரம், சுகாதார (Health week) வாரம், இலாந்தர் வெளிச்சக் (Lantern show) காட்சிப் பிரசங்கம் முதலியவைகளும் ஏராளமாகவும் தாராளமாகவும் நடக்க வழிதேடவேண்டும். அன்றிச் சுகாதார வெற்றியென்னும் பத்திரிகை யல்லது புத்தகம் ஒன்று வெளிவரவேண்டும். இதற்கு ஆங்கிலத்தில் (Health's triumph) என்று பெயர் வழங்கவேண்டும்.

மேற்குறித்த விஷயங்களைக் கவனித்துக் காரியம் புரிபவரே, நோயற்ற வாழ்வு வாழ்ந்து சால்புடன் சிற்றின்ப வெற்றி பெறுவார்கள். ஆனாலும் இன்னும் அவர்கள், காலையில் தூக்கத்தைவிட்டு எழூஉம் விஷயத்தில் பெருங்கவனஞ் செலுத்தவேண்டும். எழுந்தவுடனே தெய்வசிந்தனை செய்ய வேண்டும். தெய்வ சிந்தனையோடேயே எழவேண்டு மென்பது மேலோர் கொள்கை. மனைவி வந்தெழுப்ப எழுவதே மாண்பாகும்.

'கணவன் எழுமுன் எழாத மடந்தை
குணமிலா ளில்வாழ்க்கைக் கு'

என்றபடி, கணவன் எழுமுன் எழாத காரிகை இல்வாழ்க்கைக்கு ஏன்று முகர்ந்தவளாகாள். அவள் எழுந்துபோய்க் காலைக்கடனை முடித்துக்கொண்டு திரும்பி வந்து கணவன் முகத்தில் விழித்து, அவனை எழுப்பவேண்டும். காலையில் எழுந்தவுடனே அவள் செய்யவேண்டிய தின்னதென்று

முன் அதிகாரத்திற் கூறியுள்ளோம். அவள் எழுப்ப எழுந்த கணவன் அதிகாலையிலேயே நித்திய கடன்களை முடிக்கப் புறப்படவேண்டும். மலசலங் கழிக்கச் செல்லுமிடம், கோயிலுக்குச் சமீபமாகவும், குளக்கரையாகவும், பூந் தோட்டமாகவும் இருக்கப்படாது. வழியிலும் குழியிலும் வாய்க்காலிலும் மலசலங்கழிப்பது கூடாது. மலசலங் கழித்தவுடனே, அலம்பு நீர், செம்பிலும், மற்றைப் பாத்திரத்திலும் இருப்பதே உத்தமம். பலர்க்கும் பயன்படும் நீர் நிலைகளில் காலலம்புவது சுகாதார விரோதமாகும். பல் விளக்குவதற்கு ஆலும், வேலும், பூலும், நாயுருவி வேரும் உகந்தவைகளாம். இலைகளில் மாவிலையும், கையாந்தகரை யென்னும் கரிசாலை அல்லது காசனைக்கண்ணியும் மிக வுத்தமமானவைகளாம். பல்லைப் போற்றுபவனே பலத்தைப் போற்றுபவனாவான். பல் *வலியில்லையேல் சொல் வலியில்லை; பதார்த்தங்களை நன்றாய் மென்று தின்ன வலியில்லை. நன்றாய் மென்று தின்னாத பதார்த்தம் செரியாதென்பது யதார்த்தம். செரிப்பு நன்றாயில்லையேல், தேகவலி குன்றும். தேகவலி குன்றுமேல், ஆயுள்வலி குன்றும். ஆயுள்வலி குன்றுமேல், எவனும் பிறர் நலங்கருதி யுழைப்பதரிது. பிறர் நலங்கருதி உழையாதான் பூவுலகிற் பிழையான். ஆகையால், பல்வலியே பல்வலிக்கும் ஆதாரமாம். தாம்பூலம் பல்லுக்குச் சத்துரு. புகையிலை பல்லுக்கு இயமன். ஐஸ் என்னும் பனிக்கட்டியும் பிற குளிர் பொருள்களும் பல்லுக்கு நமன்களாம். சாம்பலில் பல் விளக்கினால், *சாம்பல் என்பர் மேலோர். மண்ணிலும் கரியிலும் பல்விளக்குதல் மூடச் செய்கையாம். பல்விளக்குதல் என்பதனாலேயே பல்லை

* வலி = பலம்

*சாகும் + பல் = பல் செத்துப் போகும்.



எப்படியேனும் தேய்த்துப் பளபளவென்று வைத்திருத்தலென்பது பொருளல்ல.

மலங்கழித்தான் ஒவ்வொருவனும், இருபது முறை, எருவாயைத் தண்ணீர் விட்டலம்ப வேண்டும். சலங்கழித்தான் ஒவ்வொருவனும் மும்முறை, குறிவாயையும், அதன் கழுத்தையும் தண்ணீரால் சுத்தஞ் செய்யவேண்டும். பெண்களும் இப்படியே கவனமாய்ச் செய்து பரிசுத்தமாயிருப்பதே பான்மையாம். நீரின்றி மலசலங் கழிப்பது, நந்தமிழ் நாட்டார் ஆசாரத்துக்கு விரோதமாகும். முக்கியமாய்ப் பெண்கள்தாம் தண்ணீரின்றி மலசலங்கழிப்பது கூடாத காரியமாம். இதை அவர்களுக்குச் சிறுபோதிலிருந்தே பழக்கவேண்டும். பல்துலக்கினோர் ஒவ்வொருவரும் பன்னிரண்டு முறை, வாயில் நீர்விட்டுக் கொப்புளிக்க வேண்டும். நாவை நன்றாய் வழிக்கவேண்டும். அப்படி வழிப்பதற்கு பற்குச்சியின் பிளப்பே போதுமானது. இல்லையேல், ஓலையாலும் அப்படிச் செய்யலாம். பல்விளக்கி வாய் பூசியானவுடனே குளியலுக்கு வழிதேடவேண்டும். குளியலுக்கு முந்தி, வேட்டி துவைப்பதும் முக்கியமான காரியம். குளித்தவன் எவனும் அழுக்காடையில் ஈரம் புலர்த்தக் கூடாது. கட்டிக்கொள்ளும் துணியிலேயே, குளித்த ஈரத்தைத் துடைத்துக் கொள்ளக் கூடாது. அதற்கு வேறு சிறுதுண்டு வைத்துக்கொண்டிருக்கவேண்டும். எத்தனை யேழையானாலும் இந்த உடற்சுத்த உடைச் சுத்தங்களை நன்றாய்க் கவனிக்கவேண்டும். குளியாமல் உண்பது மல முண்டபடியாம். பகவத்பூசை பண்ணாதவன் பாமரனாவான். பகவத்பூசை முடிந்ததும், நூலாராய்ச்சி பண்ண வேண்டும். காலையாகாரம் என்பதொன்றை யெப்போதும் வழக்கத்துக்குக் கொண்டுவரப் படாது. இரவுண்ட சேடம் செரிக்கவே, விடிந்து பத்து நாழிகையாகும். பத்து

மணிக்குப் பிறகே பகற்போசனம் பண்ணவேண்டும். இதையே நேமநிட்டையென நிகழ்த்துவர் ஈசுவர ஞான முணர்ந்தோர். உண்ணும் இலை, வாழையிலையா யிருப்பதே உத்தமம். இது எப்போதும் ஒரு கஜ நிளமும் அரைகஜ அகலமுமா யிருப்பதே இசைந்ததாம். எப்படியிருப்பினும் இது, இரண்டடி நீளம் ஓரடி அகலத்துக்குக் குறையப் படாது. வாழையிலை கிடையாதேல், பலா, மா, முருக்கு, மந்தரை, அத்தி, இலுப்பை, வாதுமை முதலிய மற்ற இலைகளிற்றைத்த பரிகலமும் கொள்ளலாம். தையிலை தைக்க ஒவ்வொரு பெண்மகளும் பழகியிருக்க வேண்டும். பழைய துண்பார்க்கு உண்கலம் வெண்கலமா யிருப்பதே விசேட மாகும். இதைவிட்டு மற்றைப் பிறநாட்டுப் பாத்திரங்களை ஆத்திரமாய் வாங்கி உபயோகித்தல் ஆகாதாம். எவ்விதத்திலும் பிறநாட்டுப் பழக்க வழக்கங்களையும் தட்டு முட்டுச் சாமான்களையும் எதிர்பாராத நந்நாட்டில் அவைகளைப் புக விடுதலும், வாங்கி உபயோகித்தலும், நம்மவர்களின் மதியீனத்தை நன்கு விளக்குகின்றன. நந்நாட்டார் கண்களை மயக்க இறக்குமதியாகும் அவைகளைக் கொண்டு மகிழ்வோர், எட்டிக்கனி அழகாயிருக்கின்றதென்று கொண்டு வாழைக் கனியை விலக்கி விடுபவர்க்குச் சமான மாவார். இலையிற் சோறுண்பதே ஏற்றமென்று, களியையுங் கூழையும் விலக்க வழிதேடுவது பாமரர் செய்கையாகும். கூழுங் களியுமே சத்துள்ள ஆகாரங்களாம். அவைகளுக்குக் கறிவகைகளும் குழம்பி ரசங்களும் விதம் விதமாய் வேண்டியதில்லை. கூழை உண்ணத் தேங்காய் முதலியவைகளாற் செய்த துவையல் ஒன்றே போதும். களியைத் தின்னத் தயிரோடு விளங்கனி, தூதுளை, இஞ்சி முதலியவைகளில் ஏதேனும் ஒன்றிற் செய்த பச்சடியே போதும். சோறு சத்தற்றதாகையால், அதைத்தின்று வயிற்றை நிரப்ப வழிபார்க்கு மதியிலிகள் தாம்



பருப்பென்றும், நெய்யென்றும், கூட்டென்றும், குப்
யென்றும், புளிப்பென்றும், உறைப்பென்றும், குழம்பென்
றும், இரசமென்றும், பொரியலென்றும், அவியலென்றும்
எத்தனையோ விதம் விதமான வீண்பதார்த்த அனுபானதி
களை விரும்பிக்கொண்டு இடம்பாகாரமாய்த் தம்மைத்தாமே
மெச்சி உச்சிதம் பேசித் தேகபலத்தைக் கெடுத்துக்
கொள்வார்கள். கஞ்சியாகிய சத்தை வடித்துக் கொள்ளும்
வெந்த சோறாகிய எந்தச் சோறும் அசத்தான ஆகார
மென்றார் லாலா லஜபதிராயர். நந்நாட்டாருடைய உடற்
சுத்தம் உடைச் சுத்த முதலியவைகளை யெல்லாம் அவர்
எத்தனையோ விசேடமாக மதித்துப் பேசினார்; தென்
னாட்டாராகிய நந்நாட்டாரே, வீடு சுத்தம், வாசல் சுத்தம்,
உடைச் சுத்தம், உடற் சுத்தம் முதலிய வைகளில் வட
நாட்டாரைப் பார்க்கிலும் எத்தனையோ முறை ஏற்ற மான
வர்களென்றார். நாம் வாழையிலையில் உண்பதை அவர் வியந்
தார்; நாம் வீண் தட்டுமுட்டுச் சாமான்களையும், கயிற்றுக்
கட்டில், நாற்காலி முதலியவைகளையும் வீட்டில் நிரப்பி
வைத்துச் சுகாதாரத்தைக் கெடுத்துக் கொள்ளாதவர்க
ளென்று புகழ்ந்தோதினார்; நம்முடைய வாழ்க்கையே வீண்
செலவற்ற உத்தமவாழ்க்கையென்றார். இவைகளை யெல்லாம்
அவர் பெரும்பாலும் நாட்டுப் புறத்தாரைத் தாம் நேரிற்
சென்று கண்டுவந்த அனுபவத்தாலேயே பேசினார். ஆனால்,
அவர், நந் நாட்டார் கஞ்சி வடித்த திப்பியாகிய சோற்றை
யுண்கிறார்களாகையால், அதுவொன்றே தேக பலவீனமான
பழக்கம் என்றார். சோறுண்பாரைக் கணக்கிட்டுப் பார்த்
தால், நந் நட்டாரில் வெகு சிலரே தேறுவார்கள். அவர்
களிற் பெரும்பாலாரும் நகரங்களில் வாழ்பவரே யாவார்கள்.
நாட்டுப் புறத்தாரில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேரும்
கூழ், களி, அடை முதலிய சத்தான உணவுண்பவர்

களாகவே யிருக்கிறார்கள். அவர்களைக் கவனித்த பிறகும் லாலாஜி யவர்கள் சோறுண்பாரை வெறுக்கிறார். ஏன்? சோறுண்ணும் வேதியர் முதலியோர், தம்மைச் சத்துவ குணமுள்ள உத்தம புருஷர்களா மதித்திருக்கிறார்கள். கூழ், களி முதலிய வுண்போரை அவர்கள் தாமத குணமுள்ளவர்களென வெறுக்கிறார்களென்பதை லாலாஜி அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. அவர், தந்நாட்டார் அதிசத்துள்ள பூரி உரொட்டி முதலிய ஆகாரமுண்பதே விசேடமென்று கொண்டுள்ளார். ஆனால் இவர்களைப்போல் அவர்கள் படிப்பிலும் மதிநுட்பத்திலும் அவையிற்பேசும் வல்லமையிலும் அத்தனை சிறந்தவரல்லரென்று அவரே ஒப்புக்கொள்ளுகிறார். ஆகையால், தேகபலம் வேண்டினோன், பூரி, உரொட்டி, களி, கூழ்முதலிய ஆகாரங்களையே உண்ணக்கடவன். புத்திபலம் வேண்டினோன், பூரியையும் களியையும் கொஞ்சம் கஞ்சிவடியாத பொங்கல் முதலியவை களையும் கூடுமானால் நெய்சேர்த் துண்ணக்கடவன். தேக பலமே புத்திபலமாகையால், அவரவருடைய தேகசுகத்திற்கும் சீதோஷ்ணநிலைக்கும் உகந்தபடி யாரும் மேற்குறித்த வுணவுகளில் எதையேனும் உண்ணலாம். ஆனால், சோற்றை மட்டும், சில மகமதியரைப்போலக் கஞ்சிவடியாமல், சமைத் துண்பதே நல்லது. உண்பவைகளில் எதையும் சத்தைப் போக்கி உண்பது உகந்ததன்று. பாலையும் ஏடேறுஞ் சூடேறக்காய்ச்சுவது இசைந்ததன்று. மனிதனுக் குகந்த ஆகாரமாகிய இலைக்கறி காய் கனி கிழங்குவகைகளிலெதை யும் பச்சையாக உண்ணப் பழகுவதே பான்மையாம்.

உண்டபிறகு வாயைப் பதினாறுமுறை நீர்விட்டுக்கொப் புளித்துப்பூசுவதே விதியாகும். எச்சிலையைத் தொலையி லெறிந்து, உண்ட இடத்தைக் கோமயத்தாற் சுத்தமாய் மெழுகுவதே உத்தமமாம். பானபாத்திரத்தைக் கெளவிப்



பருகுவதே சேமமாம். ஆனாலும், தாம்தாம் வாழுமிடத்தி லேயே அது சரியாகும். வேற்றிடத்தில் அங்ஙனஞ் செய்வது உசித மன்று. அவர்கள் விரும்பினாலும், அது அநுசிதமே யாகும். தம்வீட்டிலும் ஒவ்வொருவர்க்கும் தனிப் பானபாத் திர மிருப்பதே ஒழுங்காகும்.

உண்டபின் தாம்பூலம் மெல்லுதல் தகாதென முந்தியே மொழிந்துள்ளேம். ஆயினும், அதையே விடாப் பழக்கமாய் நாளொன்றுக்குக் கணக்கற்ற முறையாக, ஆடு தழை மேய் வது போல மென்றபடியிருப்பாரையே அதிகமாய் எச்சரிக் கின்றோம். திருமணமுதலிய சந்தோஷகாலங்களில் அருமை யாய்த் தாம்பூலமெல்வதை நாம்தடுக்கவில்லை. படுக்கையறை யிலும் அதை விலக்கிவைப்பதே பண்புடையோர் செய்கை யாகும். பல்லில் இச்சைவைத்தபேர் தாம்பூலத்தை அற மறக்கக் கடவர்.

வாதபித்த சீதளங்களால் வரும் நோய்கள், அதிகமாய் உண்டாலும், அன்றிக்குறைவாக வுண்டாலும் துன்பஞ்செய் யும் என்னுங் கருத்தமைந்த பின்வருஉம் திருக்குறளைக் கவனித்துக்கொள்க:

'மிகினுங் குறையினு நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று'

குறைத்துண்பது கூடாவேனும் அடிக்கடி விரதமிருப் பது விசேஷமாம். விரதமென்பது ஒருபொழுது. இதுவே நோயற்ற வாழ்வு வாழவேண்டியதற் குகந்த இல்லறத்தான் உத்தம வழியாகும். இருபொழுதுண்ணும் இல்லறத்தான் வாரத்துக்கொருமுறை யல்லது இருமுறையேனும் ஒரு பொழுதுண்டால், 'இலங்கணம் பரமௌஷதம்' என்றபடி ரோகபரிகாரமாகும். இல்லறத்தானுக்கு விரதம் அல்லது நோன்பென்பது, 'நோன்பென்பது கொன்றுதின்னாமை' என்பதிலிருக்கிறது. கொல்லாவிரதமே ஈரறத்தார்க்கும்

சிறந்தவிரதமாம். துறவறத்தானுக்கு நோன்பென்பது, 'காப்பதுவிரதம்' என்பதிலிருக்கிறது. "ஐம்பொறிகளையும் புலன்களின் வழியிற் செலுத்தாமையே விரதமாம்" என்பதின் பொருள். இது இல்றத்தானுக்கும் ஆகும். ஆனாலும், நந்நாட்டுவழக்கப்படி ஒரு பொழுதிருப்பதும் உத்தமமாம்.

'சீரணமானது தெரிந்து, பிறகு உண்பதே அறிவுடைமைக்கழகாகும். அங்ஙனம் உண்போனுக்கு மருந்து என்பதொன்று என்றும் வேண்டுவது இன்று' என்னுங்கருத்தமைந்த பின்வருஉம் திருக்குறளைக்கவனித்து,

"ஞாலந்தான் வந்திடினும்
பசித்தொழிய உண்ணேம்"

என்னும் தேரையர் வாக்கின்படி, நன்றாய்ப் பசித்தபிறகே ஒவ்வொருவரும் உண்ண வேண்டும்:

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய (து)
அற்றது போற்றி யுணின்"

"முன் உண்டது செரித்துப் பசித்தபின்பும் அளவறிந்து உண்ண வேண்டும். அப்படி யுண்டால்தான் ஆயுள் வளரும். அளவுகடந்துண்பவன், அகாலமரணம் அடைவான்" என்னுங் கருத்தமைந்த திருக்குறளையும் பாடம்பண்ணுக:

"அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு"

"நன்றாய்ச்செரித்தது தெரிந்து, பசி அளவறிந்து, ஒருவன் உடல் நிலைக்கு உகந்த பதார்த்தத்தையே உண்ணக்கடவன் - தனக்கு ஆகாத பதார்த்தத்தையும் விருந்துண்ணுங் காலத்தில் முக இச்சைக்காக உண்டுவிட்டு திண்டாடப்படாது" என்னுங்கருத்தமைந்த பின் வருஉம் பெருநாவலர்வாக்காகிய திருக்குறள் வேத நெறியைக் கடைப்பிடிதொழுகுக:



"அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து"

"இரவில் இலைக்கறி, மோருண்ணல், பகலில் பலோ
டுண்ணல் முதலிய மாறுபாடின்றித் தன்மனம் போனபடி
யன்றி, உடல் நிலைக்குகந்தபடி ஒருவன் உண்ணுமேல்,
அவன் உயிர்க்கு என்றென்றுந் துன்பமென்பதே யில்லை"
என்னும் பின்வருஉம் திருக்குறளையும் மனப்பாடம்
பண்ணி மாண்புறுக:

"மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு"

"தன் உடல் நிலை உணராமலும், பசியள வறியா
மலும், கண்டது கண்டபடியும் கொண்டது கொண்டபடி
யும் உண்டது உண்டபடியே ஒருவன் முரடனயிருப்பா
னானல், அவன் காலமெல்லாம் நோயாளியாகவே கழிப்பான்"
என்னும் திருக்குறளையும் திருக்கின்றித்தேர்ந்து தெளிந்து
ஓதுக:

"தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்"

"அப்படி நோய்கொண்ட முரடனுக்கு வயித்தியஞ்
செய்ய வரும் ஒருவன், அவனுடைய நோயளவையும், அந்
நோய்வந்த காரணத்தையும் நன்றாய் ஆராய்ந்தறிந்து தவறு
மல் வயித்தியம் செய்யக் கடவன்" என்னுங்கருத்தமைந்த
செந்நாப்போதார் திருவாக்கை, நோயாளியும், அது தீர்க்க
வருஉம் வயித்தியனும் வகையாய் மதித்து மனப்பாடம்
பண்ணித் தெளிக:

"நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

"இன்னும் அந்த மருத்துவனே, நோயாளியின் உடற்
கூறளவையும், நோயளவையும், காலத்தின் தன்மையையும்

நன்றாய் நிதானித்தறிந்து மருத்துவம் செய்யவேண்டும்" என்னும் பின்வருஉங் குறளையும் தேர்ந்து தெளிக:

"உற்றா னளவும் பிணியளவுங் காலமும்
கற்றான் கருதிச் செயல்"

"பிணிக்கு மருந்தென்பது ஒன்றல்ல; நான்கு விதமானது. நோயாளியின் உடற் கூறொன்று; மருத்துவன் புலமையிரண்டு; மருந்தின் குண மூன்று; பத்திய பரிகாரத்தின் ஒற்றுமை நான்கு. இவைகளில் எதுவேனும் மாறுபடின் நோய் நீங்குவதரிது; மருந்து பலியாது" என்னுங் கருத்தமைந்த திருக்குறளும் ஒன்று:

"உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான், என்று
அப்பால் நால் கூற்றே மருந்து"

இப்படிப் பலபடி எழுதிக்கொண்டே போனால் இவ்வதிகாரம் பேரதிகாரமாய் வளரும். இச்சிறு நூலில் இடம் பற்றாது. ஆகையால், இதை இவ்வளவில் நிறுத்துகிறோம். நோயற்ற வாழ்வே சால்புடைத்தென்று காணவேண்டுவார், இவ்வதிகாரப் பொருளை நன்றாய் ஆய்ந்து கொள்வதோடு, அடுத்த அதிகாரத்தையுந் தப்பறக் கண்டு தெளியவேண்டும்.

## எழாம் அதிகாரம்

### (பதார்த்த குணமே யதார்த்த நலமெனல்)

"பார்க்கின்ற வெல்லாம் பதார்த்தங்களாயிருப்பதனால், பதார்த்த குணம் அறிந்து சொல்ல யாராலாகும்? சொல்லாமல் விட்டாலும் பழியாகும்" என்னுங் கருத்தமைந்த பின்வரும் ஈரடிகளைக் கவனிக்க:



"பதார்த்தகுணஞ் சொல்வதெவன் பார்க்கின்ற வெல்லாம்
பதார்த்த மெனில் நீக்கிற் பழியாம்"

இது பதார்த்தகுண சிந்தாமணியாருடைய வாக்கு. பதார்த்தங்கள் எண்ணிறந்தனவா யிருக்கின்றமையால், அவைகளின் குணங்களும் அளவிறந்தனவாம். ஆகையால் அவைகளை யெழுதப்புகின் ஏடிடங்கொள்ளா. சொல்லாமல் விட்டாலும் வீண் பழிக்கிடமாகும். ஆகையால் வெகு சனோபகாரமாகக் கொஞ்சந் தெரிந்த மட்டில் தீட்டுவோம்: பதார்த்தகுணந் தெரிந்தார் பாதிபண்டிதராவா ரென்பது, பண்டிதர் கொள்கை. "உலகில் சங்கீத முணராதவனும் வயித்தியந் தெரியாதவனும் எவனும் இல்லை" என்பது உத்தமர் கூற்று. சிறு குழந்தையும் கீதம் என்றால் அழுகையை நிறுத்தும். ஏற்ற மிறைக்கும் எழுத்தறிவில்லியும் தன்னிஷ்டம் போற் கஷ்டந்தெரியா துழைப்பதற்குப் பிள்ளையார் பாட்டுப் பிரமாதமாய்ப் பாடுகிறான்.

'மூங்கில் இலைமேலே' என்று இறைப்பை முடித்த ஏற்றக்காரன் பாட்டு, கம்பரையுங் கவலைக்குள்ளாக்கியது. பிறகவன், 'தூங்கும் பனி நீரே' என்று மறு நாளுதயத்தில் இறைக்கும்போது அதை முடித்த பிறகே, கம்பர் வந்து கவலை தீர்ந்தார். வயித்தியமும் இப்படியே கனமூடரும் அறிந்து சொல்லும்படி உலகில் நடை பெறுகிறது: "தலைவலி யென்றால் சுக்கிழைத்துப் போடு; தொண்டை வலி யென்றால், தேனுஞ் சுண்ணமுங் குழைத்துத் தொண்டைக் குழியில் பூசு" என்று சர்வசாதாரணமானவரும் சாற்றுவது இயற்கையாயிருக்கிறது. ஆகையால் நந்நாட்டுச் சிற்றின்பவாழ்வென்னும் இல்லறவாழ்க்கையிற் றிகழும் ஒவ்வொருவரும் கொஞ்சம் பதார்த்த குணஞானம் உள்ளவராகவே இருப்பார். கேள்வி முயல் என்றபடி கேட்டுங் கண்டு முணர்ந்த அரை குறைஞானத்தை விடக்

கற்றுத் தேர்ந்த நிறை ஞானமே எந்நாளும் நேரியதாகும். நாயனாரும் தமது தெய்வத்தமிழ் மறையில், 'கற்றிலனாயினுங் கேட்க' என்றார். கற்றிலனாயினும் என்று உம்மை கொடுத்துச் சிறப்பித்திருப்பதனால், கற்று அறிதலே முதன்மையானது. ஆகையால் இவ்வதிகாரத்தில், எல்லாரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு அவரவர் அவசியமாய் உண்ணவேண்டிய உத்தமப் பதார்த்தங்களின் குணவிலக்கணங்களையே கூறுவோம். இதுவும் சென்ற அதிகாரத்தின் நோக்கத்தைப் போலவே, 'நோய் வந்த பின் மருந்துண்பதைவிட, அது வாராமற்காப்பதே அறிவுக்கழகாம்' என்னும் நன்னோக்கத்தோடு நிலவுகிறது.

மனிதனுடைய உடல், உயிர், உடை, ஊண் முதலியவைகளுக்கு இன்றியமையாதனவான பதார்த்தகுண இலக்கண முணர்வாரே, சிற்றின்பவெற்றியிற் சிறந்தோராவார். வாதமென்பது வாயு, பித்தமென்பது சூட்டின் முதிர்ந்த கோழை, சீதளமென்பது ஈளை யென்னும் உணர்ச்சி எல்லார்க்கும் இருப்பதே இசைவாகும். சாதாரண சடபதார்த்த இலக்கண முணர்ந்தாரே மேலான ஞான பதார்த்த இலக்கணம் உணர்ந்தோராவார். இதற்குத்தான் சான்றோர் வஸ்து லக்ஷணம் என்பார்கள். ஒருவன் தன்னைச்சூழ்ந்த வஸ்து லக்ஷண முணர்ந்தாலன்றிப் பராபர வஸ்து லக்ஷணம் உணரமாட்டான். இதனாலேயே சிற்றின்பவெற்றியின் ஏழாம் அங்கமாகிய இவ்வதிகாரத் தலைப்பு, "பதார்த்த குணமே யதார்த்த நலமெனல்" என்று வந்திருக்கிறது. யதார்த்த நலம் என்றால், உண்மையின்பு—மெய்ச்சுகம்; பொய்ச்சுகமன்று. தன்னின் வேறாகிய பதார்த்த குணம் உணர்பவனே தன்னையறிபவனாவான். அவைகள் தன்னின் வேறானவைகள் அல்லவென்று காண்பான். தானே அவைகளென்றும், அவைகளே தானென்றும் தப்பற உணர்வான்.



தன்னையறிந்தவன் தலைவனைத் தப்பற உணர்வான். தானேயதுவாய் அது தானாய் விளங்குவான். ஜகமாகிய பதார்த்தங்களும், ஜீவமாகிய தானும், பரமாகிய தலைவனும் ஒன்று, வேறன்று என்று வெளிப்படையாய்க் காண்பான். ஜகஜீவபரமென்னும் மூன்றையும் வெவ்வேறாக் காண்பார் விவேகமுதிராதாரென்பது விவேகானந்தர் முதலிய விவேகிகள் கொள்கை.

ஆகையால் இவ்வதிகாரத்திற் கூறும் பதார்த்த குண இலக்கணங்களைக் கவனிப்பது மெய்ஞ்ஞான நிலைக்கு வழிகாட்டியாகும்.

பதார்த்த மென்பதை, நிலப்பதார்த்தம், நீர்ப்பதார்த்தம், நெருப்புப்பதார்த்தம், காற்றுப்பதார்த்தம், விட் (ஆகாயப்) பதார்த்தம் என்று ஐம்பெரும் பிரிவாக்கலாம். இவைகளைப்பற்றிச் சிற்றின்ப வெற்றிக் கனுகூலமானபடி சென்ற அதிகாரத்தில் கூறியிருக்கின்றோம். ஆயினும் அங்கே இவைகளின் உபயோகத்தையே மிகுதியாகவுந் தகுதியாகவுஞ் சாற்றினோம். இங்கும் இவைகளின் குணாகுணங்களைப் பற்றிச் சந்தர்ப்பம் வருந்தோறும் தீட்டுவாம். இவைகளின் சேர்க்கையால் விளையும் மற்றைப்பதார்த்த குணங்களை பலர்க்கும் பயன்படுமென்று தெளிக.

மண்ணின் உபயோகமே பதார்த்த குணத்தில் முதன்மையானது. மண்ணைத் தின்றால் பாண்டுரோகம் உண்டாகுமென்பது உண்மைதான். ஆனாலும், மேல் பூச்சால் அதாவது அதை மேலே பற்றாகத்தடவிக் கொள்வதால், ஒரே இடத்தில் கட்டிக்கொண்டுள்ள உதிரம் கரையும். வாதத்துக்கும் மண்பற்று மாற்றும். அதனால் வாத வீக்கமும் கரையும்.

பெண்கள் மூக்கிலும் காதிலும் அணிந்துள்ள உயர்ந்த கமலாலைகள், அடுப்புக்கரியைப் போன்றவை. அடுப்பு

கரியும் ஆயிரம் மதிப்புள்ள நீரோட்டமான வைரமும் ஒன்றுதாம். இரண்டிலும் கார்பன் இருக்கிறது. கார்பன் என்றால் கட்டைக்கரி யென்று பொருள். இது போலவே, பொன் என்னும் மஞ்சள்நிற மண்ணுக்கும் களிமண்ணுக்கும் பேதமில்லை. பொன், வெள்ளி, ஈயம், இரும்பு, செம்பென்னும் ஐந்து உலோகவகைகளும் மண் சம்பந்தமானவைகளாம். இம்மாதிரியான சாதாரண மஞ்சள் மண்ணையே, தெரியதார் பொன்னென்று வீண் ஆசைப்பட்டு, அதற்காகத்தம் உயிரையுங் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். மண்ணில் மறைந்துள்ள மஞ்சள் மண்ணாகிய பொன்னானது, கோலார் முதலிய இடங்களிலுள்ள சுரங்கங்களில், மிகவும் அற்பமாய் அகப்படுவதால், அதற்கு அத்தனை மதிப்பேறியிருக்கிறது. சுமார் ஒரு பல வெள்ளி மூன்று ரூபாவானால், அதே எடையுள்ளபொன் அறுபது ரூபா வாகிறது. பொன்னின் மதிப்பு வெள்ளியின் மதிப்புக்கு இருபது மடங்கு கொண்டதாயிருக்கிறது. இதை விட மதிப்பேறியது அம்பரென்பது. ஒரு தங்கக் காசெடை கொண்ட அம்பர் மூன்று தங்கக்காசு விலை கொண்டதாயிருக்கிறது. இதைப் பொன்னம்பரென்றும் சொல்வார்கள். ஒரு வராகனெடை பொன் ஆறு ரூபா வானால், அதே எடையுள்ள அம்பர் இருபது ரூபா வாகும். இதையுந் தங்கத்தைப் போலவே பஸ்மங்களிலும் இலேகியங்களிலும் சேர்த்துத் தாது புஷ்டிக்காக உண்பது வழக்கம். எந்தப் பொருளும் விலையுயர்வது, அந்தப் பொருளின் குணத்தையும், அது கிடைக்கும் மிதத்தையும், அதையெடுக்கும் விதத்தையும் பொறுத்ததாயிருக்கிறது. ஆகையால், மண்ணில் விலையுயர்ந்தன தங்கமும் பொன்னம்பருமாகும். கல்லில் விலையுயர்ந்தன மாணிக்கமும் வயிரமுமாகும். மாணிக்கத்தால், சுரநோய் சந்நிதோஷம் முதலியவைகள் தீரும். அதில் தக்கபடி



சிந்தூரம், பஸ்மம் முதலியவைகள் செய்து உண்டால், தீராத மேகரோகங்களெல்லாம் தீரும். கண்ணோய்கள் தீர்ந்து ஒளிமிகும். பாம்பு கக்கும் மாணிக்கம் அகப்பட்டால், வசிய மருந்தாகும்.

நிலத்தையும் நிலத்திற்கிடைக்கும் பொருளையும் பற்றி யெழுதிக்கொண்டே போனால் இவ்வதிகாரம் அதி விரிவான இடங்கொள்ளும். ஆகையால் இந்நூலைவாசிப்போர்க்கனு கூலமாக அதி அவசியமான பதார்த்த குணங்களைப் பற்றியே இங்கு எழுதுவோம். சிற்றின்ப வெற்றிக் கனுகூலமாகச் சிறந்த பதார்த்த குணவுணர்ச்சியே கணவன் மனைவியர், நோய் வருமுன் காத்துக் கவலையற்று வாழ்வதற்கு இன்றியமையாததாகும்.

பதார்த்த குணங்களை ஓதுவதற்கு முந்தி, அவைகளின் உற்பத்தியைச் சொல்ல வேண்டுமாகையால், ஆதியில், அனந்த சத்தியிடத்தில் ஆகாயம் தோன்றிற்று. ஆகாயத்தில் காற்றும், காற்றில் நெருப்பும், நெருப்பில் நீரும், நீரில் மண்ணும் பிறந்தனவாம். அந்த மண்ணிலிருந்தே மற்றைப் பதார்த்தங்களெல்லாம் யதார்த்தமாய்ப் பிறந்தனவென்பது யாவர்க்கும் கண்கூடாத் தெரியும்.

நீரின் பொதுக்குணம் எங்கும் ஒருமட்டமாய் வியாபித்தல். அதனால் நேத்திர வியாதிகள் தீரும். பலவித பித்தங்களும் பறக்கும். உடல் சூடு தீரும். வெட்டுக்காய உதிரம், சொறி முதலியவைகளும் நீங்கும். பல்லுறுதியும் விந்து விருத்தியும் உண்டாகும். ஆகையால், டாக்டர் கூனி முதலிய அமெரிக்கர் கண்டு பிடித்த வெந்நீர்க் (Warm Water Bath) குளியல் முதலிய சிகிச்சைகள், பற்பல நோய்களுக்குப் பாங்கான மருந்தாகும்.

எந்நீரினும் வெந்நீரே சிறந்ததாகையால், இளஞ் சூடான வெந்நீர் ஸ்நானமே எந்நோயையும் வருமுன்

காப்பதற்குத் தகுந்த மருந்தா யிருக்கிறது. இடுப்பளவு (Hip bath) முழுகிக்குளிக்கும் இள வெந்நீர் ஸ்நானத்தால் இருபாலாரும் எய்தும் நன்மைகள் எண்ணிறந்தன. இதற்குத் தொட்டிக் (Tub bath) குளியல் என்றுபெயர். உள்ளுக்கு வேறு மருந்துண்ணாமலே இந்த (Hip bath) இடுப்புக் குளியலால் எத்தனையோ வியாதிகளைப் போக்கலாம்.

மூன்றாவது நெருப்பென்பது உஷ்ணம். இதனாலும் அநேக வியாதிகள் அகலுகின்றன. வாத சீத பேத ரோகமும் கடுப்பும் நீராலேயே தீர்கின்றன. நெருப்புக்குப் பிறப்பிடமான காற்றின் குணங்களும் எண்ணிறந்தன. இது தாக சோகத்தையும் உஷ்ண ரோகத்தையும் தீர்க்கும். இளைப்பையுங் களைப்பையும் நீக்கும். ஆனால், இது மதுமேக ரோகரணத்துக்கும், வெள்ளை நோய்ப் புண்ணுக்கும், சுரம், கண்ணோய் முதலியவைகளுக்கும் ஆகாதாம்.

காற்றுக்குப் பிறப்பிடமான ஐந்தாவது பூதமாகிய ஆகாயத்தின் குணங்களை அளவிட முடியாது. எல்லாவற்றிற்கும் தாய்போலப் பிறப்பிடமாயுள்ள ஆகாயத்தின் குணங்களே மற்ற நான்கு பூதங்களுக்கும் அமைந்திருக்கின்றன என்னலாம். இந்த ஆகாயத்தையே அனந்த சத்தியென்பார்கள். இதுவே எல்லாப் பதார்த்தங்களுக்கும் பிறப்பிடமா யிருப்பதால், இதை யொரு சத்தியென்று உருவகித்துப் புராணங்கள் கூறுகின்றன. இந்தச் சத்தி பேதத்தையே வருணித்து சைவாசாரியரான மாணிக்கவாசகர் திருவாசகத்தில் எத்தனையோ இடங்களிற் பாடியிருக்கிறார்.

ஐம்பெரும் பூதங்களில் கடையிற் றோன்றியதாகிய மண்ணே மற்றெல்லாச் சராசரங்களுக்கும் ஆதாரமானது.



அதுவே முப்பத்தாறு தத்துவங்களுக்கும் முதலில் நிற்பது. அதன் ஆதாரத்திலேயே அசையும் பொருள்களாகிய சரங்களும், அசையாப் பொருள்களாகிய அசரங்களும் தோன்றி நின்றொடுங்குவது. ஆகையால் பதார்த்தங்களெல்லாம் மேற்குறித்த ஐம்பெரும் பூதசம்பந்தமானவைகளெனினும் மண்ணையே தமக்கு மாதுர்ஸ்தானத்தில் அதாவது தாயின் தன்மையிற் கொண்டுள்ளன. மனித வர்க்கமாகிய நாமும் மண்ணையே பிறப்பிடமாய்க் கொண்டுள்ளோம். மண்ணிலே பிறந்தோம். மண்ணிலே வளர்ந்தோம். மண்ணிலே அழிந்தோம் என்கிறார் மாணிக்கவாசகர்.

‘நந்த வனத்தி லோராண்டி
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி (அதைக்)
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி’

என்றார் மற்றொருவர். இங்கே நந்தவன மென்றது மண்ணாகிய நிலத்தைக் குறித்ததேயாகும். இப்படிப்பட்ட நிலத்தின் தன்மையைக் குறித்துப் பேசிக்கொண்டே போனால் எண்ணத்தொலையாது, ஏடிடங் கொள்ளாது. ஆகையால், அதிற்றோன்றியுள்ள பதார்த்தங்களிற்சிற்றின்ப வெற்றிக்கு அனுகூலமாயுள்ள சிலவற்றின் குணங்களைமாத்திரம் இங்கு எடுத்து எழுதுவோம்:

நிலப்பிரிவு, இயற்கையளவால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென்னும் ஐந்தாகுமென்று முதலதிகாரத்தில் முந்தியே மொழிந்துள்ளோம். குறிஞ்சி யென்பது மலைநாடு. இங்கே விளைகின்ற மூலிகை முதலிய மருந்துப் பூடுகளெல்லாம் குணமுள்ளவைகளாம். ஆனால், மற்றை நான்கு நிலங்களிற் பிறந்தாரெவர்க்கும் இந்நிலத்திற் சதா வசிப்பதென்றால் கஷ்டமா யிருக்கும். இப்போது சமநில

மாகிய இங்கிருந்து, வேனிலிற் குளிர் ஒன்றையே விரும்பி நீலகிரி முதலிய மேட்டிடங்களாகிய குறிஞ்சிக்குச் செல்லும் பணக்கார மாக்கள் படும்பாடு பெரும் பாடென்பதற்குக் கேட்பானேன்? அவர்கள் எத்தனையோ பொருட் செலவால், அம்மேட்டிடத்தில் இடவசதியும், நீர்வசதியும், ஊண், உடைவசதிகளும் தேடிக்கொண்டும், குளிரின் பயன் ஒன்றையன்றி மற்றொரு பயனுமின்றி வயிற்றுப்பிசம் முதலிய நோய்களால் வருந்திக் கீழிறங்கி வந்துவிடுகிறார்கள். வசனுவியிற் புழுத்தபுழு, விஷமானாலும் அதிலிருக்கு மட்டுமே பிழைத்திருப்பதுபோல, அக்குறிஞ்சி நிலமாகிய மேட்டிடத்திற் பிறந்து வளர்ந்து வாழ்வாராகிய தொதுவர் முதலியவர்களுக்கே அது சரியான வாழ்விடமாகும். பணப் பெருக்கால், ஆங்கிலேயரைப்போல நாமும் குளிரை நாடி அங்குச் செல்வது பித்தர் செய்கையாகும். அதற்குச் செலவிடும் பணத்தை வெகுசனோபகாரமான காரியங்களிற் செலவிட்டால் எத்தனையோ ஏழைகள் சுகவாழ்வு பெற்று, வாழ்த்தி வரந்தருவார்கள்.

நெய்தல் நிலம் கடற்கரையை அடுத்தது. சென்னையும் நெய்தல் நிலமேயாகும். இதில் வசிப்பவர்களுக்குக் குடல்வாதமும், உடல்வாதமாகிய அண்டவாதமும் தொடருமென்பதற்கையம் இல்லை. இது மீனுண்ணும் நுளையர்க்கே சரியான இடமாம்.

முல்லை நிலம் காட்டிடமாகும். இதற்குக் காம்பு, புறம்பு என்பாரும் உளர். இவ்விடத்திற் பித்தவாத ரோகம் பிரபலியமாயிருக்கும். இது ஆடு மாடுகளுக்கு வசதியான இடமாகையால், அவைகளைக் காத்துப் பிழைப்பவர்க்கே சரியான இடமாம்.

மருத நிலமே மனிதவாழ்க்கைக் குகந்த இடமாகும். வாத, பித்த, சீதள பேதத்தாலுண்டாகும் பற்பல நோய்



களும் இந்நிலவசதியாற் றலை எடுக்காதோடும். இது ஆற்றோரமாகவும் ஊற்றோரமாகவும் இருப்பதால், இங்கு விளையும் சர்வ பதார்த்தங்களும் குணத்தால் தலை சிறந்து நிற்கும். ஆகையால், அவைகளை உண்டு சுகமாய் வாழும் மனிதர்களுடைய பெயரைச் சொன்னாலும் வாத நோய், சீத நோய் முதலியபேத நோயனைத்தும் அலறிப்பயந்து அப்பாலோடும்.

பாலைநிலம் மணற்காடாவதால், அங்கு வாழுமாந்தர் துன்பத்துக்கே இடமாய்த் துயருறுவார்கள். வாத, பித்த, சீதள ரோகங்கள் பலவும் அங்கு உலவினபடியே வரவேற்கும். மற்றை நான்கு நிலமாக்களும் நோய் கொண்டால், குணமடைவதற்கு மருதநிலத்துக்குச் செல்வதே நல்லதென்று வயித்தியர்கள் சொல்வார்கள். மருந்தாற் குணமில்லாவிட்டாலும், இடமாற்றத்தால் குணமுண்டா மென்றெண்ணும் மருத்துவர்கள், நோயாளிகளை வேறெங்கும் செலுத்தாமல், மருத நிலத்துக்குச் செலுத்துவதே வழக்கமாயிருக்கிறது.

'ஆறில்லாவூருக் கழகுபாழ்' என்ற ஔவை கருத்துக்கும், ஆறில்லா மருதநிலத் தூரென்று பொருள் கொள்வதே பொருத்தமாகும். மருத நிலத்தூர் ஆற்றோரமாயில்லையேனும், ஏரியின் பலம் பெற்றிருப்பின் ஏற்றமா மெனக. பெரும்பாலும் மருதநிலத் தூரெல்லாம் நெற்பயிர் விளைச்சல் உள்ளனவாய் ஆற்றோரங் களிலேயே அமைந்திருக்கும். இவ்விடத்திலேயே சான்றோராகிய பெரியோர் பிறந்திருப் பார்கள். எப்போதும் மருத நிலத்தை இடையிற் கொள்வதே ஏற்ற மெனக.

4. பாலை
1. குறிஞ்சி 3. மருதம் 5. நெய்தல்
2. முல்லை

சிலர்.

1. நெய்தல்
2. குறிஞ்சி
3. முல்லை
4. மருதம்
5. பாலை

என்று கொண்டு, இதனாலேயே முல்லை நிலமாக்களுக்கு இடையரென்று பெயர் வந்தது என்கிறார்கள்.

மாரி நீரே (மழைநீரே) மகத்தான குடிநீரிற் பரிசுத்தமான நீராகும். இது பிராணிகளுக்குக் குளிர்ச்சியையும், நல்லறிவையும், சுக்கில விருத்தியையும், சோணிதவளர்ச்சியையும் உண்டாக்கும். பனிநீர் (இரவிற் பெய்யும் பனி நீர்) உருகியே அநேகமாய் ஆற்று நீராய் ஓடிவருவதால், அதன் குண கணங்களுக்கு அளவில்லை. சொறி, கிரந்தி, குஷ்டம், காசம், தாபம், சோபம், கிராணி, வாதம், திரிதோஷம், வறட்சி, நீரிழிவு முதலிய நோய்கள் இந் நன்னீரால் நாசமாமென்க. எந்நாளும் மண்ணீரே தண்ணீராயிருப்பதால், மண்ணின் குணமே தண்ணீர்க்கும் இருக்கும். ஆகையால, ஆறு, குளம், ஏரி, மடு, கிணறு, சுனை முதலியவைகளின் நீர் அவ்வவ்விடப் பெயராலேயே விளங்கும். ஆற்று நீரால் வாதம்போம், பித்தம்போம், ஐயம்போம், தாகம்போம்; விந்து விருத்தி உண்டாகும். கங்கை, காவிரி முதலிய ஆற்று நீர்கள் வெவ்வேறு நற்குணங்களுடையனவாம். குளத்து நீர், தங்கு நீராயிருப்பதால், வாத ரோகத்தை வளர்க்கும்; மதுப்பிரமேக ரோகத்தையும் அதிகமாக்கும். அல்லி தாமரைக் குளநீர், அவைகளின் தாட்களும் இலைகளும் அழுக இருப்பதால், வாதபித்த தொந்தம், அசீரண பேதி, சொறி, சிரங்கு, கரப்பான், தாது நஷ்டம் முதலியவைகளை உண்டாக்கும். ஏரிநீர் எந்நாளுங் கூடாது, வாயுவை வளர்க்கும். ஆகையால் சென்னையிலுண்ணும் புழலேரிக் குழை நீரினும் கேணிநீர் எத்தனையோ ஏற்றமானது. பழங்காலத்துச் சென்னை வாசிகளின் குடி நீராயிருந்த ஏழு



கிணறு முதலிய கேணிக் குடிநீரே கொண்டாடத்தக்கதாம். ஓடைநீர் ஓடு நீராயிருப்பதால் ஒருவாறு கொள்ளலாம். தேகபுஷ்டி உண்டாக்கும். மலைச்சுனைநீர் ஆகாது. காய்ச்சல் நோய்க்கிடம் பண்ணும். ஆகையால், எந்நாளும் அதைக் காய்ச்சி உண்பதே அழகாகும். கேணிநீரென்னும் கிணற்று நீரே எந்நிலத்திலும் ஏற்றமாமென்க. இந்நீரால், அதிதாகம், அதிஉஷ்ணம், அதிதீபனம், சூலை, கடுப்பு, இடுப்புப் பிடிப்பு, குடைச்சல், மயக்க முதலியவைகளிலேதேனும் ஒன்று, சிறிது உண்டாகுமானாலும் கெடுதி செய்யாது. ஆற்றுநீர், ஊற்றுநீர், அருவிநீரே எங்கும் நல்ல நீராம். இவைகளில்லையேல் ஓடைநீரும், ஓடையுமில்லையேல் கிணற்று நீரும் ஏற்றமாமென்றுகொள்க.

அருவிநீர் அதிக குளிர்ச்சியாம். ஆனாலும் பித்தத்துக்கு நல்லது. வயல்நீர், மழையால் தேங்கும் நீர். ஆனாலும் உண்பார்க்கு வெள்ளை, இரத்தகாச முதலிய நோய்கள் வாராமல் தடுக்கும். உடலுக்கும் வலுவாம்.

சந்திர சூரிய கிரணங்கள் படாத நீர் ஸ்நான பானாதிகளுக்குதவாது. இது போலவே, புழு மலிந்தநீரும், சேறு குழம்பிய நீரும், சருகுதிர்ந்த நீரும் ஆகாவென்றறிக. எந்நீரையும் காய்ச்சி வடிகட்டி ஆற விட்டுக் குடிப்பது நல்லதாம். நீராகாரமென்னும் நிசித்தண்ணீர் வாத பித்த சிதன வறட்சியையும், தாக சோகத்தையும் தடுக்கும். மலச்சிக்கலைப் போக்கும். சுக்கிலத்தையும் அழகையும் வளர்க்கும். மலச்சிக்கலில்லாமல் மலங்கழியும். பசி தீபனத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் வழிகாட்டும். காலை வயிற்று நோயைப் போக்கும். இதை அதிகாலையிலுண்ண வேண்டும்.

சுத்தமாய் விடுகளிற் சேர்த்து வைத்த புளிங்காடிநீர் உட்கொண்டால் பித்தம் பறக்கும். அஜீரணம் அகலும். அதிசாரம் தீரும்.

கடல் நீர், காய்ச்சி உண்டால் குன்மந்தீரும். மலசலச் சிக்கல் நீங்கும். தந்தரோகம் விலகும். காய்ச்சாமல் பச்சையாயுண்டால், பெருவியாதி தீரும். உடற் குடைச்சல் ஓடும். இரத்தகுன்மம் தீரும். பெருவயிறு, வயிற்றுக் கட்டி கரையும். வாழைக் கிழங்குநீர் மட்டைநீர் முதலியவைகளால் நீர்க்கடுப்பு நீங்கும். எலும்புருக்கிநோய் தீரும். இளநீரை உண்டால், பித்ததோஷம் நீங்கும். வெப்பம் தீரும். உடற்பாரிப்பு அதிசாரம் முதலியவைகள் அகலும். மனந்தெளியும். நேத்திரம் குளிர்ச்சியாய்த் துலங்கும். ஆனால் அதிமூத்திர ரோகத்துக்கு ஆகாது.

செவ்விளநீரால் பித்தம் பறக்கும், ஆயாசம் அகலும். இளைப்பு, அயர்வு, கயம் முதலியவைகள் நீங்கும். இளநீர் புதியதே நல்லதாம். என்றும் இளநீர் இள வழுக்கையுடையதாயிருக்கவேண்டும். இளநீர்களில், பச்சை இளநீர், கேளி இளநீர், அடுக்கு இளநீர் முதலியவைகளே அதிக நல்லவைகளாம். காலையில் இளநீர் உண்ணக்கூடாது. உண்டால், குன்மம் உண்டாகும். மாலையில் உண்டால் எரிகிருமிவிலகும். அன்னமுண்டபிறகு இளநீர் உண்பதே என்றும் நல்லது. வாதபித்த தோஷம் தீரும். தாராளமாய் மல மிறங்கும். பசிதீபனம் உண்டாகும். நோய் இல்லை. இளநீரைச் சீவிக்கண்திறவாமல் தண்ணீரி லிட்டுக் காய்ச்சிப் பிற கெடுத்து ஆறவைத்து உண்டால், சகல தோஷமும் தீரும்.

பே... சுண்டாமல் மிதமாய்க் காய்ந்தாறின வெந்நீரால்,
விட... , கக்கல் முதலியவைகள் தீரும். வாந்தி, மயக்கம்,



மயக்கம், கண்ணோய், செவிநோய், சூலை, குன்மம் முதலியவைகள் தீரும். படியை முக்கால்படியாகச் சுண்டக் காய்ச்சின வெந்நீர் பித்தத்தைப் போக்கும். அரைபடியாகச் சுண்டக் காய்ந்த வெந்நீர் வாதத்தை நீக்கும். அவைகளைப் புது மட்பாத்திரத்திற் பெய்து வைத்து மறுநாள் உதயத்தில் உண்டால் வாத, பித்த, சீதளமென்னும் திரி தோஷங்களும் தீரும்.

தொண்டையிற் சோறடைத்துக்கொண்டு விக்கினாலன்றி, உண்பதற்கு முந்தி வெந்நீர் உண்பது கூடாது. உண்டால் மந்தமுண்டாகும். உண்ட பிறகு உண்பதே எல்லா நன்மைகளுக்கும் இடமாம். மத்தியிலுண்பது பசியைக் கெடுக்கும்.

படியைக் கால்படியாகச் சுண்டக்காய்ச்சிய வெந்நீரே எந்நீரினும் நன்னீராம். இதனால் சகல தோஷங்களும் தீரும். நடுக்கல், சுரம், பேதி முதலியவைகளும் நீங்கும். பொற்பாத்திரமே சற்பாத்திரமாம். இதில் வெந்நீரை ஆற வைத்துண்டால் வாதரோகம் ஓடும், கபம் ஒழியும். அரோசகம் அகலும். உஷ்ணம் சுரம் முதலியவைகள் தீரும். ஞானம் வளரும். வெள்ளிப்பாத்திரத்தில் வெந்நீரை ஆற வைத்துண்டால், உஷ்ணம் தீரும். குன்மமும், பித்த சுரமும் நீங்கும். உடலுக்கு வன்மையும் நன்மையும் உண்டாகும். செப்புப் பாத்திர வெந்நீரும் சிறந்ததாம்; கண் புகைச்சலைத் தீர்க்கும். வெண்கலப் பாத்திர வெந்நீர் இரத்த புஷ்டியாம். இருப்புக் கெண்டி வெந்நீர் பாண்டு ரோகத்தைத் தீர்க்கும். தாது புஷ்டியை உண்டாக்கும்.

மேற் குறித்த பாத்திர வகைகளுக் கெல்லாம், மட்பாத்திரமே சிறந்ததென் றுணர்க. மட்பாத்திரத்திற் கா... (ஒன் மட்பாத்திரத்தில் ஆறியவெந்நீரே மகத்தான நன்மை

தாம். 'உண்டால், முலைப்பாலை உண்' என்ற தேரையர் வாக்கின்படி பால் வகைகள் அனைத்திலும் மனிதனுண்பதற்குச் சிறந்தது முலைப்பாலே ஆகும். இதனால் சகல தோஷ நிவாரணமாகும். இதைக் கறவாமல் வாய் வைத்துண்பதே மிகச்சிறந்ததாம். உலக மரியாதையை முன்னிட்டு, இது வாயா தாகையால், கறந்தவுடனே உண்ணவேண்டும். உண்டால், வெப்பம் தீரும். சந்நி தலை காட்டாதோடும். நாவறட்சி பறக்கும். உடலுக்கு வன்மைதரும். ஔஷத அனுபானத்திற்கும், கட்கலிக்கத்துக்கும் முலைப்பாலே தலைப்பாலாம். தொண்டைக் குழியிற் கோழை கட்டி வலிக்கும் உயிர்க்கும் இதுவே கண்டாவிழ்தப் பிரயோகத்திற் கலக்கும் அமுதமாம். போமுயிரையும் மீட்கும் வலியுடையது முலைப்பாலேயாகும்.

கரியநிறப் பெண்ணின்பால், கண்வயித்தியத்திற்குச் சிறந்ததாம். உடல் வயித்தியத்திற்குதவாது. செந்நிறப் பெண்ணின்பால், திரிதோஷங்களையும் நீக்கத் தகுந்த உடல் வயித்தியத்திற்குதவும். விலைமாதர் முலைப்பால், வியாதியஸ்தருக் குதவாது. அதனால், சகல ரோகங்களும் வளரும்.

பசுப்பால், பாலர், விருத்தர், கௌமாரரென்னும் மூன்று பருவத்தார்க்கும் ஆகும். பழஞ்சுரம், பழம்புண், சூலைநோய், உடல் இளைப்பு முதலியவைகளை உடையவர்களுக்கும் ஆகும். இதனாலேயே, 'பசுவின்பால் பிணிக்கு மருந்தாகும்' என்னும் பழமொழியும் வழங்குகிறது. வெள்ளைப்பசுப்பால் பித்தத்தைப் போக்கி விவேகத்தை வளர்க்கும். செந்நிறப் பசுப்பால் வாதத்தை நீக்கும். சாம்பல் நிறப் பசுப்பால், சீதளத்தைத் தீர்க்கும். காராம் (கருமை நிறப்) பசுப்பால், விழி நோய்க்காகும். கயரோகத்தைப் போக்கும். இராஜ வசியமாகும். பகலிற் கறக்கும் பசுப்பாலை விட இரவிற் கறக்கும் பசுப்பாலே எந்நாளும் ஏற்றமான



தென்று கொள்க. எருமைப்பால் எத்தனை அருமையான சுவை யுடையதென்றாலும், வாயுவை வளர்க்கும். புத்தியை மந்தமாக்கும். கைகால் திமிர் உண்டாக்கும். எந்த மருந்துக்கும் ஆகாமல் அதை முறித்துக் கெடுத்துவிடும்.

வெள்ளாட்டுப் பாலை நம்பலாம். அது, ஆடு தீண்டாப் பாலை தவிர மற்றெல்லா இலைவகைகளையும் மேய்ந்து பால் கொடுப்பதால், அதன் பால் குழந்தைகளை வளர்க்கும் சஞ்சீவியாம். மருந்துகளுக்கு உகந்த அனுபானமாம். அதனால், சுவாசகாசம், சீதாதிசாரம், கபதோஷம், வாதவீக்கம், சோகை வீக்கம், இரத்தக்கேடு முதலிய ரோகங்கள் தலையெடுக்காதோடும். இப்பாலை யுண்பார்க்கு நல்ல சீரணமாவதால், பசிக்குக் குறைவில்லை. செம்மறியாட்டின்பால், எதற்குஞ் சிறவாது. அதை எல்லாரும் தள்ள வேண்டுமன்றிக் கொள்ளுதல் கூடாதாம். அதனால் வயிற்றுப்பிசம், வயிற்று வலி, வயிற்றுப் போக்கு முதலிய பல நோய்களும் அதிகரிக்கும். யானைப்பால், குதிரைப்பால், கழுதைப்பால் முதலியவைகளும் சிற்சில வியாதிகளுக்கு மருந்துகளாம். யானைப் பாலால் வாதந் தீரும். சுக்கிலம் வளரும். உடல் வலுக்கும். குதிரைப்பாலால் தாதுபுஷ்டி யாகும்; புணர்ச்சியில் நிர்வாகமுண்டாகும். கழுதைப்பாலால், வாதநோய், கரப்பான், சொறி, கிரந்தி, பித்த தோஷம், கபநோய் முதலிய பல வியாதிகளும் தீரும்.

அமெரிக்கன் டாக்டர் கூனி யென்பார் சொல்கிறபடி பசுப்பால் முதலிய எல்லா மிருகப்பால்களும் அவ்வக் கன்றுகளுக்கும் குட்டிகளுக்குமே உரியனவாம். ஏனென்றால், அவைகள் தாம் தத்தம் தாய்முலைக் காம்புகளில் வாய்வைத்துண்ணக் கூடியவைகளாம். முலைக்காம்புகளில் வாய்வைத்துண்ணாத பால்கள், விஷத்தன்மை யுடையனவாம். ஆகையால் நமது முன்னோரும், 'கறந்த மூன்றே முக்கால் (ஒன்

றரை மணி) நாழிகைக்குள் உண்ணாத பால் உதவாது' என்று ஒதுக்கிவைத்திருந்தார்கள். இப்போது நந்நாட்டாரைப் பிடித்திருக்கும் புதுப் பைத்தியமாகிய காப்பிப் பைத்திய நோய் எந்தப் பாலையும் உறிந்துவிடுகிறது: அது பசுப் பாலானாலும் சரி; எருமைப் பாலானாலும் சரி; சீர்மைப் பாலானாலும் சரி; கறந்து எத்தனை நாழிகை அல்ல, நாளானாலும் சரி; மாதமானாலும் சரி; வருஷமானாலும் சரி; இங்கிலாந்தில் கறந்ததானாலும் சரி; சுவிஜர்லாந்தில் கறந்ததானாலும் சரி. எல்லாம் காப்பியிற் கலந்தால்சரி, கொக்கோவிற் கூடினால்சரி. தேயிலையில் தேங்கினால்சரி. கொஞ்சம் சர்க்கரை கலந்திருந்தால் போதுமென்று குடித்து விடுகிறார்கள்.

ஐந்து வயதுக்கு மேலானபிறகு மனிதனுக்குப் பாலே அனாவசியம். பாலுண்ணாமலே மனிதன் பிழைத்திருக்கலாம். இராவிற் படுக்குமுன் சில பணக்கார மாக்கள் ஒருபடி பாலேனும் சர்க்கரை சேர்த்துக் குடித்துவிடுகிறார்கள். அதனால் வருங் கெடுதிகளுக்கு அளவில்லை. மதுமேக ரோகமென்னும் அதிமூத்திர வியாதிக்குப் பிறப்பிடம் பாலுஞ் சர்க்கரையுந்தான். இதனாலேயே பெரியோர், பாலைப் பாலாயுண்ணாமல், தயிர் மோர் நெய்யென்னும் நாம ரூப மாற்றத்தால் உட்கொண்டு வந்தார்கள். காய்ந்தாறிய பாலில் ஏடுநீக்கிய பாலே எந்நாளும் சிறந்ததாகும். வெண்ணெயெடுத்தபால், பலவீனமானவர்களுக்கும் சிறு குழந்தைகளுக்கும் சிறந்ததாகும்.

எப்படியானாலும் பசுப்பாலைக் காய்ச்சும்போது, ஒன்றுக்கு அரைக்காம்பங்கு நீர்சேர்த்துக் காய்ச்சுவதே நல்லதாம். தனிப்பாலாக் காய்ச்சியுண்பது சகல நோய்களுக்கும் பிறப்பிடமாம். எருமைப்பாலை எந்நாளும் சரிப்பங்கு (சரிக்குச் சரி) நீர்விட்டுக் காய்ச்சுவதே நல்லதாம். வெள்ளாட்டுப் பாலையும் இப்படியே சரிக்குச் சரியாய்த் தண்ணீர் விட்டுக்



காய்ச்சவேண்டும். தேங்காய்ப்பால் சில வியாதிகளுக்காகாது. ஆனாலும், சுக்கில விருத்திக் கனுகூலமாம். இரச பாஷாணங்களுக்கு முறிப்புமாகும்.

வாசனை யூட்டும் மட்டிப்பால், தனிப் பாலாய்க்கிடைத்தால், நெருப்பிலிட்டுப் புகைப்பதால், தலைவலி, சலதோஷம், வாத கபவாந்தி, அருசி முதலியவைகளைத் தீர்க்கும். பிராயம் பால் என்று வழங்கும் காட்டுப்பிராய்ப் பால் பல்வலிக்கு நல்லது. இது தாது புஷ்டியுள்ளது. இதைப் பசுப்பால் முதலியவைகளில் விட்டால் அவை இறுகிப் பாற் கட்டியாகும். அவைகளை உண்பார்க்குப் புணர்ச்சியில் இச்சை வளரும். சங்கம் பால், தில்லைப்பால், கள்ளிப்பால், எருக்கம் பால் முதலிய எத்தனையோ எண்ணிறந்த பால்கள் மனிதனுடைய வியாதிகளைத் தீர்க்குமருந்துகளாய் நிலவியிருக்கின்றன. அவைகளின் குணாகுணங்களைத் தக்க மருத்துவர்களிடத்திற் கேட்டுத்தெளிக. வெள்ளெருக்கு, வெள்ளாமணக்கு முதலிய பால்களால் தீரும் வியாதிகள் எண்ணிறந்தனவாம்.

பசுத்தயிர் உடம்புக்கு நல்லது. பசியை வளர்க்கும். காசரோக நாசமாம். உடல் எரிச்சலை வாட்டும். எருமைத் தயிரும், அதன் பாலைப் போலவே, உடல் சுகத்தைக் கெடுக்கும்; ஆனாலும், பித்தத்தை நீக்கி, குளிர்ச்சியைக் கொடுக்கும். ஏடெடுத்த தயிரே எந்நாளும் நல்லதாம்.

பசுமோரால் நீங்கும் நோய்கள் பல: உடல் வீக்கம், மகோதாம், வயிற்றுவலி, பித்த பாண்டுரோகம், திரிதோஷம், வெப்பம், அக்கினிமந்தம் முதலியவை தலைகாட்டாதோடும். எருமை மோராலும் தாகசோகம், கிராணிரோகம், காமாலை, கிருமிமுதலியவை தீரும். ஆனாலும் பசு மோரைப் போல அத்தனை பாக்கியம் தருவதன்று. எருமை மோர் போகவிருப்பத்தை வளர்க்கும்.

வெண்ணெய்களில் முலைப்பால் வெண்ணெயே சிறந்த கண் மருந்துக் குபயோகமானதாகும். இதைப்போலவே பசு வெண்ணெயும் கண்மருந்தாய்ப் பாக்கியந் தருவதாகும். முலைப் பாலில் வெண்ணெய் எடுப்பதென்றால், எளிதிற் கூடாத காரியமாம். யாரோ நவாப் ஒருவன், நுங்குநீரில் ஸ்நானஞ் செய்தபடி, முலைப்பாலில் வெண்ணெ யெடுத்துக் கண்மருந்து செய்வது மாகும். பசுவெண்ணெயிற் கண்ணோய் மருந்தொன்று எமது பெரியோர் கைம்முறையாய் எம்மிடத்தி லிருக்கின்றது. அது செய்முறை அதிசுலபந் தான். ஆயினும், இதிற் கூறுவது கூடாத காரியமாம். எம்மிடத்தில் அம்மருந்து எப்போதும் கையிருப்பா யிருக்கின்றது. அதை யாம் முலைப்பால் வெண்ணெயிலேயே அதிக சிரமம் எடுத்துச் செய்து முடித்து வைத்திருக்கிறோம். கண்ணுக்கு யாதொரு நோயுமில்லையேனும், வாலக் கண்ணாடிகள் போட்டுக் கண்வியாதியை வருமுன் தடுத்துக் கொள்ளும் தற்காலத்திய வழக்கம் போலவே இம்மருந்தாகிய எம்மருந்தையும், வார வாரம் எண்ணெயிட்டுக் கொள்கையில், எவரும், கண்ணுக் கெண்ணெயிட்டுக் கொள்ளும் கடும்பழக்கத்தை விலக்கி, இருகடுகளவு எடுத்து இரண்டு கண்ணுக்கும் தீட்டிக் கொண்டால், சகல நேத்திர ரோகமும் நிவாரணமாகும். வேண்டுவோர், பிரசுரகர்த்தர்க்கேனும், எமக்கேனும் எழுதிப்பெறுக. ஒரு ரூபா மணியார்டர் அனுப்பிப் பெறுவதே உசிதமாம். தபாற்கூலி முதலியவைகளும் அதிலேயே அடங்கிவிடும்; வேறு கிடையாது.

பசு நெய்யால் மூலரோக நாசமாம். வயிற்றெரிச்சல், பித்தவாந்தி முதலியவைகளும் தீரும். எருமை நெய் எத்தனை அருமையானதானாலும் கண்ணொளியை மழுக்கும். வாதபித்த தோஷத்தை வளர்க்கும். காப்பான், சொறி, சிரங்கை உண்டாக்கும். வெள்ளாட்டுநெய் கூடாதென்று சில வீணர் விலக்குவார்கள். அது அவர்களுக்கு அனுபவக் குறைவே காரணமாம். வெள்ளாட்டு நெய்யால் கண்ணொளி வளரும், சரீரம் வளரும். வாதபித்த கோபந் தளரும்.



ஆமணக்கு நெய்யால், விரோசனம் சரியாயாகும். குன்மம், குடலேற்றம் தீரும். உடல், கண், மூக்கு முதலியவைகளின் எரிச்சல் நீங்கும். அதை எந்தவிதத்திலேனும் உட்கொண்டு வந்தால் உடல் நிறம் பொன்னிறமாகும். தாது புஷ்டியாய்ப் புணர்ச்சி யுணர்ச்சி வளரும். சிற்றாமணக்கு நெய், மருந்து தோஷங்களைப் போக்கும். வாதமூல உஷ்ணங்களையும் நீக்கும். குழந்தைகளைத் தாய் போலப் போஷிக்கும். பேயன் பழத்துண்டுகளை இதில் ஊறவைத்துக் கற்கண்டுத் தூளிட்டு நிதமொன்றாகக் காலையிலுமாலையிலும் உட்கொண்டுவரின் சரீரம் பொன்னிறமாய் மேனியிடும். எந்தநோயும் அணுகாமல் அகலும்.

எள் நெய்யும் அதிக உபயோகமானது. அதனாலேயே இதற்கு நல்லெண்ணெய் என்று பெயர் வந்திருக்கிறது. இதனால் புத்தி தெளியும். விழி குளிரும். மன மகிழும். தேகம் பருக்கும். பலமும் ஒளியும் வளரும். இது கிழவரையும் குமாரராக்கும். இதனால் சகலவித நேத்திர ரோகமும் நீங்கும். காது நோய், கபாலநோய், காசம், இரணம் முதலியவைகளும் நாசமாகும்.

வாதுமை நெய்யும் சாதாரணமானதன்று. மருந்துண்டு உடல் இரத்தம் கெட்டிருந்தாலும், உழைப்பினால் உடல் உஷ்ணமேறியிருந்தாலும் இந் நெய்யின் மகத்துவத்தால், அவைகள் அடியோடு தீரும். இது சுக்கிலத்தை வளர்க்கும். பஞ்சேந்திரியங்களுக்கும் ஒளி தரும்.

வேப்பநெய் கொஞ்சம் பித்தந்தான். ஆனாலும், மகாவாதநோய், கிரந்திநோய், காப்பான், சொறி, சிரங்கு

தம்பனவாதம், சுரம், சன்னி முதலியவைகள் அதனால் அடியோடு தொலையும். இலுப்பை நெய்யாலும் சில நோய்கள் வளரும். ஆயினும், சகல வாதரோக நிவாரணமும் உடல் வன்மையும் உண்டாகும்.

கடைசியாகத் தேங்காய் நெய்யால், நெருப்பிரணமும், தந்த மூலரோகமும், படர்தாமரையும், சிரங்கும் தீரும். கூந்தல் வளரும்.

கடுகு, நீரா (நீரடி) முத்து நெய்களும் சிலவியாதிகளைத் தீர்க்கும். எண்ணெய், பசுநெய், ஆமணக்கு நெய்யென்னும் முக்கூட்டு நெய்யில் முழுக்காடினால் பித்தவாத ரோக கோப நோய் மீறாது. சகல தோஷ நிவாரணமாகும்.

பசுச்சாணத்தால், இரத்த ஒழுக்கு, கிருமிநோய், கபசுர தாகம் இவைகள் தீரும். இது தேங்காய்ப் பாலுக்குச் சமானமானதாகையால் இரச பாஷாணங்களாலுண்டாகும் இரணத்தை ஆற்றும்.

எருமைச்சாணத்தால் ஆறாத சிரங்கு மாறும். காமாலை, பெரும்பாடு முதலியவைகளுந் தீரும்.

மனிதருடைய சிறுநீர் உவர்ப்பானது. ஆகையால் விஷ மருந்தாம். சோகையும், வாதமுந் தீரும். அதை வயித்திய முறைப்படி உட்கொண்டால், இருமல் சுவாசகாசம் முதலியவைகளும் நீங்கும். அதனால் நசியஞ் செய்தால், மேக மூத்திரம், கிரந்தி முதலிய வியாதிகள் வசியமாம். சிறுநீரால் கழுவினால், முகப்பரு முதலியவைகளும் மறையும்.

பசு மூத்திரத்தால் பாண்டுநோய், வீக்கம், காமாலை முதலியவைகளும் தீரும். எருமை மூத்திரம் சூடானது; ஆனாலும், காமாலை, பாண்டு, சோபை, பிரமேகம், கிருமி முதலிய ரோகங்களைத் தீர்க்கும்.



வெள்ளாட்டு மூத்திரம், சோபை, பாண்டு, வீக்கம், எரிச்சல், இரத்தகபம், மகோதரம் முதலியவைகளைத் தீர்க்கும். இவைகளுக்கெல்லாம் செய்முறை கைமுறைகளை அனுபவமுடையாரிடத்திற் கேட்டுத் தெரிக. யானை மூத்திரம், குதிரை மூத்திரம், கழுதை மூத்திரங்களும் பற்பல வியாதிகளுக்குப் பரிகாரங்களாம். யானை மூத்திரம் அதிதூல நோயை அகற்றும். குதிரைமூத்திரம் பாதப்புற்று, உடல் தழும்பு, வாதநோய், கபதோஷம் முதலியவைகளைத் தீர்க்கும். கழுதை மூத்திரம், உஷ்ணம், தாது நஷ்டம், காசம், இரைப்பு முதலியவைகளைத் தீர்க்கும். எல்லாம் செய்முறையின் தன்மையில் இருக்கிறதென்று தெளிக.

கரும்பில், இரசதாளிக் கரும்பு தாக வெப்பத்தைத் தணிக்கும். செங்கரும்பு பித்தத்தைத் தீர்க்கும். நாணற் கரும்பு பாண்டு முதலியவைகளை நீக்கும். எந்தக் கரும்பையும் நெருப்பிற் சுட்டு இரசத்தைப் பிழிந்துண்ண வேண்டும்.

வெல்லம் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் மதுமேக அதி மூத்திர காரணமாம். தேனால் பித்தவாந்தி, அரோசகம் முதலியவைகள் தீரும். மருந்தோடுண்டால் கபங்கழியும். தென்னை வெல்லம் மருந்துக்கு எடுத்ததன்று; பனை வெல்லத்தால், வாத பித்த வளர்ச்சி குன்றும்; சன்னிபாதம், அரோசகம் முதலியவைகளும் குன்மமுந் தீரும். சர்க்கரையும் பித்த அரோசகத்தை அகற்றும். மருந்துக் கனுபானமாம். சீனி சர்க்கரை, கற்கண்டு இவையிரண்டும் வாந்தி, வாதநோய், வெப்பம், விக்கல் முதலியவைகளை விலக்கும்.

தென்னங் கற்கண்டு மந்த மதியை வளர்க்கும். பனங் கற்கண்டு பலவித வியாதிகளைத் தீர்க்கும். மேக சுரம், வெப்பம், உஷ்ணதாகம் இவைகளை விலக்கும். ஈச்சங் கற்

கண்டால் பலவித நோய்கள் வரும். தேனிலுண்டாகும் கற்கண்டால் கட்படலம் தீரும். வாத கப நோய் வாடும். சங்கீதக் குரலோசை உண்டாகும்.

'சுக்கு திப்பிலி
வாலுளுவை மிளகு
அக்கடா ஒரு
மண்டலந் தேனிலே
அக்கடாக் குரல்
ஆரியம் பாடுமே'

"சுக்கையுந் திப்பிலியையும் மிளகையும் வாலுளுவையையும் ஏலரிசியையும் இளம்பதமா வறுத்துப் பொடித்து வஸ்திரகாயம் செய்து மலைத்தேனிற் குழைத்துண்டால், கடாக்குரலுங் காந்தார ராகம் பாடும்" என்பதிதன் கருத்து.

மேற் கூறிய ஐவகையான கடை மருந்தோடு தேன் சேர்வதே சிறந்ததாம். ஆகையால் தேனின் மகத்துவம் சொல்லுந் தரமன்று.

தென்னங்கள்ளால் இரத்தக் கழிச்சல் வரும். பனங்கள்ளால் வாதம் வளரும். இதில் பாஷாணங்கள் சுத்தமாகும். ஈச்சங்கள்ளால் திமிர் வாயு வதிகரிக்கும். ஆகையால் இவைகளைப் புளிக்க விட்டுக் கள்ளாக்கிக் கெடுக்காமல், இனிய சாறாகவே இறக்கிக் கற்கண்டு, சர்க்கரை, வெல்லம் முதலியவைகளாக்கி, வெளி நாடுகளுக்கு அனுப்புவதே விவேகமாகும். அத்திக்கள் அதாவது அத்திமர வேர்க்கள், *அத்திமேகம், உட்சூடு, தாகம் முதலியவைகளைத் தீர்க்கும். அதோடு சர்க்கரை, பேயன் வாழை இரண்டிலொன்றைச் சேர்த்து அதிகாலையிலுண்டால், உடலின் உட்சூடு உடனே தீரும்.

* அத்தி = யானை



சந்தனக் கட்டையால், மனமகிழ்ச்சி யுண்டாகும்; விவேகம் வளரும். மாதர் போகத்திலிச்சை அதிகரிக்கும். கட்டையா லென்றால், கட்டையை அரைத்துப் பூசுவதால், அல்லது, தூளாக்கிப் புகை பிடிப்பதால் என்று கொள்க.

அகருக் கட்டையால், பீனசம், தலைவலி முதலியவைகள் தீரும். இதனால் செய்த வாசனைப் புகை வர்த்தி அருமையானது.

சரக் கொன்றையால், பெரு வியாதி தீரும். பழமலம் இறங்கும். விஷந் தீரும். இதில் பேதியாகும் தன்மை உண்டு.

வாகை, விளா, வேம்பு, பாலை, வெப்பாலை, வேல், மூங்கில் முதலியவைகளும் நிழல் தருவதாலும் வீட்டுக் கருகிலிருப்பதாலும் விசேஷ நன்மையாம்.

செடிவகைகளில் ஆவாரையே முதன்மையானது. ஆண் குறியில் எரிச்சல், மூத்திரரோக முதலியவைகளைத் தீர்க்கும்.

பொன்னாவாரையால், தோல் வெடிப்பு, மேகப்படை, புண் முதலியவைகளும் தீரும். பூலாவின் சமூலத்தால், மாக்தம், கணச்சூடு, வயிற்றிரைச்சல், சொறி, சிரங்கு முதலியவைகள் விலகும்.

நின்று சிணுங்கிச் செடியால் பெண் வசியமாம். நிலம் புரண்டியால் ஆண் வசியமாம். புல்லுருவி, புலிதுடரி, பேய்துடரி, அல்லிவிரை, ஆலின்கீழ் ஆல், நெல்லியின் மேல் கோத்தான், மலைகலக்கி, நின்று சிணுங்கி, பொன்னூமத்தை, நீர் மேல் நெருப்பு, அழுகண்ணி, வாத மடக்கி, முடக்கத்தான், தொழுகண்ணி, கன்னித்துளசி, வெதுப்படக்கி, பேய்மருட்டி, ஆடு தின்னாப் பாலை, நாய் வேளை முதலியவைகளை

ளால் நல்ல மருந்துகளும் வசியங்களும் ஆகும். தக்க வயித்தியர்பாற் கேட்டறிக. நேய்ச்சட்டிப் பூண்டால், வீரிய விருத்தியாகும். வேம்பு நெய்யின் கசப்பு நீங்கும்.

ஓரிலைத்தாமரையை எலுமிச்சை யளவு அரைத்துப் பாலிற் கரைத்துக் காலையுமாலையும் ஒரு மண்டல முண்டால் பாலில்லா மாதர்க்குப் பாலுண்டாகும்.

ஆதொண்டையால் மண்டைக் குடைச்சல் வாங்கும்; வாதக் குடைச்சல் தீரும்.

கர்ப்பூர வள்ளியால் சீதள தோஷந்தீரும். குழந்தைகளுக்குக் கபவாதந் தீரும்.

பிரண்டையை நெய்விட்டு வதக்கித் துவையலரைத்துக் கொட்டைப் பாக்கத்தனை காலையுமாலையும் உண்டுவரின், ஆசனக் கடுப்பும் இரத்த மூலமும் இல்லாமல் ஓடும். பசியெடுக்கும். இன்னும் இதனால் குன்ம முதலியவைகளும் குன்றும்.

நறுந்தாளிக் கீரையால், நாவிற் புண், தொண்டையிற் புண், மார்பிற் புண், மூலத்திற் புண் முதலியவைகளும் ஆறும். சுக்கில மென்னும் தாதுவும் வளரும். இதுவேபோகம் விளைக்குங் கீரைகள் ஐந்தில் முதன்மையானது. இதன் இலையைக் காலைமாலைகளிற் கொஞ்சம் பறித்துப் பச்சையாய் உண்டு வந்தாலும் பற்றும். வேறொன்றுஞ் செய் முறை வேண்டியதில்லை. பருப்பிட்டுக் கறி சமைத்துண்டாலும் வெகு நன்றாயிருக்கும். இது, தானாகவே வேலிகளிற் படருங் கீரை. இதன் பூ வெள்ளையாய் நாய்க்குடைபோல் அழகாயிருக்கும். பச்சிலையுந் தின்பதற்கு மணமாய் உருசியாயிருக்கும். முசுட்டைக் கொடியின் இலையால் பொடிச்சிரங்கு தீரும்.



பொன் முசுட்டைப் பூண்டால், வாதவலி, மயக்கம், நமைச்சல், உட்சூடு இவைகள் தீரும். நஞ்சறுப்பான் பூண்டால், பூச்சிக்கடி, சர்ப்ப விஷம் இவைகள் தீரும்; சன்னியும் விலகும்.

முடக்கத்தான், எண்ணெயிற் காய்ச்சி, குழந்தைகளுக்குப் புகட்டுவது. வாதாதிக்கந்திர நல்ல பேதியுமாம். மூக்குறட்டை சீதநோய், வாதநோய் முதலியவைகளைத் தீர்க்கும்.

வெள்ளைச்சாரடைச்சாறு, பெண்களின் கருப்பத்தை வின்னப்படுத்தும் சூசிகா வாதரோகத்தைத் தீர்க்கும்.

(மூக்குறட்டை)

'சீத மகற்றும் தினவடக்கும் காந்திதரும்
வாத வினையை மடிக்குங்காண்—பேதி
கொடுக்குமதை உண்டாக்கால் கோமளமே பித்தம்
அடுக்குமோ மூக்குறட்டை ஆய்' (ப-ணி)

பொன்னாங்காணி விழிக்கு மருந்தாகும். வாதத்துக்கு வைரியாம். காசத்தை நாசமாக்கும். உடற் சூட்டை ஒழிக்கும். மூல ரோகத்துக்குக் காலனாம். உண்பார் உடலிற் பொன்னிறம் அளிக்கும்.

'காசம் புகைச்சல் கருவிழிநோய் வாதமனல்
கூசும் பிலீகங் குதாங்குரநோய்—பேசிவையால்
என்னாங்காண் இப்படிவம் ஏமமாம் செப்பலென்னைப்
பொன்னாங்கா ணிக்கொடியைப் போற்று' (ப-ணி)

அம்மான் பச்சரிப்பூண்டை அதிகாலை மாலைகளில் அடுத்தாற்போல் அரைமண்டலம் உண்டுவரின் எரிபுண், மலபந்தம், மேகக்கசிவு, நமைச்சல் முதலியவைகள் தீரும். சிவப்பு அம்மான் பச்சரிசியால் சுக்கிலதாது வளரும்.

இதிற் சிற்றம்மான் பச்சரிசி வயித்திய முறைகளுக்கும் உதவும். இதனால் சாதிலிங்கம் மெழுகாகும்.

கையாந்தகரை யென்னும் கரசணாங்கண்ணி, தந்த ரோகத்தையும் பாண்டு, வீக்க முதலிய தொந்தரோகத்தையும், குஷ்ட முதலிய பந்தரோகத்தையும் பறக்கடிக்கும். இதையே அதிகாலையில் பல் விளக்க உபயோகித்தால் காய சித்தியாம்.

உப்பிலாங் கோடியால் குழந்தைகள் மாந்தநோய், சுர முதலியவைகள் தீரும். இது தங்கத்தைப் பஸ்மமாக்கும்.

வல்லாரையால் மலக்கழிவும் இரத்தக்கிராணியுந்தீரும். இதை வீட்டில் இருப்பாய் வளர்ப்பது நல்லது.

'அக்கரநோய் மாறு மகலும் வயிற்றிழிவு,
தக்கவிரத் தக்கடுப்புந் தானேகும்—பக்கத்தில்
எல்லா ரையும்அருந்தென் றேயுரைத்து நன்மனையுள்
வல்லா ரையைவளர்த்து வை' (ப-ணி)

குமரியென்னுங் கற்றாழையால் வாதம், கபம், கிருமி, பெருவியாதி, மூலம், வயிற்றுநோய் முதலியவைகள் தீரும்.

வெள்ளெருக்கு, குன்மத்தைக் குறைக்கும்; வாதத்தை வதக்கும்; குடல் வாதத்தைக் குமைக்கும்; கீல் பிடிப்பை விடுக்கும்; நரம்பு நோயைக் கெடுக்கும்; தினவையும் சிறு சிரங்கையுந் தடுக்கும்.

யானை நெருஞ்சில் குளிர்ச்சி தரும்; வெள்ளை நோய்க்கு மருந்தாம். குஷ்டரோகத்தைக் குமைக்கும். தாகம், பித்த மயக்கம் இவைகளை நீக்கும்.

<u>அறுகம்புல்</u> வாதபித்த சீதள ஈளைகளை அறுக்கும். கண்ணோய், தலைநோய், உண்ணோய், முதலியவைகளை ஒழிக்கும்.



'அறுகம்புல் வாதபித்த ஐயமோ டீளை
சிறுக அறுக்குமின்னும் செப்ப—அறிவுதரும்
கண்ணோ யொடுதலைநோய் கண்புகைபி ரத்தபித்தம்
உண்ணோ யொழிக்கு முறை' (ப-ணி)

என்பது தேரையர் பாட்டு.

நூறு வருஷ வயதான பூவரசவேர் குஷ்டரோகத்தைக் குமைக்கும். பழுத்த இலையையும், விதைக் கொட்டையையும், பூவையும், பட்டையையும் கண்டாலும் புழுத்தபுண்ணும் பேதியும் ஒழியும்.

'நூறாண்டு சென்றதொரு நண்பூ வரசம்வேர்
தூறாண்ட குஷ்டத்தைத் தொலைக்குங்காண்—வீறிப்
பழுத்த இலைவிதைபூ பட்டையிவை கண்டாற்
புழுத்தபுண் விரேசனமும் போம் (ப-ணி)

இலந்தை வேரால் ஆயாசம் தீரும்; பசியுண்டாகும். இலை, மூலரோகத்தை முடிக்கும்; இரத்த மூலத்தையும் தடுக்கும். எருவாயெரிச்சல், கடுப்பு, மேகபித்தம் முதலியவைகளை விடுக்கும்.

(இலந்தை)

'வேருக்கா யாசம் விலகும் பசியுண்டாம்
சீரோத் திடுமிலைக்குச் சீழ்மூலம்—சோரிவிழல்
மேவெரிச்ச லுங்கடுப்பு மேகபித்த மும்போகும்
தாவமதில் வாழுமிலந் தை' (ப-ணி)

நறுவலியிலையால் இரைப் பகலும். வேரால் எலும் புருக்கிநோய் விலகும். பழத்தால் இரத்த பித்தமும் மேக ரோகமுந் தீரும். நுணாப்பட்டையால் காப்பான், சீதளசுரம் இவைகள் தீரும். கிரந்திப்புண் ஆறும். இலையால், மந்தந் தீரும். முருங்கைப் பிஞ்சால் திரிதோஷம் தீரும். பூ, போக முண்டாக்கும். விழியைக் குளிர்விக்கும். இலையால் வெப்ப

மாறும். பட்டை விஷத்தை நீக்கும். வேரால் வெப்பும் வாதச் சினமும் நீங்கும்.

பசுமுன்னைவேர் மருந்திற் சிறந்தது. வாதத்தையும் ஏப்பத்தையும் தீர்க்கும். அரோசகத்தைத் தீர்த்து, அன்னத்தையிறக்கும். அதன் இலை, எண்பது வாதரோகங் களையும் இனி *இல என்று சொல்லும்படி ஓட்டும்.

(பசுமுன்னை - பாட்டு)

'முன்னைவேர் வாதம் முதிரேப்பந் தான்போக்கும்
அன்ன மிறக்கும் அதன்இலைதான்—சொன்ன
இயல்வாதம் எண்பதையும் இல்லையெனச் செய்யும்
கயல்பொருவுங் கண்ணாய் கருது' (ப-ணி)

மாதுளைவேரும் பிஞ்சும் வாந்தியையும் அதிசாரத்தையும் அகற்றும். தாதுவை வளர்க்கும். கனி, தாகத்தைப் போக்கும். இலை, காய், மலர் இவைகளால் நீங்காத நோயில்லை.

'மாதுளைவேர் பிஞ்சிவைக்கு வாந்திஅதி சாரம்போம்
தாதுவுமாம் அக்கனிக்குத் தாகம்போம்—சூதைநிகர்
வன்னமுலை யாயிலைகாய் மாமலர்க ளுக்குமுனஞ்
சொன்னவையெ லாம்போகுஞ் சொல்' (ப-ணி)

வாழைக் கிழங்கு சூடாம். தண்டு குடலிற் சிக்கிய மயிரையும் கொண்டுவந்து விடும். பட்டைநீர், விஷமயக்கத்தைத் தீர்க்கும். பூ, மேகத்தை ஒழித்துத் தேகத்தைப் போஷிக்கும். பிஞ்சு, ஆசனக்கடுப்புச் சீதவேதி முதலியவைகளை அகற்றும். காய், உடல் முழுதும் வாயுவை உண்டாக்கும். ஆகையால், வாழைப் பிஞ் சன்றித் தேறினகாய் உண்பது கூடாது.

* இல = இல்லை



'நற்கதலிக் * கந்தம்அனல் நல்குந்தண் டோகுடலிற்
சிக்குமயிர் தோல்நஞ்சுந் தீர்த்திடுங்காண்—தொக்குறுபூ
மேகமொழிக் கும்பிஞ்சால் வெங்கடுப்பே குங்காயால்
தேகமுழுக் *கக்காலாந் தேர்' (ப-ணி)

ஆவாரைச் செடியின் வேர், பட்டை, இலை, பூ, காயென்னும் பஞ்சாங்கங்களால் மேகரோகம், மூத்திரதாகம், வெள்ளை, சூடு, கிரகணி முதலிய பஞ்சரோகங்களும் அஞ்சி அகலும்.

இதனாலேயே ஆவாரைச் சமூலத்தை வெய்யிற் புடமிட்டு, வீட்டுரலிலிடித்துப் பொடியாக்கிக் கொத்துமல்லி விதையோடும் அமுக்காரங்கிழங்கோடும் சேர்த்துக் காப்பித் தூளுக்கு வதிலாகக் கொள்வது நன்மையாம். இதுவே நன்றாகிய நந்நாட்டுக்கு அடுத்த காப்பிக்குடியாமென்று அப்போதே சொல்லியுள்ளோம்.

சங்கம் வேர் முதலிய சமூலமும் கண்டங்கத்தரியும் முறையே சூலை நோயையும், உட் சூட்டையும் போக்குமாகையால், உண்மையறிந்துகொள்க.

நாயுருவியைச் சாதாரணப் பூண்டென்று எண்ணப்படாது. அதிற் பல்விளக்கினால் முகவசீகரமாகும். அதனால் இரத்த மூலமும் அதிசாரமும் கபரோயும் விலகும். அதன் விதை முனிவர்க்கும் பசியடக்கும் அமுதமாம். அதன் சமூலச்சாம்பல் பிரசவித்த மாதர்க்கு வயிற்றழுக்கைப் போக்கும்.

மணத்தக்காளி யிலைக்கு நாப்புண் தீரும். வற்றல், நோயாளிக்கு மாகும்.

துவேளை யென்னும் தூதுளையும் சாதாரணமான தன்று. போகம் விளைக்கும் ஐந்து வகைக்கீரைகளில்

* கந்தம் = கிழங்கு. * கால் = வாயு

ஒன்றாகும். இதன் இலையை நெய்யில் வதக்கித் துவையலரைத்துண்டால் நாவுக்கினிமையாம். பூ, தாதுவை வளர்க்கும். பூவையுந் துவையலறைத்து முதற் சோற்றில் நெய் கலந்து மூன்றுபிடி நாற்பதுநாள் உண்டால் தாது வலுவடையும். காய் வாதபித்தகபத்தை மாற்றும். காயைக் குழம்பிலிட்டு அல்லது வற்றலாக்கி வறுத்துண்ணலாம். வேரும், பழமும், காயும் பற்பல நோயை நீக்கும்.

(விருத்தம்)

'தாது பத்திரி பூண்சுவை யாக்கும்பூ
தாது வைத்தலைப் பித்திடுங் காயது
வாத பித்த கபத்தையு மாற்றும்வேர்
ஓது வல்லிபன் னோயு மொழிக்குமே' (ப-ணி)

பனங்கிழங்காலும் உட்சூடும் பித்தமேகரோகமுந்தீரும். ஆனாலும் சிலர்க்கிது சுளுவிற் செரிக்காது. அளவாயுண்க. உண்டால், குளிர்ச்சியும் அழகும் உண்டாம்.

நிலப் பனங்கிழங்கு நிர்மலமானது. அதனால் மேகச்சூடு நீங்கும். வெண்குஷ்டம் விலகும். பக்கசூலை பறக்கும். புணர்ச்சியில் உணர்ச்சிவளரும்.

மெருகன் கிழங்கும், அழக்கராங் கிழங்கும் அசாத்திய நன்மை தரத்தக்கன. முன்னையது மூலரோகத்தைப் போக்கிக் குளிர்ச்சியுண்டாக்கும். பின்னையது கொஞ்சந் துவர்ப்புள்ளது. ஆனாலும், க்ஷயம், வாதசூலை, பாண்டு, கரப்பான், சுரம், வீக்கம், சலதோஷம் முதலியவைகளை நீக்கவல்லது. தாதுபுஷ்டி தரத்தக்கது. ஆகையால் பெண்களின் மேலிச்சையையும், பெரும் பசியையும் உண்டாக்கும். இதற்கு அசுவகந்தியென்றும் மறுபெயர் வழங்குகிறது. இதன் அருமையறிந்தே, காப்பிப்பொடிக்கு வதிலாக இதன் பொடியை ஆவாரைச்சமூலப் பொடியோடு சேர்த்துக்



கியாழமாக்கி உண்பது நல்லதென்று முந்தியே கூறியுள்ளோம். இந்நூலை வாசிப்போர் இதன் அருமையை வாசித்துணர்ந்தவுடனே நந்நாட்டுக்குதவாத கெடு வழக்கமாகிய காப்பிப்பொடியை அகற்ற வழிதேடவேண்டும்.

பூமிச்சருக்கரைக் கிழங்கென்றும் மற்றொரு சத்துள்ள நல்ல கிழங்குண்டு. இது வெள்ளை நோயைக் கொள்ளை கொள்வதற்கு உகந்த மருந்தாம். ஆகையால் இதிலும் கியாழம் அல்லது சூரணஞ் செய்து சீரணமாக வுண்டால் நன்மையாம்.

முள்ளங்கிக் கிழங்கைப்பற்றி அதிகமாய் எழுதுவது அனாவசியமாம். இதனால் வாதப்பிணி, சீதப்பிணி, கரப்பான், வயிற்றெரிச்சல், குத்தல், குன்மம், குடல்வளர்ச்சி, இருமல், கபம், தலைவலி, மூலம், * பன்னோய், முதலிய ‡ பன்னோய்களும் நாசமாம். இந்தக் கிழங்குவகைகளிற் கருணைக் கிரண்டாவதான சஞ்சீவியென்று சாற்றலாம். இதைச் சிலர் கேவலமென்று சாற்றுவார்கள். வெங்காயத்தையும் தெரியாதார் நாற்றமென்றே விலக்கமுயல்வார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் பெருங்காயத்தையும் நாற்றமென்று விலக்கிவிடவேண்டும். சிலர்க்கு முள்ளங்கியும் வெங்காயமும் இன்பமானால், பெருங்காயம் பெருநாற்றமாயிருக்கிறது. பெருங்காயம் வாசனையென்று கொள்வார் சிலர், முள்ளங்கியும் வெங்காயமும் துர்நாற்றமென்று விலக்க வழி தேடுகிறார்கள். குணநாடி ஒவ்வொன்றையுங் கொள்ள வேண்டுமன்றி முரட்டாட்டமாய்த் தள்ளப்படாது.

மஞ்சளும் சாதாரணமான கிழங்கன்று. இஞ்சிக்கு ஏற்றமானதாகக் கொள்ளவேண்டும். மஞ்சளால் உடலிற் றோன்றுங் கற்றாழை நாற்றம் பறக்கும். புருஷவசியம்

* பல்+நோய்=பல்வலி ‡ பல்+நோய்=பலநோய்கள்.

சிறக்கும். பித்த கபவாததோஷம் நீங்கும். தலைவலி, சல தோஷம், நாசிகாரோகம், வீக்கம், வண்டுகடிவிஷம், சொறி, சிரங்கு, இரணம் முதலிய எல்லாம் பறக்கும். அழகுவளரும். மேனி பொன்னிறமாகும்.

(வெண்பா)

பொன்னிறமா மேனி புலால்நாற்ற மும்போகும்
மன்னு புருஷ வசியமாம்—பின்னியெழும்
வாந்திபித்த தோஷமையம் வாதம்போந் தீபனமாம்
கூர்ந்தமஞ்ச ளின்கிழங்குக் கு

இஞ்சியும் இலேசான கிழங்கன்று. எல்லாரும் இன்பமா யுண்ணலாம். இதைச் சிறு துண்டுகளாக்கி எலுமிச்சை யூறுகாயில் சேர்த்துண்ணலாம். கொஞ்சம் சுட்டுத் துவைய லரைக்கலாம். நறுக்காமலே பெருந் தேருகத் தோலைச் சீவி மலைத்தேனி லூறவைத்துக் காலையிற் காற்பல மள வுண்டுவந்தால், காசம், கபம் நாசமாம். ஓக் காளம், வாந்தி, சூலை, வாத கோப முதலியவை நாசமாய்ப் பசி யுண்டாகும். அரோசகத்திற்கும், அசீரணத்திற்கும் இதுவன்றி மருந்து வேறில்லை.

காறுகருணை வேறுகருணையைப் போலன்று, சொறி சிரங்கு நமைகளை உண்டு பண்ணும். ஆயினும் மூலரோகத் துக்குக் காலனைப் போன்றது.

காறுக்கருணை சிலேஷ்மரோகம், வாதநோய், அக்கினி மந்த முதலியவைகளை நீக்கிப் பசியுண்டாக்கும்.

காட்டுக்கருணையும் மேற்குறித்த குணங்களுடையது தான். ஆனால் பசியையுங் காப்பானையும் அறிவப்படுத்தும்.

சேம்புக்கிழங்கு எந்நாளும் தேகத்துக் காகாது. தொண்டையில் கோழைகட்டும். நல்மருந்தின் குணமுங் கெடும். ஆனால் சிலர் மேகசாந்தி யென்பார்கள்.



சீந்திற்கிழங்கு (அமிர்தக்கொடி) இரத்த பித்த ரோகத் தையும், மாந்தம், சுரம், பேதி, பித்த முதலியவைகளையும் போக்கும். ஜடாராக்கினியை வளர்க்கும்.

கருடன்கிழங்கு பாம்பைப் பயமுறுத்தும். அரையாப் பையும், வெள்ளையையும், கொறுக்கையும் வேரறுக்கும். கரையாத கட்டியையுங் கரைத்துவிடும்.

(வெண்பா)

அரையாப்பு வெள்ளை யகலாக் கொறுக்கை
கரையாத கட்டியிவை காணார்—வரையில்
திருடரெனச் செல்லும்விஷஞ் சேர்பாம்பும் அஞ்சும்
கருடன் கிழங்குதனைக் கண்டு

மாவலிக்கிழங் (மாகாளிக் கிழங்கு) கை, யாரும் மறக்கக்கூடாது. அதிகஉஷ்ணத்தை ஆற்றும். பித்தத்தை மாற்றும். பசியை எழுப்பும். கபத்தை அறுக்கும். வாயுவைத் தணிக்கும்.

தண்ணீர்விட்டான் கிழங்கு நீரிழிவுக்கு மருந்தாகும். நாட்பட்ட சுரத்தை நசுக்கும். வெள்ளைக்குக் கைகண்ட மருந்தாகும்.

தாமரைக்கிழங்கும் கண்ணொளிக்கு நல்லது. குளிர்ச்சி தரும். காசம் நாசமாம். தவளைசொறி, வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

செவ்வல்லிக்கிழங்கு, நெய்தற்கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டிக்கிழங்கு, நிலப்பூசினிக்கிழங்கு ஆகிய இவ் வைந்தும் பஞ்ச மூலங்களென்று பெயர் பெறும். இவைகள் முறையே செம்பைச் சிந்தூரமாக்கவும், விழிக்கும் சுக்கிலத் தங்கும் குளிர்ச்சி வளர்ச்சி தரவும், உட்சூட்டை ஒழிக்கவும், மலபந்தம் நீக்கவும் வல்லனவாம்.

பெருவள்ளிக்கிழங்கின் பெயரைச் சொன்னாலும் வாயு வளரும்; மாந்தம் தொந்தமாம்.

சிறுவள்ளிக்கிழங்கும் இதற்குத் தம்பிதான். ஆகையால் குணமில்லை.

வெற்றிலை வள்ளிக்கிழங்கும் குணமில்லை. சர்க்கரை வள்ளியையும் குணமில்லை யென்று கூட்டாமல் விட வேண்டும்.

அறுகங்கிழங்கும், கோரைக்கிழங்கும் அசாத்திய குண முள்ளவைகள். ஆகையால் அவைகளை உணவாகவும் மருந்தாகவும் அருந்தலாம்.

வெங்காயக்கிழங்கு, மூலத்தைப் போக்கும்; பித்தத்தை நீக்கும், குளிர்ச்சியை ஆக்கும். ஆனாலும், இருமல், சந்நி, வயிற்றுப்பிசம் முதலியவைகளைத் தேக்கும்.

கிட்டிக்கிழங்கு பசியை வளர்க்கும். பித்தசாந்தி யாகும்.

உருளைக்கிழங்கு முதலிய எல்லாம் மூலவாயுவுக்காகா. எந்நாளும் யாரும் இரவுபகலாகக் கருணைக் கிழங்கைமட்டும் தாராளமாய்ச் சாப்பிடலாம்.

வில்வவேர், பாதிரிவேர், சண்பகவேர், மாமரவேர், இலுப்பைவேர் ஆகிய ஐந்தும் அசாத்திய பலன்தருபவை கள். எட்டிவேர் பாம்பு நஞ்சைத்தீர்க்கும். புங்கம்வேரும் பாம்பு நஞ்சுக்குப் பரிகாரமாம். சங்கம்வேரும் பேராமுட்டி வேரும் கபவாத சுரங்களுக்கு மருந்துகளாகும். அவுரி (நீலி) வேரால் அநேக விஷங்களும், வயிற்று வலிகளும் தீரும். வெட்டிவேர் அல்லது குருவேர் பித்த தாக சோபத்தைத் தீர்க்கும். மார்புச்சிலந்திப் பெண்களுக்கு மருந்தாம். முசுமுசுக்கைவேரும் கொடிவேலி யென்னும் சித்திரமூல



வேரும் முறையே விஷரோகத்துக்கும் மூலரோகத்துக்கும் முடிவான மருந்துகளாம்.

நன்னாரிவேரால் பித்தந் தீரும். அதைக் கற்றாழைச் சோற்றோடு கலந்துண்டால் வண்டுகடி போகும். மது மேகம், வாய்நீர்ச் சுரப்பு, புணர்ச்சியின் சூடு முதலியவைகள் வாங்கும்.

பச்சைவிலாமிச்சுவேர் அல்லது உலர்ந்த விலாமிச்சுவேர் இரண்டும் தாகரோகம், பித்தாதிக்கம் முதலியவைகளைப் போக்கும். திப்பிலி, பேரரத்தை, கொடிவேலிவேர், சுக்கு, கண்டுபாரங்கி யாகிய இவ் வைந்துக்கும் பஞ்சமூலி யென்று பெயர். இவை நாட்பட்ட சுரம் முதலியவைகளை நீக்கும்.

சிறுவழுதுணை, சிறுநெருஞ்சில், சிறுமல்லிகை, கண்டங் கத்தரி, பெருமல்லிகை ஆகிய இவ் வைந்து வேர்களும் சிறுபஞ்சமூலமாம். இவைகளும் நீராக் காய்ச்சல் முதலிய எண்ணிறந்த நோய்களைத் தீர்க்கும். இப்படியே பெரும் பஞ்ச மூலத்தையும் அஷ்ட, தசமூலங்களையுங் கொள்க.

அத்திப்பட்டை சிதபேதியையும், நாவற்பட்டை பெரும்பாட்டையும், முருங்கைப்பட்டை வாத தோஷத் தையும் நீக்கும். கருவேலம்பட்டைக்குப் பல்லிறுகும்.

மாவிலிங்கம்பட்டையால் சந்நி வாத நோய்கள் தீரும்.

கோஞ்சிப்பட்டை குழந்தைமாந்தம், வயிற்றுப் பொருமல், கணச்சூடு முதலியவைகளைப்போக்கும்.

ஆலம்பட்டை, அரசம்பட்டை, அத்திப்பட்டை, இத்திப் பட்டை, நாவற்பட்டை, ஆகிய ஐந்தும் ஐம்மரப்பட்டை யென்றுபெயர் பெறும். இவைகளால் தீரும் நோய்கள் பலவாம்.

மரியங் கொழுந்தை துவையலரைத்துண்டால் அரோசகமுஞ் சீதபேதியுந் தீரும்.

கருவேலங் கொழுந்தைத் தயிரிலரைத்துக் கலக்கிக் குடித்தால் விஷவேகந் தீரும். அதையே முலைப்பாலி லரைத்து அடையாக்கி உள்ளங்காலிற் கட்டினால் கண்ணோய் தீரும் (கைகண்ட மருந்து).

வேப்பங் கொழுந்தால் பெருவியாதி, குழந்தை மாந்தம், சுரமுதலியவைகள் தீரும்.

முருங்கைக் கொழுந்தால் உட்சூடு நீங்கும். இதையே துவரம்பருப்பிற் சமைத்து நெய்விட்டுச் சோற்றோடுண்டால் தாது இறுகும். போகம் விளைக்கும் கீரைகளைந்தில் இதுவே மூன்றாவதாகும்.

அகத்திக்கொழுந்துக்குப் பித்தம்போம். சீரணமாம். ஆனாலும் மருந்து முறியும்; வாயு பறியும். பசுமுன்னைக் கொழுந்து, கருவேப்பிலைக் கொழுந்து இவையிரண்டும் பித்த சாந்தியாம். முன்னையதைக் குழம்பாக்கியும் பின்னையதைத் துவையலாக்கியு முண்ணலாம்.

ஆடாதோடை இலை கபத்தைப் போக்கும். வாதத்தை நீக்கும். குழந்தை மாந்தத்துக்கு முதன் மூலி இதுவே யாகும்.

ஆடாதோடை, கோடகசாலை, தும்பை, துளசி, கஞ்சாங்கோரை ஆகிய ஐந்தும் குழந்தை மாந்தக் கியாழத்துக்கு எடுத்தனவாம். ஆகையால் பஞ்சமூலிகளென்று பெயர்பெறும். இவ்வைந்தின் கொழுந்தையும் வகைக்கு ஒரு பல எடை யளவா யெடுத்துப் பிட்டிட்டுப் பிழிந்து கோரோசனஞ் சேர்த்துச் சங்கிற் புகட்டினால் குழந்தைகளின் சுரதோஷ நோய்தீரும். இதைக் குழந்தைத் தாய்ச்சிகள் கவனிக்க வேண்டும்.

கருநொச்சி வெண்ணொச்சிக் கொழுந்துகள் முறையே மண்டைக் குடைச்சலுக்கும் பீநசத்துக்கும் மருந்துகளாம்.



பெரியாநங்கை பலவித பஸ்மங்களுக் குதவும்.

சிறியாநங்கை ஸ்திரி வசிய மருந்தாகும்.

துத்தி யிலை மூலரோக மருந்தாகும்.

விழுதியிலை மலாசயக் கிருமி நோய்க்கு மருந்தாம்.

குப்பைமேனி யிலை இரத்தமூல நோய் மருந்தாம்.

புகையிலை எல்லா நோயையும் வரவழைக்கும்.

கோவை யிலை இரணத்தைத் தீர்க்கு மருந்தாகும்.

முசுமுசுக்கை யிலை காசம் கோழை முதலியவைகளுக் குகந்த மருந்தாகும்.

முசற்காதிலை கட்டியையும் வயிற்று வலியையும் போக்கும்.

சதாபலை குழந்தைகளுக்குப் பால்மாந்தநோய் மருந்தாகும்.

செங்கீரைத்தண்டு பெரும்பாட்டைப் போக்கும்.

வள்ளைக்கீரை, பருப்புக்கீரை இரண்டையும் பருப்பி விட்டுச் சமைத்துண்டால் பிள்ளைத் தாய்ச்சிகளுக்குப் பாற் சுரக்கும், பித்தாதிக்கம் தீரும்.

கொடிவசலைக் கீரையால் மூத்திரக் கடுப்பு, வெள்ளை யொழுக்கு, அருசி, வாந்தி முதலியவைகள் தீரும். இதையும் பருப்பிட்டுச் சமைத்துச் சிறிதளவு சோற்றோடு நாற்பது நாள் உண்டுவரின் தாது இறுகும். போகம் பெருகும். புணர்ச்சி யுணர்ச்சி அதிகரிக்கும். போகம் விளைக்கும் கீரைகள் ஐந்தில் இது நான்காவதாம்.

சிறு பசலை சூட்டைத் தணிக்கும்.

பண்ணைக் கீரை குடலுக்கு நன்மை தரும். மலத்தை யிளக்கும். இரணத்தை ஆற்றும்.

அறு கீரையால் சுரம் போகும். நடுக்கல் நீங்கும். இதுவே சன்னி, கபம், வாதநோய் இவைகள் தீரும்.

போகம் விளைக்கும் கீரைகளில் ஐந்தாவதாகும். இதையும் புளியின்றிப் பருப்பிலிட்டுச் சமைத்து, விடாமல் ஒரு மண்டலமுண்டு வந்தால், புணர்ச்சியில் நிர்வாகம் அதிகரிக்கும்.

புளிச் சிறுகீரை புணர்ச்சியில் விருப்புண்டாக்கும்.

சிறுகீரை காசம், பாதரச வேக மிவைகளைத் தீர்க்கும்.

கலவைக் கீரை, மணலிக் கீரை, நீர்ஆரைக் கீரை, புளியாரைக் கீரை, வெந்தயக் கீரை இவ்வைந்தும் எல்லார்க்கும் கறிசெய் துண்ண நலந்தருங் கீரைகளாம்.

கோத்துமல்லிக் கீரை வாத அரோசகமும் பித்தாதிக்கமுந் தீர்க்கும் பெரு மருந்தாம். சுக்கில விருத்திக்குகந்த அருமருந்துமாம்.

## போகம் விளைக்குங் கீரைகள்

தாளி (நறுந்தாளி), முருங்கைக் கொழுந்து, தூதுளை, வசலை, அறுகீரை இவ்வைந்துமே போகம் விளைக்குங் கீரைகளாம். சிற்றின்ப வெற்றிபெற வேண்டுவார் ஒவ்வொருவரும் இதைக் கவனித்து, இந்தக் கீரைகளில் ஒன்றையேனும் அல்லது ஐந்தையும் மாற்றி மாற்றியேனும், தினமொன்றாய்ப் புளியின்றிப் பருப்பிட்டுச் சமைத்துப் பகற் போதில் மாத்திரம் உண்ணும்போது, ஆரம்பத்தில் கொஞ்சம் சோற்றோடு நெய்விட்டுக் கலந்து நாற்பது நாள் உட்கொண்டுவரின், தாது வளர்ந்து, புணர்ச்சி யுணர்ச்சி யதிகமாய்ப் போகத்தில் நிர்வாகிகளாவார்கள். இதற்குப் பாட்டு:

'தாளி முருங்கைத் தழைதூ துளம்பசலை
வாளிலறு கீரையுநெய் வார்த்துண்ணில்—ஆளியென
விஞ்சுவார் காமத்தில் வீம்புரைத்த பெண்களெல்லாம்
கெஞ்சுவார் பின்வாங்கிக் கேள்' (ப-ணி)

இந்தக் கீரை வகைகளை நாற்பதுநாள் உண்ணாத முன்பு பெண்களால் அவமானமடைந்து, 'போகத்துக்கு



நீ உதவ மாட்டாய்' என்று தூரத் துண்ட ஒருவனை, இவைகளை உண்ட பின்பு, போகத்தின் நிர்வாகத்தைக் கண்டவர்கள் 'ஐயா, எங்களை விட்டுவிடும். போதும் போதும். இன்னும் எங்களால் தாங்கமுடியாது' என்று கெஞ்சிக் கொஞ்சி அஞ்சிக் கேட்டுக் கொள்வார்கள். ஆகையால் இதை ஒவ்வோராண்மகனும் கவனிக்க வேண்டும். இதுவே எம்மிடத்திற் போக பஞ்சமூலி லேகியமென்று நாற்பது நாளைக்குகந்த அளவு இரண்டு ரூபா மணியார்டர் அனுப்பிப் பெற்றுக் கொள்ளுமாறு சித்தமா யிருக்கின்றது. ஒரு நாளைக் கிருமுறை காலை மாலைகளில் உண்ணவேண்டும். மற்ற விஷயங்களை விளம்பரத்தாலும் அறியலாம்.

பச்சைக் குங்குமப்பூ, மூக்கு, விழி, செவிநோய்களுக்குகந்த மருந்தாம். பித்த சீதள தோஷம் நீங்கும். சரக்கொன்றைப் பூ குடல்நோய்க்கு மருந்தாம். மயிர்க்கொன்றைப் (மைக்கொன்றை) பூவால், மேக தேக ரோக சோகந்தீரும். பாதிரிப் பூவால், சுரநோய் தீரும். சண்பக மலரால், தாது நஷ்டந்தீரும். மந்தாரப்பூ வெப்பந் தணிக்கும். புன்னைப்பூ பித்தமாம். ஆனாலும் சன்னி மருந்தாம். மகிழம் பூவால், அரோசக ரோகம் நீங்கும். அது, குளிர் மணமுள்ளதாகையால் புணர்ச்சி யுணர்ச்சி யுண்டாக்கும். பன்னீர் மலர், செந்தாழை மலர், முருங்கைப்பூ, அகத்திப் பூவால் அநேக நன்மைகள் உள.

வேப்பம் பூவால், அரோசக வாந்தி ஏப்பம் விலகும். மாதுளம் பூவால், இரத்தபுஷ்டி யுண்டாகும். புளியம் பூவால், பித்த அரோசகந்தீரும். வாழைப் பூவால், இரத்த மூலம், வெள்ளை, பித்தாதிக்கம், வயிற்றுக்கடுப்பு, இருமல், எரிச்சல் முதலியவைகள் தீரும். ஆவாரைப் பூவால், கற்றாழை நாற்றம் தீரும். கருஞ் செம்பையால், கபாலச்சூடு, சன்னி நீரேற்றம் விலகும். செம்பருத்தியால், மேகம், பேதி,

தாகம் தீரும். துத்திப் பூவால், சுக்கில விருத்தியும் உடற் குளிர்ச்சியும் உண்டாகும். செவ்வந்தி, தும்பை, களா இம் மூன்றும் மருந்துக்குதவுமென்க. தாமரை, அல்லி முறையே எரிச்சலுக்கும், உட்சூட்டுக்கும் உகந்த மருந்துகளாம். சாதி, மல்லிகை, முல்லை முறையே தேக உஷ்ணம்தீர்க்கவும், புணர்ச்சி யுணர்ச்சியாக்கவும், அரோசகத்தைப் போக்கவும் வல்லனவாம்.

வாழைப் பிஞ்சே சீதபேதி, இரத்தபேதி முதலியவை களுக்குச் சரியான அனுபானமாம்.

பலாப் பிஞ்சு, உதவாது. அத்திப் பிஞ்சு, மூலரோக மருந்தாம். மாம்பிஞ்சு, வாதாதி முத்தோஷங்களைத் தீர்க் கும். முருங்கைப்பிஞ்சால் அத்திமாந்தசுரம், விந்து நஷ்டம் தீரும். நாரத்தம் பிஞ்சு, சீதள அரோசகம் தீர்க்கும். மாதுளம் பிஞ்சு, சீதபேத நிவாரணமாம். முகிழ் விரியாக் கத்தரிப் பிஞ்சால் சுரநோய் தீரும். அவரைப் பிஞ்சால் வாதாதி முத்தோஷம் தீரும். அன்னாசிப் பழம், வாந்தி பித் தம் நீக்கும். களாப் பழம், நல்ல பசியுண்டாக்கும். காரைப் பழம், அதிசாரத்தைப்போக்கும். மிளகாய்ப்பழம், மூலத் துக்காகாது.

எட்டிக்கோட்டையும் மகிழங் கோட்டையும் முறையே வீரிய நஷ்டத்தையும் பாம்பு விஷத்தையும் தீர்க்கும். முந்திரிப் பருப்பு மந்தப் பருப்பாகும்; ஆனால் தாதுவிருத்தி யுண்டாக்கும். வாதுமைப் பருப்பு கண் படலத்தை நீக்கும், கலவியில் விருப்பந் தரும். சாரப் பருப்பு நீர்ச்சுருக்கை நீக்கிச் சுக்கிலத்தை இறுக்கும். பூசினி, வெள்ளரி முதலிய வித் தின்பருப்புகள் தேகக் குளிர்ச்சியும் போக உணர்ச்சியும் உண்டாக்கும். துத்தி முதலிய செடியின் வித்துக்களும், பூசினி முதலிய கொடியின் வித்துக்களும் விந்துவைப் போற்றத் தக்கவைகள்.



கார் அரிசியால், காப்பான் வரும். மணக்கத்தையால் குஷ்டநோய் தீரும். ஈர்க்குச் சம்பா பித்தமாம்.

புழுகுச் சம்பா பசியும் பலமுந்தரும். இலுப்பைப்பூச் சம்பா உஷ்ணமானாலும் உடம்புக்கு நல்லது. பச்சரிசி பலந் தரும். புழுங்கலரிசி நோயாளிகளுக்கும் குழந்தைகளுக்கும் உதவும். உடலுக்கு றுதியில்லை. பழைய அரிசி எல்லார்க்கும் நல்லது. சவ்வரிசி பலநோய்களுக்குப் பரிகாரமாகும். கொஞ் சம் கபாதிக்கமாம். ஆனால் சுக்கிலம் வளரும். மூங்கிலரிசிப் பாயசம் ஆயாசம தீர்க்கும். கோதுமைஅரிசியை வாதுமைப் பருப்போடுண்டால், தாது வளரும், வாதகோபந் தளரும். கேழ்வரகு சுத்த பித்தவாதமுள்ளது. ஆனாலும் உழைப் பாளர்க்குகந்த ஆகாரமாம். கம்பு நமைச்சலுக்குப் பிறப் பிடம். ஆனாலும் குளிர்ச்சிதரும். சாமை தேகபுஷ்டி தரும். தினை சந்நிபாதவினை நீக்கும்; பித்தமாம். சோளம் மந்த ரோகமுண்டாக்கும்.

துவரை உப்பில்லாப் பத்தியத்திற்கும் உதவும்; சுரத் திற்கும் சந்நிக்கும் பரிகாரமாம். உளுந்து வீரிய விருத்தி. கடலை, மருந்தை முறிக்கும். மொச்சையும் பத்தியப் பொருளன்று. பெரும் பயாகிய காராமணியுமாகாது.

காய்வகைகளிற் சிலவற்றை யிங்கே கூறுகிறோம்: முருங்கைக்காயால் விந்து ஊறும். நெல்லிக்காயால் வாயுவும் கபமுந் தீரும். புளியங்காயும் மாங்காயும் பித்தசாந்தி யானாலும் அதிகமாய்ச் சேர்த்தலாகாது. மரியங்காய் என்னும் புளிமாங்காய் ஊறுகாய் உடம்புக்கு நல்லது. பச்சைக் கடுக்காய்த்துவையல் மலத்தைப் போக்கவும் அரோசகத்தை நீக்கவும் வல்லது. பித்தத்துக்கு நல்லது. எலுமிச்சங்காய் நல்லதென்று எல்லார்க்குந் தெரியும். நாரத்தை, கொளுஞ்சி முதலியவைகளும் ஊறுகாய், பானக முதலியவைகளுக்கு உகந்தனவாம்.

கத்தரிக்காய் கிரந்தியை அதிகரிப்பிக்கும். கோத்தவரைக்
காய் பயித்தியங் கபமுதலியவைகளை வளர்க்கும். வெண்டைக்
காய் கிரகணிக் குதவாது. வாதத்தைவளர்க்கும். மணத்தக்
காளி வாத சீத ரோகத்தைத் தீர்க்கும். சுண்டைக்காய்
கிருமிரோகத்தைத் தீர்க்கும். பாவட்டங்காய் சகல ரோகங்
களையும் போக்கும். ஊசிமிளகாய் உதவாது. களாக்காய்
பித்தத்தைப்போக்கும்.

கலியாணப் பூசினிக்காயால் பல ரோகங்கள் தீரும்.
ஆனால் கொஞ்சம் வாதாதிக்கமாம். பறங்கிக்காய் கபத்துக்
காகாது. சுரைக்காய் சூடு ஒன்றையே போக்கும். அன்றி
மற்றை நோய்களுக்கு இடம் ஆக்கும். வெள்ளரி மருந்தை
முறிக்கும். பத்தியத்துக்காகாது. அவரை பித்தாதிக்கமாம்.

பீர்க்கங்காய் பித்தாதிக்கமாம். புடலங்காய் சுக்கில
விருத்தியாம். கொம்புப்பாகலை விட மிதி பாகலே கொஞ்
சம் நல்லது. அதுளங்காய் மல பந்தத்தை விலக்கும்.
கொடி வழுதுணை வாத முதலிய மூன்று தேகிகட்கும்
பொருந்தும் பத்தியப் பொருளாம். பயற்றங்காய் மருந்தை
முறிக்கும். கோவைக்காய் வெப்பம் சுரகப தோஷங்களை
விலக்கும். சுக்கங்காய் பித்தாதிக்கமாம். மிளகுக்காய் சீழ்
மூலத்தை நீக்கும். சிலைக்காய் நசிய மருந்தாம்.

விளாம்பழம் சுவாச காச கபம், பித்தம், தாகம், சோக
முதலியவைகளை விலக்கும். உடலுக்குச் சுகமானது.
பசியை வளர்க்கும். இதற்கு அடுத்த படியில் வருவது
இலந்தைப் பழமாம். இதுவும் பித்தத்தைத் தணித்துக்
குளிர்ச்சி தரும். வாழைப்பழம் கொஞ்ச மந்தமானாலும்
பித்தநோய் முதலியவைகளைத் தீர்க்கும்; வாதரோகிகளுக்
காகாது. செவ்வாழை, வெள்வாழை, பச்சைவாழை,
கருவாழை, இரசதாளி, மொந்தன், அடுக்கு, மலைவாழைகளே



எண்வகை வாழைகளாம். இவைகளில் எதுவும் போச
னத்தோ டுண்ண எல்லார்க்குங் குணமாம். பேயன் வாழை
பித்தச்சூடு, உட்சூடு, வாதம் முதலியவைகளை நீக்கி
மலத்தை யிறக்கும். மொந்தன் வாழை மந்தமாம். பலாப்
பழம் இனிப் புள்ளதானாலும் பித்தவாத தொந்தமுள்ளது.
மாம்பழம் பலவித நோய்க்கு மிருப்பிடமாம். இது சுக்கி
லத்தை வளர்க்கும். இதன் காயால் மதிமயங்கும். பிஞ்சால்
திரிதோஷ மகலும்; உடம்புக்கு நல்லது. புளியம் பழத்தால்
கொஞ்சம் பித்தந் தீரும். ஆனாலும் சகல வாத ரோகங்
களும் வளரும். பத்தியத்திற் காகாது. சாக்கொன்றைப்
புளியால் சர்வ மலமந்தமும் தீரும்.
பனம்பழம் பித்த வாயு; மற்ற நோயினங்களும் வள
ரும். நாவற்பழம் நீரிழிவுக்கு மருந்தாம். பாலைப்பழம்
பசி யுண்டாக்கும. கொட்டை முந்திரிப் பழம் தாகத்தைத்
தீர்க்கும். ஆனால் சொறி சிரங்கு காப்பான்களை உண்டாக்கும்.
தமர்த்தம்பழத்தின் புளிப்பால் வாதபித்த தொந்தம் தீரும்.
வாந்தி குறற்கம்மல் முதலியவைகள் தீரும். கொய்யாப்பழம்
உடம்புக்கு நல்லதல்ல. சிலர்க்கு மலங்கழியும். எலுமிச்சம்
பழம், தாகம், நகச்சுற்று, யானைக்கால், பித்தம், கண்ணோய்
முதலியவைகளுக்குச் சுத்தமான மருந்தாகும். சீதாப்பழம்
சித்தப் பிரமையுண்டாக்கும். மாதுளம்பழம் வாந்தி கபம்
வயிற்றெரிச்சல் பித்தம் முதலியவைகளைச் சுத்தமாய்ப்
போக்கும். புளிப்புமாதுளம்பழப் பானகம் மலட்டு நோயை
மாய்க்கும். அதனால் வாய்நீர்ச்சுரப்பும் வாந்தியுந் தீரும்.
தானே வெடித்தபழத்தைப் பிழிந்து கற்கண்டிட்டு சாப்பிட்
டால் உஷ்ணம் ஒழியும். அங்கங்குளிரும். பேரீச்சம்பழத்தால்
உன்மத்தமும் ஒழியும். சிற்றீச்சங்கனி சிறந்த தன்று.
பயறுகளிற் பச்சைப்பயறு பித்தத்தை நீக்கி வாயுவை
உண்டாக்கிக் குளிர்ச்சி தரும். கொள் பிசவாயு வுண்

டாக்கும். எள் பித்தமாம். பெண்களின் உதிரக்கட்டை ஒழிக்கும்.

கடைச்சரக்கின் வகைகளிற் றிருகடுகமாகிய சுக்கு மிளகு திப்பிலியின் குணங்கள் எண்ணிறந்தன. எல்லார்க்குந் தெரிந்தன. ஆகையால் அவைகளை வாத சீத சுரத்துக்கு மருந்தாக்கொள்க. கண்டுபாரங்கி, அரத்தை, கோஷ்டம், அதிமதுரம் முதலியவைகளின் குணங்களையும் அநுபவத்திற் காண்க. இலவங்கம் கண்மருந்தாம். சாதிக்காய் கிராணி நோய்க்கு மருந்தாம். மாசிக்காய் கார்போக அரிசி முதலியவைகளையுங் கண்டுதெளிக. கசகசா சீத மருந்தாம். ஏலம் தாகந்தவிர்க்கும். சீரகம் போஜனகுடாரியாம், பித்த சாந்தியுமாகும். உருள் அரிசி யென்னும் கோத்துமல்லிவிதை பித்த சாந்தியாம். நாய்க்கடுகு பித்தசாந்தியாம். அபினியுங் கஞ்சாவும் அசாத்திய பித்தமாம். அன்றி விஷமுள்ளவைகளாம். நீரடிமுத்து சிரங்குக்கு மருந்தாம்.

கர்ப்பூரம், பச்சைக் கர்ப்பூரம் இரண்டும் சீதளவாத ரோகமருந்தாம். சாம்பராணி சிரநோயைத் தீர்க்கும்.

பத்தியத்துக்கு உதவாத பதார்த்தங்கள், புளி, வெற்றிலை பாக்கு, புகையிலை, காராமணி, கடலைப் பருப்பு முதலியவைகளாம்.

பத்திய பதார்த்தங்கள், பொன்னாங்கண்ணி, சிறுகீரை, பசுநெய், கோவைக்காய், சுண்டைக்காய், அவரைப்பிஞ்சு, வெள்ளுள்ளி, முருங்கைப்பிஞ்சு, பனிப்பயறு, மாவடு, அத்திப்பிஞ்சு, கருவாழைக்கச்சல், வாழைப்பூ, மாம்பருப்பு முதலியவைகளாம். பேதியாகும் பதார்த்தங்கள், காராமணி, அகத்தி, கத்தரி முதலியவைகளாம். பெருங்காயம், எண்ணெய், உளுந்து, சிற்றாமணக்குநெய் முதலியவை வாத ரோகாரிகளாம். கொளுஞ்சிநாரத்தை, இஞ்சி, எலுமிச்சை முதலியவை பித்த ரோகாரிகளாம். பசுப்பால், தும்பராஷ்டம், மயிலிறகு முதலியவைகள் சீதளரோகாரிகளாம். கருணைக்கிழங்கு, வெள்ளறுகு முதலியவை மூல ரோகாரிகளாம்



மத்தியானத்தில் கிழங்குவகைகள், பழங்கள், எருமைத் தயிர், மோர் முதலியவைகளைச் சேர்த்தாலும் செரிக்கும். அவைகள் இராவிற் கூடாவாம்.

இராக்காலத்தில அவரைப்பிஞ்சு, அத்திக்காய், பசுப்பால், முருங்கைப்பிஞ்சு, துவரை, தூதுளை முதலியவைகளையே சேர்த்துக் கொள்க. இராக்காலத்தில் எப்போதும் பசுப்பால், நெய், மோரே சேர்க்கவேண்டும்.

உதயத்தில் விழித்தால் புத்தி தெளியும். பித்தசாந்தியாய்ச் சித்தம்களிக்கும். விழித்தவுடன் சுத்த நீர் பருகினால் பித்தம் அகலும். விழித்தவுடன் கண்ணாடி அல்லது சூரியனைக் காணவேண்டும். எப்போதும் மிதமாய்ப் பேசவேண்டும். இளவெய்யிலில் இருக்கப்படாது. மலசலம் அடக்கக் கூடாது. கருவேல், ஆல், பூல், நாயுருவி, வேம்பு முதலியவைகளை அன்றிக் கையாந்தகரை என்னும் கரிசாங்கண்ணியினால் பற்களை விளக்கவேண்டும். அந்த இரசத்தையும் சிறிது உட்கொள்ள வேண்டும். செங்கல், மணல், சாம்பல் முதலியவைகளால் பல் விளக்குவது தவறு.

வெள்ளாடையே எந்நாளும் விசேடமானது. அழுக்கு வஸ்திரம் ஆகாது. துவரம் பருப்போடு நெய் சேர்த்துண்பதே சரியான முறையாம்.

ஊன் (மாமிசபக்ஷண) உணவு எந்நாளும் மாந்தரில் யார்க்கும் உகந்ததன்று என்று முன்னமேயே கூறியுள்ளோம். ஆகையால் மாமிசம், மச்சம், காடை, கௌதாரி முதலிய குருவி வகைகளின் குணங்களைக் கூறாது விடுத்தோம்.

# எட்டாம் அதிகாரம்

---

## சமைக்குந் திறமே அமைக்குஞ் சுவையெனல்

'கற்புடை மனைவியே பொற்புடை யாளெனல்' என்ற அதிகாரத்தில் அடுப்பங்கரைச் சுத்தத்தைப் பற்றியும் பாத்திர சுத்தத்தைப்பற்றியும் பகர்ந்துள்ளோம். ஆயினும் இங்கும் அங்கிருந்து தொடங்குவாம்.

சமையலறை விசாலமா யிருக்கவேண்டும். அதிற் சமையற் கருவிகளாகிய பானை சட்டி முதலியவைகளையும், அகப்பை, மத்து, கரண்டி, துடுப்பு, ஊதுகுழல், அரிவாள்மணை முதலியவைகளையும் வைப்பதற்குத் தகுதியான இடம் இருக்கவேண்டும். சுவரறைகள் அல்லது மாடங்களே அநுகூலமான இடங்களாம். இவைகளையே பட்டணவாசங்களில் அலமாரிகள் என்கிறார்கள். நாட்டுப் புறத்துக் குடிசை வீடுகளில் அலமாரிகள் இருப்பது அரிது. ஆகையால் மாடங்களே போதும். அம்மி, குழவி, உரல், உலக்கை, தோசைமா, வடைமா முதலிய அரைக்குங்கல் முதலியவைகள் சமையலறைக்கருகிலிருப்பதே அநுகூலமாம். குடிசை வீடாயிருந்தாலும் அடுப்புப்புகை சுளுவாய் வெளியே போகும்படி புகைக்கூண்டு இருக்கவேண்டும். சமையலறையிலும் காற்றோட்டமா யிருப்பதற்கநுகூலமான பலகணிகள் இருக்க வேண்டும். அடுப்புகளிற் பலவிதம் உண்டு. ஆனாலும் இலையடுப்பே எந்நாளும் அவசரச் சமையலுக்கு உகந்ததாம். அவரவர் சௌகரியம் போல அடுப்புகளை அமைத்துக் கொள்ளலாம். ஒரேகாலத்தில் இரண்டு விதக் கறிவகைகள் செய்யக்கூடிய அடுப்பே சிறந்ததாம்.



அடுப்பிலிடும் விறகுகள் நல்ல தைலமுள்ள மரங்களாகிய காட்டுவாகை, புளி, கருங்காலி, புரசு, நுணா, வேல் முதலியவைகளா யிருக்கவேண்டும். வேப்பம்விறகு அடுப்பிலிட்டால், கறிகள் கசக்கும். அத்தி, ஆத்தி, இலுப்பை முதலியவைகள் புகையும். சவுக்குவிறகு சமையலுக்காகாது. அரசு, நெல்லி முதலியவைகளை அடுப்பிலிடுவது ஆகாது.

சமையல் முறையைப் பழக்கத்தாலேயே யன்றி மதியினாலும் ஒழுங்கு படுத்திக்கொண்டிருப்பவளே கற்புடையவளாவாள். கண்பார்த்தால் கை செய்கிற தென்பதொன்று மட்டும் போதாது. மதியை உபயோகித்தால் எதையும் வெகு சுளுவில் இனிமையாய்ச் செய்யலாம். தன் கணவற்கும் மக்களுக்கும் வேண்டிய உணவாதிகளைக் காலக்கிரமப்படி இனிமையாய்ச் செய்ய வல்லவளே கற்புக்கரசியாம். எதற்கும் வேலைக்காரர் முதலிய பிறரை எதிர்பாராமல், உணவாதிகளைச் செய்து முடிப்பவளே உத்தமியாவாள்.

'சிறுகாலை அட்டில் புகாதாள்
இல்வாழ் பேய்'

என்றிருப்பதால், கற்புடை மாது அதி காலையிலேயே கடன்களை முடித்துக் கொண்டு சமையலறையிற் புகுவாள். அங்குச் செய்யவேண்டிய சுத்த காரியங்களை அதி விரைவில் முடித்து, அடுப்பில் நெருப்பிடுவாள். இதுவே மானிட யாகமென்று பெயர் பெறும். இந்த மானிட யாகமில்லையேல், முனிவர் யாகமும் தேவர் யாகமும் நடைபெறா. ஆகையால், அடுப்பில் நெருப்பிடுவது கற்புடை மாதுக்குக் கௌரவமாம். அன்றிச் சில மூடப் பணக்காரப் பெண்கள் எண்ணுகிறபடி அகௌரவ மாகாது. எல்லாவற்றிற்கும் வேலைக்காரரை நம்பி யிருப்பவளே பணமிருந்

தும் ஏழைக்குச் சமான மாவாள். அவளைக் கற்றோர் யாரும் காசளவும் மதியார்.

கற்புடை மாது அடுப்பில் நெருப்பிடு முந்தியே சோற்றுலை, பருப்புலை இரண்டையும் சித்தஞ் செய்து வைத்திருப்பாள். அதற்கு முந்தியே, சமையலுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய், காய்கறி முதலியவைகளை எடுத்து வைத்துக்கொண்டிருப்பாள். அடுப்பில் நெருப்பிட்டு, உலைகளை ஏற்றுவதற்கு முந்தியே, குழம்பு, ரசம், கறிகளுக்கு வேண்டிய மிளகு, மிளகாய், கொத்துமல்லி, சீரகம், வெந்தயம் முதலியவைகளை வறுத்துக் கொள்வாள். பிறகு உலைகளை யேற்றிக் காய்ந்த வுடனே அவைகளில் முறையே அரிசியையும் பருப்பையு மிட்டு, அவைகள் வேவதற்குள் காய்கறி வகைகளை ஆய்ந்து நறுக்கி வைத்துக் கொள்வாள்.

துவரம் பருப்பை ஒவ்வொரு பெண் மகளும் தானே, துவரையை நல்ல தண்ணீரில் ஊற வைத்துச் செய்யக் கற்றுக்கொண்டிருக்கவேண்டும். கடையிற் கொள்ளும் பருப்பு, சில சமயங்களில் தோலுள்ளதாயும் வேவாததாயுமிருக்கும். அதனால் சமையல் கெடும். அரிசிக் கிரண்டாவதாகப் பருப்பைக் கொள்பவளே சுவையுள்ள சமையல் செய்யவல்லவ ளாவாள். பருப்பே இரசங் குழம்பு முதலிய சகலத்திற்கும் கொழுகொம்பாகும். சமையலிற் பருப்பில்லையேல், சாப்பாட்டில் விருப்பில்லை யென்பர் சான்றோர். சென்னை இராஜதானியில் எத்தனையோ * பட்டினங்களும் பட்டணங்களும் இருந்தாலும், பட்டணமென்றால், சென்னைப்பட்டினத்தையே குறிப்பது போலவும், மாடு என்றால் செல்வத்துக்குப் பொதுப் பெயராயினும்,

* துறைமுகப் பட்டணம்.



நாலுகால் மாட்டையே குறிப்பது போலவும், எத்தனையோ பருப்புகளிருந்தும் பருப்பென்றால் துவரம் பருப்பையே குறிக்கும் ஏற்றத்தைக் கண்டு தெளிக. நாடோறும் விடாமல் நாற்பது நாளைக்கு நல்ல துவரம் பருப்பிட்டு நெய் வார்த்துப் பிசைந்த அன்னத்தில் ஆறு பிடிக்குக் குறையாமல் ஒரு வாலிபனுக்குக் கொடுத்துக் கொண்டு வந்தால், அவன் உடல் வலு வதிகரித்து, எள்ளை உள்ளங்கையில் நசுக்கிப் பிழிய வல்லவனாவா னென்பது உலக வழக்கம்.

இப்படிப்பட்ட சத்துள்ள பதார்த்தமாகிய துவரம் பருப்பைக் குருட்டாட்டமாய் வேதிய ரல்லாதாரிற் சிலர், வாயுவென்றும், சூடென்றும், பித்தமென்றும் மத்தம் பிடித்தவர் போலப் பேசித் தள்ளிவிட்டு, அசத்தான பதார்த்தங்களாகிய ஆட்டுக் கறியையும் மீன் கறியையும் அதி ஆவலாய் உட்கொண்டு களிக்கிறார்கள். எந்த விதத்திலும் *ஊனுணவு, மனிதன் பல்லமைப்புக்கும் உடலமைப்புக்கும் உகந்த தன்றென்று இதற்கு முந்தியே சொல்லியுள்ளோம். பருப்பை விருப்பாய்க் கொள்ளவேண்டுமென்றும் பொறுப்பாய்ப் புகன்றுள்ளோம். பருப்பிரசம் உண்ணாதான், வேறென்ன உண்பானேனும் உண்ணாதானே யாவான். ஆட்டையும் மீனையு முண்பார், பருப்பு ருசியின் பாங்கறியார். ஆகையால் வெறும் புளி நீரை மிளகிரசமென்று செய்து, அதைச் சோற்றோடுண்ண வெறுக்கிறார்கள். எந்த இலைக்கறி சமைத்தாலும் பருப்பிட்டுச் சமையாமல், புளியிட்டுக் கெடுக்கிறார்கள். புளியைப் புலிபோலப் பாவிக்கவேண்டும். மனிதனைக் கொல்லக் காட்டிற் புலியிருப்பதுபோல, வீட்டிற் புளி யிருக்கிற தென்றார் சிந்தாமணியார். புளிப்புளி எக்காலுங் கூடாது. அது தவிர

* மாமிச பக்ஷணம்.

எலுமிச்சைப் புளி, கொன்றைப் புளி, சீர்மை வெள்ளைப் புளி, * குச்சித் தமர்த்தங்காய்ப் புளி, மாங்காய்ப் புளி, மரியங்காய்ப் புளி முதலியவைகளே உகந்தவைகளாம். புளிப்புளி இரத்தத்தைக் கெடுத்து வெளுப்பாக்கும். மற்றைப்புளிகள் இரத்தத்தைச் சுத்தப்படுத்தி செந்நிறமாக்கும். ஆகையாலேயே நாட்டு வயித்தியன் எந்த மருந்து கொடுத்தாலும், 'புளி நீக்கு' என்கிறான்.

சீர்மை வயித்தியன் புளியறியான் ஆகையால், அது சொல்வதில்லை. 'கடுகையும் நல்லெண்ணெயையுங் கூட நீக்கு' என்பதூஉம் நந்நாட்டு வயித்தியனுக்கு வழக்கமாம். இவைகளையேனும் ஒருவாறு கொள்ளலாம். புளியைத் தான் பற்றறத் தொலைக்க வழி தேடவேண்டும். புளியைத் தொலைத்தால் பித்தம் வளருமென்பார் சில பேதையர். எல்லாம் பழக்கந்தான். சிலகாலம் ஒரே பிடியாய், † வடநாட்டார், துருக்கர், ஐரோப்பியரைப்போல நாமும் புளியின்றி உண்ணப் பழகினால், பித்தங்கித்தம் எல்லாம் பறந்துபோம். புளிக்குவதிலாக யாம் முற்கூறிய எலுமிச்சை முதலியவைகளை ஏராளமாய் உபயோகிக்க வேண்டும்.

பகலிற் புளியின்றி ஆட்டுக்கறிக் குழம்பைச் செய்துண்ணும் பேதையர், இரவிற் புளியிட்டு மீன் கறிக்குழம்பைச் செய்துண்ணக் கற்றுக்கொண்டு வாதாதிக்கம் அதிகமாய்க் கெட்டார்கள். கைப்பெல்லாம் அதாவது கசப்பெல்லாம் பித்தமாம்; இனிப்பெல்லாம் சீதளமாம்; புளிப்பெல்லாம் வாதமாமென்பர் கலை ஞானிகள். அவர்களுடைய கூற்று வெறுங்கூற்றன்று. வாதாதிக்கத்துக்கு மாற்றென்றே சிலர்,

* இதையே புளிச்சக்காய் என்பர். இது துருக்கருக் குகந்தது.

† மார்வாடிகள் முதலியோர்.



மீனையும் கருவாட்டையும் புலால் நாற்றம் போகப் புளியிட்டுக் குழம்பாக்கி மூடத்தனமாய், அதிலேயே திரிகாற்படி புழுங்கலரிசிச் சோற்றையும் பிசைந்து பிசைந்து நாவசைந்து அசைந்து, காட்டு மிளகாய்க்காரம் ஒரு புறம் வாட்டவாட்ட மனம் பூரிக்கவுண்டு, வாதாதிக்கத்தை வளர்த்துக்கொண்டு, உடல் கறுத்து இரத்தம் வெளுத்துப் பற்பல பிணிகளுக்காட்களாய் அநியாயமாய் மாளுகிறார்கள். இந்தப் புளி மீன் குழம்பே குழம்பு, மற்றெல்லாம் நெருப்புப் பிழம்பென்றஞ்சுகிறார்கள். இரசம் என்றால், அது யாருக்கு வேண்டும்? கேவலம் என்கிறார்கள். அவர்களுடைய இலக்ஷியமெல்லாம் புளி மீன் குழம்பிலாகையால், இரசத்தை மதியாமல் அதைச் சர்வ கேவலமாய்ச் செய்து கொள்ளுகிறார்கள். குழம்பு போதாவிட்டால், அதற்கு அடுத்த படியில் புளியிட்டுப் பருப்பின்றி வெட்டிக்குச் செய்துள்ள போலி ரசத்தை அருவருப்போடு சோற்றிற் கலந்து உண்கிறார்கள். மிளகாய்க் காரத்தையும் இப்படியே அஞ்சி அகற்ற வேண்டும். ஆதியில் நமக்குக் காரமாய் உறைத்தது மிளகேயாகும். பிறகுதான் அதி சுளுவிற் பயிராகக் கூடிய மிளகாய் புகுந்தது. இது மூன்றல்லது நாலு மாதத்திய சிறு பயிராகையால், மிளகை விட அதிக மலிவாய்க் கிடைத்தது. இப்போதுங் கிடைக்கிறது. ஒரு வீசை மிளகாய் ஒரு ரூபா ஆனால், ஒரு வீசை மிளகு ஒரு வராகனாயிருக்கிறது. ஒரு வராகனல்ல, ஒரு வீசை மிளகு பத்து ரூபாவானாலும், காரத்தில் அதுவே சிறந்த பொருளாம். அதுவே உடலுக்குகந்த கார பதார்த்தமாகும். அப்பேர்ப்பட்ட பொருளை நந்நாட்டார் பழக்கத்துக்குக் கொண்டுவாராமல் மருந்தென வெறுக்கிறார்கள். ஏகாதசமாய் அதை இரசத்திற் கொஞ்சம் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். 'மிளகா! அது என்னத்திற்கு? மருந்து நாற்றம். மிளகாய் தான் நல்

லது' என்று காட்டுக் காரத்தைக் கொண்டாடுகிறார்கள். நாட்டுக் குளிர்காரமாகிய மிளகை வெறுக்கிறார்கள். எப்போதும் காரம், உப்பு, புளி யென்னும் மூன்றையும் மிதமாகவும் பதமாகவும் உபயோகித்தால் தான் இதமாக வாழலாம். உப்பையும் அளவாயுபயோகிக்கப் பழக வேண்டும். கடலுப்பு அத்தனை சிறந்ததன்று. மலையுப்பு, நிலவுப்பு முதலியவைகளே மனிதனுக்கு உகந்தனவாம். கடலுப்பு வாதாதிக்கமாகும். துரைத்தனத்தார் உப்பு விநியோகத்தைத் தம்மதிகாரத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளாத முன்பு, குடிகளே ஆங்காங்கு நிலவுப்பு மலையுப்பு முதலிய பல வுப்புகளைச் சேகரித்துக்கொண்டு உபயோகித்து வந்தார்கள். உப்புகள் பலவகையா யிருந்தபடியால், நோய்கள் அவ்வளவு கொடுமை செய்யவில்லை. இப்போது எங்கும் ஒரே விதமான கடலுப்பா யிருப்பதால் எல்லார்க்கும் ஒரேவிதமான வாதாதிக்க முதலிய நோய்களுக்கு ஆதார மாயிருக்கிறது.

ஆகையால், சமையலறையிற் பெண்களுக்குக் காரம் புளி உப்பென்னும் இம் முச்சுவைகளைப் பற்றி ஞாபகம் இருக்கவேண்டும். எதையும் அளவாயுபயோகிக்க வேண்டும். முதலாவது, புளியைக் கூடுமானவரையில் விலக்கிப் பாகம் பண்ணக் கற்றுக்கொள்ளவேண்டும். இரண்டாவது காரத்தை மிதமாக்க வழிதேடவேண்டும். மூன்றாவது, உப்பைக் குறைக்க வழிசெய்யவேண்டும். இந்த உப்பில் ஊறுவதனாலேயே எலுமிச்சை, நாரத்தை முதலிய பத்தியப் பொருளாகிய ஊறுகாய்களுக்கும் பெருமை குறைகிறது.

சமையலறையிலுள்ள பெண்மகள் ஒவ்வொருத்தியுங் காய்கறி நறுக்கியானவுடனே மிளகு மிளகாய் முதலிய கூட்டரைப்புகளைச் சித்தஞ் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். புளியில் கோது, கொட்டை, வண்டு, ஓடு



முதலியவை யில்லாமலும், உப்பில் கல், மண், இல்லாமலும் கவனமாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டும். இரசம், குழம்பு முதலிய நீர்த்த பாகங்களுக்கு உப்பைப் பொடித்துப் போட வேண்டிய தில்லை. ஆனால் காய்கறி முதலிய கட்டிப் பாகங்களுக்கு உப்பைப் பொடித்துப் போடுவதே உத்தமமாம். சில கறிகளில் போதுமான நீர் இல்லாமையால், அவைகளில் இட்ட உப்புக் கரையாது. புசிப்பவர் வாயில் தட்டுப்பட்டுச் சுவையைக் கெடுத்துவிடும். எப்போதும் எந்தக்கறியும் வெந்து முக்கால் வேக்காடான பிறகே உப்பைப்போட வேண்டும். அதற்கு முந்தி உப்பைப் போட்டால் அது வேவாது. காய்கறிகளை நறுக்கும் போது அதிசாக்கிரதையாய்ச் செய்யவேண்டும். வெண்டை, கத்தரி, பாகல் முதலியவைகளிற் புழு இருப்பது உண்மையாம். அறுகீரை, அத்திக்காய், சிறுகீரை முதலியவைகளிலும் புழுக்கள் அவசியம் இருப்பதுண்டு. அவைகள் அதிநுட்பமாய்க் கண்ணுக்குத் தெரியாமலும் இருக்கும். ஆகையால் கற்புடைமாது அவைகளைக் கவனித்து விலக்கவேண்டும். கத்தரிக்காய், வாழைக்காய் முதலியவைகள் அறுத்தவுடனே கறுக்கும். ஆகையால், அவைகளைத் தண்ணீரில் இடவேண்டும். வாழைப்பூ வாழைத்தண்டுகளை நறுக்கிப் போடும் நீரிற் கொஞ்சம் மோர், உப்பு, மஞ்சட்பொடி முதலியவைகள் கலந்திருக்கவேண்டும். எந்தப்பதார்த்தத்தையும் அளவுக்கதிகமாய் வேவிப்பது கூடாதாகையால், அதிசாக்கிரதையாய் நீரிட்டுத் தீயையும் அதற்குத் தக்கபடி மிதமாக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் ஒரே தீ, பெருந் தீயாய்ப்போட்டு அடிபிடிக்கவும், புகைசூழவும் அதிகமாய் வெந்து (Vitamin) சீவசத்துக் கெடவும் வழி தேடப்படாது. முதலிற் கொஞ்சம் தீ மும்மரமாயிருந்தாலும், இடையில் அதைக் குறைப்பவளே சமையற் சாத்

திரத்தில் வல்லவளாம். கீரைகளுக்கு எப்போதும் பெருந் தீயே கூடாதாம்.

சமையலுக்கு எப்போதும் மற்றைப் பாத்திரங்களைக் காட்டிலும் மட்பாத்திரங்களே மகத்தான நன்மை தருவனவாம். ஆகையால் அவைகளை அதிசாக்கிரதையாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொண்டிருப்பவளே உத்தமியாம். பித்தளை, செம்பு முதலிய பிற பாத்திரங்களெல்லாம் சமையலுக்கு முற்றுங்கூடா வென்று கூடுமானவரையில் ஒதுக்க வேண்டும். தேங்காயை ஏராளமாகவும், தாராளமாகவும் உபயோகிக்கக் கற்றுக்கொண்டால் தான், புளியை விலக்க முடியும். புளியிட்டுச் செய்யும் ஒவ்வொரு கறிபதார்த்தத்தையும், தேங்காயிட்டுச் செய்யக் கற்றுக் கொள்வதே உத்தமமாம். முள்ளங்கி, முருங்கைக்காய், வெண்டைக்காய், காருக்கருணை முதலியவைகளைப் பருப்பிட்டுக் குழம்பு கறிகள் செய்யினும், அல்லது தனியே செய்யினும், புளியையே காட்டக்கூடாது. அவைகள் புளி தாளாப் பதார்த்தங்களென்றே பெயர் பெறும். இவ் வகுப்பில் இன்னும் அநேகம் உள. மாமிசம் உண்போர், தாமுண்ணும் ஆட்டுக்கறியும் கூட்டுக்கறியும் புளி தாளா வென்று நன்குணர்வார்கள். ஆகையால், அவர்கள் மேற் குறித்த காய்களும் கிழங்குகளுமே யன்றிச் சிறுகீரை, புளிச்சிறுகீரை, முருங்கைக்கீரை, அறுகீரை, முளைக்கீரை முதலிய கீரைகளும் புளி தாளாவென்று நன்கு தெரிந்து கொள்ளவேண்டும்.

பாசிப்பயறு முதலியவைகளை வறுத்து உபயோகிக்க வேண்டு மென்றால், பருப்பாக்கி வறுக்க வேண்டு மென்பதில்லை; முழுப்பயறாகவே வறுத்து ஆறவிட்டுச் சிறு கருங்கல் அல்லது கூழாங்கல்லால் உடைத்துப் புடைத்துத் தோல் நீக்கிப் பருப்பாக்கி உபயோகிக்க வேண்டும். அப்போது



தான் அது நல்ல மணமாகவுங் குணமாகவும் உருசியாகவும் மற்றைக்காயிலைக் கறிகளோடு கூட்டுவதற்கு உகந்ததாகவுமிருக்கும். எந்தப் பயறையும் வறுத்துபயோகிப்பதே தகுதியாம். முழுக்கடலையையும் மொச்சையையுங் கூடச் சிறிது வறுத்து மணமாகக் கறிகளிற் கூட்டலாம். வாதுமைப் பருப்பைப் பலகாரங்களிலும் பாயசங்களிலும் உபயோகிக்க வேண்டுமானால், வெந்நீரிலிட்டு ஊறவைத்து, அதன் மேற்றோலை நீக்கிக் கூடுமானால் வறுத்தே உபயோகிக்கவேண்டும். முந்திரிப்பருப்பையும் இப்படியே கொள்ளவேண்டும். பலகாரங்களில் திராக்ஷையை உபயோகிக்கும்போதும் அதன் கொட்டை செத்தை முதலியவைகளை நீக்கி அலம்பி வறுத்துக் கொள்ளவேண்டும்.

பச்சரிசியானால் அன்னம், பருப்புக்கு முந்தி, அதி சீக்கிரத்தில் வெந்துவிடும். ஆகையால் அதி சாக்கிரதையாய்ப் பதம் பார்த்துக் கஞ்சியை வடித்து விடவேண்டும். புழுங்கலரிசியானாலும், பருப்புக்கு முந்தியே வெந்துவிடும். ஆகையால், அதையும் பதத்தோடு வடித்து மூடிவைக்கவேண்டும். கஞ்சி வடியாமற் செய்யும் அன்னமே உடலுக்குப் பலந் தருவதாகும். அதிகமாய் உலைநீரைவைத்து அரிசியிட்டுக் கஞ்சியை வடித்து விடுவதால், திப்பியே நிற்கிறதாம். திப்பியாகிய அன்னத்தைச் சாப்பிடுவதால் ஒரு பலனுமில்லையென்கிறார்கள். வடித்து விடுவதனால் அன்னத்தின் சத்தெல்லாம் போய்த் திப்பியாய் விடுவதனால்தான், பட்டணத்தார் பலரும் வித விதமான குழம்பு ரசம் கூட்டு முதலிய அநுபான வகைகளைத் தேடுகிறார்கள். இப்படித் தேடுவது மூடத்தனமாயிருந்தும் இதை யொரு பெருமை யென்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சத்துக் கெடாமல் செய்யும் கூழ், களி, உரொட்டி முதலியவைகளை உண்போர்க்கு இத்தனை வித விதமான குழம்பி ரசங்கூட்டு முதலியவைகள்

வேண்டியதில்லை. ஆகையால் அவர்கள் அவைகளைத் தேடுகிறதில்லை. அதனாலேயே இவர்கள் அவர்களை மூடர்களென்றும் தம்மை நாகரிகர்களென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இப்பி உண்பவர்களானாலும் இவர்கள் மதிவாணர்களா யிருக்கிறார்களென்பது மகான்களுடைய கொள்கை. எது எப்படியானாலும் எந்தப் பொருளையும் (Vitamin) சீவ சத்துக் கெடாமல் வேவித்துப் பாகம் பண்ணி யுண்பதே பான்மையாம்.

அரிசிச் சோற்றையும் கஞ்சி வடியாமல் ஆக்கி உண்ணப் பழகுவதே மதியுடைமைக் கழகாகும். ஆகையால் அடியிற் காட்டியுள்ள முறையை அனைவரும் கவனித்துக் கொள்க:

சிறுமணிப் பச்சரிசி, பட்டணம் படியால் ஒரு படி யெடுத்து, அரைமணி நேரம் நீரில் ஊறவைத்து நன்றாய்க் களைந்து அலம்பி நீரை வடிய வைக்கவேண்டும். பிறகு நல்ல தண்ணீர் இரண்டுபடி யளவை ஒரு நான்குபடி கொள்ளும் * பாத்திரத்தில் விட்டுக் காய்ச்ச வேண்டும். பாத்திரத்திற் றண்ணீர் வெந்நீராய்க் கொதி கண்டபின், நீர் வடிய வைத்திருக்கும் பச்சரிசியை அதிற் சிறுகக் கொட்டிக் கரண்டியாற் கிண்டி மூடி வைக்கவேண்டும். பிறகு † களத்தூரானும் குளத்தூரானும் சண்டை போடுகிறபடி, அரிசியும் நீரும் சேர்ந்து தளதளவென்று கொதிக்கத் தொடங்குகையில், மறுபடியும் ஒருமுறை கிண்டிக் கிளறி மூடி வைக்கவேண்டும். கொஞ்சம் பொறுத்து, அரிசி

* அவரவர்களுக் குகந்த மட்பாத்திரமே கொள்க.

† இதற்கு,

"களத்தூரானுங் குளத்தூரானும் சண்டை போடும்போது
மூங்கிலானுந் தேங்கலானும் விலக்கி விட்டார்கள்"

என்பது.

(விடுகவி)



முக்காற் பாகம் வெந்த பதம் பார்த்து, அதை அடுப்பை விட்டிறக்கிவைத்து மறுபடியு மொருமுறை கிளறிக் கொடுக்கவேண்டும். பிறகு அதைப் புகையில்லாத கட்டை நெருப்பின் தணலின் மேல் ஐந்தல்லது பத்து நிமிஷநேரம் வைத்திருந்து எடுத்துக் கொண்டால் உண்ணும் பதமா யிருக்கும். இதற்குப் புழுங்க லரிசியு மிருக்கலாம். எந்த அரிசியும் பழையதா யிருக்கவேண்டும். வடிக்கிற சோறாக்க வேண்டுமானால் ஒருபடி அரிசிக்கு மூன்றுபடி தண்ணீர் உலைவைக்க வேண்டும். வடியாமல் ஆக்குகிற சோறானால் ஒன்றுக்கு இருபங்கு நீர் உலைவைக்க வேண்டும். புது அரிசியானால், அளியாமல் இருப்பதற்கு, அதை உலையி லிடுவதற்கு முந்தி, காய்ந்து ஆவி வரும் வெந்நீரில் பதினைந்து நிமிஷம் ஊற வைத்திருக்க வேண்டும். இப்படி யன்றிச் சிலர், உலைநீரில் அரைபலம் நெய்யை யூற்றுவதும் உண்டு. உலையில் நெய்யை ஊற்றுவதாலும் புது அரிசி அளியாமல் வேகும். இப்படி அன்னத்தை விண்ணமின்றிச் செய்ய எல்லாரும் பழகவேண்டுமென்பது எமது கொள்கை. கோதுமை நொய்யிலும் சோறு சமைக்கலாம். இது எளிதில் செரிக்குந் தன்மையுடையது; சீத வாயுவைப் பிரிக்குந் தன்மையுடையது. விடாமல் நாற்பது நாளுண்டால், உடலுக்கு வலுவைத் தந்து, தாதுபுஷ்டி யுண்டாக்கும். பால தேகிகளுக்கும், மதுமேக நீரிழிவு நோயாளிகளுக்கும் இதுவே மிகவும் உபயோகமானது.

நல்ல தண்ணீர் ஒரு படியை இரண்டுபடி கொள்ளும் பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சிக் கொதி கண்டபின், ஒன்றரை பலம் நெய்யை அந்தக் கொதிநீரில் விடவேண்டும். பிறகு அரிசிப் பெரு நொய்போ லிருக்கும் கோதுமை நொய்யை அதிற் கொட்டிக் கிளறிக் கொடுத்து மூடி வைக்கவேண்டும். சற்றுப் பொறுத்து மற்றொரு தரம்

கிளறிக் கொடுத்து, நொய் முக்காற் பாகம் வெந்த பதம் பார்த்து, அடுப்பை விட்டிறக்கி, அப்பொதொரு முறை கரண்டிக் காம்பால் கிளறி, ஐந்தல்லது பத்து நிமிஷநேரம் புகையில்லாத தணலின்மேல் மூடி வைத்திருந்து, பின்பு உபயோகிக்க வேண்டும்.

கோதுமை உண்பவர்கள் அதை அரைப்பதற்கு எந்நாளும் இயந்திரத்தை நாடிச் செல்வது தவறு. அப்படிச் செய்யின் உடலுக்கு ஆபத்து என்பது ஒன்றே யன்று; சுவை முதலிய ஐம்புலன்களுக்கும் இன்பின்றியும் உடல் வன்பின்றியும் யாறிக் கெடும்.

கேழ்வரகுக் களி யுண்பது எந்நாளும் யார்க்கும் நல்லது. ஆனால் அதையே மூன்று வேளை அல்லது இரண்டு வேளை உண்பவர்கள் உடலுழைப்பாளிகளா யிருக்கவேண்டும். உடலா லுழையாமல், மதியா லுழைக்கும் மகான்களும் அதை நாளைக்கொரு முறை மாக்களியா யுண்பது மகத்தான பலந் தருவதாம்.

ஒருபடி கேழ்வரகை நன்றாய்க் குற்றிப் புடைத்தெடுத்து, அரைத்து மாவாக்கி அளந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

நல்ல தண்ணீர் இரண்டு படியை மூன்றுபடி கொள்ளும் பாத்திரத்திற் கொட்டிக் காய்ச்சிக் கொதி கண்டவுடனே, அதிலிருந்து சுமார் அரைபடி நீரை அப்பாலொரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். மற்றைக் கொதி நீரில் மாவைக் கொட்டிக் கிளறாமல், துடுப்பை யதிற் செருகி வைக்கவேண்டும். இரண்டு நிமிஷத்துக்கொரு தடவை அத்துடுப்பை எடுத்தெடுத்து, அதிலிருந்து வடியும் நீரைக் கவனித்துப் பார்க்கவேண்டும். நீர் குழம்பி வழியும் சமயத்தில் பாத்திரத்தை அசைய வொட்டாமல்



இறுகப் பற்றிக்கொண்டு, துடுப்பை மற்றொருவர் இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு, மா, கட்டி கட்டிக் கெட்டுப் போகாமல் அதி சாக்கிரதையாய்த் துழவி, அப்படியே விடாமல் ஐந்து நிமிஷ நேரம் கிளறிக்கொண்டே யிருக்க வேண்டும்; பக்கத்தில் வேறொரு பாத்திரத்தில் எடுத்து வைத்துள்ள அரைபடிக் கொதிநீரிற் பாதியை அதிற்கொட்டி மறுபடியும் கிளறிக்கொடுத்து மூன்று அல்லது நான்கு நிமிஷ நேரம் வேகவிடவேண்டும். பிறகு, அதில் நீர் சுண்டியது தெரிந்துகொண்டு மீதிக் கொதி நீரையுங் கொட்டி மறுபடியுங் கிண்டி நான்கு அல்லது ஐந்து நிமிஷங்களுக்குப் பின், அது வெந்தபதம் பார்த்து இறக்கி உபயோகிக்கவேண்டும். வெந்தபதம் என்பது ஈரவிரலில் அதிற் கொஞ்சம் எடுத்து உருட்டினால் ஒட்டாமலிருப்பதே யாகும்.

இப்படியே மணக்கத்தை அரிசிமா முதலியவைகளையும் வறுத்துடைத்த பயற்றம்பருப்பு, வெல்லம், தேங்காய்த்துருவல், ஏலரிசிப்பொடி, நெய் முதலியவைகளையுங் கூட்டித் திருவாதிரைக் களி செய்துண்ணலாம். இந்தக் கேழ்வரகுக் களியிலேயே வேண்டுமானால், ஐந்து பலம் வெல்லம், இரண்டு சிட்டிக்கை ஏலரிசித்தூள், தேங்காய்த்துருவல் முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுலாம். மேற்சொன்ன களிக்கு உப்பிட்டுக் கொள்ள வேண்டுமானால் காற்பலக் கலந்து கொள்ளலாம். உப்புக்கலந்து களி கிளறுவதே உத்தமமாம்.

இக் கேழ்வரகுமாக் களி மேற்கு நாடாகிய குடகு, மைசூர், பெங்களூர், சேலம், ஓசூர் முதலியவைகளில் உபயோகப்படுகிறது. நந்நாட்டாரும் இதை நன்கு கவனித்து உட்கொண்டால், சிக்கனமு மாகும்.

அடைக்கு, கேழ்வரகைக் குற்றிப் புடைத்து, அதிக நொய்யில்லாமல் மாவாக அரைத்து அரைபடி அளந்து வைத்துக்கொள்ள வேண்டும். அரை பலம் உப்பைப் பொடிசெய்து அதனுடன் கலந்து, வெந்நீர் விட்டு, இறுகப் பிசைந்துருட்டி, ஏறக்குறைய ஒருமணி நேரம் வைத்திருக்க வேண்டும். பிறகு நன்றாய் ஒட்டிப் பிசைந்து, மாங்காயளவு உருண்டைகளாகச் செய்துகொண்டு, ஒவ்வொன்றையும் அடைதட்டிக் கொள்ளவேண்டும். அடையின் பருமன் (கனம்) பாளை யோட்டள விருக்கலாம். பிறகு தோசைக் கல்லையாவது அல்லது சாதாரண அகலமான மண்சட்டியை யாவது அடுப்பிலேற்றிக் காய்ச்சி, இவ்வடைகளை ஒவ்வொன்று மெடுத்து, அதன் மேலிட்டு, வெந்து சிவக்குந் தருணத்தில், அதைத்திருப்பிக் கொடுத்துச் சற்று நேரத்திற்குப்பின் எடுத்துக்கொள்ளவேண்டியது. ஓரம் வேவாம லிருந்தால், தணலில் வாட்டிக்கொள்ள வேண்டும். இதிலும் சிலர் வெல்லம் சேர்ப்பதுண்டு. அப்படி வேண்டுமானால் மூன்றுபலம் வெல்லத்தை முன் சொன்ன கொதிநீரோடு கூட்டிக்கொண்டு மாவைப் பிசைந்து கொள்ளலாம். தேங்காய்த் துருவலும் ஒரு மூடி பெருமூடி யளவாய்ச்சேர்த்துக் கொள்ளலாம். தித்திப்பில்லாத இவ்வுப்படையைப் பொடியாக்கித் தயிரிலும், மோரிலும், குழம்பிலும், கூட்டிலும் கூட்டியும் புசிக்கலாம்.

பிராமணரல்லாதாரிற் சிலர் இந்த உப்படையோடு, நன்றாய்த் தோல்போகத்தேய்த்து வறுத்த எள் காற்படியையும், வறுத்த ஒரு முழுத் தேங்காய்த் துருவலையும், கால்வீசை நல்லவெல்லத்தையுங் கலந்து உரலிற் போட்டு மெழுகு போலிடித்துச் சிம்பிலி யென்றெடுத்துண்பது வழக்கம். இது உருசிகரமாயிருக்கும். உடம்புக்கும் கெடுதி செய்யாது. இப்படியே கோதுமை நொய், மா முதலியவைகளிலும்



அடை அல்லது பூரி செய்து சிம்பிலி யிடிப்பதும் உண்டு. இதற்கு வெல்லத்துக்குப் பதில், நாட்டுச் சர்க்கரை கூட்டிக் கொள்ளலாம். இது மெழுகு போலாகிப் பிடிபடுவதற்காக, அடைகளை மெதுவுப்பதமாகச் சுட்டுக் கொள்ள வேண்டும்.

கோதுமைமா அல்லது நொய்யிலும் மேற்குறித்த அடைகளைச் செய்யலாம் :

அரைபடியளவான கோதுமை நொய் அல்லது மாவை யெடுத்து ஒன்றரை பலம் நல்ல நெய்யும் காலே அரைக்காற் பலம் உப்புஞ் சேர்த்து நன்றாய்க் கலந்து, அது இறுகி மொத்தை யாவதற்குப் போதுமான தண்ணீர்விட்டுப் பிசைந்து, சுமார் ஒன்றரை மணிநேரம் வரையில் அப்படியே ஊறவைத்துப் பின்பு நன்றாய் ஒட்டிப் பிசைந்து, கம்பிபோல் நீட்டவரும் பதம் பார்த்து, பெரிய எலுமிச்சங் காயளவு உருண்டைகளாக்கிக் கொள்ள வேண்டியது. பிறகு, அப்பளப் பலகையின் மேல் ஒவ்வோருருண்டையாய் வைத்துக் குழவியால் பூரி உருட்டித் தோசைபோல் வட்டமாகவும் புளியிலைக் கனமாகவும் செய்து ஒன்றின்மே லொன்றாய் வைத்துக் கொள்ளவேண்டியது. பூரி உருட்டுகையில் ஒட்டிக் கொள்ளாம லிருப்பதற்குக் கோதுமை மாவைத் தூவிக் கொள்ள வேண்டியது.

இரும்பு அல்லது மண்ணாற் செய்துள்ள தோசைக் கல்லை அடுப்பிலேற்றிப் பைய எரிக்கவேண்டியது. கல்லிற் போதுமான சூடேறின வுடனே, பூரி யல்லது அடையை அதன் மேலிட்டு, அது கொப்புளங் கொப்புளமாய் உப்பி வெந்தபின் அதைத் திருப்பிப் போட்டுக் காந்திப் போகாமற் பாதுகாத்து, ஓரத்தை அடுப்பனலிற் காட்டி வேவித்து, அப்பால் எடுத்துவைத்துக் கொள்ளவேண்டியது.

இப்படி எல்லாப் பூரிகளையும் சுட்டு உரொட்டியாக்க வேண்டும். இந்த உரொட்டி அல்லது அடையைக் கையினாலேயும் தட்டியுஞ் செய்யலாம். இதைச் சிலர் நெய் அனுபானத்தில் உண்கிறார்கள். வேறு சிலர், நெய்யையும் நீரையும் சரிக்குச் சரியாய்க் கலந்து காய்ச்சி இவ்வடைகளுக்கு இரு பக்கங்களிலும் தடவி வைத்துக்கொண்டு சாப்பிடுவதும் உண்டு. இந்த அடைகளைக் கூட்டு, குழம்பு, பருப்பு, பால், சர்க்கரை, மாம்பழம், வாழைப்பழம், தேங்காய்த்துவையல் முதலியவைகளோடு உண்பதுவும் உண்டு.

வறுத்த அரிசிச் சாதம் அல்லது சாதாரண ஸோஜ்ஜி-இதையே சோச்சி யென்றும் பிள்ளைகள் சோச்சி யென்றும் சொல்லுகிறார்கள். இது உடம்புக்கு நல்லது. நோயாளர்க்கும் கொடுக்கலாம். இதனால், மூலவாயு, சீதவாயு, வாந்தி, சுரம், பேதி இவைகள் நீங்கும். உடலுக்கும் வலிவேறும். குழந்தைகளுக்குங் கொடுக்கலாம்.

*சிறுமணி அரிசி ஒரு படி யெடுத்துக் கொஞ்சங் கொஞ்சமாய் மணல் நிறமாய் வறுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு தண்ணீர் மூன்றுபடியை, ஐந்து படி கொள்ளும் பாத்திரத்தில் ஊற்றிக் காய்ச்சிக் கொதி கண்டவுடனே வறுத்துவைத்திருக்கும் பொரியரிசியைக் களைந்து அலம்பித் தண்ணீரை வடித்துவிட்டு, அக்கொதி நீரிற் கொட்டிக் காண்டிக் காம்பினாற் கிளறிப் பாத்திரத்தை மூடிவைக்க வேண்டும். சற்றுப் பொறுத்துக் குளத்தூராலுங் களத்தூராலுஞ் சண்டை செய்கிறபடி நீரும் அரிசியுங் கலந்து கொதிக்கையில் மற்றொரு தரம் காண்டிக் காம்பால் கிளறிச் சிறிது நேரம் பொறுத்து, அரிசி முக்கால் வேக்காடா யிருக்

* பச்சரிசியே பக்குவமானது. புழுங்க லரிசியும் இருக்கலாம்.



கும் பதம் பார்த்து, மறுபடியும் நன்றாய்க் காண்டிக் காம்பால் கிளறிப் பின்பு ஈரத் துணியைப் பாத்திரத்தின் வாயிற் கட்டியேனும், வடி தட்டைக் கொண்டேனும் மூடிப் பாத்திரத்தை அடுப்பை விட்டிறக்கிச் செம்மையாய்க் கஞ்சியை வடித்துக் காண்டிக் காம்பாற் கிளறி, ஐந்து நிமிஷநேரம் புகையற்ற தணலின்மேல் அதை வைத்திருந்து அப்பாலெடுத்துக் கொள்ளவேண்டும்.

இதையே தாளித சொஜ்ஜியாகவும் செய்வதுண்டு. அப்போ திதற்குப் படி யரிசிக்கு இரண்டுபடி நீரே உலை வைக்கவேண்டும். கஞ்சி வடிக்கவேண்டியதில்லை. முன் சொன்ன சாதா சொஜ்ஜி, நோயாளர்க்குங் குழந்தைகளுக்குங் கூடக் கொடுக்கலா மாகையால், ஒரு படிக்கு மூன்று படி தண்ணீர் வைத்து வடிக்கச் சொல்லி யிருக்கிறது. இதற்கும் முன்போலவே அரிசியை மணல் நிறமாய் வறுத்துக் கொள்ளவேண்டும். நெய் மூன்று பலமெடுத்து, ஐந்துபடி கொள்ளும் ஒரு களிம்பேறாத பாத்திரத்தில் விட்டு அடுப்பிலேற்றிக் காய்ச்சவேண்டும். அது காய்ந்தவுடனே காற்பலம் மிளகாய் வற்றல், அரைபலம் உளுத்தம் பருப்பு, காற்பலம் கடுகு இவைகளை அதில் முன் பின்னாகக் கொட்டிச் சடபட வென்னும் ஓசை நின்றவுடனே அரைக் காற் பலம் பச்சைக் கருவேப்பிலையைப் போடவேண்டும். பிறகு அதில் இரண்டுபடி தண்ணீரைக் கொட்டவேண்டும். அரைக்கால் ரூபா எடை மஞ்சட் பொடியைப் போட்டு, அது கொதிக்கத் தொடங்கிய வுடனே, வறுத்து வைத்திருக்கும் அரிசியை, முன் சொன்னபடி தண்ணீர்விட்டுக் களைந்து அலம்பி, நீரை நன்றாய் வடித்து விட்டு, அதிற் கொட்டிக் கிளறிக் கொடுத்து மூடி விடவேண்டும். கொஞ்ச நேரங் கழித்து, அரிசி முக்காற் பங்கு வெந்த பதம் பார்த்து, அரை பலம் பொடி உப்பை அதிற் கொட்டிக்

காண்டிக் காம்பினுல் கிளறிக் கொடுத்து, இறக்கி நெருப் புத் தணலின் மேல் வைக்கவேண்டும். அப்படி வைத்த வுடனே,

இரண்டு பலம் நெய்யில் அரைபலம் மிளகு, அரைபலம் சீரகம் இவ்விரண்டையும் பொரித்துக் கீழிறக்கி, உடனே இரண்டு குன்றிமணி எடையுள்ள காயத்தைப்போட்டு, அது பொரிபோல் ஆகுமட்டும் வைத்திருந்து அதை மீட்டும் அப் பால் எடுத்து விட வேண்டும். அதன் பிறகு அந்த மிளகு சீரகத்தோடு நெய்யையும் அதிற் கொட்டிக் கிளறிக் கலந்து, அந்தத் தணலின் மேல் ஐந்து நிமிஷ நேரம் வைத்து அப்பா லெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இதைப் பலகார பக்ஷணமாகவும் இலக்ஷணமா யுபயோகிக்கலாம். ஒருபடி செய்தால் சுமார் பதின்மர் பல காரமாகவும், எண்மர் பசியாகாரமாகவும் உண்டு களிக்கலாம். வாய்க்கும் உருசியாகவும், உடம்புக்கும் வலுவாகவும், காசுக் கும் சுளுவாகவும் முடியும். பத்துப்பேர் காப்பிக் கடைக் குக் கொடுக்குந் தொகையாகிய பதிற்றுக்கால் இரண்டரை ரூபாவில் மூன்றுபடி சொஜ்ஜி செய்யலாம். இந்த மூன்றுபடி தாளித சொஜ்ஜியை முப்பதுபேர் தாராளமாயுண்ணலாம். இந்த மிளகு சீரக வறுவலை உலையில் அரிசிபோடுவதற்கு முந்தியும் கொட்டலாம். இந்தச் சொஜ்ஜியிலேயே பயற்றம் பருப்புக் கலந்துஞ் செய்யலாம். படி அரிசிக்கு இரண்டரை ஆழாக்குப் பயறெடுத்து வறுத்துடைத்துப் பருப்பாக்கிக் கொண்டு, வறுத்த அரிசியோடு கலந்துகொள்ளவேண்டி யது. மற்றைய முறையெல்லாம் தாளித சொஜ்ஜிக்குச் செய் தது போலவே செய்துகொள்க.

தேங்காய்ப்பால் சொஜ்ஜி என்பதும் ஒன்று உண்டு: இதற்கு அரிசி முக்காற்படியானால், வறுத்துடைத்துக் கொண்ட பயற்றம் பருப்புக் காற்படி வேண்டும். அரிசி



யையும் முன்போலவே மணல் நிறமாய் வறுத்து வைத்துக் கொள்ள வேண்டும். தேங்காய்த் துருவல் பத்துப் பல மெடுத்து அம்மியிலிட்டுத் தண்ணீர் விட்டுக் கட்டியாய் வெண்ணெய் மொத்தை போல் அரைத்து, இரண்டுபடித் தண்ணீரிற் கலக்கி வடிகட்டித் திப்பியைப் பிழிந்தெடுத்து அப்பா லகற்றிப் பாலை மட்டும் பத்திரமாய் ஒரு பாத் திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நெய் பலம் மூன்றை ஐந்துபடி பிடிக்கும் களிம்பேறாத பாத்திரத்தில் விட்டுக் காய்ச்ச வேண்டும். அது காய்ந்து வாசனை வந்தவுடனே, காம்புநீக்கின மிளகாய் வற்றல் காற்பலம், உளுத்தம் பருப்பு அரைபலம், கடுகு காற்பலம் இந்த மூன்றையும் ஒன்றன்பின் ஒன்றாய் அதிற்போட்டுத் தாளிதம் ஆனவுடனே காற்பலம் கருவேப்பிலையைப் போட வேண்டும். அதன் சடபடவோசை அடங்கினவுடனே முன் ஆயத்தமாய் வைத்திருக்கும் தேங்காய்ப் பாலை அதிற் கொட்டி, அரைக்கால் ரூபா எடை மஞ்சட் பொடியையும் போடவேண்டும். பிறகு அது கொதிக்கத் தொடங்கும் போது, ஆயத்தமாய் வைத்துள்ள வறுத்தரிசி பருப்பைத் தண்ணீர்விட்டுக் களைந்தலம்பிக் கொஞ்சமேனும் நீரின்றி வடித்து, அக்கொதிநீரிற் கொட்டிக் கிளறி மூடிவைக்க வேண்டும். பிறகு, மேற் சொன்ன தாளித சொச்சிக்குச் செய்தது போலவே செய்து உபயோகித்துக் கொள்க.

சாதாரண வுப்புமாவாக, அரிசிமாவிற் செய்துண்பதே பண்பாகும். இதற்குப் பச்சரிசி பழவரிசியாகவே இருக்க வேண்டும். மாவரைப்பதும் ஒன்று மிரண்டுமாய் நொய் வாட்டமாக இருப்பது நல்லது. இது செய்யச் சோம்பலை மேற்கொண்டு, கடையில் விற்கும் போலிக்கோதுமைப் பூநொய்யையே பெருமையாகக் கொண்டு பலகாரத்தை யும் சுவையையும் கெடுத்து விடப்படாது. இந்த வுப்பு

மாவுக்கு அரிசி அரைக்கையில் கொஞ்சம் துவரம் பருப்பையும் சேர்த்துக் கொள்ளலாம். இது செய்வதற்கு, நெய்யே நல்லது. இல்லையேல், நல்லெண்ணெயுங் கொள்ளலாம். இவ்விரண்டி லொன்றை, ஒன்றரை பலம் அளவாக எடுத்து, சாதாரணமான ஒருதலைப் பாத்திரம் அல்லது மண் பாத்திரத்தில் விட்டு அடுப்பி லேற்றிக் காய்ச்ச வேண்டும். காய்ந்தவுடனே அதில், காம்பு நீக்கின மிளகாய் காற்பலம், கடுகு காற்பலம், உளுத்தம் பருப்பு அரைபலம் ஆகிய இம்மூன்றையும் ஒன்றின்பின் னொன்றாகப் போட்டுத் தாளிதம் ஆனவுடனே, காற்பலம் கருவேப்பிலையைப் போட்டுக் காண்டிக் காம்பினால் கிளறிக் கொடுக்கவேண்டும். பிறகு அதில் காலே அரைக்காற்படி அதாவது மூன்றுழாக்குத் தண்ணீரைக் கொட்டவேண்டும். அந்தத் தண்ணீர் தளபளவென்று கொதிக்கத் தொடங்கின வுடனே அரைபலம் பொடிசெய்த வுப்பை அதிற் போடவேண்டும். முந்தியே அரைத்து வைத்துள்ள அரிசி மாவில் உழக்களவெடுத்து ஐந்து பலம் தேங்காய்த் துருவலையுங் கலந்து, அந்தக் கொதி நீரிற் போட்டுக் கிளறிக் கொடுத்து மூடி வைக்கவேண்டும். கொஞ்சம் பொறுத்து மறுபடியும் கிளறிக் கொடுத்து மூடிவைக்கவேண்டும். இப்படி இரண்டு மூன்று தடவை, அடி பிடித்துக் காந்தாமல் கிளறிக் கொண்டிருந்தால் மா வெந்துவிடும். அது வெந்த பதம் பார்த்துப் பாத்திரத்தைக் கீழிறக்கிப் புகையில்லாத தணலின் மேல் ஐந்து நிமிஷம் வைத்திருந்து பிறகெடுத்து உபயோகிக்கலாம். இதிற் காயம் போடுவதானால் ஆறு குன்றி மணி எடை தாளிதத்தில் தண்ணீர் கொட்டு முந்தியே போடவேண்டும்.

கோதுமை நொய் உப்புமா செய்துகொள்ள வேண்டுமானால், கடையில் விற்கும் பூ நொய் சரியானதன்று.



கோதுமை அரிசி வாங்கி, அதை நாமே விட்டியந்திரத்தில் அரைத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்யாமல் கோதுமை அரிசியை (Machine) இயந்திரத்தில் கூலி கொடுத் தரைத்துக் கொள்வது பெரும் பிசகாகும். பண்டமும் உருசி யிராது. உடம்புக்கும் ஒத்துக் கொள்ளாது. நோய்க் கிடமாகும். இதற்கு இரண்டரை பலம் நெய்யை ஓர் அரைபடி வடிக்கும் களிம்பேறாத பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சவேண்டும். நெய் காய்ந்து மணம் வீசுகையில், அதில் நல்ல மிளகாய்வற்றல் காம்பு நீக்கினதாக வீசம் பலம், அதாவது நான்கே மிளகாயும், கடுகு மூன்று வீசம் பலமும், உளுத்தம் பருப்புக் காற்பலமும், சீரகம் வீசம் பலமும், காயம் நாலு குன்றிமணி எடையும், கருவேப்பிலை வீசம் பலமும் ஒன்றின்பின் ஒன்றாகப் போட்டு, முன் சொன்ன தாளித முறைப்படி ஆயத்தம் செய்யவேண்டும். அப்படியானவுடனே அதில், காற்படி பருங்கோதுமை நொய்யைச் சிறுகக் கொட்டிக் காண்டிக் காம்பினால் கிளறிக்கொண்டிருந்து, வாசனை வரும்போது, அதாவது நொய் மணல் நிறமாய் வறுபட்ட வுடனே காற்பலம் உப்புப் பொடியைப் போட்டுக் கிளறவேண்டும். பிறகு புளித்த மோர் மூன்றுழாக் கெடுத்து, இடது கையிற் பிடித்து, வறுபட்டுக் கொண்டிருக்கும் நொய்யிற் பையக் கொஞ்சங் கொஞ்சமாய் ஊற்றிக் கொண்டே, வலது கையில் உள்ள காண்டியினால் கிளறிக் கொண்டே யிருக்க வேண்டும். மோரெல்லாம் விட்டானவுடனே, பாத்திரத்தை யிறக்கிப் புகையற்ற தணலின்மேல் ஐந்து நிமிஷநேரம் வைத்திருந்து பின்பு உபயோகிக்க வேண்டும்.

இந்த வுப்புமாக்களையே அகலமுந் தட்டையுமான வாணலிப் பாத்திரத்திற் செய்ய வேண்டுமானால், அரிசி மாவை ஒரு களிம்பேறாத பாத்திரத்திலிட்டு, புளித்த

மோர் மூன்றுழாக்கையும் காற்பலம் உப்புப் பொடியையும் அதிற்கலந்து கரைத்துவைத்துக் கொள்ளவேண்டும். பிறகு, முன் சொன்ன தாளித முறைப்படியே, ஒரு வாணலி யென்னும் வாயகன்ற களிம் பேறுப் பாத்திரத்தை அடுப்பி லேற்றி, ஒன்றரை பலம் நல்லெண்ணெய் அல்லது நெய்யை விட்டுக் காய்ச்சி, கிள்ளுமிளகாய் அரைக்காற் பலம் அதாவது எட்டு மிளகாய், கடுகு மூன்று வீசம் பலம், உளுத்தம் பருப்பு காற்பலம், கருவேப்பிலை அரைக்காற் பலம், காயம் ஆறு குன்றிமணி எடை ஆகிய இவ்வாறையும் ஒன்றன்பின் ஒன்றாய் அதிற்கொட்டி ஒரு தாளிதம் ஆயத்தம் செய்து, அதிலுள்ள காயத்தை மட்டும் உபாய மாய் அப்பாலெடுத்து விடவேண்டும். அதற் கப்பால், முந்தி நாம் கரைத்து வைத்துள்ள மாவை, அந்தத் தாளி தத்தில் கொட்டி, தாமதமின்றிக் காண்டிக் காம்பால் கிள றிக் கொண்டே யிருக்கவேண்டும். கொஞ்சம் அசாக்கிரதை யானால் அடி பிடிக்கும். இப்படி எமுறாமல் கிளறுவதால், வாணலியிலுள்ள மாவானது மலரும். அப்போது சமயம் பார்த்து வாணலியை அடுப்பி லிருந்திறக்கி விடவேண்டும். மாவை மோரிற் கரைக்கையில் வேண்டுமானால் இரண்டு பலம் தேங்காய்த் துருவலையுங் கூட்டிக் கொள்ளலாம். பிறகு இதை உபயோகித்தால், நிரம்ப உருசியுள்ளதா யிருக்கும்.

இந்த வாணலி உப்புமாவையே கோதுமை நொய்யிற் செய்யவேண்டுமானால், அரைபலம் நெய்யை வாணலியில் விட்டுக் காய்ச்சி, அதில் காற்படி கோதுமை நொய்யைக் கொட்டித் துடுப்பினால் நன்றாய்க் கிளறி மணல் நிறமாக வறுத்துக் கொள்ளவேண்டும். வறுபட்ட வாசனை வந்த வுடனே அதை ஒரு தாம்பாளத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு மூன்றுழாக்குப் புளித்த மோரில்



அதைக் கொட்டிக் காற்பலம் உப்புப் பொடி போட்டு நன்றாய்க் கலந்து கரைந்து வைத்துக் கொள்ளவேண்டும்.

அப்பால், இரண்டு பலம் நெய்யை ஒரு வாணலியில் விட்டுக் காய்ச்சி, கிள்ளு மிளகாய் அரைக்காற்பலம் (8), கடுகு காற்பலம், உளுத்தம் பருப்பு காற்பலம், சீரகம் வீசம் பலம், கருவேப்பிலை அரைக்காற்பலம், பெருங்காயம் ஆறு குன்றிமணி எடை ஆகிய இவைகளை அதிலிட்டு, முன் சொன்னபடி தாளிதம் ஆயத்தம் பண்ணவேண்டும். அப் படி ஆனவுடனே, புளித்த மோரிற் கலந்து வைத்துள்ள கோதுமை நொய்யை, அதிற்கொட்டி, முன்சொன்ன அரிசி மா உப்புமாவைப் போலவே ஆக்கி உபயோகித்துக்கொள்ள வேண்டும். இதை உஷ்ணமா யிருக்கும் போதே சாப்பிட் டால் உருசியா யிருக்கும். உடம்புக்கும் நல்லது. கோதுமை நொய்யை வறுக்காமலும் மோரிற் கலக்கலாம். ஆனால் வறுத்துச் செய்வதே மணமாகும்.

தாளித்த தயிர் அவல் சுளுவான பலகாரமாகும். அரை படி அவலுக்கு முக்காற்படி குழம்பான புளித்த மோர் வேண்டும். இதில் ஒரு பலம் உப்பையும் அவலையும் ஊற வைக்கவேண்டும். இரண்டரை பலம் நெய்யில், அரைபலம் உளுத்தம் பருப்பு, காலே வீசம் பலம் மிளகாய், அரை பலம் கடுகு, வீசம் பலம் கருவேப்பிலை ஆகியவைகளை ஒன் றன்பின் ஒன்றாயிட்டு ஆயத்தஞ் செய்த தாளிதத்தில், மேலே ஊற வைத்துள்ள அவலைக் கொட்டி நன்றாய்க் கிளறி உதிரும் பாகத்தில் இறக்கி, உபயோகிக்க வேண்டும்.

தாளித்த எலுமிச்சம் அவல் பித்த சாந்தியுங் குளிர்ச்சியு மாம். அரைபடி அவலை நொய்யாக்கிக் கொஞ்சம் தண்ணீ ரில் ஊற வைக்கவேண்டும். அரை யாழாக்கு எலுமிச்சம் பழ ரசம் எடுத்து, அதில் இரண்டு சிட்டிகை மஞ்சட் பொடியையும் ஒரு பலம் உப்புப் பொடியையும் கலக்கவேண்

டும். காற்பலம் மிளகாய், காற்பலம் வெந்தயம், ஆறு குன்றிமணி எடையுள்ள காயம் இவைகளைக் கொஞ்சம் எண்ணெயில் வறுத்துத் தூளாக்கி, இதையும் அவலையும் மேற்சொன்ன எலுமிச்சம்பழ ரசத்தில் கலந்து வைத்துக் கொள்ளவேண்டும். இன்னும் இதில் கொஞ்சம் தண்ணீரில் ஊறி உலர்ந்து நெய்யில் வறுத்த அரை யாழாக்குக் கடலைப் பருப்பையும் கலக்கவேண்டும். பிறகு ஒரு வாணலியை அடுப்பிலேற்றி அதில் இரண்டரை பலம் நெய் விட்டுக் காய்ந்தபிறகு, காற்பலம் மிளகாய், அரைபலம் உளுத்தம் பருப்பு, அரைபலம் கடுகு, வீசம் பலம் கருவேப்பிலை ஆகிய இவைகளை ஒன்றன்பின் னொன்றாய்ப் போட்டுத் தாளித முறைப்படி ஆயத்தமான தாளிதத்தில், மேலே ஊற வைத்துள்ள அவலைக் கொட்டிக் கிளறி, இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களுக்குப் பின் அடுப்பை விட்டிறக்கி உபயோகித்துக் கொள்ளவேண்டும். அவலை நொய்யாக இடிக்காமல் முழு அவலாகவும் செய்யலாம். நெய்யில்லாவிடின் எண்ணெயும் உபயோகிக்கலாம். எண்ணெய் கலப்பின்றிச் சுத்தமா யிருக்கவேண்டும்.

**தவலை** யடை யென்னும் பலகாரம் வெகு சுளுவாய்ச் செய்து கொள்ளலாம். காற்படி பச்சரிசிக்குக் கடலைப் பருப்பு, பயற்றம் பருப்பு, துவரம் பருப்பு ஆகிய மூன்றும் வகைக்கு அரை யாழாக்குக் கலந்து, நான்கையும் தண்ணீர் விட்டுக் களைந்து நன்றாய் அலம்பி, வடித்துவிட்டு, உலர்த்தி, நொய்போல மாவரைத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

தேங்காய்த் துருவல் மூன்று பலம், சீரகம் கால்ரூபா எடை, காயம் நாலு குன்றிமணி எடை, உப்புப் பொடி அரை ரூபா எடை ஆகிய நான்கையும், ஒன்றரை ஆழாக்குத் தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதில் ஒன்றன்பின் னொன்றாகக் கொட்டி, மேலே அரைத்து வைத்திருக்கும் மாவையுங் கலந்து கிளறித் தாம்பாளத்தில் வைத்துக் கொள்ளவேண்டியது.



பிறகு ஒன்றே காற்பலம் நெய் அல்லது நல்லெண்ணெயில், கால்ரூபா எடை கடுகு, காற்பலம் உளுத்தம் பருப்பு, கால் ரூபா எடை கிள்ளுமிளகாய் இவைகளைக் கொண்டு தாளிதம் தயார் செய்து, மேலே கிளறி வைத்துள்ள மாவிற் கொட்டிப் பிசைந்து எலுமிச்சங்கா யளவு உருண்டைக ளாக்கிவைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு தவலைப் பானையில், ஒன்றேகாற்பலம் நெய் அல்லது நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி, அப்பானையை இறக்கி, அதில் விட்ட நெய் யல்லது எண்ணெய் நாலு பக்கமும் நன்றாய்ப் படும்படி புரட்டவேண்டும். பிறகு, மேலே உருட்டி வைத்திருக்கும் உருண்டைகளை உள்ளங் கையில் வைத்துப் புளியிலையின் கனமாக வட்டமாய்த் தட்டித் தவலையின் உட்புறத்தில் எருமுட்டை தட்டுவது போல் ஒட்டி விடவேண்டும். அடைகளின் நடுவில் வடைக்குத் துவாரம் செய்வது போலச் செய்தால் தான் நன்றாய் வேகும். அடைகளை யெல்லாம் ஒட்டியான வுடனே தவலையை அடுப்பிலேற்றிச் சிறு தீ போடவேண்டும். தவலையின் வாயை ஒரு நீர் நிரம்பின பாத்திரத்தால் மூடவேண்டும். இந்த மூடின பாத்திரத்திலுள்ள நீர் சூடேறினால், அடைகள் வெந்து விட்டதற்கு அடையாளமாம். தவலையைத் திறந்து பார்த்தால், அடைகள் சிவந்திருந்தாலும் பக்குவமானதற் கடையாளமாம்.

சுளுவான பயற்றம் பருப்புப் பொங்கல் செய்யும் விதம் பின் வருமாறு காண்க: அரைபடிச் சிறுமணிப் பச்சரிசிக்கு, வறுத்துடைத்த பயற்றம்பருப்புக் காற்படி சேர்க்கவேண்டும். இரண்டையும் ஒன்றாய்த் தண்ணீர் விட்டலம்பி வடிய

வைக்கவேண்டும். நீரெல்லாம் நன்றாய் வடிந்தவுடனே அதில், ஆறு குன்றிமணி எடை மஞ்சட் பொடியும் ஒன்றரை பலம் வெண்ணெய் அல்லது நெய்யுங் கலக்கவேண்டும்.

பிறகு ஒன்றரைபடித் தண்ணீரை நாலுபடி பிடிக்கும் பாத்திரத்திலிட்டு, அடுப்பிலேற்றிக் கொதிக்க வைக்க வேண்டும். கொதித்தவுடனே மஞ்சள் முதலியவைகள் கலந்துள்ள அரிசிபருப்பைப் போட்டுக் கிளறி மூடிவைக்க வேண்டும். அரிசி முக்கால் வேக்காடானபதம் பார்த்து, காற்பலம் மிளகு, காற்பலம் சீரகம், ஒரு ரூபா எடை இஞ்சித்துண்டு, காற்பலம் உப்புப் பொடி இவைகளை அதிற் போட்டுக் கிளறவேண்டும். அதற்கப்பால், ஐந்து பலத்துக்குக் குறையாமல் நல்ல நெய்யை அதில் விட்டுக் கிளறிக் கொடுக்கவேண்டும். காயம் வேண்டுமானால் ஆறு குன்றிமணி எடையும், தேங்காய்த்துருவல் நாலுபலம் எடையும் சேர்த்துக்கொள்ளலாம். காயத்தைத் தண்ணீரில் கரைத்து ஊற்ற வேண்டுமென்றி, அப்படியே போடப்படாது. கடைசியாகப் பொங்கல் பாத்திரத்தை அடுப்பை விட்டிறக்கித் தணலின் மேல் ஐந்து நிமிஷநேரம் வைத்திருந்து, பொங்கலை உபயோகித்துக் கொள்ளலாம். தேங்காய்த்துருவல் வேண்டாதவர்கள், நெய் விட்டுவறுத்த முந்திரிப் பருப்பு ஐந்துபலம் சேர்த்துக் கொள்ளலாம்.

சுலபமான கிச்சடி ஒன்று; ஆனால் இதற்கு நெய் கொள்ளும். ஆனாலும் விசேட காலங்களிற் செய்து கொள்ளலாம்.

பயற்றம் பருப்புக் கால்படி, பச்சரிசி கால்படி ஆகிய இரண்டையும் நன்றாய்த் தண்ணீரிற் கொட்டிக் களைந்து கழுவி நீரை வடித்து விடவேண்டும். இலவங்கம் கால் ரூபா எடை, ஏலரிசியும் அவ்வளவே, மிளகும் அவ்வளவே,



இலவங்கப் பட்டையும் அவ்வளவே ஆகிய இவைகளைக் கொஞ்சம் நெய்யில் வறுத்துப் பொடியாக்கியும், முக்காலே அரைக் காற்பலம் உப்பைத் தூளாக்கியும் அரிசி பருப்பிற் கலக்கவேண்டும்.

பிறகு ஏழரைபலம் நெய்யை ஒரு வாணலியிலிட்டுக் காய்ச்சி, மேற் கூறிய அரிசி பருப்புக் கலப்பை அதிற் கொட்டிக் கிளறிக்கொண்டே பக்குவமாய் வறுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு படி பாலை வேறொரு களிம் பேறாத பாத்திரத்திலூற்றிக் கொதிக்கும்படி காய்ச்சி, மேலே வறுத்து வைத்துள்ள அரிசி பருப்புக் கலப்பை அதிற் கொட்டிக் கிளறிச் சிறு தீ போடவேண்டும். பால் வற்றி அரிசி பருப்பு வெந்தபின், மறுபடியும் ஏழரைபலம் நெய்யைப் பொங்கலிற் கொட்டிக் கிளறித் தணலின் மேல் சற்று நேரம் வைத்திருந்து உபயோகிக்கலாம். வேண்டுமானால் ஐந்து பலம் முந்திரி அல்லது வாதுமைப் பருப்பை வறுத்துப் பாலிற் பருப்பும் அரிசியும் வேகும் போதே போட்டுக் கொள்ளலாம்.

பயற்றம் பருப்புச் சர்க்கரைப் பொங்கல்—இது வெகு சுலுவாய்ச் செய்யக் கூடியது. பச்சரிசி அரைபடிக்குப் பயற்றம்பருப்புக் கால்படி, இரண்டையும் ஒன்றாய்க் கலந்து தண்ணீரிற்களைந்து அலம்பி வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

களிம்பேறாப் பாத்திரத்தில் ஒன்றரைபடி நீர் உலை வைத்துக் காய்ச்சி, மேலே வைத்துள்ள அரிசி பருப்பை அதிற் கொட்டிக் கிளறி மூடிவைத்து முக்காற் பாகம் வெந்த பிறகு ஐந்துபலம் நெய், ஆழாக்குப்பால், பதினைந்து பலம் சர்க்கரை, மூன்று பலம் தேங்காய்த் துருவல் இவை

களை ஒன்றன்பின் ஒன்றாய்ப் பொங்கலிற் போட்டுக் கிளறிக் கொடுத்து ஐந்து நிமிஷத்துக்குப் பிறகு, ஏலரிசிப் பொடி காற்பலம், முந்திரிப் பருப்பு ஐந்துபலம் இவ்விரண்டையும் அதிற் கலந்து தணலின் மேல் வைத்து உபயோகித்துக் கொள்ளலாம். முந்திரிப் பருப்பை நெய்யில் வறுத்தும் போடலாம்.

புளியோரை யல்லது புளியஞ்சாதம் —இதைப் பலவித மாய்ச் செய்து சுவையைக் கெடுப்பதை விடப் பின் வருமாறு ஒரே முறையாய்ச் செய்துகொள்வது உசிதமாம்:

ஒன்றரைபடித் தண்ணீர் உலைவைத்து, அரைபடிப் பச்சரிசியை அதிற் சாதமாக்கிக் கஞ்சி வடித்துக் கொள்ள வேண்டியது. சாதத்தை யெடுத்துப் பலகையின் மேலாவது தட்டத்திலாவது பரப்பிச் சிறு சூடாயாற்றிக்கொண்டு, மூன்று பலம் நல்லெண்ணெயை அந்தச் சாதத்தைச் சுற்றி லும் ஊற்றிக்கையாற் கிளறி விடவேண்டும்.

அரைபடி நீரில் ஆறுபலம் புளியைக் கரைத்து, வடிகட்டிவைத்துக் கொண்டு ஒன்றரை பலம் உப்பை அதிற் கரைக்கவேண்டும்.

ஆறு பலம் நல்லெண்ணெயில் இரண்டு பலம் மிளகாய், காற்பலம் கடுகு, அரை ரூபா எடை வெந்தயம், பன்னிரண்டு குன்றிமணி எடை காயம் இவைகளைக் கொண்டு தாளிதம் செய்து, அதில் கால் ரூபா எடை மஞ்சட் பொடி, ஒருரூபா எடை கருவேப்பிலை இவைகளைப் போட்டு, கரைத்து வைத்துள்ள புளிநீரை அதிற் கொட்டிக் குழம்பாய்ச் சுண்ட வைக்கவேண்டும். சுண்டும் போது அடிபிடிக்காமல் குழம்பை யெடுத் தெடுத்து அலசி அலசி வைத்து அதிசாக்கிரதை யாய்ப் பார்த்துக் கொள்ளவேண்டும். அது இலேகியப் பதமாய்ச் சுண்டிய சமயம் பார்த்து, மேலே ஆறவைத்



திருக்கும் சாதத்தை அதிற் கொட்டி, செம்மையாய்க் கலந்து கிளறிக் கொடுக்கவேண்டும். இது எத்தனை தினங்களாகி லும் கெடாது, சுமார் இரண்டு வாரம் வைத்திருக்கலாம்.

(வாங்கிபாத்) அல்லது கத்தரிப் பிஞ்சுச் சாதம்—இது வடநாட்டார் பாகமேனும் நந்நாட்டார்க்கும் அனுகூலமான தாகையால் பின் வருகிறபடி சுளுவாய்ச் செய்து கொள்ளலாம்: சிறு மணிப் பச்சரிசி அரைபடி யெடுத்து நன்றாய் அலம்பி வடிய வைக்கவேண்டும். அதோடு அரை பலம் நெய்யையும் பன்னிரு குன்றிமணி எடை மஞ்சட் பொடியையுங் கலந்து விடவேண்டும்.

நல்ல தண்ணீர் ஒன்றரை படியை இரண்டரைபடி தவலைப் பானையில் உலைவைத்துக் காய்ச்சி மேலே மஞ்சள் கலந்து வைத்துள்ள அரிசியைச் சாதமாக வடித்து மற்றொரு பாத்திரத்திற் கொட்டி ஆறவிடவேண்டும்.

அரைபலங் கொத்துமல்லிவிரை, அரைபலம் மிளகாய், அரைக்காற்பலம் மிளகு, வீசம்பலம் சீரகம், அரைக்காற் பலம் சாதிக்காய், அவ்வளவே சாதிபத்திரி, வீசம்பலம் கிராம்பு, இரண்டு பலம் உளுத்தம் பருப்பு இவை களைத் தனித்தனிக் கொஞ்சம் நெய்விட்டு வறுத்துப் பொடித்துப் பிறகு ஒன்றாய்க் கலந்து, மூன்றுபலம் கொப்பரைத் தேங்காய்த் துருவலையும், இரண்டே முக்காற் பலம் உப்பையும் அதோடு சேர்த்து, மறுபடியும் நன்றாயிடித்து, இரண்டு சரிபாகங்களாக்கிக் கொள்ள வேண்டும். பிறகு ஒன்றரைபலம் நல்ல தண்ணீரில் முக்காற் பலம் புளியை ஒரு ஈயம் பூசின பாத்திரத்திற் கரைத்துக் கோது கொட்டை முதலியவைகளை எடுத்துவிட்டு, அதில் மேலே பங்கிட்டு வைத்துள்ள இரண்டு பாகம் சம்பாரத்தில் ஒரு பாகத்தைப் போட்டுக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஏறக்குறைய ஒருபலம் சம எடையாயுள்ள முப்பத்தினாலு கத்தரிப் பிஞ்சுகளைக் காம்பின் முக்கால் பாகத்தை நறுக்கிவிட்டு, வெவ்வேறாக்காமல் நான்காய்ப் பிளந்து, ஒவ்வொன்றிலும் மேலே கலந்துவைத்திருக்கும் புளிச் சம்பாரத்தை நிரப்பிச் சித்தப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

நான்குபலம் நல்லநெய் அல்லது நல்லெண்ணெயில், காற்பலம் மிளகாய், காற்பலம் கடுகு, அரைபலம் உளுத்தம் பருப்பு, அரைபலம் கடலைப்பருப்பு இவைகளை ஒன்றின்பின் ஒன்றாய்ப் போட்டு, முன் சொன்ன முறைப்படி தாளிதம் ஆயத்தப்படுத்தி, மேற்குறித்த கத்தரிப் பிஞ்சுகளை அதிற்கொட்டி, சுமார் ஒன்றரைபலம் நல்ல தண்ணீரை அதன்மேற் பையத் தெளித்துக் கிளறி மூடிவைக்கவேண்டும். கொஞ்சநேரத்துக்குப் பின், மறுபடியும் கொஞ்சம் தண்ணீர் தெளித்துக் கிளறிக்கொடுத்து மூடி வைக்கவேண்டும். இப்படியே அந்தக் கத்தரிப் பிஞ்சுகள் முக்காற் பாகம் வேவுமட்டும் அடிக்கடித் திறந்துக் கிளறியும் மூடியும் அதிசாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளவேண்டும். பிறகு முழுவேக்காடானவுடன் அதில், மேலே ஆறவைத்திருக்கும் சாதத்தைக் கொட்டி, மற்றைப்பாதி சம்பாரத்தையும் போட்டுக் கிளறிக்கொடுத்து, உடனே ஐந்துபலம் நெய்யை அதில் விட்டு, மற்றொரு தரம் கிளறிக் கொடுத்துப் பின்பு தணலின்மேல் நாலுநிமிஷம் வைத்து எடுத்துக் கொள்ளலாம்.

புளிக் குழம்பு செய்வதற்கு மிகவும் உபயோகமான குழம்புப் பொடி யென்பதைப் பின்வருகிறபடி எல்லாரும் செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

மிளகாய் இரண்டுபலம், கொத்துமல்லிவிரை ஐந்து பலம், உளுத்தம் பருப்பு ஆறுபலம், வெந்தயம் இரண்டு



பலம், சீரகம் ஒருபலம், கடுகு அரைபலம், தேய்த்த எள் ஐந்தரைபலம், கொப்பரைத் துருவல் மூன்றுபலம் ஆகிய இவ்வெட்டில் கொப்பரையைத் தவிர மற்ற ஏழில் மிளகாயைமட்டும் கொஞ்சம் நல்லெண்ணெயில் வறுத்துக் கொண்டு, மற்ற ஆறையும் தனித்தனிச் சும்மா எண்ணெயில்லாமல் வறுத்துப் பின்பு எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து பொடிசெய்து, அப்பொடியோடு கொப்பரைத் துருவலையுங் கூட்டிக் கொஞ்சமிடித்துக் குங்குமம் போலாக்கிக் குழம்புப் பொடி யென்று வைத்துக்கொண்டு, வேண்டிய போது உபயோகித்துக் கொள்ளலாம்.

இது செய்யப் பான்மாறுவதனால் தான், சிற்றின்ப வாழ்க்கையிற் றிகழும் பெண்களின் கணவன்மார்களிற் பெரும்பாலாரும் வீட்டுச் சாப்பாடென்றால் வெறுப்பாகவும், கடைச் சாப்பாடென்றால் விருப்பாகவும் உண்டு உருசி கண்டு கொண்டாடுகிறார்கள். இப்படிச் சிற்றின்பவாழ்க்கையிற் றிகழும் இருபாலாரும் இதில் வெற்றிபெறவேண்டுமானால், 'அன்னமயம் பிராணமயம்' என்றபடி வாய்க்குருசியான அன்னபானாதிகளைப் பாகசாஸ்திர முறைமைப்படி திறமையாகச் செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். இல்லற வாழ்க்கை அல்லது சிற்றின்பவாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுவோர்க்குப் பாகமுறை இன்றியமையாத தென்பது தெரிந்தே இவ்வதிகாரத்தை, 'சமைக்குந் திறமே அமைக்குஞ்சுவையெனல்' என்ற திருநாமஞ் சூட்டி அதற்கிசைந்தபடி எழுதிக்கொண்டு வருகிறோம். சிற்றின்பவெற்றி யென்றால் ஆடவரும் மகளிரும் மற்றை மாடு முதலிய பிராணிகளைப்போல உடற் சுகானுபவம் ஒன்றாலேயே வெற்றி பெறுவதென்பது பொருளல்ல; அப்பிராணிகள் கன்றுகளை யீன்றும் குட்டிகளைப் போட்டும் பூமிக்குப் பாரமாய் நாட்களைக் கழிப்பது போலவே இவர்களும்,

'நாப்பிளக்கப் பொய்யுரைத்து
நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத
நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க எழுகின்ற
புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர்
கைவிடவு மாட்டீர்
கவட்டுத்தொன் மரத்திடுக்கிற்
காலுழைத்துக் கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த
பேய்க்குரங்கு போல
அகப்பட்டீர் கிடந்துழல
அகப்பட்டீர் நீரே'

என்றபடி முரட்டுத்தனமாகச் சிற்றின்பத்தை நுகர்ந்து பூமிக்குப் பாரமாகப் பிள்ளைகளைப் பெற்று ஜனத்தொகையை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்பது பொருளல்ல. உடலாலும் உயிராலும், பொருளாலும் தெருளாலும் அருளாலும் இன்பநுகர்பவர்களாய் இருவரும் பரமசிவனும் பார்வதியும் போலவும், விஷ்ணுவும் இலக்ஷ்மியும் போலவும் இரண்டறக் கலந்து உயர்வு தாழ்வின்றி ஒற்றுமையாய் வாழ்ந்து, அவ்வாழ்க்கையின் வெற்றிக் கடையாளமான சற்புத்திரரைப் பெறுதலென்பதே இந்நூலின் முடிவான பொருள்.

இதைக் கூர்ந்து நோக்கும் கணவன் மனைவியர்க்கு இவ்வதிகார விஷயம் சமைக்குந் திறனடைவதற்கு வழி காட்டியாயிருக்கு மென்பதற் கையமில்லை.



சில கல்வி நலனற்ற போலிச் சிற்றின்பக் கணவன் மனைவியர் மட்டும் இதன் உள்ளக்கிடையை உணரமாட்டாமல் உல்லிங்கனஞ் செய்வார்கள். எல்லாம் உடற் சுகானுபவமாகிய காமாசங்களையே இத்தகைய நூலிற் சொல்ல வேண்டும். அவ்வுடற் சுகானுபவத்துக்கு ஆதாரமாகிய பரசுகானுபவம் இங்கெதற்கென்று அஞ்ஞானம் படிப்பார்கள். அவர்கள் தமக்குத் தெரிந்தளவு அஞ்ஞானம் பேசுவார்களாகையால், அவர்களைப்பற்றி நாம் கவனிப்பது அநாவசியம்.

இவ்வூனவுடல் சுகம்பெற்றிருந்தால் தான் ஞானநிலைக் காதாரமாகும். இவ்வுடலாலனுபவிக்குஞ் சுகம் சிற்றின்பத்தோடேயே கழிவதன்று. சிற்றின்பம் வெற்றியாய் மற்றின்பமாகிய ஞானப் பேரின்பம் நிலைக்கவேண்டுமென்பதே இந்நன்னூற் றுணிபு. ஆகையால் சிற்றின்பத்திற் றிகழும் கணவன் மனைவியரிருவரும், அதில் வெற்றிபெறுவதற் கடையாளமான ஞானப் பேரின்பத்தைக் கைப்பற்ற வேண்டுமானால், இவ்வூனவுடலைப் பிணிமூப்புச்சாக் காட்டுக்குப் பறிகொடாமற் பாதுகாக்கவேண்டும். அப்படிப் பாதுகாப்பதற்கு எவ்வெப்பதார்த்தத்தை எவ்வெப்படிச் சமைத்துண்ணவேண்டுமோ அவ்வம் முறையை அறிந்துகொள்வது இன்றியமையாதது. அதென்னவோ வீட்டில் செய்து வைத்தார்கள். நானும் தின்று வந்தேன். 'வாங்கி பாத்' என்றால் கத்தரிக்காய்ச் சாதமாம். அப்படித் தான் சொல்லிக்கொண்டு வந்து என்னெதிரே வைத்தார்கள். நானுந் தின்று வந்தேன். நெய் மணமாயிருந்தது. தித்திப்பேயில்லை. இது தான் பட்டணத்தார் பலகாரம்' என்று தான் தின்றது இது வென்றும் அது செய்பாகம் இன்னதென்றும் தெரியாமலே காலந்தள்ளும் கணவன் மனைவியரைப்பற்றி யாம் கொண்டுள்ள அநுதாபங் காரணமாகவும்

இவ்வதிகாரம் இங்கே இடம் பெற்றது. இது மிகவும் சிற்றதிகாரமாகையால் சமைக்கு முறைகளை விடாமற் கூற இடமில்லை. முதலிற் சிலவற்றைக் கூறினும். ஆண் பெண் இருபாலாரும் நன்கு கவனித்து நாகரிகமாய்ச் சமைத் துண்ணக் கோருகிறோம். இன்னும் இரண்டொரு குழம்பு, ரசம், கூட்டு, கறி முதலியவைகளைச் சுலபமாய்ச் செய்து கொள்ளும் முறையைக் கூறி யிவ் வதிகாரத்தை முடிப்பாம். மற்றையவைகளை விரிவாகப் பாக நூல்களிற் கண்டு கொள்க.

குழம்புகளிற் பலவுள வாகையால் எல்லாவற்றிற்கும் பொதுவான முறை யொன்று இங்கே கூறுவோம்: கத்தரி, வாழைக் கச்சல், சேப்பங்கிழங்கு, வெண்டை, புடலை, சுரை, கருணை முதலிய எதில் வேண்டுமானாலும் புளிக்குழம்பு செய்துண்ணலாம். வெட்டிக்குக் கை கொண்டமட்டும் புளியைக் கரைத்து, மிளகாய்ச் சாந்தரைத்துக் கூட்டி, அதில் உப்பை மாட்டிக் கடுகிலும் கருவேப்பிலையிலுந் தாளிதம் பண்ணிக் கொதிக்க வைத்திறக்கிப் புளியோரை போலச் சோற்றில் ஊற்றிப் புரட்டிப் புரட்டி மொத்தை யடிக்க வைத்துக் கொள்வது குழம்பல்ல. முதலிற் கத்தரிப் பிஞ்சுக் குழம்பைக் கூறுவாம். இப்படியே மற்றையவைகளை யுங் கொள்க.

பன்னிரண்டு பலம் கத்தரிப் பிஞ்சைத் துண்டு துண்டாய் நறுக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

காற்படி தண்ணீரை ஒருபடி கொள்ளும் ஈயம் பூசின பாத்திரம் அல்லது மட்சட்டியில் அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சி, நறுக்கி வைத்திருக்கும் கத்தரித் துண்டுகளை அதிற் போட்டு, மேலொரு பாத்திரத்தை மூடி வைக்கவேண்டும். துண்டுகள் அரைவேக்காடானபின், காற்படி தண்ணீரில் ஒன்



றரை பலம் புளியைக் கரைத்துக் கொட்டை கோதுகளை நீக்கி ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, மேற்சொன்ன குழம்புப் பொடி ஒரு பலமும் உப்பு முக்காலே அரைக்காற் பலமும் அதிற் கலந்து, அதை வெந்து கொண்டிருக்கும் கத்தரித் துண்டுகளில் ஊற்றிக் கிளறிக் கொடுக்கவேண்டும். ஆறு குன்றிமணி எடை மஞ்சள் தூளும் அதிற் போட வேண்டியது. குழம்பு நன்றாய்த் தளபள வென்று கொதிக்குந் தருணத்தில், அது அதிக நீர்த்திருந்தால், அரைபலம் அரிசிமாவை அரை யாழாக்கு நீரிற்கலந்து கொட்டிக் கிளறலாம். அரைபலம் நெய் யல்லது நல்லெண்ணெயில் அரைக் காற்பலம் மிளகாய், அதே எடையுள்ள கடுகு, இவைகளைக் கொண்டு தாளிதம் சித்தம்செய்து, மேற்சொன்ன குழம்பிற் கொட்ட வேண்டும். அவசியமானால், இரண்டு குன்றி எடை யுள்ள காயத்தை ஒரு ரூபா எடை நீரிற் கலந்து சேர்த்துக் கொள்ளலாம்.

மற்றைப் பருப்புக் குழம்புகளும், வற்றல் வெற்றுக் குழம்பு, பருப்புக் குழம்புகளும், காய் கிழங்குகள் சேர்ந்த பருப்புக் குழம்புகளும் பலவுள. பாக சாஸ்திரங்களிற் காண்க. மோர்க் குழம்புகளும் பலவுள. கூட்டுகளும் கறிகளும் அநேகம் உள.

ஐந்து பலம் மிளகாய், மூன்று பலம் கொத்துமல்லி விரை, ஒரு பலம் மிளகு, காற்பலம் சீரகம், அரைக்காற் பலம் வெந்தயம், அரைக்காற் பலம் கடுகு இவைகளைக் கொண்டு, முன் குழம்புப் பொடிசெய்து கொண்டபடி ரசப் பொடியும் செய்துகொள்ளலாம். துவரம் பருப்பின்றிச் செய்யும் இரசம் இரசமே அல்ல. பாதரச மென்று கொள்ள வேண்டும்.

இன்னும் மற்றைக் கறி, அப்பளம், வற்றல், முறுக்கு, சீடை, துவையல், தொக்கு, ஊறுகாய், வடகம் (வடாம்),

தோசை, கொழுக்கட்டை, மோதகம், வடை, ஆமைவடை, தேன்குழல், பகோடா முதலிய வடநாட்டுப் பக்ஷண பலகார வகைகளையுங் கவனித்துக் கொள்க. எங்காளும் நன்னாடாகிய தென்னாட்டுப் பாக முறைகளை இலேசானவைகளாம். எதையும் குருட்டாட்டமாய்க் கொள்ளாமல் தெரிந்து செய்துண்ண வேண்டுமென்பதே இச் சிற்றின்ப வெற்றியின் திரண்ட நோக்கமாம்.

---

## ஒன்பதாம் அதிகாரம்

---

### (தொழுதூண் சுவையின் உழுதூ ணினிதெனல்)

'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு' என்றதூஉம் இப்பெற்றி நோக்கியே யென்க. 'ஓதுவா னெல்லாம், உழுவான் தலைக்கடையில்' என்பதையும் உற்று நோக்குக.

> 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
> தொழுதுண்டு பின்செல் பவர்'

என்னும் நாயனார் குறளுக்கு ஆயிரம் சலாம் செய்யவேண்டும். இங்கே உழுது என்பதற்கு, உலகத்தா ரெல்லாம் உண்ணும்படி உழுது பயிரிட்டு என்று பொருள் கொள்ளக் கிடப்பதை உய்த்து நோக்குக. சிற்றின்ப வாழ்க்கையிற் றிகழ்ந்து வெற்றிபெற விரும்புவார் ஒவ்வொருவரும் தமக்கென வாழாமல், பிறர்க்கென வாழவேண்டு மென்பார் உழுது என்றார். முதலிற் பிறர்க்கென வாழ்ந்து, பிறகு தமக்கென வாழவேண்டு மென்பார், உண்டு என்பதை இரண்டாவதாக வைத்தார். இங்கே உண்டு என்பதற்கு, பிறர்க்கென உழவுத்



தொழில் செய்வார் தாமும் உண்டு என்று பொருள் கொள்ளக் கிடப்பது காண்க. "இப்படி வாழ்வாரே, எல்லாம் தமக்குரியராய், அதாவது சுயேச்சை யுடையவராய் வாழ்வார்; ஒருவர்க்கு அடங்கி நடக்கும் பராதீன முடையவராய் வாழ்பவரல்லர்" என்னும் பொருளமைத்தே வாழ்வாரே வாழ்வாரென்று தேற்றுகாரங் கொடுத்துக் கூறினார். "இவர்கள் தவிர மற்றவரெல்லாரும் பிறர்க்கு அடக்கமாய் அதாவது அடிமையாய், அவர்களைச் சேவித்து, அதனால் தாமும் உண்டு, அவர்களைப் பின் தொடர்ந்து செல்லும் மற்றப் பிராணிகளைப் போல வாழ்பவர்கள்" என்பார், 'மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்' என்றார்.

> 'வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
> சொல்லே ருழவர் பகை'

என்னுங் குறளில், புவி அரசரை வில்லேருழவரென்றும், கவி அரசரை அதாவது புலவர்களைச் சொல்லே ருழவரென்றும், இருவரையும் உழவராகவே கூறினார் நாயனார். ஏன் கூறினார்? உழவுத்தொழில் செய்யாதவன் உலகத்தில் ஒருவனும் இலன் என்பார் அரசனையும் வில்லை ஏராக வைத்து உழுபவன் என்றும் புலவனையும் சொல்லை ஏராக வைத்து உழுபவனென்றும் சொகுசாகக் கூறினார். இன்னும் இந்தச் சொல்லே ருழவரென்பதற்கு அந்தணர் அதாவது முனிவர் என்று பொருள் கூறினும் அமையும். ஆகையால் உலகத்திலுள்ள மாந்தரை யெல்லாம் நான்கு வருணமாகப் பிரித்திருக்கும் பிரிவினை ஒருபுற மிருக்க,

| | |
|---|---|
| சொல்லே ருழவர் | (அந்தணர்—முனிவர்) |
| வில்லே ருழவர் | (அரசர்) |
| நெல்லே ருழவர் | (பயிரிடுவோர்) |

என்று மூன்று பெரும்பிரிவாகப் பிரிக்கலாம். இம்மூன்று குலமே அன்றும் இன்றும் என்றும் இருந்து வரூஉம் இயற்கைப் பிரிவாகும். வனத்தில் அருந்தவம் புரியும் அந்தணராகிய முனிவரும், அவர்களைக் காக்க அரசாளும் அரசரும் தவிர, ஏனையோரெல்லாம் நெல்லே ருழவராக வாழ்வதே நியாயம் என்பது தோன்றவே, உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்றார்.

‘ உழுங்குலத்திற் பிறந்தாரே
உலகுய்யப் பிறந்தார்கள் ’

என்னுங் கம்பர் வாக்கின்படி உலகுய்யப் பிறந்தார்களெல்லாம் உழுங்குலத்திற் பிறந்தோராவார், அதாவது உழவுத் தொழில் செய்யப் பிறந்தோராவார்.

உலகத்திற் பெரும்பாலும் உழவுத் தொழில் நடவாதெனில், அதாவது நெல்லே ருழவு நடவாதெனில், வில்லே ருழவு அதாவது அரசாட்சி நடவாது. எல்லாரும் உழவுத் தொழிலைச் செய்யாரெனினும், அதையே எதிர் நோக்கி வாழ்கின்றார்கள்.

“ கோனோக்கி வாழுங் குடியெல்லாம் தாய்முலையிற்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானோக்கும்
ஏர்நோக்கி வாழும் உயிர்கள் பயிரெல்லாம்
நீர்நோக்கி வாழும் நிறைந்து ”

என்பது சங்கநீதி. இதுவே நாம் பின்பற்ற வேண்டிய பெருங் கட்டளை. ஆகையால், சிற்றின்ப வாழ்க்கையிற் றிகழும் எவரும் உழவுத் தொழிலையே உகந்த தொழிலாக் கொள்ளவேண்டும். அதற்கென வுழைக்கவேண்டும். எந்தத் தொழிலையும் குலத் தொழிலாக் கொண்டு வேறு பிரித்துக் கைவிட்டது போல உழவுத் தொழிலையும், அதற்கென வொரு குலத்தை ஏற்படுத்திக் கைவிட்டு விடாமல், எல்லா



ருங் கைக்கொள்ள முயலவேண்டும். அப்போதுதான் நந்நாடு சீர்பெறும். அப்போது தான் ஒவ்வொருவரும் சுயேச்சையுற்றுப் பிறர்க்கென வாழலாம். அப்போதுதான் சிற்றின்பப் பெரும்போரில் வெற்றி யுற்றுப் பேரின்ப வாட்சியைக் கைப்பற்றிப் புகழுடன் வாழலாம்.

இத்தொழிலைக் கேவலம் நாலாங் குலத்தாருடைய தொழிலென மதித்துப் பெரும்பாலாரும் ஒன்றிரண்டு மூன்றாங் குலத்தவராகவே பந்தயம் ஓடினதனால், இது நாளுக்கு நாள் மெலிவுற்று நன்னாடாகிய நந்நாடு வறுமை பிடித்து வாடுகிறது. முப்பத்து முக்கோடி வானவரைப் போலவே முப்பத்து முக்கோடி மானவரைக் கொண்ட நந்தேயம் அன்னமின்றி அலைகிறது. உண்ண அன்ன மட்டுமா! உடுக்க உடையுமின்றி உலைகிறது. இந்த உலைவையும் அலைவையுந் தீர்க்க வழி தேடுவார் காந்தி மகானைப் போல ஒருவர் இருவர் ஏற்பட்டால் போதாது. சிற்றின்ப வாழ்க்கையிற் றிகழும் ஒவ்வொருவரும் மனந் திரும்பி, தொழுதுண்டு பின்செல்லும் பராதீன அடிமைத் தொழிலால் சுயநலம் பாராட்டி வாழும் வாழ்வை வெறுத்து, சுயேச்சையாய்ப் பரநலம் பாராட்டி வாழும் வாழ்வாகிய உழுதுண்டு வாழும் வாழ்வை உயர்வாழ்வென மேற்கொள்ள வேண்டும். நகத்தில் அழுக்குப் படாமல் வாழவேண்டுமென்னும் மடி யெண்ணங் குடிபுக, மனத்தகத்தில் இடந் தரப்படாது.

“ குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து விடும் ”

என்பது தமிழ்வேதம். இந்தத் தமிழ்த் தெய்வ வேத சுலோகத்தை எல்லாரும் பாராயணம் பண்ணவேண்டும். “ சோம்பலென்னும் மைக்குழம்பு போன்ற இருளானது

சூழ்ந்துகொண்டால், உலகநடை யறிந்து நடக்கும் இயல்புடைய குடியென்னும் விளக்கானது பக்கென்று அணைந்துவிடும்" என்பது இதன்பொருள். இதற்குத் தக்கபடியே நன்னாடாகிய நந்நாட்டில், உழுதொழிற் செய்யும் உலகநடை யறிந்து நடக்கும் இயல்புடைய குடிகளெல்லாம், பரதேசப் பேய்க் கோட்பட்டு மயங்கி சுயேச்சைத் தொழிலாகிய உழுதொழிலை இழிதொழிலென ஒதுக்கி, பராதீனத் தொழில்கள் பலவற்றையும் கைப்பற்றினதனால் மடியென்னும் இருள் மூடிக்கொண்டது. அதனால் உயர்குடி யென்னும் விளக்கம் அணைந்து போயிற்று. எங்கெங்கும், உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் வழியின்றி ஏழைகளும் கோழைகளுமே நிறைந்து, பிற நாடுகளுக்கும் கப்பலேறிக் கூலிகளாய்ச் செல்ல நேரிட்டது.

ஆகையால், உழவு என்பது உண்ணும் உணவுக்கு மட்டுமே அன்றி உடுக்கும் உடைக்கும் ஆகவேண்டும். ஒவ்வொருகுடியிலும், உணவுக்குவேண்டிய தானியங்களைப் பயிரிடும் வழக்கமட்டும் பற்றாது. உடைக்குவேண்டிய பருத்தி முதலியவைகளையும் பயிரிடுபவர்கள் வெளிவரவேண்டும். அதனால் நூல் நூற்றலும் நெய்தலும் தலைசிறக்கவேண்டும். பஞ்சாகவும் பிற தானியவகைகளாகவும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வதிலாகப் பருத்தி யாடைகளாகவும் மற்றைக் கைத்தொழிற் பொருள்களாகவும் ஏற்றுமதிசெய்து நாட்டைச்செழிப்பிக்க வேண்டும்.

அதனால், தொழு தொழிலாகிய உத்தியோகமென்னும் சோம்பற்றொழிலை மேற்கொள்வதை அறவிலக்க வேண்டும். நகத்திலழுக்குப்படாமல் உத்தியோக மென்னும் இராஜாங்க சேவையில் ஈடுபட்டு, ஏழைகள் எப்பாடு பட்டால் எமக்கென்னவென்று அவர்களை நாட்டுப்புறத்தாரென இழித்துப்



பழித்துரைத்துத் தந்நலம் பாராட்டும் இழிதகைமைக்கு இடந்தந்து நாட்டை நலிவிக்கப்படாது.

மேற்குறித்தபடி பெரும்பாலும் முதற்குலத்தாரே உத்தியோகஞ் செய்து பிழைப்பதைப் பெருந்தொழிலாக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாம் மற்றைக்குலத்தார்க்கு உழவுத் தொழில் நெசவுத் தொழில் முதலிய பிற கைத்தொழில் செய்து பிழைப்பதற்கு வழி காட்டவேண்டும்.

இல்லையேல், நந்நாட்டைப் பிடித்திருக்கும் வறுமை நோய் தீர வேறுவழி இல்லை. ஆங்காங்கு நகரங்களில் மட்டும் ஒருவாறு வறுமை நோய் தோன்றாமல், இலை மறை காய் போல் இருந்த போதிலும் நாட்டுப்புறங்களில் குடிகள் படும் பாட்டைக் கவனிக்கவேண்டும். நகரங்களில் ஏழைகள் பணத்தை எப்படியோ கொள்ளை கொண்டு குவித்து வைத்திருக்கும் பணக்காரமக்களனைவரும், தத்தம் புதையலிற் கையை வைத்து யாத்திரா மார்க்கத்திற் செலவிட்டு, நாட்டுப் புறங்களுக்குப் போய், ஆங்குள்ள ஏழைக்குடிகளின் கஷ்ட நஷ்டங்களைக் கவனித்துத் தம்பேரும்புகழும் விளங்கும்படி பரிகாரத்தேடவேண்டும். ஏரி பலம் இல்லாவூர்க்குக் கரை கோலித் தண்ணீர் தேங்கி நிற்க வழி தேடவேண்டும். வித்தில்லார்க்கு வித்தும், நிலமில்லார்க்கு நிலமும், மாடில்லார்க்கு மாடும், வீடில்லார்க்கு வீடும், படிப்பில்லார்க்குப் படிப்பும், எது இருப்பினும் இல்லாவிடினும் எல்லார்க்கும் நெசவுத்தொழில் அல்லது ஏதாவது கைத்தொழில் செய்து பிழைக்கும் வகையுந் தேடிவைக்கவேண்டும்.

தனக்கு வேண்டிய ஊண் உடையாதிகளுக்குப் பிறரை எதிர்பார்க்கும் நாடும் ஒருநாடாமா? 'நாடு என்பது நாடா வளத்தன' என்றார் நாயனார். 'தம்மிடத்து வாழ்வார் வருந்தித் தேடாமலே, சுலுவாக வளர்தருவனவே நாடுகள்'

என்பதிதன்பொருள். இப்படியே நந்நாடுகள் அமைந்திருக்கின்றன. அவைகளின் வளங்களை அனுபவிக்க வகை தெரியாமலே நந்நாட்டார் வருந்துகிறார்கள். நன்னாட்டிற் பிறந்தும் நந்நாட்டார், பிற நாட்டாருடைய நடைநொடி பாவனைகளிற் சிக்கித் தந்நாட்டு வளங்களைப் பறிகொடுத்து வாடுகிறார்கள். நந்நாட்டுவளங்களில் முதன்மையாய் விளங்கும் உடை முதற்பொருள்களாகிய பருத்திப்பஞ்சு, நீலம், ஆவாரை முதலியவைகளைப் பிறநாட்டுக்குக் கொஞ்சமேனும் முன்யோசனையின்றித் தம் இறங்குமதியால் ஏற்றுமதி செய்துவிட்டு இறங்குமதிகொண்டு திகைக்கிறார்கள். இவைகள் மட்டுமா? எண்ணெய்வித்துக்களாகிய வேர்க்கடலை, ஆமணக்கு முதலியவைகளையும் அப்படியே செய்து வாடுகிறார்கள். கரும்பு முதலிய சர்க்கரைப் பொருள்களையும் அப்படியே கைத்தொழிற்கெனப் பயிரிடாமல், தின்பதற்கெனப் பயிரிட்டுத் தின்டாடுகிறார்கள். கைத்தொழிற்கெனப் பயிரிட்டால் எந்தப் பொருளையும், பண்டமாற்றாகப் பிறநாட்டுக்கு ஏற்றுமதி செய்து அந்நாட்டுப் பொருளை நந்நாட்டுக்கு வரவழைத்து நலம்பெறலாம்.

முன்னதிகாரத்திற் கூறியபடி, கரும்பு, தென்னை, பனை, ஈந்து, முதலிய தீஞ்சாற்று மரங்கள் செழித்துவளரும் நந்நாட்டார், அதைக் கள்ளாக்கிக் குடிக்கக் கற்றுக்கொண்டதனால், சர்க்கரைக் கைத்தொழில் செய்ய வகையில்லாமல், வெளிநாட்டுச் சர்க்கரையை எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்கள் தந்து இறக்குமதி செய்து கொள்ள இசைந்திருக்கிறார்கள். இதை விட மதியீனம் வேறெந்நாட்டார்க்கும் இராது. சர்க்கரை முதலிய தின்பொருள் இருக்கட்டும். உடைப்பொருளைக் கவனிப்பாம்:

உடைப் பொருளுக்கு ஆதாரமான காருகப் பொருளில் முதன்மையானது பருத்தி. இதைப் பிறநாட்டு வியாபாரி



கள், நந்நாட்டாரிடத்தில் ஒப்பந்தம் பேசி, அப்படியே குறைவிலை கொடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அப்படியதைத் தந்நாட்டுக்குக் கொண்டு போய், அவர்கள் ஆடைகளாக்கித் தாமே உபயோகித்துக் கொள்ளுகிறார்களா? இல்லை; இல்லை. ஆடைகளாக்கித் திரும்பியதை நந்நாட்டுக்கே அனுப்பி விற்று மிகுதியாகவும் தகுதியாகவும் இலாபம் சம்பாதிக்கிறார்கள். இதைக் கவனிப்பார் எவரும் இலர். யானை தன் தலையிற் கொத்த, பாகனுக்கு அங்குசத்தையெடுத்துத் தானே கொடுப்பது போல, நந்நாட்டுக் காருகப் பொருளை நாமே பிறநாட்டார்க்குக் கொடுத்து நந்தேகவுழைப்பாற் றேடிய செல்வப் பொருளைப் பறிகொடுத்து விடுகிறோம்.

ஆகையால் சிற்றின்பவாழ்க்கையிற் சீர் பெற்றுத் திகழவேண்டுமானால், நந்நாட்டார் ஒவ்வொருவரும் தாம் தாம் ஊணுக்காகப் பயிரிடும் நிலங்களில் உடைக்காகவும் பருத்திப் பஞ்சைப் பயிரிடக் கற்றுக் கொள்ளவேண்டும். அப்படிப் பயிரிட்டதை அப்படியே பிறநாட்டுப் பருந்துகள் வந்து அடித்துக் கொண்டு போகாமல் இங்கேயே கைத்தொழில் மூலமாய் உடைப் பொருளாக நெய்யக் கற்றுக் கொள்ளவேண்டும். நீலச்சாயமாகிய அவுரி ஆவாரை முதலியவைகளையும் கொஞ்சமேனும் அப்படியே ஏற்றுமதி செய்வதற் கிடந்தராமல், அவைகளை நாமே சாயப்பொருள்களாக்கி உபயோகிக்கவேண்டும். நிலக்கடலை, கொட்டை முத்து முதலிய எண்ணெய்க் காருகப் பொருள்களையும் அப்படியே ஏற்றுமதி செய்து, ஏமாந்த நாயைப் பருந் தடித்துக் கொண்டு போனபடி பிறநாட்டுப் பருந்துகளுக் அப்படியே அவைகளையே அவைகள் இயந்திரை கொடுத்துவிட்டு, விதவிதமான சவுக்காரங்களாகவும் பிற திரத் தந்திரத்தால் கொண்டு வந்து நந்நாட்டுச் செல்வப் வாகவும் செய்து

பொருளாகிய இரத்தத்தை உறிஞ்சி நந்நாட்டை வறுமைப் பிணிவாட்டற் கிடந்தரப்படாது.

ஆங்காங்கும் நெய்தற்றொழிலே உய்தற்றொழிலெனக் கொண்டு, எண்ணிறந்த தறிகள் ஏற்படவேண்டும். உடையைப்பற்றி நாம் இப்படிக் கவனியாமல், பரநாட்டு இயந்திரத் தந்திரத்திற் செய்த ஆடைகளை அதிகவிலை கொடுத்து வாங்கி ஏழைகளாய் வருந்தக்கூடாது. ஆகையால், எங்கெங்கும் கதர் உற்பத்திக் கைத்தொழிலே சிறக்கவேண்டும். அதனால் ஏழைகளின் துயரம் இறக்கவேண்டும்.

சிற்றின்பத்தைச் சீர்பெற நுகர்ந்து வெற்றிபெற வேண்டுமானால், கோட்டி முதல் தொண்டைமான் வரையில் ஆண் பெண் அடங்கலும் ஏதாவது கைத்தொழிலிற் பழக வேண்டும். கைத்தொழிலில் முதன்மையானது உழவுத் தொழில், இரண்டாவது நெய்தற்றொழில். இவைகளிரண்டுக்காக மற்றெத்தனையோ பிற கைத்தொழில்கள் ஏற்படும்.

'உழுதூண் இனிது' என்று ஏழைகளே யன்றிப் பணக்காரரும் எண்ணியுழைக்கவேண்டும். அத்தொழிலுக்குகந்தவரென ஒரு குலத்தாரை விலக்கிவைக்காமல், முதற் குலத்தாரென்று சொல்லிக் கொள்பவரும் மற்றெல்லாரும் அதையே பெருந்தொழிலாக் கைப்பற்ற வேண்டும். உயிர்த்தொழிலாகிய பயிர்த்தொழிலைக் கவனிக்காத நாடும் ஒரு நாடாய்ப் பிழைத்திருக்குமா? உழுதொழிலை உல்லங்கனஞ் செய்தால், அழுதொழிலைக் கைப்பற்ற வேண்டியதுதான். எல்லாரும் நகத்தில் அழுக்குப் படியாமல் உத்தியோகஞ் செய்ய வேண்டுமென் றெண்ணினால், வருந்தி உழைப்பவர் யார்? எல்லாரும் பல்லக் கேறினால் சுமப்பவர்



யார்? எல்லாரும் பல்லக்குச் சுமப்பவர்களாகவே பழகினால், கூடிய சீக்கிரத்திற் பல்லக் கேறவுங் காலம் வரும். அப்போது மற்றவர் வேண்டுகோளால் வெகு சுலபமாய்ப் பல்லக் கேறலாம். சுமப்பவரும் மனமொப்பிச் சுமப்பார்கள். உழைப்பவன் பிழைப்பவன் என்பதை யாரும் மறக்கக் கூடாது. 'உழுதூண் சுவையின் தொழுதூணினிது' என் றெண்ணி உத்தியோகம் பண்ணிப் பராதீனமாய் வாழும் பித்தம் நமது சித்தத்தைவிட் டகலவேண்டும். 'தொழுதூண் சுவையின் உழுதூணினிது' என்ற ஔவைவாக்கு, 'உழுதூண் சுவையின் தொழுதூணினிது' என்று மாறியிருக்கலாம்படி எங்கெங்கும் உத்தியோகப் பயித்தியமே பெரும் பயித்தியமாய், அதற்காக, நாடக மாடுவோன் ஒத்திகையிற் பழகுவது போலத் தாய்ப் பாஷையைத் தவிக்கவிட்டுப் பரபாஷையிற் பயின்று பட்டம் பெற்றுப் பெருமை பாராட்டிவாழும் காலம் கடந்து கொண்டேயிருக்கிறது

அங்கங்கும் உழவும் நெசவும் கைத்தொழிலிற் பிறவும் சாதிபேத மதபேத வைராக்கியமின்றி இனவொற்றுமையோடும் மனவொற்றுமையோடும் நடந்து கொண்டு வந்தால், நந்நாட்டினும் நன்னாடு வேறெந்நாடும் இந்நிலவுலகில் நிலவுவதரிது.

ஆகையால், இந்நூலை வாசிக்கும் நண்பர் அனைவரும், 'தங்கையே தமக்குதவி' என்று தம்மைத் தாம் நம்பிப் பிறர்கையை எதிர்பாராமல் பீடுபெறப் பாடுபட்டால், உழவுத் தொழிலில் வளர்ச்சி பெறலாம். அப்போது, இப்போது தளர்ச்சி பெற்றுள்ள நெசவுத்தொழில் முதலிய பிற தொழில்களெல்லாம் தலை சிறந்தோங்கு மென்பதற் கையமில்லை. ஏழைகள் தாம் பண்ணை யாட்களாய் வேலை செய்ய வேண்டும், அவர்கள் உழைப்பிற் றலையெடுத்து, எப்படியோ

சுய நலம் பாராட்டிப் பொருளைச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் பணக்காரர் சோம்பேறிகளாகவே யிருக்க வேண்டுமென் றெண்ணியிருக்கும் பைத்தியம் பறியகல வேண்டும். பண்ணை யெசமான்களென்ற பேரே ஒழிய வேண்டும். எல்லாரும் பண்ணையாட்களாகவே பாங்கு பெற உழைக்கவேண்டும். பணமிருந்தால், பூமியிற் பள்ளந் தோண்டிப் புதைத்து வைத்து விட்டு எமாந்து போவதற்குப் பதிலாக, பூமியைச் சாகுபடி செய்வதிலேயே அதை ஏராளமாகவுந் தாராளமாகவும் வெகு ஜனோபகாரார்த்தமாகச் செலவிடவேண்டும். நிலமில்லாதவர்க்கு நிலமும், ஜலமில்லாதவர்க்கு ஜலமும், வித்தில்லாதவர்க்கு வித்தும், நிலத்தில் சத்தில்லாதவர்க்குச் சத்தும், சொத்தில்லாதவர்க்குச் சொத்தும், மாடில்லாதவர்க்கு மாடும், வீடில்லாதவர்க்கு வீடும் தேடிக் கொடுக்கவேண்டும். சுய நலம் பாராட்டி யேராளமாகப் பொருளைச் சேர்த்துப் பணக்காரனென்னும் பட்டம் சூடிவாழ ஆசைப்படுவோர் சோச்சோ நந்நாட்டிற் செல்வம் தூர தூரத்தில் பிற நாட்டிற்குச் செல்வம் செல்வம், அதாவது செல்வோம் செல்வோம்—போவோம் போவோம் என்று போய்க் கொண்டேயிருக்கிறது. ஏழைகளும், "எம்மை யாதரிப்பார் யாருமில்லை ; பணக்காரரெல்லாம் எம் உழைப்பிற் சேர்த்தபணத்தைத் தஞ்சுய நலம் பாராட்டிச் சேமித்து வைத்துக்கொண்டு எம்மை ஏய்க்கிறார்கள். இனியாம் இங்கிருந் தென்னபயன்? பிற நாட்டுக்குக் கப்பலேறிப் போய் விட்டால் தான் இவர்களுக்குப் புத்திவரும். அப்போது தான் இவர்கள் சேர்த்து வைத்திருக்கும் பணமெல்லாம் கரையும். கரைந்தால் தான் இவர்களுக்குக் கண் தெரியும். அப்போது தான் இவர்களும் எம்மைப் போல் உழைப்பவர்களாய்ச் சோம்பலை விட்டுச் சீர்பெறுவார்கள்" என்று கெட்டால், தென் ஆப்பிரிக்கா முதலிய



பிற நாடுகளுக்குக் கப்பலேறிப் போய்ப் படாதபாடு பட்டுக் காலங்கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

'தொழுதூண் சுவையின் உழுதூணினிது' என்று கண்டு கொண்டு அதற்குத் தகுதியாய்ச் சிற்றின்ப வாழ்க்கையில் வெற்றியுற வேண்டுவான் ஒவ்வொருவனும், எப்படியேனும் உழவுத்தொழிலிற் சம்பந்தம் உடையவனாயிருப்பான். அவன் மனைவி நெசவுத் தொழிலிலேனும் சாயம் போடுந்தொழிலிலேனும் சம்பந்தமுடையவளாயிருப்பாள். ஒவ்வொருவனும் எந்தப் பாடு பட்டாவது, தானுண்ணும் தானியாதிகளையும் காய் கறி பதார்த்தங்களையும், தானுடுக்கும் உடைக்கு வேண்டிய பருத்தி முதலியவைகளையும் பயிரிடுவதற்குப் பாடுபட்டு வழிதேடிக்கொள்வானன்றிச் சுய நலம் பாராட்டித் தொழுதுண்டு 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே' என்றெண்ணிப் பொருளைத் தேடிப் பணக்காரனென்று வீண் பட்டஞ் சூட்டிக் கொண்டு இடம்பாகாரமாய் வாழ்ந்து தனக்கும் பலனின்றிப் பிறர்க்குஞ் சுகமின்றிப் போலி வாழ்வு வாழ்ந்து கேடுகெட்டுப் போக மாட்டான்.

பணக்கார னென்பதற்கு இந்நூலிற் கொண்டுள்ள பொருள், பிறநலம் பாராட்டுங் குணக்கார னென்பதேயாமென்று இந்நூலை வாசிக்கு நண்பர் பலரும் நன்குணர்ந்து, அதற்குத்தகத் தாமும் தம் வாழ்க்கையைச் சீர்திருத்திக் கொள்ளவேண்டும்.

இப்படியே அமெரிக்கா முதலிய பிற கண்ட வாசிகளில் அநேகர் நடந்து கொள்ளுகிறார்கள். இப்படியே காந்திமகானும் நமக்கு உபதேசிக்கின்றார். உடல் பொருளாவி மூன்றையும் மன்னுயிர்க்கு அர்ப்பணஞ் செய்து வாழ்பவனே பணக்காரன். தன்னுயிர்க்கு மட்டு உறுதி

தேடிக்கொண்டு மன் உயிர்க்கு வரும் இறுதியைக் கண் குளிர்ச்சியாய்ப் பார்த்துக் கொண்டிருக்கச் சகியாதவனே பணக்காரன். வீண் பெருமைக்கும் படாடோபத்திற்கும் இச்சை வைத்துத் தானும் தன் பெண்டு பிள்ளைகளுமே சுகப்பட வேண்டுமென்று வரங்கேட்டு வாழாதவனே பணக்காரன்.

இப்படி யெல்லாம் நற்குணக்காரனாக வகையில்லாமல், எந்த வழியிலேனும் பணத்தைச் சேர்த்துப் பணக்கார னென்று பெயர்பெற்று வாழ்பவனை ஒரு சிறு துரும்பெனவு மதியார் மதிவாணராகிய காந்தி மகான் முதலியோர்.

ஆகையால் பணத்தையே பெரும்பற்றாத் தேடாமல், குணத்தைத் தேடும் ஒவ்வொருவனும், தொழுதூண் சுவையைத் துச்சமென வெறுப்பான்.

‘சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம் ’

என்னுஞ் செய்யுளில் முதற் கூற்றாகிய சேவித்தும் என்பதையும், ஐந்தாங் கூற்றாகிய பாராண்டும் என்பதையும் சமமாப் பாவித்து, வயிற்றின் கொடுமையால் நாழி யரிசிக்காகத் தொழுதூண் சுவையைத் தூசியாக மதிப்பான். சேவிப்பதையும் பாராள்வதையும் சமமாக் கூறியுள்ள நங் காட்டுப் பாட்டி பாட்டைப் பாராட்டாதார் யாவர்? பாராள்வதும் பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால் போவிப்பதற்கே யாமென்றதைக் கூர்ந்து கவனிக்க.

தொழுதூண் சுவைப்பவனைக் குறித்தே இப்பாட்டில் சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க்கடல் கடந்தும், பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும் என்ற ஆறு



விஷயங்களும் வந்திருக்கின்றன. பாராள்வதையும் தொழுதூண்சுவையாகவே கூறியிருக்கிறது. ஏன்? சேவிப்பவன், ஒருவனைச் சேவித்து வயிறுவளர்த்தால், பாராள்பவன், குடிமக்கள் பலரைப் பாவித்து வயிறு வளர்ப்பதனாலென்க.

இப்பாட்டில் வந்துள்ள அறுவகையாலும் தம் வயிற்றின் கொடுமையால் உடலை வளர்க்கும் ஒவ்வொருவரும் உழுதூண்சுவைப்பவனுக்கு அடங்கிக் காலங்கழிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். உழுதூண்சுவைப்பவன் அவ்வறுவரில் ஒவ்வொருவரையுங் காக்க வல்லவனாயிருக்கிறான். மற்றை ஐவரையும் அவன் காப்பது இயல்புதான், பாராள்பவனைக் கூடவா உழுதூண் சுவைப்பவன் காக்கிறான் என்றால், ஆம் என்று கூறுவதற்குப் பின்வருஉங் குறளின் படி யாதோர் ஐயமு மில்லை:

‘தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை’

இக்குறள், உழுதுண்டு வாழ்பவன், தன் அறுவடைப் பலனை எத்தனை பங்காக்கி யார்யார்க்கு வழங்கவேண்டு மென்பதைத் தப்பறவகுக்கின்றது.

உழுதூண் சுவைக்கும் இவன், பிதிராகிய இறந்தார்க் கொருபங்கும், மழைபெய்வித்த இந்திரன் முதலிய தேவர்க் கொருபங்கும், முன் அறிமுகமானவரும் அறியாதவரு மாகிய துறவிகளுக்கு ஒருபங்கும், சுற்றத்தார்க்கொருபங் கும், தனக்கொருபங்கும் ஆக ஐந்து பங்காக்கித் தன் அறுவடைப்பலனைப் பங்கிடவேண்டு மென்றிருக்கிறது. எதை ஐந்து பங்காக்கவேண்டும்?—ஆறிலொருகடமை யென்னும் அரசிறையைப் பாராள்வோனுக்குச் செலுத்தி மிகுந்ததை யென்க. முதலில் அவன் தன் அறுவடைப் பலனை ஆறு பங்காக்கி, ஒருபங்கைப் பாராள்வோனாகிய

அரசனுக்குச் செலுத்துகிறான். எஞ்சிய ஐந்து பங்கையும் வீட்டிற் கொணர்ந்து மேற்கூறியபடி மற்றை ஐவர்க்கும் பங்கிட்டுக் கொடுக்கிறான். ஐவரில் இவன் தானும் ஒருவனாகப் பங்கிட்டுக்கொள்கிறானன்றி, எல்லாவற்றையும் தன் பெண்டு பிள்ளைகளுக்கே ஆத்தியாகச் சேர்த்து வைத்துக் கொள்கிறானில்லை. பாராளும் அரசனையே முதலில் இவன் பங்கு கொடுத்துக் காக்கிறான்.

சேவித்துஞ் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும் பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் வாழும் அறுவகைத் தொழிலாளர்க்கும் இவனே ஆதாரவாய்த் தாங்கிக் கொள்ளுகிறான். இவனையன்றி உலகமேயில்லை. இவன் பயிரிடும் தானியாமிர்தத்தை உண்டு பலப்பட்டால் தான், அரசரும் தண்டு பலப்பட்டுச் சண்டைசெய்து பகையரசனை வெல்ல முடியும். இவன் நாற்றுமுடி நடினன்றி அரசன் கிரீடமுடி நடமுடியாது.

இப்படிப்பட்ட பெறலருந் தொழிலே உகந்த தொழிலென்று இதிற்கண்டவுடனே, எவரெவர் இத்தொழிலைமேற் கொள்ளுகிறார்களோ, அவரவரே சிற்றின்ப வெற்றியிற் றிகழ்வோராவார். இதைக் கூர்ந்து வாசித்தவுடனே இப்பாழ் உடம்பை வயிற்றின் கொடுமையால் நாழியரிசிக்காகச் சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க் கடல் கடந்தும், பாவித்தும்,பாராண்டும், பாட்டிசைத்தும் போவியாமல், பயிர்த்தொழிலே உயிர்த்தொழில், உழவுத் தொழிலே யாளுந் தொழில், பாராளுந் தொழிலும் இதற்கு இணையல்ல வென்று, இதைப் பெரும் பற்றாகப் பற்றிப் பீடுபெற வாழ்வாரே சிற்றின்ப வெற்றியிற் சிறந்தோராவார்.

வளமற்ற கரம்பு நிலமெல்லாம் நஞ்செயாக வேண்டும்;



“காடெல்லாம் மேடெல்லாம்
கரம்பெல்லாம் பாம்பெல்லாம்
நாடெல்லாம் பாடெல்லாம்
நடையெல்லாம் கிடையெல்லாம்
கோடெல்லாம் குளனெல்லாம்
குறையெல்லாம் தறையெல்லாம்
மாடெல்லாம் மடையெல்லர்ம்
வயலெல்லாம் வளர்நெல்லாம்”

என்றபடி யெங்கெங்கும் நெற்பயிரே பொற்பயிரென்பதற்கிணங்க, நெற்பயிராகிய நஞ்செயே நலஞ்சிறந்து நிலவ வேண்டும். ‘நெற்பயிர் விளை’ என்ற நீதியைப் போற்ற வேண்டும்.

“நெற்பயிரே பொற்பயிர்; நென்மணியே பொன்மணி யென்னும் நன்மணி; மற்றென்மணியும் நென்மணிக்கு நிகரன்று. இதுவே ஜீவமணி. மற்றைய நவமணியும் இந்நன்மணியாகிய நென்மணிமுன் இன்மணியாகி இழியும்” என்பதற்கொரு சிறுகதை உண்டு. இது எல்லார்க்குந் தெரிந்ததுதான். ஆயினும் இங்கொரு சிறிது, எடுத்துக்கூறுவாம்:

பாவாணர் ஒருவர், ஏகம்பவாணனென்னும் உழுதூண் சுவையாளி யொருவரிடத்திற் றந் தமிழ்ப்பாப்புலமையைக் காட்டிப் பரிசுபெறச் சென்றார். இவர்க்கவர் தரிசனம் சுளுவிற் கிடைக்கவில்லை. ஏகம்பவாணனென்பார் எத்தனையோ வேலி நஞ்செய்க்கதிபதியாய்க் கொடையாளரென்று நலஞ் சிறந்து விளங்கினார். தாமே வயலில் உழைத்து ‘மெய்வருந்தக் கூலிதரும்’ என்றபடி பாடுபட்டுப் பயன்பெறும் பண்புடையவர்; தம்முடைய பண்ணையாட்களைப் ‘போங்களடா’ என்று பண்ணை வேலைமேற் போகவிட்டு, தாம் பின் தங்கி எசமானெனச் சோம்பியிருப்பவரல்லர்; ‘வாங்களடா’ என்று அவர்களோடு தாமும் ஒரு பண்ணையாளாகச் சென்று

மேழி பிடித்துழுது பயிரிட்டுப் பலனடையும் உழைப்பாளி யா யிருந்தவர்; பாவாணரில் யார் வந்து தந் தமிழ்ப் புலமையைக் காட்டி என்ன கேட்பினும் இல்லையென்னாமல் ஈபவர்.

எந்நேரமும் இவர்தம் ஆட்களோடு தாமும் ஓர் ஆளாய்ப் பண்ணையில் உழைத்து வந்தாராகையால், பாவாணர்க்கெளிதில் தரிசனந் தர வாயாதிருந்தார். ஆயினும் அவர்களில் எவரேனும் வந்தாரென்று கேட்டால், உடனே இவர், அவர்களை நல்வரவு கூறி யேற்பது வழக்கம்.

அப்படியே இப்புலவரையும் அவர் நடுப்பகலில் தம் அகத்தண்டை வரச்சொல்லி யிருந்தார். அங்ஙனமே இவர் அவர் அகத்தை நெருங்கிச் செல்கையில் அவர் ஒரு பண்ணையாளைப்போலவே நடைகொடிபாவனையிற்றோன்றி னார்; தம்வீட்டு முற்றத்திற் சிந்திக்கிடந்த நென்மணிகளைக் குனிந்து ஒவ்வொன்றாய்ப் பொறுக்கிக்கொண்டிருந்தார்; நெருங்கின புலவரை ஏறெடுத்தும் பாராமல் தம் வேலையைக் கவனமாய்ச் செய்துகொண்டிருந்தார்.

கண்டார் புலவர்—"யார் இவர்! இவர் தாமோ ஏகம்ப வாண முதலியார்! இவரே அவரானால், இப்படிப் பட்ட வேடத்தோடு, கேவலம் இறைந்து கிடக்கும் நெற்களைப் பொருட்படுத்திப் பொறுக்கிக்கொண்டிருப்பாரா?" என்று ஐயுற்றார். அதுவரையில் அவரை இவர் கண்டதே யில்லை. அதுதான் முதல் தடவையாகக் கண்டது. ஆகையால் சந்தேகங் கொண்டு தயங்கி நின்றார்.

நின்றாரைக் கண்ட முதலியார் ஏறெடுத்துப் பார்த்து, "வாருங்கள் உட்காருங்கள்" என்று முகமன் கூறி வா வேற்றார்.

ஏற்றும், புலவர்க்கவா, அவர் தாமோ என்னும் சந்தேகம் ஒழியவில்லை; "முதலியார் இருக்கிறாரா?" என்றார்.



"இருக்கிறார்—உட்காரும்" என்றார் முதலியார். உடனே கண்டு கொண்டார் புலவர், "கேவலம், இறைந்து கிடக்கும் நென்மணிகளைப் பொன்மணிகளைப் போலத் தாமே பொறுக்கலாமா?" என்று கேட்டார்.

அதற்கொன்றும் வாய்விட்டுச் சொல்லாமலே முதலி யார், புலவர்க்குகந்த மரியாதைகளைத் தவறாமற் செய்து, அவர் பாட்டின் பொருள் நயங்களை வியந்து கொண்டாடி மகிழ்ந்து தம்மோடு அவர்க்கும் உண்டிக்குச் சித்தஞ் செய் வித்தார்.

இருவரும் இலைக்கெதிரில் உட்கார்ந்தார்கள். அதற்கு முந்தியே முதலியார் சொல்லி வைத்திருந்த சங்கேதப்படி, சமையலாள் முதலியா ரிலையிற் சோறு கறி முதலியவை களையும், புலவ ரிலையில் பொன்மணிகளையும் பரிமாறினான். 'சாப்பிடுங்கள்' என்று சொல்

விழிக்கிறார் புலவர்!

லிக் கொண்டே தம் இலையிற் சோற்றைப் பிசைகிறார் முதலியார்.

புலவர்க்கு ஒன்றுந் தோன்றவில்லை. பசி ஒருபுறம் மாட்டுகிறது; சந்தேகம் ஒருபுறம் வாட்டுகிறது. என் செய்வார் பாவம்! முதலியாரை ஏறெடுத்துப் பார்க்கிறார், விழிக்கிறார்.

அது கண்ட முதலியார், "புலவர் பெருமானே! சாப்பிடத் சாப்பிட விடை தாரும். சும்மா இருப்பானேன்? தடை யென்ன?" என்கிறார்.

"எனக்கொன்றும் விளங்கவில்லையே!" என்றார் புலவர்.

"ஏன்? நென் மணிகளென்ன பொன் மணிகளா என்றீரே! இதோ உம்மிலையில் இருக்கும் அவைகளை உண்டு பசியாறுமே!" என்றார் முதலியார்.

புலவர்—" சரி, சரி ; மன்னிக்க வேண்டும். உண்மை உணர்ந்து கொண்டேன்.

முதலியார்—(பரிசாரகனை நோக்கி) முருகா! பண்டிதர்க்குப் பரிமாறு.

பரிசாரகன் பரிமாற வருகிறான். அதற்குள் முதலியார் புலவரை நோக்கி, "இந்த நவமணிகளைப் பரிசிலாக வைத்துக் கொள்ளுங்கள் [illegible] பெறும். ஆனாலும் ஜீவமணியாகிய நென்மணிபோலச் சமயத்தில் இவைகள் பிராணனைக் காப்பவை யல்ல ; அழிப்பவை யென்றே அட்டியின்றிச் சொல்லலாம்" என்றார்.

புலவர்—" தங்கள் நல்லுரைகளுக்கும் வெகுமானங்களுக்கும் ஆயிரம் வந்தனம்."

அப்படியே பரிசாரகன் சோறுகறிகளைப் பரிமாறினான். உண்டு முடித்துப் புலவர் விடை பெற்றுக் கொண்டு போய் விட்டார்.

இதனால் என்ன விளங்குகிறது? உழுதுண் சுவைப்பவருடைய பெருமை விளங்குகிறது. நென் மணிகளுடைய அருமை விளங்குகிறது. 'ஓதுவாரெல்லாம் உழுவான் தலைக் கடையில்' என்னும் பழமொழியின் ஒருமை விளங்குகிறது. பாட்டிசைத்துப் பிழைத்த பாவாணரைத் தாங்கினோர் யார் என்னும் வினாவிற்கு விடை விளங்குகிறது.

இப்படிப்பட்ட அருமையான தொழிலை ஒவ்வொருவரும் தனித்தனி மேற்கொண்டு, தாம் தாம் சுயேச்சையாய்ப் பிரபு (Lord-தலைவன்), அல்லது நிலமுதல்வன் (Land-lord) என்னும் பட்டத்தோடு திட்டமாகவும் தம்மனம் போல் இட்டமாகவும் சட்டமாகவும் பிறர்க்குதவி செய்வதிலேயே பெருங்கருத்தாய்ப் பீடு பெற வாழவேண்டும். அப்படி வாழ்வாரே, சிற்றின்ப வெற்றி பெற்று வீடு பெற வாழ்



வாராவார். இத்தொழிலைச் சற்றேனுங் கவனியாமல், இதை ஏழைகளின் தொழிலென விலக்கிக் கோழைகளாய் வீண் டம்பாகாரப் போலி யுத்தியோகத் தொழிலைப் பின்பற்றித் தொழுதுண்டு வாழ்வாரெல்லாம் சுயேச்சையாய்த் தாமொன்றும் பிறர்க்குதவி செய்யும் வழியின்றிப் பழுதுண்டு வாழ்வாராவார். சிற்றின்ப வெற்றி பெற வழியின்றி அழுதுண்டு வாழ்வாராவார். அல்லலில் வீழ்வாராவார். அருந்துயரில் ஆழ்வாராவார்.

நந்நாட்டிலேயே மலையாள முதலிய இடங்களிலும் வெளி நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி முதலிய இடங்களிலும், நிலமுதல்வரே (Lord) பிரபுப்பட்டம் பெற்றுத் தத்தம் இட்டம் போற் சுயேச்சையாய் ஏழைகளுக் கிரங்கும் வன்மைத் தன்மை பெற்றுப் பிறர்க்கென வாழ்கிறார்கள். அவர்களால் எத்தனையோ (Lordlings) சிறு பிரபுக்களும் குடிகளும் கஷ்டமின்றியும் நஷ்டமின்றியும் தத்தம் இஷ்டம் போல் வாழ்ந்து வருகிறார்கள்.

நில முதல்வன் (Land-lord) என்றால் நூறு வேலி நில பல முள்ளவன் தான் என்று எண்ணி ஏமாந்து ஒரு காணி நிலத்துக்கும் வழியில்லாமல், உத்தியோகம் புருஷலக்ஷணமென்பதற்குத் தப்பர்த்தம் பண்ணிச் சேவித்து (தொழுதுண் சுவைத்து) "ஆஹா! நன்றாயிருக்கிறது, பட்டணத்து உத்தியோகம்; நகத்தில் அழுக்குப் படாமல், நாகரிகமாய் நகாசாய் இருக்கிறது. அது வென்ன! பயிர் வேலை! நாட்டுப் புறத்துக் காமாட்டி மட்டி வேலை. அதைப் பறையர் தாம் செய்யவேண்டும். அது செய்யப் பிறந்தவர்கள் சூத்திரர் தாம். அவர்களுக்கே அது தகுதி. என்ன ஆனாலும் உத்தியோக மாகுமா? டயம் (time)படி போனமாம்,

வந்தமாம். முப்பது காளே போடி, முழுரூபாவே வாடி யென்பது போல, கலகல வென்று முழுரூபாய்களைக் கொட்டி எண்ணிப் பாக்கட்டில் போட்டு ஜாக்கட்டை மாட்டிக் கொண்டு வண்டியேறி வீடு வந்து சேர்ந்தோமாம். இதுவே வீடு. இதுவே பரமபதம். இன்னும் வேறு வீடும் வேண்டுமா?" என்று யாரும் வீண் எண்ணமிட்டுத் தாங் கெடுவது மன்றிச் சந்ததியையுங் கெடுத்து விடப்படாது. மலையாள முதலிய இடங்களில் ஒரு காணி அளவுள்ள நிலத்தில் வீடு வாசல் பயிர்த்தொழிற் குகந்த பண்ணை முதலிய எல்லாமும் ஏற்பட்டிருக்கின்றனவாம். அங்கே நெற்பயிரோடு மிளகு, பாக்கு, வாழை முதலிய பற்பயிரும் ஆகின்றனவாம். அச்சிற்றிடத்திலேயே பேருதியம் பெறப் பயிர்த்தொழில் நடப்பதால் சுமார் பத்துப்பேர் கூடிய குடும்பமேனும் வெகு சுளுவில் உயிர் வாழலாமாம். அப்படியே இங்கும், அல்லது எங்கும் நீர் வளமில்லா நிலமேனும் அததற்குத் தக்கபடி உழைத்தால் சால்புடன் பலனடைந்து நிலமுதல்வராய் வாழலாம்.

தொழுதூண் சுவையை விரும்பிக் காலம் போக்கும் அநேகர், பட்டண வாசத்தின் மகத்துவத்தால், வரவுக்கு மிஞ்சின செலவு செய்து மார்வாடிகளிடத்திற் கடன் வாங்கி வட்டியில் முழுகியும் புத்திவாராமல், "இப்படி முதலற்ற வாழ்வு வாழ்வது தான் நமது தலை விதி" என்று தம்மைத் தாமே கொண்டாடி, தமது வாழ்வில் மகிழ்ந்திருக்கிறார்கள். பட்டணத்தில் வர்த்தகஞ் செய்யும் சில போலி வியாபாரிகளும் இப்படியே மார்வாடிகளிடத்திலும் பிறரிடத்திலும் முன்பின் ஆலோசியாமல் மிதமிஞ்சின வட்டிக்குக் கடன் வாங்கிப் போலி வர்த்தகஞ் செய்து தமக்குஞ் சுகமின்றித் தம்மை அடுத்தவர்க்குஞ் சுகமின்றி மான மழிகிறார்கள்.



இவர்களுக் கெல்லாம் உத்தியோகமும் வர்த்தகமும் எதற்காக?

'பட்டால் தெரியும் பாமரர்க்கு
சுட்டால் தெரியும் நண்டுக்கு'

என்ற பழமொழிப்படி இவர்கள், மூடர்களுக்கு மேலே முழு மூடரென்னும் பட்டப் பெயர் சூடிக் கெட்டுப் போவானேன்?

'கெட்டுப் பட்டணஞ் சேர்'

என்ற கூலிப் பழமொழியைப் பின்பற்றுமவர்கள், பிரபுப் பழமொழி யாகிய.

'உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா(து)
எழுவாரை யெல்லாம் பொறுத்து'

என்பதைப் பின்பற்றி எப்படியேனும் நாட்டுப்புறம் போய், நாலுகாணி நஞ்செய் புன்செய்களை நலம் பெற வாரப்பயிர்க்கேனும் முதலிற்றேடிக் கொள்ளவேண்டும். முதலெடுக்கையிலேயே நிலம் சொந்தமாயில்லையே யென்று ஏங்கி, எடுத்த காரியத்தைக் கைவிட்டுத் தொழுதூண் சுவைக்குத் திரும்பிவிடக்கூடாது. "ஏருழுபவர், அது செய்யாது பிற தொழில்களைச் செய்பவரை யெல்லாம் தாங்குதலால், உலகத்தாரென்னும் தேரைத்தாங்கும் அச்சாணிக்குச் சமானமாயிருக்கிறார்கள்" என்பது மேலைக் குறளின் விழுப்பொருள்.

இதை விட உழுதூண் சுவைக்குச் சிறப்பு, வேறென்ன வேண்டும்? பட்டணத்திற்றொழுதூண் சுவைக்காக எத்தனை தான் கொண்டு தின்றாலும், நாட்டுப்புறத்தில் உழுதூண் சுவைக்காகச் சிறிதளவேனும் மொண்டு தின்பதற்குச் சமான மாகாது. பட்டணத்திற்றொழுதூண் சுவைப்பவனகத்துக்கு ஒரு விருந்து வந்தாலும் படும்பாடு பெரும்பாடாகும்.

நாட்டுப்புறத்தில் உழுதூண் சுவைப்பவனுடைய குடிசைக்குப் பத்து விருந்து வந்தாலும், அனாயாசமாய் உபசாரம் நடக்கும். மொண்டு தின்னும் இடமாகையால், பத்துப் பேரும் நன்றாயுண்டு மகிழ்வார்கள்.

தொழுதூண் சுவையின் ஏற்றத்தைப்பற்றி யின்னும் எழுதிக்கொண்டே போனால் ஏடிடங்கொள்ளாது. இது பற்றியே அவ்வையார்

'நெற்பயிர் விளை'
'பருவத்தே பயிர்செய்'
'பூமி திருத்தியுண்'
'மண்பறித் துண்ணேல்'

'சீரைத் தேடின் ஏரைத் தேடு'
'பண்ணிய பயிரில் புண்ணியந் தெரியும்'
'போனக மென்பது தானுழந் துண்ணல்'
'மாரி யல்லது காரிய மில்லை'

என்னும் பற்பல நீதிவாக்கியங்களிற் பயிர்த் தொழிலே உயிர்த்தொழிலென்று கட்டளை யிட்டருளினார்.

பூவுலகத்தில் பழையனவாகிய ஆசியா ஐரோப்பா முதலிய கண்டங்களிலும் புதியதாகிய அமெரிக்காவிலுங் கூடப் பயிர்த்தொழிலே உயிர்த்தொழில், நிலத்தலைவனே பிரபு (Land-lord) என்னும் பட்டத்துக் குரியவன்; அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களும் (Lordlings) சிறு பிரபுக்களென்னும் பட்டத்துக் குரியவர்களென் றிருந்துவருகிறது.

இங்கும் அப்படியே ஆகவேண்டும். ஆனால் தான் சிற்றின்ப வாழ்க்கை சீர்பெறும். மற்றின்பம் யாவும் சிற்றின்பத்துக்கு முன் வெற்றின்பமாக ஒழியும். நாமெல்லாம் மண்ணிலே பிறந்தோம்; மண்ணிலே வளர்கிறோம்; மண்ணிலே வாழ்கிறோம்; மண்ணிலே சாவோம்;



மண்ணிலே மறைவோம். ஆகையால் மண்ணிலேயே பிழைக்கும் வகை தேடிக்கொள்ளவேண்டும். மண்ணை விட்டு மானத்தைப் பார்ப்பதால், ஆகுங்காரிய மென்ன? தொழுதூண் சுவைக்கும் அடிமைக்காரியந்தான் ஆகும். இந்த அடிமைக்காரியத்தால் எத்தனையோ வீண் போட்டிப் போர்கள் தலையெடுத்திருக்கின்றன. ஆகாசத்தில் பறக்கிறதையும் பார்க்கிறோம். அந்தரத்தில் தொங்குகிறதையும் பார்க்கிறோம். தந்திகளும் புகை வண்டிகளும் பிற யந்திரத்தந்திரங்களும் நாளுக்குநாள் வளர்ந்து வருவதையும் பார்க்கிறோம். கடைசியாக இவைகளெல்லாம் எதிற் கொண்டு போய்விடும்? உலகப்போட்டி,உலகப்பெரும்போர், உலகச் சோம்பலென்னும் ஏம்பலிற் கொண்டுபோய்விடும். எத்தனைக் கெத்தனை ஏழைகளைக் கவனியாமல், வர்த்தகப் பெரும்போர் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிறதோ, அத்தனைக்கத்தனை வறுமையும் வளர்ந்துகொண்டே வரும். ஒருதேசமோ அல்லது ஒரு மனிதனோ பணத்தால் உயரவேண்டும் என்னும் சுயநலம் பாராட்டும் கேவலத் தன்மை தலை சிறந்து நிற்கும்.

ஆகையால், தொழுதூண் சுவைக்கு மூலகாரணமாகிய வெறும் வர்த்தகத்தால் பொருள் தேடுவதொன்றையே பெரும் பற்றுப் பற்றிக் காரியம் புரிவதெல்லாம் பிறர்நலம் பேணலென்னும் நேர்வழியிற் செலுத்தாது. பண்டமாற்றாகிய வர்த்தகம் போட்டியின்றி ஆக வேண்டும். காரணமின்றி ஒரு நாட்டார் மற்றொருவர்க்குத் தந்நாட்டில் வர்த்தகஞ் செய்வதற்கு இடந்தரப்படாது. பிறநாட்டுப் போலிச்சாமான்கள் வெளிமயக்காய்க் கண்களைக் கவர்கின்றன வென்று எந்நாட்டாரும் முன்யோசனை யின்றி அவைகளை வாங்கி வறுமைக்காளாகப்படாது. இயந்திரத் தந்திரத்திற் செய்துகொண்டுவந்து வர்த்தகஞ் செய்யும் பிறநாட்டுப்

பொருள்களைக் கைத்தொழிலாகவும் ஒன்றுமே செய்ய மாட்டா நந்நாட்டார் வாங்குவதென்றால் வறுமை வருவதற்குக் கேட்பானேன்?

முற்காலத்தில், 'புலவர் எத்தனைபேர் வரினும், எத்தனை பாட்டுப் பாடிக்கொண்டு வரினும், செய்யுளொன்றுக்கு ஒரு பொற்காசு (ஐந்து ரூபா) பரிசுதருவோம்' என்று விளம்பரப்படுத்தின பெரும் பணக்காரப் பிரபுக்களில் எத்தனைபேர் வறுமை வாராமற் பிழைத்தார்கள்? ஒருவருமில்லை. புலவர்க்கென்ன கஷ்டம்? ஒரு நிமிஷத்தில் ஒரு கவிகட்டி விடுகிறார்கள். அவர்கள் நிமிஷத்துக்கு ஒரு தங்கக் காசு சம்பாதித்து விடுகிறார்கள். அப்படியே சீர்மைச் சாமான் என்றால், நேர்மையானது. நாட்டுச் சாமான் முரடானது என்று மூடத்தனமாய் எண்ணிக்கொண்டு வாழ்ந்து வருஉம் நந்நாட்டார், எத்தனைதான் சீர்மைச் சாமான்கள் வந்துகொண்டே இருந்தாலும் வாங்கிக் கொண்டே இருப்போமென்று கங்கணங் கட்டிக்கொண்டிருந்தால், யந்திரத்தந்திரத்தால் வெகு சுளுவிலாகும் பரதேசப்பொருள்கள் வந்துகொண்டே யிருக்கின்றன. புலவர்க்குக்கொடுத்து வறுமையடைந்த பிரபுக்களைப் போல நந்நாடு, அப்பொருள்களை வாங்க வாங்க வறுமை வளர்வதற்குக் கேட்பானேன்?

எப்போதும் எல்லாரும், அதிக ஆசை அதிக நஷ்டம் என்பதை அறிந்து நடக்கவேண்டும். மதிவாணரென்று ஒரு நாட்டார் நிலவுலகில் நிலவ வேண்டுமானால், பேராசைப் பேய்க் கோட்பட்டுப் 'பணமே உன்னால் எல்லாங்குணமே' என்றபடி எவ்விடத்திலேனும் பணத்தைத் தேடிக்குவித்து விடுவதனால் ஆகாது. பணத்துக்காகப் பந்தயம் ஓடி அல்லது குதிரைப் பந்தயம் ஓட்டிப் பணத்தைக் குவித்து



[illegible]டால் ஆகுங் காரியம் ஒன்றுமில்லை. அந்தப் பணம்
ஆருடையது என்று எண்ணிப்பார்ப்பவனே மதிவாணன்.
எத்தனையோ ஏழைகளின் பணத்தை ஒருவன் கூட்டிக்
கொண்டு குவித்துத் தன்னைப் பணக்காரனென்று சொல்லிக்
கொள்வதற்கு அஞ்சி நிற்பவனே பணக்காரன். மார்வாடி
வெகுதூர தேசத்திலிருந்து வந்து பணக்காரனானென்றால்,
அவனுடைய பணம் யாருடையது? எத்தனையோ ஏழை
களுடையது. மார்வாடிகளினுடைய கடைகள் பெரும்
பாலும் எங்கே யிருக்கின்றன? ஏழைகள் வாழும் குடிசை
களுக்கருகே கள்ளுக்கடைகள் இருப்பது போலவே மார்
வாடிக் கடைகளும் இருக்கின்றன. குதிரைப்பந்தயம், மார்
வாடிக்கடைகள், கள்ளுக்கடைகள் முதலியவைகளுக்
கெல்லாம் இடந்தந்திருக்கப்படாது. வலையை விரித்து
வஞ்சனையாற் புட்களைப் பிடிக்கும் வேடனுக்கு ஆத்தி
யெப்படி வருகிறது? அப்படியே இவ்வெல்லா வியாபாரி
கட்கும், நந்நாட்டுப்பொருள் வெகு சுளுவாய்ச் சிக்குவதால்,
நாம் வறுமை யடைந்து வாடுகிறோம். மார்வாடிகள்,
குதிரைப் பந்தயக்காரர், கள்ளுக்கடைகாரர் முதலிய வேடர்
கள் விரித்து வைத்திருக்கும் வலையில் விழாதபடி நாம் அதி
சாக்கிரதையாய் வாழவேண்டும். மேற்குறித்த வலைகளை
விரிப்பதற்கு இடந்தராமற்றடுக்க நம்மாலாகாது. அவை
களும் பிறவலைகளும் விரிந்து கிடக்கின்றன. அவைகளில்
விழாமல் தப்பிப் பிழைப்பதே மதியுடைமைக்கழகாகும்.
பொன் மானைக் கண்டு மோசம்போன சானகியை எண்ணிப்
[illegible]பாருங்கள். அச் சானகியைக் கண்டு மயங்கி மாண்ட இரா
[illegible]னை நினைவு கூருங்கள். சானகி இராவணன் கையிற்
[illegible] வருந்தினது சானகியின் பிழையேயாகும். இராவணன்
இராமனம்பால் மாண்டது இராவணனுடைய பிழையே
யாகும். அப்படியே மேற்குறித்த மார்வாடிகள் முதலி

யோருடைய வலைகளிற் சிக்கி வறுமையுறுவது நம்முடைய பிழையேயாகும்.

ஆகையால் சிற்றின்ப வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுவார் ஒவ்வொருவரும், பட்டணவாசத்திற் றொழுதூண் சுவையை அற மறந்து, நாட்டு வாசத்து உழுதூண் சுவைக்கு இடம் தேடிக்கொள்ளவேண்டும். இது வெகு சுளுவில் ஆகுங்காரியம். சர்க்கரையைத்தின்று பித்தத்தைத் தீர்த்துக்கொள்ளச் சோம்பி, கைப்பான எட்டிக் கொட்டையைத் தின்று ஏம்புவதுபோல, சுலபத்தில் உழுதூண் சுவை கிடைப்பதை விட்டுத் தொழுதூண் சுவைக்காக வீணே உழைப்பதெதற்கு?

இப்படி யெல்லார்க்கும் இந்தத் தொழுதூண் சுவைப் பயித்தியம் பலத்து விட்டால், கடைசியாக அன்னம் அரிதாய்ப் பஞ்சம் பலமாய் நகைநட்டுக் காசு பணம் துட்டுகளையே தின்று பிழைக்கவேண்டிய காலம் வந்து விடும். முன்சொன்ன கதையில், புலவரிலையில் நவமணிகளைப் படைத்துப் பிரபு கற்பித்த புத்திமதிகளைக் கற்றுக்கொண்டு, பட்டால் தெரியும் பாமரற்கு என்றபடி, எல்லாரும், 'கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம்' என்பது போல உழுதொழிலை மேற்கொள்ளத் திரும்பவேண்டியதுதான். இப்போதே எங்கெங்கும், நியாயவாதத்தொழிலும், அங்கில வயித்தியத் தொழிலும், கங்காணித் தொழிலும், நாகரித் தொழிலும், இன்னும்மற்ற ஆகாச வியாபாரத் தொழில்களும் அதிகமாய், ஏழைகளின் பணத்தை நோவாமல் சேர்த்துப் பணக்காரரென்று பகர்ந்து கொள்வது பலப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. எல்லாரும் ஒருவரைப் பார்த்தொருவர், பள்ளத்தில் விழும் ஆட்டு மந்தையைப் போலத் தத்தம் நிலபுலங்களைப் பாழடையவிட்டுப் பாஸ் பாஸ்(Pass) என்று உத்தியோகப் பரிக்ஷையை ஒரு பெரும்



ரமா யெண்ணி வந்து விழுகிறார்கள். குடியானவன் மகன், தச்சன் மகன், கம்மாளன் மகன், இருளன் மகன், செட்டி மகன், பஞ்சாங்கஞ் சொல்வோன் மகன், பரிசாரகன் மகன் முதலியோரெல்லாம் கணக்குவழக்கின்றித் தத்தம் தாய்ப்பாஷைகளைத் தத்தஞ் செய்து விட்டுத் தொழுதூண் சுவைக்கு வழி காட்டியாகும் பர பாஷையைப் பயில்வதற்கு எக்கற்றுவந்து கூடி விடுகிறார்கள். ஆங்கிலம் கற்பதென்றால் அதுவொரு (Fashion) ஷோக்கு, "இதனால் என்ன செலவானாலும் ஆகட்டும். விடுகிறதில்லை. (Pass-Prize) வருமட்டும் இந்தப் பாஷையைப் பயின்று கடைசி வரையிலும் ஒரு (Chance) கை பார்த்தே விடவேண்டும். ஆயிரமல்ல பத்தாயிரம் செலவானாலும் சரி. பாஸ் பண்ணால் வீண் போகாது. நல்ல பெண் நகை நட்டோடு கலியாணச் செலவோடு சீதனத்தோடு ஆத்தியோடு பாத்தியோடு நியாயாதிபதி மகள் கிடைக்கிறாள்" என்று, எத்தனையோ இளைஞர் தத்தம் வாணாளை இப்படித் தொழுதூண் சுவைக்குத் தத்தஞ் செய்து கெடுகிறார்கள். கடைசியாகத் தாமுந் தமது மாமன்மாரைப் போலவே நியாயாதிபதிகளாகவும், நியாயவாதிகளாகவும் நீதிமன்ற மேடையேறி நாடகம் நடித்துக் கக்ஷிக்காரராகிய நாடகச் சபையோரிடத்தில் பெரும்பாலும் ஊதியம் பெற்று, ஏராளமான பொருளைக் கோடிக்கணக்காகக் குவித்துவிடுகிறார்கள்.

தற்போது காலஞ்சென்ற கல்கத்தா வாசியாகிய (Lord Sinha) பிரபு சின்னாவென்பார் சுமார் (1,10,00,000) பதினொரு கோடியே பத்திலக்ஷம் ரூபாய் (ப. 11,00,000) பதினோரிலக்ஷம் பவுன் ஆத்தி வைத்துச் சென்றாராம். இத்தனை ஆத்தியும் இவருக்கு எப்படி வந்தது? நியாய வாதத்தில் நக்காட்ட ரிடத்திற் சம்பாதித்ததனால் வந்தது! பெரும்பாலும் ஏழைகளின் பணமே இதிற் சேர்ந்திருக்கும். இதை

இவர் என்ன செய்தார்? தமது சுற்றத்தாராகிய ஒரு சிலர்க்கே பங்கிட்டுத் தந்து பரலோகஞ் சென்றார்.

இத்தனை தொகையையும் இவர் நியாய வாத மூலமாய்ச் சம்பாதியா திருந்தால், சுமார் ஒரு குடும்பத்துக்கு ஆயிரம் ரூபாவாகக் கோடி ரூபாவால் பதினாயிரம் ஏழைக் குடும்பங்கள் பயிரிட்டுச் சீவனம் செய்து பரமானந்தமா யிருக்கும்.

ஆகையால் ஏழைகளைக் கவனிக்கவேண்டும். நாமும் ஏழைகளாகவே வாழவேண்டுமென்று எண்ணவேண்டும். நாம் ஏழைகளா யிருப்பதற்கு அஞ்சப்படாது. அப்போது தான் 'பாம்பறியும் பாம்பின்கால்' என்றபடி நமக்கு ஏழைகளின் கஷ்ட நஷ்டங்கள் விளங்கும். நாம் ஏழைகளா யிருப்பதே எந்நாளும் ஏற்றதாகும். இயேசுநாதரை எண்ணிப் பாருங்கள். அவர் யாரிடத்திற் பிரியமா யிருந்தார்? பரம ஏழைகளையே அவர் தம் பக்தராய் அங்கீகரித்தார். அவர்களுக்கே பிழைக்கும் வழி காட்டினார்.

இதோ இங்கே சென்னைக்குச் சமீபத்திலுள்ள திருப்போரூர்க் கோயிலைக் கட்டின பெருந்துறவியும் தருமகர்த்தருமான சிதம்பர சுவாமிகள், அக் கைங்கரியத்திற்காக யார் பணத்தை அருமையாய் ஏற்றுக் கொண்டார்? பாவோடிக் கஷ்டப்பட்டுத் தேடிக் கொண்டுபோய்க் கொடுத்த ஓரேழைப் பெண்ணின் சில பூவராகன்களையே தமது கண்களில் ஒற்றிக் கொண்டாடி ஏற்றுக்கொண்டார். மற்றைப்படி கள் விற்றும் களவு புரிந்தும் ஆயிரம் ஆயிரமாகப் பாயிரத்தோடு கொண்டுபோய்ச் செலுத்தின தொகைகளை நகைசெய்து கூடாவென்று ஒதுக்கிவிட்டார்.



தற்போது நமது காந்தி மகானும் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் ஏழைகளுக்கே தத்தஞ்செய்து உழைக்கிறார். எல்லாரையும் அப்படியே செய்யும்படி அழைக்கிறார். அதனால் கதர் உற்பத்தியாய் எத்தனையோ ஏழைகள் பிழைக்கிறார்கள்.

எப்போதும்—"பணம் எப்படி வந்தாலென்ன? பணம் பணந்தானே! கம்பளி விற்ற பணம் மயிர் மயிரா யிருக்குமோ? கள் விற்ற பணம் புளிக்குமோ?" என்று குருட்டாட்டமாய்ப் பொருள் பொருளென்று மயங்கி இருளிற் கண் தெரியாமல் அலையப்படாது.

"கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதை விடக்
கற்பூரம் விற்றுக் காற்பணம் சம்பாதிப்பதே மேல்"

என்னும் நந்நாட்டுப் பழம் பழமொழியைக் கூர்ந்து கவனித்துச் சிற்றின்ப வெற்றியிற் சிறக்கவேண்டு மொவ்வொருவரும் உழுதூண் சுவையே இனிதென்னும் உத்தம வழியிற் றிரும்பிச் சித்தங் களித்து வாழவேண்டும்.

நியாயவாதிகளா யிருந்து பணம் சேர்த்த நந்நாட்டாரில் சுமார் ஒன்றரைகோடி சேர்த்து வைத்துச் சென்ற சின்னப் பிரபுவைப்போல இதுவரையில் இந்த மூன்று இராஜதானிகளில் நம்மவரில் எவரும் இருந்ததில்லையாம். கோடீச்சுரன் - இது பெரும் பேர்தான். பிரபு என்னும் பட்டம் - இது பெரும் பட்டந்தான். இது யாருக்கு வேண்டும்? இதனால் எத்தனை பேருக்கு நன்மை? எத்தனை ஏழைகள் பிழைத்தார்கள்? பிழைக்கிறார்கள்? பிழைப்பார்கள்? இத்தனை கேள்விகட்கும் விடையே யில்லாமல், மேற்குறித்த ஒரு கோடியும் எங்கோ ஒரு கோடியில் மறைந்து, ஏழைகளின் பணமாகிய அது, ஏழைகளாகிய யாருக்கும் பிரயோஜன மில்லாமற் போயிற்று. இது தெரிந்தே நம்

மகானாகிய காந்தியடிகள், பொருளைப் பொருளென மதியாமல் ஏழைகளைக் காப்பதே பெறும் பொருளிற் பெரும் பொருளென மதித்து அவர்களுக்காகக் கோடிக் கணக்காய்ப் பொருள் சேகரித்து உபசரிக்கின்றார்.

ஆகையால் சிற்றின்ப வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பும் ஒவ்வொருவரும் இனியேனும் பொய்ப் பொருளைத் தேடும் கோழைகளாய்க் காலம் போக்காமல் உழுதூண் சுவையை விரும்பும் ஏழைகளாகவே காலம் போக்கி, ஏழைகளுக்கிரங்கும் உத்தம குணம் பெற்றுச் சித்தங் களித்துச் சீர்பெறுவாரென்று கோருகிறோம்.

இன்னும் இந்த உழுதூண் சுவையின் உயர்வைப்பற்றியும் தொழுதூண் சுவையின் தாழ்வைப்பற்றியும் நமது செந்தமிழ் வேதியாகிய செங்காப் போதார் தமது உத்தர வேதத்திற் பத்துச் சுலோகங்களிற் பாராயணம் பண்ணியிருக்கிறார்.

"உழவுத் தொழிலை மறந்துவிட்டு வேறு தொழிலிற் பிரவேசித்தும், அதனால் ஒரு பயனுமில்லையென்று கண்டு, முடிவிலே இவ்வுலகத்தார், 'ஓதுவா னெல்லாம் உழுவான் தலைக்கடையில்' என்றபடி, ஏர் உழுவார் வழியில் திரும்பி வருபவர்களானார்கள். ஆகையால், உழுதூண் சுவைப்பது எத்தனை வருத்தமான தொழிலானாலும், அதுவே மற்றெல்லாத் தொழுதூண் சுவைத் தொழிலினும் முதன்மையானதாகும்" என்னுங் கருத்தமைத்துப் பின் வருகிறபடி ஓதினார்:

"சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

இன்னும் அவர், "தொழு தொழிலைச் செய்து, சோம்பியிருப்பவர்களை யெல்லாம் தாங்கி நிற்பதால், உழுதொழிலைச் செய்பவரே உலகத்தா ரென்னும் தேர்க்கு அச்சாணி போல்பவர்" என்றதைஇயும்,



"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்றதைஇயும் இவ்வதிகாரத்தில் முந்தியே கூறியுள்ளோம்.

வாழ்வா ரென்னும் பதத்திற்கு உழுதுண்டு வாழ்வாரென்பதே உகந்த பொருளாகும். காட்டு வாசிகளுக்கு மட்டும் அத்தொழில் சுலபமாயிராது. ஆகையால் அவர்கள் காடழித்துக் கட்டை வெட்டியும், தேனழித்துத் தேன் சேர்த்தும், பசுக் காத்தும், மற்றை இயற்கைத் தொழில் செய்தும், இயற்கைப் பொருள்களாகிய கிழங்காலும், பழத்தாலும், பாலாலும், தயிராலும், நெய்யாலும் உயிர் வாழுட்டும்.

காட்டு வாசிகளைவிடக் கல்வியிலும், அறிவிலும், பிறவற்றிலும் சிறந்தவராக நாட்டு வாசஞ் செய்வோர் உழவுத் தொழிலன்றிப் பிற தொழிலைச் செய்து பிழைக்க எங்ஙனம் முடியும்? இதை உல்லிங்கனஞ் செய்துவிட்டுப் பிற வீண் தொழிலைச் செய்து பிழைக்கப் போனால் நாட்டு வாசிகளெவரும் சுயேச்சையாய் வாழவும் பிறர் நலம் பேணவும் முடியாது.

காட்டு வாசிகளைவிட நாட்டு வாசிகள் நாகரிகத்திற் சிறந்தவரென எண்பித்துக் காட்டவேண்டுமானால் கல்வியிற் சிறந்திருக்க வேண்டும். அதுவும் எந்தக் கல்வி? தாய்மொழிக் கல்வி. இதையே-போற்றவேண்டும். இதையே-பேசவேண்டும். இதையே-படிக்கவேண்டும். இதையே-பாடவேண்டும். இதிலேயே—நினைக்கவேண்டும். இதிலேயே-செய்யவேண்டும். இதிலேயே-எல்லாம் ஆகவேண்டும். இதைவிட்டுக் கரும்பிருக்க இரும்பு கடித்திளைத்த

படி, பிறநாட்டுக் கல்வி கற்றதனால் என்ன பலன்? அதைக் கற்பதனால் என்ன பயன்?

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்று நாயனா ரருளியபடி, பரபாஷை பயில்வார், அதைக்

"கற்றதனா லாய பயனென்கொல் தாய்மொழியை
முற்றும் வெறுப்பா ரெனின்"

இதை யெல்லாரும் பாராயணம் பண்ணவேண்டும். இதன்படி கல்வி கற்க முயலவேண்டும். உழுதூண் சுவைக்குத் தாய்மொழிக் கல்வியே தகுந்த ஆதாரமாம். ஜப்பான் தேசத்தைப் போன்ற சிறு தீவு வாசிகள் தாம் கப்பலின்றி எங்கும் செல்ல இயலாது. அவர்களுடைய நாடு சிறு நாடாகையால், வெளி நாடுகளுக்குச் சென்றே அவர்கள் பொருள் தேடவேண்டும். அவர்கள் தாம் கப்பல் செய்தொழிலிற் கைதேர்ந்திருப்பார்கள். நந்நாடு சகல வளங்களு நிறைந்த பெரு நாடாகையால், நமக்குப் பிற நாட்டுக்குச் செல்லவும் கப்பல் செய் தொழில் கற்கவும் காரணமில்லை.

புலியைப் பார்த்துப் பூனை சூடிக்கொள்வது போல அவர்களைப் போலவே நாமும் பொருளாசை கொண்டு அதிக பரபரப்பாய் எந்தப் பாஷையை யேனுங் கற்று எந்தத் தொழிலை யேனுஞ்செய்து பொய்ப் பொருளைத் தேடமுயல்வது வெறித்தனமாகும். மற்றெது செய்தாலும் நம்மவர் பரபாஷை பயில்வது பயித்தியத்திற் பெரும் பயித்தியமாம். ஆகையால் பரபாஷை பயின்று பாஸ் (pass) பண்ணும் இவர்களிற் சிலர்க்கு (M. A. D.) பயித்தியம் என்னும் பட்டம் கொடுக்கவும் தகும் தகும்.



இன்னும் நமது பழந்தொழிலாகிய உழவுத் தொழிலைப் பற்றியே நாயனார்,

"பலகுடை நீழலுந் தங்குடைக் கீழ்க்காண்பர்
அலகுடை நீழ லவர்"

என்று ஓதியிருக்கின்றார். இதன் அர்த்தம் அசாத்தியமாயிருக்கின்றது.

"நெற் கோட்டை கட்டி வாழ்ந்து அதற்குள் எத்தனை பேர் வந்தாலும் காக்கும் இயல்புடைய உழவர், பல வேந்தருடைய குடைகளின் நிழலிலுள்ள பூமிமுழுவதையும், தங்களுடைய அரசன் குடைக்கீழ்க் காண்பார்கள்" என்பதே அது.

ஆஹா! இது எத்தனை தைரியமாய்க் கூறியிருக்கின்றது! எத்தனை அநுபவத்தாற் கூறியிருக்கின்றது! இதையேன் எத்தனையோ மேதாவிகளென்று பேரெடுத்தவர்களும் கவனியாமல் தாமுங்கெட்டுப் பிறரையுங் கெடுத்து விடுகிறார்கள்?

ஏராளமாய் நெற்கோட்டை கட்டி வாழும் தேசத்தை யாளும் அரசனே மற்றை யரசர்களை அடக்கி வாழ்வானென்றிருப்பதால் துரைத்தனத்தாரும் இவ்வுழுதூண் சுவையைப் போற்ற வேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

ஆயினும் குடிகள் தாம் தம்மைத்தாமே தாய் மொழிக் கல்வியிலும் உழுதூண் சுவையிலும் தேற்றிக் கொள்ள வேண்டியவர் களாயிருக்கிறார்கள்.

தன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மென்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான் (நாலடி)

---

## பத்தாம் அதிகாரம்

---

### (காதற் சிறப்பே ஓதற் சிறப்பெனல்)

" காதல், கவறுடல், கள்ளுண்ணல், பொய்ம்மொழிதல்,
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி "

என்பதில் காதல் என்பது கண்டதை வெஃகுஞ் சிறுமையைக் காட்டுகிறது. வெஃகல் என்றால் இச்சித்தல் என்று பொருள்படும்.

'காதற் பெருகும் ஒரு கோடி கோடி' என்பதிலும் காதல் என்பதற்கு இச்சையென்றே பொருள் படும்.

ஆயினும்,

" ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள "

என்னும் குறளில் காதலார் என்பதற்குச் சிற்றின்ப இச்சை உடையார் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

"முன்பின் அறியாதார் போல ஒருவரையொருவர் பொதுப்பார்வையாலும் புதுப்பார்வையாலும் நோக்குதல், உண்மைக்காதல் (சிற்றின்பவேட்கை) உடையாரிடத்தில் தான் உண்டு" என்பதிதன் பொருள்.

" காதலியைக் கானகத்திற் காரிருளிற் கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—சாதம்
அளிக்கின்ற ஆழிவா யாங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னோ வுரை

என்பதில் காதலி என்பது மனைவியைக் குறிக்கிறது. உண்மைக் காதலை உடையாள் காதலி என்று கொள்ள



வேண்டும். இங்கே காதல் என்பதற்கு மேற்குறித்தபடி சிற்றின்ப வேட்கை யென்பதொன்றே யன்றி வேறென்னவோ ஒன்று எஞ்சி நிற்கிறபடி தோன்றுகிறது—அதுதான் உள்ளன்பு, உண்மையன்பு. இதைத்தான் அங்கிலத்தில் (True Love) லவ் என்கிறார்கள்.

ஆகையால் காதல் என்பதற்கு அன்புகலந்த ஆசை யென்றே பொருள் கொள்ளவேண்டும்.

இதே அன்பு கலந்த ஆசை, பெண்ணுக்கும் ஆணுக்குமுள்ள காமச் சுவை ஊறும் ஆசைக்கு மட்டும் சிறப்பாகவும் மற்ற மண்ணாசை பொன்னாசை முதலியவைகளுக்குப் பொதுவாகவும் வழங்குகிறது.

கள்ளுண்பானும் அதன்மேல் அளவற்ற அன்புகலந்த ஆசையே கொண்டிருக்கின்றான். பிசினனும் பொன்மேல் அளவு கடந்த ஆசை வைத்திருக்கின்றான். கள்ளனும் பிறர் பொருள்மேல் எல்லையில்லா உண்மையன்பு பூண்டிருக்கிறான். கணக்கனும் பிறரை ஏற்றிப் பொருள் பறிப்பதில் கணக்கற்ற இச்சை வைத்திருக்கிறான். இவ்விடங்களிலெல்லாம் காதலின்றி ஒன்றுநடவாது. ஆகையால், இங்கே காதலென்பதற்குப் பொதுவாக இச்சையென்றே பொருள் கொள்ள வேண்டும். இதே காதல் என்பது கடவுள் மேற்கொண்ட பேரின்ப அன்புக்கும் வழங்கி வருகிறது.

" திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை "

இங்கேயும் காதலென்றது உண்மை யன்பையே குறிக்கின்றது.

இகத்திற் பழகும் கணவன் மனைவியர், பெற்றோர் பிள்ளைகள், உற்றோர் உறவினர் இடையில் எழூஉம் உள்ளன்பைக் குறிக்கும் காதல் என்னும் பதமே, பரத்திற்றிகழும் கடவுளன்புக்கும் வழங்கிவருகிறது.

சக சிவ பரம் என்னும் மூன்றனுள் இடையிலுள்ள சிவனென்னும் ஆன்மா, சகத்தில் அனுபவிக்கும் உண்மைச் சுகானுபவத்தின் முதிர்ச்சியே [illegible]ற்றிலும ஆமாகையால் காதலென்பது இ[illegible]குகும் வழங்கிவருகிறது.

[illegible]யம என்பது அப்படி அன்று. காமம் என்றால் இன்பம். இப்படியே அறம் பொருளின்பம் வீடென்பதற்கு ஆரிய அடுக்கு, 'தர்மார்த்த காம மோக்ஷம்' என்று வழங்குகிறது. இங்கே இன்பம் என்பதற்கு பதிலாகக் காமம் என்றுதான் வந்திருக்கிறது. காமம் என்பதற்கு இன்ப ஆசை, அதிலும் சிற்றின்ப ஆசை யென்றே ஒரு சிறப்புப் பொருளுண்டு. அதனால் தான் நந்நாட்டார் சிற்றின்பக் கடவுளுக்குக் காமனென்று பெயர் வைத்து வழங்குகிறார்கள்.

“காமமே குலத்தினையும் நலத்தினையுங்
கெடுக்கவந்த களங்க மாகும்
காமமே தரித்திரங்க ளனைத்தினையும்
புகட்டிவைக்குங் கடார மாகும்
காமமே பரகதிக்குச் செல்லாமல்
வழியடைக்குங் கவாட மாகும்
காமமே அனைவரையும் பகையாக்கிக்
கழுத்தரியுங் கத்தி தானே”

என்பதில் காம மென்பதற்கு மிகவும் கேவலமான பெண்ணாசை யென்றே ஓர் இழிவு சிறப்புப் பொருளுமுண்டு.

“காமத்தால் இந்திரன் கலக்க மெய்தினன்.
காமத்தால் சந்திரன் கவலை யெய்தினன்.
காமத்தால் இராவணன் கதியி ழந்தனன்.
காமத்தால் மாண்டவர் கணக்கி லார்களே”



என்பதிலும் இப்பொருளே படுவது காண்க. கொலை, களவு, கள், காமம், பொய் யென்பதிலும் இப்படியே யாவது காண்க.

காமம் என்பது இன்பம் என்னும் பொருள் படுவதிலிருந்து இன்பத்தை இச்சித்தலென்றும் பொருள்பட்டு வந்திருக்கிறது. ஆனாலும், இது எப்போதும் இழிவு சிறப்பாய்ப் பெண்ணாசைக்கே பெரும்பாலும் வழங்கிவருகிறது. காமமுடையார் பஞ்சமா பாதகரென்றும், காதலுடையார் பரிசுத்தமானவர்க ளென்றும் பொருள் கொள்ளுவதே உலக வழக்கு. இரண்டுக்கும் ஒன்றோடொன்று தொடர்ச்சியுண்டு.

காம மென்னும் இன்பம் நுகரலா மென்றே காதலென்னும் அன்பு தொடர்வது இயற்கையா யிருக்கின்றது. ஆகையால் நாயனாரும் காதற் பாலை, காமத்துப் பால் என்று ஆரிய வழக்கின்படி பெயரிட்டு வழங்கியிருக்கின்றார். இன்பவுணர்ச்சியாலேயே அன்புணர்ச்சி நிகழ்கின்றது. ஆகையால் காமமின்றிக் காதலில்லை. காதலின்றிக் காமஞ் சிறவாது. காமம் இக சுகம் ஒன்றையே குறிக்கும். காதல் இகபரசுகம் இரண்டினையுங் குறிக்கும். காமம் காதலின்றியும் வலுவந்தமாக நடக்கும். காதல் காமமின்றி நிகழாது.

ஆகையால், காத லென்பது சேற்றிற் பிறந்த செங்கழுநீர் போலவும், இப்பியிற்றோன்றிய முத்துப் போலவும் காமத்திற் பிறந்து, சிறந்து திகழ்வது ; பேரின்பத்திலும் திகழ்வது. ஆகையால் இவ்வதிகாரம், 'காதற் சிறப்பே ஓதற் சிறப்பெனல்' என்னும் தலைப் பெயர் பெற்றது.

“காதலர் தூதொடு வந்த கனவினுக்
யாது செய்வேன்கொல் விருந்து”

இங்கே காதலரென்று தலைமகனைக் குறித்துத் தோழிக்குத் தலைமகள் கூறுகிறாள். உண்மையன்புடையவர் என்பது, காதலர் என்பதற்கு உகந்த பொருள்.

“ஒரு தலையா னின்னாது காமங்காப் போல
இருதலை யானு மினிது”

இங்கே காமம் என்பது காதலைக் குறிக்கின்றது.

காமம் என்பது பொதுவாகச் சிற்றின்பத்தையே குறிக்குமாயினும், ஆகுபெயராய் இவ்வின்பத்தை எய்த எய்தும் இச்சையல்லது வேட்கையையும் பெரும்பாலுங் குறிக்கிறது.

“தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ”

இங்கே காமத்தை நோய் என்கிறார். அதாவது இச்சை நோய் என்று கொள்க.

‘காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனா வுடம்பி னகத்து’

இதற்கு “தம்மைப் பொறாத என் உடம்பிற் பொருந்திய காமமும் நாணமும் ஆகிய இரண்டும், என் உயிரென்னும் காவடித் தண்டின் இருபுறத்திலும் தொங்கிக் கொண்டிருக்கின்றன” என்பது இதன் பொருள். கூடியிருந்த தலைமகன் பிரிந்து போனதனால் வாடியிருந்த தலைவி, தோழிக்குக் கூறின கூற்றாக இக் குறள் வந்திருக்கிறது. அவனை நினைந்து நினைந்து அன்பே வளைந்து வளைந்து ஊற்றெடுத்துக் கண்ணீராறாய்ப் பாய உடல் நனைந்து நனைந்து தலைமகள் பேசுகிறாள் : “ஏ தோழி! என் உயிரோ காவடிக் கோல் போல என் காம பாரத்தை ஒரு புறமும், நாண் பளுவை மறுபுறமும் தாங்கிக்கொண்டிருக்கிறது. என் உடலோ, காம நோயால் மெலிந்து தேய்ந்திருக்கிறது. அதில் வாழும் உயி



ரென்னும் காவடித் தண்டோ, காணத் தீயால் உலர்ந்து சத்தின்றி வற்றியிருக்கிறது. இரண்டும் இறுத்துவதால், காவடித் தண்டு மளுக்கென்று முறிய வேண்டியது தான், அதாவது, இனி நான் பிழைத்திரேன்” என்று முடித்தாள். இங்கே காதற் பாரத்தையே, காம பாரம் என்று கூறியிருக்கின்றது. இதனால் காமமும் காதலுக்கு மாறாக வழங்கி வருவது காண்க.

“காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்தும்
ஏமப் புணைமன்னு மில்”

இதில் காமத்தைக் கடலென்று கூறியிருக்கின்றது. இங்கேயும் காமம் என்றது காதலையே யாகு மென்க.

“காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்”

இங்கேயும் காமத்தைக் கடலுக்கே உவமை கூறியிருக்கின்றது.

“காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச்சி வாயவே”

என்ற இத் தேவாரத்திலும் காதல் என்பது உண்மையன்பு என்னும் பொருள் கொள வந்திருப்பது காண்க.

ஆகையால் காமமும் காதலும் ஒன்றுக்கொன்று ஒத்த தொடக்குள்ளனவாகவே பண்டைய நூல்களிலும் வழங்கி வந்திருக்கின்றன.

இதனாலேயே இவ்வதிகாரத்துக்கு, ‘காம கலமே எமகலமெனல்’ என்ற தலைப்பே பொருந்துவதென்றிருந்த யாம், சிற்றின்பம் ஒன்றற்கே பரிபாடையாகும் காமம் என்பதைக் காட்டினும் சிற்றின்பம் பேரின்பமென்

ளும் இரண்டற்கும் பரிபாடையாய் வழங்கும் காதலென்பதே சீரியதாமென்று, 'காதற் சிறப்பே ஓதற் சிறப்பெனல்' என்னும் தலைப் பெயரைச் சூட்டினேம்.

இப்படிச் சூட்டுவதிலும் தீட்டுவதிலும் ஒன்றும் இன்று. எல்லாம், இந்தச் சிற்றின்ப வெற்றியைச் சீர்பெற வைப்பதற்கு வேண்டிய விஷயங்களைத் தெளிவாய் எழுதுவதிலிருக்கின்றது. காதலென்றாலும் காமமென்றாலும் ஒன்றுதான் என்றாலும், காமத்தால் சிற்றின்ப நுகர்வது ஒரு தலையாகவும் வலுவந்தமாகவும் இருந்தாலும் இருக்கலாம். காதலாற் சிற்றின்ப நுகர்வது இரு தலையாகவும், அதனால் பேரின்பத்துக்கு வழிகாட்டியாகவும் இருந்தே தீரும். என்றுணர்க.

"ஒருதலையா னின்னாது காமங்காப் போல
இருதலை யானு மினிது"

"ஆண்மகன் பெண்மகளென்னும் இருவரில் ஒருவரிடத்தில் மட்டும் மற்றொருவர் மேல் இச்சை மிகுந்திருக்குமாயின், அது துன்பந் தருவதாம். அது, காவடிக் கிருக்க வேண்டிய பளுவுப் போல இருவரிடத்திலும் சமமாயிருந்தால் தான் இன்பந் தருவதாகும்" என்பதிதன் பொருள். இது, தலைமகள் தோழியைப் பார்த்துக் கூறிய கூற்று. "எனக்கு மட்டும் அவர் மேல் ஆசை வளர்ந்து கொண்டே வருகிறது. என்மேல் அவர்க்கது அப்படியின்றித் தளர்ந்து கொண்டே வருகிறது. இதை நீ கவனிக்கவேண்டும்" என்கிறாள்.

இதைத்தான் ஒரு தலைக் காமம் என்கிறார்கள். இங்கே காமம் என்றது காதலையே யானாலும், ஒரு தலைக் காதல் என்று வழங்கும் வழக்கம் இல்லை. ஒரு தலைக் காமம் தலைவன் தலைவியர் கூடி முயங்கின பிறகும், இன்றியமையாப்



பிரிவால் சேரிடுவது இயல்பாம். இதுவே நந்தமிழ் நாட்டு நூல்களிற் கூறியுள்ள அகப் பொருளிலக்கணங்களில் வந்திருக்கிறது. அகப் பொருள் என்றால், நாயகன் நாயகியருடைய அகங்களில் அதாவது உள்ளங்களில் நிகழும் இன்பகாரணமான விஷயங்கள். இந்த ஒரு தலைக் காமம் இருவரும் கூடி முயங்கு முன்னரும் நிகழ்வது உண்டு. இதை, ஆண்மகன் தன் தோழனிடத்தில் கூச்சமின்றி வெளியிட்டுக் கொள்வது போல, பெண்மகள் தன் தோழியிடத்தில் நாணமின்றி வெளியிட்டுக் கொள்ளும் வழக்கமில்லை.

ஆயினும், இப்போதியைந்துள்ள நவீன நாகரிக முறைமைப்படி இதுவும் வெளிப்படையாய் நிகழ்ந்து தீரவேண்டுமென்பதே இச்சிறு நூலின் துணிபு.

அந்தக் காலத்தில் ஆண் மகனுக்கு இவ்விஷயத்தி
போலி நாகரிக
விருந்த சுயேச்சை இந்தக் காலத்திலுள்ள
முறையால், மிகவும் குறைந்து மறைந்து போயிருக்கிறது.

"பூவரசி னிழலிலே புதுநி லாவிலே
வேவுது மனமது விரக தாபத்தால்
யார்மக ளாயினு மருகி ருந்தக்கால்
காவலென் றஞ்சுமோ காம பாதையே"

என்று, கம்பர் மகன் அம்பிகாபதி செம்பாகமாய்த் தன் காம வேட்கையை வெளிப்படையாய்க் கழறினன் என்றிருக்கிறது. இவன் அரசன் மகள்மேல் இச்சை வைத்து, இப்படித் தன் இச்சையை வெளிப்படையாய்ப் பாடினனென்றிருக்கிறது. அவளுக்கும் இவன் மேல் இச்சையிருந்தும், அதை அவள் வெளிப்படையாய்த் தன் தோழியரிடத்திலும் தெரிவித்தாளில்லை. ஆகையால் இது வெளிக்கு மட்டும் ஒரு தலைக் காமமாகத் தோன்றிற்றே யன்றி உண்மையில்

அப்படி யன்று. அம்பிகாபதியும் தன் காமத்தை யாரு மில்லாத போது வெளிப்படுத்தி மேற் குறித்தபடி பாடினான். பிறகு அதை ஒன்றியிருந்து கேட்டுக் கொண்டிருந்த அரசன் முதலியோர் மறுபடியும் பாடச் சொல்லிக் கேட்ட போது, அச்சத்தால், அவன் அதை மாற்றி,

"பூவாசி னிழலிலே புதுமி டாவிலே
வேவுது பயறது விறகுத் தீயினால்
யார்பய றாயினு மருகி ருந்தக்கால்
காவலென் றஞ்சுமோ கையும் வாயுமே"

என்று பாடி மறைத்து விட்டான். ஏன்? அரச தண்டனைக்கு அஞ்சி.

இப்படிப்பட்ட தண்டங்களும் பிறவும் இடையூறு யில்லாமல் நிகழவேண்டிய இன்பமே சிற்றின்ப வெற்றிக்கு அடிப்படையான உண்மை யின்பமாகும்.

ஆண் மகன்தான் இப்படித் தன் காம வேட்கையைக் கூடி முயங்கு முன்னும், முயங்கிய பின்னும் தன் தோழனிடத்தும், நாயகியின் தோழியிடத்தும் வெளிப்படையாய்த் தெரிவிக்கிறான். பெண் மகளும் தெரிவிக்கிறாளோ என்றால், ஆம் என்பதே அதற்கு விடையாகும்.

தாமருளிய காமத்துப் பாலில், ஆண்மகன் காம இயற்கையை ஏழதிகாரத்திற் கூறிய நாயனார், பெண் மகள் காம இயற்கையைப் பன்னிரண்டதிகாரத்திற் கூறியிருக்கின்றார். முன்னர் யாம் தெரிவித்துள்ளபடி பெண்ணாவாரே என்றும் பெரிதென்று கொள்ளவேண்டும். பெண் மகள் தன் காதற் சிறப்பைக் கூடி முயங்கு முன், நாணங் காரணமாகக் குறிப்பாலும், பின்னர் மடம் அச்சம் பயிர்ப்பு முதலியவைகள் காரணமாகக் குறிப்பாலும் வெளிப்படையாலுங் கூறுகிறாள்.



"நனவினான் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் னுயிர்"

என்பது, தலைமகள் தன் கனவு நிலையைத் தோழிக்குக் கூறுங் கூற்றாக வந்திருக்கின்றது. "நனவில் வந்து எனக்கு இன்பம் தாராதவரைக் கனவில் நான் காண்கின்றமையால் என் னுயிர் இன்னும் நிலைத்திருக்கிறது" என்பதிதன் பொருள். இது, குறிப்பாகத் தலைமகள் தன் பிரிவாற்றாத் துன்ப நிலையைத் தோழிக்குத் தெரிவித்ததாகக் கூறியிருக்கின்றது.

இப்படிக் குறிப்பில் தெரிவித்துப் பிறகிவள், தலைமகனோடு மறுபடியுங் கூடி முயங்கி இணைபிரியா தொழுகும் இருபாற் கூருகிய இன்ப நிலையை ஆறதிகாரத்திற் கூறியிருக்கின்றார் நாயனார். செந்தமிழ் நாட்டு முற்கால வழக்கப்படியே தற்காலத்தும் இவ்வின்ப நிலை இரு பாலார்க்குள்ளும் தம்மிச்சையிற் றிகழ வேண்டுமென்பதே இச்சிற்றின்ப வெற்றியின் சிறந்த நோக்கமாகும். அக்காலத்து இன்ப நிலைக்கும் இக்காலத்து இன்ப நிலைக்கும் இடைப்பட்ட காலமாகிய உக்காலத்து இன்பநிலை முற்றும் விபரீதமாய் மாறி யிருந்திருக்கின்றது. கலியாணமென்று ஒன்று கட்டளையாகவும் சமஸ்காரமாகவும் ஏற்பட்டு உண்மைக் காதல் நிலையை மாற்றி விட்டது.

* இந்த வாரத்தில் நடந்த செய்தி ஒன்று: பிரயாகை யென்னும் பதியில் முப்பத்தொன்று வயதுடைய தலைமக னொருவன், பதினொரு வயதுடைய தன் பெதும்பைப் பருவத்துக் குழந்தை மனைவியை வலுவந்தமாய்க் கூடி, அவளுக்கு உயிர்ச்சேதமாம்படி கொடுமை விளைத்தமையேயாம். இதை விட நக்காட்டார்க்குக் கொடுமை விளைக்கக் கூடிய தீநெறி வேறெதுவும் இல்லை. இது செய்தவன்

* 22-6-28

வேதியனும். முப்பத்து நாலாய் மூத்த இவனுக்குப் பதி ணொரு வயதுப் பெண்ணை மணஞ் செய்வானேன்? இது சமஸ்காரமாம். அப்படிக் குழந்தைப் பருவ முள்ளவளை அவனோடு வாழ விடுவானேன்? அப்படி அவள் வாழ்ந்தா லும் அவளை அவனோடு சேர விடுவானேன்? கணவனாகை யால் அவனுக்குச் சர்வ அதிகாரமும் உண்டாம். அவளை அவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாமாம். மற்றப் பூனை நாய் முதலிய விலங்குகளைப் போலவே, கணவன் தன் மனைவியைத் தன்னிஷ்டம் போல் நடத்தலாமாம். அவளை அவன், வாவென்றால், அவள் இதோ வந்தேன் என்று வர வேண்டும். போவென்றால், இதோ போகிறேன் என்று போகவேண்டும் என்றிருக்கின்றதே அன்றி, கன்னிகையா யிருக்கும் போதே அவளை நீ எனக்கு மனைவியா யடங்கியிரு என்றால் அவனுக்கவள் ஒரு மிருகம் போலக் கீழ்ப்படிந் திருக்கவேண்டு மென்று அக்காலத்திலும் இல்லை, இக்காலத் திலும் இல்லை. ஒரு வேளை உக்காலத்தில் இருந்திருக்கலாம். அதுவும் பிறர் நலம் பேணும் கூட்டத்தார்க்குள் இருந் திராது. சுயநலம் பாராட்டும் சிலர்க்குள் மட்டும் குருட் டாட்டமாய் இருந்திருக்கலாம்.

காதல் என்பதே இன்னதென்றுணராமல் சிற்றின் பத்தை வேம்பென்றெண்ணும் குழந்தைப் பருவத்துக் கன்னிகையைக் கற்பழித்து, அவளுடைய அந்தரங்கத் தானத்தை ஊறுபடுத்தியவன் வேதியனாயினும் அவனை விலங்கெனக் கூறவேண்டுமன்றி மனிதனென மதிப்பதற் கிடமில்லை. பெண்மகள் ஆண் மகனோடு கூடி முயங்கும் வயது வரையறை அரசகட்டளையாகப் பதினான்கென்றேற் பட்டிருக்கிறது. பதினாறென்றும் மற்றொரு கட்டளையுண்டு.

அப்படியிருந்தும் பெண்மகளுக்கு மனமில்லையானால், அவள் மனைவியாயிருப்பினும் ஆண்மகன் அவளை வலுவந்தம்



சப்பது புணர்வதிற் பலனில்லையென்பது பெரியார் துணிபு. அதனாலேயே முன் நாம் மேற்கோளாகக் காட்டியுள்ள

"ஒருதலையா னின்னாது காமங்காப் போல
இருதலை யானு மினிது"

என்னுங்குறள் ஒரு தலைக்காமத்தைக் கண்டிக்கிறது.

'இருதலையானு மினிது'

என்பதைக் கவனியாமலே எல்லாம் ஒரு தலைக்காமமாகவே இன்ப நுகரலாமென்றால், ஆண்மகனைப் பெண்மகளும் பெண் மகனை ஆண்மகனும் தேடவேண்டு மென்பதேயில்லை. பதினொருவயதுப் பெண்ணை முப்பத்திறுவயது ஆண் பிள்ளை, தன் வீட்டில் தாய் தந்தையர் சுற்றத்தாரெல்லாரும் அவளைத் தனியே விட்டு, எங்கோ வெளியே சென்று இராத் தங்கியிருக்கும் சமயம் பார்த்துப் பயமுறுத்திப் பள்ளி யறைக் கழைத்துக்கொண்டு போய்த் தன்னிஷ்டம் போல் அவளை யொரு உயிரில்லாப் பொருளாக உபயோகித்து மூன்றாண்டு தண்டனைக் குள்ளாய்க் கெட்டதைப் பார்த் தும், தலைக்கணையை அவனென எண்ணி அதனோடு புணர்ந்து தன் காமவெறியைத் தணித்துக்கொண்டிருக் கலாமே! இந்தக் குழந்தைக் கொடுமணமாகிய யோகிக் கடிமணங்களெல்லாம் இன்னும் எப்போது தொலையுமோ தெரியவில்லை!

வயது வந்த பிறகு செய்யும் திருமணங்களிலும் ஆன [illegible]கு ஆனாலும், ஆகாததற்கு ஆனாலும் எப்படி வாய்த்தாலும் [illegible] இன்பம் சிற்றின்பமாய் வெற்றி பெறாமலே தோற்றும் [illegible]றதென்று முன்னே [illegible] மொழிந்துள்ளோம். இப்போது நடந்து வரும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

முன் நாம் வகுத்துள்ள ஆறுவித காலங்களில் ஆதி காலத்திய தாந்தோன்றி மணமே சாலச்சிறந்த தாம். அப்போது பெண்களுக்குள் நிர்வாணமென்பதே இன்னதென்று தெரியாது. எல்லாரும் பிறந்த சொரூபமாய் இருந்தார்கள். அப்படியிருந்தும் அவர்களுக்குள் இயற்கையாகவே, நாணம் மடம் அச்சம் பயிர்ப் பென்னும் நாற்குணங்களும் பொருந்தியிருந்தன. இப்போது போலி நாகரிக முறையால் மேலுக்குமட்டும் பெண்களும் ஆண்களுந் தத்தம் அற்றங்களை விதம்விதமான ஆடைகளால் மறைத்துக்கொண்டிருப்பினும் உண்மையான நாணமென்பது கிடையாது. எல்லாம் அரசகட்டளையின் அச்சத்தால் நடந்து வருகின்றன அன்றி, உண்மையில் நாணமென்பதற்காகவே நாணமென்பது நிலவியில்லை (Modesty for modesty's Sake) என்கிறார் ஆவ்லக் எல்லிஸ் என்னும் ஆங்கில மேதாவியொருவர். உண்மையில் இவர் இவ்வுலகடங்கலும் நிலவியுள்ள பற்பல சாதியார்க்குள் வழங்கிவரும் ஆண்பெண் காமக்கூட்டுறவு முறை, ஒரு தலைக் காமமுறை முதலியவைகளை ஆதிகால முதலிருந்து ஆராய்ந்தெழுதியிருக்கிறார்.

இவர் மிகவும் உழைத்துத் தேர்ந்தெளிந்து, மன்பதைகளுக்குள் நிலவும் சிற்றின்ப முறைகளை உள்ளபடி ஆராய்ந்து தீட்டியிருக்கிறார்.

ஆணி கட்டாமல் அம்மணமாய் இன்றளவும் வாழும் காட்டு மக்கள், சிற்சில நாட்டுமக்கள், பிரசில் (Brazil) வாசிகள், போர்ட்சுகல், ஸ்பெயின், அந்தமான், அமெரிக்கா முதலிய தேசவாசிகள் ஆகிய பற்பலர்க்குள்ளும் நிலவிவரும் சிற்றின்பப் பழக்கவழக்கங்களை யிவர் தெளிவாக ஆராய்ந்தறிந்து தீட்டிக் காட்டியிருக்கிறார்.



நிர்வாண' வனவாசிகளிற் பெண்ணொருத்தி, பதினாறு [illegible]யமானவள், அங்கங்களெல்லாம் பழுதின்றி அழகாயமைந்தவள், போழகியாய்த் திகழ்பவள், நோய் நொடியற்றவள், ஒரு மரத்தடியிற் காமக்கடும்புனலில் மூழ்கி, அதற்குகந்த ஆண்மகனென்னும் புணை அகப்படாமையால், அதினின்றும் ஏறிப்பிழைக்க வழியின்றித் தன்னை மறந்து விழுந்து கிடக்கிறாள். அவ்வழியே ஓர் ஆண்மகன் இருபதாண்டென்னும் இளையான் தன்னிச்சையில் வருகிறான். வருபவன், அம்மரத்தடியில் தன்னை மறந்து விழுந்து கிடக்கும் இளையாளைக் காண்கிறான். கண்டவுடனே இவன், சந்தேகங்கொள்ளுகிறான்; "இவள் என் இப்படி விழுந்து கிடக்கிறாள்? ஏதாவது நோயோ? பசியோ? இளைப்போ? களைப்போ? தூக்கமோ? ஏக்கமோ? விக்கமோ? அல்லது உயிர் நீக்கமோ?" என்று நெருங்கி, அவ்விளையாள் மூக்கின்மேல் கையைவைத்து மூச்சு ஓடுகிறதோ என்று பார்க்கிறான். சரியாயது ஓடுவதைக் கண்டு களிக்கிறான். அவளை இப்படி அப்படித் திருப்புகிறான். ஒன்றுமில்லை. மூச்சு மட்டும் இருக்கிறதன்றிப் பேச்சில்லை. மற்றையவயவங்களையெல்லாங் கவனிக்கிறான். பக்குவமான கன்னிகையென்று கண்டு கொள்ளுகிறான். காட்டு வாசியானாலும் அவளை அவன் பக்குவப்பொருளோ அபக்குவப் பொருளோ என்று நிதானித்தறிகிறான். தண்ணீர் கொண்டு வந்து [illegible]தெளித்துப் பார்க்கிறான். பயனில்லை. அவளுடைய உண்[illegible]ர் வேறாயிருக்கையில் தண்ணீர் என்ன செய்யும்? "இவளை [illegible]றவிதமாய்த் தேற்றமுடியாது. நமக்கு இவளைக்கண்டவுடனே இயற்கையாய் எழுந்த காதல் நீராலேயே இவளைத் தெளிவிக்கவேண்டும். இவளைத் தனியே விட்டுச் செல்லவும் மனம் வரவில்லை. யார் மகளாயிருந்தாலென்ன? இவள் குலமும் [illegible] நமக்கொரு[illegible]வைத் தீர்ப்பதே கடமை.

குறை தீரவேண்டுமென்று ஈம்மனம் அவாவுகிறது. அந்த அவாவையும் உண்மையில் இவள் உடற்கூட்டுறவு தீர்த்து விடுமென்பதிற் சந்தேகமில்லை” என்று அவளோடு தானும் கள்ளங்கவடின்றி உள்ளன்போடு நிர்வாணமாய்ப் படுத்துக் கொள்ளுகிறான்; கட்டித் தழுவுகிறான். காவில் வரு முத்தமீ, ஒரு முத்தமீ யென்று கெஞ்சிக்கொஞ்சி அவள் முகத்தோடு முகமாய்த் தன் முகத்தை அப்படியே பொருத்தி இன்பம் நுகர்கிறான். அவளும் காமக்கடல் கடந்தேறி விழிக்கிறாள். இவனும் சுகானுபவியாய்த் திகழ்கிறான். எல்லிஸ் என்பார் கூறியுள்ள இதில் உள்ளதே, உள்ளபடி நுகரும் சிற்றின்பவெற்றி—இதுவே இப்போதுள்ள போலி நவீன நாகரிக முறையால் வேறு விதமாக மாறியிருக்கின்றது. சிலர் மூடமதியால் இதைக் காட்டேரி குற்றம், முனீசன் சேஷ்டை, பாவாடைக்காரன் தீட்டு, விளக்கேற்றிப் பார்க்க வேண்டும், பேயாட்டிக் குறிகேட்க வேண்டும், சோதிட நாடவேண்டுமென்று வீண்புரளி செய்து மோசம் போவார்களென்கிறார் எல்லிஸ் கலைஞானியார்.

இன்னும் இவர், நிர்வாண காலமாகிய ஆதிகாலமே உண்மைச் சிற்றின்பவெற்றிக் குகந்தகாலம் என்கிறார். மற்றைப் பிராணிகளைப்போலவே, மனிதப்பிராணியும் சிற்றின்ப நுகர்ச்சிக்கு ஒரு காலவரை ஏற்படுத்திக் கொள்ளாமல் கெட்டதென்பதே பெரியோர் கொள்கை. மற்றைப் பிராணிகளில் கோழியும் நாயுங்கூட தத்தம் பருவகாலங்களிலன்றி மற்றக் காலங்களில் ஆணை அணையவிடா; கொக்கரித்துங் குரைத்துந் துரத்திவிடும். அவைகளுக்குச் சுயேச்சை உண்டு. பிறர் கட்டளைக்கு அடங்கி நடக்கவேண்டுமென்னும் பாகுபாடுகிடையாது. அவைகளுடைய சுகானுபவமே உண்மையானது. அவைகளே சிற்றின்பவெற்றி யுறுவனவாம். மனிதப் பிராணிக்கும் அவைகளைப் போலவே பருவ



[illegible]ம் இருந்தும், இவன் தனக்கு ஆறும் அறிவாகிய பகுத்[illegible]ருக்கிறதென்று செருக்கடைந்து கெட்டான். தன் மனம்போலப் பெண் மகளை அடக்கி ஆண்டு கெட்டான். சந்ததி விருத்தி அதிகமானால் பூமி தாங்காதென்று, அதற்கெனவே தன் மனைவியைப் புணராமல், இரீடையிற்றினைப்பதென்று, அவளோடு நினைத்தபோதெல்லாம் சம்போகஞ் செய்து கெட்டான். பெண்பால் ஆண்பாலுக்கு அடக்கமென்று, அவளை அடக்கியாண்டு சிற்றின்பத்துக்குதவியான உயிரில்லாப் பொருள்போல அவளை உபயோகித்துக் கெட்டான். மகத்தான உலகைத் தோற்றுவிக்கும் சத்தி சொரூபமாய் நிலவியுள்ள பெண்மகளை ஒரு துச்சமாய் மதித்துச் சிற்றின்பவெற்றி பெறாமல் சோழிந்தான். மற்றெந்தவிடயங்களிலும் ஆண்பாலுக்குப் பெண்பாலடக்கமாயினும், காமவின்ப நுகர்ச்சியில் மட்டும், ஆண்மகன் பெண்மகளுக்கு அடங்கி அவளுடைய குறிப்பின் வழியே செல்லக் கடமைப்பட்டிருக்கிறான். இதைப்பற்றி முன்னைய அதிகாரத்திலும் எழுதியிருக்கிறோம். இவன் சொல்கிறபடி, அவள் கேட்க வேண்டும். இவனுக்கவள் அடிமையாய் வாழ வேண்டுமென்றெண்ணி, வீண் சமன்கார வழக்கங்களுள்ளிட்ட குழந்தைக் கலியாணம் பண்ணிக் குடிகெட்டான். நந்நாட்டிலேயே இப்படிச் சிற்றின்பங்கெட்டு வெற்றியுறாமல் வெற்றின்பமாய்க் கழிகிறது. பிறநாடுகளிற் பெரும்பாலும் பண்டைய[illegible]க வழக்கங்களை இன்னும் பிரவர்த்தித்து, பெண்ணுக்கு ஆண் அடக்க[illegible] சமமாகவோ, அன்றிப் பெண்ணுக்கு ஆண் [illegible]மாகவோ இருந்து சிற்றின்பவெற்றி சிறந்திருக்கின்றது.

பெண்ணுக்கு ஆண் சமமாக இருக்கின்ற தேசங்களில், ஆண்மகனுடைய கூட்டுறவின்றியே பெண்மகள் ஒரு தனிக் காமமாகச் சிற்றின்ப நுகர்ந்து வெற்றி பெறுகிறாள். [illegible] [illegible]யாசிப் பெண்கள் மடம், இன்னும் தையல் முதலிய [illegible]

தொழில் புரியுமிடங்களிலுள்ள பெண்களெல்லாம், ஆண்களின் உணர்ச்சியும் புணர்ச்சியும் இல்லாமலே சுய சுகானுபவம் அடையும் விதத்தைக் கண்டுபிடித்து, அதன்படிச் சிற்றின்ப நுகர்ந்து காலந்தள்ளுகிறார்கள். இவர்களிப்படிச் செய்யுங் காரணம், தக்க கணவன்மாரைத் தேடிக்கொள்ளும் சக்தியற்ற வறுமையும் சந்ததி விருத்தியாய் வறுமையை வளர்க்கும் என்னும் பயமுமே என்கிறார்கள்.

அங்கே ஒவ்வொரு பெண்பாடசாலையிலும் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் வீதம், பெண்கள் பலரும் சிறுபோதிலிருந்தே இந்தச் சுயசுகானுபவக் கொடும் பழக்கத்துக்காட்களாயிருக்கிறார்கள். ஆண்பாடசாலையிலுங் கூடப் பெரிய பிள்ளைகள் சிறிய பிள்ளைகளின் உதவியாற் சுயசுகானுபவக் கொடும்பழக்கத்தில் வீழ்ந்து காலந்தள்ளுகிறார்கள். இவர்களையெல்லாம் ஒரு தலைக் காமிகளென்றே ஒதுக்கவேண்டும்.

மேனாட்டுப் போலிநாகரிகங்களுக்கு ஆட்களாய் இயற்கைக்கு விரோதிகளாய் வாழ்வார்க்கிடையிலேயே இப்படிப் பட்ட சுயசுகானுபவ (masterbation)க் கொடும் பழக்கம் சர்வசாதாரணமாயிருந்து வருகிறது. இதனால் உடற் சுகத்துக்கு யாதொரு கேடும் இல்லையென்கிறார் ஹாவ்லக் எல்லிஸ் என்பார். மலசலங் கழிப்பது போலவே விந்துவையும் சில சமயங்களில் மாத நான்கு அல்லது மூன்று முறை வீதம் சுயசுகானுபவக் கொடும் பழக்கத்தாற் கழித்து விடுவதால் சுக பங்கமில்லை யென்கிறார்.

நந்நாட்டார்க்கு அக்கொடும் பழக்கம் கொஞ்சமேனும் இல்லையென்பது, இளைஞர் வாசிக்கும் பள்ளிக்கூடப்பழக்கத்தால் நன்கு புலப்படுகிறது. இயற்கைக்கு விரோதமான இக் கொடும் பழக்கத்தால் விந்துவைக் கொட்டிவிடவேண்டுமென்பது நம்மனோர்க்குள் வெறிப்பழக்கமாய் முடியும்.



பெண்களுக்கு ஏறக்குறைய பதின்மூன்று பிராயமே முதற் பூப்புக்காலமென்று வரையறை யேற்பட்டிருப்பது போலவே, ஆண்களுக்கும் பதின்மூன்றென்றே முதற் பூப்புக்காலம் ஏற்பட்டிருக்கிறது. சீதோஷ்ண நிலை மாற்றத்தால் இந்தக்கால வரையறை சில தேசங்களில் பதினான்கு, பதினைந்து அல்லது பதினாறாக ஏறியிருக்கிறது. இந்தக்காலம் வருமட்டுங் காத்திராமற் சிலர் பிஞ்சிலேயேபழுத்து விடுவது போற் சிற்றின்ப வுணர்ச்சிக் கிடங்கொடுத்துக் கெடுவதை யார்தாம் ஒப்புக்கொள்வார்கள்? விலங்குகளும் தத்தங்கால வரையறையை மதித்து அதன்படி சிற்றின்ப நுகர்ந்து வாழ்கையில் மனிதனுக்கு வந்தகேடுகாலமென்ன? இதனால் தான், தாயுமானார்,

'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றுமறி வில்லாதவென் கன்மத்தை யென்சொல்லுகேன்?'

என்றார்.

எல்லிஸ் என்பார் கூறியுள்ள மேனாட்டாரேனும் உலக நூல் கற்று, ஒழுக்கம் விழுப்பம் தருமென்பதை ஓராமல், நல்லொழுக்கநூல் கற்பதை விட்டுத் தீயொழுக்கமாகிய சுயசுகானுபவக் கொடும் பழக்கத்துக்காட்களாய்க் காலந்தள்ளுகிறார்கள்.

'அறிவு நூல் கல்லாது
உலக நூல் கற்பதெல்லாம் கல கல'

[illegible]ஞர் முனிவர்.

நந்நாட்டார் இதன்படி அறிவு நூல் கற்றாராக வேண்டும். கற்கின்றாராக வேண்டும். கற்பாராக வேண்டும். இப்படிப்பட்டவர்கள் இயற்கைக்கு மாறான இவ்வொருதலைக் காமத்தீப்பழக்கப் படுகுழியில் வீழ்வாரானால், இவர்கள் கற்றும் அறிவற்றவர்களாகவே ஒதுக்குண்டு போவார்கள்.

சுயேச்சையாய்க் காட்டில் நிர்வாணமாய், கள்ளங் கவ டின்றி வாழ்ந்து வந்தகாலத்தில் ஆண் மகனும், பெண் மகளும், மற்றப் பிராணிகளைப்போலவே, சிற்றின்பத்தைச் சுயேச்சையாய் இருதலைக்காமமும் காவடி பளுவுபோற் சரி சமானமாய் இயைய உணர்ந்து புணர்ந்து சந்ததி பெருகி வெற்றியுற்று வாழ்ந்தார்கள். இப்போதும் இந்தச் சிற் றின்பவெற்றி குருவிக்காரர், குறவர், தொதுவர், பிலர் முதலியோரிடத்தில் இயைந்து வருவதை நலம்பெறக் காணலாம்.

போலி நாகரிகஞ் சிறந்த நகரவாசிகளில் நந்நாட்டார்க் குள்ளும் இயற்கைச் சிற்றின்பச் சுகானுபவவெற்றி கிடை யாது. எப்படிக் கிடைக்கும்? மானமென்பதொன்றும், பெண்ணைவிட ஆண் சிறந்ததென்னும் ஒரு தலையுணர்ச்சி இரண்டும், பணத்தாலேயே சிற்றின்ப நுகர்ச்சி சிறக்கு மென்னும் கேவல எண்ணம் மூன்றும், இன்ப நுகர்ச்சியிலும் பெண்ணுக்குச் சுயேச்சையில்லையென்றெண்ணும் கோணைப் பழக்கம் நான்கும், இன்னும் ஐந்தும் ஆறும் ஏழும் எட்டும் ஒன்பதும் பத்துமாக எத்தனையோ போலி நாகரிக நகரப் பழக்கங்களும் நாட்டுப் பழக்கங்களும் மிதமிஞ்சிப் போன தனால், ஆதிகாலத்திய உண்மைச் சிற்றின்பவெற்றிக் கனுகூலமான ஆண்பால் பெண்பால் இயற்கைப் புணர்ச்சிச் சுகானுபவத்தை முற்றுங் கெடுத்தன.

இன்னும் இந்தக் காதற் சிறப்பைப் பற்றிக் குறிப்பறி தல் என்னும் அதிகாரத்தின் கீழ்,

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்று திருக்குறளில் வந்திருக்கிறது.

"சிற்றின்பம் வெற்றியுறத் திளைக்க வேண்டிய இரு வருள், ஒருவர் கண்களோடு மற்றொருவருடைய கண்கள்



பார்வையால்' ஒத்திருக்குமானால், மேலுக்கு அவர்கள் [illegible]யால் வேறு என்ன பேசினாலும் பிரயோசனமில்லை" [illegible]பதின் பொருள். "தலைவன் தலைவியருடைய பார்வை [illegible] ஒத்திருப்பதனால், அவர்கள் வேறு என்ன காரணங் [illegible]றி, அதை இல்லையென்று மறுத்தாலும், நம்பக் கூடாது" என்று தோழி தீர்மானிக்கிறாள். உண்மைக் காதலி லக்கணம் இங்ஙனம் இருப்பதே இயற்கையாம்.

இப்படிச் சந்தித்த இவ்விருவரும், உருவுந் திருவும், பருவமுங் குலமும், குணமும் அன்பும் ஒத்திருப்பவராய் இருந்தால் தான், மேற் சொன்னபடி கண்ணொடு கண் ணிணை நோக்கொக்கும் என்க. இவர்களுடைய கூட்டுறவு தான் இயற்கையிலேயே உண்டாகும். இவர்களை இடை யில் ஒருவரிருந்து புணர்த்தவும் உணர்த்தவும் வேண்டிய தில்லை; கொடுக்கவும் அடுக்கவும் வேண்டியதில்லை. இச் சிற்றின்பம் அல்லது காம நலத்தைப் போசராசன்,

"உலகத்தில் எத்தனையோ சுவைகள்
உளவென்று சொல்லுவார் சொல்க;
சிற்றின்பமாகிய காமச் சுவையே
சீரிய சுவையாய்த் திகழ்ந்திருக்கின்றது"

என்று வியந்து கூறினான். இதைக் காமநூலார், புணர்ச்சி யென்றும், பிரிவு என்றும், இருத்தல் என்றும், இரங்க லென்றும், ஊடலென்றும் ஐவகையாகப் பிரித்திருக்கிறார் கள். ஆனாலும் பிரிவு என்பதிலேயே இருத்தல், இரங்கல், ஊடலென்னும் மூன்றும் அடங்கி யிருப்பதால், தமிழ் நூலார், புணர்ச்சி யென்பதைக் களவென்றும் பிரிவு என்ப தைக் கற்பென்றும் வகுத்து, உலக நடையோடு பெரும் [illegible]ம் ஒத்திருக்கவும் சிறுபான்மை ஒவ்வாமலும் கூறி [illegible]றார்கள். இப்படித் தலைவனும் தலைவியும், தாமே [illegible] மனமொத்துப் புணரும் புணர்ச்சியைக் காந்தர்வ

மணமென்பர் வடநூலார். இப்படிக் காந்தர்வ மணமுறை யாக அக்காலத்தில் நந்தமிழகத்தில் பெரும்பாலும் தலை வனும் தலைவியும் குறிஞ்சித் திணையாகிய மலை நாட்டிலேயே சந்திப்பது இயற்கையாகும். அதுவும் அவர்கள் சந்திக் கும் காலம், ஊரல்லக் காலையில் என்பார் கூறுகிறபடி மாந் தர் சினைப்படுங் காலமாகிய வேனிற் காலமே யாகும். இப்படி இவர்கள் ஒருவரை யொருவர் எதிர் பாராமலே சடுதியிற் சந்திப்பதை மாணிக்கவாசகரும் தமது திருக் கோவையாரில்,

> "வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வானுகத்தின்
> துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
> கிளைவயி லீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
> விளைவையல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கெனவே"

என்று அருமையாய் அருளிச் செய்தார். "கீழைக் கடற் கோல், மேலைக்கடல் நுகத்துளையில் நுழைவது எத்தனை அருமையோ அத்தனை அருமையாகும், இவ்வங்கயற் கண்ணியை யான் சந்தித்த இப்புதுமை. ஆகையால், இவ ளைக் கொண்டுவந்து கூட்டிய ஊழை வியக்கிறபடி தெய்வத் தையும் வியவேன். இனி யாதை னழின் மிக்கதெனவும் நயவேன்" என்பதிதன் பொருள்.

சிற்றின்பமே உலக வின்ப மெவற்றினும் சிறந்த தென்பதற்குக் காரணம், முந்திய சொல்லி யுள்ளோம். ஆயினும்,

> 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள'

என்னும் தெய்வப்புலவர் திருவாய் மொழிப்படி ஒரே காலத்தில் ஒரு பொருளால் மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகளும் தத்தம் புலன்களால் ஒத்த இன்பம் நுகரும் சிறப்பு, சிற்றின்பமாகிய காம இன்பத்



துக்கே உள்ளதென்று மறுபடியும் ஒரு முறை வற்புறுத்திக் கூறுகின்றோம். இதை இகத்தில் அனுபவிக்க வேண்டுவ தால், ஆண்மகனொருவன் தன்னோடு ஒத்த அன்புடைய பெண்மகளைக் கண்டவுடனே அவள்மேல் அன்பு செலுத்தத் தொடங்குகிறான். அவளும் அப்படியே இவன்மேல் எல்லை யில்லா உள்ளன்பு பூணத் தொடங்குகிறாள். இருவரும் உடலால் வேறென்றாலும் உயிரால் ஒன்றாய்க் கூடி மயங்கி முயங்குகிறார்கள். சிறிது பிரிந்தாலும் இரங்குகிறார்கள். ஒருவர் நோய் கொள்ளின் மற்றொருவர் நோய் கொண்டு வருந்துகிறார்கள். ஒருவர் மரிப்பின் மற்றொருவரு மரிக்கத் துணிகிறார்கள். இப்படி இவர்கள் இவ்வுலக இன்ப நுகர்ச்சி யை அன்பின் வழியாற் கண்டு, நன்மக்கட் பேற்றை அதன் பயனா யடைந்து, இல்லற நடாத்தி முடித்துத் துறந்து தவம்பூண்டு யோகஞ் சாதித்து மானிடப் பிறவியாற் பெறும் பெரும்பயனாகிய பிரமஞான முற்றுப் பரசுகானுப வமாகிய வீடு பேற்றை யடைந்து சிறக்கிறார்கள்.

மேல் போசராசன் கூற்றாக யாம் கூறியபடி, இன்பத் திற் சிறந்தது சிற்றின்ப மென்றதென்னெனின், கூறுதும்:

உலகத்திலுள்ள இன்பங்கள் சொல்லின்பம் பொரு ளின்பமென இருவகையாகும். அவைகளிற் பொருளின்பம், வீர வின்பம், பய வின்பம், இழிப் பின்பம், அற்புத வின் பம், காம வின்பம், அவல வின்பம், நகை யின்பம், உருத் திர வின்பம், நடுவிலை யின்பம் என ஒன்பது வகையாம். இவைகளில், காம வின்பமென்னும் சிற்றின்பமே

> காம வகிரயல் கருதுங் காலைத்
> துவள் ஞுறுத்த வடிவுந் தொழிலும்
> காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு
> மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலு
> மலர்ந்த முகனு மிரந்தமன் கிளவியுங்
> கலந்தன பிறவுங் கைப்பிடித் தனரே'

என்றபடி புணர்ச்சி யுணர்ச்சியைப் பற்றிய பற்றெனத் தெற்றென வறிகிறோம். இக்காமப்பற்று, குறிஞ்சித்திணையில் புணர்ச்சிக்கும், பாலைத்திணையில் பிரிதலுக்கும், முல்லைத் திணையில் இருத்தலுக்கும், மருதத்திணையில் ஊடலுக்கும், நெய்தல்திணையில் இரங்கலுக்கும் இடஞ்செய்து நிற்பதெனத் தமிழகத்தா ரனைவர்க்கும் பண்டைக்கால முதல், அனுபவத்தில் தெரிந்த தொன்றாகும். இப்பொருட் பாகுபாட்டினையே நந்தமிழ்த் தென்னூலாரிற் சிறந்த தொன்னூலாராகிய தொல்காப்பிய நன்னூலார் முதல் எந்நூலாரும் அகப்பொருள் என்று எடுத்துக் கொண் டிலக்கணம் வகுத்தனர். அகம் = மனம். மனத்தகத்தே நிகழும் பல்லின்பங்களினுங் காம வின்பமே சிறந்ததொன் றாகலான், ஆகுபெயராய் அகப்பொரு ளென்றது சிற்றின்பத்தையே குறிக்குமென் றுணர்க.

அந்தக் காலத்தில் ஒருவன், தான் விரும்பிக் களவிற் புணர்ந்த தலைமகளை அவள் தாய் தந்தையர் தடையாயிருப்பதால், மணப்பதற் கில்லையாயின், இந்தக் காலத்திற்போல, " இவ ளில்லையேல், வேறு எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். பெண்களுக்குத் தானா குறைவு? ஆண்களைப் படுவதுதான் கஷ்டம்" என்று விலக்குத் திருமணங்கள் நடந்தில. சிற்றின்பமென்பது உண்மைக் கருத்தோடு அனுபவத்தில் நிகழ்ந்திருந்தது.

'அன்பின் வழிய துயிர்நிலை' என்றபடி சிற்றின்பம் அன்பின் வழியே நடந்துகொண் டிருந்தது. இந்தக் காலத்தில் நடப்பதுபோல அது அன்பின் வழியே நடக்கவில்லை. ஆகையால் ஒருவன், தான் விரும்பிக் களவிற் புணர்ந்த தலைமகளை மணந்து கற்பிற் புணர்வதற்குத் தோழி மூலமா எத்தனையோ விதங்களில் முயற்சி செய்கிறான். அவ முற்று மறுத்து, "ஐயனே! இங்குக் கட்டுக் காவல் மிகு



யாகவுந் தகுதியாகவும் உள்ளது. இங்கு நீ வருவது கூடாது" என்று தடுக்கிறான். இப்படி இவன் பல்கால் முயன்றும், தோழி மறுத்துரைத்துக் கொண்டே இருக்கிறான். அதனால் இவன், தான் உழுவ லன்பிற் களவிற் கூடி முயங்கிய தலைவியைப் பன்னெடுநாளாகப் பார்ப்பதிற் கின்றிப் பாதலித்துப் பரிதபிக்கின்றான். காமத் துன்பக் கடல் போலக் கரைகாண முடியாமையால், அதில் மூழ்கித் தவிக்கிறான். " இனி நான் சும்மாக் காலம் போக்குவது சரியன்று. என் தலைவிக்கும், அவளுக்குகந்த தலைவனாகிய எனக்குமுள்ள உழுவலன்பை உள்ளது உள்ளபடி ஊரவர் பலரும் பகுத்தறியச் செய்வேன். அங்ஙனஞ் செய்யினன்றி எனக்கும் அவளுக்கும் இசைந்த பொருத்தம் திருத்தமாக யார்க்குந் தெரியாது. வருத்தமின்றித் திருமண முடியாது.

'' எனக்கு முனக்கு மிசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ
இந்தப் பொருத்தம் உலகிற் பிறருக் கெய்தும் பொருத்தமோ'

என்றபடி எங்களிருவர் பொருத்தமும் உலகில் வேறு யார்க்கும் இதுவரையில் இல்லை யென்னும்படி முதிர்ந்திருக்கிறது" என்று நீள நினைகிறான். அக்காலத்து வழக்கப்படி பனையின் கருக்குமடல்களால் குதிரை ஒன்று பண்ணுகிறான். அக்குதிரையை நிறுத்தப் பனையுறுப்புக்களாலேயே வண்டியொன்றும் செய்கிறான். அந்தப் பனைமடற் குதிரைமேல் சற்றும் அஞ்சாமல் ஏறிச் சாரி போனால் கருக்குறுத்தற்கும் அறுத்தற்கும் அனுகூலமாக ஆடையின்றி நிர்வாணமாய் விளங்குகிறான். உடலெங்கும் விபூதிச் சாம்பலை உத்தூளனமாய்ப் பூசிக்கொண்டு பலருங் காணப் பரிமா வேறத் துணிந்திருக்கிறான். தன் கையில் ஒரு படம் வைத்திருக்கிறான். அது சித்திரந் தீட்டுவதிற் சிறந்த வேறெவரும் எழுதியதன்று. இவன் கையாலேயே எழுதியது. அதில் இவன் தன் காயகியின் வடிவை நிசவடிவாய் நிருமித்துத்

தீட்டியிருக்கிறான். அவள் பெயரோடு இவன் பெயரும் அதில் எழுதியிருக்கின்றன. நாற்சந்தி கூடுமிடத்தில் அம்மடன்மாவுக் கருகில் அநேக நாள் நிலையா நிற்கிறான். ஊணும் உறக்கமுமின்றி உடலை உணக்குகிறான். கையிற் படத்திற் பாவையுருவை யுருவாய் உற்று நோக்கினபடியே உலகந் தோன்றாமல் நிலைத்திருக்கிறான். அவள் உருவிலேயே மனம் ஆழ்ந்திருப்பதனால் தெருவிலே நடப்பது இன்னதென்று தெரியாமல் திகழ்ந்திருக்கிறான். தன் ஆசை யின்னதென எல்லாரும் நன்றாயறிந்து கொள்ளும்படி காட்டுகிறான். ஜனங்களைக் கூட்டுகிறான். யார் வந்து என்ன இடையூறு செய்யினும் அஞ்சாமல் துணிந்திருக்கிறான். மாமழை பெய்யினும், பெய்யட்டுமென்று அதில் நனைந்தது நனைந்தபடியே, தன் தலைவியை நினைத்தது நினைத்தபடியே நிலைத்திருக்கிறான். வெயில் எரிக்கிறது. அங்கமெல்லாம் சூடேறி வேகிறது. வேகிறதனால் சாகிறதானாலும் சரியென்று சகித்துக் கொண்டிருக்கிறான். காற்று வீசுகிறது. எத்தனைதான் காற்றடித்து மோதினாலும் கூசுகிறதில்லையென்று சற்றேனும் மனஞ் சலியாமல், அந்நிலை பெயராமல் அயராமல் இருக்கிறான்.

ஊராரனைவரும் உசிதமாய் ஒன்று கூடி வருகிறார்கள். இவன் இருப்பைக் கண்டு இரும்பூது கொண்டு "யார் நீ? படத்திற் றீட்டிய இப்பாவையின் பொருட்டு இம்மடன்மா வேறவல்லையோ? கருக்குறுத்தலுக்கும் அறுத்தலுக்கும் பொறுத்தலை மேற் கொண்டு சோதனை காட்டுவையோ? அங்ஙனம் வேதனைக் குள்ளான சோதனையைச் சாதனையாய்க் காட்டவல்லையேல், உனக்கே இவள் உரியளாவாள். இதற்கு யாதொரு தடையுமில்லை. இதுமேல் விடை" என்கிறார்கள். அது கேட்டிவன், "அப்படியே செய்வேன். தடையில்லை. இதோ அரசனுக் கறிவித்து வருகிறேன்" என்று அப்படியே செய்கிறான். வெண் பூளைப்பூ, வெண்



ளெலும்பு, வெள்ளெருக்கு மாலைகளைச் சூடுகிறான். மடன்மாமேல் தன்னாயகியின் மேற்கொண்ட அடன்மாமயலோடு ஆரோகணிக்கிறான். அங்ஙனம் இவன் ஏறினவுடனே ஊராரொருங்கு சேர்ந்து அம்மடன்மாவண்டியிற் பூட்டிய கயிறுகளைப் பற்றி ஈர்க்கின்றனர். ஈர்க்கையில் மாமடலிலும், வண்டில் மடலிலும் உள்ள கருக்குகள் உறுத்தலாலும் அறுத்தலாலும் இவன் அங்கமெங்கும் பொங்கும் செந்நீரென்னும் இரத்தம் பாயாது, வெண்ணீரென்னும் மதநீராய சுக்கில வீரியம் பீரிட்டொழுகுகிறது.

அதுகண்டனைவரும் வியந்து இவனுக்கே அம்மங்கையை நயந்து மணமுடித்து மகிழ்வார்கள். வீரியம் வெளிப்படாமல் செந்நீர் வருமேல், இது காரியம் வேறென்று இவனைப் பிடித்துத் தண்டிப்பார்கள்.

இது பற்றியே மாணிக்கவாசகரும் தமது திருச்சிற்றம்பலக் கோவையாரில்,

"கழிகின்ற வென்னையு நின்றநின் கார்மயில் தன்னையும்யான்
கிழியொன்ற நாடி யெழுதிக்கைக் கொண்டென் பிறவிகெட்டின்
றழிகின்ற தாக்கிய தாளம் பலவன் கயிலையந்தேன்
பொழிகின்ற சாரனுஞ் சீரூர்த் தெருவிடைப் போதுவனே"

என்று அருளிச் செய்திருக்கின்றார்.

இது பற்றியே திருக்குறளிலும்

'காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி'

என்று வந்திருக்கிறது.

'பெறலருந் தன்மையராகிய பெண் மகளிரோடு காம இன்ப நுகர்ந்து, பிறகு அது வாயாமல் துன்புறுநரும் ஆண் மக்கட்கு, மடலூருதலன்றி ஆதாரம் வேறொன்றில்லை. ஆகையால் இனி நான் மடலேறுவேன்." என்பதிதன் பொருள்.

"இனி நீயுன் தலைவியின்மேல் வைத்துள்ள ஆசையை அகற்று. உனக்கவள் கிடையாள். அவளுடைய தாய் தந்தையர் தடுக்கிறார்கள்" என்ற தோழியை நோக்கித் தலைமகன், "ஏ, தோழீ! ஆதிநாள் முதல் ஆடவர், தோழியரின் துணையாலேயே, தாம்விரும்பிக் களவிற் புணர்ந்த பெண்மக்களை மணந்து இன்பநுகர்ந்து வந்தனர். ஆகையால் அப்படியே இப்போதும் நான் உன்துணையால், உன் தோழியைக்களவிற் புணர்ந்தபடி, கற்பினு மணக்க விரும்பிக் கேட்டேன். அதற்கு நீ முடியாதென்று மறுத்துரைத்ததால், இனி நான் பொறுத்திருக்க முடியாது. இனி எனக்கு இனிதாய் இருப்பது மடலேறுதல் ஒன்றேயாகும். அதைச் செய்வேனேல் தலைவியை மணந்து இன்பநுகர்ந்து உய்வேன்" என்று கூறுகிறான்.

இதுபற்றியே நந்தமிழகத்தில் வழங்கும் பெரிய அகப்பொருள் இலக்கணமாகிய இறையனார் அகப் பொருளுரையிலும்,

"தலைமகன் ஒரு சொற் சொல்லும்;
என் சொல்லுமோ எனின்,
இன்றினூங்கு எல்லாம் இகக்கும்;
நின்னான் முடியு மெனக் கருதி வந்துழந்தேன்;
நின்னான் முடியாமை உணரப்பட்டது;
பட்டமையால், இனி இளிவந்தன செய்தாயினும் முடிப்பல்,
இதனை இன்றியமையே னாகலா னென்னும்.
இளிவந்தன செய்தலாவது,
மடலூர்ந்தானும் வரைபாய்ந்தானும் என்றவாறு"

என்று கூறியிருப்பதைக் கூர்ந்து கவனித்துக் கொள்க.

அக்காலத்தில் நந்தமிழகத்தில் வழங்கிய சிற்றின்பக் காதல் வழக்கம் அதி அற்புதமானது. அந்தக் காதற்



சிறப்பே ஓதற் சிறப்பென இவ்வதிகாரத் தலைப்பெயர் தொகுத்துக் கூறுகின்றது. அதையே இங்கு நாம் வகுத்துக்கூறிவருகின்றோம். இக்காதற் சிறப்பைப் பற்றியே நாயனாரும் தமது தமிழ்த் தெய்வ மறையென்னும் திருக்குறளில்,

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

என்றருளினார். "இனிமையாகிய சொற்களையுடையாளது வெண்மையாகிய பற்களில் ஊறும் நீரானது, பாலுடனே தேனையும் கலந்த கலவைச் சுவைபோலுள்ளது" என்பது இதன் கருத்து. இது தலைமகனாகிய நாயகன் கூற்று. இயற்கைப் புணர்ச்சியின் இறுதியில் இயம்பியது. தலைமகன் தலைமகள்மேல் தனக்குள்ள காதற் சிறப்பே ஓதற் சிறப்பென உணர்த்துகிறான். அவளுடைய இதழமுதின் இன்சுவை இன்னதென இசைக்கின்றான்: "உலகிலுள்ள வேறெத்தனிப் பொருளும் இதற்கு இணையாகாது. இணை சொல்லவேண்டுமானால், இருபொருளை ஒன்றாயிணைத்து இயம்பவேண்டியதுதான். பாலைமட்டும் தனிமையில் இதற்கு இணையென இசைத்தால், பாலைக் காய்ச்சவேண்டும். காய்ந்தால்தான் அதற்குச் சுவைமிகும். இதைக்காய்ச்ச வேண்டியதில்லை. காய்ச்சாமல் நீர்த்தபடியே உண்ணினும் தண்ணெனும் அமுதச்சுவை தரவல்லது. காய்ந்தாறிய பின்னும் பாற்சுவை, இதன் காற்சுவைக்கும் பற்றாது. ஆகையால் அதனோடு தேன் சுவையைச் சேர்க்கவேண்டும். தேனும் திப்பியிற் பிழிந்தெடுக்கவேண்டும். இதற்கு எது வும் வேண்டியதில்லை. இயற்கையன்பின் ஊற்றாய்ச்சுரந்து பெருகும் இதைப் புத்தம்புதிதாக அச்சுரந்தது சுரந்தபடியே சித்தங்களிக்கத் தெவிட்டா துண்ணலாம். ஆகையால் இதன் சுவைக்கிணையாக முற்கூறிய பாலையும் பிற்கூறிய

தேனையுங் கலந்த கலவைச் சுவையையே ஒருவாறு சாற் லாம். பாலுக்குமட்டும் தனிச்சுவையா யுள்ளது உப் கலந்த தித்திப்பு. தேனுக்குமட்டும் தனிச்சுவையாயுள்ளது புளிப்புக்கலந்த தித்திப்பு. இவைகளிரண்டையுங் கலந்த கலவையாகிய தலைவியின் *பன்னீர், பனிநீர் போலக் குளிர்ச்சியாய், துவர்ப்பு, கசப்பு, காரமென்னும் மும்மைக் கடுஞ் சுவையுமின்றி, உப்பு, புளிப்பு, தித்திப்பு என்னும் மும்மை யின்சுவையுங் கூடிய ஓர் ஒப்புயர் வற்ற நற்புதுச் சுவையை நல்குகிறது. இதில் உப்பு ஒரு பாலும், புளிப்பு ஒரு பாலும், தித்திப்பு இருபாலுமா யியைந்திருப்பதனால், இதைக் கோற்றேனென்று, பாற்றேனென்று பகரலாம். ஆனால் இதன் சுவைக்கொரு தனிப்பெயர் பகர்வதரிது" என்பதே அது.

இன்னும் இந்தக் காதற் சுவையே ஓதற்சுவையென வுணராத சிலர், அடக்கிவைப்பதனால் அநேக நோய்களுக் காட்களாய்க் கெடுகிறார்கள். ஆண்களும் பெண்களும் இப்படிப் பன்னோய்களுக் காட்களாய் மாளுகின்றார்கள். ஆயினும் ஆண்களைக் காட்டிலும் பெண்களே பெரிதும் வருந்துகிறார்கள். ஆண்களைக் காட்டிலும் பெண்களின் மனம் பெரும் பேதைமைத்து. ஆகையால், அவர்கள் தம் மனத்தை நாணத்தால் அடக்கிக் காதல் முதிர்ச்சியை வெளியிடாமல் உள்ளடக்கி வைக்கிறார்கள். அதை உள்ளடக் தோறும் ஒருவித மயக்கமுந் தியக்கமும் உண்டாகின்ற இந்த மயக்கத்துக்கு அங்கிலத்தில் (Hysteria) ஹிஸ்டீரிய என்று பெயர். இது அவர்களுடைய கருப்பையிலிருந்து பிறக்கிறதென்கிறார் ஹாவ்லக் எல்லிஸ் என்பார். கருப்பையில், சினைப்பையிலிருந்து செல்லு முட்டைகள் சேரச் சே

* பல்+நீர்=பல்லில் ஊறும் நீர்.



வைகள் பரிபக்குவமாய்க் குழந்தை வடிவத்தோடு அதற் ள் பத்துமாத முதிர்ந்திருந்து பிறக்கவேண்டும். இப்படிப் பிறப்பதற்குப் பருவகாலத்தில், தகுந்த ஆண் சம்பந்தம் இருக்கவேண்டும். இந்த ஆண் சம்பந்தம் அநேக அசந்தர்ப்பங்களாற் சில பெண்களுக்குச் சினைப் பருவ காலத்திற் சித்திப்பதில்லை. அதனால் கருப்பை காலியாகவே இருக்க நேருகிறது. * காலியென்றால் தெலுங்கில், காற்றோட்டமென்று பெயர். காற்றோட்டமாய்க் கருப்பை உள்ளிடில்லாமல் இருப்பதனால், வாதநோய்க் கிடம் பண்ணுகிறது. இந்த வாத நோயே மயக்கத்துக்குந் தியக்கத்துங் காரணம். இதனால்தான் இந்த மயக்கநோய்க்கு (Hysteria) ஹிஸ்டீரியா அதாவது கருவாதநோய் அல்லது கருப்பவாத நோய் என்று பெயர்வந்திருக்கிறது.

இதனால் சில பெண்கள் தலைசுற்றி ஆடுவதும் உண்டு; ஓடுவதும் உண்டு. இதையே பேய் பிசாசென்று பெரிதும் குருட்டாட்டமாய்ப் பாராட்டிச் சிலர் மந்திர தந்திர சதி மோசம் செய்யும் பூசாரிகளையும் பிறரையும் நம்பி மதிமோசம் போகிறார்கள். அதுவும் இந்தத் தென்றமிழ் நாட்டாரும் இதைச் சேர்ந்த சிலருமே இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பெண்களின் மயக்கத்தை (Hysteria) ஹிஸ்டீரியா வென்று தெரிந்து கொள்ள மதியின்றிப் பூசாரிகளிடத்தில் அவர் ளை ஒப்புவித்துப் பெரு மோசம் போகிறார்கள். பேயோட் ப் பச்சை போட்டால், குட்டி தரிக்கும் என்று நம்பியிருக் றார்கள். இப்படி எத்தனையோ பெண்கள் பூசாரிகள் வலையிற் சிக்கிக் கற்பழிந்து கெடுகிறார்கள். இதைப்பற்றி அருணைக் கலம்பக ஆசிரியரும் மகா கவியுமாகிய சைவ எல்லப்ப நாவலரும்,

* காலி—காற்று.

"வாங்குவில் லேர்நுதல் வயங்கு மாதரீர்!
ஆங்கடு வணிந்தவர் அருணை நாட்டிலே
ஈங்கிவள் ஒருவர்கை எட்டை வாங்கினால்
நீங்கள்மை யழிப்பது நீதி யல்லவே"

என்று வெறிவிலக்குத் துறையிற் பாடியிருக்கிறார்.

"ஏ, பெண்களே! ஏ, வில்லொத்த நெற்றியை யுடைய மாதர்காள்! நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள். நமது பரமசிவன் வாழும் நல்லருணை வளநாட்டுப் பெண்ணாகிய இந்தக் கன்னிகைக்கு வந்திருக்கும் இந்த மயக்கத்துக்கும் தியக்கத்துக்கும் காரணம் வேறொன்று மின்று. இவள் ஒருவன் கையிலிருந்த மாலையை வாங்கினாள். அதை வாங்கி, அவன் இருப்பை அறிந்து கொண்டதிலிருந்து, இவளுக்கிந்த மயக்கமும் தியக்கமும் வளர்ந்தன. அவன் நினைவே பெரு நினைவாய் மூர்ச்சையாய்க் கிடக்கின்றாள். இது தெரியாத நீங்கள், இவளுக்குத் தெய்வக் குற்றமுற்றதென்று, ஆட்டை வெட்டுவ தழகல்ல" என்பதிதன் பொருள்.

தலைவி யொருத்தி மங்கைப் பருவமுடையவள், தலைவனோடு கூடிப் பிரிந்தவள்—அவன் நினைவே நினைவாய் மயங்கி விழுவதும் தியங்கி யெழுவதும் மூர்ச்சையாய்ப் போவதுமாயிருந்தாள். அவளைக் கண்ட மற்றைப் பெண்கள், அவளுக் குற்றிருப்பது தெய்வக் குற்றமென்றெண்ணி, ஆடு வெட்டிப் பொங்கலிடுவதாகப் பிரார்த்தனை பண்ணி, அப்படியே ஓரிடத்திற் கூட்டமாய்க் கூடி, வாட்டமாய்க் கிடக்கும் அவளைத் தரைமேல் கிடத்திப் பொங்கலிட்டுக் கொண்டிருந்தார்கள். தலைவி மூர்ச்சையாய்க் கிடந்தாள். பொங்கலிட்டானதும் பூசை போடும்போது ஆட்டை வெட்டுவதற்காக அங்கொரு புறத்திற் கட்டிவைத்திருந்தார்கள். அது, பே எ எ என்று கத்திக் கொண்டிருந்தது.



[illegible] கண்ட வழிப்போக்க னொருவன், "அம்மைமீர், நீவிர் செய்யுங் காரியம் பெறு வயிறுகொண்ட தறியாமல் சீமந்தத்துக்கு நாள் வைத்துக் கொண்டபடி யிருக்கிறது. இவளுக்கிது தெய்வக் குற்றமன்று; தலைமகனைப் பிரிந்திருப்பதால் நேரிட்டிருக்கும் விரக வேதனையே யாம். நரக வேதனையேனும் சுலபமாய் அனுபவித்துத் தேறலாம். விரக வேதனையை அனுபவித் தேறுவதென்றால் முற்றுங் கூடாத காரியம். இவளுக் கிதுவொரு விரக வேதனையாலேற்பட்ட மயக்கமாகும்.

'முந்நான்கி லொன்றுடையான் முந்நான்கி லொன்றெடுத்து
முந்நான்கி லொன்றின்மேல் மோதினான்—முந்நான்கில்
ஒன்றரிந்தா லாகுமோ ஓ ஓ மடமயிலே
அன்றறிந்தான் வாராவிட் டால்'

என்றபடி, முந்நான்கில் அதாவது பன்னிரண்டு இராசிகளில், ஒன்றுடையான் = ஒன்றாகிய மீனம்என்னும்கொடியையுடைய மன்மதன், முந்நான்கில் = அந்தப் பன்னிரண்டு இராசிகளிலேயே, ஒன்று எடுத்து = ஒன்றாகிய தனுசு என்னும் கருப்புவில்லையெடுத்து, முந்நான்கில் = அந்தப்பன்னீர் இராசிகளிலேயே, ஒன்றின்மேல் = ஒன்றாகிய கன்னி யென்னும் இந்தப் பெண்ணின்மேல், மோதினான் = மலரம்புகளை யெய்தான். அதனால், விரகவேதனை தலைமண்டை கொண்டு, [illegible]னால் ஒரே மயக்கமாய் இவள் தியக்கமாய் விழுந்து கிடக்[illegible]ள். இது தெரியாமல் நீங்கள், முந்நான்கில் = அந்தப் பன்[illegible] இராசிகளிலேயே, ஒன்று அரிந்தால் = ஒன்றாகிய மேஷம் என்னும் ஆட்டை வெட்டினாலும், அன்று அறிந்தான் வாராவிட்டால் = இவளோடு சிலகாலம் கூடியிருந்து பிரிந்து போன நாயகன் திரும்பி வாராவிட்டால், ஆகுமோ = இதுஒரு பரிகாரம் ஆகுமோ? ஆகாதாகாது; நீங்கள் ஆட்டைவெட்டுதல் அநீதியாகும். இது ஒரு கரு நோய்; கருக்குழி சினைப்

பற்றுவதற் கேதுவாகிய விந்துக்கிருமியின் ஊற்றமின்றி வாடியிருக்கின்றது. தலைமகன் கூட்டுறவின்மையால் இவளுடைய காதக்கிருமிகளெல்லாம் வீணாய்க் கழிந்தொழிகின்றன. அவைகள் கழிந்தழியுந்தோறும், இவளுக்கு விரகவேதனை வளர்கின்றது" என்று அந்நங்கைமாருடைய மூடச் செய்கையாகிய வெறி அதாவது ஆடுவெட்டும் கொடுந்தொழிலை விலக்குகிறான்.

இப்படிப்பட்ட நோய்க்குத்தான் அங்கிலத்தில் Hysteria (கருப்பாசய வியாதி) ஹிஸ்டீரியா என்று பெயர். இதனால் பெண்களுக்கு மயக்கந்தியக்கம் அதிகமாயிருக்கும். இதைக் காதல் நோயென்று கழறுவதே மதியுடையார் வழக்கு. இதைவிட்டு வேறெண்ணிப் பூசாரிகளையும் ஆசாரிகளையும் நம்பிப் பெண்களை அவர்களிடத்தில் தனிமையில் ஒப்புக்கொடுத்து விடுதல் தப்புச்செய்கையாகும். காதலின் முதிர்ச்சியால் உண்டாகும் இந்நோயை நோயென்றுணராமல், தெய்வ குற்றமென்றும், பிசாசுசேஷ்டையென்றும் நம்பி, மங்கைப்பருவப் பெண்ணை மற்றோராண்பிள்ளையாகிய பூசாரியிடத்தில் விடுவது பேதைமையிற் பெரும் பேதைமையாகும். இதற்காக எத்தனையோ செலவழிக்கும் பித்தரும் மத்தரும் எத்தனையோ பேர் உளர்.

ஆண்மகனுடைய காதற்சிறப்பு மடலேறுவதால் விளங்குகிறபடி, பெண்மகளுடைய காதற்சிறப்பு * வெறிவிலக்கு அதாவது ஆடுவெட்டிப் பொங்கலிடுவதை விலக்குவதால் விளக்கமாகிறது. இன்னும் இதைப்பற்றி மேனாட்டார் கொள்கைகளையும் ஆராய்வாம்.

காதற் சிறப்பிற் சில, அது கொண்டார் ஆணேனும் பெண்ணேனும் தம்மைத்தாமே காதலிப்பதிலும் இருக்கின்

* வெறி = ஆடு



வாம். பெண்ணொருத்தி வடிவழகுடையாள், கோலஞ் ந்தபடி குணமுஞ் சிறந்தவள், உடல் உரமும் நிறமும் மிகுந்தவள், வயது இருபத்தையாண்டு கொண்ட அரிவைப் பருவத்தாள். அடிக்கடி, கண்ணாடியில் தன்னுருவை, தானே பார்த்து மோகிப்பாள். அதற்கு முத்தந்தருவாள். பித்தம் பிடித்தவள்போல், அதனோடு பேசுவாள். அந்த நிர்வாண நிழலுருவத்தை ஆடியிற் கண்டு, சித்தந் திகைத்தவள்போற் கொண்டாடுவாள். வேற்றுப் பெண்மக்களோடு பேசவும் விரும்பாள். ஆண்மக்களைக் கண்களிற் காணவும் வெறுப்பாள். இப்படி அவள் கலியாணமின்றியே காலந் தள்ளினாள்.

மற்றொருவன் ஆண்மகன், அழகன். புருவங்களிரண்டும் மன்மதனுடைய இரு கரும்புருவங்கள் போன்றவை. மூக்கு அழகாய் நீளமாய்ப் பச்சோந்தி பாய்வதுபோல் விளங்கிற்று. கைகால் முதலிய அவயவங்கள் அழகாய், உடல் ஐந்தேமுக்காலடி உயரமாய் விளங்கின. மேனி நிறம் எலுமிச்சம்பழந்தான். நன்றாய் வாசித்தவன். அங்கில முதலிய பாபாடையும் ஏறினவன். உத்தியோகஞ் செய்தே பெருஞ்சம்பளம் பெற்றுவாழ்ந்தவன். என்ன காரணத்தினாலோ இவனும் மேற்சொன்ன பெண்மகளைப் லத் தன்னைத்தானே நேசித்துப் புருஷவேசி யென்ன ங்கினான். தனிமையை இனிமையாய் விரும்பினான். பெண் துணையை வெறுத்தான். பெண்காற்றென்றாலும் வெறுப்பானான். ஆண்மக்களிடத்தும் அன்பு செலுத்திப் பேசவறியான். தானே நன்றாய்த் தின்று கொழுத்து இரண்டு கால் மாடுபோல வாழ்ந்தான். இவன் சுயநலம் பாராட்டித் தன்னுருவத்தையே நேசித்தானன்றிப் பிறருறவிச்சை வைத்தானில்லை. இவனுக்குக் காதற் மென்ப தின்னதெனத் தெரியாது. இங்கே காதற்

சுகமென்பது பெண்காதற் சுகத்தை. இவன் தன் தாய் தமக்கை தங்கையரையும் கண்டு பேசக்கூசுவான். மணம் என்றால், 'மனைவியா!' என்று பேயையஞ்சுவதுபோல அஞ்சி அலறுவான். தான் சம்பாதிப்பதனைத்தையும் தானே அனுபவிக்கவேண்டுமென்று ஆசைப்படுவான். ஈக்கும் ஒரு சிறிது ஈயமாட்டான். தான் மட்டும் நன்றாய்த் தின்பான். நன்றாய் உடுப்பான். படுப்பான். பள்ளியறையை அலங்காரமாய் வைத்துக்கொண்டிருப்பான்.

தன்னைப் பிறர் அழகனென்றும் குழகனென்றும் செல்வனென்றும் பெருமையிற் சிறந்தவனென்றும் எண்ணவேண்டுமென்று இச்சை கொள்வான். எல்லாம் தன்மயமாகவே காண்பான். 'பிறர்க்கென வாழ்' என்னும் பெரியார் வாக்கைத் தெரியார் வாக்கென உல்லிங்கன செய்வதென எல்லாம் தனக்கெனவே வாழ்வான். இவன் காதற் சிறப்பெல்லாம் தனக்கெனவேயிருந்தபடியால், இவன் வரலாற்றையும் இங்கு ஓதற் சிறப்பென உவந்து வரைகின்றோம்.

மேற்குறித்த பெண்மகளுக்கும் இவனுக்கும் தற்காதல் விஷயத்தில் பேதமேயில்லை. முற்குறித்த காதற் சிறப்புகளெல்லாம் இருபாலார்க்கும் இடையில் நிகழ்பவைகளாம். இப்போது இங்குக் கூறி வந்த பெண்மகளும் ஆண்மகனும் தம்மைத் தாமே நேசித்துப் பூசித்துக் காதல் கொள்வதிற் றேர்ந்தவர்கள். இவர்களுக்குக் கலியாணமென்பதே வீணாயிருந்தது. இந்தப் பெண்மகளுக்கு ஆண்மகனென்றால் அருவருப்பாயிருந்தது. ஆண்காற்று வீசினாலும் ஆகாது. இந்த ஆண்மகனுக்குப் பெண்மகளென்றால் பெருவெறுப்பாயிருந்தது. ஆகையால் தற்காதல் (Auto-erotism) என்பதொன்றுண்டென இதனால் அறிகிறோம் என்கிறார் ஹாவ்லக் எல்லிஸ் என்பார்.



சிறுவர் சிறுமியரும் பெரும்பாலும், கலியாண[illegible]து வந்து, மற்றைப்பாலாரை அடைந்து காதற்செலுத்துவதற்குள், தம்மைத் தாமே நேசித்துக் காதற்செலுத்தக் கற்றுக்கொள்ளுகிறார்கள். அதனால் அவர்களிற் சிலர் விந்து நாதங்களை எந்த விதத்திலேனும் வெளிப்படுத்தி விடப் பழகுகிறார்கள். ஆணுக்கு ஆணே சேர்ந்து அவ்வாறு செய்கிறதென்றும், பெண்ணுக்கு மட்டும் மற்றொரு பெண்ணின் உதவியின்றியே நாதவெளிப்பாட்டுக் கிடம் பண்ணிக்கொள்ளும் ஆற்றலுண்டென்றும், அப்படியே இவ்வுலகடங்கலுமுள்ள பெரிய பட்டணங்களிலும் தேசங்களிலும் அநேகம் பெண்கள் தற்சுகானுபவத்திற் பழகியிருக்கிறார்களென்றும் ஹாவ்லக் எல்லிஸ் என்பார் அத்தாக்ஷியோடு கூறுகின்றார்.

இவைகளெல்லாமும் காதற் சிறப்பே ஓதற் சிறப்பெனும் இவ்வதிகாரத்தில் இடம்பெறுவதற்கு ஞாயமுண்டு.

இப்படிச் சிற்றின்ப வழியாலேயே பேரின்பத்துக்குச் செலுத்து முறை, நஞ்செந்தமிழகத்திற் பன்னெடு நாளாய்ச் சிறந்திருக்கின்ற தென்பதைத் திருச்சிற்றம்பலக் கோவையார் முதலிய அகப்பொருளிலக்கியங்களால் அறியலாம். இங்கேயும் யாம் இவ்வதிகாரத்தில் இத்தனை அத்தாக்ஷிகளோ டெழுதிவருங் காரணமும் அதுவேயாகும்.

'கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்'

என்பதிலும், "சிற்றின்பத்தை வெற்றிபெறத் திளைத்துப் பேரின்ப சுகானுபவத்தைக் கண்டவர், வாசாமகோசரமான அதை,

'முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைக் கூறெனக் கூறுமா றெங்ஙனே'

என்றபடி பிறர்க்குச் சொல்லிக் காட்டமாட்டாமல் மௌனங் கலக நாத்தியெனக் காலம் போக்குகிறார்கள்" என்று விளங்குகிறது. சிற்றின்பத்தை வெற்றிபெறத் தினைக்க வழியின்றி, அதிலேயே உழைத்துப் பிழைத்துப்போவ வலியின்றி, அதைத் தம் வாய்க்கு வந்தபடி புகழ்ந்து, அதுவே பேரின்பமெனத் திகழ்ந்திருப்பவர், உண்மைப் பேரின்ப சுகானுபவம் இன்னதெனக் கண்டறியாமற் காலங்கழிக்கிறார்கள். ஆகையால் சிற்றின்பத்தை வெற்றிபெறத் தினைக்கும் நன்னெறியை இச்சிறு நூலிற் பற்பலதிகார மூலமாய்த் தீட்டியுள்ளோம்.

நந்நாட்டுப் புலவரிற் பெரும்பாலாரும் நாயக நாயகியர் பாவனையாகவே, பாவனாதீதமான பேரின்ப விஷயத்தைப் பெரிதும் பிரகாசம்பண்ணியிருக்கிறார்கள். இது நந்தமிழகத்து நூல்களுக்கே சிறப்பாயுள்ள தொன்றாகும்.

"சேற்றிரா வந்தொருவன் சித்திரையிற் கைப்பிடித்தான்
வேற்றாரா னென்று விடாயென்றேன்—ஆற்றியே
கஞ்சி குடியென்றான் களித்தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்றான் மறைந்து"

என்றார் ஒரு புலவர்.

"பாவனா தீதம் பதியா விடத்தேக
பாவனை பற்றிலின் றுந்தீபற
பழுத்தா லொழித்திடென் றுந்தீபற"

என்றபடி அவர், கச்சிநாதரே தந்தலைவரென வுருவகித்துப் பாடியுள்ள இப்பாட்டில், தலைவி, தன் தோழியர்க்குக் கூறுங் கூற்றான விஷயம் வந்திருப்பதைக் காண்க. இதன் உரை



யைத் தெரிந்தார்பாற் கேட்டுத் தெளிக. இங்கே விரிவஞ்சி விடுத்தாம். இனி நாம் இவ்வருமையான சிறு பேரின்ப நூலை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவேம்.

காமம் காதலிலும், காதல் இடையறா அன்பிலும் செலுத்துவதென்று இது வரையில் நாம் வாசித்திருக்கின்றோம். எல்லா அன்பினும் கண்ணப்பன் அன்பே பேரன்பு என்று நந்நாட்டார் பலரும் நன்குணர்வார்கள். ஆகையால், அன்பினும் இனிப்பானது வேறொன்று மின்று. அதுவே உலகிலுள்ள வேறெதினும் பலமானது. அதுவே உயர்ந்தது. அதுவே அகன்றது. அதுவே இன்பரசமூறுவது. அதுவே இகத்தும் பரத்தும் பரிபூரணமானது. அதுவே பரமாத்ம சொரூபமானது.

அன்புஞ் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அன்புஞ் சிவமு மொன்றாவ தறிந்திலார்
அன்பே சிவமா யாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே

(திருமந்திரம்.)

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS.

பண்டிதர்; ம. மா. வாசகருடைய
ஆனந்தானுபவ அருமருந்துகள்.

## போக பஞ்சமூலி லேகியம்

அல்லது

## (ஆனந்த விந்துபந்து அல்வா)

ஒருமண்டலம் உட்கொள்ளும்படி
சுமார் ஒருசேர் அளவுள்ளது. தாதுபுஷ்டியை ஆக்கி
மலட்டடை நீக்கி வலுவைத் தேக்குவது.

இதைப்பற்றி அதிகமாய் எழுதுவது அனுவசியமாம்.

**விலை ரூபா 2.** (பாக்கிங் உட்பட)

## சுகானந்த ஸ்னான தைலம்

வாரத்துக் கிருமுறை முழுகிவந்தால்

**(வெண்பா)**

***கண்ணெரிவு கண்புகைச்சல் கண்ணமைச்சல் கண்கூசல்***
***கண்ணினின்று நீர்வடிதல் காமாலை—திண்ணமுடன்***
***சன்னி சயித்தியம்போம் சர்வசுகா னந்தமயம்***
***என்னுமுழுக் கெண்ணெ யிதற்கு.***

இதை வாங்கி உபயோகிப்போரே புகழ்ந்தெழுத வேண்டு மன்றி, யாமே புகழ்வது இகழ்வதுபோலாகும்.

சுமார் எட்டு முழுக்குக்காகும் ஐந்துபல அளவுள்ளது.

**விலை ரூபா. 2.** (பாக்கிங் உட்பட

**பண்டிதர், ம. ம. வாசகர், (கேர் ஆப்)**
**வி. பாலசுப்பிரமணிய செட்டியார் & கோ**
**புத்தக வியாபாரிகள்,**
**பி. டி. சென்னை.**

227839.